MAHAMAHOPADHYAYA

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய் நல்லூர்

மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

சிவஞானபோதமும்,

வார்த்திகமென்னும் பொழிப்புரையும்.

திருக்கைலாசபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்துச்

சிவஞானசுவாமிகளருளிச்செய்த

திராவிடமாபாடியம்

என்னும்

சிவஞானபோதமாபாடியமும்

சிற்றுரையும்.

இவை

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்:

ரைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பராபவஞ்சு ஆனி - 1906

இரண்டுரூபா - உ

(Copyright Registered.)

GF
R673 a2,1
Ligmo

Dr. U.V. SWAMINA
BESANT NAG

இரண்டாந்தந்திரவியல்.

க. பொல்லாப்பிள்ளையார் தோத்திரம்.
உ. முகவுரை.
ங. சிறப்புப்பாயிரம்.
ச. தென்முகத்தெய்வப்பராசாரியர்தோத்திரம்.
ஞ. தகுதிவுரைத்திதியானம்.
ட. தூல்வரலாறு.
ண. தூலாசிரியர்வரலாறு.
த. உரையாசிரியர்வரலாறு.
ந. தூபாத்திரம்.
ப. வெண்பாத்தோகை.
ம. தூத்திரமுதலியவற்றின் தொகையும் தூத்திரத்தின் கருத்தும் உணர்த்தருசெய்யுட்கள்.
ய. தூணிர்ணயம்.
ர. வடமொழிச்சிவஞானபோதமுலமும் தமிழுரையும்.
ல. குருவணக்கம்.
வ. சிவஞானபோதமாபாடியத்திரட்டு.
ழ. தென்மொழிச்சிவஞானபோதமுலமும், வரத்திருப்பொழிப்புரையும், சிவஞானபோதமாபாடியமும், சிற்றுரையும்.
ள. பாயிரவெண்பாவுரை.
ற. சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளியற்றியவுரை.
ன. அருள்பதவகாதி.
உ. அருள்தொடர்கவாதி.
உக. இலக்கணக்குறிப்பு.
உஉ. விளக்கவுதாரணம்.
உங. பதத்திரட்டு.
உச. பிழைதிருத்தம்.

சிவமயம்.

பிரகடன விஞ்ஞாபனம்.

	ரூ.	அணா.
க சிவஞானபோதமாபாடியம்.	உ	0
உ திருக்கோவையாருண்மை.	0	அ
ஈ பாதம் ஆதிபரவுவமை.	ஈ	0
ஊ சூடாமணி நிகண்டு *கூ நிகாகுதி.	க	0
ரு மேற்படி க0 நிகாகுதி.	0	கூ
ரூ மேற்படி கக வது கூ வது.	0	ஒ
எ திருவாதவூரடிகள்புராணமூலம்.	0	ஒ
அ விகாயகபுராணவுரை. விமலவிகாயகருள்பெறுபடலம் வரையும் உள்ளது.	உ	0

*முதலிரண்டு நிகாகுதியும் பெயர்ப்பொருளாகிய பன்னிரண்டாவது உரையோடும்உயர்ந்த கூ0 பவுண்டிக் கிரௌன்காகிதத்தில் பதிப்பிக்கப்பட்டன.

இவை சென்னபட்டணம் ஆபத்சகாய முதலியார் தெரு வது கதவிலக்கமுள்ள சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில் விற்கப்படும். வீ. பி. மூலமாகவும் அனுப்பப்படும்.

இப்பொழுது அச்சிற் பதிப்பித்துத் தொடங்கிய நூல்கள் நிகவாம் முதலிய பன்னிருதிருமுறைகள்.

☞ கைச்சாத்தனுப்பினோர் இன்னுங் காலம நீட்டிக்கத்தகாதெனத் தெரித்து மிக நெருக்கினமையால் இதிற் சேர்த்தற்காக எழுதி முடித்த அநேகவிஷயங்களைப் பதிப்பியாது நிறுத்திவிட்டேன்.

இங்ஙனம்.

சுவாமிநாதபண்டிதர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொல்லாப்பிள்ளையார்.

கானகடியும் ஒப்பனவாய்வந்த கொச்சக ஒருபோகு.

தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு * தழீஇ
வென்றுவி நந்தாதை வியந்துகைத் துடிகொட்ட
நின்றுடும் பொல்லார்தா ணிணைந்தார்தா முய்ந்தாரே.

தழீஇ தழுவ என்பதன்றிரிபு. வென் தாவி எனப் பிரிக்க. தழுவத் தாவி நின்று கொட்ட ஆடும் பொல்லார் என விணைமுடிபு செய்க.

பொள்ளார் பொல்லார் என மரீஇயிற்று. உளிமுதலியவற்றால் போழ்ந்து செய்யப்படாதவர் என்பது கருத்து. எனவே சுயம்பு மூர்த்தி என்றதாம்.

இங்கே கூறிய பொல்லாப் பிள்ளையார் "நல்லார்தொ ழும்வெண்ணெய் நல்லூர்ச்சி வாலயத்துள்" எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் என்று உணர்க. இவரே மெய்கண்ட தேவநாயனாருக்குச் சூர்ணியுரை செவியறிவுறுத்த பரமாசாரியர்.

திருநாரையூர்ச் சிவாலயத்துள் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார்நம்பிக்கு வேதம் முதலிய சகல கலைகளையும் ஓதுவித்துத், தேவாரத் திருமுறைகள் இருக்குமிடம், சிதம்பரத்திலே கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்திலே சமயகுரவர்கள் மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையென்று தெரித்துத், திருத்தொண்டர் சரித்திரத்தையும் செவியறிவுறுத்த பரமாசாரியர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

திருநந்திதேவர்.

சங்கரன் றெரிக்க *மற்றத் தனிச்சிவ ஞான போதப்
புங்கநூ லுணர்ந்து பின்னர்ப் பொலிவுறு மகச்சந் தானப்
பங்கமில் புறச்சந் தான பரம்பரை யதனின் வைத்து
நங்களுக் களித்த நந்தி நளினமென் கழல்கள் போற்றி.

சிவஞானபோதச்சிறப்பு.

வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழ்தனி னுவ்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்.

அகண்டாகார நித்த வியாபக் சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தாம், "ஆரண மாக மங்க ளருளினு லுருவு கொண்டு" அருளிச்செய்யாதொழியிற் "கதிப்பவ ரில்லை யாகும்" எனத் திருவுளங்கொண்டு "ஒருகாமம் ஒருருவம் ஒன்றுமில" ராயினும் ஆண்மாக்கண்மீது வைத்த கைம்மாறற்ற பெருங்கருணையினாலே "ஆயிரந்திருநாமம்" முதலியவற்றை உடையராய்ச் சகளீகரித்துச் சதாசிவமூர்த்தியாய் நின்று தற்புருடம் முதலிய நான்கு முகங்களினால் இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் ஈசானமுகமாகிய உச்சிமுகத்தினால் காமிகம் முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களையும் பிரதமமாகா சிருட்டி யாரம்பகாலத்திலே தோற்றுவித்தருளினர்.

அவ்வேதாகமங்கள் முறையே உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் உரித்தாயபொதுநூலுஞ் சிறப்புநூலுமாம். அவை சூத்திரமும் பாடியமும் போறலின் ஒருபொருளனவேயாம். இக்கருத்துப்பற்றியே நீலகண்டசிவாசாரியரும் வேதாந்தசூத்திரத்திற்குத் தாம் இயற்றிய பாடியத்துட் பதியதிகரணத்திலே "யாம் வேதசிவாகமங்கட்குப் பேதங் காண்கின்றிலம், வேதமுஞ் சிவாகமமாம்" என்று அங்ஙனம் கூறிப்போந்ததூஉம் என்க. "வேதமொ ட்டாகம மெய்யா மிறைவனு—லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக—நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்—பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே" என்ற திருமூலநாயனார் திருவுள்ளக்கிடக்கையும் அதுவே.

* மற்று அ என்புழி அகரம் - பண்டறிசுட்டு.

வேதம் என்னுஞ் சொல் அறிதற்கருவி எனப் பொருள்படும். எனவே, பதி பசு பாசம் என்னும் மூப்பொருள்களையும் அறிதற்குக் கருவியாயுள்ளது என்பது கருத்து.

ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். இன்னும், ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படுதலால் ஆகமம் என்பதற்குத் திரிபதார்த்தலக்ஷண த்தை உணர்த்தும் நூல் என்பதே சிறந்தபொருள் என்க. ஆ என்பது சிவஞா னமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமுமாம் ஆதலால் ஆன்மா க்களுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷத் தைக் கொடுத்தல் பற்றி ஆகமம் எனப் பெயராயிற்று என்று கூறுதலும் ஒன்று.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர் த்திநாயனர், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சைவசமயாசாரியர்கள் நால்வரும் சிவபிரான் திருவருளினாலே தமிழ்நாடு உய்தற்பொருட்டுத் திரு வவதாரஞ் செய்தருளி அவ்வேதாகமங்களின் சாரத்தை ஒருங்குதிரட்டித் தேவார திருவாசகங்களாகிய திராவிடவேதங்களாக அருளிச்செய்தனர்.

அதன்பின் மெய்கண்டதேவ நாயனர் திருவெண்காட்டடிகள் திருவரு ளினற் * சாமுசித்தராப்த் திருவவதாரஞ் செய்து வேதாகமங்களினதும் தே வாரதிருவாசகங்களினதும் சாரத்திற் சாரமாயுள்ள சிவஞானபோத நூலைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகம் எனப்படும் பொழிப்புரையுஞ் செய்தருளினர்.

இச்சிவஞானபோதத்தை முதனூலாகக் கொண்டு திருவுந்தியார், திருக்க ளிற்றுப்படியார், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொ டிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என் னும் பதின்மூன்றுசாத்திரங்களும் தோன்றின. சிவஞானபோதம் முதலிய இப்பதினான்கும் சைவசித்தாந்தசாத்திரங்களென்று அவ்வாறுயர்த்துக் கூறப் படுவன.

சிவஞானபோதம் ஏனைப் பதின்மூன்று சாஸ்திரங்களுக்கும் தாயகமாய் இருத்தலின் அவற்றைக் கற்றலாற் பெறும் பேறு இவ்வொன்றனைக் கற்ற லாற் பெறுதல் ஒருதலை என்றுணர்க.

இனித், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய சமயாசாரியர்களும் மெய்கண்டதேவநாயனர் முதலிய சித்தாந்தநூலாசிரியர்களும் "காணுங் காரண ங்களெல்லாம்பேரின்பமெனப்–பேணு மடியர்" ஆகலின், அவர் பசுகரணம் பதி காரணமாக நிகழப் பெற்றவர் என்பதூஉம், "நஞ்செய லற்றிந்த நாமற்றவர்" ஆகலின், அவர்தஞ் செயலெல்லாம் சிவன்செயலென்பதூஉம் பெறப்பட்டன.

* சாமுசித்தராவார் முற்பிறப்பிலே சரியை கிரியை யோகங்களைச் செய்து நிரும லாந்தக்கரணராகி மீளப் பிறக்கும்பொழுது அந்த ஞானத்தோடு பிறந்து சிவபாவனை பண்ணுவோர்.

படிவே, அவர் அருளிச்செய்த நூல்களெல்லாம் பதிவாக்கியங்களென்பது தாமேபோதரும். போதரச், சிவபிரானே ஆன்மாக்களின் அறிவாற்றல் ஆயுள் முதலியவற்றிற்கு ஏற்பக் காலந்தோறும் முப்பொருளியல்பு கூறும் நூல்களை விரித்துந் தொகுத்தும் அங்ஙனம் அருளிச்செய்தார் என்பது கடைப்பிடிக்க.

"அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்-பொருணூ றெரியப் புகின்" எனத் திருவருட்பயனுள் ஓதப்படுதலின், வேதாகமம் முதலிய எல்லாநூல்களும் பஞ்சாக்கரத்தால் உணர்த்தப்படும் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்த இலக்கணங்களையே கூறப்புகுந்தன என்பது தெற்றென விளங்கும். அவையெல்லாம் முப்பொருளின் தடத்த சொரூபங்களாகிய பொதுவியல்பு சிறப்பியல்புகளைத் தனித்தனியும் சரிதவாயிலாகவுங் கூறுவனவாக, இச்சிவஞானபோதம் அவ்விரண்டியல்புகளையும் ஒருங்குவைத்து நேரே கூறுதலான் அவ்வெல்லா நூல்கட்குஞ் சிரத்தானமாய்ச் சிறந்து விளங்கும் அரும்பெருந் திவ்விய மகத்துவ நூலாம் என்பது சத்தியம்.

இன்னும், ஆகமப்பொருள்கள் ஒன்றோடொன்று முரணுவனவாக மலைந்து வினவிய நந்திபெருமானுக்கு அம்மலைவு தீர்தற்பொருட்டுச் சிவபெருமான் உபதேசித்தருளப்பெற்றதும் இச்சிவஞானபோதமே.

கண்ணுவர் கருக்கர் முதலிய பண்ணவர்கணங்கட்கு வேதப்பொருளை அறிவுறுத்தற்பொருட்டு எழுந்தருளிவந்த தக்ஷிணமூர்த்தி தமது அருமைத் திருக்கரத்திற் றரிக்கப்பெற்றதும் இச்சிவஞானபோதமே.

திருக்கைலாசபதியாகிய சிவபெருமான், மாணிக்கவாசகசுவாமிகளை ஆட்கொண்டருளித் தீக்கைப்பேறளித்துத் திருவடிஞானம் வாயிலாகச் சிவமாந்தன்மைப் பெரும்பேறெய்துவிக்கத் திருவுளங்கொண்டு, மாதுடச்சட்டைசாத்திப் பரமாசாரியமூர்த்தியாய் அக்கைலையினின்றும் எழுந்தருளிவந்து, திருப்பெருந்துறையிற் குருந்தவிருக்கத்தின்கீழ் வீற்றிருந்தருளியபொழுது, தமது அருமைத்திருக்கரத்திற் றங்கப்பெற்றதும் இச்சிவஞானபோதமே.

மாணிக்கவாசகசுவாமிகள், அங்ஙனம் எழுந்தருளியிருந்த பரமாசாரிய மூர்த்தியாகிய சிவபிரானைத், திருவருள் செலுத்தச் சென்று அடைந்தமாத்திரத்தே "செங்கைமீது–பொருத்தமுறும் புத்தகமே தையா" என்று வினவ, அப்பிரானர் தமது அருமைத்திருவாக்கினலே "பொய்ம்மையிலாச் சிவஞானபோதம்" என்று விடையிறுக்கப் பெற்றதூஉம், "என்றலுமே சிவமேமது ஞானமெதிங் கிலங்கியிடும்போதமே தியம்பு வீரே—லன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே யடியேனு முமக்கடிமை யாவென்" என்று சுவாமிகள் விண்ணப்பஞ் செய்ய, *"நின்றசிவ மொன்றதனைத் தேர்தன் ஞான நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாம்" என்று நற்பொருள் வினவி நிற்கும் அச்சுவாமிகள் சிந்தையுருகும்படி அப்பிரானுற் பொருளருளிச்செய்யப்பெற்றதூஉம் இச்சிவஞானபோதமே.

---

* இதற்குச் சிவஞானபோத மாபாடியகாரர் கொண்ட கருத்து வேறு என்பதைச் "சிவஞானபோதம் என்பதூஉம் இக்காரணத்தாற்பெற்ற பெயரென்பது வடமொழிச் சிவஞானபோதத் திறுதிச்சூத்திரத்தோதியவாறுபற்றி உணர்க" எனக் கூறியதனுல் அறிக.

மலர்தலே யுலகிற் புறவிருளின் நீக்கிப் பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுதற்குப் பன்னிருவகைத்தாய ஞாயிறுபோல, அநாதிமூலமலவிருளின் நீக்கிச் சிவபரம் பொருளே ஆன்மாவிற்குக்காட்டி அநுபூதியின் நிலே பெறுவித்தற்குப் பன்னிருசூத்திர ஞானஞாயிறுய் எழுந்ததும் இச்சிவஞானபோதமே.

இன்னும், இது பிறவிப்பிணிதீர்த்தற்குத் திவ்விய ஔடதமாய் உள்ளது. ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் இவற்றை உணர்த்துதலிற் சிவசங்கிதை என்னும் பொதுப்பெயர் பெறுதற்கும் உரியது. பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தமாகிய *அபிதேயத்தோடு †அபிதாயகமாகுஞ் சம்பந்தமுடையது. திரிபதார்த்தலக்கணமாகிய விடயமுடையது. திரிபதார்த்தஞானத்தாற் சாதிக்கப்படும் தீக்கை முதலியவற்றை உணர்த்தும் முகத்தானே நித்திய நிரதிசயாநந்தப் பெருவாழ்வாகிய மோக்ஷமே பயனுக உடையது.

இத்துணே விசேடநூலாகிய இச்சிவஞானபோதத்தை நாடோறும் அன்புடன் அருச்சித்துப் பாராயணஞ்செய்வோர் சகலபாவங்களினின்றும் விடப்பட்டு நித்தியானந்தப்பெருவாழ்வாகிய முத்தியைப் பெறுவர்கள். முத்திக்கு உபாயம் இதற்கு மேலாகச் சொல்லற்பாலன வேறெருநூலிலும் இல்லே. இது சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ் சத்தியம்.

இதற்குப்பிரமாணம்.

ஈஹ நுஹநி யொயிெத வியிஹ்ஹ் ஸிவலம்ஹிதாழ்|
லஹஹி லவடு வாவாநி தாரிஹ்ஹ்ம் ஹாவ்ஹரோ யயா॥

ஈவன் சிவசங்கிதையைத் தினந்தோறும் நியமமுடையனுய் ஓதுகின்றனே அவன் சகலபாவங்களேயும் சூரியன் இருளே நீக்குமாறுபோலக் கெடுக்கின்றன்.

சிவஞானசித்தியார்.

ஞானநூ றணேயோத லோது வித்த
னற்பொருளேக் கேட்பித்த றன்கேட்ட னன்று
வீனமிலாப் பொருளதணேச் சிந்தித்த லந்து
மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை
யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்க டியான
மொன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போக
மானவையான் மேலான ஞானத்தா லரனே
யருக்சிப்பர் வீடெய்த வறிந்தோ செல்லாம்.

இந்நூலிற் கூறப்படும் பன்னிரண்டு சூத்திரத்துள், முதல் இரண்டு மூன்று என்னும் மூன்றையும் பிரமாணவியலென வைத்து, முதற் சூத்திரத்தால் உலகிற்கு நிமித்தகாரணனுகிய பதியுண்மைக்குப் பிரமாணமும், இரண்டாஞ் சூத்

* அபிதேயம் - பெயரிட்டுவழங்கப்படுவது. † அபிதாயகம் - பெயரிட்டுவழங்குவது.

திரத்தாற் பாசவுண்மைக்குப் பிரமாணமும், மூன்றுஞ் சூத்திரத்தாற் பசுவுண்மைக்குப் பிரமாணமும், நான்கு ஐந்து ஆறு என்னும் மூன்றையும் இலக்கணவியலென வைத்து, நான்காஞ் சூத்திரத்தாற் பசுவிலக்கணமும், ஐந்தாஞ் சூத்திரத்தாற் பாசவிலக்கணமும், ஆறுஞ்சூத்திரத்தாற் பதியிலக்கணமும், ஏழு எட்டு ஒன்பது என்னும்மூன்றையும் சாதனவியலென வைத்து, ஏழாஞ் சூத்திரத்தாற்சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையது இதுவென்பதும், எட்டாஞ்சூத்திரத்தாற் சிறந்த கருவி எனப்படுஞ் சாதனம் இதுவென்பதும், ஒன்பதாஞ் சூத்திரத்தாற் சாதகஞ்செய்யுமாறு இதுவென்பதும், பத்துப் பதினொன்று பன்னிரண்டு என்னும் மூன்றையும் பயனியலென வைத்து, பத்தாஞ் சூத்திரத்தாற் பெத்த நீக்கப்பயனும், பதினொராஞ் சூத்திரத்தால் முத்திப்பயனும், பன்னிரண்டாஞ் சூத்திரத்தாற் பெத்தநீக்கமும் முத்தியும் பெற்றவர்க்குச் சீவன்முத்திநிலைக்கண் நிகழுமியல்பும் வகுத்துக் கூறப்படும்.

இக்துணைப் பெருமை வாய்ந்த அருமருந்தன்ன இச்சிவஞானபோதத்திற்கு ஆதியிலே திருநாவலூரில் எழுந்தருளியிருக்கின்ற பொல்லாப்பிள்ளையாரால் சூர்ணி ஆதிய கருத்துரையும் மெய்கண்டதேவநாயனாரால் வார்த்திகம் எனப் பெயரிய பொழிப்புரையுஞ் செய்தருளப்பட்டன.

பின்னர்ப் பாண்டிப்பெருமாள் என்னும் ஆசிரியரால் ஓர் உரை இயற்றப்பட்டுள்ளது.அதன்பின்னர்த் திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞானயோகிகளால் ஒரு சிற்றுரையும் சிவஞானபோதமாபாடியம் எனப் பெயரிய ஒருபேருரையும் செய்தருளப்பட்டன.

இப்பேருரை, இச்சிவஞானபோதத்திற்கும் இதன் முதனூலாகிய வடமொழிச்சிவஞானபோதத்திற்கும் வழிநூல் சார்புநூல்களாகிய ஏனைச் சித்தாந்தசாத்திரங்களுக்கும் உள்ள பொருளொருமையை இனிது விளக்கி இதற்குச் சிறந்த ஓரணிகலனுமுள்ளது.

வேதாந்தசூத்திரத்திற்கு நீலகண்டபாடியம் முதலியனபோலப் பொருள்களே, விஷயம் சம்சயம் பூர்வபக்ஷம் சித்தாந்தநிர்ணயம் சங்கதி என்னும் ஐந்துறுப்புக்களையும் உடைய அதிகரணங்களாகப் பகுத்து, எவரும் ஒருசிறிதும் சங்கோசமுமுவண்ணம் தருக்கயியாகரண மீமாஞ்சைகள்கொண்டும் வேதாகமங்களாகிய அதிப்பிரபலப்பிரமாணங்கள் கொண்டும சுருதிதளியுமாறு கடாவிடைகளால் இனிது விளக்கிக்காட்டுதலின் நிராவிடமாபாடியம் என்று எவராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுவது.

சுவேதாச்சுவதரம் முதலிய சைவோபநிடதங்களெல்லாம் சூத்தாத்து வித சித்தாந்தப்பொருளையே சாதிப்பன என்பதை அவ்வவற்றின்வாக்கியங்களால் இனிது விளக்கி, வேதமுஞ் சிவாகமமும் வேறென்று கூறிப் பிணங்குவோர் பிணக்கை மாற்றுவது.

சிவாகமவாக்கியங்களைக் தந்தமக்கு வேண்டியவாறெல்லாம் இடர்ப்படுத்தி கலிந்து பொருள்கொண்டு அதனையே மெய்ப்பொருளென்று காட்டி வஞ்சிக்கும் சமவாதசைவர் கொள்கையை வேரோடு களைவது.

எல்லாமதங்களின் சொருபங்களையும் தன்னுள் அடக்கிக் காட்டுவது.

புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என்னுஞ் சமயக்கொள்கைகளை அளவைகளான்மறுத்துச் சுத்தாத்துவித சித்தாந்தத்தைத் தாபிப்பது.

தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளிலுள்ள திருப்பாடல்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி அவற்றின் மெய்ப்பொருளை வெள்ளிடை மலைப்போற் றெள்ளிதிற் புலப்படுத்துவது.

இலக்கண இலக்கியப்பொருட் டிறவுகோலாயுள்ளது.

கற்போர்க்கு உண்ணவுண்ணத் தெவிட்டாத தெள்ளமுதம் போன்றது.

பத்திரசமும் முத்திரசமும் பழுத்தொழுகும் பான்மையது.

சைவசமயிகளுக்கெல்லாம் கிடைத்தற்கரிய பெரிய சிந்தாமணியாயுள்ளது.

இன்னோரன்ன பிறமகத்துவங்களும் வாய்க்கப்பெற்ற இப்பாடியத்தின் முதலிலுள்ள சிலபாகங்கள் இற்றைக்கு இருபது வருடங்களுக்குமுன்னர் யாழ்ப்பாணத்திலே ஸ்ரீ ல ஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் சைவவித்தியாசாலை முதலுபாத்தியாயராகிய ஸ்ரீமத். மா - வைத்தியலிங்கபிள்ளை அவர்களிடத்து யான் பெற்றுப் பார்த்தபொழுது அதன்பொருணுணுக்கம் முதலியன எனக்குக் கழிபேருவகை பயந்தமையின் அதனை முற்றும்பெற்று வாசித்துணர்ந்து பெரும்பய னடையவேண்டும் என்னும் வேணவாவினால் விழுங்கப்பட்டிருந்தேன்.

பின்பு இந்தியாவுக்குவந்த காலந்தொடங்கி அதனைப்பெறமுயன்று ஆங்காங்கு விசாரணைசெய்து வருகையில் ஸ்ரீமத். சபாபதிநாவலரவர்களிடம் அப்பாடியம் இருப்பதாகக்கேள்வியுற்று அவர்கள்பாற் சென்று அதைக்குறித்துக் கலந்து பேசினேன். அவர்கள் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறைந்தாற் பிரதி கொடுக்கப்படமாட்டாது என்றார்கள். அத்தொகை கொடுத்துவாங்குதற்கும் சம்மதமுள்ளவனாயினேன்.

அஃதங்ஙனமாக, அதனையறிந்த எனது அந்தரங்க நண்பரொருவர் அந்நாவலரவர்களுக்கு அப்பாடியத்தை எழுதிக்கொடுத்தவர் மூலமாக விலைக்குக் கொடுக்கப்படும் பிரதி பலவிஷயங்கள் நீக்கியும் பலபிழைகள் செறித்தும் எழுதப்பட்டமையை அறிந்து அவ்வண்மையை எனக்குத்தெரிவித்து அவர்களிடத்துள்ள மூன்று பிரதிகளையும் ஒருங்கு கேட்கும்படி கூறினர். அங்ஙனங் கேட்டபொழுது அதற்கு அவர்கள் உடன்படாமையினால் யான் வாங்க விரும்பிய கருத்தைத் தவிர்ந்தேன்.

பின் ஒருவித்துவானிடம் இப்பொழுது அச்சிட்டபாகம் முழுதும் இருக்கின்றதெனக் கேள்வியுற்று அவரிடத்துச் சென்று ஒருபெருந்தொகைப் பொருள் கொடுத்து வாங்கி அதனை ஒருபிரதி பண்ணிக்கொண்டு மூலப்பிரதியை அவரிடம் கொடுத்துவிட்டேன்.

இங்ஙனம் பெருந்தொகைப்பொருள் கொடுத்து அரிதிற்பெற்ற பிரதி பூர்த்தி உடைத்தன்றாயினும் செல்முதலியவற்றாற் கேடுமாயின் பின் அது

தானும் பெறுதற்கரிதெனக் கருதியும், வேதாகபிருங்கணங்களாகிய புராணம் முதலியனவே சைவநூல்கள் எனவும் அவைகளிலுள்ள வர்ணனைகளும் சூதி ப்பான் வேறுபொருளுணருமாறு கூறப்பட்ட சரிதங்களுமே சுத்தாத்துவித சைவசித்தாந்தத்துண்மைப்பொருளெனவுங் கொண்டு மயங்குவார்க்கு அம்ம யக்கம் நீங்கிச் சைவநூலுணர்ச்சி தலைப்படற்பொட்டும் அவ்வொரு பிரதி யையே பரிசோதனைசெய்து என் சிற்றறிவிற்கெட்டிய வண்ணம் ஒருவாறு செப்பஞ்செய்து அச்சிட்டு முடித்தேன்.

குருவினுலே செயற்பாலனவாகிய பரீக்ஷைகளெல்லாஞ் செய்யப்பட் டுப் பக்குவமுடையராய்ச் சமயம் விசேடம் நிருவாணம் என்னும் மூன்றுதீக் கையும் பெற்றவரே இந்த ஞானநூலை ஓதுதற்கதிகாரிகளாவர். இதனைக் குரு முகமாயறிதலின்றித் தமது மதிநுட்பத்தால் ஆராயப்புகுவோர் சந்தேக விப ரீதமறத் தெளிதல் கொள்ளார். அதுவன்றியும் பதிவாக்கியங்களிற் குற்ற மேற்றித் தாம் ஈகத்திற்கு ஆளாவர். இதுபற்றியன்றே இவைகளைக் குருவி னிடத்தே பெறுக எனச் சைவாகமங்கள் விதித்ததூஉம் என்க.

அநுபவமுடைய தேசிகருணர்த்த உணர்தற்பாலதாகிய இந்நூலுரை யைச் சிற்றறிவுடைய பசுவர்க்கத்துட் பட்ட சிறியேன் அச்சிடத்தொடங்கி யது அறிவானுன்ற பெரியோர்க்கெல்லாம் ஏ ஏ இவனறிவிருந்தவாறென்னை? என்று எள்ளி நகையாடற்கேதுவாம்.

அறிஞர்கள் இப்பதிப்பிற் காணப்படும் பிழைகளையும் அவற்றின் திருத் தங்களையும் பெருந்தயை கூர்ந்து தெரிவிப்பார்களாயின் அந்நன்றியைமறவாது அவற்றை இரண்டாம் பதிப்பிற் பிரசுரஞ்செய்து யாவர்க்கும் பயன்படச் செய்வேன்.

இப்பாடியம் அச்சிட ஆரம்பித்த காலத்திலே அதற்குமாறுகச் சிலர் திரு க்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ ஸ்ரீ மகாசந்நிதானத் திற்கு நேரிலும் கடிதவாயிலாகவும் கற்பித்து வெளிப்படுத்திய கோள்களைப் பொருட்படுத்தாது அவர் ஞானமாறு தமது பெருந்தகைமையும் பேருபகா ரமும் பொதுநன்மையும் முன்பின் மாறுபடாவண்ணம் உற்றுநோக்கி விடைய ளித்தருளிய அச்சந்நிதானத்தின் அதிதுல்லிய நுட்பபுத்தியும், பெருங்கரு ணையும் என்னுளும் மற்றெவராலும் எக்காலத்தும் மறக்கற்பாலனவல்ல.

சைவசமயிக ளெல்லாருக்கும் பயன்படும்படி தொடங்கிய இவ்வரியபெ ரிய நற்கருமத்திற்கு விரோதிருத்திராக்ஷத்திற்கு உரிமை பூண்ட சைவர்களாகிய சிலர்செய்த பேரிடையூறுகளெல்லாவற்றையும நீக்கி இதனை நிறைவேறும்படி செய்தருளிய எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாகிய பரமசிவனுடைய திருவடி களை மனம்வாக்குக் காயங்களாற் சிந்தித்து வந்தித்து வணங்குகின்றேன்.

இங்ஙனம்

சுவாமிநாதபண்டிதர்.

கிடைத்தபாடியப்பிரதிகள்.

மதுரை.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருமடத்துப் பிரதி. க

திருமயிலை.

மகாவித்துவான் ஸ்ரீமான் - தணிகாசலமுதலியாரவர்கள் பிரதி. ஏ

யாழ்ப்பாணம்.

ஸ்ரீமத் - வைத்தியலிங்க உபாத்தியாயரவர்கள் பிரதி. க

ஸ்ரீமத் - பொன்னம்பலதேசிகரவர்கள் அச்சிட்ட பிரதி. க

இவை மங்கலவாழ்த்துமுதல் முதற்சூத்திரத்து இரண்டாம் அதிகரணம் வரை உள்ள பாடியம் அடங்கப்பெற்றன. ஆறஞ்சூத்திரத்துச் சிலபகுதிகளும் இன்னசூத்திரத்தைச்சார்ந்ததனவென்றறியபபடாத சிலபகுதிகளும் கையெழுத்துப்பிரதிகளிலுள்ளன.

கும்பகோணம்.

வித்துவான் ஸ்ரீமத் - அருணாசலச்செட்டியாரவர்கள் பிரதி. க

வேதாரணியம்.

ஸ்ரீமத் - நாகநாதக்குருக்களவர்கள் பிரதி. க

இவை ஆறஞ்சூத்திரத்திலுள்ள சிலபகுதிகள் அடங்கப்பெற்றன.

திருமாகறல்.

வித்துவான் ஸ்ரீமத் - காத்திகேயபதலியாரவர்கள் பிரதி. க

இது பலபாடியக்குறிப்புக்கள் அடங்கப்பெற்றது.

சென்னை.

ஸ்ரீமத் - சித்தாந்தசரபமாகிய அட்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள் பிரதி. க

இது பஞ்சாக்கினிவித்தை முதலிய சிலகுறிப்புக்கள் அடங்கப்பெற்றது.

திருமயிலை.

வித்துவான் ஸ்ரீமத் - சண்முகப்பிள்ளை அவர்கள் அச்சிட்ட பிரதி. க

இது அத்துவிதப்பகுதியும் கருடபாவனைப்பகுதியும் அடங்கப்பெற்றது.

இப்பிரதிகளைத் தந்து உதவிய சிவஞானச்செல்வர்களாகிய இவர்களது பெருநன்றியை யான் எக்காலத்தும் மறவேன். இப்பாடியத்தாற் பயனடையும் வினையோரும் அதனை மறக்கற்பாலரல்லர். திருமடத்துப பிரதியும் தணிகாசலமுதலியாரவர்கள்பிரதியும் பரிசோதனைக்கு இன்றியமையாததனவாய் இருந்தன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீ ல ஸ்ரீ

ஆறுமுகநாவலரவர்கள்

மாணக்கரும் சித்தாந்தபானுவும்

வடமொழிதென்மொழி இரண்டினும் வல்லுநரும்

கவர்மெண்டு அக்கவுண்டண்டு உத்தியோகத்திலமர்ந்திருந்து இப்பொழுது

உபகாரவேதனம்பெற்று ஆறுதலடைந்திருப்பவருமாகிய

திருமயிலை மகாவித்துவான்

ஸ்ரீமான் - தணிகாசலமுதலியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பூத்த கல்லாலின் கீழிருந்து சிவயோகஞ் சிறப்பச் செய்யு
நீர்பூத்த சடிலனந்தி நிகழ்த்தியவா சங்கையினை நீக்க வேண்டி
கார்பூத்த வளக்கருணை நானிலத்தி னன்குமடை திறந்து பாயப்
பேர்பூத்த சிவஞான போதமதைப் பிணக்கறவே பேசி ஞலல். (க)

மெய்கண்டா ரந்நூலி னிழுத்தமிழிற் சொற்றருளி மேன்மை யாகப் [செய்தே
பொய்கண்டார் மதங்களெலாம் போயொடுங்க வார்த்திகப்பேர்ப் பொழிப்புஞ்
கைகண்டா முண்மையெனக் கலிவாணர் காதலிப்பக் கருணை யாலே
செய்கண்டார் மேதினியிற் றிகழ்வித்துச் சித்தாந்தத் தெளிவித் தாரால். (உ)

அகத்தியனார் வரத்துதித்தே யருங்கலிக ளொருங்குணர்ந்த வறிவி ஞலே
சகத்தியலி மிகச்சிறிய பருவத்திற் றகர்த்தெறிந்த சால்பான் மிக்கோர்
மகத்துவஞ்சேர் கைலாய பரம்பரையின் வருமேலோர் வைப்பா யோங்கி
மிகத்தவஞ்செ யாவடுதண் டுறைமடத்து மணிவிளக்காய் மேவி ஞரே. (ங)

அன்னவரே சிவஞான மாமுனிவ ரென்றறைபு மருமை யாள
ரின்னவரே சிவஞான போதத்தை யெமக்களித்த வெழிலார் வெண்ணெய்
மன்னவரே யெனவதற்குச் சிற்றுரையும் பாடியமும் வாய்ப்பச் செய்தா
ரென்னெவரே யவற்றருமை பெருமைகளை யெடுத்துரனி யியம்ப வல்லார். (ச)

கற்கண்டோ சர்க்கரையோ கண்ணிமையார் நல்லமிர்தோ காமதேனு
விற்கண்ட பாலமிர்தோ தேனமிர்தோ வேண்டுபலச் சாற்ற மிர்தோ
தற்கண்ட வடியவர்க்குச் சாம்பசிவன் கொடுத்தருளுந் தண்ணென் மாண்பா
வெற்கண்டு நேருரைப்ப னிந்தமகா பாடியத்தி னினிமைக் கம்மா. (டு)

எக்கலியின் முடிபொருளு மிதனினனி யிலருதலா லிதனை மிக்க
வக்கலிக லொளந்திரண்ட பொக்கிஷமென் றறைவதற்கோ ரைய மில்லை
முக்கணவ னறிந்திடுவ னிவ்வுண்மை முழுமலத்தாற் பீடித் தோர்கள்
தக்கபடி யுணரவுனிற் றவம்பலநாட் டனித்துறைந்து சார்தல் வேண்டும். (கூ)

முன்னூல்கண் முழுதுணர்ந்த மெய்கண்டார் போலொருநூன் முற்று வானுந்
தன்னேரில் சிவஞான முனிவர்போ லோருரையைத் தரவல் லானு
மிந்நூலுக் கொப்பதொரு நன்னூலு மிந்தமகா பாடி யம்போ
னன்னுவ லவர்போற்று பாடியமு நானிலத்தி லில்லை யில்லை. (எ)

இவ்வரிய பாடியத்தை யெத்தனையோ பலகாலா யெங்குந் தேடி
யெவ்வமிலா வொருபுலவ னிடத்திருந்த லறிந்துபொரு ளின்பா லீந்து
கவ்வையகன் றதுபெற்றுக் கருதருஞ்சிற் றுரையினெடு கலனைச் சேர்த்துச்
செவ்வனனி கலிகித வழுக்கமின்று சிறந்தபல குறிப்புஞ் சேர்த்தே தந. (அ)

தமிழ்நிலத்துச் சைவரெலாஞ் சார்பிறவிப் பயனடையச் சைவ மோங்க
விமிழ்திரைசூ ழிவ்வுலகி லெம்மருமுந் தலைதாழ்க்க விறைவன் சீர்ந்தி
யமிழ்தினினி தாகமிக வன்பரெலா மறிந்தேத்த்த வைய னுண்மை
கமழ்தரவச் சினிலேற்றிக் காசினியில் வெளிப்படுத்த கருணை வள்ளல். (கூ)

திருக்கோண மலைநிருக்கே தீச்சரமென் றிரண்டினையு மிரண்டு கண்ணு
வருக்கோலி விளங்கியொளி ரியாழ்ப்பாணத் துயர்வண்ணைப் பதியிற் றோத்திப்
பெருக்கோல மிடுகின்னத் தம்பிதேவர் பெருந்தவத்திற் பெற்ற தோன்ற
றருக்கோடு பகைமுருகாச் சார்குற்ற வேர்களொந்த சால்பான் மிக்கோன். (கo)

நந்தூருங் காதலத்து நாணனே முதல்வாரெனு நலிவு தீர்ப்பா
னிந்தூருஞ் சடைமுடியா னெழிலாறு முகனெனவே யாங்க ணெண்ணை
வந்தூருஞ் செந்தூரில் வண்டமிழ்க்கல் லாரியொன்று வைத்து விண்மேன்
முந்தூரும் பன்மாட மொய்யொளிசேர் செண்ணையினின் முதன்மை யாக. ()

கண்டவர்க ணச்சிடவோ ரியந்திரத்தைத் தாபித்துக் கவினூர் நூல்க
ளெண்டகவே பதிப்பித்து விலைகுறைய வெல்லோர்க்கு மீந்து நிற்பான்
மண்டலத்திற் சைவகலங் குடிகொள்ள வளருண்மைச் சாமி நாத
பண்டிதனும் பெருநாம மெண்டிசையும் பரந்துலவும் பாவ லோனே. (கஉ)

யாழ்ப்பாணத்து நீர்வேலி

ஸ்ரீ ம ஸ்ரீ

சங்கரபண்டிதரவர்கள் குமாரராகிய

ஸ்ரீமத் - சிவப்பிரகாசபண்டிதரவர்கள்

இ ய ற் றி ய து.



அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொலனிதழி நிலவுமணி புரிசடையெம் பரசிவனார் புகன்மெய் வாக்காய்
நலனதனி னிலேபெறுமெய்ஞ் ஞானகலே யானசிவ ஞான போதம்
பலனிலவு பலவகையா கமப்பொருளு மமைக்துளதாய்ப் பழுதி லாத
வலனுடைய புலவர்புகழ் வண்மையொடா ரியத்தினனி வயங்கு மன்றே. (க)

சிவபெருமான் றனதுச்சித் திருமுகத்தின் வரவருள்செய் சிவாக மங்க
ளைவைமுழுதி னுளஞான வரும்பாதத் திரும்பொருளே யையந் தீர
வெவருமுரை பொதுச்சிறப்பென் றிரண்டியலா வகுத்தருளி னெளிய வத்திற்
பவமகலப் பன்னிரண்டு சூத்திரத்தாற் பகர்ந்துளதப் பனுவ லம்மா. (உ)

மன்னுமதை வெண்ணெயமர் மையகலு மெய்கண்ட வள்ள லார்தாம்
பன்னுதமி ழின்மொழியாற் பார்த்துணர வார்த்திகப்பேர் பகர்பொ ழிப்போ
டிங்கிலேமன் முன்னியற்றி யினிதருள்செய் தனரதனை யெவருந் தேரத்
தென்னுறுமா பாடியமுஞ் சிற்றுரையு மற்றுரைத்த செல்வ னுவான். (ஊ)

அகத்தியனார் வரப்பிரசா தத்தினவ தரித்ததகை யறிஞர் சிங்கஞ்
சகஞ்தெவரு மிகத்துதிக்கச் சால்புறுபன் னூலுரைக டந்த தீபஞ்
சுகத்திருவை யிகத்திலரு டோமிறிரு வாவடுதண் டுறையா தீனக்
ககத்துலங்க மகத்துவஞ்செய் தவயோகி சிவஞானத் தம்பி ரானை. (எ)

அப்பெருமான் செப்புரைகண் மற்றிரண்டுட் சிற்றுரையை யறிஞர் போற்று
மொப்பில்புக ழாறுமுக நாவலவ னச்சிலிட்டா னுவக்து முன்னே
வைப்புறுமா பாடியந்தா னெப்பரிசும் வெளியின்வரா மாபிற் முகித்
துப்புறலின் றேறுகளிற் றங்கியதா லிங்கரித்தாய் தோன்றிற் றன்றே. (ஏ)

அணியமகா பாடியத்தி னருமையொடு பெருமைபுணர்ந் தாதரத்தா
னினைவினுடி நனியெடுத்துக் கரலிகித முரணழித்து நெறியால் யார்க்கு
மனமுறவே யெளிதினுப யோகமுறப் பலருதிப்பு மருவச் சேர்த்திட்
டினிதினச்சிற் புனவனென்றே யிடையரு விடாமுயற்சி யெழுக்து தூண்ட.

விண்ணுறையும் புலவரென வியன்றமிழாங் கடல்கடைக்து விடாது நின்றே
யெண்ணரிய பொருளாமிர்த மெடுத்துண்டி நரைதிரைமூப் பிகந்து வைகும்
புண்ணியமெய்ப் புலவர்தமைத் தமர்களெனப் புத்தேளிர் புகுந்து நோக்கி
யெண்ணுதலாற் கண்ணிமையா ரிவர்களென வியம்புவிக்கும் யாழ்ப்பாணத்தில்

வண்ணாகர் தன்னினனி சைவர்புரி புண்ணியத்தின் வான்ப யன்போ
னண்ணியெழி லாறுமுக நாவலன்பா லுணர்மருக னல்லோர் போற்றுங்
கண்ணியபொன் னம்பலப்போர்க் கலிஞர்சிரோ மணிபாற்றென் கலிக ளெல்லா
முண்ணிகழும் பரிவொடுகற் றெண்ணுதெளி வடைபுலமை யொளிரநின்றுன்

உலகுகல னிலியிலதென் றுவர்த்துகைட் டிகதெறியே யுறுதி யாக்கொண்
டலகிலமா ணக்கர்தமக் கிலருபல கலைபயிற்றி யரணே நாளும்
வலனுறவர்ச் சணியியற்றிப் பரசமய நிராகரித்து வளர்சை வத்தை
மலருலகி னிலையுறுத்தன் மாவிரத மாக்கொண்டு வாழும் வள்ளல். (கூ)

பேருயர்செந் தூரினிற்சுப் பிரமணிய பெருமான்றன் பெயரி ஞலே
சீருயர்கல் லூரியொன்று செவ்வனிறீஇ யத்தருமஞ் சிறத்து நாளும்
பாருயர மூலதனஞ் சாருதற்கென் றேதெரன்னோப் பதியின் மாட்டே
யேருயர்சை வவித்யாது பாலனயக் திரசாலே யினிதின் வைத்தோன். (கo)

பண்டருதே வாரமுதற் கண்டதிரு முறைகளெல்லாம் பலநல் லேடி
கொண்டினிது சோதனைசெய் தெண்டகவச் சிடமுயலுங் குணத்தோன் றாய
தொண்டருளங் குடிகொண்டோன் கண்டிகைவெண் ணீறணிவோன் சுவாமிநாத
பண்டிதனும் பெரும்பெயரோ னெண்டிசையும் புகழ்படைத்த பண்பான் மிக்கோன்

திணிபிறவிப் பிணிதெறுமப் பாடியமா முருமருந்திற் றேடிப் பெற்ற
மணியுறழ்பா கங்கடமை யணியுறுத்தி யரியபத மருவு மர்த்த
மணியுறுமேற் கோள்விளக்கங் குணமுறுபல் குறிப்பெனலா மனுபா லங்க
ளணவுறச்சேர்த் தெவருமெளி துணர்வினிதா யச்சினிடை யளித்திட் டானே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துவித்துவானும் சித்தாந்தசரபமுமாகிய

அஷ்டாவதானம்

ஸ்ரீ ம த்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இ ய ற் றி ய து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருதிமல பெத்தரரு பந்தகன் மம்பலவி னுர்த லாலே
மனுதிகா ணங்களுக்கெட் டாதவிறை பன்மார்க்க வகைவி ளங்குந்
தனுதிதய சங்கற்பத் தாலுன்னிப் பலீறேவர் தமக்கு மேற்றம்
நனுதிகபற் றேறபுணர் காண்டகைகள் பொதுவாக நுவன்ற பின்னர். (க)

சத்திநிபா தத்துற்றப் பரிபாக மாயடைந்த சைவ மேலர்
நித்தியவி வேகத்தா லேசூழ்ந்து முத்திநிலை கேர்தற் கேற்ற
வுத்தமநற் நிருவருளி னிற்றினோத்துத் தன்சரண யுணர்தற் காக
வித்தகவா கமங்களிரு பானெட்டுச் சிறப்பாக விளம்பி ஞனுல். (உ)

கடலணைய விவ்வுபர கலியிருத யத்திலங்குங் கருத்தை யார்க்கு
மடலுறுகந் திருகந்தி யம்பெருமா னடைவாக வகிலத் தோர்க்குத்
திடமுறநன் குணர்த்திடுவான் றன்மரபி னில்விளக்கச் செவ்வே யந்தத்
தொடர்புறவந் தவதரித்த கைலாய பரம்பரையிற் றோற்ற முற்று. (கூ)

திருஞான சம்பந்த தேசிகோத் தமவள்ள றிரும்ப வந்திங்
கொருமான வடிவங்கொண் டானென்ன வுலகணைத்து முரைக்கப் புண்ய
தருவான மெய்கண்டா னவ்வாக மங்களினிற் றனித்தி லங்கு
முருவாகுஞ் சிவஞான போதத்தைத் தென்றமிழி லோங்கச் செய்தான். (ஙு)

மன்னர்மன் னவர்பணிசற் சைவதபோ தனர்ஞானம் வழங்க வென்றும்
மன்னியநல் லுயர்திருவா வடுதுறையா தீனத்து வதிந்து மேலோர்
பன்னுதமிழ் மொழிக்கும்வட மொழிக்குமொரு தலிவனெனப் பகர நின்ற
முன்னருஞ்சீர்ச் சித்தாந்த பானுஞ் சிவஞான முனிவ ரன்றுன். (ஙி)

சங்கார்ரா மானுஜர்மத் துவர்பாடி யங்களெலாந் தத்த ளிக்கத்
தங்கியதே வலவிசிஷ்ட மதுதலையத் துவிதத்தந் தலைக விழ்க்கத்
துங்கமுறு சிவஞான போதநளிரு கயத்துண்மை சூழ்ந்த சுற்று
மங்களசுத் தாத்துவித திராவிடமா பாடியத்தை வரைந்து வைத்தான். (ஙூ)

இப்படனுவ லாறுண்மை யறிவித்துக் ஹீபமென வேய்ந்த தென்தேகா
செப்பரிய சிவாதிக்ய நிறைந்தபொக் கிஷமென்னச் சிறந்த தென்தேகா
வொப்புயர்வில் ஞானசா தனவொழுக்க நிலயமதா யுயர்ந்த தென்தேகா
திப்பியநல் லருளணைத்து மிகவருளுங் கற்பகமாத் திகழ்ந்த தென்தேகா. (ஙி)

திவ்வியமெய் கண்டபரம் பரைஞான தருவாகத் திகழா நின்ற
விவ்வரிய பாடியத்தைக் காண்பேமா வெனவழிஞ் சேங்கி யேங்கி
யெவ்வமுறுங் காலவர்க ளானந்த மாகடலி னினிது மூழ்கிச்
செவ்வையுற வேதோக்கிச் சித்தாந்தப் பேரமுதத் திளை யுண்ண. (ஙீ)

வேதமுய ராகமபு ராணங்க ளுடன்வைத்து விசுத்த மாகச்
சோதணைபற் பலகாளா விமைகொட்டா தேதயாய்ந்து துகளு முமே
மாநளம தானதவ ளக்கடித் தனிலச்சு மன்னச் செய்து
சாந்தமா வெவருமுப யோகிக்க நபனீலியிற் றந்தா னம்மா. (ஙூ)

உலகுதனக் கொருமுதல்வ னறுமுகற் குபதேச னுவந்து காஞ
கலவடியர்க் கருள்சுரக்குந் திருச்செந்தூர்ப் பெரும்பதியி னலமிக் கோங்க
வலமுறுசெந் தமிழ்க்கழகம் வயங்கதிரி இ வளர்க்கவதை வளமார் சென்னைத்
தலைஞருயர் திராவிட தாபித்து நடாத்திவரு தருமசீலன். (ஙo)

திருமுறையாம் பெருமறைப்பா ராயணமேமுறைமையினிற் றினமுஞ் செய்வா
னருகெறிசேர் சிவனடிய ராறுருவ மெனவுண்மை யறிவிற் கொள்வான்
பொருவருபஞ் சாக்கரவெண் ணீறுமணி சாதனமே பொருளாச் சூழ்வா
னொருபெரிய தனிப்பரமன் றிருவருளே யெகாடு முள்ள மிக்கான். (ஙக)

வளம்பரவு மிலக்கியவி லக்கணஞ்சாத் திரந்தருக்கம் வாய்ப்ப கற்ரு
ணுளமகிழச் சிவபூசை சிவதரும மேமுடத்து மொழுக்கம் பூண்டான் [ன்
விளங்குபொறை நனியடக்கம் வாய்மையரு ளின்சொல்கொடைமிக்க தூயோ
விளம்பரிய நற்சுவாமி நாதபண் டிதசிம்ம விபுதன் மாதோ. (கஉ)



யாழ்ப்பாணத்துச் சுன்னகம்

வித்துவசிரோமணியாகிய

ஸ்ரீமத்

ஆ - குமாரசுவாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

பூவருக்கு நறுங்கடுக்கை புனைசடிலன் குருமுதன்மை பூண்ட தேவன்
மூவருக்கு ளொருமுதல்வன் சிகண்ட பரமேச மூர்த்தி முன்னுட்
டேவருக்கு முனிவருக்கு மனிதருக்கு முத்திநெறி சிந்தை செய்வோ
ரேவருக்கும் பரம்பரையிற் பயன்படுவான் றிருவளத்தி லெண்ணி மாதோ.(க)

அவஞான மூணகற்றி யாகமசா ரங்களெலா மடக்கி நின்ற
சிவஞான போதமெனுஞ் சித்தாந்த சூத்திரத்தின் றெளிவை முற்றத்
துவஞான சிந்தையுறு நந்திபிரான் கருள்செய்தான் றேமி னன்றி
தவஞான மகத்துவஞ்சேர் சனற்குமர முனிவரற்குச் சாற்றி ஞனை. (உ)

நந்திபிரான் பாலுணர்ந்த சனற்குமர முனிவரனு நயந்து கேட்பான்
முந்தியுறு பக்குவசத் தியஞான தரிசனிக்கு மொழிய வன்னோன்
வந்தனைசெய் பரஞ்சோதி முனிக்குரைத்த னவன்கயிலை மலையி னின்று
மிந்தநிலத் திடைவந்து திருவெண்ணெய் நல்லூரை யினிது மேவி. (ங)

கோதகன்ற வேளாளர் குலவினக்காய் வரோதயனுப் கூடி முண்மைப்
போதமுடன் வளர்வளர் மெய்கண்ட தேவனுக்குப் போதித் தையந
நீதமிழிற் பெயர்த்துரையு நிகழ்த்துதியென் றுரைத்தருளி நீங்க வந்த
மேதகையா மெய்கண்ட தேவனுமம் மொழிகிரந்தின் மேலாக் கொண்டு. (ச)

மாறிரண்டு புகலுநெறி நிலைபாறச் சைவநெறி மாண்பு வீறப்
பேறிரண்டு முயிர்களுறச் சாதனமு மிலக்கணமும் பிரமா ணத்தோ
டாறிரண்டு சூத்திரத்தி லமைத்தருளி வார்த்திகமு மறைந்தா னக்நூல்
வேறிரண்டு பெயர்பெறுமோ சிவஞான போதமென விளங்கிற் றன்றே. (ரு)

அந்நூலின் பாலமைந்த வாகமநூற் பொருணுண்மை யிரிய வேத
மெய்ந்நூலின் பொருணுண்மை யியன்கருளி நூனுண்மை வெரு நுண்மை
யெந்நூலின் பாலுமிலை யுரையிலையே லிதன்பொருளோ யாவர் தேர்வா
ரிந்நூலுக் குரைவகுத்த வினியதொரு பெருங்கன்றி யென்று கொண்டு. (ஈ)

ஆரியமே யருந்தமிழே யென்னுமிரு கடல்களுக்கு மத்தங் கண்ட
சீரியன்றத் துவஞானி சிவஞான முனிவனென்று சேண்போ யோங்கும்
பேரியலுத் தவயோகி பேருரைசிற் றுரையென்று பேச நின்ற
வீருரையுஞ் செய்தளித்தா னவற்றருமை பெருமைகளே யாரே சொல்வார். (எ)

காவிடஞ்சேர் மகனளித்தேதான் கயிலையுறை தருநாளிற் கைக்கொண் டீந்த
வாவிடஞ்சேர் மிடறுடையோ னருளடைந்த பாணினிமுன் னளித்த நூற்
பாவிடமிக் குயர்வுபெறு பதஞ்சலிமா பாடியம்போற் பயிலும் பண்பாற் [குப்
றிராவிடமா பாடியமாந் திருப்பெயரும் பேருரைக்குச் செப்பு வாரே. (அ)

இத்துணையு மிப்பொருண்மை யுரைத்திலமற் றெவர்க்குநினக் கீது மீது
சத்தியமென் றறுமுகற்குப் பரமேசன் முன்னளித்த சருவ ஞான
வுத்தரமே வாதுளமே முதலியவா கமவசன முறுதி காட்டி
யெத்தனையோ பலப்பலவாய்ப் பேருரையி னிடையிடையே யிலங்கு மாலோ.

ஆகமவாக் கியமொன்றே வருந்தமிழ்ச்சித் தாந்தமுட னூறி ரண்டு
பாகமுறு திருமுறையின் வாக்கியமு மிலக்கணமும் பழுதூற் காட்டும்
பாகுபடு பலசமய கண்டனமுக் துணிவுரையும் பரந்து நின்றே
மோகமய லகற்றியுரை யாகிய னூலுணர்வின் மொய்ம்புங் காட்டும். (கo)

அவ்வுரையு ளகப்பட்ட பெரும்பாகஞ் சிற்றுரையோ டமையச் சேர்த்துச்
செவ்வனுற வாராய்ந்து வழுவகற்றிப் பலகுறிப்புந் தெளியக் காட்டி
யிவ்வுலகோர் பெறவச்சி னிடைதலுக்கி யினிதளித்தான் யாவ னென்னிற்
சைவமலி யாழ்ப்பாண வண்ணைநகர் வருசின்னத் தம்பி பாலன். (கக)

பண்டையுள சான்றோர்க ளிலக்கணமு மிலக்கியமும் பயின்றே னன்பு
கொண்டுசிவ னடிபணிவோன் சைவமதம் வளருமுயல் கொள்கை யாளன்
தண்டமிழிற் சித்தாந்த சாத்திரமுங் கற்றுணர்ந்தேதான் சாமி நாத
பண்டிதனும் பெயருடையோன் பகிர்ங்க மாதலெரும் பயனு மென்றே. (கஉ)

சிறப்புப்பாயிர முடிந்தது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தென்முகத்தெய்வப்பரமாசாரியர்

தோத்திரம்.



ஆசிரியத்தனி விராய்வர்த கொச்சக வொருபோகு.

கல்லாலந் தண்ணிழற்கீழ்ச் சிவஞானத் தெளிவருளுங்
காமர் காட்சி, நல்லானை நல்லா லொருபாக மாகிய ஞானத்
தானை, யெல்லாரு மேத்தத் தகுவானை யெஞ்ஞான்றுஞ் சொ
ல்லாள் வாருக், கெல்லாஞ் சுகமல்ல தில்லை தொழுமின்
கண்டீர்.

இந்நூலால் நந்திபெருமானுக்கு மலைவுநீர்த்தருளிய பரமாசாரியர் இத்
தகுஷிணைமூர்த்தியே.

கண்ணுவர் கருக்கர் முதலிய பண்ணவர்க்கு வேதப்பொருளை அருளிச்
செய்த பரமாசாரியரும் இத்தகுஷிணைமூர்த்தியே.

சனகாதி முனிவர்க்கு ஞானபாதப் பொருளைச் சின்முத்திரையினும்
தெளிவித்தருளிய பரமாசாரியரும் இத்தகுஷிணைமூர்த்தியே.

தக்ஷிணாமூர்த்தி தியானம்.

திருவிளையாடற் புராணம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

**சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச் செழுமலை பதித்ததுப்
பன்ன, பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும் பங்கயச்
செங்கர நான்கும், வேதபுத் தகமு மழுதகும் பழம்தன் விழி
மணி வடமுமெய்ஞ் ஞான, போதமுத் திரையுந் தரித்ததோர்
தனிமைப் போதன்முன் குழ்ந்தெழுந் தேத்தா.**

(இ - ள்.) சுத்தப்படிக சங்காசரூபமும், செம்பவளமன்ன திருவடியும், செங்கமலமன்ன திருவாயும், மூன்று திருக்கண்களும், செங்கமலமன்ன கான்கு திருக்கரங்களும், அவற்றில் முறையே வலத்தில் உருத்திராக்ஷமணிவடமும் சின்முத்திரையும் இடத்தில் அமிர்தகும்பமும் வேதபுத்தகமும் தரித்த தனி முதற் குரவரான தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் வணங்கி எழுந்து துதித்து,— எ - று.

கண்கவரும் வெண்ணிறத் திருமேனி யென்பார் 'சீதளப்பளிக்கு மேனி' யென்றார். பாதம் பளிக்குமலையிற் பதித்த பவளம்போலு மென்றலின், மேனி பளிக்குமலை போன்றதென்க.

மெய்ஞ்ஞான போதமுத்திரை,—தத்துவ ஞானத்தைப் போதிக்கும் முத்திரை, எனவே சின்முத்திரையென்றதாம். தத்துவஞானத்தை முத்திரை போதித்தலாவது, இறைவன் முனிவர்க்குத் தத்துவங்களை யுரைத்து உரையிறந்த பொருளையுணர்த்துழி, சின்முத்திரைக் கையனுய்த் தானை யிருந்து காட்டல, ஊமைத் தகம்புள் நீர் நிறைந்தாற் போல மாணாக்கர்க்கு ஆனந்தமயமான உள்ளொளி நிறைதலாம்.

வேதபுத்தகம் - பதி பசு பாசம் என்னும் முப்பொருளியல்பு நன்குணர்தற்குக்கருவியாகிய புத்தகம். என்றது சிவஞானபோதத்தை என்றுணர்க. வேதம் - அறிதற்கருவி.

அற்றேல், தக்ஷிணாமூர்த்தி தியான சொரூபங் கூறுகின்ற காரணம் முதலிய ஆகமங்களினும் புராணங்களினும் அவர் திருகரத்தில் தாங்கியிருப்பது "ஞானபுத்தகம்" "வித்தியாபுத்தகம்" "சர்வ விஞ்ஞான ரத்தினங்கட்கோர் கோசமான புத்தகம்" "புத்தகம்" எனவே கூறுதலான் அவற்றோடு முரணும் போலுமெனின், அறியாது கூறினுய்; ஞானபுத்தகம் வித்தியாபுத்தகம் சர்வவிஞ்ஞானங்கட்கோர் கோசமானபுத்தகம் என்பன் சிவஞானபோதநூல் என்னுந் துணியேயன்றி வேறு பொருள் பயக்குமாறின்மையானும், வடமொழியாலாஸ்யமான்மியத்தில் புத்தகம் என வாளா கூறியதனை ஈண்டு இன்ன தென விளக்குதற்பொருட்டே ஆசிரியர் அறிதற்கருவியெனப் பொருள்படும் வேதம்என்னும் அடைபுணர்த்தோதினுராகலானும், வேதாகமங்களை முதல்

வன் அருளிச்செய்தது ஆன்மாக்கள் பொருட்டன்றித் தம்பொருட்டன் முகலான் அவற்றிற்கு வேறாய் ஆன்மாக்கட்குப் பயன்படுதலின்றி ஓர் நூலுண்டென்றற்குப் பிரமாணமின்மையானும், வேதாகமங்களுள் எல்லா நூல்களும் அடங்கும் என்றற்குப் பிரமாணம் உண்மையானும் ஞானபுத்தகம் முதலிய ரூபத்தாற் கூறப்பட்டது வேதாகமங்களின் சாரமாயுள்ள சிவஞானபோதமே என்பது பெறப்படுதலான் முடிபுமாறு யாண்டையதென் றுழிக.

இன்னும், வேதம் என்னும்பெயர் யோகரூடி ரூபத்தால் இருக்குமுதலிய நான்கிற்கும் வழங்கப்படுமாயினும், கௌணவிருத்தியால் ஆகமங்கட்கும் வழங்கப்படுதலான், அவ்வொற்றுமைபற்றி அவற்றின் ஞானபாதப்பொருளைக் கூறுதற்கெழுந்ததாயினும் சிறுபான்மை ஆங்காங்கு இயைபுபற்றி ஏனை யோகம் முதலிய மூன்றுபாதப் பொருள்களையும் கூறும் இச்சிவஞானபோதமும் வேதமெனப்பட்டது என்றலும் ஒன்று.

இனி, சூதசங்கிதையில் கூறியாங்கு இச்சிவஞானபோதமே சர்வஜ்ஞ ஞானங்களாகிய இரத்தினங்கட்கு ஓர்கோசமாகலைச் சிறிது காட்டுதும்:—

"பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுங் கடவுளு ரைப்ப
ணருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்,
இலைகொண் டுவந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வா றுயர்ப்பி
னேவருப்பே தாந்தமென் றுரைசெயிற் பழுத்த
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே."

என்னுந் திருவாக்கானும், "வேதம் பசு" என்னும் மேலை வெண்பாவானும் வேதாகமம் முதலிய எல்லா நூல்களினும் கூறப்படும் விஞ்ஞானங்களும் இதிலடங்குமாறு தெற்றெனக் காண்க.

இவ்வாறன்றி வேறுரைப்பனவெல்லாம், "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரித்த நூல்கள்" என்பதுமுதலிய சுருதிகளோடும் பிறவற்றோடும் முரணுமென்று விடுக்க.

சிவமயம்.

நூல்வரலாறு.

சிவபெருமான் மாசங்காரகாலத்தின் இறுதியிலே உலகங்களை மீளப் படைத்து வேதாகமங்களையுந் தோற்றுவித்துச் சிகண்டருத்திரர் வாயிலாக நந்திபெருமானுக்கு இருபத்தெட்டாகமங்களையும் செவியறிவுறுத்தருளினர். அவற்றைக் கேட்டருளிய நந்திபெருமான் சிகண்டருத்திரரை வணங்கிநின்று, சிவாகமங்தோறும் சரியையாதி காரப்பாதப் பொருள்களும் சிறுபான்மை வெவ் வேறுகக் கூறப்பட்டன. அவற்றுள், உண்மையாவது இதுவென்று அருளிச் செய்யவேண்டுமென்று இரந்து விண்ணப்பஞ் செய்து வினயவழிச், சிகண்ட ருத்திரர் கருணைமீக்கூர்ந்து, நன்றே வினயினாய்; அனந்தமாதவர் எமக்கருளிச் செய்தவாறே கூறுகின்றும்; கேட்பாயாகவென்று அருளிச்செய்து, கற்பந் தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி அவ ற்றிற் கியையச் சரியைமுதலிய மூன்றுபாதப்பொருள்களும் ஆகமங்களில் வெவ்வேறுகக் கூறப்பட்டன. ஆகலான் அவற்றுள் எவ்வாகமத்தின் முறை யார்யார் தீக்கை பெற்றார் அவரவர் அவ்வாகமத்தின் முறை அநுட்டிக்க. எக்கோயில் எவ்வாகமத்தின்முறை பிரதிட்டை செய்யப்பட்டது அக்கோ யிற்கு அவ்வாகமுறையே பூசை விழாமுதலியன நடத்துக. மாறிச்செய்யிற் குற்றமாம்.

இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலின், அது வேறுபடுதல் பொருந்தாமையான், அவையெல்லாந் தூலாருந்ததி நெறிபற் றிக் கூறப்பட்டனவன்றி மாறுகொளக் கூறப்பட்டனவல்ல வென்பதை வகு த்துணர்த்துதற்பொருட்டு, இரௌரவாகமத்துட் பன்னிருசூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞானபோத மென்பதோர்படலம். அது கேட்டார்க்கு எல் லாவாகமப் பொருள்களும் வேறுபாடின்றி இனிது விளங்கு மெனக் கூறி, அச்சிவஞானபோதத்தை நந்திபெருமானுக்குச் செவியறி வுறுத்தருளினர். நந்திபெருமானும் அதுகேட்டதுணையானே எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்னர் அதனைத் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிற ந்த சனற்குமார முனிகட்குச் செவியறிவுறுத்தருளினர். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்குச் செவியறிவுறுத்த ருளினர். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பாஞ்சோதி முனி

கட்குச் செவியறிவுறுத்தருளினர். அவர் தமிழ்நாடுசெய்த தவத்தானே சாமுசித்தராய் அவதரித்து மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய்த் திருவெண்ணெய் நல்லூரில் நன்மாமனர் வீட்டில் விற்றிருந்த மெய்கண்டதேவர்பால் எழுந்தருளிவந்து சிவஞானபோதத்தைக் கொடுத்து, "இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்துய்தற்பொருட்டுத் தமிழின் மொழிபெயர்த்துச் செய்து பொழிப்புரைக்க" என்றருளிப், பொழிப்புரைக்குமாறுஞ் சத்தியஞானதரிசனிகள் பாற் றூண்டுகேட்டவாறே செவியறிவுறுத்தருளி நீங்க, அவரும் அவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளித், தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த அருணந்திசிவாசாரியர்க்குச் செவியறிவுறுத்தருளினர். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த மறைஞானசம்பந்த சிவாசாரியர்க்குச் செவியறிவுறுத்தருளினர். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்க்குச் செவியறிவுறுத்தருளினர். இங்ஙனம் வருகின்றது நூல்.

நூல்வரலாறு முடிந்தது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நூலாசிரியர் வரலாறு.

மெய்கண்டதேவர்.

அநுசர்க்கழிநெடிலடியாகிய விருத்தம்.

சூறிய வாடியிற் பெரியவா நிழல்செறி கொள்கையாய்ப் போதச்
சிறிய சூத்திரத் தியமமா பொருளெலாஞ் செறித்துநா முய்வா
னறிய நல்கிய மெய்கண்ட தேவன தருண்மடை திறக்கு
நறிய சீறடிக் கமலநன் ஞண்மலர் சென்னியி னமப்பாம்.

நடுநாட்டிலே, திருப்பெண்ணாடகத்திலே, பாம்பரைச்சைவ வேளாளர் குலதிலகரும், சிவபத்தி அடியார்பத்திகளினும் கல்வி செல்வங்களினுஞ் சிறந்தவரும், அச்சுதர்களப்பாளர் என்னும் பெயருடையவரும் ஆகிய ஒருவர் இருந்தார். அவர் நெடுங்காலம் பிள்ளைப்பேறின்மையால், அதற்கு உரிய அரிய விரதாதிகளையெல்லாம், ஆதிசைவரும் சகலாகமபண்டிதரும் ஆகிய தம்முடைய குலாசாரியர் உணர்த்த உணர்ந்து அநுட்டித்து வந்தனர். வந்தும் சித்திபெறாது வருந்தி, பின்னும் சகலாகமபண்டிதரிடத்தில் விண்ணப்பஞ்செய்தனர். அதனை உணர்ந்த சகலாகமபண்டிதர் உற்றுநோக்கித் தமிழ்வேதமாகிய தேவாரத்தை, விதிப்படி அருச்சித்து வணங்கி அச்சுதர்களப்பாளைக்கொண்டு அதிலே காரணசாந்துவித்தனர். சாத்துவித்தவழி, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவாய்மலர்ந்தருளிய "கண்காட்டு நுதலானும்" என்னுந் திருவெண்காட்டின்மேலதாகிய திருப்பதிகத்திலே, அருட்சத்தியாகிய உமாதேவியார் திருநாமசம்பந்தமான "தேயடையா பிரிவெய்துமே" என்னுந் திருப்பாடல் உதயமாயிற்று. அதிலுள்ள "வெண்காட்டு முக்குளநீர் சேர்வினையார் பிள்ளையினெடு உள்ளகினைவாரினை வம்பெறுவர் ஒன்றும் ஐயுறவேண்டா" என்பதன்பொருளைச் சகலாகமபண்டிதர் நோக்கி, மிகமகிழ்ந்து கொண்டாடி அச்சுதர்களப்பாளர்க்கு உரைத்தருளினர்.

அதன்பின் அச்சுதர்களப்பாளர் அகிரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு, திருவெண்காடு என்னுந்திருப்பதியைத் தம்முடைய மனைவியாரோடு அடைந்து, திருக்கோயிற்றிருநிருத்தமண்டபத்திலே, சோமாஸ்கந்தாகினி என்னும் முச்சுடர்களின் திருநாமம் பெற்ற முக்குளத்திலே, விதிப்படி ஸ்நானம்பண்ணி, சுவேதாரணியரையும் பிரமவித்தியாநாயகியாரையும் தரிசித்து வழிபடுவாராயினர்.

அங்ஙனம் வழிபடும் காலிலே, ஒருநாட் சுவேதாரணியர் அச்சுதர்களப் பாளருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "உனக்கு இப்பிறவியிலே, பிள்ளைப்பேறு அரியதாயினும், சர்வாபீஷ்டமும் தரத்தக்கதாய், நமக்கு மிக்க பிரீதியுடையதாயுள்ள தேவாரத்தைப் பரமப்பிரமாணமாகக்கொண்டு, நீ ஓழுகுகின்றமையால், அத்தேவாரத்தைப் பாடிச் சைவஸ்தாபனஞ் செய்த ஞானசம்பந்தன் என்மேற சொல்லும்படி நமது திருவருளினாலே, இன்னும் தமிழ்நாடு உய்யும்வண்ணம், அத்தேவாரத்தின் மெய்ப்பொருளே உள்ளடக்கிய சைவசிந்தாந்தசாத்திரத்தை வெளிப்படுத்திச் சைவஸ்தாபனஞ் செய்யத்தக்கவனுக உன்னிடத்தில் ஒரு சற்புத்திரன் அவதரிப்பான்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். உடனே விழித்தெழுந்த அச்சுதர்களப்பாளர் பெருமகிழ்ச்சிகொண்டு மனைவியாருக்கு அச்சுபீதாஷ சமாசாரத்தைத் தெரிவித்து, அவரோடு தாமும் பேரன்புடன் சுவேதாரணியரையும், பிரமவித்தியாகாயகியாரையும் வழிபட்டு வசித்தார். அங்ஙனம் வசிக்கும் காலிலே, சுவேதாரணியருடைய பெருங்கருணையினாலே, உலகமெல்லாம் உய்யும்படி. அவர் மனைவியாரது அருமைத்திருவயிற்றிலே, கருப்போற்பத்தியாகிய பெரும்பேறு உளதாயிற்று.

அச்சுதர்களப்பாளர் அதனையுணர்ந்து, திருவருளைத் துதித்து, உள்ளத்தின் மூளுகின்ற பெருமகிழ்ச்சியோடு சிவாகமவிதிப்படி செய்யவேண்டுஞ் சடங்குகளைப் பத்துமாசங்களினுஞ் சிறப்பாகச்செய்து பேரின்பத்தை துகருங்காலிலே, மிகமேலாகிய சுபதினத்திலே, பரசமயத்தருக்குநீங்கவும், எல்லாரும் அத்துவிதத்துண்மை அறியவும், வடமொழிச்சிவஞானபோதம் தென்மொழியினும் வழங்கவும், சிவனடியார் எஞ்ஞான்றும் பேரானந்தம் பெற்றிருக்கவும், பலவுலகங்களுள்ளும் பூலோகமும், அப்பூலோகத்துள்ள எங்காதிகளுள்ளும் தென்னாடுமே சிறக்கவும் ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். தந்தையார் அவருக்கு உரியருபவத்திலே சுவேதவனப்பெருமான் திருவருளாற் பிறக்தமையின் சுவேதவனப்பெருமாள் என்னுக் திருநாமம் சாத்தினர்.

அதன்பின்பு அச்சுதர்களப்பாளரும் அவர்மனைவியாரும் சுவேதாரணியரையும் பிரமவித்தியாகாயகியாரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு தமது அருமைத்திருக்குமாரரோடு தங்கள் ஜனனபூமியாகிய திருப்பெண்ணாகடத்தை அடைந்தார்கள்.

அச்சமாசாரத்தைக் கேள்வியுற்ற அங்காவாசிகளெல்லாரும் அத்திருக்குமாரரை நாடோறும் வந்து தரிசித்துக் கழிபேருவகையடைவாராயினர். சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய அவர் பிறைமதிபோல வளரும் காலிலே திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் அவரதுகண்மாமனார் வேணவாவோடும் அவரைத் தமது இல்லத்திற்கு எடுத்துக்கொண்டுபோய்ப் பேரன்போடு வளர்க்க வளர்த்து, இரண்டு பிராயத்திற்றானே மெய்யுணர்வின் முற்றும்பேறுடையராய் எழுந்தருளியிருந்தார்.

இருக்கும் காலிலே, பாஞ்சீசாதிமுனிவர் திருக்கைலாசமலையினின்றும் நீங்கி, திருவெண்ணெய்நல்லூரை அடைந்து, அம்மெய்யுணர்வுடையாரைச் சந்தித்து, சிவஞானபோதத்தை நல்கி, இருவரும் சமயதீக்கையாராய் உணர்ந்து உய்

தற்பொருட்டு, மொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்கவென்றருளிப் பொழிப்புரைக்குமாறும் சத்தியஞானதரிசனிகள்பால், தாங்கேட்டவாறே வகுத்தருளிச்செய்து, பொய்ச்சமயங்களின் நெறி இது இது என்று கண்டு கழிப்பித்து, மெய்ச்சமயமாகிய சைவத்தின் உண்மை உணர்ந்து, அதனை ஸ்தாபனஞ்செய்யும் காரணத்திற்கும், தம்முடைய ஆசிரியர் சத்தியஞானதரிசனிகள் திருமடத்திற்கும் இணங்க, அம்மெய்யுணர்வுடையாருக்கு மெய்கண்டதேவர் எனச் சிறப்புத திருநாமம் சாத்தி நீங்கினர்.

பின்பு மெய்கண்டதேவர் அத்திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருக்கின்ற சுயம்புமூர்த்தியாகிய பொல்லாப்பிள்ளையாருடைய சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடி, சிவபிரான் திருவருளும், ஆசிரியர் பரஞ்சோதிமுனிவர் கருத்தும் நோக்கி, தமிழ்நாடு உய்யும்வண்ணம், அவ்வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து, வார்த்திகமென்னும் பொழிப்புரையுஞ்செய்து பல அற்புதங்களை விளக்கி, சைவஸ்தாபனஞ்செய்து, தம்முடைய மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மருள்ளும் சிறந்தவரும், திருவதுறையூரிலே அவதரித்தருளிய ஆதிசைவரும், சகலாகமபண்டிதரென்னுங காரணபபெயருடையவருமாகிய அருணந்திசிவாசாரியருக்கு அளித்தருளி, நெடுங்காலம் சிவயோகதலிமர்ந்து, திருவெண்ணெய்நல்லூராகிய அதிதிருப்பதியிலே ஐப்பசிமாதத்துச் சுவாதிநக்ஷத்திரத்திலே அகண்டாகார நித்தியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமானுடை இரண்டறக்கலத்தலாகிய முத்தாத்துவிதமுத்தியை அடைந்தனர்.

இவர்காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஊடுo வருடங்களுக்கு முன்னெண்பட

நூலாசிரியர்வரலாறு முடிந்தது.

சந்தானகுரவர்நால்வர் திருநக்ஷத்திரம்.

சித்திரை யத்த மும்மாடதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மேய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உரையாசிரியர்வரலாறு.

திராவிடமாபாடியமுனிவர்.

காவுந்தாழிசையும் பெற்றுவந்த கொச்சகக் கலிப்பா.

தரவு.

உலகெலாம் புகழோங்க வுண்மையெலா மெடுத்துரைத்தெம்
அலகிலாத் தமிழ்முனியென் றறிஞரெலா மேத்தெடுப்பத்
தென்றிசையின் பெருந்தவத்தாற் றிருவவதா ரம்புரிந்து
மன்றினிய தாய்ப்புரைய வருளிருத்து மொருபெருமான்
வடமொழியுந் தென்மொழியு மற்றையுள வாமொழியுங்
கடல்குடித்த முனிநேரக் கண்டருளுஞ் சித்தாந்தி
பங்கயத்தி லுறைவோனும் பசுங்கடலிற் றுயில்வோனும்
புங்கவரு முணர்வரிய போதப்பே ருரைசெய்த
தவமோன பெருமையெலா நிலமொழியச் சாலாத
சிவஞானப் பெருமுனியாந் தேவேநீ கேட்டருள்க!

தாழிசை.

ஆக்களெனு முயிர்ப்போத மடிவதுநந் துறையென்றே
நீக்கரிய தண்டிறையே நின்குடியாக் கொண்டனையே.
தமிழ்தமிழென் றெல்லோருந் தர்லசைக்கு மிம்மகிமை
யமிழ்தம்போ னீயளித்த வறத்தருளின் பிச்சையதே.
எச்சமயத் தெவர்தாமு நின்வாய்மை யெண்ணிலரேற்
பிச்சரவ ரெப்பயனும் பெற்றிலாப் பெற்றியரே.
தீந்தமிழும் பாடியமாஞ் செவ்வணியைப் பூண்பதற்கிங்
கீந்தவனு நீயன்றே யித்துணையோ நின்பெருமை.
ஒப்பதிகம் பெறற்கரிய வுன்முட்குப் பன்முறையாஞ்
செப்பமுற மிகுவணக்கஞ் செய்தரோ வுய்குவமே.

பாண்டிவளநாட்டிலே, பொதியமலைச் சாரலிலே, பாவநாச மென்னுந் திருப்பதியைச்சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே, அகத்தியமகாமுனிவரிடத்தே ஏழுதலைமுறையளவும் அருட்புலமை நிரம்பும் வண்ணம் வரம்பெற்ற பரம்பரைச்சைவ வேளாளர் குலத்திலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரும் கல்வி செல்வம் என்னும் இரண்டும் ஒருங்குடையவரும் ஆகிய ஆனந்தக்கூத்தர் என்பவரொருவர் இருந்தார். அவர்மனைவியார் கற்பிலே தமக்கு உயர்வொப்பில்லாத மயிலம்மையாரென்று எவராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுபவர். அவரது திருவயிற்றிலே, ஏழாவதுதலைமுறையாகத் தமிழ்நாடுசெய்த தவத்தானே, ஒருசற்புத்திரர் திருவவதாரஞ்செய்து முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் சாத்தப்பெற்று ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர்.

பின்பு முக்களாலிங்கர் ஐந்தாம்பிராயத்திலே, பிதாவினாலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்றுப் பள்ளிக்கூடத்தில் அமர்ந்து கற்பாராயினர். அங்ஙனம் கற்குங்காலத்திலே, திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து சிவஸ்தலயாத்திரையாகப் புறப்பட்ட சிலமுனிவர்கள் விக்கிரமசிங்கபுரத்து வீதியிலே சென்றார்கள். பள்ளிக்கூடத்தினின்றும் வந்த முக்களாலிங்கர் அம்முனிவர்களைச் சந்தித்துத் தரிசித்து வணங்கி, "சுவாமிகாள் அடியேன் வீட்டிற்கு எழுந்தருளித் திருவமுதுசெய்து, பின்பு சென்றருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முனிவர்கள் ஆண்டின் இளையரும் அறிவின் முதியருமாகிய முக்களாலிங்கர் பிரார்த்தனைக்கு இரங்கி, விருப்பத்தோடு உடன்பட்டு அவருடன் அவரது வீட்டுக்குப்போயினர். அங்கே தமது புத்திரர் அருமைக்கருத்தையுணர்ந்து அருந்ததியினுஞ்சிறந்த மயிலம்மையார் அன்போடு உபசரிக்கத் திருவமுதுசெய்து, அவரது கற்பின் திறத்தையும், சிவனடியார்க்குச்செய்யுந் திருத்தொண்டின் திறத்தையும், "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்—பெய்யெனப் பெய்யு மழை." என்னுந் திருக்குறளுக்கு இலக்கியமாக நாயகனையே தெய்வமெனக்கொண்டு ஒழுகும் கலத்தினையும் சிறப்பித்து, "அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்—திருந்த வழுதளிக்குஞ் செல்வி-பொருந்தலே—யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயுமானந் தவாத மயில்." என்னுஞ்செய்யுளை இயற்றிச் சென்றருளினர்கள். அதன்பின்பு புறத்தேபோயிருந்த ஆனந்தக்கூத்தர் வீட்டிற்கு வந்தபோது நிகழ்ந்த அரியசெயல்களைக் கேள்வியுற்றுப் பேரின்பக்கடலிலே முழுகினர்.

பின்னர் ஆனந்தக்கூத்தர் புத்திரராகிய முக்களாலிங்கரோடு ஆதீனமுனிவர்களிடத்தேபோய் வணங்கியவழிச் சத்திநிபாதமுடைய புத்திரர் பிறவிப்பெருந்துன்பக்கடலினின்றுங் கரையேறக்கருதி, அம்முனிவர்களோடு தாஞ் செல்லவேண்டுமென்னுங் குறிப்பினைத் தந்தையாருக்கு உணர்த்த, அவர் புத்திரரைப்பிரியச் சிறிதும் மனமில்லாதிருந்தும் ஒருவாறிசைந்து அவரை அவர்களோடு விடுத்து வீட்டிற்குத்திரும்பினர்.

தந்தையார் நீங்கியபின்பு, முக்களாலிங்கர் ஆதீனத்து முனிவர்களோடு வழிக்கொண்டு மார்க்கங்களிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு,

சோழகாட்டிலுள்ள திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து, ஆதீனபரமகுருவாகிய நமச்சிவாயமூர்த்திகளைத் தரிசித்துத் திருவருணோக்கம் பெற்றுக்கொண்டு, அப்பொழுது சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானசாரியராகிய பின்வேலப்பதேசிகரை ஓடுக்கத்திலேபோய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர்.

வணங்கியமுக்களாலிங்கர் ஞானதேசிகரிடத்தே சைவசக்கியாசமும் சிவதீக்ஷையும் சிவஞானயோகிகளென்னுந் தீக்ஷாநாமமும்பெற்று மெய்கண்டசாத்திரம் பண்டாரசாத்திரங்களைக் கேட்டருளினர். சிவஞானயோகிகள் அகத்தியமகாமுனிவர் வரத்தால் அவதரித்தருளியவராகலின், எளிதிலே வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் முற்றுமுணர்ந்து மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் அமர்ந்தருளினர். வேலப்பதேசிகர் சிவஞானயோகிகளுக்கு மெய்யுபதேசஞ் செய்தருளிய ஞானசாரியரென்பது "எவ்வெவகோட்படுபொருளு மஞ்செழுத்தி னடக்கியவற் றியல்பு காட்டி—மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை யோதுமுறை விளங்கத் தேற்றி—யவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச் சிவமாகத் தழுத்தி நாயேன்—செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்." எனக் காஞ்சிப்புராணத்துட் கூறியவாற்றால் இனிது விளங்கும்.

சிவஞானயோகிகள் ஜமதக்கினி முனிவருடைய புத்திரரும், அகத்தியமகாமுனிவருடைய முதன்மாணாக்கரும், இடைச்சங்கப் புலவர் ஐம்பத்தொன்பதின்மருள் ஒருவருமாகிய திருணதூமாக்கினி என்னுந் தொல்காப்பியமுனிவர் அருளிச்செய்த இலக்கணநூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர்செய்த உரையாகிய இளம்பூரணமும், சேனாவரையர்செய்த உரையாகிய சேனாவரையமும், நச்சினார்க்கினியர்செய்த உரையாகிய நச்சினார்க்கினியமும் எனப்படும் மூன்றுரைகளினுமுள்ள ஆசங்கைகளை நீக்கித் தெளிவிக்கும்பொருட்டு அத்தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும், முதற்சூத்திரத்திற்கும் சூத்திரவிருத்தியெனப் பெயரிய பாடியமும், வடமொழித்தருக்கசங்கிரக அன்னம்பட்டையங்களின் மொழிபெயர்ப்பும், நன்னூலுக்குச்சங்கரநமச்சிவாயப்புலவர்செய்த புத்துரையாகிய விருத்தியுரைத் திருத்தமும் செய்தருளினர். இவை மூன்றும் திராவிடமாபாடியத்திற்கு அங்கங்கள் எனப்படும்.

பின்பு சர்வாத்மசம்புசிவாசாரியர் அருளிச்செய்த கந்தியரூப சித்தாந்தப்பிரகாசிகையின் மொழிபெயர்ப்பும், மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தருளிய சிவஞானபோதத்திற்கு ஆசிரியர் அமைத்தருளிய மெய்ப்பொருள் விளங்கும்வண்ணம் திராவிடமகாபாடியமெனப் பெயரிய விருத்தியுரையும், இலகுவியாக்கியானமாகிய சிற்றுரையும், அருணந்திசிவாசாரியர் அருளிச்செய்த சிவஞானசித்தியார் சுபக்கத்திற்குப் பொழிப்புரையும், காஞ்சிப்புராணத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பும், சிவாக்கிய சோழமகாராஜா காலத்திலே கஞ்சனூரிலே அவதரித்தருளிய ஆசாரியசரணராகிய அரதத்தசிவசாரியர் வைணவமதத்தை நிராகரித்துச் சைவமதஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு, நெருப்பிலே பழுக்கக்காய்ச்சிய இருப்புமுக்காலியிலே எழுந்தருளியிருந்து,

சிவபெருமானே பரம்பொருளென இருபத்திரண்டு எதுக்களாலேநாட்டியரு ளிய சுலோகபஞ்சகத்தின் மொழிபெயர்ப்பும், அப்பயதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகமூல சுலோகங்களின் மொழிபெயர்ப்பும்செய்தருளினர்.

பின்பு பெரும்பாலும் உண்மைகாயன்மார் சரிதம் முதலியவற்றைத் தழுவிப் பூருவார்த்தமும் அதற்கு எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவநாயனர் திருக்குறள் உத்தரார்த்தமுமாகக்கொண்டு சோமேசர்மீது முதுமொழிவெ ண்பா, யமகரூபமான திருவேகம்பரந்தாதி, திருக்குரூபமான திருமுல்லைவாயி லந்தாதி, குளத்தூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி, கலிசைப்பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப்பதிற்றுப்பத்தந்தாதி, கச்சி ஆனந்தருத்திரேசர்பதிகம், திருவேகம் பர் ஆனந்தக்களிப்பு, செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செப்பறைப்பதி அகிலாண்டேசுவரிபதிகம், மார்கழிமதித் திரு வாதிரையுற்சவத்திலே தேவாரம்முதலிய அருட்பாக்கள் ஓந்தும் திருக்காப்பி டப்பட்டுத் திருவெம்பாவையென்னுந் திருவாசகத்திருப்பதிகம் ஒன்றுமே ஆன்மார்த்த பரார்த்த சிவபூஜாகாலங்களில் ஓதப்பெற்றுவருஞ் சம்பிரதாயத் தால் நித்தநியமமஹோத்சவமாகத் திருத்தொண்டர் திருநாமத்தை ஓதியுய்யவேண்டு மேவார் கருத்துத்தடையுறுவண்ணம் திருத்தொண்டர் திருநாமக்கோவை, ஆதி பரமாசாரியராகிய நமச்சிவாயமூர்த்திகண்மீது மாலை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளினர்.

பின்பு மாபட்டவணை எனப்பெயர்பெற்ற திருவாவடுதுறை ஆதீன சாம் பிரதாயக்கட்டளையைத் தருமபுர ஆதீனத்தார் மறுத்தெழுதியதற்கு "மறுப் பின் மறுப்பு" என ஓர் கண்டனமும், காஞ்சீபுரத்தில் யாத்திரையாக வந்தரு ளிய திருவண்ணாமலைஆதீனத்துப் பண்டாரசந்நிதிகள் சிவஞானசித்தியாரில் "என்னையிப்பவத்திற் சேரா வகையெடுத்து" என்னுஞ் செய்யுளில் "எடுத்து" என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்னை? என்று தம்மாதீனத்து ஞானப்பிர காசமுனிவர் இயற்றிய சிவசமவாதவுரையின் உயர்வு தோனிக்கும்வண்ணம், சிவஞானயோகிகளிடத்தே விளவவித்தபொழுது, "எடுத்து" என்னுஞ்சொல் லுக்குச் "சிவசமவாதவுரைமறுப்பு" என ஓர் கண்டனமும், அதன்மேற் பிரதி கண்டனம் உண்டாயவழி மேன்மறுத்த மறுப்பு, குதர்க்கவுரையாளராற் போழ ப்படாதவாறு "எடுத்து என்னுஞ்சொல்லுக்கிட்ட வியாக்கியாபாயம்" என ஓர் கண்டனமுஞ், சிவஞானசித்தியாருக்கு ஞானப்பிரகாசமுனிவர் இயற்றிய உரை முற்றும் போலியுரை என விளக்கச் "சிவசமவாதவுரை மறுப்பு" என ஓர் கண்டனமுஞ் செய்தருளினர்.

பின்பு கம்பராமாயணகாவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்பதெனச் செருக்கோடு கூறிய காஞ்சீபுரத்து வைணவர்கள் வாண்டை அடைக்கக்கருதி அக்கம்பராமாயணத்தை நாத்திச்செய்யுளாகிய "நாடியபொருள்கைகூடும்" என் னும் பாட்டு முற்றும் குற்றமே எனச் சங்கைசெய்தவழி, அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு உத்தரஞ்சொல்ல இயலாமல் வருந்தித் தெரியாது பிதற்றி னோம் எனச் சொல்லி வணங்கித் துதித்தவழி, சிவஞானயோகிகள் மகிழ்ந்து உத்தரங்கூறி, அவ்வைணவர்களை உவப்பித்தருளினர். அச்சங்கையுத்தர

ங்களே வரைந்த நூலுக்கு, "கம்பராமாயணமுதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி" என்று பெயர் வழங்கிவருகின்றது.

பின்பு திருவாரூர் வைத்தியநாதகாவலர் இயற்றிய இலக்கணவிளக்கத்தில், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் முதலியவற்றிலுள்ள வழுக்களே வெளியிடக்கருதி இலக்கணவிளக்கச்சூறாவளி என ஒன்று செய்தருளினர்.

பின்பு சிவஞானசுவாமிகள் திருநாவுக்கரசுநாயனர் கடலினின்றுங் கரையேறிய திருப்பாதிரிப்புலியூரில் யாத்திரையாக எழுந்தருளியிருக்கும் காலத்திலே சிவாலயத்தின்கண்ணே, சிலவித்துவான்களும் பிரபுக்களுங் கூடிய சபையில் ஒருபிரபு நூறுபொன்னைக் கிழியாகக் கட்டிவைத்து, "கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ" என்று ஈற்றடியெடுத்துக் கொடுத்துச், "செய்யுளைப் பூர்த்திசெய்பவர் இப்பொற்கிழியை எடுத்துக்கொள்ளலாம்" என்று சொன்னர். அந்நிகழ்ச்சியைச் சுவாமிதரிசனத்தின்பொருட்டுச் சிவாலயத்துக்கு எழுந்தருளிய சுவாமிகள் அறிந்து, ஒரு ஏழைப்பிராமணனைநோக்கி அப்பொற்கிழியை எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டு, "வரையேற விட்டமுதஞ் சேர்ந்தனிட வருந்தினவல் லினமென் றுலு—முரையேற விட்டமுத லாகுமோ வெனச்சித்தென் றுரைக்கி லென்னு—நரையேற விட்டமுத னுளவனுக் கொண்டுநறும் புலிசை மேவுங்—கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ." என்று செய்யுளைப் பூர்த்திசெய்தருளினர்.

இங்ஙனம் உலகோபகாரமாகப் பலஉரைகளையும் பல நூல்களையும் பலகண்டனங்களையும் செய்து பலநன்மாணாக்கர்களுக்குப் போதித்து, வடமொழியினுந் தென்மொழி சிறந்ததென்னும்படி அபிவிருத்திசெய்து, தவமே திருவுருக்கொண்டாற்போல விளங்கிச் சிவப்பேற்றிற்குக் காரணமாகிய கிட்டையில் வீற்றிருந்தருளிய திராவிடமகாபாடிய கர்த்தராகிய சிவஞானயோகிகள் திருவாவடுதுறையிலே சித்திரைமாசத்து ஆயிலியநக்ஷத்திரத்திலே சிவபரிபூரணதசையை அடைந்தனர்.

உரையாசிரியர்வரலாறு

முற்றுப்பெற்றது.

சிவஞானசுவாமிகள் திருநக்ஷத்திரம்.

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
றிருமேனி நீங்கு தினம்.

சிவமயம்.

சூசிபத்திரம்.

சிறப்புப்பாயிரம்.	...	...	...	...	கூடு
மங்கலவாழ்த்து.	...	...	...	க,	கூஅ
அவையடக்கம்.	...	...	...	கூ,	கூகூ

க. பொதுவியல்பு.

க. பிரமாணவியல்.

முதற்சூத்திரம்	...	...	...	உசு,	சஅ
முதலதிகரணம்	...	...	...	உஅ,	சஉ
இரண்டாமதிகரணம்	...	...	...	கூசு,	சசு
மூன்றுமதிகரணம்	...	...	...	...	நுஅ
இரண்டாஞ்சூத்திரம்	...	...	...	...	நுசு
முதலதிகரணம்	...	...	...	...	நுநு
இரண்டாமதிகரணம்	...	...	...	...	சூக
மூன்றுமதிகரணம்	...	...	...	...	சூசூ
நான்காமதிகரணம்	...	...	...	...	எக
மூன்றாஞ்சூத்திரம்	...	...	...	...	எநு
முதலதிகரணம்	...	...	...	...	எசூ
இரண்டாமதிகரணம்	...	...	...		எஅ
மூன்றுமதிகரணம்	...	...	...	...	அ0
நான்காமதிகரணம்	...	...	...	...	அக
ஐந்தாமதிகரணம்	...	...	...	...	அகூ
ஆறுமதிகரணம்	...	...	...	...	அநு
ஏழாமதிகரணம்	...	...	...	...	[illegible]ள

உ. இலக்கணவியல்.

நான்காஞ்சூத்திரம்	...	...	...	கூ0
முதலதிகரணம்	...	...	...	கூஉ
இரண்டாமதிகரணம்	...	...	...	ஈசூ
மூன்றுமதிகரணம்	...	...	...	க00

ஐந்தாஞ்சூத்திரம்	...	...	...	...	௧0௪
முதலதிகரணம்	...	...	...	...	௧0௫
இரண்டாமதிகரணம்	...	...	...	...	௧0௭
ஆறுஞ்சூத்திரம்	...	...	...	௧௧உ,	உ௪ங
முதலதிகரணம்	...	...	...	௧௧ங,	உ௪ஞ
இரண்டாமதிகரணம்	...	...	...	௧உ௧,	உ௪அ

உ. சிறப்பியல்பு.

ங. சாதனவியல்.

ஏழாஞ்சூத்திரம்	...	...	...	௧ஙஞ,	உஙஞ
முதலதிகரணம்	...	...	...	௧ஙங ,	உஙஅ
இரண்டாமதிகரணம்	...	...	...	௧ஙஙி,	உஙo
மூன்றுமதிகரணம்	...	...	...	௧ஙள,	உஙக
எட்டாஞ்சூத்திரம்	...	...	...	௧ஙஉ,	உஙள
முதலதிகரணம்	...	...	...	௧ஙஞ,	உஙஅ
இரண்டாமதிகரணம்	...	...	...	௧ளங,	உளஉ
மூன்றுமதிகரணம்	...	...	...	௧அஉ,	உளஞ
நான்காமதிகரணம்	...	...	...	௧அச,	உளஅ
ஒன்பதாஞ்சூத்திரம்	...	...	...	௧அங,	உஅஉ
முதலதிகரணம்	...	...	...	௧ங௨,	உஅச
இரண்டாமதிகரணம்	...	...	...	௧ங[illegible]உ	அ[illegible]ம
மூன்றுமதிகரணம்	...	...	...	௧ங௩,	உ ங0

ச. பயனியல்.

பத்தாஞ்சூத்திரம்.	...	...	...	உ0ச,	உ ங ஈ
முதலதிகரணம்	...	...	...	உ0 ஈ,	உ ங ள
இரண்டாமதிகரணம்	...	...	...	உ0 ங,	ஈ 0ங
பதினொராஞ்சூத்திரம்	...	...	...	உ ங றி,	ஈ 0ள
முதலதிகரணம்	...	...	...	உ ங ங,	ஈ ங0
இரண்டாமதிகரணம்	...	...	...	உ உ ச,	ஈ ங ச
பன்னிரண்டாஞ்சூத்திரம்	...	...	...	உ உ ங,	ஈ ங ங
முதலதிகரணம்	...	...	...	உ ஈ 0,	ஈ உ0
இரண்டாமதிகரணம்	...	...	...	உ ஈ உ,	ஈ உ உ
மூன்றுமதிகரணம்	...	...	...	உ ஈ ச,	ஈ உ ச
நான்காமதிகரணம்	...	...	...	உ ஈ ள,	ஈ உ ள

ஆ சூத்திரம் கூ-க்கு அதிகரணம் ஈ௧.

வெண்பாத்தொகை.

அவையடக்கம்	....	....	....	க
முதற்சூத்திரம்	....	....	....	ங
இரண்டாஞ்சூத்திரம்	....	....	....	கo
மூன்றாஞ்சூத்திரம்	....	....	....	எ
நான்காஞ்சூத்திரம்	....	....	....	எ
ஐந்தாஞ்சூத்திரம்	....	....	....	ச
ஆறாஞ்சூத்திரம்	....	....	....	சு
ஏழாஞ்சூத்திரம்	....	....	....	ஞ
எட்டாஞ்சூத்திரம்	....	....	....	ஙு
ஒன்பதாஞ்சூத்திரம்	....	....	....	அ
பத்தாஞ்சூத்திரம்	....	....	....	சு
பதினொராஞ்சூத்திரம்	....	....	....	சு
பன்னிரண்டாஞ்சூத்திரம்	....	....	....	அ

சூத்திரம் அதிகரணம் வெண்பா என்னும்

இவற்றின் முழுத்தொகை.

நேரிசை வெண்பா.

சூத்திரமீ ராறினுக்குச் சூரணிமுப் பாலைன்பா [கை
னேத்தவெண்பா வெண்பா னிரண்டனேத்துஞ்-சேர்த்ததொ
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நுண்ணுணர்வி னுய்ந்துணர்
வேற்றுருக்கொள் ளாருறுவர் வீடு. [ந்தோர்

அதிகரணவெண்பாத்தொகை.

நேரிசை வெண்பா.

ஐயொருப தேழேழு மாங்கமைந்த நாலாறு
மையொன்ப தோரெட்டோ டாருறுந்—துய்யவெட்டோ
டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
மன்னருளும் வெண்பா வகை.

சூர்ணித்தொகை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மூன்றுநான் கேழு மூன்றே முடிந்தபி னிரண்டி ரண்டே
மூன்றுநான் மூன்று நன்றுய் முடிந்தபி னிரண்டி ரண்டே
யேன்றநான் கீறு தாமே யிவையீரா றிலகத் துள்ளே
யேன்றமுப் பாலைன் பாலை யெனக்கர னிரங்கி னனே.

சூத்திரக்கருத்து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முதற்பதி யரனே யைந்து முன்னத்து விதமி ரண்டே
யிதற்பினே யணுமா னத்தா லெண்ணிலா வுயிர்கண் மூன்றே
யதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே யைந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நீனேத்த லெட்டே
சிறப்புடை யுபயந் தம்மாற் றெளிவித்த லுயிரை யொன்பா
னறுத்திடன் மலங்கள் பத்தே யழுந்தலே சிவத்தி லொன்றே
திறப்பணி கொளலி ரண்டே சிவஞான போதஞ் சித்தி.

BESANT NAGAR, CHENNAI-600 090.

உ

சிவமயம்.

சூர்ணிக்கொத்து.

முதற்சூத்திரம்.

க.—சகம் பிறப்பிருப்பிறப்பாகிய முத்தொழிலையுடையது.

உ.—அது அரனிலே உடையது.

கூ.—மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள்.

இரண்டாஞ்சூத்திரம்.

க.—அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.

உ.—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.

கூ.—உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.

ச.—அரன் சருவ வியாபகன்.

மூன்றாஞ்சூத்திரம்.

க.—இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிவுயிர் உண்டு.

உ.—எனது உடல் என்று பொருட்பிறிதின்கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிருண்டு.

கூ.—ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றைமாத்திரம் அறிகிற ஐந்திற்கு வேறாய் உயிர் உண்டு.

ச.—கனவுடலில் விட்டு நனவுடலிலே வருகையினாலே, அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.

டு.—நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவுஞ் சரீரத்துக்குப் புசிப்புத் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.

கூ.—மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.

எ.—எல்லாத்தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

நான்காஞ்சூத்திரம்.

க.—அத்தக்காரணங்களுக்கு உயிர் உட்கூடினலன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்காரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.

உ.—மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.

கூ.—உயிர் மூன்றவத்தைப்படும்.

ஐந்தாஞ்சூத்திரம்.

க.—உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும்.

உ.—அரனாலே உயிர்களெல்லாம் அறியும்.

ஆறாஞ்சூத்திரம்.

க.—உயிரறிவினாலே அறியப்பட்டதெல்லாம் அழியும்.

உ.—அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

ஏழாஞ்சூத்திரம்.

க.—அரன் பாசத்தை அநுபவியான்.

உ.—பாசம் அரனை அநுபவியாது.

கூ.—உயிர் அவ்வரனை அடையும்; அநுபவிக்கும்.

எட்டாஞ்சூத்திரம்.

க.—உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.

உ.—உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.

கூ.—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.

ச.—உயிர் பஞ்சேந்திரியங்களினாலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

ஒன்பதாஞ்சூத்திரம்.

க.—உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும்.

உ.—உயிர் பாசத்தினாலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.

கூ.—பஞ்சாக்ஷரமெசபம் பண்ணினால், வாசனாமலம் போம்.

சூர்ணிக்கொத்து.

பத்தாஞ்சூத்திரம்.

க.—அரனுடன் ஒன்றுகி நில்.

உ.—உன்றொழிலெல்லாம் அரன் பணி என்று கொள்.

பதிலொராஞ்சூத்திரம்.

க.—ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்.

உ.—அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கமாய்ப் போவன்.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

க.—மும்மலங்களையுங் களைக.

உ.—சிவஞானிகளுடனே கூடுக.

ங.—சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக.

ச.—வழிபடாமையை ஒழிக.

ஆ சூத்திரம் கஉ - க்குச் சூர்ணிக்கொத்து. ங்க.

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

வடமொழிச்
சிவஞானபோதம்

மூலமும் தமிழுரையும்.

இந்நூல் நந்திபெருமானுக்குக் காமிகம் முதலிய இருபத்தெட்டாகமங்களின் பொருளொருமை உணர்த்துதற்கு எழுந்த நூலாகலின் அவ்வாகமங்களின் சாரமாயுள்ளதாம். பன்னிரண்டு சூத்திரமுடையது. இதிற் கூறப்படும் பொருள் பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களாம். அவற்றுள், முதற்சூத்திரம் பதி உண்மைக்குப் பிரமாணம் கூறுகின்றது.

ஸ்ரீ வஜ்ரவாஹகாதிக்ரா ஜ்ரு தீக்ரா ருத்ரோ நாக்ர|
க்ரஹிகதாரஹஸ்யமெகுதஜ்ஞ்ஜதிருத்ரா வ்ரு ஹ்ரோ॥

இ - ள். ஸ்ரீ வஜ்ர நவாஹக ஸ்ருதிக்ராக - பெண் ஆண் அலிகளின் ஆதித்தன்மையினாலே,—கார்ய ருத்ரோ நாக - காரியமாந்தன்மையை (அநுமானித்து) உணர்தலால் (உண்டாகிய செய்யப்படுந் தன்மையால்),—ஜ்ரு தீக் தோன்றியொடுங்கும் தன்மையுடைய பிரபஞ்சத்திற்கு,—கதீர்க்ர க்ரஹி - தோற்றுதலீச்செய்யும் நிமித்தகாரணனாகிய கருத்தா ஒருவன் உளன்,—வ்ரோஹதக்ர ஹ்ரக்ரா வ்ரு ஜ்ரு தி - அவன் இப்பிரபஞ்சத்தை ஒடுக்கி (மீள) உளதாக்குவன்,—க்ரஹ்ரக்ர ஹ்ரஸ் வ்ரு ஹ்ரோ - இதனால் சங்காரத்தொழிலீச் செய்யுங் கடவுளாகிய சிவனே முதற்கடவுள். எ - று.

ஆதித்தன்மையாவது உற்பத்தியும், அவயவப்பகுப்புடைமையும், அசேதனமாய்ப் பலவாதலும் முதலியனவாம். இங்ஙனம் கூறப்பட்ட ஆதித்தன்மையினாலே பிரபஞ்சம் காரியமாதலும் காரியமாதலினால் கருத்தாவை உடைத்தாதலும் பெறப்பட்டது.

இனி, ஏதுவுடையதும், அநித்தியமும், அவ்வியாபகமும், கிரியையுடையதும், அநேகமாவதும், சார்புடையதும், குறியுடையதும், அவயவமுடையதும், பிறவயமுடையது மாயுள்ளது காரியமென்றும் அதனின்வேறாயது காரணமென்றும் சாங்கியநூலுட் கூறப்பட்டது.

ஆகலான், உருவமுடைமையானும், பிரிவுடைமையானும், பிறவற்றினிடையே நிற்றலானும், அவயவமுடைமையானும், சட்புலப்படுகின்ற கடம் முதலியவற்றின் நிலைபோலத் தோற்ற ஒடுக்கங்களை முன்னும் பின்னும் உடைமையானும், அசேதனத்தன்மையோடு கூடிய பன்மையானும் சாதிக்கப்பட்ட காரியத்தன்மையையுடைய பிரபஞ்சம் கருத்தாவையுடையதேயாம்.

இதனால் காரியமாய்க் காணப்படும் பிரபஞ்சத்திற்குக் கருத்தா ஒருவன் உளன் என்பது அநுமான அளவையாற் சாதிக்கப்பட்டது.

சுநுவுஸுவுரவிதோ நநுஃ சுதுரகுரு நுஸாரதஃ|
சுரொகிஹம்வுகிம்வுஸாம் சூஜுயாஸிவெதுயா||

இ - ள். சுதுரு - மேற்கூறிய சங்காரகாரணனுகிய சிவன்,—சுநுஃசுவி- (பொருட்டன்மையால் உயிர்களுக்கு) வேறுயினும்,—வுரவிதஃ சுநுஃ வநு - வியாபகத்தினுலே வேற்றுமையின்றி அவ்வுயிர்களேயாய்,—சூஜுயா வஸிவெதுயா - ஆணவென்னும் பரியாயப்பெயருடைய தன்னை விட்டுநீங்காத சிற்சத்தியினுலே,—வுஂஸாம் - ஆன்மாக்களுக்கு,—சுஸி-ருநுஸாரதஃ - அவற்றின் இருவினைகளுக்கு ஈடாக,—ஸவுவுதி சுரொகி - சிருட்டிமுத லிய பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றன்.

அச்சிவன் பொருட்டன்மையால் உயிர்களின் வேறுயினும் கலப்பினுல் அவ்வுயிர்களேயாய் நின்று தன்னை விட்டுநீங்காத சிற்சத்தியைக்கொண்டு அவை இருவினைக்கீடாக இறத்தல் பிறத்தல்களைப்புரியும் வண்ணம் செய்வன் என்பதாம்.

ஈண்டுச் சமவேதசத்தி என்றது கிரோதான சத்தியை என்க. அச்சத்தி மலத்தைசெலுத்துதலினுல் மலம் என்று உபசரித்துக் கூறப்படும். கன்மங்கூற வே அக்கன்மத்துக்குப் பற்றுக்கோடாகிய மாயையும் அவ்விரண்டற்கும் மூல மாகிய ஆணவமலமும் பெறப்படும்.

மேற்சூத்திரத்தாற் பெறுவிக்கப்பட்ட கருத்தா உயிர்களின்பொருட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்யுமாறு கூறும்முகத்தாலே ஆணவம் கான்மியம் சுத்த மாயை அசுத்தமாயை திரோதானசத்தி என்னும் பஞ்சபாசங்களினுண்மை சாதிக்கப்பட்டது.

நுதிதோஸிதொஉ சூஉக்ஷோவரதிவொயதஃ|
வுவெநீஹுரமதோவொயெவொஜுகுவுஷுணுஸ்நள||

இ - ள். நஉதிகஃ - ஆன்மா இலது என்றலானும்,—ஸிதா உஉ சூஉ - (உடம்பை யான் எனத் தற்கிழமைப்பொருள் பட வழங்குமாறின்றி) எனது எனப் பிறிதின்கிழமைப்பொருள் பட வழங்குதலின் மிருதிப்பாட்டா னும்,—சுக்ஷ வொயதஃ - ஐம்பொறிகளைக்கொண்டு அறிதலானும்,—உவ ரதி வொயதஃ - ஐம்பொறிகளும் ஒடுங்கின சொப்பனத்தானத்தில் நிகழ்ந் தவற்றை (நனவின்கண் மயங்கி) அறிதலினுலும்,—வுவெநீஹுரமதஃ - (சூழ்த்தியும் துரியமுமாகிய) நித்திரையிலே (விடயங்களினிடமாகவரும்) இன் பத்துன்பநுகர்ச்சி இன்மையானும்,—வொயெவொஜுகுவுஸ - சாக்கிரா

வத்தையில் (அறிவிக்க) அறிதலுடைமையானும்,—தொ நள - இவையீரைந்தும் கூடிய கூட்டமாகிய உடம்பின்கண்ணே,—கரண ஃ கரணி - இவற்றின் வேறாய் உயிரென்பது ஒன்று உண்டு. எ - று.

தனு - வியாபிக்கப்படுவது.

இதனால் இலதென்றன் முதலிய அறுவகை ஏதுக்களானும் தனு என்னும் பெயராற் பெறப்படும் குறிப்பேதுவானும் முறையே சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணன்மவாதி, விஞ்ஞானன்மவாதி, சமூகான்மவாதி என்னும் எழுவரையும் மறுத்து இவற்றின் வேறாய் உயிர் எனப்படுவது ஒன்று உண்டு என்பது சாதித்தவாறு.

சூத்ரம் ஃ கரணாதி நயாவ்ருதீ தாரதிஜுஹுவகு ஃ
சுவஸ்யாவஜுகுவஸ்ய நமரூபவஸ்துகியஃ ॥

இ - ள். மல ரூப வஸ்து க்ரியஃ சூத்ர - ஆணவமலத்தினால் மறைக்கப்பட்ட தன் ஞானசத்தி கிரியாசத்திகளையுடைய ஆன்மாவானவன்,—கரண ஃ கரணாக நயஃ சுவி - அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் இவற்றின் வேறாயினும்,—தீஜி ஹுவ வகு - (தூண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணைவராகிய) அமைச்சரோடு கூடி நின்று தந்தொழில் நடாத்தும் அரசன்போல,—கரி தி ஃ - (அறிவு நிகழுமாறு) அவ்வந்தக்கரணம் முதலியவற்றோடு தான் வியஞ்சகமும் * வியங்கியமும் ஆகிய சம்பந்தத்தாற் கூடினவனாகி,—சுவஸ்யா வஜுகுவஸ்ய வ்யாக - சாக்கிரம் முதலிய மூன்று வத்தையில் நிற்பவனாவன். எ - று.

மந்திரி பரிவாரம் முதலியோருடன் கூடிப் புறவிடயங்களை யறிந்த அரசன் புறத்தே பரிவாரங்களையும் அகத்தேமந்திரியையும் பிரித்து அந்தப்புரத்துச் செல்லுமாறுபோல, முப்பத்தைந்து கருவிகளோடு கூடிப் புறவிடயங்களை அறிந்து இலாடத்தானத்தினின்ற ஆன்மா மூலாதாரத்தில் அடங்கும் முறைமையில் ஆங்காங்கு நிற்றற்குரிய கருவிகளைப் பிரித்துச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமென்னும் மூன்றவத்தையடையும் எனவே, கருவிகளோடு கூடி அவத்தையுறுதல் ஆன்மாவின் தடத்தலக்கணம் என்பதாம்.

விதிஹ்ரு கரணி வ்யாக்ய ரூப நவ்யபதொவிஸ்ரம்ஹ நர ஃ
தவிகரீ ஸிவலிங்கரு தெதொவ்ருதி தனுயெக ॥

இ - ள். கரணி வ்யா க்ய ரூப விதி - மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் இந்திரியங்கள் புருடனுல் (பிரேரிக்கப்பட்டனவாய்த்) தத்தம் விடயங்களை அறிகின்றன. இங்ஙனமன்றி,—வ்யாப நவிதி - தாமே அறியமாட்டா. அதுபோல,—ஸ ஃ சுவிஸ்ரம்ஹ நர தெதி - அவ்வான்மாவும் தனக்குப்பிரேரகனுகிய சிவனுல் வினைப்பயன்களை அறிந்து அனுபவிக்கும். இங்ங

* வியங்கியம் - விளக்கப்படுவது.

னமன்றி,—வுயம நவெதி - தானே அறிந்து அனுபவிக்கமாட்டாது,—ஸிவஃ விகாரீ ஊகி வெஷ - சிவன் (அங்ஙனம் பிரேரித்தலால் வியாபார முடையனுதலின்) விகாரமுடையன் என்னில்,—வஃ - அவன்,—கூஜஃ கயஃ வஷ - கூந்தம் (தான் விகாரமின்றி நின்று) இரும்பைத் தன் சந்நிதிமாத்திரை யின் வலித்துக்கொள்ளுமாறுபோல,—கீ நயெஷ - அவ்வான்மாவைத் தான் விகாரமின்றிநின்று தன் சங்கற்ப்மாத்திரையிற் பிரேரிப்பன்,—தஷ நஆகலான் அதுபற்றி அவன் விகாரமுடையனல்லன். எ - று.

இந்திரியங்கள் ஆன்மாவால் அறிவு விளங்கப்பெறுதல்போல ஆன்மாவும் சிவனால் அறிவு விளங்கப்பெறும் என்பதாம்.

ஷஜ்ஜுஃஞெஷவஷ்ஷாவொஜ்ஜுஃஞெஜ்ஜுஃரஷவெஷ|
ஸஃஹொஷ்டவுதிரொகெணஜ்ஜெயஃஸ்ஷவஃவிஜ்ஷவுயாஃ||

இ - ள். ஸஃஹொஃ ஸ்ஷவ்ழ - சிவனுடைய சொரூபமானது,—ஷஜ்ஜுஃழ் வெஷ - (ஒருவாற்றானும்) காணப்படாததாயின்,—தவு ஷஷ்ஷாவஃ ஹவெஷ-(அதற்கு முயற்கோடுபோல) இலதாந்தன்மை உண்டாம்,—ஜ்ஜுஃஞ வெஷ - (கடபடாதிகள்போலச்) சுட்டியறியப்படுவதாயின்,—தவு ஜவிரா ஹவெஷ - (யாதுசுட்டியறியப்படுவது அது சடம் என்னும் வியாத்தியுண்மை யான்) அதற்குச் சடத்தன்மையுண்டாம். ஆதலால்,—தஷ வுதிரொகெண - அறியப்படாததும் அறியப்படுவதும் என்னும் அவற்றின் வேறான அநுபூதி ஞானத்தால்,—ஜ்ஜெயழ ஊகி ஷ்ஷாஃ விஜ்ஃ - அறியப்படுவதென்று ஞானிகள் அறிவார்கள். எ - று.

சிவசொரூபம் பாசஞான பசுஞானங்களானறியப்படாது சிவஞானமொ ன்றுனே அறியப்படும் என்பதாம்.

நாவிவி ஷ்ஷநியஎவெதிநவித்தஷ்ஷெஉஷெவியஃ|
வுவணுஸிவயொவெடுதாயஷ்ஷஆத்தாதயொஃவுயஃ ||

இ - ள். ஸிஷ வநியெஎ கஸிஷ ந வெதி - சிவனுகிய சித்தின் சந்நிதி யில் பிரபஞ்சமாகிய அசித்து அறியமாட்டாது. (விளங்கித்தோன்றுது என் றபடி) ஆதலின்,—ஞெ உஹெ வியஃ ந வித்தஃ - சிவமும் பிரபஞ்சமும் என் னும் இரண்டும் ஒன்றை ஒன்று அறியமாட்டா,—யஃ வுவணு ஸிவயொஃ வெத்தா - எவன் பிரபஞ்சத்தையும் சிவனையும் அறிகின்றானே,—வஃ-அவன்,—கீயொஃவுயஃ ஆத்தா வுாஷ - அவ்விரண்டற்கும் வேறாகிய ஆன்மாவாம். எ - று.

சித்தும் அசித்தும் மறுதலைப்பொருள் ஆதலின் சித்தாகிய சிவம் அசித்தாகிய பிரபஞ்சத்தை அறியமாட்டாது. அசித்தாகிய பிரபஞ்சம் சித்தாகிய சிவத்தை அறியமாட்டாது. ஆதலால், இவ்விரண்டையும் சிவசத்தியினாலே அதுவதுவாய் நின்று அறியும் பொருள் ஆன்மா என்றவாறும், எனவே, சார்ந்ததன்வண்ணமாய் நிற்றல் ஆன்மாவின் சொரூபலக்கணமென்பதாம்.

ஷ்ரீகுரவஸஹஜ்ரயவ்ராயெஃகுரோ நவெதீதிவொயிதஃ|
உ-ரெகெ தாநுமஂ-ரஂ-ணா நநிகுராய நமஃவ்ராவெொதிதத்வதிழ்||
கு

இ - ள். யநமஃ - முன்செய்துகொள்ளப்பட்ட புண்ணியமுடைய ஆன்மாவானவன்,—மஂ-ரஂ-ணா - ஞானுசாரியனாலே,—ஜ்ரய வ்ராயெஃ வஹ ஷ்ரீகுரா - ஐம்பொறிகளாகிய வேடரோடு கூடியிருந்து,—குரோ நவெதீ ஹ உதி வொயிதஃ - உன்பெருமையை நீ அறிகின்றிலை (உன் பெருமையாவது இது) என்று அறிவுறுக்கப்பட்டவனாகி,—வநிதாநு உ-குரா - இவ்வைம்பொறிகளாகிய வேடுவர்களை விட்டு,—ஈந நமஃதஸ வதிழ் வ்ராவெொதி - வேற்றுமையில்லாதவனாகி அச்சிவனுடைய திருவடியை (ஞானக்கிரியா சொரூபமாகிய அறுகுணங்களை) அடைகின்றான். எ - று.

ஐம்பொறி வசப்பட்டு அலைந்த உயிர் முன்செய்த புண்ணிய விசேடத்தால் சிவன் குருவடிவங்கொண்டு எழுந்தருளி வந்து தீக்ஷைசெய்து உபதேசிக்க அவ்வைம்பொறிகளை விட்டு அச்சிவன் திருவடியைத் தலைப்படும் என்பதாம்.

விஷ்வாதமிதுஷ்டவாதுகாவ்யதிரஸ்ரீவிகாழ்|
ஷ்வாஸிவவதூஹாயாஂயுரெதக்ஷராக்ஷரீஂஹ-யீஃ||
ஷ்வ

இ - ள். ஹ-யீஃ - நற்புத்திமானாவன்,—ஈஸழி ஸிஸ துஷ்டவா சூதுதி துஷ்டா - (பாச அறிவினாலும் பசு அறிவினாலும் உணரப்படாத) முதல்வனீச்சிவஞானமாகிய கண்ணினாலே தன் அறிவின்கண்ணை கண்டு,—வ்யதி ரஸ்ரீ ஸி காழ் கதுகூ - விருத்தியாகிய பிரபஞ்சமென்னும் கானலை விட்டு,—ஸிவவதூ ஹாயாழ் ஷ்வா - சிவன் திருவடிநீழலையடைந்து,—வக்ஷராக்ஷரீழ் யுராயெஃ - முத்திபஞ்சாக்ஷரத்தைத் தியானிக்கக்கடவன். எ - று.

தியானித்தல் - சுத்தமானதமாகச் செபித்தல்.

குருவினால் தீக்ஷை செய்யப்பெற்றுச் சிவனைத் தலைப்பட்டவன் தன்னறிவின்கண்ணை அச்சிவனைத்தியானிக்க, அதனால் உயிரைப் பற்றிய பாசம் நீங்கும். அதுநீங்கவே, சிவஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்கு நிழலாய் வெளிப்படும். அங்ஙனம் வெளிப்படப் பெற்றவன் அந்நிலை சலியாமைப்பெருட்டுப் பஞ்சாக்ஷரமந்திரத்தைச் செபிக்கவேண்டும் என்பதாம்.

ஸிவெந வெகூழ்ய மதஃ வ்ரிஜ்ஃ-சிவனேடு ஒற்றுமைப்பட்டுச் சின்மாத்திரையாகச்சேவித்துநின்ற புருஷன்,—**தயீந ஸ்வ வ்ருத்திகஃ** - அச் சிவனுக்குக் கீழ்ப்பட்ட தன் தொழிலையுடையவனும்,—**மல மாயா கூடி கர்ம வ்ருஷ்டஃ** - மலம் மாயை முதலியவற்றால் தீண்டப்படாதவனுமாகி,—**ஷ்வாந-ஸுதிராநு ஸுவதி** - சுவானுபூதியாகிய சிவபோகமுடையவ னுவன். எ - று

சிவனேடு ஒற்றுமைப்பட்டு நின்று அச்சிவன் பணி வழுவாது நிற்கவே மலமாயை கன்மங்கள் நீங்கிச் சிவபோகத்தையடைவன் என்பதாம்.

த்ருஸ்ரூ-பு-யிதாவா தா தஸ்ய தபு-யிதாஸிவஃ|
தஸ்மா தஸ்ரிநுவர்ரா ஸுக்ரூ-ர்யாதி தாவகார்ரகே||

இ - ள். **த்ருஸ்ரூஃ தபு-யிதாவ சூதா** - கண்களுக்கு உருவத்தைக் காட்டுபவனும் காண்பவனும் ஆன்மாவேயாம். (அதுபோல),—**தஸ்ய தபு-யிதாவ ஸிவஃ** - அவ்வான்மாவுக்கு விடயத்தைக் காட்டுபவனும் காண்பவனும் சிவனே,—**தஸ்மாத்** - ஆதலால்,—**சூதாவகார்ரகே தஸ்ரிநு** - தனக்கு உபகாரியாகிய அச்சிவனிடத்தில்,—**வர்ரா ஸுக்ரி கூ-யபு-ர்ரத்** - மேலானபத்தியைச் செய்யக்கடவன். எ - று.

கண் ஒரு உருவத்தை அறியும்படி உயிர் அதனேடு ஒற்றுமைப்பட்டு நின்று அதற்கு காட்டுமுபகாரஞ் செய்வது மாத்திரமன்றி கண்டு முபகரிக்கும். அதுபோல,உயிர் ஒருவிடயத்தை அறியும்படி இறைவன் அதனேடொற்றித்து நின்று அதற்கு அவ்விடயத்தைக்காட்டி உபகரித்தன் மாத்திரையன்றிக் கண்டும் உபகரிப்பன். இங்ஙனம் உபகரிக்குந் தன்மையை மறவாமைப்பொருட்டு அவனை வழிபடுக. என்பதாம்.

ஸு-ஸ்ரெவ்ய்ரவ்ய வ்ரஸ்ய தஸ்ரெஷாஃ ஸுஜ்ரெஷஃ ஸிவாயயழ்|
வரவவிதீயாஸ்ரிவஜ்ரா நஸ்ரொயெஸ்ரெவ்ரய-ர்நிண-யழ்||

இ - ள். **ஸு-ஸ்ரெவ்ய வ்ரஸ்ய வ்ரவ்ய** - முத்தியின்பொருட்டுச் சிவன்முத்தர்களை அடைந்து,—**ஸ்ரெஷாழ் ஸுஷழ் ஸிவாயயழ் ஸுஜ்ரெஷ** - அவர்களுடைய திருவேடத்தையும் திருக்கோயிலையும் வழிபடுக,—**வரவ** - இவ்வாறே,—**ஸிவஜ்ரா நஸ்ரொயெ** - சிவஞானபோதமென்னும் இந்நூலில்,—**ஸுஸ்ரெவாய-ர் நிண-யபு-ழ் விதீயாஸ** - சைவாகமங்களின் பொருள் நிச்சயத்தை அறிக. எ - று.

முற்றுப்பெற்றது.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SW[illegible] LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

உ

சிவமயம்.

குருவணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந் தீயிரும்பு பாணி
யுப்பு, விண்ணனில மூடலுயிர் நீர் நிழலுச்சிப் பளிங்குபகல்
விளக்குப் பானீர், கண்ணிரவி யுணர்வொளிபோற் பிரிவரிய
வத்துவிதக் கலவி காட்டித், தண்ணளிவைத் தெனையாண்ட
துறைசைநமச் சிவாயகுரு சரணம் போற்றி,

சந்தான மங்கல வாழ்த்து.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும்
வெண்ணெய்ப், பயில்வாய்மை மெய்கண்டான் சத்நிதிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக், குயிலாரும் பொழிற்றிருவா வடு
துறைவாழ்குருநமச்சி வாயதேவன், சயிலாதி மரபுடையோன்
றிருமரபு நீடூழி தழைக மாதோ.

சித்தாந்தமகாசூத்திரம், பரப்பிரம சூத்திரம் என்று அறிஞராலு
யர்த்தோதப் பெறும் வடமொழிச் சிவஞானபோத மொழிபெயர்ப்பாகிய
இத்தென்மொழிச் சிவஞானபோதத்திற்கு விருத்தியுரை யென்னும் மாபாடி
யஞ்செய்வான்புக்க மாதவப் பெருந்தகை யாகியத் தண்டமிழ் முனிவரனார்,
நமக்கவ்வுண்மைப்பொருள்களெல்லாஞ் செவியறிவுறுத்தும், அறிவுறுத்தப்
பெற்ற அவையிற்றை விழைவுற்றுச் சித்தாந்தநெறி நிற்பார் பலர்க்கும் இவ்
வுரைமுகத்தான் உணர்த்தி நிற்க எனப் பணித்தும் பல்லாற்றானும் மேன்மே
லூக்கிவேண்டுவ படித்துங் காரணராய் நின்ற தங்குருமரபிற் றாய ஞானமா
சூரவர்ப் பணிதன் முறைமைபற்றிக் குருவணக்கங் கூறியருளின ரென்க.

அற்றேல், சித்தாந்தசைவ சிவஞானபோத திராவிடமாபாடியகர்த்த
ராம் இவ்வண்ணலாசிரியர், தமக்கு ஞானதீக்கை புரிந்து அப்பொருளெல்லாஞ்
செவியறிவுறுத்திய ஞானகுரவர் பின்வேலப்பதேசிகசுவாமிகளே யாகவும்,
அன்னவர்ப்போற்றாது அன்னோர்க்கு முந்துபு வீற்றமர்ந்து மெய்யுணர்வுறுத்
தும் இளிர்ந்த நமச்சிவாயகுருநாதசுவாமிகளை வணங்கிய தெற்றாலோவெனின்,—
தெரிக்குதும். இப்பாடியகர்த்தர் தங்குரு சந்தானம், "சயிலாதிமரபு" என்றாங்
குத் திருக்கயிலாயத் தென்றிரு முகத்தெய்வதந் தொடங்கி நிகழ்வுறீஇ, இப்

பூவுழை மெய்கண்டதேவநாயனாரும் இச்சிவஞானபோதநூலினைச் செய்த ருளியாரை முன்னுகப்பெற்று நடக்குமாற்றுனே "மெய்கண்டசந்தானம்" "மெய்கண்ட ஆதீனம்" என வழங்கப்பெறீஇ விளங்குவதாயினும்,

8o8ஞாந காலீஶ8ஹித8ஶுத-ஈ-ழ்ஈ8|
ஶுடிழுகீமொஷகீதி தயாவஷமிரிவயா॥
ரணஹஶுஶுவிஜெயவெஷாசிதெஹயீஶுவாஃ|

மடமந்தாந காளீச மபிதச்ச சதுர்மடா:
ஆமர்த்தகி கோளகீதி ததாபுஷ்ப கிரிஸ்ததா
ரணபத்ரச்ச விச்ஞேயஸ் தேஷாமேதே ஷ்யதீச்வரா:

எனவரூஉம் அசிதாகமத் திருவாக்கின்படி பரவித்தையென்று முண்ட கோபநிடதம் முதலிய ஆதிசச்சுருதிகளுரைக்குஞ் சிவாகம சித்தாந்தப் பொரு ள்களெல்லாம் உலகிற்கு உபகரிப்பான் றோன்றி, மந்தானகாளீசம் என்னும் மாபட்டினத்தே சிறந்து விளங்கும் ஆமர்த்தகி, கோளகி, புட்பகிரி, இரணப த்திரம் என்னும் நால்வகைச் சைவமடங்கள் சிவண. ஞானக்கோமுத்திபுரம், ஈவமோடிசித்தவாசகரம் முதலிய திருப்பெயர்கள் பூண்ட திருவாவடுதுறைப் பதிக்கண் இம்மாபாடியகாரரும், இவர்தம் ஆசாரியரும் அமர்ந்து இத்தகைய மெய்ப்யொருளாராய்ச்சி செய்து மெய்புணர் வறுத்தற் கிடமதாக, தேவரும் வியக்குமேமார் சைவமடாலயத்தை இரீஇயினரும், மும்பொருளாராய்ச்சிக் குஞ் சைவசித்தாந்தக்காப்பிற்கும் வேணடும் வேண்டும் பலபொருட்சாதகங்க ணிறீஇயினரும் அவராகலானும், அவர்ப்பின் றோன்றிய குரவர்முதல் தங் குரவர்காறும் அன்ன மூர்த்திகளேயே முற்கொண்டு வணங்கிவந்தமையானும், தங்குரவர் வழக்கு மஃதே யாகலானும், இப்பாடியமுநீந்திரரும் நன்னமச் சிவாய தேசிக சற்குரு மூர்த்திகடம் பொன்னடி பராயினரென்பது.

அற்றேல், நூலியாக்கு மாசிரியராயினோர் தாமியாப்பான்கொண்ட நூல்க டடையின்றி இனிதுமுற்றி நனியுறுபயன் கொடுக்கவேண்டி இருவகைக் கட வுளரு ளொருவர்ப் பராவல் ஆன்றோர்வழக்கும் நூற்கிடக்கையு மென்பது கண்டாம்; அங்ஙனமன்றி இவரொப்பத் தொல்லியுரையாசிரியர் தாமும் நூல் வணக்கத்திற்கு வேறும் வணக்கஞ் செய்து போந்ததுண்டாலோ எனின், ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் சொற்பொருள் கண்டாரா முரை யாசிரியர் சேனவரையரும், தாமுரையுரைக்கத் தொடங்குமுன்னே, "தன் றோ ணன்கி ஞென்றுகைம் மிகூஉங்–களிறுவளர் பெருங்கா டாயினு–மொளி பெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே" என்றற் றொடக்கத்தனவற்றுன் வழுத்தியதூஉம், "கரும்பு மிளநீருங் கட்டிக் கனியும்–விரும்பும் விநாயகனே வேண்டி." எனப்பிறர் வணங்கியதூஉம் உணர்ந்து அவ்வண்மைகடைப்பிடிக்க. இங்ஙனமே வடமொழிக்கட் பாடியஞ்செய்தாருள், வியாசரூத்திரமாகிய உத் தரமீமாஞ்சைக்குப் பாடியஞ் செய்வான் புகுந்த சைவமுநீந்திர நீலகண்டசிவா சாரிய சுவாமிகளும், இவரேமானப் பாடிய வணக்கமாக,

ஔஇசோஹம் வதாயுர்ய லொகாநாம் லித்தி ஹேதவே|
லஸ்ஷ்டாநந்த ரூபாய ஸிவாய வரமாத்மநே||

ஓங்மோஹம் பதார்த்தாய லோகாநாம் லித்தி ஹேதவே
ஸச்சிதானந்த ரூபாய சிவாய பரமாத்மநே

என்று சிவனை வணங்கிப் போந்ததூஉம், உபநிடதவியாக்கியானஞ் செய்த ஸ்ரீசங்காராசாரியர் என்னும் விசிட்டாத்துவித பாடியகாரரும், தம் உரை முகத்தே,

கூதவீ மூலவாஹாயம் ஜ்ரீதாரஹூலஸ்ரீ யா|
கூஜ்ஜாவஷ்ரூம் மாரமி நஜ்ரீ ஹுமா ஹாதாழ்||

அதசீகுச்சஸச்சாய மஞ்சிதாரா ஸ்தலம் ஸ்ரீயா
அஞ்சநாசலச்ருங்கார மஞ்சலீர் மமகாஹதாம்

என்று விஷ்ணுவை வணங்கிப் போந்ததூஉம், அவர்மானத் துவைதபாடியகாரரும், அவப்பிரஞ்சம் நிகழாது இருதஞ் சித்திந்நற்பொருட்டித் தம் பாடியமுகத்தே,

ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ஆநந்தம் ப்ரம்ம ஸர்வ சக்த்பேகம்
ஸர்வைர்தவை ரீட்யம் விஷ்ண்வாக்யம் ஸர்வதைமி சுப்ரேஷ்டம்

என்று விஷ்ணுவை வணங்கியதூஉம் உணர்ந்து, இவ்வழக்கு இருமொழிக்கண்ணும் பயில்வுறூஉம் பெருவரவிற்றுமரபினதென்று தெழ்றெனத்தெளிக.

அற்றேல், அன்னது தெற்றெனத் தெளிந்து மகிழ்மீக்கூர்ந்தேம், மற்றொன்று உசாவுதும், அவ்வியல்பாளே நூல்வணக்கத்திற்கு வேறுகத்தாம் வணக்கங்கூறப்போந்த முனிவர்பெருமான் முதற்கண் தூதிக்கற்பாலசாங்களிற்றுத்தெய்வம், அன்றிப் பரமகுரவத் தென்முகத்தெய்வம் என்னும் இவர்ப் பராவுதலே யொரீஇச் சந்தானகுரவ ரொருவர்ப் பழிச்சலாமறென்னையோ வெனின், அவ்வையப் பாட்டினையு மொழித்து மேற்செல்லுதும்.

சமயாதீத மெனப்படூஉஞ் சித்தாந்த மெய்ந்நெறிக்கணின்றூர், "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த" எனவும், "அஞ்ஞான வச்சகலர்க்

கக்குருவாய்-மெய்ஞ்ஞானம்–பின்னுணர்த்தும்" எனவும் இச்சிவஞானபோதம் உரைத்தாங்கும்,

சுயாயிவிஷ்வ் சுவாயஃ வசவ-ரூஷவழ|

விதரடிவொஹவ| சுவாயடிவொஹவ|

ஆதாதி வித்யம் ஆசார்ய: பூர்வரூபம்

பித்ருதேவோபவ ஆசார்யதேவோபவ

எனத், தைத்திரீயச் சுருதி யுரைத்தாங்கும், ஞானகுரவனையே இறை வனெனக் கோடலானும், அவற்பணிதலே இறைவணக்கமாகி அத்துவிதமுத் தியென்னும் அரும்பேற்றை அளிக்கும் ஞானசாதன மாதலானும், "குரு" என்னும் மொழிக்குப் பாசவிருளை ஓட்டுவோனெனக் காரணங் கோடலா னும், இக்குரவர் மற்றையசமயகுரவர்போலாது சித்தாந்தசைவச் சிவனியல் களையுணர்த்துஞ் சிவஞானகுரவராகலானும், அரனடியார்க்கு இருபான்மூன் றிலக்கணங்களையும் விதிக்கவந்த சங்கரசங்கிதை என்னும் வேதோபபிருங் கணமானது,

வ்யதீஹஷ்ரு ஞரகூ யாரணம் வதீஷ்ரீரிதழ|

ஷிதீயம் ஷ்ரஷவாஉ||

ப்ரதமம் பஸ்ம ருத்ராக்ஷ காரணம் சமுதீரிதம்

த்விதீயம் குரு சேவாச

சிவனடியாருக்கு முதலாவதிலக்கணம் விபூதி கண்டிகை தரித்தலென வும், இரண்டாவதிலக்கணம் குருவைவழிபடுதல் எனவுங் கூறுமாற்றானும்,

சுயாஷ்வாயநா ஹவைவஹவம் வரஜேஷ்டிநா வரிஹதைவாவ

அதாச்வலாயநோ ஹவை பகவந்தம் பரமேஷ்டிநம் பரிஸமேத் யோவாச.

என்று யசுர்வேதசாகையானே புகழப்பெற்ற மகாவிருடியார்க்கே குரு வழிபாடு செய்கவெனக் கிளக்கப்படு மெனின் மற்றையோர்க்கு அஃதின்றி யமையாதென்பது சொல்லாமேயமைதலானும், வாயுசங்கிதை இரண்டாம் பாகத்திலே பதின்மூன்றும் அத்தியாயத்திலே,

வரவிநாதூ யடாவஷ்ட வஸதாவா தகிதோ ஹவெஷ|

தஷிரோவாய-ஃ வஷ்ட நா தஜ்ஜ-ஃ வஷ்யா ஷ்ரவெஷ||

யஎயெக வஹ்நிஸம் வக்காங் மலந் த்யஜதி காஞ்சநம்|
ததைவ குருசம் பர்க்காத் பாபம் த்யஜதி மாநவ:||

யதாவஹ்நி சமீபஸ்தோ க்ருதகும்போ விலீயதே
ததாபாபம் விலீயேத ஆசார்யஸ்ய சமீபத:

யதாப்ரச்வலிதோ வஹ்நி: சுஷ்ககாஷ்டஞ்ச நிர்தஹேத்
ததாய மபிசங் துஷ்டோ குரு: பாபம் க்ஷணத் தஹேத்

மநஸா கர்மணு வாசா குரோ: க்ரோதம் நகாரயேத்
தஸ்ய க்ரோதேந தஹ்யந்தே ஹ்யாயு: ஸ்ரீஜ்ஞாந சக்கிரியா:

தினையாளர் சம்பந்தத்தானே ஒருவன் எங்ஙனம் பதிதனுகின்றானே அங்ஙனமே குருவின் சேர்க்கையாற் புண்ணியபலன்களை யடைகின்றான். தீயின் சேர்க்கையானே பொன்னானது களிம்பைப் போக்கிக்கொள்வ தேபோல, குரு வழிபாட்டானே மனிதர்கள் பாவங்களைக் கழிக்கின்றார்கள். நெருப்பின் சமீபத்துள்ள நெய்க்குடம் எங்ஙனம் இலயமடைகின்றதோ, அங்ஙனமே குருவின் சமீபத்திலிருப்பவன் தன் பாவங்கள்யாவும் இலய மடையப் பெறுவான். கொழுந்துவிட்டெரியும் நெருப்பானது உலர்ந்த விறகுகளை எங்ஙனம் எரிக்குமோ, அங்ஙனமே மேலான உவகைப்பாட்டினையுடைய இத்தக்குரவனும் சிடன்றன் பாவங்களைக் கணப்போதிலே தகிக்கின்றான். மனம், வாக்குத்,

காயம் என்னும் மூவகைக் கரணங்களானுங் குருவைப் பிழைத்த லாகாது. அவருடைய சினத்தானே ஆயுளும், வெறுக்கையும், மெய்யுணர்வும், நற்றெ ழிலெனப்படுஉம் புண்ணியங்களுஞ் சுடப்படுகின்றன. என்று உரைத்தலானே, ஆயுள், செல்வம், தத்துவவுணர்ச்சி, புண்ணியங்களென்னும் இவைகள் மேன் மேலும் வளருமாறும், மலவிருள் தேயுமாறும் நன்னெறிகாட்டி உய்வித்த குருச் செய்த நன்றியை எஞ்ஞான்றும் மறவாது, மனம் வாக்குக்கள் ஒரு மைப்படக் காயத்தினால் அவரை வணங்குதலும் இன்றியமையாது வேண்டப் படுமாகலானும்,

யம்யம் லோகம் மனஸா ஸம்விபாதி விசுத்த ஸத்வ: காமயதே யாஞ்ச காமான், தந்தம் லோகம் ஜயதே தாஞ்ச காமான் தஸ்மா தாத்மஜ் ஞம் ஹ்யர்ச்சயேத் பூதிகாம:

எவன் எவ்வெவ்வுலகினை மெய்புணர்வானை நினைந்து விசுந்த சத்துவமு டையனாகி, எவ்வெப்பயனை விழைகின்றானே அவன் அவ்வவ்வுலகங்களை அடைந்து அவ்வப்பயன்களைப் பெறுகின்றான் ஆகலின், பரசிவனை உள்ளவாறு ணர்ந்த அத்தன்மையனாகிய சிவஞானியைத் திருவருட்செல்வம்விழைவுறாஉம் ஒவ்வொருவரும் பணிவாராக என வேதமகாவசனங்கள் முழங்குதலானும், அங்ஙனமே சிவாகமங்களாகிய பரவித்தைகளும் முழங்குதலானும் குரவனை தெய்வ மெனக்கொண்டு வணங்கியதெனக் கடைப்பிடிக்க.

"அத்துவிதக் கலவி காட்டித்–தண்ணளிவைத் தெனையாண்ட நமச்சிவா யகுரு" எனவே, ஒன்றற் கொன்று முரணுவென்றையம் நிகழ்தருமாறு பொருள்களைப் போதிக்கும் மறைகளானும், பரவித்தைகளாஞ் சிவாகமங்க ளானு முணர்தற் பாலதாம் அத்துவிதத்தி னுண்மைப் பொருளைத் தமக்கு அறிவித்தருளி, அதனுனை சிவஞானத்தைத் தோற்றுவித்துத் தம்மை யாண் டருளியோரென்பதூஉம், அங்ஙன முள்ள ஞானகுரவர் அதுவாயிலானே பெறற்கருங் கைவல்லியமாம் அத்துவித முத்தியைத் தம்மை விரும்பினர்க் கருளும் ஆற்றலுடையா ரென்பதூஉம், அதுபெயர் மாத்திரையானுஞ் செவ் வனைபுலப்படும் என்பதூஉம், பேரின்பமுதவுந் தண்ணளி யுடையவரே குரு

வென்பதூஉம், அவரை வணங்குவார்க்குச் சிவஞானப் பேறும், அதன்சாத னங்களும் பிறக்குமென்பதூஉந் தெளித்தருளியவாறு காண்க.

உலகத்திலே சித்தாந்த வித்தைகளே வெளிப்படுத்தி, அவற்றினே பக் குவான்மாக்களுக்கு மெய்யுணர்வு உதிப்பித்தற்பொருட்டுச் சிவாவதாரமாகத் தோன்றிய சைவாசாரியர்கள் இருபத்தெண்மரிருப்பவும், அவர்களுட் கல்யா ணகுருவும், "நாகாகம விதாயி" எனச் சிறப்புப் பெயர் பெற்றவருமாகிய சுவே தாசாரியர் ஒருவரையே, வியாசசூத்திர மாபாடியஞ் செய்தருட் சைவபா டியம் இயற்றிய நீலகண்டசிவாசாரியசுவாமிகளும், தம் பாஷியமுகத்தில்,

நமஶ்ஶ்வேதாஶ்வதராய நாகாகமவிதாயிநே|
கைவல்யகல்பதரவே கல்யாணகுரவே நமஶ்||

நமः ச்வேதாபிதாகாய நாகாகம விதாயிநே
கைவல்ய கல்பதரவே கல்யாண குரவே நமः

ஒன்றற்கொன்று விரோதம்போலத்தோன்றும் வேதாந்தங்களே விரோத மின்றிப் போதித்தலினாலே "நாகாகமவிதாயி" என்று சிறப்புப்பெயர் பெற்ற வரும், மோக்ஷங்கொடுக்குங் கற்பகதருவும், இம்மை மறுமைப் பயன்களாகிய போகங்களெனப்படும் நல்வாழ்வைக்கொடுக்குங் குருவுமாகிய சுவேதாசாரிய ரை நமஸ்கரிக்கின்றேன் என வணங்கிப் போந்தாங்கு, சந்தான பரம்பரைக் குரவர்கள், வேலப்பதேசிகசுவாமிகள், இராமலிங்கதேசிகசுவாமிகள், மாசிலா மணிதேசிகசுவாமிகள், குமாரசாமிதேசிகசுவாமிகள், முன்வேலப்பதேசிக சுவாமிகள், உருத்திரகோடிதேசிகசுவாமிகள், தக்ஷிணமூர்த்திதேசிகசுவாமி கள், அம்பலவாணதேசிகசுவாமிகள், மறைஞானதேசிகசுவாமிகள், பஞ்சாக் கரதேசிகமூர்த்திகள், சித்தர்சிவப்பிரகாசதேசிகசுவாமிகள், சிவப்பிரகாசதே சிகசுவாமிகள் என்றின்னோர் பலரிருப்பவும், நமச்சிவாயதேசிகசுவாமிகளாங் குரவர் ஒருவரையே இப்பாடிய முனிவரருந் தம் பாடிய முகத்தே துதித்துப் போந்தா ரென்க. என்னே? சுவேதாசாரியர் மான இவரும் முன்னுரைத்தாங் குச் சைவசித்தாந்த வித்தியாதார மூர்த்திகளாய், நாகாகமவிதாயி என்றற் குஞ் சால்புடையராய், கல்யாணகுரவராய், தரிசித்த மாத்திரையே மெய்யுணர் வுபாலிக்கும் வரத வடிவராய் விளங்கலானென்க.

வியாசசூத்திரபாடியங்களுட் சிகண்டபாடிய மென்னுஞ் சைவபாடியத் திலே இணையின்றிப் பொலிந்துவிளங்குஞ் சிவபெருமானது உற்கருட மணி

களையெல்லாம் எடுத்து விளக்கவந்த சிவார்க்கமணிதீபிகையாரும், தெய்வ வணக்கம் புகலாது, இத்திராவிடமாபாடியகாரர்ப் புரைய, சுவேதாசாரிய சுவாமிகளையுந் தம் வியாக்கியானமுதலிலே,

ஶிவாவாஸ்யவதாரஜ்ஞாநஸம்ப்ரதாயப்ரவர்த்தகாந்
அம்சாவதாரா நீசஸ்ய யோகாசார்யா நுபாஸ்மஹே

மகாபாசுபதஜ்ஞானஸம்பரதாயப்பரவர்த்தகாந்
அம்சாவதாரா நீசஸ்ய யோகாசார்யா நுபாஸ்மஹே

(மகாபாசுபத ஞானமென்னுஞ் சிவஞானசம்பிரதாயப் பிரவர்த்தகர்களும், சிவபெருமானது அமிச அவதார முடையவர்களுமான சுவேதாசாரியர் முதலாகவுள்ள சிவயோக ஆசாரியர்களை உபாசிக்கின்றேம்) என்று வணக்க முரைத்தருளியதனாலும் பெறப்படும்.

படவே, வடமொழிக்கணவிருஞ் சித்தாந்தமகாவித்தைகளைப் பிரவர்த்தித்தவர் சுவேதாசாரியர் என்பதூஉம், தென்மொழிக்கட் படிஉஞ் சித்தாந்த மகாவித்தைகளைச் சிறப்பாகவும் வடமொழிக்கட் படிஉஞ் சித்தாந்த மகாவித்தைகளைப் பொதுவாகவுங்கொண்டு பிரவர்த்தித்தவர் நமச்சிவாயசுவாமிகள் எனப்பெயரிய குருமூர்த்திகள் என்பதூஉம் போதரல் காண்க.

இவ்வியல்பினையுடைய நமச்சிவாய குருமூர்த்திகளைப் பணிந்த முனிவரர் அவ்வளவின் அமையாது இரண்டாந் திருவித்தத்தானை அவரையும், அவர் மரபில்வந்தாரையும், வருவாரையும் வாழ்த்தியது என்னை யெனின் கூறுதும்:

சிகண்டபாடியம் எனப்படும் சைவபாடியகாரர் சுவேதாசாரியர் ஒருவரையே வாழ்த்தினராக அதற்கு வியாக்கியானஞ் செய்த சிவார்க்கமணி தீபிகையார் அவருடன் அவர் மரபினரையுஞ் சேர்த்து வாழ்த்திய நியாயம்பற்றி இம்முனிவரும் அக்குருமூர்த்திகளுடன் அவர் மரபின்வந்த தங்குருமுதலாயினரையும் சேர்த்து வாழ்த்தினரென்க.

அல்லதூஉம், இக்நிலவுலகத்தின்கண்ணே ஆன்மாக்களின் பலபகைப்பட்ட கன்மங்கட்கு ஏற்பப் பன்முகமாகப் பரந்துவிளங்கும் மற்றைய சமயகுரவர் மரபுகள்போலாது உண்மைப்பொருளும் அருளும் உடைய திருக்கைலாயபரம்பரை எனப்படும் இத்திருமரபு யாம்பெற்றபேறு இவ்வையகம் பெறுக

ற்பொறுட்டு அழிவெய்தலின்றி எஞ்ஞான்றும் தழைத்து நிற்க என்னும் கழி பேரிரக்கத்தால் வாழ்த்தியருளியதூஉமாம்.

தமிழ்நூலார் வாழ்த்தென்று கூறுதலே வடநூலார் மங்களம் எனவும் ஆசீர்வாதம் எனவுங் கூறுவர். இவ்வாறேசைவபாடியகாரர்,

• ஸவதஸ ஸஹவதாம் ஸித்யை வாரோத்தா ஸவபூர்மஹேஸ்வரெதி|
ஸிதஸிந் மயப்ரபஞ்சச் சேஷோ சேஷோபி யஸ்யைஷ:॥

பவதுஸ பவதாம் சித்யை பரமாத்மா ஸர்வமங்களோ பேத:
சிதஸிந் மயப்ரபஞ்சச் சேஷோ சேஷோபி யஸ்யைஷ:

அறிவுடைப்பொருள் அறிவில்பொருள் என்னு மிருவகைப் பிரபஞ்சங் களையும் அபிசமாக உள்ளவரும் எல்லாமங்கள குணங்களோடும் கூடினவரும் பார்வதீசமேதரும் பரலக்குமியுடன் இசைந்தவரும் ஆகிய சிவபெருமான் இப்பாடியத்தைக்கேட்கும் உங்களுக்கு அநுக்கிரகம் புரிந்து இஷ்டசித்தியின் பொருட்டும் துணையாவாராக என ஆசீர்வாதம் கூறியதூஉம் உணர்ந்து கொள்க.

"பண்ணிசைவெம்பரிதிமதி" என்னுந் திருவிருத்தம் பாடியகாரர்தங் குருவணக்கம் என்பதூஉம், "கயிலாயபரம்பரை" எனவரூஉம் திருவிருத் தம் பாடியகாரர் தம்மரபைப்போற்றுமுகத்தானே "தழைக" என வாழ்த்திய மங்கலவாழ்த்தென்பதூஉம் போந்தவாறு காண்க.

குருவணக்கம்

முற்றிற்று.

விஞ்ஞாபனம்.

☞ நூலாரம்பந்தொடங்கி இந்த எழுத்திற் பதிக்கப் பட்டனவெல்லாம் மெய்கண்டதேவநாயனர் திருவாக்குக்கள். ஆராஞ்சூத்திரத்துக் கருத்துரை மறப்பெனும் பகைவனல் இவ்வெழுத்திற் பதிப்பிக்கப்படாமற்றடுக்கப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதமாபாடியத்திரட்டு.

சிறப்புப்பாயிரம்.

சைவாகமங்களின் உளவாகிய காற்பாதங்களுள்வைத்துஞானபாதத்தோ
திய பொருளினை ஆராயும் ஆராய்ச்சி இந்நூலின்கண் எடுத்துக்கொள்ளப்பட்
டது. இவ்வாராய்ச்சிக்குப் பயன் யாதோ? எனவும், இது கேட்டற்கு உரியார்
யாவர்? எனவும், இதனுள் நுதலப்படும்பொருள் யாது? எனவும், இதனைப் பய
ப்பிக்குங் கருவியாய் இதற்குமுன் ஓதுகலியான் உணர்நற்பாலது யாது? என
வும், இதனைவழங்குதற்கு இட்ட பெயர் யாது? எனவும், இஃதியாண்டு வழங்
குவது எனவும், இதன் முதனூல் யாது? எனவும், இந்நூல் செய்தார் யாவர்?
எனவும், பலவாற்றான் ஆசங்கை நிகழுமன்றே; அவ்வாசங்கை நீங்கி மன
வெழுச்சி சேறற்பொருட்டு இந்நூல் முகத்து உரைக்கப்படுவதாகிய சிறப்புப்
பாயிரம்:—

மலர்த்தலை யுலகின் மாயிரு ணிமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லிண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருமூர்த்
தருத்தியர்க் குரம்பையி னன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வியர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் பனஞ்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநவி னன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

எனவரும்.

உயர் சிவஞானபோதம் என்றது வினை முன்றுபாதத்தை ஆராயும் நூல்
கட்கு மேம்பட்ட சிவஞானபோதம் என்றவாறு. எனவே, அந்நூல்கள் உணர்
ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்பது பெற்றாம். பெறவே, முன்னர்த்
தீக்கையுற்றுச் சிவாகமங்களை ஓதி அதன்பின் வினை முன்றுபாதங்களை
ஆராயும் நூல் முறையே கேட்டு அவ்வாறுழுதி மனந்தூயராய் நித்தியாநித்

திய உணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவா மிக்குண்டாயவழி, அவர்க்கு இந்நூல் உணர்த்துக என்பது போந்ததெனக் கொள்க.

இப்பாயிரப்பொருள், நூல் இறுதியில் 'எந்தைசனற்குமரன்' என்னும் வெண்பாவாற் பெறப்படுதலின், ஈண்டுங் கூறுதல் கூறியதுகூறலாம்பிற வெனின்,—ஆகாது; 'எந்தை சனற்குமரன்' என்பதனாற் பெறப்பட்டதனையே மாணாக்கர்க்கு நூல் முகத்து உணர்த்துதற்பொருட்டு ஈண்டுத் தந்துரைத்ததாகலான் என்பது. மிருகேந்திரத்து இறுதியிற் கூறும் வரலாற்றினை நாராயண கண்டவாசிரியர் நூல் முகத்துத் தந்துரைத்தாலும் இக்கருத்தேபற்றி என்க.

*இந்நூல் நந்திபெருமான் பெறுதற்கு வரலாறு என்னை? எனின், கூறுதும். மாசங்கார முடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற்பொருட்டுப் பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பாசசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்று நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்கரவடிவாயும் முறையே தோன்றின. பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச்செய்தற்பொருட்டுப், பரமசிவன் ஈசானம் முதலிய பஞ்சப்பிரமமனுக்களாகிய சத்திகளை திருமுடி முதலிய அவயவங்களாகச் சகளாகிட்களைத் திருமேனி கொண்டருளிச், சதாசிவமூர்த்தியாய் நின்று, தற்புருடம் முதலிய நான்கு திருமுகங்களினின்று வேதங்களைத்தோற்றுவித்து, அவ்வேதங்களை அனந்ததேவர் வழியாகிய பிரமனுக்கு அருளிச்செய்து, ஈசானமுகத்தினின்று சிவாகமங்களைத் தோற்றுவித்து அச் சிவாகமங்களைப் *பிரதிசங்கிதை முறையாகிய பிரணவர் முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மரும் ஆகிய இருபத்தெண்மருக்குஞ் சிவபேதம் உருத்திரபேதம் எனப் பகுத்து ஓரோவொன்று ஓவ்வொருவருக்கு அருளிச்செய்து, பின்பு † மகளகமுறையாகிய அவ்விருபத்தெட்டினையும் வித்தியேசர் எண்மரின் முதல்வராகிய அனந்ததேவர்க்கு அருளிச்செய்தான். அவற்றை அனந்ததேவர் நூற்றுப்பதினெட்டு உருத்திரரின் முதல்வராகிய சிகண்டருத்திரருக்கு அருளிச்செய்தார். அவற்றைச் சிகண்டருத்திரர் கணங்கட்குந் தேவர்க்கும் முனிவர்க்கும் அளித்தற்பொருட்டு முதற்கண் நந்திபெருமானுக்கு அருளிச்செய்தார்.*

அங்ஙனம் ஆகமங்களெல்லாங் கேட்டருளிய நந்திபெருமான் சிகண்ட முதல்வரை வணங்கி நின்று, சிவாகமத்தோறுஞ் சரியை முதலிய நாற்பாதங்களுஞ் சிறுபான்மை வேறுவேறாகக் கூறப்பட்டன. அவற்றுள், உண்மையாவது இது என்று அருளிச்செய்யவேண்டும் என இரந்து விண்ணப்பஞ் செய்து விடைபெறுதலும், சிகண்டருத்திரமுதல்வர் கருணைகூர்ந்து "நன்றே வினவினாய்! அனந்ததேவர் எமக்கு அருளிச்செய்தவாறே கூறுகின்றேம்; கேட்பாயாக" என்றருளிக், கற்பக்கோடியும் படைப்புவேறுபாடுங் கேட்டோர் கருத்துவேறுபாடும் பற்றி அவற்றிற்கு இயையச் சரியை முதலிய மூன்று பாத

---

* *பிரதிசங்கிதைமுறை ஒருவிஷயத்தை வேறுவேறு வகுத்துக் கூறுதல்.* † *மகளகமுறை வேறுவேறு வகுக்கப்பட்ட பலவற்றைத் திரட்டிக் கூறுதல்.*

ங்களும் ஆகமங்களில் வெவ்வேறுகக் கூறப்பட்டன. ஆகலான், அவற்றுள், எவ்வாகமத்தின்வழி யார் தீக்கைபெற்றார், அவ்வாகமத்தின்வழி அவர் ஒழுகற்பாலர்.

இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலின், அது பலதிறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாங் தூலாருந்ததிமுறை பற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோளல்ல என்பது வகுத்துணர்த்துதற் பொருட்டு இரௌரவாகமத்துள் பன்னிருசூத்திரத்தாற் கூறப்பட்டது "**சிவஞானபோதம்**" என்பதோர் படலம். அது கேட்டார்க்கு எல்லாவாகமப் பொருள்களும் மாறுகோளின்றி இனிது விளங்கும் எனக் கூறி அச்சிவஞான போதத்தை நந்திபெருமானுக்கு அருளிச்செய்தார்.

நந்திபெருமானும் அதுகேட்டதுணையானே எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து பின்னர்த் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சனற்குமாரமுனிகட்கு அருளிச்செய்தார். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச்செய்தார். அவர் தம்மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த பாஞ்சேசதிமாமுனிகட்கு அருளிச்செய்தார். அவர் தமிழ்நாடுசெய்த தவத்தானே திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தருளி மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளியிருந்த மெய்கண்டதேவர்பால் வந்து சிவஞானபோதத்தை நல்கி, "இதனீ ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச்செய்து பொழிப்புரைக்க" என்றருளிப், பொழிப்பு உரைக்குமாறுஞ் சத்தியஞானதரிசனிகள்பால் தாங் கேட்டவாறே வகுத்தருளிச்செய்து நீங்க, அவரும் அவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தருளித், தம்முடைய மாணாக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்த அருணந்திசிவாசார்க்கு அளித்தருளினர். இஃது இந்நூல் வந்த வரலாறு எனக் கொள்க.

பொழிப்புரையை வடநூலார் வார்த்திகம் என்பர். பொழிப்பு எனினுங் காண்டிகை எனினும் ஒக்கும். பொழிப்புரை பிண்டப்பொழிப்பு எனவும் கண்ணழித்துரைக்கும் பொழிப்புரை எனவும் இருவகைப்படும். அவற்றுள், இது கண்ணழித்துக் கடாவிடைகளான் உரைக்கும் பொழிப்புரை என உணர்ந்துகொள்க.

இனி, ஆசிரியர் வார்த்திகப்பொழிப்பு உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானுஞ் செய்யப்படும் என்னும் வடமொழிமதம் பற்றி ஈண்டுக் கருத்துரையும் மேற்கோளும் எதுவும் உரைச்செய்யுளான் உரைத்தார்; உதாரணம் பாச்செய்யுளான் உரைத்தார்.

இச்சிவஞானபோதத்து முன்னது சூத்திரங்களானே பெத்தத்தின் நின்ற நிலைபற்றி இலக்கணங் கூறுதலின், அவை பொதுவியல்பு எனவும், பின்னது சூத்திரங்களானே முத்தியின் நின்ற நிலைபற்றி இலக்கணங் கூறுதலின், அவை சிறப்பியல்பு எனவுமாம்.

இனி, பொதுவியல்பு உணர்த்தும் நூல்கள் பொது எனவுஞ் சிறப்பியல்பு உணர்த்தும் நூல்கள் சிறப்பு எனவுங் கூறப்படும். சிறப்பியல்பு சகசமாய் உள்ளதாகலின், உண்மை எனவும்படும்.

பொதுவியல்பு. அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிக்கித்தல் என்னும் இருதிறத்தான் உணரப்படும். சிறப்பியல்பு, சாதனமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிக்கித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்குநிறத்தான் உணரப்படும்.

கேட்டல் சிக்கித்தல் தெளிதல் நிட்டைகளை வடநூலார் முறையே சிரவணம் மனனம் நிதித்தியாசனம் நிட்டை என்ப.

பலபொருட்குப் பொதுவாகிய இலக்கணம் பொதுவியல்பு என்றும் ஒருபொருட்கே உரிய இலக்கணஞ் சிறப்பியல்பு என்றும் அளவைநூலார் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு; தடத்தலக்கணம் சொரூபலக்கணம் என்னும் வடசொற்குப் பரியாயப் பெயராய் ஈண்டுக் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு எனத் தெரிந்துணர்ந்துகொள்க. இவ்விருவேறு வகைக்குஞ் சொல்லொருமை மாத்திரையே பற்றி மயங்கற்க.

சிவஞானபோதம் இங்ஙனம் பொதுவியல்புஞ் சிறப்பியல்பும் ஒருங்கு உணர்த்தலின், முழுமுதனூலாம்.

இனி, சிவஞானசித்தி சிவப்பிரகாசம் என்பன முறையே இவ்விலக்கணம்பெற்ற வழிநூலும் புடைநூலுமாம்.

மொழிபெயர்த்துக்கூறும் நூல்களில் ஞானாமிர்தம் முதலியன பெரும்பாலும் பொதுவியல்பு மாத்திரையே கூறுதலின், பொதுநூலாம்.

திருவுந்தி திருக்களிற்றுப்படி முதலியன சிறப்பியல்பு மாத்திரையே கூறுதலின், உண்மைநூலாம்.

வடமொழியினும் பௌட்கரம் மிருகேந்திரம் முதலிய சிவாகமங்கள் பெத்தத்தில் நின்ற நிலைபற்றி இலக்கணங் கூறுதலின், அவை பொதுநூலாம்.

சருவஞானோத்தரம் முதலிய சிவாகமங்கள் முத்தியில் நின்ற நிலைபற்றி இலக்கணங் கூறுதலின், அவை உண்மைநூலாம்.

உபநிடதங்களினுஞ் சுபாலம் முதலிய உபநிடதம் உலகம் தோன்றி ஒடுங்கும் முறைமையுற் றோற்றி ஒடுக்குதற்கு ஒரு கருத்தா உண்டு என்னும் மாத்திரையும் போல்வன உணர்த்துதலின், பொது எனப்படும்.

சாண்டோக்கியம் முதலிய உபநிடதங்கள் இருவகையுங் கூறுதலின், பொதுவுஞ் சிறப்புமாம்.

அதர்வசிகை அதர்வசிரம் சுவேதாச்சுவதரம் முதலிய உபநிடதங்கள் முத்திநிலையைபற்றிச் சாதனமும் பயனுங் கூறுதலின், உண்மை எனப்படும்.

அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பொருள்களுஞ் சிவாக மப்பொருளே கோக்கும்வழிச் சூத்திரமும் பாடியமும் போலத் தூலாருந்ததி முறையாம். இக்கருத்துப் பற்றியே வேதம் பொதுநூல் எனவும் ஆகமஞ் சிற ப்புநூல் எனவுங் திருமந்திரம் முதலியவற்றிற் கூறப்பட்டன என்று உணர்க. "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்" என்றதூஉம் இம்முறை தெரிந்துகோடற்கு என்க. இவ்வுண்மை உணர்ந்து பொருள்கோடலே உரைகோள் முறையாம்.

இனி, இவ்வுண்மை உணர்ந்து பொருள் கொள்ளமாட்டாதார் உபநிட தங்கள் ஒன்றேறு ஒன்று முரணும் எனவும் உபநிடதமுஞ் சிவாகமமுந் தம் முள் முரணும் எனவும், சிவாகமத்துள்ளும் ஒன்றேறு ஒன்று முரணும் என வும் மயங்கி, ஒன்றன் பொருளேபற்றி ஏயேனையவற்றை இகழ்வர்.

அற்றேல், அஃது அங்ஙனமாக; வேதாந்தசித்தாந்த நூல்கள் அங்ஙனம் இருவேறுவகைப்படுத்துக் கூறவேண்டியது என்னை? சிறப்பியல்பு ஒன்றே கூற அமையுமாலோ எனின்,—அமையாது; ஆன்மாக்கள் அங்ஙனந் தத்தமக் குரிய சோபானமுறையின் அறிந்து வருந் தன்மைக் கேற்பத் தூலாருந்ததிநி யாயமாக உணர்த்தவேண்டும் ஆகலின் என்க. "புறச்சமய நெறிநின்று மகச்ச மயம் புக்கும் புகன்மிருதிவழியுமுன்றும் புகலுமாச்சிரம—வறத்துறைகளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படி த்துஞ்—சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளே மிகத் தெளிந்துஞ் செல்லுஞ் சைவத்—திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்." என்றதூஉம் இவ்விய ல்பு நோக்கியே என்க.

இங்ஙனம் இவ்விருவகை இயல்பும் வேறுவேறு கூறும் ஆகமங்களின் பொ ருளொருமை உணரமாட்டாது, ஓரோவொன்றேபற்றி ஐக்கியவாதம் முதற் பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முள் மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காது அவற்றின் பொருளொருமை உணர்த்துதற்கு எழுந்தது இச்சிவஞானபோ தம் என்றறிக. இஃது அறியாதார் எல்லாவாகமப் பொருளையும் பன்னிருசூ த்திரத்தால் தொகுத்து விளக்குதற்கு எழுந்தது இந்நூல் என்றுரைப்ப.

ஸ்ரீகண்டரத்தின் முதற்கண்ணதாகிய ஒருசூத்திரத்தானே எல்லா ஆகமப்பொருளுந் தொகுத்தெடுத்து விளக்கப்பட்டன என்பது ஆண்டே அறி யக்கிடத்தலானும், மற்றும் அங்ஙனந் தொகுத்துக்கூறும் ஆகமங்கள் பலவுள ஆதலானும், அதுபற்றி இதன்கட் போந்த விசேடம் இன்மையானும், 'நாடிக் கண்டு மயர்வற அளிந்த சிவஞானபோதம் என்பதற்குத் தாற்பரியம் அது வாகாமையானும், அவர் உரைப்பன எல்லாம் போலியென்று ஒழிக.

சிவஞானபோதம் என்பதும் இக்காரணத்தாற் பெற்ற பெயர். அஃது எவ்வாறென்னின்,—"உயர்ஞான மிரண்டா மாரு மலமகல வகலாத மன்னு போதத்—திருவருளொன் றுணர்ந்ததனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே."என்ப ஆகலின், பரஞானம் அபரஞானம் என்றிர ண்டுஞ் சிவஞானம் எனப்படும். அவற்றுள், பரஞானத்தைப் போதிப்பது எல்

ல்லா ஆகமங்கட்கும் பொது ஆகலின், ஈண்டுச் சிவஞானம் என்றது அவ்வ பரஞானமாகிய சிவஞானமேயாம். போதம் என்றது அவற்றின் நிச்சயப் பொருள் இது என உணர்த்துதலாம். ஆகவே, சைவாகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது சிவஞானபோதம் எனக் காரணக்குறியாயிற்று என்று உணர்க. இப்பொருள் வடமொழிச் சிவஞானபோதத்துப் பன்னிரண்டாஞ் சூத்திரத்திற் பிற்பாதியிற் கூறியவாறுபற்றி உரைக்கப்பட்டது.

சிவஞானம் எனப் பொதுப்படக் கூறினுந் தலைமைபற்றி ஞானபாதமே கொள்ளப்படும். ஞானபாதத்திற்குத் தலைமை "கிரியையென மருவுமவை யாவு ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்" என்பதனால் அறிக.

அற்றேல், ஏனை மூன்றுபாதப் பொருள்களை ஆராயும் நூல்கள் யாவை? எனின்,—அவை சோமசம்புசிவாசாரியர் செய்த கிரியாகாண்டக்கிரமாவலி முதலியவாம் என்க. அற்றேல், ஞானபாதப்பொருள் ஆராய்ச்சிநூலும் பிற்கா லத்து ஆசிரியன்மாரே கூறவமையும்; ஆகமத்துட் கூறவேண்டாம்பிறவெனின், ஆசிரியன்மார் அவை அனுட்டிக்கும் முறை ஆராயப்புகுந்தாரன்றி அவற்றிற் குப் பொருளொருமை கூறப் புகுந்தாரல்லர். அவை சிறுபான்மை தம்முள் வேறுபாடுடைய என்றும், "யார் யார் எவ்வாகமத்தின் முறையே தீக்கை பெற்றார் அவரவர் அவ்வாகமத்தின் முறையே அனுட்டிக்க" என்றும் "எக் கோயில் எவ்வாகமத்தின்முறை பிரதிட்டை செய்யப்பட்டது அக்கோயிலு க்கு அவ்வாகமத்தின்முறையே பூசை விழா முதலிய நடாத்துக" என்றும், "மாறிச் செய்யிற் குற்றம்" என்றும், ஆகமங்களே கூறுதலின், அவற்றிற் குப் பொருளொருமை காட்டலாகாமையின், கற்பமேதத்தானும், ஆன்மா க்கள் கருத்துவேறுபாட்டானும், அவ்வவற்றிற்கு ஏற்பச் சிறுபான்மை தம் முள் வேறுபடக் கூறுதல் பொருத்தமுடைத்து என்பதுபற்றி அவற்றைக் கூறும் ஆகமங்கள் சிறுபான்மை அங்ஙனம் வேறுபட நிகழ்ந்தன.

இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலின், ஆண்டு வேறுபடுதல் பொருந்தாதாயினும், ஆன்மாக்களின் மலபரிபாக தாரதம்மியத் திற்கு ஏற்பத் தூலாருந்ததி முறைமைத்தாக உணர்த்துதல் மரபு என்பது பற்றி, அங்ஙனங் கூறும் ஆகமங்களே நோக்குவோர் அவை ஒன்றோடொன்று முரணுவனபோலக் கருதி மயங்குவர். அங்ஙனம் மயங்காமைப்பொருட்டு ஞானபாதப் பொருள்களையெல்லாம் பொது உண்மை என இருவகைப்படுத்து ஆராய்ச்சி செய்து ஒருதலையான் உணர்த்த வேண்டுதலின், அஃது ஏனை யோரால் ஆகாமையின் வேண்டும் என்க. அங்ஙனம் முரணுவனபோலத் தோ ன்றுவன யாவை? எனின், சுவாயம்புவம் முதலியவற்றிற் பதார்த்தம் "ஏழு" என்றலும், பௌட்கரம் முதலியவற்றின் "ஆறு" என்றலும், பராக்கியை முதலியவற்றின் "ஐந்து" என்றலும், சருவஞானோத்தரம் முதலியவற்றின் "நான்கு" என்றலும், இரௌரவம் மிருகேந்திரம் முதலியவற்றின் "மூன்று" என்றலும் போல்வனவாம் என்க. அவையெல்லாம் மூன்றுஎன்றதனுள் அடங் குதலின், மும்பொருள் என்றலே எல்லா ஆகமங்கட்குந் துணிபு எனக் காட் டுதல் போல்வன பொருளொருமை கூறுதலாம் என்பது.

வேதாகமப்பிராமாணியம்.

வைதிகரில் ஒருசாரார் "வேதம் பிரமாணநூல்" என்றும், "சிவாகமம் பிரமாணநூல் அன்று" என்றுங் கூறுவர். சைவரில் ஒருசாரார் "சிவாகமம் பிரமாணநூல்" என்றும், "வேதம் அதுபோல்வதோர் பிரமாணநூல் அன்று" என்றுங் கூறுவர். நீலகண்ட ஆசிரியர் அப்பயதீக்கிதர் முதலிய சிவாத்துவித சைவாசாரியர்கள் நீலகண்டபாடியம், சிவாதித்தமணிதீபிகை, சிவதத்துவ விவேகம் முதலியவற்றில், அவ்வைதிகரை மறுத்துச் சிவாகமப்பிராமாணியம் வலியுறுத்து உரைத்தார். அரதத்தசிவாசாரியர் உமாபதிசிவாசாரியர் முதலிய வைதிகசித்தாந்த சைவாசாரியர் சதுர்வேததாற்பரியசங்கிரகம், பவுட்கரவிருத்தி முதலியவற்றில், வேதாகமப்பிராமாணியம் வலியுறுத்து உரைத்தார். அவ்வாறெல்லாம் ஆசிரியர் சிவஞானயோகிகள் சிவஞானமாபாடியத்து உபோற்காதத்துள் எடுத்துக்காட்டித் தந்துணிபு நிலையிட்டு உரைத்தார். அம்மாபாடிய உரையை அவ்வாறே ஈண்டு எடுத்துக்காட்டும் முகத்தால், வேதாகமங்கள் ஒற்றுமைபுடைய முதனூல்களாதல் விளக்குதும்.

வேதங்கள் ஒருவராற் செய்யப்படாது நிலைபேறு உடைமையானும், ஆன்றோரால் தழுவப்படுதலானும், குற்றமின்றிப் பிரமாணமாம் என்பது துணியப்படும். ஆகமங்கள் அவ்வாறு நித்தமன்றி ஒருவராற் செய்யப்பட்டமையானும், பிரமப்பொருள் வேதமொன்றுனே உணரப்படும் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையானும், அங்ஙனமாயினும் மிருதிநூல் முதலியன போல வேதம் முதனூலாகக்கொண்டு ஆகமங்கள் செய்யப்பட்டனவெனின், அது நும்மனோர்க்குக் கொள்கை அன்மையானும், அங்ஙனங் கொள்ளின், வேதப்பொருள் உணர்ந்து நூல்செய்த மனுமுதலியோர்போல ஆகமஞ்செய்த இறைவனுக்கு முற்றுணர்வின்மை பெறப்படுதலானும், அவ்வாறன்றி முற்றுணர்வு இயல்பாகவுடைய இறைவனுற் செய்யப்பட்டமையின் ஆகமங்கள் பிரமாணமெனக்கூறின், முற்றுணர்வுடைய இறைவனுண்மை துணிந்தபின்னர் அவனுற் செய்யப்பட்டமையின் ஆகமம் பிரமாணமெனத் துணியப்படும்; ஆகமம் பிரமாணமெனத் துணிந்தபின்னர் அதனுல் இறைவனுண்மை துணியப்படுமென, *"ஒன்றனையொன்றுபற்றுதல்" என்னுங் குற்றமாமாகலானும், மம் பிரமாணம் என்பது தெளியப்படாதாம்.

அல்லதூஉம், வாசிட்டலிங்கத்திற் "பாஞ்சராத்திரம் புகழ்ந்தெடுத்தொருசிலர் பகர்வார்" என்பது முதலாகத் தந்திரவழி ஒழுகுவோரை எடுத்துக்கூறி "அவர் மா மூடர்" எனவும், பாற்மபுராணத்தில் வசிட்டனுக்குந் திலீபனுக்குங் கூறு நிகழ்வழித் "திராவிட தேசந் தன்னிற் சித்திர சேன னென்பான்" என்று எடுத்துக்கொண்டு, "சித்திர சேனன் என்னும் அரசன் பாசண்டர்கூற்றே பற்றி வைதிக ஒழுக்கத்தைக் கைவிட்டுப் பாசுபதவழி ஒழுகி நரகத்தில் வீழ்ந்தான்" எனவும், வாசிட்டலிங்கத்திற் "சாண்டில்லியன் என்பான் ஒருவன் தறுகண்ணனுப்ப் பிறர்மனை நயந்து வாசுதேவனைத் தீங்குகெறியாளை வழிபட்டு நிரயத்தில் வீழ்ந்தான்" எனவுஞ், சூதசங்கிதையில்,

* இதனை வடநூலார் அந்நியோந்நியாச்சிரயதோஷம் என்பர்.

''மொழிபாஞ்ச ராத்திரங்கா பாலங் காளா முகஞ்சாத்தம் பவுத்தமா ருகதந் தன்னிற்—கழிபாசு பதஞாலாம் பவத்திற் றீக்கை காதலிப்பீர் வேதியரிற் கடையர் காணீர்'' என்றற்றொடக்கத்தால் ''தந்திரவழி ஒழுகுதல் பொய்த் தொழில் உணர்ந்து வெகுண்ட கவுதமன் சாபப்பயன்'' எனவுங், கூர்மபுராணத்தில், ''அனவரு மரன்றனை யரியை யண்மி'' என்று எடுத்துக்கொண்டு ''அறு முனிவர் இட்ட சாபவயத்தானே வேட்பித்தல் முதலியவற்றின் அதிகாரமின்மையான் விருத்தியின்றி வருந்துவோர்க்கு விருத்தியின்பொருட்டுத் தந்திரஞ் செய்யப்பட்டது'' எனவும், அதனுள், ''மோகனா லிருவேமுஞ் செய்வோம் விடைக்கொடியாய்'' என்பதனால் ஆகமங்கள் மோகிப்பிக்கும் நூல் என வுங் கூறுதலால், ஆகமம் பிரமாணமல்ல என்பதே தெற்றென விளங்குமாகலின், அவை வீடுபேறுமுதலிய மறுமைப்பயன் பயப்பிக்குமாறு என்னை? எனின், கூறுதும்:—

வேதம் நித்தம் என்பதற்குப் பிரமாணம் இன்மையானும், தோற்றக்கேடுகள் காணப்படுதலான் அநித்தம் என்பதே துணியப்படுதலானும், ''அந்தக் ககரமே இது'' என்னும் மறித்துணர்வு ''அந்தச் சுடரே இது'' என்பதுபோலச் சாதியொருமைபற்றி நிகழ்வதேயாம் ஆகலானும், அவ்வாறன்றி எழுத்துக்கள் நித்தமெனக் கொள்ளினும் அவை ஒன்றோடொன்று தொடர்ப்பாடுற்று வருஞ் சொற்கள் அநித்தமே ஆகலானும், உலகத்திற்குத் தோற்ற ஒடுக்கங்கள் உண்மையிற் பிரவாக நித்தம் என்பதும் பொருந்தாமையானும், எல்லா உயிர்கள்மாட்டும் பேரருளுடைய பரமசிவனுற் செய்யப்பட்டமை பற்றியே வேதங்கட்குப் பிரமாண உண்மை கொள்ளப்படும். அம்முறையானே சிவாகமங்களும் பிரமாணமாதல் துணியப்படும். அது வேதம் முதல் உலோகாயதம்தால் இறுதியாகிய எல்லா நெறியும் பரமசிவனுற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரமசிவனிடத்து ஒடுங்கியவேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்றுதலானும், நித்தம் என்று உபசரித்துக் கூறப்படும் ஆகலின், சிவாகமங்களை நித்தமென்பதும் இக்கருத்தேதபற்றி என்க. அங்ஙனம் அல்லாக்கால், ''வேதம் பரமசிவனுற் செய்யப்பட்டது'' என்னுங் கருதுகோளோடும், ''அட்டாதச வித்தைக்கு முதற் கருத்தாவாகிய ரூலபாணி'' என்றற்றொடக்கத்துப் புராணவசனங்களோடும், ஈண்டுக்கூறும் அனுமான அளவையோடும் முரணுமாறு அறிக.

ஒருவன், இன்னென் வக்தேதன் என்புழி அவனும் அவன் வாய்மொழியும்போல முதல்வனும் முதல்வனுற் செய்யப்படும் வேதாகமங்களுங் தம்முட்காரக ஏதுவும் ஞாபக ஏதுவுமாகிய வேறுபாடுடைமையின், இன்னுரென்னவை ''ஒன்றனை யொன்று பற்றுதல்'' என்னுங் குற்றமாகா என்க. இனி, ஆன்றோரால் தழுவப்பட்டமைபற்றி வேதஞ் சிவாகமம் இரண்டும் பிரமாணமெனத் துணிந்தபின்னர் அவற்றுனே அவை பரமசிவனுற் செய்யப்பட்டன என்பது துணியப்படும் ஆகலானும் ஒன்றனையொன்றுபற்றுதல் ஆகாமையும் உணர்க. ஆன்றோரால் தழுவப்படுதல் ஆகமப்பருதியின் இன்மையினின், அற்றன்று; ''துறக்கம் வேண்டியோன் சோதிட்டோமத்தான் வேட்க'' என்றற் றொடக்கத்துச் சுருதிகட்கு அவை வேட்குமாறு வகுத்துக் கூறுஞ் சுருதிகளும் அத்தன்மைய

வாகிய கற்பசூத்திரங்களும் இன்றியமையாது வேண்டப்படுமாறு போல, வேதத்துள் விதிக்கப்படுஞ் சிவபூசை முதலிய விதிகட்கும் அவற்றை வகுத்துக் கூறுங் காமிகம் முதலிய சிவாகமங்கள் இன்றியமையாது வேண்டப்பட்டு நிற்றலின், அவை ஆன்றோரால் தழுவப்படுதல் ஒருதலையாகலான் என்க. இது சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் அரதத்தாசாரியர் கூறியவாற்றான் அறிக.

அங்ஙனமாயினும் தீக்கைப்பேறு ஆன்றோரால் தழுவப்படாமையின், அப்பகுதியிற் பிரமாணமாமாறு என்னை? எனின்,—அற்றன்று; சுவேதன் உபமன்னியன் அகத்தியன் முதலியோர்க்குத் தீக்கைப்பேறு காண்டலான் என்க. உபமன்னியன் அகத்தியன் முதலியோர்பாற் கண்ணன் இராமன் முதலியோர்க்குந் தீக்கைப்பேறு அறிவஞ்சம் பாரதம் பாற்மபுராணம் முதலியவற்றின் விரித்துக் கூறியவாறுங் காண்க. அஃது எல்லாரும் பெறுமை, எல்லாருக்கும் மலபரிபாகம் இன்மைபாற், *பரமகஞ்ச சங்கியாசம்போல, அதற்கு உரிய அதிகாரிகள் சிலரேயாகலான் என்பது.

அற்றேல், வாமதூல் முதலாயினவும் பரமசிவனுற் செய்யப்பட்டமையின், காமிகம் முதலியவற்றோடு ஒப்பப் பிரமாணமாதல் வேண்டப்படும் பிறவெனின்,—படாது; அவற்றுட் கூறுஞ் சுரைக்குடங் தாபித்தல் முதலிய ஆசாரங்கள் வேதத்துள் எடுத்தோதாதி விலக்கப்பட்டமையின், சவுத்திராமணியகத்தில் சுரை ஏற்றல் வேதத்துள் விதிக்கப்பட்டதாயினும் வீணையோர்க்கே ஆயவாறுபோல, அவையும் வீணையோர்க்கே உரிய என்பது பெறுதுமாகலின், அவையும் அவற்றிற்கு உரிய அதிகாரிகள் வேறுபாட்டாற் பிரமாணமாம் எனக்கொள்ளப்படும் என்க. அங்ஙனமாயின், அது வேதவிதியோடு முரணுமாலோ எனின்,—அவற்றுட் கூறுங் கிரியைகட்கு வேதநெறியிற் தப்பிய மாந்தர் அதிகாரிகள் எனப் பிரித்து வைத்தலான் முரணாது என்க. இது காந்தத்துட் கூறப்பட்டது.

இனிப், பொருள்கள் முரணியவழி வலியவற்றான் மெலியவை கண்டிக்கப்படும் எனக்கொள்க. எல்லாநெறியும் இறைவனுற் செய்யப்பட்டமையான் விசேடம் இன்மையின், அவற்றுள், ஒன்றற்கொன்று வன்மை மென்மை கூறின், இதுவே மாறுகொளக்கூறலாமால் எனின்,—அற்றன்று; அவற்றைப் பின் வழிப்படுத்து நூல்செய்தோர் தாரதம்மியத்தானே அவற்றிற்கு வன்மை மென்மை கூறுதல் அமையுமாகலின், பின்னூல் செய்தார் அவ்வந்நெறியிற் கூறும் பொருள்களே அம்மொழியின் தாற்பரியம் அறியாது மயங்கி அவற்றோடு மாறுகொளத் தொகுத்தும் விரித்துஞ் செய்தாராகலின், அவை மென்மை எனப்பட்டன. மாறுகோளில் கூற்றின் எல்லாம் பிரமாணமேயாம் என்க.

இனி, வேதத்தினுஞ் சிவாகமத்தினும் இந்திரன்முதலியோர் அவ்வாறு வழிப்படுத்து வேறு நூல் செய்யாது, வேதத்திற்கு வியாசர் முதலியோரும் ஆகமத்துக்குப் பிரணவர் முதலியோரும் போலச் சம்பிரதாயமாத்திரமே

* பரமகஞ்சசந்நியாசம்—குடிசகம் பெகூதகம் ஹம்ஸம் என்னும் மூன்றினும் மேலாய் நான்காவதாய் உள்ளது; அது நிட்டை புரியும் பக்குவர்க்கு உரியது.

விளக்கினராகலின், அவ்விரண்டினுள் வன்மை மென்மைகள் கூறுதல் பொருந்தாமையின், அவற்றுள், ஒரோவழி மாறுகோள்போலத் தோன்றியவழி, வேதவாக்கியங்கள் தம்முள் மாறுபட்டவழிக் கருத்துவேறுபாடு பற்றிக் கூறியதெனத் தெரிந்துரைத்துக் கொள்வதுபோல, அவை முரணுதவாறு தெரிந்துரைத்துக்கொள்வதன்றி அவை ஒன்றுனொன்று மறுக்கப்படா என்க.

இவ்வாறன்றி, இன்னும் ஒருவாற்றான் விடுக்குமாறு:—சாருவாகம் முதலிய எல்லாச் சமயமும் பரமசிவனுற் செய்யப்பட்டமையிற் பிரமாணமேயாமாயினும், அவற்றுள், முதற்கண் மிகவும் மந்த உணர்வினராய் உலக இன்பமே பெரும்பயன் எனவுந் தமக்குப் புறம்பாகிய மக்கள் முதலியோரே ஆன்மா எனவும் அபிமானஞ் செய்து உழலும் அதிகாரிகளுக்குப், பரமசிவன் இரங்கித், துன்பம் முதலியவற்றோடு விரவுதலான் உலக இன்பம் பேருறுதிப்பயனன்று எனவும் மக்கள் முதலியோர் ஆன்மா அல்லர் எனவும் உணர்த்தி, அவர்களுணர்வு அவ்வளவில் நில்லாதெறுதற்பொருட்டு நுட்பப்பொருள் உணர்த்தப்புகுற் கொள்ளமாட்டாமையால் தூலவுடம்பே ஆன்மா எனவும் அவ்வுடம்பு நசித்தலே பேருறுதிப்பயன் எனவும் அறிவுறுத்தருளினுன். பின்பு அங்ஙனம் அறிவுறுத்த தெறியே ஒழுகிப் பரமசிவன் திருவருட்கு உரியராய் மலசத்தியிற் சிறிது நீங்கி, உடம்பே ஆன்மா உடம்பு நசித்தலே பெரும்பயன் என்பவற்றின் ஐயப்பாடு தோன்றிய அதிகாரிகளுக்கு, உடம்பு முதலியன ஆன்மாவல்ல என்று மறுத்தற்பொருட்டுப் புத்தநூல் அறிவுறுத்தருளினுன். இவ்வாறே மேலுஞ் சோபானமுறையான் உபதேசித்தருளியதென மாறுபாடின்மை உணர்ந்துகொள்ளப்படும்.

இங்ஙனஞ் சாருவாகம் முதலியநூல்களைச் சோபானமுறையாற் கொள்ளவே, அதிகாரி தாரதம்மியத்தான் மேலுள்ள நூல்கள் கீழுள்ள நூல்களை மறுக்கும் முகத்தால் தோன்றினவாகலின், மாறுகோளில்லை என்பதூஉம், அவையும் ஒருவாற்றுற் பிரமாணமேயாம் என்பதூஉம் போந்தமை உணர்க.

இது, தயித்திரியத்தில் அதிகாரிபேதம்பற்றி "அன்னமய கோசம் பிரமம்" என்றும், அதனை மறுத்து மேல் அதனிற் சூக்குமமாகிய "பிராணமய கோசம் பிரமம்" என்றும், அதற்குமேல் "மனோமய கோசம் பிரமம்" என்றும், அதற்குமேல் "விஞ்ஞானமய கோசம் பிரமம்" என்றும், அதற்குமேல் "ஆனந்தமய கோசம் பிரமம்" என்றும், ஒன்றற்கொன்று சூக்குமமாய் உணர்த்துதல் போலவும், கவுசிதக உபநிடதத்தில் அதிகாரிபேதத்தால் இந்திரன் தயித்தியனுக்குத் தன்னையே பிரமமாகக் கூறியது போலவுங் கொள்க. அங்ஙனம் புல்லி எதிரே காட்டி ஆக்களைப் பிடிக்குமாறு போலச் சோபானமுறைமை பற்றிக் கூறியது என்பதும், அவை எல்லாம் ஒருவாற்றுற் பிரமாணம் என்பதும் சூதசங்கிதையிற் காண்க.

இங்ஙனங் கூறியவாற்றானே, வேதமுஞ் சித்தாந்த சைவாகமமும் என்னும் இரண்டுமே உத்தமநூல் எனவும், ஏனைச் சாருவாகம் முதற் பாஞ்சராத்திரம் இறுதியாகிய நூல்களெல்லாம் இவ்விரண்டினுமே மாறுபட்டவழி மறுக்கப்படும் எனவும், அவற்றுள்ளும் வழிநூல் செய்தார் தாரதம்மியத்தாற்

கீழ்க்கீழ் நூல்கள் மேன்மேல் நூல்களான் மறுக்கப்படும் எனவும் உணர்ந்து கொள்க.

இனித், "தந்திரவழி ஒழுகினோர் மூடர்" எனவும், "நிரயத்தில் வீழ்ந்தார்" எனவும், "அவை சாபப்பயன்" எனவும், "விருத்திப் பொருட்டு" எனவும், "மோகநூல்" எனவும் புராணங்களிற் கூறியது, வேதப்பொருளோடு மாறுகொளக் கூறும் பாசுபதம் பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களேயாம்: வேதப்பொருளேயே விரித்துக்கூறப் புகுந்த வேதசாரமாகிய சித்தாந்த சைவாகமங்களே அன்று என உணர்க. இதுவும் வாயவ்வியசங்கிதை சனற்குமாரசங்கிதை கூர்மபுராணம் மகுடாகமம் முதலியவற்றுட் கூறியவாறு.

இனிப், புறச்சமயவழி ஒழுகினோரை அங்ஙனம் இழித்துக்கூறியதூஉம், அந்நெறி ஒழுகுதல்பற்றி அன்று; மற்றென்னெனின், அவற்றையே பொருளாகக் கொண்டு வேதநெறியை நிந்தித்தமைபற்றி என்க. அதுவும் ஆண்டே கூறப்பட்டது. புறச்சமயநூல்கள் விருத்திப்பொருட்டுச் செய்யப்பட்டன என்பதூஉம், உடலோம்புதற் பொருட்டென்றது அன்று; விருத்தி, ஒழுக்க மூமாமாகலிற் சாபத்தால் வேதநெறியின் நீங்கினோர் ஆசரித்தற்பொருட்டு என்றவாறும். மோகநூல் என்றதூஉம், மணிமந்திரமருந்து முதலியவற்றுன் விம்மிதம் பயக்கும் நூல் என்றவாறேயாம்.

இனி, வேதமுஞ் சிவாகமமும் ஒன்றேயாயினும் இருபகுதிப்பட்டது, வேதம் மூன்றுவருணத்தாருக்குஞ் சிவாகமம் நான்குவருணத்தாருக்கும் பொதுவாதல் பற்றியாதலாற் சிவாகமங்கள் பிரமாணம் என்பது தெற்றென உணர்க. இங்ஙனஞ் சைவாகமங்களுக்குப் பிராமாணியம் பவுட்கரவுரையின் உமாபதிசிவாசாரியர் காட்டியவாறே காண்க.

நீலகண்டபாடியத்திற் பதியதிகரணத்திற் காட்டுமாறு:—

"சிவாகமங்களில் ஒருசாரன பரப்பிரமங் கேவலம் நிமித்தகாரணம் எனக் கூறும்; அதனை மறுத்தற்கு எழுந்தது இவ்வதிகரணம் என்று உரைப்பாருமுளர்; அது பொருந்தாது; யாம் வேதத்திற்குஞ் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம்; சிவனுற் செய்யப்படுதலின் வேதமுஞ் சிவாகமம் என வழங்கப்படும் ஆதலாற் சிவாகமம் மூன்றுவருணத்துக்கே உரித்தாயதும் நான்குவருணத்துக்கே உரித்தாயதும் என இருவகைப்படும்; அவற்றுள், முன்னையது வேதம் எனவும் பின்னையது சிவாகமம் எனவும் வழங்கப்பட்டன; இவ்விரண்டும் செய்த கருத்தன் சிவன் ஒருவனேயாம்; இவ்வாறு சுருதியினும் புராணங்களினுஞ் சிவாகமங்களினுங் கூறப்பட்டது; பஞ்சப்பிரமம் பிரணவம் பஞ்சாக்கரம் பிராசாதம் முதலிய மந்திரங்களும், பதி பசு பாசம் முதலிய பொருள் வழக்கமும், திருநீற்றின் உத்தூளனந் திரிபுண்டரம் உருத்திராக்கந் தரித்தல் சிவலிங்கபூசை முதலிய தருமங்களும், பிறவும் வேதஞ் சிவாகமம் இரண்டினும் ஒப்பக்காண்டலான், அவ்விரண்டும் பிரமாணமே ஆகலானும், கருத்தா ஒருவனே ஆகலான் அவ்விரண்டிற்கும் பொருள் ஒன்றேயாகலின் அவற்றுள்ளும் மாறுபாடின்மையானும், இவ்வதிகரணங் கேவலம் நிமித்த

மாத்திரமே இறைவன் எனக்கூறும் இரணியகருப்பநூலாகிய யோகசாத்திரத்தை மறுத்தற்கு எழுந்தது எனவே யாங் கூறினும்" என்று இவ்வாறு நீலகண்ட ஆசாரியராற் காட்டப்பட்டது. இதனை விரித்துச் சிவாதித்தமணிதீபிகை சிவதத்துவவிவேகம் முதலிய நூலுடையார் சிவாகமங்கட்குப் பிராமாணியங் காட்டியவாறும் அந்நூல்களுட் காண்க.

"வேதஞ் சிவாகமம் என இருபகுதிப்பட்டது, மூன்று வருணத்திற்கும் உரிமையாதலும் நான்குவருணத்திற்கும் உரிமையாதலும் பற்றி" எனநீலகண்டபாடியத்திற் கூறப்பட்டது.

*"வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க—ளாதிநூ லனுதியம லன்றருநூ லிரண்டு மாணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலா—நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே தாந்தத்—தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" எனவும், †"உலகியல் வேதநூ லொழுக்க மென்பது—நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்" எனவும் கூறுப ஆகலின், அங்ஙனங் நூலாருந்தி முறைமை பற்றிக் கூறுதலின் இருபகுதிப்பட்டது எனவே யாங் கோடும்.

இனிச், சைவரில் ஒருசாரார் சைவாகமங்களில், "உலகநூல், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம்" என நூல்களை வகைப்படுத்து, "மாந்திரம் ஒழிந்த நான்கும் புறநூல்" என வைதிகத்தினையும் அவற்றுடன் விலக்குதலானும், "வேதாந்தத்தில் எதனை ஆன்மா" என வேதாந்தத்தைப் புறச்சமயங்களோடு எடுத்தோதி மறுத்தலானும், வேதம் பிரமாணமன்று என்பர். அது பகுத்துணர்வில்லாதார் கூற்றேயாம் என்று மறுக்க. எங்ஙனே? ஆண்டு வைதிகம் என்றது மீமாஞ்சை நூலும் வைசேடிகநூலும் கையாயிக நூலும் என்னும் மூன்றுமீமாம்சம் எனலும், புறச்சமயங்களோடு வைத்து எண்ணிய வேதாந்தமாவது யகான்மவாதங்கூறும் வியாசநூல்எனலும், சித்தாந்தப்பிரகாசிகையிற் சர்வான்மசம்புசிவாசாரியர் கூறுதலான், அது வேறு என்பது தெற்றென விளங்குமாகலின், அண்டு வேதம் என்றநூலும் மீமாஞ்சைநூலே எனக் கொள்க; வேதத்துள் விதித்த கருமகாண்டத்தை ஆராய்ச்சி செய்தலின் அதற்கும் அப்பெயராயிற்று. அங்ஙனங் கொள்ளாக்கால், வேதசாரஞ் சிவாகமம் ஆதலாற் "சைவாசாரத்திற்கு உரியோன் வைதிகன்" எனவும், "வேதாந்தப்பொருளைத் தெளித்துக் கூறுவது சித்தாந்தம்" எனவும், "பிறநூல் பிறபொருள்களைக்கூறும்" எனவும், வேதத்தோடு ஒற்றுமை உடைமை பற்றியே சிவாகமங்கட்குப் பிரமாணமாதல் கூறும் வசனங்களோடும் முரணுமாறு அறிக.

"பாசுபதம்" என்பது ‡யோகப்பெயராற் சைவாகமங்கட்கும் ¶உருடப்பெயராற் பாசுபதாகமங்கட்கும் ஆமாறுபோல, "வேதாந்தம்" என்பது யோகப்பெயரான் வேதத்தின் முடிபாகிய உபநிடதங்களைக் கூறும்; உருடப்பெ

* சிவஞானசித்தி. அ-ம் சூ. கரு. † பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம். அ௨. ‡ யோகம் - காரணம். ¶ உருடம் - இடுகுறி.

யான் அவற்றை எடுத்துச் செய்த ஏகான்மவாதநூலைக் கூறும். ஆதலின், அவ்விருவேறுவகையுந் தெரிந்துணர்ந்து கொள்க.

வேதம் ஓதுதற்கண்ணும் வைதிகாசாரத்தின்கண்ணும் உபனயனப் பேறுடையார்க்கன்றி அதிகாரமின்மைபோலச் சைவாகமம் ஓதுதற்கண்ணுஞ் சைவாசாரத்தின்கண்ணுஞ் சிவதீக்கைப் பேறுடையார்க்கன்றி அதிகாரம் இல்லையெனக் கொள்க.

சரியாபாதம்முதலியவற்றுட் கூறப்படுவன.

வேதத்திற் கூறுங் கருமகாண்டப் பொருட்கு இன்றியமையாது வேண்டப்பட்டு எஞ்சி நின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாய் உள்ள பொருள்களையும் வேறு எடுத்துக்கொண்டு இனிது விளக்குதலின், சிவாகமஞ் சித்தாந்த சாத்திரம் என்று வழங்கப்படும். இச்சித்தாந்த ஆகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பாதங்கள் உடையனவாம்.

இவற்றுள், சரியாபாதத்துள் பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும், சிவலிங்க இலக்கணமும், நந்தி முதலிய கணநாதர் இலக்கணமும், செபமாலை யோகபட்டந் தண்டங் கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டி விதியும், சிராத்த விதியும் கூறப்படும்.

கிரியாபாதத்துள், மந்திரங்களினது உத்தாரணஞ் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமங்களும், சமயம் விசேடம் நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், புத்தி முத்திகளுக்கு உபாயமான தீக்கையும் கூறப்படும்.

யோகபாதத்துள், முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும், சகத்திற்குக் காரணமான மாயை மாமாயை கலைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகள் உண்டாம் முறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரந் தாரணை தியானஞ் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதாரம் முதலிய ஆதாரங்களின் முறையும் கூறப்படும்.

ஞானபாதத்துள், பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவங் கான்மியம் மாயேயம் வைந்தவந் திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவம் முதற் பிருதிவி தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களினது உற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாம் முறையும், புவனங்கள் புவனேசுவரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப் பிரளயம் மத்திமப் பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபங்களும், அதமப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டி

யாம் முறைமையும், பாசுபதம் மாவிரதங் காபாலிகம் முதலிய மதங்களின் சொரூபங்களும் கூறப்படும்.

பிரமன்முதலியோர்காரணரல்லர்.

இனிப், பிரமன் முதலிய மூவரையும் முறையே "படைப்புக்கடவுள் திதிக் கடவுள் சங்காரக்கடவுள்" எனவும், "சாக்கிரமூர்த்தி சொப்பனமூர்த்தி சுழுத்திமூர்த்தி" எனவுங் கூறிப், பரமசிவனைத் "துரியமூர்த்தி" என உபநிடதங் கள் எல்லாம் மூவரின் வேறுக வைத்து ஓதுதலின், அப்பரப்பிரம முழு முதல் வனே நாயனார் "ஆதிபகவன்" என்று அங்ஙனம் விசேடிக்கப்பட்டான் என்பது தெற்றென உணர்ந்துகொள்க. இன்னும், மால் அயன் உருத்திரன் என்னும் மூவரையும் முறையே "சாத்துவிககுணமூர்த்தி இராசதகுணமூர்த்தி தாமதகுணமூர்த்தி" என்று ஓதிப், பரமசிவனைக் "குணாதீதன்" என்று அவ் வாறு உபநிடதம் முதலியன ஓதுதலானும் அம்முழு முதல்வனே ஆதி சத் தத்தால் விசேடிக்கப்பட்ட பகவன் என்பது துணிபாம் என்க.

இனிச், சங்காரவுருத்திரனுஞ் சங்கரித்தற்றொழிலின் பொருட்டுத் தாம தகுணத்தை மேற்கொண்டதல்லது இயல்பாகத் தாமதகுணமுடையன் அல் லன்; தாமதகுணத்தின் காரியமாகிய துயில் மயக்கம் வஞ்சம் முதலியன அக் கடவுண்மாட்டு இன்மையின். துயில் மயக்கம் வஞ்சம் முதலியன மாயோனுக்கு உளவாதல் புராண இதிகாசங்களிற் கேட்கப்படுதலின், அக்கடவுளுக் குச் சாத்துவிககுணங் கூறியது காத்தற்றொழின் மாத்திரைக்கே எனக் கொள்க. இன்னோரன்னவை எல்லாம் பிரமதருக்கத்தவத்துள் விரித்துக் காட்டியவாற்றுன் அறிக.

மாயோனுக்குக் காத்தற்றொழிலும் பிருதிவி முதற் பிரகிருதிமாயைகா றும் வியாபித்து நிற்கும் பிரதிட்டாகலை பரியந்தமே என்க. என்னை? நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் ஐங்கலைகளான் வியாபிக் கப்பட்ட தத்துவ புவனங்களுக்கு முறையே பிரமன் மால் உருத்திரன் மகே சுரன் சதாசிவன் என்னும் ஐவரும் அதிகாரிகள் என ஆகமங்கள் ஓதுதலின் என்க.

பிரகிருதிக்கு மேலுந் தத்துவ புவனங்கள் உண்மை சைவோபநிடதங்க ளினுங் கேட்கப்படுதலின், அது சைவாகமப்பொருள் என்று புறங்கூறுதல் ஏலாது என்க.

புராணங்களினும் பாரதத்தினும் மாயோனுக்கும் பிரமனுக்குந் தாழ்வாக உருத்திரப்பெயராற் கூறப்படுவோர் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலும் இனிது நடாத்துதற்பொருட்டுச் சங்கார உருத்திரன் கூறுய் அவர்பால் தோ ன்றிய நீலலோகிதன் முதலிய அவதாரமூர்த்திகளேயாம் என்க. அது பாரத தாற்பரியசங்கிரகம் முதலியவற்றுட் காண்க.

அதர்வசிகை முதலிய உபநிடதங்களில் "பரமசிவன் மும்மூர்த்திகளையும் படைத்தான்" என்பதுபோலக் குணமூர்த்திகளை அங்ஙனங் கூறுது தம்மை

ஒழித்து ஒழிந்த இருவரையும் படைத்தார் எனவே கூறுதலின், அவர் முழு முதல்வர் ஆகாமை கடைப்பிடிக்க. * "அயனே முன்படைத் திடுமொரு கற்பத் தரியை முன்படைத் திடுமொரு கற்பத்—துயரு ருத்திரன் றனைமுனம் படைப்ப னைருகற் பமற்றொரு கற்பந் தன்னின்—முயலு மூவரை யொருங்குடன் படைப்பன் முன்பிறந்தவர் மற்றிரு வரையுஞ்—செயலி னற்படைக் கவுமருள் புரிவன் சிவபி ரானெனி லேற்றமிங் கெவனே." எனச் சிவதத்துவவிவேகத் திற் கூறியதனையும் ஈண்டு விரித்து உரைத்துக்கொள்க.

பாரதத்தில் "அளவில் பேரொளிப் பகவனுஞ் சிவனுக் கச்சுத னுன்மா வாம்" என்றது, அபேதம்பட உபசரித்துக் கூறியதாம். ஆண்டு ஆன்மா என்றது அந்தரியாமி என்னும் பொருட்டெனக் கொள்ளின், "அளவில் பேரொளிப் பகவன்" என்று உயர்த்துக்கூறியதனோடு முரணுமாறு அறிக. பாரதத்தின் மோக்க தருமத்தில் "ஆதலா லெனக்கான் மாவே யாமுருத் திரனே முன்னர்க்–காதலாற் பூசிக்கின்றேன் யான்" எனக் கண்ணன் கூறியவாக்கியத்திற் சிவபிரானைத் தனக்கு ஆன்மா என்றது அந்தரியாமி என்னும் பொருட்டேயாம்; தன்னைப் பூசிக்கப்படுங் கடவுளாதற்கு உரியது அதுவே ஆகலான் என்க.

இனி, வேதத்துள் கருமகாண்டத்தில் "விண்டு பரமன், அங்கி அவமன், அவ்விருவருக்கும் இடையே எல்லாத் தேவரும்" என்றது, ஆண்டுச் செய்வதொரு வேள்விவிசேடத்தில் அவிப்பாகம் ஏற்கும் முறையில் விண்டு மூந்தினவன்; அங்கி பிந்தினவன்; அவ்விருவருக்கும் இடையே ஏனைத்தேவரெல்லாம் என்னும் பொருட்டாகலின், ஆண்டுப் பரம அவம என்பன ஆதி அந்தம் எனவே பொருள்படுமாறு காண்க. அவ்வாறன்றி ஆண்டு விண்டு பரமன் என்றதற்கு விண்டு எல்லாக்கடவுளருக்கும் மேற்பட்டவன் என்றும், அங்கி அவமன் என்றதற்கு அங்கி எல்லாக் கடவுளருக்கும் கீழ்ப்பட்டவன் என்றும் பொருள் கொள்ளின், "அங்கி கடவுளருக்கு மேற்பட்டவன்" என்று ஆண்டாண்டுக் கூறுஞ் சுருதி மிருதி புராணங்கள் பலவற்றோடும் முரணும் என்று ஒழிக. இவ்வாறு முன்பின் முரணுமைப் பொருள்கொள்ள அறியாது "விண்டு ஆன்மா" என்றதுபற்றியும், "விண்டு பரமன்" என்றதுபற்றியும், விண்டுவுக்கு முதன்மை கோடல் பொருந்தாமை அறிக. இன்னும் வருவன எல்லாம் இவ்வாறே ஓர்ந்துணர்க. ஈண்டுக் கூறியவாற்றானுந் துரியமூர்த்தியான பரமசிவனே ஆதிக்கவன் என்று அவ்வாறு ஓதப்பட்டான் எனத் தெளிந்துகொள்க.

பாஞ்சராத்திரிகள் இன்னுங் கூறுமாறு;—அரசன் உலாப்போதுங்காலத் தொகுதிதொகுதியாகச் செல்வாருள் அரசனுவான் இவன் என்பது ஆடை அணி யானை குதிரை முதலிய வைபவம்பற்றித் துணியப்படாதாம்; என்னை? அவை அமைச்சர் படைத்தலைவர் முதலியோர்க்கும் பொது; அல்லதூஉம், அரசன் உவகையுற்றுழி அமைச்சர் முதலாயினோர்க்குத் தன்னினும் மிக்க வரிசை அளித்தலும் உண்டாகலின். அதுபோல, வேதத்துட் கூறப்படுங் கடவுளருள் பரப்பிரமப் பொருளாவான் இவன் என்பது ஏனைப் பெருமைகளால் துணியப்படாதாம். மற்றுக் கிரீடங் கவித்து வெண்கொற்றக்குடை நிழற்கீழ்

* சிவதத்துவவிவேகத்தில் இது காணப்படவில்லை.

வருதல் ஒன்றேபற்றி அரசனுவான் இவன் என்பது துணியப்படுமாறுபோலக் காரணவாக்கியங்களுட் படைப்பு முதலியவற்றிற்குக் காரணமாகக் கூறப்படுதல் ஒன்றேபற்றி அவனே பரப்பிரமம் என்பது துணியப்படும். காரணப்பொருளாவான் நாராயணனே என்பது சுபாலம் முதலிய உபநிடதங்களிற் காணப்படும்.

அற்றேல், சிலவுபநிடதங்களிற் காரணப்பொருள் "சத்து" என்றும் "பிரமம்" என்றும் "ஆன்மா" என்றும் அங்ஙனம் பொதுவகையானும், "இரணியகருப்பன்" என்றுஞ் "சிவன்" என்றும் "உருத்திரன்" என்றும் இங்ஙனஞ் சிறப்புவகையானும், வெவ்வேறு பெயரான் எடுத்தோதாதவும்படுமாலோ எனின்,—அற்றன்று, சுபாலம் முதலியவற்றுட் காரணப்பொருள் நாராயணன் என்றது உலகந் தோன்றும் முறைமை எடுத்துக்கொண்டவழிக் கூறப்பட்டதாகலான் அதுவே உண்மைப்பொருள் எனவுஞ், சத்துப் பிரமம் ஆன்மா என்றற்றொடக்கத்துப் பொதுப்பெயர்கள் *சாகபசுநியாயம்பற்றி நாராயணனையே உணர்த்தி நிற்கும்; அங்ஙனமன்றி இடுகுறிப்பெயர் காரணத்தை விலக்கும் எனக்கொள்ளினும் ஆகுபெயராய்த்தான், மாயோனுடைய ஆயிரம் பெயர்களுள் சிவன் முதலிய நாமங்களும் எடுத்தோதுதலின் இடுகுறியாய்த்தான், நாராயணனையே உணர்த்திநிற்கும் எனவுங் கொள்ளப்படும்.

அற்றேல், நாராயணன் முதலிய மாயோன் பெயர்களுங் காரணக்குறியாய்ச் சிவனையே உணர்த்திநிற்கும் ஆதலின், காரணப்பொருள் சிவன் என்னும் உபநிடதங்களே வலியுடைய என மாறிக்கொள்ளிற் படும் இழுக்கு என்னை? எனின்,—அற்றன்று, மாயோன் பெயருள் ஏனைய எல்லாங் காரணப்பெயராய் வேறொரு கடவுளை உணர்த்தும் எனக் கொள்ளினும், நாராயணன் என்னும் பெயர் இடுகுறிப்பெயராதலே அன்றி ஏனைய பெயர்கள்போலக் காரணப்பெயராகும் என்றற்கு ஏலாது. அஃது எங்ஙனம்? எனின்,—நாரம் என்பது நீர்; அயனம் என்பது இடம்; நாரம் அயனமாக உடையவன் நாராயணன் என அன்மொழித்தொகையாய் இருமொழியும் புணர்ந்தவழி, ரகரத்தின்முன் வந்த நகரம் ஒருமொழிக்கண்ணதாயின், ணகரமாய்த் திரியும்; உயிரெழுத்துக்களும், யகர வகரங்களும், ககர பகர வருக்கங்களும், இடையே நிற்பினும், அங்ஙனந் திரியும்; ரகரம் நிலைமொழிக்கண்ணதாக நகரம் வருமொழிக்கண்ணதேல், இடுகுறிப்பெயராயின், ணகரமாய்த் திரியும் என்பது பாணினிசூத்திரம் ஆகலின், நாராயணன் என்பதனைக் காரணக்குறியாக்குவார்க்கு நகரம் ணகரமாகத் திரியும் என்றற்கு ஓத்தில்லை என்பது. அற்றாகலினன்மேற சிவன் முதலிய பெயர்போல அவயவப்பொருள் பற்றிக் காரணக்குறியாய் மற்றொருகடவுளை உணர்த்துதல் பெறுத நாராயணன் என்னுஞ் சிறப்புப்பெயராற் சுபாலம் முதலியவற்றில் எடுத்தோதாதியதூஉம் என்று இங்ஙனம் பிதற்றுவர். இவை அனைத்துஞ் சுவேதாச்சுவதரம் முதலிய உபநிடதங்களே ஓதி உணராத மடவோர் கூற்றேயாம் என்று மறுக்க.

---

* சாகபசுநியாயமாவது:—மூன் பசு எனப் பொதுப்படக் கூறிப்பின் சாகபசு என விசேடித்துக் கூறுதலால் மூன் சொன்னபசுவும் சாகமே எனப் பொருள்படநிற்கும் ஓர் நெறியாம். சாகம் - வெள்ளாடு.

படைப்பு முதலியவற்றிற்குக் காரணமாதல் ஒன்றே பிரமத்திற்குச் சிறந்த இலக்கணம் என்பது ஒக்கும். அதுபற்றியன்றே பரப்பிரமப்பொருள் பரமசிவனே எனத் துணிந்தாம் என்க. சுபாலம் முதலிய உபநிடதங்கள் உலகத்தோன்றி ஓடுங்கும் முறைமை உணர்த்தப் புகுந்தன அன்றிக் காரணப் பொருளை உணர்த்தப் புகுந்தன அல்ல. இடையே இயைபு பற்றிக் காரணப் பொருளும் உடன் கூறப்பட்டது.

சுவேதாச்சுவதரத்தில் அவ்வாறன்றிச் சுபாலம் முதலியவற்றுள் பொது வகையான் உணர்ந்த காரணப்பொருளைச் சிறப்புவகையான் உணர்தற்பொருட்டுக், "காரணமாகிய பிரமம் யாது?" என முனிவர் வினவும்வினாவை முதற்கண் எடுத்துக்கொண்டு, உபநிடதம் முழுவதும் பரமசிவனுக்கு உரிய சிறப்புப் பெயர்களாற் பரமேசுரன் பெருமை விளங்கக் கூறுதலானும், இவ்வாறு ஏனை உபநிடதங்களுள் முதற்கண் எடுத்துக்கொள்ளாமையானும், ஏனை உபநிடதங்களினுஞ் சுவேதாச்சுவதரம் வலியுடைத்து ஆகலான், அதனுட் கூறப்படுங் காரணப்பொருளாகிய பரமசிவனே பரப்பிரமம் எனவும், ஏனைக் காரணவாக்கியங்களுட் கூறும் பெயர்கள் எல்லாஞ் சாகபசு கியாயத்தாற் பரமசிவனையே உணர்த்தி நிற்கும் எனவும், இரணியகருப்பன் நாராயணன் முதலிய சிறப்புப் பெயர்களும் அவயவப்பொருள்பற்றிக் காரணப்பெயராய்த்தான், அங்ஙனமன்றி ஆகுபெயராய்த்தான், பரமசிவனையே உணர்த்தி நிற்கும் எனவும்உணர்க. எல்லாப்பெயரும் பரமசிவன் பெயர் என்பதே வேதத்தின் துணிபு என்பது ஆண்டுக் காண்க.

நாராயணன் என்னும் பெயர் மாயோனுக்கு இடுகுறியாகலினன்றே இயைபுபற்றிப் பரமசிவனை உணர்ந்தும்வழி ஆகுபெயர் எனக் கொண்டாம் என்பது. கங்கையின் இடைச்சேரி என்புழிக் கங்கை என்பது இடுகுறியாய் வெள்ளத்தினை உணர்த்தி நிற்றலி னன்றே கரையை உணர்த்தும்வழி இயைபுபற்றி ஆகுபெயர் எனக் கொண்டதூஉம் என்க. கரையினை உணர்த்தும்வழியும் ஆற்றலான் உணர்த்துமாயின், ஆகுபெயர் என்றற்கு ஏலாமை அறிக. இங்ஙனம் நாராயணன் என்பது மாயோனுக்கு இடுகுறிப்பெயராய்நின்றே கங்கையினிடைச்சேரி என்புழிப்போல இயைபு பற்றி ஆகுபெயராய்ப் பரமசிவனை உணர்த்தும் எனக் கோடலின், ஆண்டு னகரமாய்த் திரிதற்கு இழுக்கு இன்மையின் நாராயணன் என்னுஞ் சொல் அவயவப்பொருள்பற்றிக் காரணக்குறியாதற்கு ஏலாது எனக் கொண்டவழியும், அவர் கருத்துநிரம்புமாறு இல்லை என்க. இவை சிவதத்துவவிவேகத்தும் சிவஞானமாபாடியத்தும் ஓதியவாறுபற்றி உரைக்கப்பட்டன.

நாராயணசப்தார்த்தம்.

இன்னும் சிவஞானமாபாடியத்துள், ஆசிரியர் சிவஞானயோகிகள் "உண்மையால் நோக்குங்கால் நாராயணன் என்பது அவயவப்பொருள் பற்றிக் காரணக்குறியாய் நின்றே பரமசிவனை உணர்த்தும் என்பது காட்டுதும்" என்று எடுத்துக்கொண்டு "நரருடைய தொகுதி நாரம்" எனத் "தொகுதிப் பொருள் பற்றி அண் விகுதி வரும்" என்னும் பாணினி சூத்திரத்தால் அண்

விகுதி பெற்று நிற்ப, அதன்மேல் ஆசாரப்பொருள் உணர்த்துங் ககர ஙகர இத்துக்களையுடைய யகர விகுதி வந்து அயல் நீண்டு நாராய் என நின்றவழி, அதுவும் பகுதித்தன்மைப்படுதலின், அதன்மேல் வினைமுதற் பொருளுண்மை உணர்த்தும் லகர டகர இத்துக்களை உடைய யுகர விகுதி அஃ எனத் திரிந்து நாராயண என நின்றவழி, "வினைப்பெயர் விகுதியின் நின்ற ஙகரம் ணகரமாய்த் திரியும்" என்பதனால் அங்ஙனந் திரிந்து நாராயணன் என ஒருமொழியாய் உயிர்த்தொகையை ஒத்து நிற்பன் என்னும் பொருட்டாய்க் காரணக்குறியாய வாறு காண்க. இங்ஙனம் நாராயணன் என்பது லகர டகர இத்துக்களை உடைய யுகரவீற்றுச் சொல்லாதலினன்றே பெண்பாலில் நாராயணீ என ஙகர பகர இத்துக்களை உடைய ஈகாரவிகுதி ஈற்றுன் யாண்டும் வழங்குவ தூஉம் என்க. யுகர விகுதி ஈற்றுச்சொல் எனக் கொள்ளாக்கால், நாராயணீ என ஈகார விகுதி பெறுதற்கு விதியின்மை உணர்க. நாராயணன் என்னும் வட மொழிக்கு இங்ஙனம் விகுதிமேல் விகுதி புணர்த்துச் செய்கை செய்வன எல்லாம் வடமொழிவியாகரணம் வல்லார்வாய்க் கேட்டுணர்க. இன்னும் விரிக்கிற் பெருகும் என்று ஒழிக. இத்து ஆவது, செய்கை செய்தன் முதலிய வற்றிற்குக் கருவியாக முதனூல் ஆசிரியனுற் படைத்திட்டுக் கொள்ளப்பட்ட கருவிச் சாரியை. "இரணியகருப்பன் காரணப்பொருள் என்பாரையும் இவ்வாறே கூறி மறுக்க" என்று இவ்வாறு நாராயணநாமம் காரணக்குறியாய்ப் பரமசிவனை உணர்த்துமாறு சாதித்தார்.

"உயர்கா யத்திரிக் குரியபொரு ளாகலிற்—றசரதன் மதலை தாபித் தேத்தலிற்—கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்—புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்—றனது விழியுட னொராயிரங் கமலப்—புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி—னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி—னீங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலி—னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்—றென்றிசைத் தலைவனைச் செருத்துயிர் பருகலி—னனவுணர் முப்புர மழிய வில் வாங்கலிற்—றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்—றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்—மாலுட மடங்கலை வலிதபக் கோறலின்—மாயோன் மகடூஉ வாகிய காலத்—தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி—னுழ்கடல் வரைப்பி னுன்றிரு ளினைக—ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி—னுன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி—னீயிரு பிறப்பினு மியருச்சித்தலி—னிருவரு மன்னமு மேனமு மாகி—யடிமுடி தேட வழற்பிழம்பாகலிற்—பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்—கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்—பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்—மூப்புர மிறுப்புழி முருந்தப் புக்கதன்—மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி—னயன்சிர மாலை யளவில வணிதலின்—ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்—பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு—ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ—னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே" என அரதத்தாசாரியர் அருளிச் செய்ததனையும் ஈண்டு விரித்துரைத்துப் பரமசிவ பரத்துவம் இனிது தெளிந்துகொள்க. இங்ஙனங் காத்தற் கடவுளாகிய நாராயணனும், படைத்தற் கடவுளாகிய இரணியகருப்பனும் பரமகாரணராகாமை தெரிக்கலே, இவரோடு

ஒருங்கு எண்ணப்படுஞ் சங்காரக்கடவுளாகிய உருத்திரனும் பரமகாரணன் ஆகான் என்பது தானேபோதரும் என்க.

அத்துவிதபாவனை.

வேதாகமங்கள் *"பிரமாகம்" என்றும், †"சிவோகம்" என்றும் பாவிக்கும்படி கூறியது யாதுகாரணம் பற்றி எனின், பசுக்கள் பாச விமோசனம் உற்றுத் தமக்கு அந்தரியாமியும் வியாபியுமான பரமசிவத்துவம் தங்கண் அபிவியத்தி உறும்பொருட்டு உபாசிக்க, வேதாகமங்களில் அங்ஙனம் அத்துவித பாவனை விதிக்கப்பட்டது. ஆகலின், அதுகொண்டுதானே ஏகான்மவாதஞ் சாதித்தல் சாலாது என்க.

"பிரமாகம்" சிவோகம்" என்னும் அத்துவித பாவனையால் ஆன்மாக்கள் சிவகுணங்கள் தங்கண் விளங்கப்பெற்றுச் சிவமாய் இருப்பன அன்றிக் கெட்டு ஒன்றுய் ஒழியா. அரதத்தாசிரியர்க்கும் இதுவே கருத்தாதல் "வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப்பொருளாகிய சிவபிரானுக்கும் ஆன்மாவிற்கும் அத்துவித பாவனை கூறப்படுமாறு என்னை? என்று ஆசங்கித்து எடுத்துக்கொண்டு கருடனும் மாந்திரிகனுந் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினுங் கருடோகம் என்னும் அத்துவித பாவனை விடாநிவிர்த்திப்பொருட்டு வேண்டப்படும். அதுபோலப், பிரமப்பொருளாகிய பரமசிவனும் ஆன்மாவுந் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும் மலநிவிர்த்திப்பொருட்டு வேதத்தில் அத்துவித பாவனை கூறப்பட்டது. அதுகொண்டுதானே நிருபசரித ஐக்கியங் கூறுதல் சாலாது என்பது" என்று அங்ஙனஞ் சதுர்வேததாற்பரியசங்கிரகத்து ஓதிய வாற்றுன் அறிக.

எண்குணமுடைமை.

இனிச், சிவபிரானுக்குச் சருவஞ்ஞத்துவம் முதலிய எண்குணமுடைமை சொரூப இயல்பு எனப்படுஞ் சிவத்துவமாம். இவ்வெண்குண சொரூப சிவத்துவப் பேறே முத்திநிசையில் ஆன்மாவிற்கு ஆன்மலாபம் எனப்படுஞ் சாயுச்சியப் பெரும் பேறும். சிவபிரான் எண்குணமுடையனுதல் ‡"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—றூளா வணங்காத் தலை" எனவும், ¶"எட்டு வான்குணத்தீசனெம்மான்றனை" எனவும், §"இறையவனை மறையவனை யெண்குணத்தி னனை" எனவுங் கூறிய திருவாக்குக்களான் அறிக.

அற்றேல், சிவபிரான் எண்குண சொரூபனுயின் அவன்றன்னை "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று வேதாகமங்கள் ஓதுதல் பொருந்தாதால் எனின், வேதாகமங்கள் பரமான்மாவை "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று ஓதியது, சாத்துவிக இராசத தாமதம் என்னும் மாயாகுணங்கள் இல்லாதவன் என்னுங் கருத்துப்பற்றி அல்லது முற்றறிவு முதலிய சிற்குணங்கள் இல்லாதவன் என்னுங் கருத்துப்பற்றி அன்று ஆகலின் அது பொருந்துவதாம்; மற்

* பிரமாகம் - பிரமம் நான். † சிவோகம் - சிவன் நான். ‡ திருக்குறள். கூ. ¶ திருநாவுக்கரசுநாயனர் தேவாரம். § சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம் திருக்காளூட்டு முள்ளூர். கூ. இரும்புயர்ந்த.

றுப் பொருந்தாமை யாண்டையது என்க. இச்சிற்குணங்களும் இல்லா இயல்பே அவனுக்குச் சொரூபம் எனின், சத்தாகை சித்தாகை ஆனந்தரூபமாகையுஞ் சருவஞ்ஞத்துவம் முதலியவற்றை அகப்படுத்து நிற்குஞ் சிற்குணங்கள் ஆகலின், பரப்பிரமப் பொருள் அவற்றை இலக்கணமாக உடைத்து என்றலுஞ் சொரூப இயல்பு ஆகாதாம். அதுவேயு மன்றி அங்ஙனம் மேவண்டுவார் பிரமப்பொருள் ஓரியல்பும் இல்லா வெறும்பாழ் என்றாராய் நிரீச்சுரவாதிகட்குச் சகபாடிகளாயும் ஒழிவர் என்க. எண்குணங்களாவன, சருவஞ்ஞத்துவம், திருத்தி, அகாதிபோதம், சுவதந்திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேதகம் என்பனவாம். திருத்தி எனினும் பூர்த்தி எனினும் ஒக்கும். அகாதிபோதம் அகாதிமுத்தத்துவம் எனவும் வழங்கப்படும். இவையே இறைவற்குச் சிவத்துவம் எனப்படும் எண்குணமாமாறு ''சருவஞ்ஞதர'' என்பதை முதலாக உடைய சருவஞ்ஞாஞானந்தாகம வசனத்தான் அறிக. இவ்வெண்குணங்களுள், நிராமயான்மாவை அகாதிபோதத்தினும், விசுத்தசேதகத்தினை அலுத்தசத்தியினும் அடக்கி அறுகுணங்களாகவும் ஓதுப. இவ்வறுகுணங்கள் சத்து சித்து ஆனந்தம் என மூன்றுய்அடங்குமாறும் ஓர்ந்து உணர்க.

பரப்பிரமத்தை மலம் பந்தியாதெனல்.

இனி, நின்மலமான பரப்பிரமப்பொருள் அவிச்சையாற் கட்டுண்டு சீவன்மா என நின்று, ''பிரமாகம்'' பாவனை பேணி, முத்தியும் பிரமமாம் எனின், நின்மலமான பிரமப்பொருளை அவிச்சையான மலங் கட்டுறுத்தமாட்டாது. கட்டுறுத்தும் எனின், நின்மல பரப்பிரமப் பொருளாமாறு இல்லை. அன்றியும் சீவற்கு விடுபேறு உளதாயவழியும் அஃது அதனைக் கட்டுறுத்தும் எனப்பட்டு வீடுபேறு என்பது போலியாய் முடியும் என்க.

அற்றேல், நிராலம்பந்த சருவசாரம் முதலிய ஒருசார் உபநிடதங்கள் அங்ஙனம் ஓதியவாறு எவ்வா? எனின், சுவேதாசுவதரம் முதலிய சைவோபநிடதங்கள் சிவன்மாப் பிரமம் போல அகாதித்தியப்பொருள் என்றும், அப்பிரமக் தனக்கு அந்தரியாமியாயும் வியாபியாயும் நின்று உபகரிக்க அகாதிமல விசேடக்கிடாகப் பிறப்பு இறப்பு உற்று விசேப்போகம் புசிக்கும் முறையின் மலபரிபாகம் எய்திப் பசுசிவன் திருவருளுடன் கூட்டி நீங்கி முற்றறிவுமெய்தி மெய்யுணர்ந்து மலவாசனையும் நீங்கிச் சிவபரப்பிரமப் பொருளோடு அத்துவிதமாய் நின்று முடிவு காண்கில்லாப் பேரின்பத்தினை நுகராகிற்கும் என்றும், எடுத்து ஒருதலைப்படுத்து ஓதுதலின், நிராலம்பந்த சருவசாரம் முதலிய உபநிடதங்களில் பிரம சத்தத்தால் எடுத்து ஓதப்பட்ட சித்தும், பாசித்தான பரப்பிரமம் அன்று. அபாசித்தான ஆன்மாவே அவிச்சையாற் பக்குமுற்றுச் சாதக முறையிற் பிரேமாபாசனை பேணிப் பிரமமாம் என்று அவ்வுபநிடதங்களால் அங்ஙனம் ஓதப்பட்டது. இங்ஙனமாகலின், அவ் வுபநிடதங்களுஞ் சைவாகமங்களுந் தாணிடவேதங்களுந் தம்முள் அறுதற்று நடப்பன அன்றி முரணுற்றுக் கிடப்பன அல்ல என்று நுண்ணுணர்வால் தேர்ந்து உணர்ந்து கொள்க.

ஆன்மாவை உபசாரத்தால் பிரமசத்தத்தால் ஓதல் அமையும் எனல்.

அற்றேல், அஃதாக அபரசித்தான ஆன்மாவைப் பரசித்தினுக்கு உரிய பிரமசத்தத்தால் அவை எடுத்து ஓதுதல் சாலுமோ எனின், பரசித்தான பரப்பிரமம் அபரசித்தான ஆன்மாவுக்கு அந்தரியாமியாய் அதுமேவ தானும் நின்று உபகரித்தலின், அவ்வொற்றுமை பற்றிப் பரப்பிரம நாமத்தாற் சீவான்மாவை அங்ஙனம் அவை உபசரித்து வழங்கினவாகலின், அது சால்பேயாம் என்க. கீதாசாரியனுகிய கண்ணன் பரப்பிரமமான சிவன் அருட்பெற்றியைச் சிவோகம்பாவனை ஒற்றுமைபற்றி "நானே சடசித்தெல்லாம் ஆனேன்"என்று தன்பெற்றியாகக் கொண்டு கூறியதூஉம் இதற்குச் சான்றும் என்க.

உடல்பொருளாவிகள் சிவனுடைமை.

இனி, உடல் பொருள் ஆவி மூன்றும் ஞானதீக்கையின் முதல்வனுக்கு எனத் தானஞ்செய்து அளித்தலான் முன்செயற்கையால் தன்னுடைமையாய் நின்ற இம்மூன்றுந் தானஞ் செய்த பின்னர்த் தனக்கு இன்றிச் சிவனுக்கு உடைமையாயவாறு பெற்றும். பெறுமேல, ஆண்டுப் பொருள் என்றது உடம்பு போல் ஒற்றுமை உடைத்தாய்த் தன்னுல் நுகரக் கிடந்த உடல்வினையே அன்றி முன்பே தன்னுல் துறக்கப்பட்டு ஒழிந்த புறப்பொருள் அன்று என்பது தாமே போதருதலானும், அவ்வாறன்றி ஆண்டுப் பொருள் என்றது எல்லாவற்றிற்கும் பொது எனக் கொள்ளினும் உடல்வினையும் அவற்றுள் அடங்குதலானும் அங்ஙனம் முதல்வனுக்கென்று ஈந்த உடல்வினையை மீளவுந் தான் நுகரக் கருதுமேனும் அவ்வாறு தானஞ்செய்து அளித்த ஆன்மாவை மீளவுஞ் சுதந்திரனுகக் கருதுஞ் சிவசமமாநியோடி ஒப்பவனும் ஆகலின் முதல்வனுக்கென்று அளித்த பொருளைத் தான் நுகரக் கருதுதல் பெரிய தோர் இழுக்காதல் அறிக.

இன்னுந் தன் உடம்பே தனக்கின்றி முதல்வனுக்கு உடைமையாக ஈந்த வழி அவ்வுடம்பு இடமாக வரும் வினைப்பயனைத் தான் நுகர்தற்கு ஓரியைபின்மை அறிக. இன்னுந் தானே தனக்குச் சுதந்திரமின்றிச் சிவனுக்கு உடைமையாயவழித் தான் மற்றொன்றனை நுகருமாறு யாண்டையது என்க. தன்னுல் அளிக்கப்பட்ட பொருள்•மூன்றும் முதல்வன் ஏன்றுகொண்டான் என்பது *"அன்றே யென்ற ஞவியும்" எனவும், †"உடலிடங் கொண்டா யினியுன்னை" எனவும், ‡"உடலிடங் கொண்டா யானிதற்கு" எனவும், ¶"என்றவுடற்கன்ம" எனவும், § "என்றவுடற் பழவினைகள்" எனவும், o "என்றவினை" எனவும், "என்றுகொண்டா யென்னை" எனவும், **"நாமொழிந்து சிவமான" எனவும் ஓதியவாற்றுன் அறிக.

---

* திருவாசகம், குழைத்தபத்து. எ. † மேற்படி, கோயிற்றிருப்பதிகம். கூ. குறையிலா. ‡ மேற்படி. க0. தந்ததன்றன்னை. ¶ சிற்றம்பலநாடிகள், சாத்திரக்கொத்து. வெண்பா. கூஉ. § சிவப்பிரகாசம், உண்மை. க0. சூ. க0. எல்லையில். o திருவருட்பயன், அணைந்தோர்தன்மை. அ. ** திருவாசகம், திருத்தெள்ளேணம். ச. அவமாய.

மாயாவாதிமதமறுதலை.

இனி, ஏகான்மவாதிகளுள் ஒருசாராரான மாயாவாதிகள், மாயையாவது மெய்ப்பொருள் என்றுஞ் சொல்லப்படாது, பொய்ப்பொருள் என்றுஞ் சொல்லப்படாது, அநிருவசனமாய் நிற்பது ஒன்று எனவும், அற்றுகலினன்றே மாயை எனப் பெயர் பெற்றது எனவும், அத்தன்மைத்தாகிய மாயையிற் சித்தாகிய பரப்பிரமங் கண்ணுடியின் நிழல்போல அத்தியாசமாய்த் தோன்றும் எனவும், அங்ஙனந் தோன்றியவழிப் பேய்த்தேர் நீராகவுங் கயிறு பாம்பாகவுந் திரிவுகாட்சியாற் காணப்படுமாறுபோல அத்தோற்றம் மண் புனல் அனல் கால் முதலிய பிரபஞ்சமாய்க் காணப்படும் எனவும், இங்ஙனமாகலிற் சித்தினுடைய விவர்த்தனமே சகம் எனவுங் கூறுவர்.

மெய்ப்பொருளும் அன்றிப் பொய்ப்பொருளும் அன்றி நிற்பது ஒன்று உண்டு என்று எடுத்துக் காட்டுதற்கு ஒரு பொருள் இன்மையின், வழியளவைக்கு ஏலாமையான், வழி அளவைக்கு ஏலாது ஆகமே உரை அளவைக்கும் ஏலாதாகலானும், பேய்த்தேரிற் றோன்றும் நீர் மாத்திரையே அசத்தியமாவதன்றி உள்பொருளாய்த் தோன்றுவதாகிய பேய்த்தேர் அநிருவசனம் ஆகாமையின் அஃது ஆண்டைக்கு எடுத்துக் காட்டாதல் செல்லாமையானும், மாயை அநிருவசனம் என்பது ஒரு சமயத்தார்க்குங் கொள்கை அன்மையானும், அஃது ஒன்றுக வைத்து மறுக்கற்பாற் றன்று என்று ஒழிக.

அல்லதூஉம், விவர்த்தனவாதிகள் ஒன்று பிறிதொன்றுபோலத் தோன்றுதல் விவர்த்தனம் என்பர். அஃது அசத்தியமேயாம். பிரபஞ்சஞ் சத்தியம் என்பது காட்சி முதலிய எல்லா அளவைகளானுந் துணியப்படுதலின், அத்தன்மைத்தாகிய பிரபஞ்சஞ் சித்தினுடைய விவர்த்தனமாறு யாண்டையது என்க. இதனானும் மாயை அநிருவசனம் அன்று என்பது தெற்றென உணர்க. என்னை? மாயை அநிருவசனமாயின், அதன் காரியமாகிய பிரபஞ்சஞ் சூனியமாதல் வேண்டும் ஆகலான் என்பது.

அற்றேல், பிரபஞ்சஞ் சத்தியம் என்றற்குப் பிரமாணம் என்னை? காட்சியே பிரமாணம் எனின்,—அற்றன்று; காட்சியானே நிகழ்காலத்துப் பிரபஞ்சஞ் சத்தியம் என்று உணரப்படுமாயினும் முக்காலத்தினும் ஒருதன்மைத்தாகிய சத்தியப்பொருள் பிரபஞ்சம் என்பது அதனால் உணரப்படாமையின். அன்றியுங் காட்சியளவையான் இது குடம் இஃது ஆடை என விதி முகத்தாற் காணப்படுவதன்றி, இஃது ஆடை அன்று இது குடம் அன்று என மறுதலைமுகத்தாற் காணப்படாமையின், அன்மையாதல் உணர்ந்தன்றிப் பேதந் தோன்றுமையின், பேதப் பிரபஞ்சம் உண்மைக்குக் காட்சியளவை பிரமாணம் அன்று.

அற்றேல், ஆடை குடத்தின் வேறு குடம் ஆடையின் வேறு என்னுங் காட்சி எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலிற் பேதப் பிரபஞ்ச உண்மைக்குக் காட்சியளவை பிரமாணம் அன்று என்றல் பொருந்தாது எனின்,—அற்றன்று; அத்தன்மைத்தாகிய காட்சி சவிகற்பமாகலின், சவிகற்பமெல்லாம் மயக்கமாகலான் என்க. பேதப் பிரபஞ்ச உண்மைக்குக் காட்சியளவை பிரமா

ணம் இன்மையே, அவிஞ்ஞாபகமாகிய ஏது உணர்தற்கு இடமின்மையின், வழியளவை பிரமாணம் அன்று. அவ்விரண்டிற்கும் மாறுபாடாகிய பொருளின் ஆகம அளவையும் பிரமாணம் ஆகாது என்க.

இன்னும், இஃது இதனின் வேறு என்னுஞ் சவிகற்பக்காட்சி பிரமாணம் என்பார்க்கும் அபேத உணர்வு நிகழ்ந்தன்றிப் பேத உணர்ச்சி நிகழாது; எய்தியதற்கன்றி விலக்கின்மையின். அங்ஙனமாகவே, முற்படத் தோன்றும் அபேத உணர்ச்சி பிரமாணம் என்பது ஒருதலையாகக் கோடல் வேண்டும். வேண்டவே, பிற்படத் தோன்றும் பேத உணர்ச்சி அதனை அவாய்நிற்றலின் பிரமாண மாகாமை அறிக. அபேத உணர்ச்சி காட்சியளவையானே பெறப்படுதலின் குடம் ஆடையின் வேறன்று, திரவியமாகலால்; ஆடைபோலும். என்னும் அனுமானமும், வேற்றுமை இன்றிக் கூறும் வேதவாக்கியங்களும், அதற்குப் பிரமாணமாம் என்க. ஆகவே, வான் வளி தீ நீர் முதலியனவாக வேற்றுமைபடக் கூறும் வாக்கியங்கள் எல்லாம் இவ்வளவைகளோடு முரணுதலின், உபசாரமே அன்றிப் பொருள்படா என்பது கண்டுகொள்க.

இங்ஙனம் பேத உணர்ச்சிக்குப் பிரமாணம் இன்மையிற் பேதப் பிரபஞ்சமாகிய பிரமேயம் இன்மையுந் தானே போதரும். அவ்விரண்டும் உள எனக் கொள்ளினும், பிரமிதிக்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்தம் என்னை? தாதான்மியமோ? காரணகாரியத்தன்மையோ? சகசியோகமோ? சமவாயமோ? வேறெ ன்றே? எனக் கடாயினர்க்குத், தாதான்மியமாவது ஒன்றுதானே ஒருவாற்றான் இருவகைப்பட்டுப் பிரிப்பின்றி நிற்றற்கு உரித்தாதல் ஆகலின், அத்தன்மைத்தாகிய தாதான்மிய சம்பந்தங் குடஞானத்திற்குங் குடத்திற்கும் உண்டு எனின்,—குடஞானம் போலக் குடமும் அகத்தின்கண் உளதாதல் வேண்டும். குடம் புறத்தின்கண்ணதாகலுங் குடஞானம் அகத்தின்கண்ணதாதலும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், அவற்றிற்குத் தாதான்மியங் கூறல் பொருந்தாமையானும், காரண காரியத் தன்மையே சம்பந்தம் எனின்,—காரணகாரியங்களில் ஒன்று உள்வழி ஒன்று இன்றுதல் பொருந்தாமையின், கனவின்கட் குடஞானம் முதலிய உணர்வு உண்மையின், குடம் முதலியனவும் ஆண்டு உளவாதல் வேண்டும். அஃது இன்மையானும், விடயமும் விடயிப்பதுமாந் தன்மை சம்பந்தம் எனின்,—விடயமாவது இது என்று அறியவாராமையானும், சம்பந்தமே பெறப்படாமையின், பேதப் பிரபஞ்சம் பிரமிதிக்குப் புலனுகாமையானும், பிரபஞ்சம் அசத்தியப் பொருளே ஆகலான், அவற்றிற்குக் காரணமாகிய மாயை அநிருவசனம் என்றல் பொருத்தமுடைத்து என்று, இங்ஙனம் மாயாவாதிகள் கடாவிடைகளாற் சாதிப்பார் ஆகலின், ஆண்டு இழுக்கு என்னை? எனின்,—கூறுதும்.

பிரபஞ்சஞ் சத்தியப்பொருள் என்பதற்குக் காட்சியளவையே பிரமாணமாம். கயிற்றை அரவு எனக் காணுந் திரிவுகாட்சியிற் போல மாசறுகாட்சியின் வேறுபடுதல் இன்மையின், நிகழ்காலத்திற் கண்டது முக்காலத்தினும் ஒக்கும் ஆகலானும், நிருவிகற்பக் காட்சியின் விதிமுகத்தாற் பேதம் அறியப்படாதாயினுங் குற்றியோ மகனே என்னும் ஈயத்தின் பின்னர் இது குற்றியே மகனன்று என எதிர்மறைமுகத்தாற் பேத உணர்வு காட்சிக்குப் புல

ப்படுதலானும், திரிவுகாட்சியிற் கயிறு பாம்பு போலவும் மாலை போலவும் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு காலத்தில் தோன்றும்; அதுபோலன்றி மாசறு காட்சியின் எல்லார்க்கும் எக்காலத்துங் குடங் குடமேயாய்த் தோன்றுவதல் லது வேறுபடத் தோன்றுமையிற் சவிகற்பக் காட்சி பிரமாணமே ஆகலானும், அன்றியுங் கயிற்றுக்கும் அரவிற்குங் கோணி நீண்டு கிடத்தல் முதலிய இலக் கண ஒப்புமையான் ஆண்டு ஒன்றை ஒன்றுகத் திரியக் காண்டல் பொருந்தும்; அதுபோலச், சித்தாகிய பிரமத்தைக் குடம் முதலிய பொருளாகத் திரியக்கா ண்டற்குத் தம்முள் ஒப்புமை இன்மையின் அதனையும் அவ்வாறு திரிவுகாட்சி என்றல் பொருந்தாமையானும், சவிகற்பக் காட்சிக்கும் நிருவிகற்பக் காட்சி காரணமாகலிற் காரணத்து உள்ளதே காரியத்தினும் உண்மையாற் பெயர் சாதி குணம் முதலிய பேத உணர்ச்சி நிருவிகற்பக் காட்சியின் இன்றியில் சவிகற்பக்காட்சியினும் இன்றாய் முடியுமாகலின், நிருவிகற்பக் காட்சியினுஞ் சூக்குமமாய்ப் பேதந் தோன்றும் ஆகலானும், அதுபற்றி எய்தியதற்கே வில க்காகலின் பேதம் உணர்ந்தன்றிப் பேதமின்மை உணர்தல் கூடாமையின் அபேத ஞானமும் பேத ஞானத்தை அவாவி நிற்றலின், அபேத ஞானம் முற் படத் தோன்றுதல் பற்றிப் பிரமாணம் என்றல் பொருந்தாமையானும், ஆடை குடத்திற்கு வேறு என்றற்றொடக்கத்துப் பேத உணர்ச்சி முக்காலத்தினும் வேறுபடாமையின், ஆடை குடந்தின் வேறன்று என்றற்றொடக்கத்து அபேத உணர்ச்சி எதிர்காலத்தின் மீறுபடுதலின், வேறுபடாமையும் வேறு படுதலும் பற்றியே பிரமாணம் என்றும் அப்பிரமாணம் என்றுங் கோடல் பொருத்தமுடைத்து ஆகலானும், காட்சியளவையே பேத உணர்ச்சிக்குப் பிரமாணமாதல் அறிக. ஆகவே, அபேதஞ் சாதித்தற்கு முற்கூறிய அனுமா னமும் போலியாயவாறு காண்க. அங்ஙனம் அல்லாக்கால், அவ்வனுமானத்தா னே ஆடை எடுக்கச் சென்றான் குடத்தை எடுத்து வருதல் வேண்டும் என்று ஒழிக. இதனானே அபேதங் கூறும் ஆகமங்களும் உபசாரம் என்பது கண்டு கொள்க.

இன்னும்,பிரபஞ்சம் மித்தை எனத் துணிவதற்குக் கொண்ட பிரமாணம் மெய்யோ? பொய்யோ? எனக் கடாயினார்க்கு மெய் எனிற் பிரபஞ்சத்துட் பட்ட பிரமாணம் மெய் எனவே அம்முறையாற் பிரபஞ்சமும் மெய்யேயாம். பொய் எனிற் பொய் பிரமாணம் ஆகாமையிற் பிரபஞ்சம் மெய்ப்பொருள் என்பது தானே போதரும்.

அற்றேல், பிரமத்திற்கும் பிரமேயத்திற்குஞ் சம்பந்தம் என்னை? எனின்,– அறியப்படுவதும் அறிவதும் ஆகிய விடய விடயித் தன்மையே சம்பந்தமென் றறிக. விடயவிடயித்தன்மை சம்பந்தமன்று என்பையாயின், நீ பிரப ஞ்சம் மித்தை என்று உணரும் உணர்விற்கு அது விடயமாகாமையிற் பிரபஞ் சம் மித்தை அன்று எனப்பட்டு உனக்கே வழுவாம் என்று ஒழிக.

அற்றேல், விடயமாவது யாது? எனின்,—எவ்வுணர்வு நிகழ்ந்துழி எப் பொருள் விளங்கும் அஃது அதற்கு விடயம் என்க. விளங்குதல் விளங்குத றற்கு உரிமையாதல். ஆகவே, இங்ஙனங் கூறியவாற்றுல் பிரமாணமுஞ் சம்பந்த

மும் உண்மையின் பிரமேயமாகிய பிரபஞ்சம் மெய்ப்பொருளே ஆகலான் அதற்கு முதற்காரணமாகிய மாயையும் மெய்ப்பொருளாவதன்றி அநிருவசனமாதல் பொருந்தாமை அறிக.

இனி, வேதத்துள் ஓரிடத்தும் பிரமப்பொருளே "உபாதானம்" என்னுஞ் சொல்லால் எடுத்தோதாதக் காணுமையால், பிரமம் பிரபஞ்சத்திற்குப் பரமாதார வியாபக நிமித்தம் என்பதே வேதத்துக்கும் கருத்தாம் என்க. இன்னும், அவ்வம் முதற்காரணங்களின் குணமெல்லாம் அவ்வக்காரியங்கட்கும் உள என்பது நியமமாதலின், சித்தாகிய பிரமத்தில் தோன்றிய பிரபஞ்சமும் சித்தாதல் வேண்டும் அன்றிச் சடமாதல் பொருந்தாது என்க.

அற்றேல், பாலில் உண்டாகிய தயிருக்குப் பாலின் குணமும் நெல்லில் உண்டாகிய பதர் பலாலங்கட்கு நெல்லின் குணமும் கொம்பில் உண்டாகிய புல்லுக்குக் கொம்பின் குணமும் சிலம்பியில் உண்டாகிய நூலுக்குச் சிலம்பியின் குணமுங் காணுமையின், காரணத்தின் குணமே காரியத்திற்குங் கோடும் என்னும் நியமம் பொருந்தாதால் எனின்,—அற்றன்று; ஒன்றன் குணம் ஒன்றற்காதல் இன்மையின், காரணத்தின் குணமே காரியத்திற்கும் என்பதற்குத் தாற்பரியம், காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே காரியத்திற்கு உளவாதல் அன்றி அவற்றிற்கு மறுதலையான குணங்கள் உளவாகா என்பதேயாம் ஆகலான், ஈண்டு எடுத்துக்காட்டியவற்றுள் நியமத்துக்கு இழுக்கின்மை அறிக. சிலம்பியில் நூல் வருதற்குச் சூக்கும காரணஞ் சிலம்பி வயிற்றின் உண்மையானுங் கோமயத்தில் தோன்றியது தேளின் உடம்பே ஆகலானும், இன்னோரன்னவை எல்லாம் பிறவிப்பேதம் ஆகலானும், ஆண்டு ஐயப்பாடின்மைகண்டு கொள்க.

ஈண்டுக் கூறியவாற்றான் மாயையே பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் என்பதூஉம், அதற்குத் தாரகமாய் விளங்கின்று அதிட்டித்தலான் முதல்வன் நிமித்தகாரணமே ஆவன் என்பதூஉம் துணிபொருளாயினமை காண்க. "மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனுய் நின்று முதல்வனும் முதற்காரணமாம்" என்ற நீலகண்ட ஆசிரியரும் பார்த்து சென்று முடிவின்கண் இவ்வாறு கோடலே சித்தாந்தமாக வலியுறுத்தினர். அது, சென்மாதிகரணத்து இறுதியிற் சிவாதித்தியமணிதீபிகையினுங் காண்க.

அற்றேல், "பிரமத்தை உணர்ந்தோன் எல்லாம் உணர்ந்தோன்" என்றற் றொடக்கத்து வேதவசனங்கள் பயப்பாடிலவாம் எனின்,—உடையான் இயல்பு உணர்ந்தவழி, உடைப்பொருளான உயிர் மாயை கன்மங்களும் அவ்விலக்கணத்துள் அகப்பட்டு வியாப்பியமாய் நிற்றலின், அவையும் இனிது விளங்கும் என்பது அவற்றிற்குப் பொருளாதலின், பயப்பாடுடையனவேயாம் என்க.

ஞானமணிமாலையில், *"துரையுந் திசையு நொய்யுறு கொட்பும்—வரையில் சீகர வாரியுங் குரைகடற்—பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி—

* பதினெராந்திருமுறை, தோயுமன்மணிமாலை. உசை. ஆனைப். உசு முதல் கூகம் அடி வரை.

****

யெண்ணில வாகி யிருங்கட லடங்குந்—தன்மை போலச் சராசர மீனத்து—நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" என்றது, முதல்வன் மாயைக்கு ஆதாரமாய் நிற்றல்பற்றி ஆகலின், ஆண்டு ஐயப்பாடின்மை அறிக. இது கிழங்கினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கசம்என்பதுபோல்வதோர் உபசாரவழக்கு எனக் கொள்க. மாயைக்குத் தாரகமாய் நிற்றல் பற்றியே அவ்வாறு உரைத்தது என்பது உணர்ந்துகோடற்கே, நீரிற்றோன்றி ஓடுங்கும் நுரைமுதலியவற்றை நீர்க்கு இடனுகிய கடலில் தோன்றி ஓடுங்குதல்போல் என்று உவமை கூறினர் என்க. கடல் என்றது - நீர்க்கு இடங்கொடுத்து நிற்கும் ஆகாயம். நின்றதிருத்தாண்டகத்தும் பிரமபுரம் *"இருநிலனுய்த் தீயாகி ** எம்மடிக ணின்ற வாறே" என்பது முதலாகவுழுந்த தமிழ்வேதத் திருவாக்குக்களும், †"அறிவானுந் தானே யறிவிப்பான் றானே—யறிவா யறிகின்றான் றானே–யறிகின்ற மெய்ப்பொருளுந் தானே விரிபொழில்பா ராகாய—மப்பொருளுந் தானே யவன்" என்னும் அம்மை திருவாக்கும், ‡"உலகெலா மாகி வேறு யுடனுமாய்" முதல்வன் நிற்றல்பற்றி ஆகலின், ஆண்டு ஆசங்கை இன்மையுங் கண்டுகொள்க. இதனானே, அபேதங்கூறும் வசனங்களும் உபசாரமே அன்றி உண்மையன்று என்பது கண்டுகொள்க.

இவ்வாறன்றி, முதல்வன் மாயைபோல முதற்காரணமாவன் எனின்,—அது மேற்கூறிய குற்றங்கட்கு இடனுதல் அன்றியும் "நிருவிகாரி" என்னுஞ் சுருதிகளோடு முரணுதலும் உடைத்து என்க. இங்ஙனங் கூறியவாற்றால், ¶"காரிய கார ணங்கண் முதலுணை நிமித்தங் கண்டாம்—பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத லுணைநி மித்தந்—தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக—வாரியன் குலால னுய்கின் றுக்குவ னகில மெல்லாம்" என்னும் அத்துவித சைவசித்தாந்த வழக்கே சுருதி யுத்தி அனுபவம் மூன்றற்கும் பற்றதாய் அகரமுதல என்னுந் திருக்குறட் பொருளை வலியுறுத்தற்கு உரிய மெய்ப்பிரசங்கமாம் என்று அறிந்து கொள்க.

அற்றேறல், அஃது அங்ஙனமாக; நிமித்தகாரணனுகிய முதல்வன் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாவனுயின், உவமப்பொருளாகிய குயவனும் மண்ணுக்கு ஆதாரமாதல் வேண்டுமால் எனின்,—அறியாது கடாயினுய். உவமமெல்லாம் ஒருபுடை ஒத்தலே அன்றி முழுவதும் ஒத்தல் இன்று. முழுவதும் ஒக்கும் என்பாரை முதல்வனுக்கு உரிய வியாபகம் முதலிய குணங்களுங் குயவனுக்கும் உளவாதல் வேண்டும் எனக் கடாயினார்க்கு விடை என்னை எனக் கூறி மறுக்க. ஒருபுடை ஒத்தலானன்றே ஒருபொருளுக்கு ஒரோவியல்பு பற்றி, வேறு வேறு உவமை கூறியதூஉம் என்க.

அற்றேறல், இவ்வியல்பிற்கு உவமை யாதோ எனின்,— நன்றே கடாயினுய். குழவி உடம்பின் முதற்காரணமாகிய உதிர சுக்கிலங்களுக்கு ஆதாரம் அதற்கு நிமித்தகாரணமாகிய தாய் தந்தை ஆதலுஞ் சிலம்பிநூலின் முதற்கா

* திருநாவுக்கரசுநாயனுர், திருத்தாண்டகம், பொது. சுஉ திருமுறை. க. † பதினொராந்திருமுறை, அற்புதத்திருவந்தாதி. உ0. ‡ சிவஞானசித்தி. உ–ம் சூ. க. ¶ மேற்படி. க–ம் சூ. கஅ.

ரணத்துக்கு ஆதாரம் அதற்கு நிமித்தகாரணமாகிய சிலம்பி ஆதலும் அறிந்தா யன்றே! இவ்வாறு பலவுள எனக் கொள்க. பிரம*விவர்த்தன அசேத வாத நிராகரணம் ஆசிரியர் சிவஞானயோகிகள், சிவஞான மாபாடியத்து விரித்துரை த்தருளினர்.

ஆதிபகவனுகிய முதல்வன் எள்ளின் நெய்போலப் பசு பாசங்களிற் கல ந்து நீக்கமற ஒளபச்சிலேடிக வியாபகமாய் நிற்கும் இயல்பினனுதலின், அவன் பிரபஞ்ச காரியம் இயற்றுது இயற்றுதற்குக் குலாலனே அங்ஙனம் உவமையா கக் கூறுதல் கருத்தாவாதன் மாத்திரைக்கே அன்றி வேறில்லை என்பது தெரி ந்துகொள்க. இயற்றுது இயற்றுதலாவது - கரணத்தான் அன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்தலாம். மற்றுக் குலாலன் சங்கற்பத்தான் அன்றிக் கரண த்தாற் காரியஞ் செய்யும் விஞ்ஞமுதல் ஆகலின் சங்கற்பத்தாற் காரியஞ் செய் யும் ஆதிபகவனுக்குக் கருத்தாமுறையினுஞ் சிறிது ஒப்புப்பற்றியே உவமம் ஆகின்றனென்று உணர்க. ஈண்டுச் சங்கற்பம் என்றது—வியாபக சிற்சத்தி சன்னிதிப் பிரேரகத்தினே. கர்த்திருத்துவம் அங்ஙனம் இருவகையாமாறு கதஸ்ருக்வ ஜிவியம விவ்ரு ஷ்ணு ஸ்ருஷ்டி கரணா தவி| நஹி வ்ருக்ஷஸ்ய தெண கரமிஷ்ஞ கிரயதெ வடஃ|ஸிவ ஷ்ணு ஸ்ரோதெண ஜிஹ்ரு ஷெஷாஹகரு ஷ்ஷரா| என்னும் பௌட்கராகம வசனத்தான் அறிக.

இறைவன் எள்ளின் நெய்போலப் பசு பாசங்களிற் கலந்து நீக்கமற ஒளபச்சிலேடிக வியாபகமாய் நிறைந்து நிற்கும் என்னும் அத்துவித சைவ சித்தாந்த நிருவசன உரையை, இக்காலத்து ஏகான்மவாதிகளுள் ஒருசாராரு ட்பட்டார் எள்ளில் நெய் கோது இடையுற்றுப் பிரிந்திருக்கக் காண்டலின், உவமேயமாம் முதல்வனும் ஒன்றன் இடையீடுற்றுப் பிரிந்து வியாபகமா குங்கொல் என்று ஆசங்கை நிகழ்த்துவர். ஒரு பொருட்கு ஒரு பொருள் உவ மமாதல் ஒருபுடையொத்தல் பற்றியே என்பது மேற்கூறினும் ஆகலின், அங் ஙனம் ஆசங்கித்தல் உவமை இலக்கணம் அறியார் கூற்றேயாம் என்று ஒழிக.

பசு பாசங்களில் முதல்வன் கலந்து நீக்கமற வியாபகமாய் நிற்றற்கு எள் ளில் நெய்யை உவமானமாகக் கூறுவது, நெய் எள்ளில் உள்ளும் புறம்புமாய்க் கலந்திருத்தல் பற்றியே அன்றிப் பிறிதில்லை என்க. இங்ஙனம் ஆசங்கிப்பார் ஆவிரம்பூப் பொன்னோடு ஒக்கும் என்றவழி அஃது உருக்கி அடித்து நீட்ட வும்படுங்கொல் எனவும், இவள் நுதல் பிறைமதிபோலும் என்றவழிக் குறைத லும் வளர்தலும்வாலுறியங்குதலும் என்னும் இவையும் இவள் நுதற்கு உள் கொல் எனவும் ஆசங்கிப்பார் ஆகலின், அவை அவர் வெள்ளறிவு வியாபா மாம் என்று ஒழிக்கப்படுவன அல்லது மறுத்தற்கு ஏற்பன அல்ல என்று அறிக. ஈண்டுக் குறைதல் மறைதலும் வளர்தல் வெளியாதலும் ஆம்.

இன்னும் அவர், பசு பாசங்கள் மெய்ப்பொருள் என்பார் முதல்வன் வியாபகத்துக்கு நானதை கூறுபவர் ஆவர். யாதினுல் எனின்,—பசு பாசங் கள் உள்ள இடங்களில் முதல்வன் இருப்பு இடையறவுற்று அவன் வியாபகங்

* விவர்த்தனம் - மாறுபடக்காண்டல்.

குறைவுறுதலால் என்று இங்ஙனம் ஆசங்கை நிகழ்த்தாநிற்பர். இன்னோன்ன ஆசங்கைகளை அவர் பிராகிருத அவயவ கண்டப் பொருட் பயிற்சியினன் நிகழ்த்துகின்றார். என்னை? அவயவமுடைய கண்டப்பொருள் அன்றி நிரவயவ அகண்ட சச்சிதானந்தப் பொருள் மற்றொன்றன் இடையறவற்றுக் குறைவுறுது ஆதலான் என்க. ஆதிபகவனுகிய இறைவன் நிரவயவ அகண்ட சச்சிதானந்த முதற்பொருள் ஆகலின், அவன் அநாதியே தன்போல் நித்தியமாய்த் தனக்கு வியாப்பியமான சிதசித்துக்களில் யாண்டுங் கலந்து நீக்கமறத் தன் பூரணத்திற்கு ஞானதை யாதும் இன்றி அவையேயதானும் நிற்கும் பெற்றியுடையனும் என்க.

இனி, அப்பெற்றி உயிர்களால் இற்றென அறியவும் ஓதவும் வாராத சொரூபமாம். அற்றுகலினன்றே, சுருதிகளும் அவன் சொரூப இயல்பு "வாங்மனஸ கோசரம்" என்றும் *"அநிர்த்தேசியம்" என்றும் அங்ஙனம் எடுத்து முறையிட்டு ஓய்ந்தன என்பது. †"மாற்றமனங் கழிய நின்ற மறையோனே" என்னுந் தமிழ்வேதமும் அக்கருத்தே பற்றி எழுந்தது. வளி தீ நீர் நிலம் என ஒன்றற்கொன்று தூலமாகி கிடைபெறும் பூதங்கள் தான்கிற்குஞ் சூக்குமபூதமான ஆகாயம் இடங்கொடுத்து வியாபகமாய் நிற்கும் பெற்றியே மக்கட்கு உற்றறிதற்கிதாயதுண்பொருளாம். ஆனபின், நிரவயவ அகண்ட சத்தாயுஞ் சித்தாயும் ஆனந்தமாயும் நிற்கும் பரப்பிரம முதற்பொருள் பசுபாசங்களுக்கு அந்தரியாமியாயும் வியாபியாயும் பூரணமுற்று நிற்குஞ் சொரூப இயல்பை, மாயாதனுகரணங்களாற் கட்டுற்று அவற்றின் உபகாரத்தானுஞ் சுத்தமாயா காத விருத்தி காரிய சத்த சமூகமான வேதமுதலிய கலையறிவு மின்மினி விளக்குத்தானுஞ் சிறிது அறிவு விளங்கி, அங்ஙனம் விளங்கிய சிற்றறிவு பாத்திரமாதலை, நாம் பிரமம் என்று தருக்கி, இறைவன் திருவருட்கு அயலாய்க் கேவலமுற்று உழலும் பசுபோதப் புல்லறிவாளர்கள், நாம் அறிந்தமென்று ஒருப்படுத்தனும், பசுபாசங்கள் மெய்ப்பொருளாயின் அவற்றின் இருப்பால் முதல்வன் வியாபகத்திற்கு இடையறவு முட்டுற்று நானைக புருடரும் என்று பாண்டித்தியம் போல அபிநயித்துக் குதர்க்கம் நிகழ்த்தனும், புல்லறிவு முதிர்ச்சியாதலல்லது மற்று யாதாம் என்க.

ஓசைவேறுபாடு.

மலர்தலை உலகத்துச் செயிப்புலனும் ஓசை எழுத்தோசை எனவும், இசையோசை எனவும் இருவகைப்படும். இவற்றுள், எழுத்தோசை விந்து முதற்காரணமாக அதனில் நின்றும் விருத்தியாய்த் தோன்றிச் செயிப்புலனாவது. இசையோசை ஆகாயம் முதற்காரணமாக அதன்கண் தோன்றிச் செயிப்புலனாவது. வடநூலார் எழுத்தோசையை வர்ணமென சுத்தம் என்றும், இசையோசையைத் தொனியாத்மக சுத்தம் என்றுங் கூறுப. சுத்தகன்மாத்திரையின் காரியமாகிய ஆகாயமே சுத்தத்திற்கெல்லாங் காரணமாகலின், எழுத்தோசைக்கு வேறு காரணமாமாறு என்னை? எனின், அற்றன்று; ஆகா

*அநிர்த்தேசியம் - சுட்டியறியப்படாதது. † திருவாசகம், சிவபுராணம். சரும்-ம் அடி..

யம் எழுத்தோசையைப் புலப்படுத்துவதாகிய இசையோசைக்குக் காரண மாவது அன்றி அதனாற் புலப்படுவதாகிய எழுத்தோசைக்குக் காரணமாகாது என்க.

ஒளியும் உருவமும் போலப் புலப்படுப்பதும் புலப்படுவதும் ஆகிய இசை யோசைக்கும் எழுத்தோசைக்குந் தம்முள் வேற்றுமை அனுபவத்தின் வெ ளிப்படத் தோன்றுதலானும், கடலோசை முதலாயின எழுத்தோசையின் வேறுதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது ஆகலானும், அவ்விரண்டன் காரண மும் வேறு என்பது துணியப்படும் என்க. இன்னும், அங்காப்பு முதலிய அக முயற்சியாற் புலப்படுவது எழுத்தோசை எனவும், அதனோப் புலப்படுப்பதாம் எடுத்தல் படுத்தல் முதலிய புறமுயற்சியாற் பிறப்பது இசையோசை எனவும், தம்முள் வேறுபாடு தெரிந்துணர்ந்துகொள்க.

ஞாபகசத்தியுணமை.

சத்தப்பிரபஞ்சம் அர்த்தப்பிரபஞ்சம் எனக் காரியம் இருவகைப்படும். இவை இரண்டுந் தம்முள் வேறுபாடுடைய வாயினும், சத்தம் என்னுஞ் சாதி யான் வேறுபாடு இன்மையானும், சத்தப்பிரபஞ்சம் அர்த்தப் பிரபஞ்சத் தைப் பற்றி அன்றி நில்லாமையானும், சத்தமாயை ஒன்றுதானே சத்தரூப மும் அர்த்தரூபமுமாகிய இரண்டுதன்மையும் உடைத்தாய் அவ்விரண்டற்கும் முதற்காரணமாம் எனக் கொள்ளப்படும்.

இனிச், சொற்பொருள் உணர்த்துதற்கு அனுகூலமாகும் ஞாபகசத்திக ளும் பொருள் காரியப்படுதற்கு உபகாரமாகுங் காரகசத்திகளும் அவ்விரண் டன்கண்ணுந் தானான்மியத்தால் உளவாதல் அருத்தாபத்தி அளவையாற் கொள்ளப்படும்.

அற்றேல், எழுத்தான் இயன்ற பதங்களாதல், பதங்களான் இயன்றுஅவா ய்நிலை தழுஇ அண்மைகளான் எழுவாய் பயனிலை முதலியவாய்த் தொடர்ந்து நிற்கும் வாக்கியங்களாதல் அவ்வப்பொருள்களே அறிவுறுக்கும் எனவே கோ டும்; அவ்வாறன்றி எழுத்தின் வேறுப்ப் பொருள்களே அறிவுறுக்குஞ் சத்திகள் உண்டி என்பதற்குப் பிரமாணம் இல்லையாலோவெனின், அற்றன்று; ''கால்'' என்புழிக் கர ஆகார லகர எழுத்துக்களேயன்றி அவற்றின் வேறுப்ப் பதமெ ன்பது ஒன்றின்மையானும், அவ்வாறே ''கால் கிடந்தது'' என்புழி அப்பதங் களின் வேறுப் வாக்கியம் ஒன்றின்மையானும், எழுத்தின் வேறுப்ப் பதவாக் கியங்கள் பொருள் உணர்த்துவன அல்ல என்பது பெறப்படும். படவே, கையாயிகர் மதம்பற்றிக் ககர ஆகார லகர எழுத்துக்களே அப்பொருள் உணர் த்துமெனக் கோடல் வேண்டும். அங்ஙனங் கொள்வுழி, அவை ஒருங்குகூடிப் பொருளுணர்த்துமோ? ஓரோவொன்றே பொருளுணர்த்துமோ? எனக் கடா யினுக்கு, ஓசை உணர்வு தொழில் மூன்றும் முக்கணப்பொழுதே நிகழெ றும் என்பது கையாயிகர் முதலியோர்க்கு உடம்பாடாகலின், முறையிற் பிற ந்து நின்று கெடும் எழுத்துக்கள் ஒருங்குகூடி நின்று பொருளுணர்த்தும் என் பது கூடாமையின், ஓரோவொன்றே பொருளுணர்த்துமெனல்வேண்டும்.

''க'' என்ற மாத்திரையானே ''கம்பலம்'' என்னும் பொருளுணர்த்தாமையா னும்,உணர்த்துமெனினுங் ககரம் ஒழிந்த வெழுத்துக்களே உச்சரித்தல் பயனி லவாய் முடியுமாகலானும், ஒன்றிரண்டே பொருளுணர்த்தும் என்பது 'பொரு ந்தாமையின், எழுத்துப் பதவாக்கியங்களின் வேறுபட்ப் பொருள் அறிவுறுப்ப னவாகிய ஞாபகசத்திகள் உண்டென்பது கண்டுகொள்க. சத்தி எனினும் போடம் எனினும் ஆற்றல் எனினும் பொருந்தும்.

இவ்வாற்றுற் சொல்லாற் புலப்பட்டுப் பொருளறிவுறுக்கும் ஞாபகசத்தி கள் சொற்றொறும் வெவ்வேறு உண்டெனவே கோடுமாயினும், ''ஆ'' ஆண்டு, என்றாற்போல்வன ஒன்றுப் நின்று வெவ்வேறு பொருளுணர்த்தக் காண்ட லின், ஒரு சொற்சத்தியானே ஒருபொருளன்றிப் பலபொருள் உணரப்படுத லும் உண்டாங்கொலெனின், அற்றன்று; ஆ ஆண்டு என்றாற் போல்வன வெவ் வேறு பொருள் உணர்த்துதலின், ஒருசொல் எனப்படா; வெவ்வேறு சொற் களேயாமென்க. இனி வெவ்வேறு சொற்களாயினும், எழுத்து ஒப்புமையா னே பலபொருளொருசொல் என்று அங்ஙனம் வழங்கப்பட்டன என்பது. இன்னும், ஆ என்பது பெற்றத்தினையும் மாவிசேடத்தினையும் உணர்த்தும்வ ழிப் பெயர்ச்சொல் எனவும், இரக்கக்குறிப்பினை உணர்த்தும்வழி இடைச் சொல் எனவும், ஆதற் புடைபெயர்ச்சியை உணர்த்தும்வழி உரிச்சொல் என வுங் கொள்ளப்படுதலின், எழுத்தொப்புமைபற்றியே உபசாரத்தான் அவ் வாறு வழங்கப்பட்டன என்பது தெற்றென உணர்க.

மாயைமுதற்காரணம்.

மா என்பது ஒடுங்குதல். யா என்பது வருதல் ஆகலின், எல்லாக்காரி யங்களுந் தன்பால் வந்து ஒடுங்குதற்குந் தன்கண் நின்று தோன்றுதற்குங்கா ரணமாய்நின்றது மாயை எனப்படும் ஆகலான், ஒன்றற்கொன்று நுண்மைநிற் செல்லுஞ் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாது அதனே மாயை என்றலே பொருத்த முடைமை அறிக.

இனி, முதல்வன் மாயைக்கு ஆதாரமாய் விரவி நிமித்தகாரணனாயினும், மாயையான் விசேடிக்கப்பட்டு விசிட்டனுப் முதற்காரணமும் ஆவன் எனச் சிவாத்துவிதசைவர் கூறுவர். அது பொருந்தாது. என்னை? தோன்றிநின்று அழியும் உடம்பொடு கூடியவழி விகாரப்படுதல்பற்றி உடம்பொடு விசிட்ட னுப் நின்ற சீவான்மாவுந் தோன்றி நின்று அழிவன் என்பது பொருந்தும்; அதுபோல, மாயையொடு விசிட்டனுப் முதல்வனும் முதற்காரணமாம் என்பா ர்க்கு, விசிட்டமாவது விசேடணமும் விசேடியமும் அவ்விரண்டினையும் என்னும் அவற்றின் வேறன்மையான் முதல்வனும் அவ்வாறு விகாரியாதல் வேண்டப்படும். படவே, ''நிருவிகாரி'' என்னுஞ் சுருதியொடு முரணுமாக லான் என்க. விசிட்டமாவது அம்மூன்றற்கும் வேறெனக் கொள்வார்க்கு, முதல்வன் முதற்காரணம் என்பதே பொருந்தாதாய் முடியுமென்று அறிக.

அல்லதூஉம், நிமித்தகாரணமே முதற்காரணமென்று எடுத்துக் காட்டு தற்கு ஒரு பொருள் இன்மையின் அது வழியனவைக்கு ஏலாமையானும்

வழியளவையினும் ஆகமளவை வலியுடைத்தெனின், அற்றுயினும், வழியளவை ஆகமவளவையொடு முரணுதாகலானும், ஓரோவழி முரணுமாயின், அது பற்றி யாண்டுந் துணிவு பெறுமையின், வழியளவை பிரமாணன்று எனப்பட்டு அதுபற்றி ஓதிய நிகமாகமவசனங்கள் பயனிலவாய் முடியுமாகலானும், நிகமாகமப் பொருள்கள் தம்முள் முரணுவன போலத் தோன்றியவழி அவற்றுள் வன்மை மென்மை உணர்ந்து பொருள் கோடற்கு வைத்ததே வழியளவையாகலான் அஃது அதனைத் முரணுதல் பொருத்தமின்மையானும் அது விடையன்மை அறிக.

இனி, இவ்விரண்டும் பொருந்தாமையானும், வேறுவிடுக்குமாறு இன்மையானும், மாயையே முதற்காரணம்; அதற்குத் காரகமாய் விரிந்து நின்று அதிட்டித்தலான் முதல்வனும் முதற்காரணமெனக் கோடல் வேண்டும். அங்ஙனங்கொள்ளின் விகாரியாதலின்மையான், முதல்வனும் முதற்காரணமாம் என்பது வாய்பாடுமாத்திரையே அன்றிப் பொருட்படாமையின், அஃது எமது அத்துவிதசித்தாந்தம் என்று ஓதிக.

சிவப்பிரகாசச்செய்யுளுரை.

"புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலவைக் களவாகிப் பொற்பணிபோ லீபதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநால் சொன்ன
வறத்திறஞல் விளைவதா யுடலுயிர்கண் ணருக்க
னறிவொளிபோற் பிரிவருமத் துவித மாருஞ்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்."

நூண்டுப் புறச்சமயத்தவர் என்றது, மூக்கூற்றுப் புறச்சமயத்தவர் எனக் கொள்க. அவரெல்லாஞ் சித்தாந்தசைவத்தோடு ஒப்ப *"ஏக னேக னிருள் கரும மாயைபிரண்டு" என்னும் ஆறுபதார்த்தங்களுங் கொள்ளாமையின், அவ்வாறுவகைப் பதார்த்தங்களின் இயல்பைக் கொளுத்தினுங் கொள்ளமாட்டார் என்பார், "புறச்சமயத் தவர்க்கிருளாய்" என்றார். சங்கற்பநிராகரணத்திற் கூறப்படும் அகச்சமயத்தவராகிய பாடாணவாதசைவர் முதலியோர் சித்தாந்தசைவத்தோடு ஒப்ப ஏகன் முதலிய ஆறுபதார்த்தங் கொண்டமையின், அவ்வாறு பதார்த்தங்கட்கும் பொதுவியல்பு சிறப்பியல்பு கூறும் ஆகமங்களின் தாற்பரியம் இதுவே என்று எடுத்துக்காட்டிச் சித்தாந்தசைவப்பொருளுண்மையைக் கொளுத்தின் கொள்ள வல்லுநரென்பார், "அகச்சமயத் தொளியாய்" என்றார். கொளுத்திற்கொள்ள வல்லுநர் எனவே அகச்சமயத்தவரும் தாமே கொள்ளமாட்டார் என்பது கருத்தாகலிற் †"சிவாத் துவிதாந் தத்துக்-

* திருவருட்பயன், அறியுநெறி. உ. † சிவப்பிரகாசம், உண்மை, நூற்கருத்து. க. நிலவுல.

குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என்பதனோடு முரணுமை அறிக. சிவாத்துவிதமாவது: நிமித்தகாரண பரிணமவாதம்.

* "சிவாத் துவிதாந் தத்துக்–குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என இறுவாய் எண்ணும் முறைமைக்கண் நின்ற சுத்தசைவரை ஒழித்து ஒழிந்த சமயத்தாரை யெல்லாம் விலக்கவே, சுத்தசைவர் இந்நூல் கேட்டதுணையானே தாற்பரியம் இனிது உணர்ந்து சித்தாந்தப்பொருள் கைக்கொள்வர் என்பது பெறப்பட்டது. அத்துணை அணிமையர் ஆகலானன்றே சித்தாந்த சைவத்தைச் சாரவைத்தார் என்பது. இக்கருத்தறியாதார் "சிவாத்துவிதாந் தத்து" என்றமையிற் சிவாத்துவிதமாவது, இறுதிக்கண் எடுத்து ஓதப்படுஞ் சுத்தசைவம்போலும் என மயங்குப. நிமித்தகாரணமாகிய முதல்வன் மாயையோடுங் கூடி முதற்காரணமுமாய்ப் பரிணமிப்பன் என்பதே சிவாத்துவித சைவர் கொள்கை என்க. இது சுத்தசைவர்க்கு எலாமையும் அறிக.

இனித், தார்க்கிகர் முதலியோர் காட்சிமுதலிய் பிரமித்திருப் பொறி முதலியனவே பிரமாணம் என்பர். பிரமாணம் பிரமேயப்பொருளாதல் செல்லாமையிற் பொறி முதலாயினவும் ஏனைய போலப் பிரமேயமாய் அளந்தறியப்படும் பொருளே ஆகலின் அவற்றைப் பிரமாணம் என்றல் பொருந்காது; மற்றுச் சிவஞானம் உணர்த்த உணர்வதாகிய ஆன்மசித்சத்தியே அவர் பிரமாணம் எனப் புகலும் இந்திரியம் முதலியவற்றையும் அளந்தறியும் பிரமாணமாம். பொறி முதலியன அதற்கு வாயிலாதல்பற்றிப் பிரமாணம் என்று உபசரித்துக் கூறப்படுவனவேயாம் என்பது சைவசித்தாந்த மென்பார், "புகலனவைக் களவாகி" என்றார். சைவசித்தாந்தத்தின் எய்துதற்கருமை கூறுவார், "பெருநூல் சொன்ன–வறத்திறனும் விளைவதாய்" என்றார். எனவே, அஃது இல்வழி விளையாது என்பதாம். "உடலுயிர்கண் ணருக்க னறிவொளி போற் பிறிவருமத் துவிதமா"மாறு மேல் உரைத்தாம். அத்துவிதம் 'என்னுஞ் சொற்குப் பொருள் கூறுவார், "பிறிவருமத் துவிதம்" என்று உடம்பொடு புணர்த்து ஓதினர். இஃது ஏனையோர் கூறும் பொருள்போலன்றிச் சிறந்தது என்பார் "சிறப்பினதாய்" என்றார். வேதாந்தமுஞ் சித்தாந்தமும் வேறு என்பாரை மறுத்துப் பலபொருள்படுஞ் சூத்திரத்தை அங்ஙனம் படாமைத் தெளித்து உரைக்கும் பாடியம்போல வேதாந்தத்தைத் தெளித்து உரைப்பதே சைவசித்தாந்தம் என்பார், மருடாக்கம் முதலியவற்றுள் ஓதியவாறே 'வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத்திறன்' என்றார்.

ஈண்டு வேதாந்தம் என்றது வேதத்தின் முடிபுகளாகிய உபநிடதங்களை. வேதாந்தம் எனப் பெயர் பெற்ற எகான்மவாதநூலே அன்று என உணர்த்துதற்கு *"வேதத் தலைதரு பொருளாய்" என இறுதியினுங் கூறினாராகலின், அது கூறியது கூறலன்மை உணர்க. திறன்-பொது உண்மை என்னும் வகை. இங்கு-இந்நூலின். முதனூல் வழிநூல்களிற் "பொதுவண்மை" என வருத்துக்கொண்டு ஓதினும் எடுத்து ஓதாமையால், அவ்வகை தெரிவரிது ஆகலான் அது தெரியுமாறு "பொது உண்மை" என்று எடுத்து ஓதி அந்நூல்களின்

* சிவப்பிரகாசம், உண்மை, நூற்கருத்து. க. நிலவுல.

கருத்து ஈண்டுத் தெரியச்செய்தும் என்பார், "சைவ சித்தாந்தத் திறனிங் குத் தெரிக்க லுற்றும்" என்றார். சைவசித்தாந்தம் என்றது, சுத்த சைவம்முத லியவற்றிற் செல்லாமைப்பொருட்டு.

சூனியான்மவாதிமதமறுதலை.

சிலர் ஆன்மா இந்த உடம்பினைப் பற்றி நின்று ஜீவிப்பதாம் என்பர். உட ம்பை பல்வகைக் கருவிகளால் யாப்புற்று இயல்வதொரு பாவையாம்.

இனி, அப்பல்வகைக் கருவிகளுள் ஆன்மா என்று அச்சிலர் சொல்லப் படுவது யாது? உடற்கருவிகள் பலவற்றையும் தனித்தனியே பகுத்து ஆன் மா இதுவன்று இதுவன்று என்று நீக்கிச் சோதனைசெய்து போதருங்கால், அவ்வுடற்கருவிகள் எல்லாம் அங்ஙனம் ஆன்மாவன்று என்று நீங்கியபின், அங்ஙனஞ் சோதித்து நீக்கப்படுங் கருவி யாதும் இன்றாய் முடிவிற் சூனியம் தலைப்படக் காண்கின்றோம். ஆதலால், சிலர் உண்டெனக்கொண்டு கூறும் அவ் வான்மாச் சூனியமேயாம்; உள்பொருளாகமாட்டாது என்பதாம். அவர் இவ் வாறு அளவைகாட்டித் தங்கொள்கை நாட்டுகின்றார்.

அவர் உடற் கருவிகள்அனைத்தினையும் இஃது ஆன்மாவன்று இஃது ஆன் மாவன்று என்று தனித்தனி சோதித்து நீக்கிச் செல்லுழிச் சூனியம் முடி வாய்த் தலைப்படுவதனால் ஆன்மாச் சூனியமேயாம் என்றல் பெரியதோர் அறி யாமையேயாம். என்னை? உடற்கருவிகள் அனைத்தினையும் இஃது ஆன்மா அன்று இஃது ஆன்மா அன்று என்று சோதித்தலாகிய வியாபாரத்தினைச் செய் கின்றுழி, சோதனைசெய்து நிற்பதாகிய அறிவே அவ்வான்மாவாகும் என்று துணிந்து அறியமாட்டாராய் அங்ஙனம் போலிமுடிவு கோடலால் என்க.

இனி, அவ்வறிவு சோதனைசெய்து போதருங்காலையிலும், சோதனை முடியுங்காலையிலும் ஒருதன்மையாகவே நிற்பதொன்று ஆகலானும், உடற்கரு விகள் எல்லாம் அசேதனமாய் ஒழியத் தான் சேதனமாய் விளங்கி நிற்பது ஆகலானும், அதுவே அவ்வான்மாவாகும் என்று அவர் அறிந்து அமைவாராக.

அவர் சோதனை செய்துகொண்டு நிற்கும் அவ்வறிவைக் கைவிட்டுச் சூனியமே ஆன்மாவாகும் என்று கொண்டது யாதுபோலுமெனின், வழிநடப் போர் பதின்மர் ஊர் அணிமைக்கட் சென்றுழித் தம்முள் யாவனேனும் நீங் ஙினீரை என்று சங்கையுற்று அச்சங்கை தீர்த்தல்வேண்டி வேறுவேறுப்த் தனி பிரிந்து நின்று தம்மை மறந்து மற்றையரைக் கணித்து ஒன்பதின்மரே நின்றோம், ஒருத்தனைக் கண்டிலம் என்று, கருத்து அழிந்து கவலையுற்ற கை யறியாமைச் செய்திபோலும் என்க.

இனி, அங்ஙனம் சோதித்து அறியும் அறிவுஞ் சூனியமே எனின், அங் ஙனம் அறியும் அறிவுஞ் சூனியம் என்றதூஉம் அவ்வறிவியன்றிப் பிறிதொ ன்றன்மையான், அது மகப்பயந்து ஓம்புவாரோ மலடி என்னுமதனோடு ஒக்கும்

என்று ஒழிக. என்னை? மலடிக்கு மகப்பயந்து ஓம்புமாறில்லை ஆகலின், மகப்பயந்து ஓம்புவாள் மலடியாதல் செல்லாதவாறுபோல, இஃது ஆன்மா இஃது ஆன்மாவன்று என்று விவகரிக்குமாறு சூனியத்துக்கு வலாமையின் என்க.

சூனியமாவது உள்ளதுமன்று, இல்லதுமன்று, இரண்டும் ஆவதுமன்று, வேறும் அன்று எனப்படும் பாழாம். ஆகவே, உள்பொருளாய் உணர்வுடைய தாய் நிற்பது ஒன்றே அங்ஙனம் விவகரிப்பதென வேண்டப்பட்டுச் சூனியம் ஆன்மா என்பது போலியாய் ஒழிதல் காண்க.

இனி, அங்ஙனம் அறியும் அறிவும் நான் அன்றென நீக்கின், அவ்வாறு நீக்கிய அறிவு வேறு உண்டெனப்பட்டு மேலும் அநவஸ்தையாம் ஆகலின், அதுவே அவ்வான்மா என்று துணிபாகக் கொள்க.

இது, சூனியான்மவாதிகளை மறுத்து ஆன்மாக் கருவிகள் அனைத்திற்கும் வேருய் இவ்வுடம்பகத்து நிற்பதொரு சேதனப் பொருள் என்பு சாதித்த வாறும்.

தேகான்மவாதிமதமறுதலை.

இனித், தேகான்மவாதிகள் உடம்பே ஆன்மாவாகும் என்பர். அறிவு உடம்பின்கண் அன்றி நிகழக் காரணமையாலும், நான் குருடனேன் நான் பருத்தேன் என உடம்பினையே நான் என வழங்கக் காண்டலாலும், உடம்பே ஆன்மாவாகும் என்று அவர் * அளவைகாட்டித் தங்கொள்கை நிறுத்துவர்.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மணிதன் பார்ப்பான் என உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் ஆன்மாவிற்கு வற்றி வழங்குவர். அங்ஙனம் வழங்குவோரும், யான் உடம்பு, யான் கை, யான் கால் என உடம்பை அப்படி வழங்குவார் அல்லர்; என் உடம்பு, என் கை, என் கால் என வேற்றுமைப்படவே யாவரும் வழங்குவர் ஆகலானும், இவ்வுடம்பு சடமாகலானும், ஆன்மாச் சித்தாகலானும், தேகத்தின் வேருய் அதனகன் நீலபீதாதி வது ஆன்மாவாகும் என்று அறிக.

அதிபதக் கருத்தினால் என் உயிரென்று வழங்குமாறுபோல அதிபதக் கருத்தினால் எனது உடலென்று வழங்குதலும் அமைவதாம்; ஆகலின், அது கொண்டே ஆன்மாத் தேகத்தின் வேருய் உண்டெனல் அமையாதென்றல் இசையாது எனின், என் உயிரென்று அவ்வாறு பிறிதின்கிழமைப்பொருள்பட வழங்கப்படுவது பிரமாணவாயிலையாம்.

இனி, ஆன்மாத் தன்னை ஒற்றுமைப்பொருளில் வேற்றுமையாக அங்ஙனம் ஓதாவழி வழங்கினும் அது மனத்தின் சேதியென்றும் போல்வதோர் பேத கற்பனை என்றே ஒழிக்கப்படுவதாம்.

* அளவை - கண்டப் பிரத்தியக்ஷம்.

இவ்வாறன்றி, என் பதி என் மனைவி என் பொருள் என வழங்குமாறு போல, என் கை என் கால் என் கண் என் செவி எனப் பலவாற்றாலும் பெரும்பாலும் உலகத்துப் பிறிதின்கிழமைப்பட வழங்குதலின், அதுபற்றி ஆன்மாத் தேகத்திற்கு வேறாய் உண்டென்று சாதித்தல் பொருந்துவதேயாம் என்க.

அவருள் ஒருசாரார், நிலம் நீர் அனல் வளி என்னும் பூதம் நான்கும், சடமாயினும், பாக்கு வெற்றிலை சுண்ணம் என்பனவற்றின்கண் முன்னர் இல்லாத செவ்வண்ணம் அவை ஒருங்கு சேருங்காலை அச்சேர்க்கைக்கண் புதுவதாக உண்டாதல் போலத், தம்முள் ஒன்றாய்க் கூடுங்காலை அக்கூட்டத்தில் அவற்றின்கண் முன்னர் இல்லாததோர் சேதனம் புதுவதாய்த் தோன்றி வியாபரிக்கும் என்பது அமைவதாம்; தேகத்தின் வேறாக ஆன்மா ஒன்று உண்டென்றல் பொருந்தாது என்பர்.

நிலம் நீர் அனல் வளி என்னும் பூதம் நான்கும் உண்மையிற் சடமாகலின் அவை கூடிய கூட்டத்தில் சேதனம் புதுவதாகத் தோன்றும் என்றல் ஒரு வாற்றானும் இசையாது. அன்றியும், தத்தம் இயற்கையிற் சடமாய் நிற்கும் அப்பூதம் நான்கும் நாம் ஒன்றாய்க் கூடியவழிச் சித்தியல்பாய் மாறும் என்றல் இயற்கைவிரோதமுமாம். பாக்கு வெற்றிலை சுண்ணம்புகளில் முன் இல்லாத செவ்வண்ணம் கூட்டத்தில் விளங்கும் என்றல் இயற்கைவிரோதம் ஆகமாட்டாது. செவ்வண்ணம் சிற்குணம் அன்று; சடப்பொருட் குணமேயாம். இன்னும், பாக்கின்கண் இனிது தோன்றுது அடங்கி நிற்கும் செவ்வண்ணம் அதனோடு வெற்றிலை சுண்ணம்பு கூடும்பொழுது இனிது விளங்கித் தோன்றுவதாயிற்று. இங்கு முன் இல்லது கூட்டத்திற் புதுவதாய்த் தோன்றிற்றில்லை; உள்ளதே புதிதாக விளங்கித் தோன்றிற்று. இல்லதற்குத் தோற்றம் முக்காலத்தும் இல்லை; உள்ளதற்கே எக்காலத்தும் தோற்றம் உண்டு.

உள்ளது உள்ளதேயாம்; அதற்குத் தோற்றம் கூறல் இயையாது எனின், அற்றன்று. சத்திமாத்திரையாய் உள்ள சூக்குமம் காரண உபகாரத்தால் வியத்தியாய்த் தூலமுற்று விளங்கும் என்பதே உள்ளது தோன்றும் என்பதற்குத் தாற்பரியம் ஆதலால், அதற்குத் தோற்றங் கூறுதல் இயைபேயாம் என்று விடுக்க.

எடுத்துக்காட்டு இங்ஙனம் விரோதமுறுதலால் பூதம் நான்கின் கூட்டரவில் முன் இல்லாத ஓரறிவு தோற்றி வியாபரிக்கும் என்ற அவர் கொள்கை கழுத்திற் கையிட்டுத் தள்ளி ஒதுக்கப்படும் என்க. இவ்வாறுகளின், பூதக் கூறுப்பட்ட தேகத்திற்கு வேறாக ஆன்மா ஒன்று உண்டு என்பது சாதுஞ் சித்தாந்தமே ஆகும் என்க.

இது, தேகான்மவாதிகளை மறுத்து உடம்பகத்து ஆன்மாத் தேகத்திற்கு வேறாக உண்டென்று சாதித்தவாறும்.

இந்திரியான்மவாதிமதமறுதலை.

இனிச், செவி மெய் வாய் கண் மூக்கு என்னும் ஐம்பொறிகளும் சத்தம் பரிசம் இரதம் உருவம் கந்தம் என்னும் விஷயங்கள் ஐந்தினையும் தனித்தனி அறிய வல்லனவாம்; அவை சடம் எனப்படா; ஆதலால் அவையே ஆன்மா வாகும் என்று இந்திரியான்மவாதிகள் சொல்வர்.

ஐம்பொறிகள் ஒன்று அறிந்ததனை மற்றொன்று அறியாமையாலும், அவை அவற்றை வேறு வேறாக விடயிப்பதல்லது இக் தொழிற்பாடு உடையேம் யாம் என்று தம்மை அறியமாட்டாமையாலும், அவ்வைம்பொறிகளோடுங் கொண்டு அங்ஙனம் அறியும் ஆன்மா வேறு உண்டென்பதே தேற்றமாம்.

இன்னும், ஐம்பொறிகள் தத்தமக்கு உரிய விடயங்களை நேரே இயைந்து நின்று அறிவனவேயாம். ஒரு சாக்தன் ஒருதேயத்திற் சென்றகாலத்தில் ஐம்பொறிகள் கொண்டு கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த விடய அனுபவங்களை மற்றோரிடத்தில் இருக்கும்பொழுது நினைந்து அவ்வண்ணம் நுகர்ச்சி உறுகின்றான். அச்சாக்தன் இடம் பெயர்ந்து மற்றோரிடத்துந் தான் இருக்கும்பொழுது அத்தேயத்தில் சென்றகாலத்துத் தனக்கு நேர்ந்த விடயங்களை ஐம்பொறிகள் கொண்டு அவ்வாறு அறியுமாறு இல்லை. என்னை? அவ் விடயங்கள் இடத்தாலும் காலத்தாலும் அவன்றனக்கு மிகவேறுபட்டுப் பிரத்தியக்கம் பெறுமையால் என்க.

இனிச், சென்றகாலத்துக் காட்சியுற்ற அவ்வைம்புலன்கள் சாக்தற்கு மற்றோரிடத்தில் இருக்கும்பொழுது விடயமுறுதல் அவ்விந்திரியங்களுக்கு வேறாய் அவ்விந்திரியங்களைக்கொண்டு அறியவல்ல மனக்கருவியுடைய சேதன ஆன்மா அவன் அகத்து நிலைபெறுதல்பற்றி அல்லது கூடாமையால், இவ் வருத்தாபத்தியாலும் மனக்கருவிபற்றி இந்திரியங்களின்வழி நின்று அறியும் ஓர் ஆன்மாச் சாக்தன் உடம்பகத்து இந்திரியங்களுக்கு வேறாய் உண்டு என்பது இனிது தெளியப்படும்.

இது, இந்திரியான்மவாதிகளை மறுத்து உடம்பகத்து ஆன்மா இந்திரியங் களுக்கு வேறாக உண்டென்று சாதித்தவாறும்.

ஆணவமலத்துண்மை.

மூலமலத்தினியல்பு சிறிது காட்டுதும்:— மூலமலமாவது பிராந்திஞா னமே பிறிதில்லை என்பர் ஒருசாரார். ஒருசாரார் ஞானாபாவம் என்பர். ஒருசா ரார் தமோகுணம் என்பர். ஒருசாரார் மூலப்பகுதியில் தோன்றும் அவிச்சை என்பர். ஒருசாரார் பாசை கன்மங்கள் என்பர். ஒருசாரார் சிவசத்தி என்பர். ஒருசாரார் ஆன்மாவின் குணம் என்பர்.

மலமாவது, இவை அனைத்தினும் வேறாய் ஒன்றாய் நித்தமாய் வியாபக மாய் ஞானதிரோதகமாகிய திரவியம் என்பது தொகுத்துக் காட்டுதும்:—

மேற்கூறிய அளவைகளால் ஆன்மாத் தோற்றக்கேடுகளின்றி நித்தமாய் வியாபகமாய் நிற்பதென்பது துணிபாம். இனி, ஆன்மாவுக்குத் தோற்றக்கேடுகள் உளவாம் எனின், அது செய்த வினை நுகர்ப்பச் செய்யாத வினை உண்டாம் எனப்பட்டு வினை இலக்கணத்தோடு முரணும். ஈன்றணிய குழவி தாய் முலைப்பால் பசிப்பிணி தீர்க்கும் மருந்தென்று அறிந்து அதன்கண் முயலுதல் காண்டும்; அஃது உம்மைப் பயிற்சி வயத்தான் உளதாகிய வாசனை இல்வழிக் கூடாது.

இனி, நித்தப்பொருளே, அவயவம் உடைத்தெனப்பட்டு அழிவெய்துவதாகிய ஏகதேசம் என்றல் கூடாமையின், ஆன்மா வியாபி என்பதும் பெற்றும். பெறவே, அவ்வக் குணங்கள் அவ்வக் குணிகளின் வேறன்மையின், ஆன்மாவின் குணமாகிய ஞானமும் அவ்வாறே நித்த வியாபகமாதல் பெறப்பட்டது. அறிவாவது ஒன்றனை விடயித்தலே பிறிதன்றுகலின், அங்ஙனம் விடயிப்பதாகிய அறிவு ஒருகால் நிகழ்ந்தும் ஒருகால் நிகழாதுங் காலத்தானும் இடத்தானும் ஏகதேசமாய் நிகழ்தலுங் காண்டும். அவ்வறிவு செயற்கையான் இங்ஙனம் நிகழ்தற்குக் காரணம் உண்டென்பது பெறப்படுதலின், அது பிராந்தி ஞானம் முதலியவற்றுள் ஒன்றென்றல் கூடாமையின், பாரிசேடவளவையான் அவற்றின் வேறுகிய சகசமலம் அத்தன்மைத்தாய் உண்டென்பது பெற்றும்.

அற்றேல், காரணம் பிராந்திஞானம் முதலியவற்றின் ஒன்றேயாக, அவற்றின் வேறு உண்டு என்பதற்குப் பிரமாணம் என்னே? எனின், கூறுதும். கயிற்றை அரவு எனக் காணும் பிராந்தி கண்ணின்கண் யாதானும் ஓர் குற்றம் இல்வழி நிகழாமையின், அதுபோலத், தேகமே ஆன்மா என்று அறிதற்கிடமாகத்துப் பிராந்திஞானமும் ஆன்மாவின்கண் ஒருகுற்றம் இல்வழி நிகழாமையின், அக்குற்றமாகிய சகசமலம் பிராந்திஞானத்தின் வேறாய் உண்டென்பது பெறப்படும்.

இனி, ஞானபாவமே அது எனின், ஞானத்தின் என்றுமபாவத்திற்கும் அழிவுபாட்டபாவத்திற்கும் ஒன்றினொன்றபாவத்திற்கும் ஒருகாலும் அழிவின்மையான் முத்தி என்பது ஒன்று இல்லையாய் முடியும். வீடுபேறுண்மை வேதாகமங்களிற் பெறப்படுதலின், அவற்றோடு முரணுமைப் பொருட்டு ஞானபாவமாவது ஞானத்தின் முன்னபாவமெனக் கோடல்வேண்டும். வேண்டவே, நித்தமாகிய ஞானம் முன் இல்லாது ஒழிதற்கு வேறு காரணம் உண்டெனப் பெறப்படுதலின், அதுவே சகசமலம் எனப்படும் என்க.

இனித், தமோகுணம் முதலியன ஒன்றன் காரியமாய் இடையே தோன்றி அழிவன ஆகலின், அவை அநாதியே ஞானதிரோதகமாய் ஆன்மாவைப் பந்திக்கமாட்டாமையின், சுத்தமாய் நின்ற ஆன்மாவை இடையே பந்தித்து நின்றன எனின், அவை இடையே பந்தித்தற்குக் காரணம் வேண்டும். காரணமின்றிப் பந்திக்கும் எனின், முத்தி பெற்றவழியும் பந்திக்கும் என்பது முடியுமாகலின், அவற்றின் வேறாய் அநாதியே பந்திப்பதாகிய சகசமலம் உண்டென்பது பெறப்படும்.

இனி,மூலப்பகுதியில் தோன்றும் அவிச்சையே அது எனின், மூலப்பகுதியில் தோன்றும் அவிச்சை அநாதியில் ஆன்மஞானத்தினைப் பற்றித்தது என்றல் ஏலாமையானும், அது மாயாகாரியம் ஆகலின், ஞானவியஞ்சகமாவது அல்லது ஞானதிரோதகம் ஆகாமையானும், அநாதியே ஆன்மஞானத்தினைத் தடைசெய்து நிற்குஞ் சகசமலம் வேறு உண்டென்பது பெறப்படும்.

இனி, மாயை கன்மங்கள் ஆன்மாவின் வேறுமாய்ச் சடமுமாய்ப் பற்ற முஞ் செய்து நிற்றலின், அவையே அமையும்; வேறுமோர் சகசமலம் உண்டெனக்கோடல் மிகையாமால் எனின், அவை அங்ஙனமாயினும், ஞான திரோதகமல்ல ஆகலான், ஞானதிரோதகமாகிய மூலமலம் வேறுண்டு என்க.

இனிச், சிவசத்தி ஞானதிரோதகமாய் நிற்குமெனின், சித்தாகிய சிவனது சத்தியுஞ் சித்தாவதன்றிச் சடமாதல் இன்மையால் தனக்குப் பகையாகிய சடப்பொருள் சித்தைப் பற்றம் உறுத்துவதன்றிச் சித்துப்பொருள் சித்தைப் பற்றம் உறுத்துமாறு இன்மைபானும், உறுத்தும் எனின், முதல்வனது பெருங்கருணைக்கு இழுக்கு ஆகலானும், சடப்பொருளாய்ப் பற்றம் உறுவிக் குஞ் சகசமலம் வேறு உண்டென்பது பெறப்படும்.

இனி, மலஞ் சடமாய் நிற்றலின், ஆன்மாவின் குணமெனக் கோடலே பொருத்தமுடைத்து எனின், அறியாது கூறினாய்; குணமாயின் இடையே நீங்குதல் கூடாமையானும், ஆன்மா அறிதற்குணம் உடைத்தாகலின், அறியாமையும் அறிவும் ஆகிய இரண்டு மறுதலைக்குணம் ஒருபொருட்குக் கூடாமையானும் அஃது ஆன்மாவின் வேறுபோதார் அகவிருளாகிய திரவியம் என்பது தெற்றென உணர்ந்துகொள்க.

சிவாத்தமணிதிபிகை உடையாரும் முதலதிகாணத்து இறுதியில் பயன் கூறும்வழி, ஞானபாவமே அஞ்ஞானம் என்பாரை மறுத்து, மலம் திரவியம் என்றும், அநாதிப்பொருள் என்றும், மலரத்திகள் பல என்றும், முத்தியில் மலசத்திக்குக் கேடன்றி மலத்துக்குங் கேடில்லையின் அநாதிப்பொருளாதற்கு இழுக்கில்லை என்றும், கடா விடைகளான் விரித்துக் கூறியவாறு ஆண்டுக் காண்க.

அஞ்ஞானம் என்னும் அகவிருள் ஞானபாவம் ஆகாது என்று இவ்வாறு மறுக்கப்பட்டவே, அக்காரம் என்னும் புறவிருள் ஆலோகத்தின் அபாவம் என்பதூஉம் மறுக்கப்பட்டவாறு ஆயிற்று. அதுவுஞ் சிறிது காட்டுதும்:—

இருளின்மை.

ஆலோகத்தின் அபாவமே அக்காரம் என்பார்க்கு, அம்முறை பற்றிச் சுகத்தின் அபாவமே துக்கம்; தன்மத்தின் அபாவமே அதன்மம்; சைதன்யத்தின் அபாவமே விபாகம் என்று இவ்வாறு கோடல் வேண்டும். அங்ஙனங் கொள்ளாமையால் அவர்க்கும் அது கருத்தன்றுபோலும் என மறுக்க.

அன்றியும், ஆண்டு ஒளியில்லை இருள் உள்ளது என, ஒளியின்மையின் வேறுப் இருளென்னும் உணர்வு நிகழ்தலானும், யாட்டின் கழுத்திற் றூங்கும் முலையோடு ஒக்கும் அபாவத்தால் செய்யக்கடவதொன்று யாண்டும் இன்மை யானும், கண்ணெளிமைபைத் தடைசெய்து நிற்பதாகிய இருளை அபாவமென்றல் கூடாமை அறிக.

இவ்விருளினது உண்மை வெள்ளிடையின் அலசவிழித்து நோக்கியவழி யும் மறைத்தற்றொழில் நிகழ்தல்பற்றிப் பாரிசேடஅளவையான் அறியப்படும்.

அற்றேல், நீலவடிவிற்றுப்த் தோன்றுதலின் இருள் காட்சிப்பொருள் என்றும் படும் இழுக்கென்னை? எனின், அற்றன்று; துன்னிய இருளின்கண் விழித்துழிப்போலக் கண்ணிமை இறகுமூடியவழியும் ஒருதன்மைத்தாய்த் தோன்றுதலின், வேற்றுமை இன்மை யான், அது மயக்க உணர்வேயாம் என்பது போதருதலின், விழித்துழி அவ்வாறு தோன்றுவதும் அதுபோல மயக்க உணர்வாவதன்றி, இருளின் தோற்றம் அன்றென்பது அனுபவத்தாற் கண்டுகொள்க.

கண் ணுக்கொளியுண்மை.

உலோகாயதர், செவி முதலிய இடங்களை இந்திரியம் என்பராகலின், கண்ணென்னும் இடத்தின் வேறுக ஒளிப்பொருளாகும் இந்திரியம் உண்டு என்பதற்குப் பிரமாணம் என்னை? எனின், செவிடனுக்குச் செவி உளதாகவும் ஓசை கேளாமையின், அது கேளாமைக்குக் காரணஞ் செவியென்னும் உறு ப்பின் வேறுப் அதனை அதிட்டித்து நிற்கும் இந்திரியம் இல்லாமையே அன் றிப் பிறிதின்மையால் செவி என்னும் உறுப்பு இந்திரியமாகாமை எல்லார்க் கும் விளங்கக்கிடத்தது. இதுபற்றி ஏனை இந்திரியங்களும் அவ்வவ் விடங்க ளின் வேறுதல் கண்டுகொள்க.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் அறிதற் கருவிகளாகலின், சாத்துவிக அக ங்காரத்தில் தோன்றியனவாம். கண்ணிந்திரியம் ஒளிக்கருவியாகலின், உருவத் தை அறிவதாம். இது ஆன்மாவின் ஞானசத்தியால் அதிட்டிக்கப்பட்டுப் பொ ருள்களை விசேடண விசேடிய இயல்புபற்றி அறியுமாறின்றி நிருவிகற்பமாய் அறியுங் கருவியென்று உணர்க. இது வேனை ஞானேந்திரியங்களுக்கும் ஒக்கும்.

காட்டும் ஒளியின் வேறுப்க் கண்ணுக்கு ஒளிக்குணம் உண்டென்றற்கு ஏது வென்னை? கண்ணுக்கு ஒளிக்குணம் உண்டெனின், மின்மினித் தூணையாயி னுக் தானை விளங்குதல் வேண்டுமாலெனின், ஆகாயத்தின் கண்ணதாகிய சத்தகுணம் முரண குணிற் சையோகம் முதலிய வியஞ்சகங்களான் விளக்கப் பட்டுழி விளங்கி அல்லுழி விளங்காதொழிதலை அன்றித் திணைத்தூணையா யினுக் தானென விளங்குமாறு இன்றென்பது பற்றி வியஞ்சகத்தின் எதிரொ லிவடிவால் தோன்றும் அவ்வாகாயத்தின் குணம் அன்றென்பார் யாருமில்லை. அதுபோலக், கண்ணின் கண்ணதாகிய ஒளியும் வியஞ்சகமாகும் ஞாயிற்றின் ஒளிமுதலிய உள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்திரை

யே பிறிதில்லையாகலான், அதனைக் கண்ணின் குணம் அன்றென்றல் அறிவில்லார் கூற்றேயாம் எனவும், அக்கண்ணொளி தன்னை விளக்குதற்கு உரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசத்து விளங்கியும் வியாபகப்பொருளாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்கும் இயல்பிற்றெனவும் உணர்க.

இனிக், கண்ணுக்கு ஒளியில்லை, ஞாயிற்றின் ஒளி முதலியனவே கண்ணின்கண் நின்று காண்டல் வியாபாரம் நிகழ்த்துமெனின், அங்ஙனமாயின், ஞாயிற்றின் ஒளி முதலியன கண்ணின்கண் நின்றே காண்டல் வியாபாரம் நிகழ்த்தும் என்னும் நியமம் வேண்டா; உடம்பினுள் யாண்டாயினும் ஓரிடத்தைப் பற்றி நின்றுங் காண்டல் வியாபாரம் நிகழ்த்துமென்று ஒழிக.

அற்றேல், அவ்வாறு ஒளியுடைத்தாகிய கண்ணிற்திரியற் தன் தொழிற்பாடு நிகழ்த்தற்குப் பிறிதோர் ஒளியின் உபகாரத்தை இன்றி அமையாதவாறு என்னை? எனின், அங்ஙனமாயினுங் கண்ணிற்திரியந் தூல ஒளியாகலின், தமோகுணசாரமான இருளென்னும் பகைப்பொருளின் சத்தியான் மடங்கலின், காண்டல் வியாபாரம் நிகழ்த்துதற்கு அங்கி என்னும் பூதத்தின் கூறான ஞாயிற்றினொளி விளக்கொளி முதலிய சூக்கும ஒளிகளின் உபகாரத்தை வேண்டற்பாலதாகின்றது என்று உணர்க.

சிவஞானபோதமாபாடியத்திரட்டு

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

இச்சிவஞானபோத மாபாடியத்திரட்டினுள், பெரும்பான்மைய திராவிடப்பிரகாசிகைநூலுடையார் வாக்கியங்களோடு விரவப்பெற்றன. சிறுபான்மைய விரவப்பெறுதன. இவை பாடியமும் சிற்றுரையும் ஆராயப்புகுவார்க்கு ஆங்காங்கு இயைத்துப் பொருளுணர்ந்து உண்மை கடைப்பிடித்தற் பயப்பாடுடையவாகலின் ஒருங்குதிரட்டி வேறுகப் பதிப்பிக்கப்பட்டன.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதமாபாடியம்.

மங்கலவாழ்த்து.

காமிகம் முதலிய சைவாகமங்களுள் ஞானபாதப்பொருளின் இகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தற்கு * இரௌரவாகமத்தில் எழுந்த சிவஞானபோதநூலினைத் தமிழுலகம் உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து † பொழிப்புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர், ‡ சாக்கிரத்தே அதிதத்தைப்புரியும் நமக்கு இடையூறு சிறிதுமணுகாமை அறிந்தாராயினும், ஆன்மோபகாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய கடவுளை வாழ்த்துவதாகிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார். ¶ வாழ்த்தும் வணக்கமும் பொருளியல்புரைத்தலும் என மங்கலவாழ்த்து மூவகைப்படும். அவற்றுள் இது பொருளியல்புரைத்தல் எனக் கொள்க.

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா வினைமலர்
நல்லார் புனைவரே.

எனவரும்.

நந்திபெருமானுக்கு இந்நூலறிவுறுத்தருளிய முதலாசிரியர் என்பது உணர்த்துதற்குக் 'கல்லானிழல்' என இடங் கூறினர். ஆண்டெழுந்தருளியிருந்து, சிவாகமப்பொருள்கள் ஒன்றேறொன்று முராவுணவாக மலிந்து விளைய நந்திபெருமானுக்கு, இந்நூலான் மலிவு தீர்த்தருளினர் என்பார் 'மலி

* இரௌரவம் என்பது "குரு" என்பவருக்கு உபதேசிக்கப்பட்டது என்னும் பொருள் பயக்கும் ஒரு தத்திதாந்தபதம். குரு - பிரணவர் முதலியோர்க்குக் காமிகாதிகளைச் சதாசிவ மூர்த்தி உபதேசிக்கும் போது கேட்டு நின்றொருவர். † பொழிப்பெனினும் காண்டிகை யெனினும் ஒக்கும். இது மாபாடியத்துட்கண்டது. ‡ சாக்கிராதீதம் இத்தன்மைத்தென்பதை, "பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமை—சொற்பெறு மதிதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற—சிற்பர மதனு ளுள்ளச் செயலறுத் திடவு திக்குந்—தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீத மாமே." என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானுணர்க. ¶ இவற்றை வடநூலார் முறையே ஆசி, நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்பர்.

வில்லார் என்றார். இல்லார் இல்லாகச் செய்தார் எனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர்.

இனி, மலைவில்லார் என்பது மேருவை வில்லாகவுடையர் எனக் கொண்டு, கல்லானிழலில் எழுந்தருளியிருந்து வீடுபேறும், மலையை வில்லாக வளைத்துப் பகைவரை வென்று போகமும் அளித்தருளியோர் எனினும் அமையும். எனவே ஈந்தொழிற்கும் வினைமுதல் என்றவாறுயிற்று.

அருளிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; *"உண்ணியபுகில்" என்றற்போல. அது புனைவர் என்னும் † பிற வினைமுதல் வினைகொண்டு முடிந்தது. அருளுதல்–புனைந்தமைபற்றிக் கல்லானிழலில் வீற்றிருந்து மலைவு தீர்த்தருளிய ஆசிரியர் கருணைமீக்கூர்தல். அருளிய பொல்லார் எனப் பெயரெச்சமுடிபாகவைத்து உரைத்தலும் ஒன்று.

பொள்ளார் பொல்லார் என மரீஇயிற்று: சுயம்புமூர்த்தி என்றதாம்.

இணைமலர் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய்த் திருவடியை உணர்த்திற்று. இணை என்பதனைத் திருவடிக்கு அடையாக்கி இருபெயரொட்டாகுபெயர் என்றலும் ஒன்று. இவற்றியல்பெல்லாம் ‡ சூத்திரவிருத்தியுள் உரைத்தாம்; ஆண்டுக்காண்க. புனைவர் என்றதற் கேற்பத் திருவடியை மலராக உருவகஞ் செய்தாரென்றலும் ஒன்று.

நல்லார்–கேட்டுச் சிந்தித்துத் ¶ தெளிந்த முதியோர். புனைதல்–§"தாடலைபோல்" அடங்கிற்றல். வகாரம் ஈற்றசை; தேற்ற மெனினும் அமையும்.

இப்பாட்டு வஞ்சித்துறை. இது கல் என்பது முதல் வ என்பதிறுவாய்ப் பன்னிருசொற்களாற் கூறலே, இந்நூல் பன்னிருசூத்திரத்தாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுண் மும்மூன்று சொற்கள் ஒவ்வோரடியாக வைத்து நான்கடியாகக் கூறலே, இந்நூலும் அவற்றுண் மும்மூன்று சூத்திரம் ஒவ்வோரியலாக வைத்து நான்கியலாற் செய்யப்பட்டதெனவும், அவற்றுண் முன்னீரடியும் ஒரு வினைமுடிபும் பின்னீரடியும் பிறிதோர் வினைமுடிபுமாக இருவகைப்படுத்துச் செய்யலே, முன்னூறு சூத்திரம் ஓரதிகாரமும் பின்னூறு சூத்திரம் வேறோர் ரதிகாரமுமாக இந்நூல் இரண்டதிகாரத்தாற் செய்யப்பட்டதெனவும் குறிப்பானுணர்த்தியவாறு காண்க. இரண்டாமோத்தின் முதற்சூத்திரம் "இதுவுமது" என முதலோத்தின் இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படுவது என்பது உணர்த்துதற்கு மலைவு என்பதனை ஈரடியுஞ் சாரவைத்தார். கல்லானிழல் என முதலடியில் இடங் கூறலே முதலோத்துப் பிரமாணங் கூறுவதென்பதாமும், இரண்டாமடியில் மலைவில்லாரருளிய எனச் செய்கைகூறலே இரண்டாமோத்து இலக்கணங் கூறுவதென்பதாமும், மூன்றுமடியிற் பொல்லாரிணைமலர் எனத் திருவடி கூறலே மூன்றுமோத்துச் சாதனங் கூறுவதென்

* திருநாவுக்கரசுநாயனார்தேவாரம், நமச்சிவாயத்திருப்பதிகம். கூ. விண்ணுற. † பிற வினைமுதல் - பிறகருத்தா. ‡ தொல்காப்பியச்சூத்திரவிருத்தி. சசை-ம் பக்கம். ¶ தெளிந்து முதிர்ந்தோர் எனவும் பாடம். § தாடலைபோல் அடங்கிநிற்றலே, "தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்—கூடலைநீ யேகமெனக் கொள்." என்னுந் திருவருட்பயனுக்கு நிரம்பவழகியார் முதலியோருரைத்த உரையாற்றெளிக.

பதூஉம், நான்காமடியில் கல்லார் புணேவர் எனப் பேறுகூறலே நான்காமோத்துப் பயன் கூறுவதென்பதூஉம் குறிப்பாற் பெறப்படும். பிறவும் இவ்வாறே ர்ந்துணர்க. இங்ஙனம் நூனுதல் பொருளெல்லாங் குறிப்பாற்றன்னகத்தடக்கி நிற்றல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க. இவ்வாறு நால்வகைப்படுத்தோதியது இந்நூலென்பது *"ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்கி–முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்" என்று வழிநூலாசிரியர் வகுத்தோதியவாற்றுனுங் கண்டுகொள்க.

மங்கலவாழ்த்து முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

அ வை ய டக் க ம்.

மங்கலவாழ்த்துக் கூறும்முகத்தான் ஈண்டைக்கு இறைவனுவான் இவன் என்பது உணர்த்தி, இனி அவையடக்கங் கூறும்முகத்தான் அவ்விறைவனுல் இயம்பப்படும் நூல் உணர்ந்தாரது உயர்வும் வேசச் சமயநூல் உணர்ந்தாரது இழிவும் உணர்த்துகின்றுர்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

எனவரும்.

'உணர்ந்து' எனவே குருமுகத்தாற் கேட்கப்படும் சிவாகமநூல் பற்றி என்பது வருவித்து உரைத்துக்கொள்ளப்படும். 'தமையுடையதன்' எனவே தாம் கேவலனுக்கு உடைப்பொருளென்பதூஉம், 'எம்மையுடைமை' எனவே யாம் தமக்கு உடைப்பொருளென்பதூஉம் பெறப்பட்டன. உடைப்பொருள் அடிமையும் உடைமையும் என இருவகைப்படும். அவற்றுள் உயிர்வருக்க மெல்லாம் இறைவனுக்கு அடிமை எனவும், மாயை கன்மங்களும் அவற்றின் காரியங்களும் உடைமை எனவும் உணர்ந்துகொள்க.

தன்னுணர்வார் என்புழி இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. உடைமையின் என ஏதுப்பொருட்கண் வரும் இன்னுருபும் புணராமையான் என்னும் ஆனுருபும் தொக்கு நின்றன.

'எமையிகழார்' என்பது எம்மைக் †"குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவா"ரன்றி இகழ்தல் செய்யாரென்க. எனவே, எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வர் என்பது குறிப்பெச்சம். 'தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்' எனவே, தம்மையுணர்ந்தன்றித் தேவனை உணர்தல் கூடாதென்பது பெற்றும்.

* சிவஞானசித்தி, பரபக்கம், பாயிரம். கo. இறைவனே. † இது திருவாசகம், திருவம்மானை. உo-ம் திருப்பாசுரத்துள்ளது. கோதாட்டல் - சீராட்டல்.

அற்றேல், * "தன்னிலே தன்னைய றிந்தாற்—றன்னையுக் தானே காணும்" எ-ம், † "அதிலறி வடங்கி—மன்னிட வியாபி யாய வான்பயன் றோன்றும்" எ-ம் தலைவனையுணர்க்தன்றித் தம்மையுணர்தல் கூடாதென்னுஞ் சார்புநூல் இதனோடு முரணும்பிறவெனின்,—முரணுது; அஃது ஆண்டுச் சிவரூபத் தான் ஆன்மதரிசனமும் சிவதரிசனத்தால் ஆன்மசுத்தியு மாமாறு கூறிற்றெ னவும், இஃது ஆன்மசுத்திப்பின் சிவப்பேறுமாறு உணர்த்துகின்றதெனவும் தெரிந்துகொள்ளப்படு மாகலின். ‡ 'அான்—றன்னிலே தன்னையுங் கண்டு தமைக்காணர்' என்பதனோடு முரணுமையும் இவ்வாறே உணர்ந்துகொள்க.

இதனானே, தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வாராவார் ஆன்ம லாபப் பேறுடையார் என்பது பெற்றும். அவர் சிவமயமேயாகலின் 'எம்மையு டைமை' என்றார். உடைமை—உடையராந்தன்மை. எம்மையுடைமை என இர ண்டாவது குறிப்புப்பெயர்கோடல் அமையுமென்பது, ¶ "இரண்டாகுவதே" என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் "புகழையுடைமை" என உதாரணங் காட்டி யாப்புறுத்தமையானும் அறிக.

'தம்மையுணரார்' எனப் பொதுப்படக் கூறுதலானே, காமொருபொரு ளுண்டென்பதை உணராத உலோகாயதரும், தம்மைக் குணிப்பொருளென்று உணராத புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு அடிமை யென்று உணராத வீணைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவிதசைவரும் தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருட் பாஞ்சராத்திரிகள், உடையானல்லாதானே உடையான் என மயங்கிக் கோடலா னும், உடையானுக்குப் பரிணமங் கூறுதலானும், சிவாத்துவிதசைவர் உடை யானது சித்சத்திக்குப் பரிணமங் கூறுதலானும், பிறவாற்றானும் அவரும் தம்மையுணரார் எனக் கொள்க.

* 'தம்மையுணர்ந்து தன்னுணர்வார்' எனவே, தம்மையுணரார் தன்னுண ரார் என்பது தானே போதருமெனினும் எய்தாது பற்றி உணரார்என்றெழுதிக்தார். முன்னின்ற உணரார் எதிர்மறை விகுதிபெற்ற பெயர்.

அவர் உடங்கியைந்து தம்மிற் புணராமையாவது, பிறவிக்குருடர் பலர் குழீஇக்கொண்டு வேழங்காண்டல்விருப்பான் அதுகின்றுழிச் சென்று கையி னால் ஒவ்வோருறுப்பினைத் தைவந்து, வேழமாவது முறம்போல்வதெனவும், உரல்போல்வதெனவும், உலக்கைபோல்வதெனவும், பலிபோல்வதெனவும் தம்முண் மாறுகொண்டு ஒருவரையொருவர் மயக்குக் § கலாம் விளைத்தல் போலச், சித்தாந்தநெறிகின்று ஆசான்றிருவருள் பெருகார் தருக்கம் உணர்விற் கேற்பச் சமயநூல்களில் ஒவ்வொன்றனை ஆராய்ந்து அவற்றிற்கூறும் எகதேச சப்பொருள்களேபற்றிக்கூறி ஒருவரையொருவர் மயக்குக்குத் தம்முண். மாறு கொண்டு கலாம்விளைத்தல். அங்ஙனங் கலாய்க்கின்றுழிக் கண்ணுடையாலெ னுவன் நோக்கி, இவர் செவிமுதலிய ஓரோருறுப்புக்களேபற்றிக்கூறிக் கலாம்

* சிவப்பிரகாசம், அ-ம் சூ. ஆன்மதரிசனம். க. தன்னறிவு. † மேற்படி, கூ-ம் சூ. ஆன்மசுத்தி. கூ. இந்நூல். ‡ இந்நூல், கூ-ம் சூ. கூ-ம் அதி. காடியோ. ¶ தொல்காப்பி யம், சொல்லதிகாரம், வேற்றுமையியல். கo-ம் சூ. § கலாம் - கலகம்.

விஞக்கின்றார் எனவும், வேழத்தினியல்பு வேறெனவுந் தெரிந்துணர்ந்து அவர்க்கு அதனை உணர்த்தலுறில், * "கொடியும் பேதையும்" போலத் தாங்கொண்டதேபற்றி அவனையுந் தம்மிலொருவனுகவைத்து இழித்துக்கூறி மாறுகோடலேயன்றிப் பொருளெனக் கொள்ளமாட்டார். அதுபற்றி அவன் வெகுளாது இவரியல்பு இதுவென ஙகையாடியொழிந்துவிடும். அதுபோல, ஒவ்வொருசமயநூல்பற்றி அங்ஙனம் பிணங்குவாரை அவையெல்லாம் ஒவ்வோ ரேக தேச இயைபுபற்றிக் கூறினவாகலான், அவைபற்றிப் பிணங்கற்க எனவும் பொருட்டன்மை வேறெனவும் யாம் இந்நூலாலுணர்த்தப்புகின், அவர் அதனைக் கொள்ளமாட்டாது பாயிற்சிவயத்தால் தாங்கொண்டதேபற்றி எம்மையுந் தம்மிலொருவராகவைத்து இகழ்ந்துரைப்பாராகலின், அவ்வழி அவர்வெள்ளறிவு இதுவென்றெழிவிதேயன்றி அதனைக் கொள்ளாமென்பார் 'கேளாம்புறன்' என்றார். கேட்டல்–பொருளாகக்கோடல். அது "ஊறுகேளாது" என்பதனானும், †"கேளாரும்–வேட்ப மொழிவதாம்" என்பதனானும் அறிக.

புறன்–புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும் மொழியும் புறங்கூற்றுமொழியும் என்பது இரட்டிறமொழிதலாற் கொள்க. புறங்கூற்றுமொழியாவது புறச்சமயிகளல்லாத பாடாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்துகூறும் மொழி.

இச்சமயங்களெல்லாம் புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமும் என நான்குவகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உலோகாயதம், ‡ நால்வகைப்பௌத்தம், ஆருகதம் என அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும். அகப்புறச்சமயம் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம். ஐக்கவாதசைவம் என அறுவகைப்படும். ¶ அகச்சமயம் பாடாணவாதசைவம்முதற் சிவாத்துவிதசைவமீறுக அறுவகைப்படும். இவையெல்லாம் அகம் புறம் என்று இரண்டாய் அடக்குமாறும் ஓர்ந்துணர்க.

இவ்வாறிரண்டாய் அடக்கியும் அவற்றைத் தம்முள் வேறுபாடுகோக்கி நான்காக வகுத்துக்கூறுதலும் அமையும் என்பது, தொல்காப்பியத்தில் அகம் புறம் என்றிரண்டாய் அடக்கிக் கூறிய பொருளைத் தம்முள் வேறுபாடுகோக்கிப் பன்னிருபடலத்தில் அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என நான்காகப் பகுத்தோதியவாற்றானுமுணர்க. இஃதறியாதார், தொல்காப்பியமும் பன்னிருபடலமும் தம்முண் முரணுவனவாகக் கருதி, அவற்றுள் ஒருநூலியல்பற்றி மற்றிருன்றனை இகழ்வர்.

---

* இது திருவாசகம், போற்றித்திருவகவல். கூடம்-ம் அடியிலுள்ளது. கொடிறு என்பதை இக்காலத்தார் குறடு எனவழங்குப. † திருக்குறள். கூடும்-ம் அதி, சொல்வன்மை. கூ. கேட்டார்ப். ‡ இவை பின்னர்க் கூறப்படும். ¶ அகச்சமயம் ஆருவன:—பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாதசைவம், ஈசுவரவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவம் என்பன. சிவாத்துவிதசைவம் நிமித்தகாரணபரிணாமவாதசைவம் எனவுங் கூறப்படும்.

ஈண்டுக்கூறிய சமயத்தாருள், உலோகாயதர்முதல் ஆருகதரீருகிய அறுவரும், வேதஞ் சிவாகமமிரண்டனையும் நிந்திக்கும் நாத்திகராயினும், ஒருநூலென்றும் பிரமாணமென்றுங்கொண்டு ஒருநெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப்புறச்சமயம் என வேறுவைத் தெண்ணப்பட்டன.

தார்க்கிகர்முதற் பாஞ்சராத்திரிகளீருகிய அறுவரும், வேதம் பிரமாணம் எனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருள் தார்க்கிகர், *தன்னூற் பிரமாணியங் கொள்ளாமையானும், † வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும், மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதங்களை இகழ்தலானும், ஏகான்மவாதிகள் ஞானகாண்டமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைமூவரும் வேதவாக்கியங்களில் தத்தம்மதத்திற்குப் பொருந்துவனமாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளாமையானும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும், இவ்வறுவருஞ் சிவாகமநிந்தகராகலானும் இவர்சமயம் புறச்சமயம் என வேறுவைத் தெண்ணப்பட்டன.

பாசுபதர் முதலிய ஐவரும், வேதஞ்சிவாகமமிரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங்கொள்ளினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதமுதலிய நூல்கட்குச் சிறப்புவகையாற் பிரமாணங் கோடலானும், வேதஞ் சிவாகமமிரண்டினும் ஆகா என விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும், ஐக்கவாதசைவர் வேதஞ் சிவாகம மிரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும் எல்லாப்பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனுண்மை சாதிக்குஞ் சிவாகமவாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச்சமயமும் அகப்புறச்சமயம் என வேறுவைத் தெண்ணப்பட்டன.

ஏனைப்பாடாணவாதசைவர் முதலிய அறுவரும் பொருளுண்மை யெல்லாஞ் சித்தாந்தசைவரோடொப்பக் கொள்ளும் அந்தரங்க உரிமையுடையராயினும், அவ்வப்பொருள்கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்புமாத்திரையின் முரணுதலான் அவர்சமயம் அகச்சமயம் என வேறுவைத்தெண்ணப்பட்டன.

இவ்வாறு நால்வகைச்சமயங்கட்கும் சித்தாந்தசைவத்தோடுள்ளதாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

அகச்சமயமாறனுட் சிவாத்துவிதசைவமாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவதாகலின், அது நிமித்தகாரணபரிணாமவாதம் எனவுங் கூறப்படும். அங்ஙனங்கொண்ட ‡சிவாத்துவித வியல்பறியாதார், சிவாத்துவிதசைவ

* தார்க்கிகர் வேதத்தைச் சுவதப்பிரமாணமென்று கொள்ளாது பரதப்பிரமாணமென்று கொள்வர். சுவதப்பிரமாணம் தானே பிரமாணமாவது. பரதப்பிரமாணம் ஈசுவரனற்சொல்லப்பட்டமையிற் பிரமாணமாவது. † வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மைகோடலாவது:—பரமான்மாவைச் சகுணப் பொருள் என்று கோடல். வேதம் நிர்க்குணப்பொருள் என்று கூறும். ‡ சிவாத்துவிதசைவத்துண்மையுணராதார் எனவும் பாடம்.

மாவது யாதோ எனவும், *நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்—குலவினர்" என்ற மையின் இறுதிக்கண் எடுத்தோதப்படும் சுத்தசைவம்போலும் எனவும் மயங் குப. சுத்தசைவம் நூட்பப்பொரு ளுணராமைமாத்திரையேபற்றி வேறுவைக் கப்பட்டதன்றிக் கருத்துவகையாற் சித்தாந்தசைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவம் சித்தாந்தசைவத்துள் அடங்குமென்றுணர்க. அற்றுகலினன்றே, *"நிலவுலோ காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்—குலவின ரளவளா வாக் கொள்கைய தாகி" என வீணைச்சமயங்களோ எடுத்தோதி விலக்கிச் சுத்த சைவத்தை அங்ஙனம் விலக்காதொழிந்ததூஉ மென்க.

இனி, இவ்வாறன்றிப் பாடாணவாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம் மூள் வேறுபாடு சிறிதாகலின், அவ்விரண்டனையும் ஒன்றுகவைத்தெண்ணிச் சுத்தசைவத்தையு முடன்கூட்டி அகச்சமயமாறெனக் கோடலுமொன்று. இங் ஙனமாகலான் †"மெய்தரு சைவ மாதி யிருமூன்றும்" என்றதூஉம் பாடா ணவாதம் முதலிய அறுவகைச்சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர் முதலி யோர் கலிக்கு மேலுள்ள தத்துவங்களோ உணராமையின் அவர் †"வித்தை யாதி—யெய்துதத் துவங்க ளெய்வர்" எனக் கோடல் பொருந்தாமை அறிக. ஐக்கவாதசைவர் கலிக்குமேலுள்ள தத்துவங்க ளுண்டெனக் கொள்வாராயி னும் மூலமலம் உண்டென்பதறியாமையின் மூலமலம் நீங்கிய முத்தர்க்கன் றிச் சுத்த தத்துவ புவனங்களிலெய்துதல் கூடாமையின், அவர்க்கு முத்தி த்தானம் மோகினிக்குமேல் சுத்தவித்தைக்குக் கீழ் விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாமாகலின், வீணைப்பாடாணவாதசைவர் முதலியோரே †"வித்தை யாதி * * * தத்துவங்களெய்வர்" என்றறிக. ‡"புறச்சமயத் தவர்க்கிருளா யக ச்சமயத் தொளியாய்" என்புழியும் அகச்சமயமென்றது, ¶"ஏக னனேக னிருள்கரும மாயையிரண்டு" என்னும் ஆறுபொருளுங்கொண்ட பாடாண வாதம் முதலிய அறுவகைச்சைவங்களேயாமெனவும், புறச்சமயமென்றது அங்ஙனம் பொருளுண்மை கொள்ளாத வீண §மூவகைப் புறச்சமயங்களையு மெனவும் உணர்ந்துகொள்க.

புறப்புறச்சமயம்.

**உலோகாயதம்.

புறப்புறச்சமயமாறனுள் உலோகாயுதமாவது:—காண்டலளவை ஒன்றே பிரமாணம்; காணப்படும் நிலம் நீர் தீ வளியென நான்கே தத்துவங்கள்; இவை நித்தப்பொருள்கள்; இவற்றின் கூட்டமே உடம்பு; பாகடையுஞ் சுண்ணும் புங் கூடியவழிச் செவ்வண்ணம் பிறக்குமாறுபோல இவற்றின் கூட்டரவின்

* சிவப்பிரகாசம், உண்மையதிகாரம், நூற்கருத்து. க. நிலவுல. † சிவஞான சித்தி, உ-ம் சூ. எகூ. மொய்தரு. ‡ சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து. எ. ¶ திருவருட் பயன், அறியுநெறி. உ. § இவை பின்னர்க் கூறப்படும். ** இவ்வுலோகாயதமதம் சாருவாகமதம் எனவும் பெயர்பெறும். ஈண்டுக்கூறும் மதங்களின் இயல்புகள் நீலகண் டபாடியத்திலும் சர்வதரிசனசங்கிரகம் என்னும் நூலிலும் பரக்கக்காணலாம். இவற்றுள் உலோகாயதமத வியல்பு வான்மீகிராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்து கூஅ-ம் அத்தியாயத்தும் கூறப்பட்டிருக்கின்றது.

ஒருணர்வுண்டாம்; அவ்வுணர்வு உடம்பு வளரவளரும் தேயத் தேயும் ஆக லின் உடம்பிற்கு வேறே உயிரென்பதும் பொய்; உடம்பிற்கு இன்பத்துன் பங்கள் இயல்பா யுள்ளன; இவற்றிற்குக்காரணம் வினை என்பதும் பொய்; மயி லீச் சித்திரித்தாரையும் குயிலைக் கூவுவித்தாரையுங் காணுமையிற் கடவுளுண் டென்பதும் பொய்; இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்து உண்டுடுத்து வாழ்வதே துறக்கவின்பம்; அதுபெறுது பகைவரால் நோயால் வறுமையால் நூல்களாற் பிறவாற்றால் வருந்துவதே நிரயத்துன்பம்; வேறே துறக்கநிரயமுள என்பதும் பொய்; நான்கு பூதக்கூட்டரவிற் பிராணவாயு ஒன்று நீங்கில் உணர்வழிந்து உடம்பு நாசமாம்; அதுவே வீடுபேறு; வேறே வீடுபேறுண்டென்பதும் பொய்; இவ்வுண்மை உணராத மடவோர் மறுமை யுண்டெனக்கொண்டு தவங்கள் பட்டினி முதலியவற்றுன் வருந்துவர்; கற்பு முதலிய *சங்கேதநூல்கள் மதுகையின்றி மதியுடையோராற் செய்யப்பட் டன; பொன் நிலம் உணவு முதலிய தானங்களே உயர்த்துக்கூறும் நூல்கள் பசியான் வருந்தி நல்கூர்ந்தோராற் செய்யப்பட்டன; தேவதலம் கண்ணீர்ப் பந்தர் கூவல் பொய்கை சோலை முதலியன செய்தலே உயர்த்துக்கூறும் நூல் கள் வழிச்செல்வோராற் கூறப்பட்டன; ஆகலான் இவற்றைக்கைவிட்டு உழவு பசுக்காவல் வாணிகம் செங்கோன்முறைமை முதலியனவாக ஆன்றோர் காட் டிய நெறியினின்று இம்மையின்பங்களே நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம்.

உலோகாயதநூல் செய்தோன் †பிருகற்பதி என்றுணர்க. இவ்வுலோகா யதர் தேகான்மவாதிகளும், இந்திரியான்மவாதிகளும், பிராணன்மவாதிக ளும், அந்தக்காணன்மவாதிகளுமெனப் பலதிறப்படுவர்.

பௌத்தம்.

இனிப் பௌத்தமாவது:—உலகத்துப் பிறந்திறந்துழன்று ‡ சிலம் முத லியவற்றுன் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப் போற் பிறருமுணர்ந்து உய்தற்பொருட்டுக் கருணையினுற் பிடகநூல் செய்த வன் புத்தக்கடவுள்; அந்நூலிற் கூறும் பொருள்களாவன ஞானமே ஆன்மா எனப்படும்; அது நீரோட்டம்போலச் ¶ சந்தானமாய்க் கணந்தோறுந்

* சங்கேதம் - நியமனம். † பிருகற்பதி - தேவகுரு. ‡ சிலம் முதலியன:—சீலம், சமாதி, பிரஜ்ஞை. இவ்வாறு திரிபிடகத்துட் கூறப்பட்டது. சீலம் விலக்கியவற்றை ஒழித்து விதித்தவற்றையேசெய்தல். சமாதி மனத்தை ஒருமுகப்படுத்தல். பிரஜ்ஞை மெய்ஞ்ஞானம். இவற்றுள் சீலம் பஞ்சசீலமும், அஷ்டசீலமும், தசசீலமுமென மூன்று வகைப்படும். கொல்லாமை கள்ளுண்ணுமை, பொய்யாமை, காமமின்மை, கள்ளாமை என்னும் ஐந்தும் பஞ்சசீலங்களாம். இவற்றோடு இரவிற்றூய்மையில்லாத உணவைப் புசியாமை, சந்தனம் முதலிய மணமுள்ளபொருளை உபயோகியாமை, தரையிற் பாயின் மேலேபடுத்தல் என்னும் இம்மூன்றுஞ் சேர அஷ்டசீலங்களாம். இவற்றோடு நாட்டியம் கானம் முதலியவற்றை விரும்பாமை, பொன்வெள்ளிகளைத் தொடாமை என்னும் இவ் விரண்டுஞ்சேரத் தசசீலங்களாம். ¶ சந்தானமென்பது தொடர்ச்சி. அது தாராசந்தா னம், வாயுசந்தானம், தீபசந்தானம், பிபீலிகாசந்தானம் என நால்வகைத்து. தாராசந்தான மாவது ஓராற்றில் நீர் ஓடிக்கொண்டிருக்கும்போது ஓரிடத்தில் ஒரு விரலடியிற்கண்டநீர்

தோன்றி அழியும்; அங்ஙனம் தோன்றியழியுங்கால் *மான்மதக்காற்றம்போல மூற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்திற்றோன்றிய வாசனை, பிற்கணத்திற் றோன்றும் ஞானத்திற் பற்றுதலான் அறிவு முதலாயின நிகழும்; மற்றுமுள பொருளெல்லாங் கணந்தோறுந் தோன்றியழியும்; இந்த ஞானத்திற்றோன்றிய வாசனை அழிவதே முத்தி என்பதாம். ஞானங்கூடக் கெடுதல் முத்தி என்பாருமுளர்.

இப்பௌத்தமதத்தர் மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என நால்வகைப்படுவர். இந்நால்வரும், முறையே எல்லாப்பொருளும் சூனியம் எனவும், புறப்பொருள் சூனியம் எனவும், புறப்பொருளுண்மை வழியளவையான் அறியப்படும் எனவும், புறப்பொருள் காட்சிப்பொருளாம் எனவுங் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்.

மாத்தியமிகர்.

இவருள், மாத்தியமிகராவார்:—உலகத்துப்பொருள்கள் உள்பொருளாயின், அழியா; இல்பொருளாயின், தோன்றா; உள்ளவுமில்லவுமாமெனின், முரணும்; இரண்டுமல்லவெனின், உணர்ச்சி கூடா; ஆகலின் இந்நான்கு பகுதியுமின்மையான் எல்லாப்பொருளுஞ் சூனியமே; மயக்கத்தாற் காட்சிப்பொருள்போலப் புலப்படுகின்றன என ஆசிரியன் பிடகநூற்பொருள் உணர்த்திய வழி அதனை உண்மையாகக்கொண்டு மேல் வினவாதார்.

ஆசிரியன் மொழிந்தது பொருளெனக் கோடலிற் றலைமாணாக்கர், அதற்குமேல் வினை நிகழ்த்தாமையிற் கடைமாணாக்கர், என இரண்டும் ஒருங்குற்று நின்றமையின் மத்தியமமாணாக்கராய் மாத்தியமிகர் எனப் பெயர்பெற்றார் என்பது.

யோகாசாரர்.

இனி, யோகாசாராவார்:—அங்ஙனம் ஆசிரியன் உணர்த்தியவழிப் புறப்பொருள் பாழென்பதனை உடம்பட்டு ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றோ! என வினையினுக்கு, நன்றேவினையினீர்; ஞானமாத்திரம் உள்ளது; அந்தஞானம் சாகாரம் நிராகாரம் என்று இருவகைப்படும்; அவற்றுள், வட்டம் சதுரம் கூம்புப் சிவப்பு முதலிய வடிவிற்றாய் அகத்தே தோன்றும் ஞானம் சாகாரமெனவும், பந்தம் நீங்கியவழி அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் எழுவதாகிய ஞானம் நிராகாரமெனவுங் கூறப்படும். இத்தன்மைத்தாகிய ஞானமேயன்றிப் பொருளென வேறில்லை; கனவின்கட் புறப்பொருளை அவாவாது கேவலஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின்கண் வழங்குவதும் அவ்வாறேயாம்; அவ்வுணர்வு அகத்தின் நிகழ்வதேயாயினும் அநாதிவாசனைவயத்தாற் புறத்தே காணப்படுவதுபோலத் தோன்றுகின்றதெனக்கொள்க என்று ஆசிரியனுணர்த்தினன். அங்ஙனம்

அவ்விடத்தில் அடித்தவிகாடியில் இல்லையாயினும் அவ்வாற்றுமுகம் ஒன்றுக் கருதப்படுதல். தாரை-நீரோட்டம். * முன் மான்மதம் வைத்தெடுக்கப்பட்டொழிந்த பெட்டியில் பின்வைக்கப்படும் பொருளிலும் அதன்வாசனை பற்றுதல் போல என்க.

உணர்த்தப்பட்டோர், ஆசிரியன் மொழிந்ததனே உடன்பட்டு அதற்குமேல் விஞ்ஞானாகலின் யோகாசாரரென்றுரையினர் என்பது.

பௌத்தமதவாசிரியன்மொழி உடம்படுதலே ஆசாரம் எனவும் அதற்கு மேல் விஞ்ஞதலே யோகம் எனவுங் குறியிட்டு வழங்குபவாகலான் அவ்விரண் டானும் பெற்ற பெயர் என்றுணர்க.

சௌத்திராந்திகர்.

இனிச், சௌத்திராந்திகாவார்:—அங்ஙனம் ஆசிரியனுணர்த்தியவழிப் புறப்பொருள் முழுதுஞ் சூனியம் என்பதென்னை? யான் இதுகண்டேனென்று உணர்வுழி யான் என்னும் ஞானம் அகத்துப்பொருளும் இது என்று சுட்டியறியப்படுவது புறத்துப்பொருளுமாகலான் அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டும் ஒருங்குணர்தலேபற்றி ஒன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டுமொருங்குணர்தல் எனவே வேறுபாடின்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படம் முதலியனவாகத் தோன்றுகின்ற தெனக் கோடல் பொருத்தமன்று என விஞ்ஞானியர்க்கு, நன்றே விஞ்ஞானீர்! புறத்துத் தோன்றுவனவும் உள்பொருளேயாம்; அவை காட்சிப்பொருளல்ல; குடவடிவிற்றாகிய ஞானம் உணர்ந்தபின் னன்றிக் குடமுணர்தல் கூடாமையின் கணத்திற் றோன்றியழியுங் குடம்முதலாயின அங்ஙனம் உணருங்காறும் நிலை பெறுதலின்மையாற் குடம்முதலாயின் தத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டழிந்தபின்னை, ஞானத்துட் பற்றிய வடிவானே அங்ஙனம் இறந்துபோய குடம்முதலாயின வழியளவையின்வைத்து உணரப்படும். இவற்றிற்குக் காரணம்என்னை? எனில், புறம் அகம் என்னும் இருவகைச்சமுதாயமாம். அவற்றுட் புறச்சமுதாயம் நிலம் முதலாலன. அவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை, நிலவணு நீரணு தியணு வளியணு என நால்வகைப்படும். அவை ஒருங்குபலதொக்கவழிப் புறச்சமுதாயந்தோன்றும். இனி, அகச்சமுதாயம் சித்தமும் சித்தப்பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படுங் கந்தங்கள்; அவை, உருவம் வேதனை ஞானம் குறி வாசனை என்பனவாம். கந்தம் என்பது சமூகம் என்னும்பொருட்டு. அவற்றுட் சித்தத்தாற் சிந்திக்கப்படுஞ் சத்தம் முதலாயின உருவக்கந்தம். இவை புறத்துள்ளனவாயினும் அகத்திற் சித்தத்தாற் சிந்திக்கப்படுதலின் அகச்சமுதாயத்துள்வைத்து எண்ணப்பட்டன. இனி, அகச்சமுதாயத்துட்பட்ட உடல் பொறி முதலியவற்றை உருவக்கந்தம் என்றலுமொன்று. அவ்வுருவக்கந்தத்தை உணருமுணர்வு ஞானக்கந்தம்; அது சாகாரம் நிராகாரம் என்னும் வேறுபாட்டாற் * பிரவிருத்திவிஞ்ஞானம் என்றும் † ஆலயவிஞ்ஞானம் என்றும் இருவகைப்படும். சாகாரஞ் சவிகற்பமாம். நிராகாரம் நிருவிகற்பமாம். இனி, இவ்வுணர்வாற்றோன்றும் இன்பத்துன்பமொதுமல்கள் வேதனைக்கந்தம். சாத்தன் கொற்றன் முதலிய பெயர் குறிக்கந்தம். அப்பெயர்களாற் பகுத்துணருஞ் சவிகற்பவுணர்வு குறிக்கந்தம் எனவும், நிருவிகற்பமொன்றே ஞானக்கந்தம் எனவுங் கோடலுமொன்று. அவற்றின் வாசனை வாசனைக்கந்தமாம். வாசனையெனினுஞ் செய்கையெனினும் ஒக்கும். குறியெ

* பிரவிருத்திவிஞ்ஞானம் சவிகற்பமாய் விரியும் ஞானம். † ஆலயவிஞ்ஞானம் - அங்ஙனமின்றி ஒடுங்கும் ஞானம். ஆ - முழுதும். லயம் - ஒடுங்கல்.

னினுஞ் சஞ்ஞையெனினும் ஒக்கும். இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலான் அகச்சமுதாயம்தோன்றும். இவற்றுள், உருவக்கந்தம் புறச்சமுதாயத்துள்வைக்கப்படும் ஏனை நான்குமே சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் என்பாருமுளர். சகம் முழுதும் இவ்விருவகைச் சமுதாயத்துள் அடங்குமென்று ஆசிரியன் உணர்த்தினன். அதுகேட்ட மாணாக்கர், இங்ஙனம் மாணாக்கர் விஞ்ஞிய கடாவிற்கேற்ப அறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவுபெறும் எனக் கடாயினர். அவ்வழி ஆசிரியன் சூத்திராந்தங் கடாவிய நீர் சௌத்திராந்திகர் எனப்பெயர்பெறுக என்றமையின் அவர்க்கு அது பெயராயிற்று.

வைபாடிகர்.

இனி, வைபாடிகராவார்:—ஆசிரியன் இங்ஙனம் உணர்த்தியவழி அது கேட்ட மாணாக்கர், புறப்பொருள் ஞானத்தால் அநுமித்தறியற்பாற்றென்ற தென்னை? ஞானமே தனக்குக் காட்சிப்பொருளாகலானும், காட்சிப்பொருள் ஒன்றுமின்றாயின் *வியாத்தியுணர்தற்கு இடம் இன்மையான் வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோளுரைபோலும் எனக் கடாயினராகலின், அவர் வைபாடிகர் எனப்பட்டார். மாறுகோளுரை எனினும் விபாடை எனினும் ஒக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப்பொருளாம் எனவும் ஆசிரியன் உணர்த்தினன்.

இங்ஙனம் விஞ்யினர் கருத்துக்கேற்ப நால்வகைப்படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்கம் முதலியவற்றை உடம்பட்டுக்கோடலான் எல்லாரும் முறையானே முழுதுஞ் சூனியம் என்று கோடற்குரியர் என்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் விஞ்யினர்கருத்துக் கேற்ப ஆசிரியன் கூறிய விடைப்பொருளே உறுதியாகக் கோடலின் மதம் வேறுபட்டு நால்வராயினர். இங்ஙனம் பௌத்தமதம் நான்கும் கண்டுகொள்க.

ஆருகதம்.

இனி, ஆருகதமாவது:—சீவனும், அசீவனும், ஆச்சிரவமும், சமுவரமும், நிர்ச்சரமும், பந்தமும், வீடும் எனப் பதார்த்தங்கள் ஏழுள. இவற்றுட் சீவன் அநாதிசித்தனும் முத்தனும் பெத்தனும் என மூவகைப்படும். இவற்றுள், அநாதிசித்தன் அருகக்கடவுள். முத்தன் †மோகம் முதலிய பந்தத்தின்நீங்கினவன். பெத்தன் அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்த உடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறும்.

இனி அசீவன், புற்கலமும் ஆகாயமும் தன்மமும் அதன்மமும் என நான்குவகைப்படும். அவற்றுள், உருவப்பொருளான நிலம் முதலிய நாற்பெரும் பூதமும், மரம் புல்லு முதலிய நிலையிற்பொருளும், பை முட்டை முதலியவற்றிற் பிறக்கும் இயங்கியற்பொருளும் எனப் புற்கலம் அறுவகைப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். உலகாகாயமும் உலகங்கடந்த ஆகாயமும் என ஆகாயம் இருவகைப்படும். உலகங்களுக்கு உட்படுமாகாயம் உலகாகாயமென

* வியாத்தி - நியதமான உடனிகழ்ச்சி. † மோகம்முதலியன:—மோகம், அந்தராயம், கோத்திரம், நாமம், ஆயுஷ்யம், வேதனீயம், தரிசனாவரணீயம், ஞானாவரணீயம் என்பன.

வும், உலகங்கட்குப் புறத்தே எல்லையின்றி உள்ளது உலகங்கடந்தவாகாய மெனவும் உணர்க. தன்மம் புற்கலத்தின் வேறும் நன்மையைப் பயப்பது. அதன்மம் தீமையைப் பயப்பது. அசீவபதார்த்தவகை நான்கும் இங்ஙனங் கண்டு கொள்க. இவையெல்லாம் அத்திகாயம் என்னும் வாய்பாடுகூட்டி வழங்கப்படும்.

இனி ஆச்சிரவமாவது, பொறிவழிச்சேறல்; கன்மத்தொடர்ச்சி என்பாருமுளர்.

சமுவரமாவது, அங்ஙனஞ் செல்லாமற்றடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்தில் எறும்புமுதலியன சாவாது வழிநோக்கி மெல்ல இயங்குதலும், இனியவை கூறுதலும், நியமவணவும் முதலாயினவாம்.

நிர்ச்சரமாவது, சுடுபாறையிற்கிடத்தல், தலைமயிர்பறித்தல் முதலிய தவம்.

பந்தமாவது, இருப்புக்குடம்பை தன்னைகப்பட்ட சுரைப்பழத்தை நீரிலே யிற் கீழ்ச்செலுத்துமாறுபோலச் சிவனுடைய சுதந்திரத்தை அடக்கிப் பிறவி யிற் சுழல்விக்கும் மோகம் முதலிய எண்குணங்களுமாம்.

வீடாவது, இருப்புக்குடம்பை தகர்ந்தவழிச் சுரைப்பழம் மேலெழுமாறு போலச் சிவன் மோகம் முதலியவற்றின் நீங்கிச் சுதந்திரம்பெற்று உலகங்கடந்து எல்லையின்றியுளதாகிய ஆகாயத்தின் மேலேஞ்சியேசேறல். மேலெல்லைக் கண் இருத்தல் முத்தி என்பாருமுளர்.

இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் அநேகாந்தவாதத்தாற் கூறப்படும். அஃதாவது, உடம்பெடுத்தற்குமுன் சிவனுண்டோ? இல்லையோ? என்று வினவ வழி, உண்டாம்! இல்லையாம்! உண்டுமில்லையுமாம்! சொல்லொணாதாம்! உண்டுமாஞ்சொல்லொணாதுமாம்! இல்லையுமாஞ்சொல்லொணாதுமாம்! உண்டுமில்லையுமாஞ் சொல்லொணாதுமாம்! என எழுவகையான் இறுத்தல். வினவையெல்லாம் இவ்வாறே இறுக்கப்படும். ஆம் என்பது ஈண்டுச் சற்றென்னும் பொருட்டாயதோ நிடைச்சொல். சொல்லொணாதது என்பது உளதுமிலதுமல்லாதது என்னும் பொருட்டு என்பது. எனவே, உள்ளதும் இல்லதும் உளதிலதும் இரண்டுமல்லதும் என நான்குபக்கமாய், இரண்டுமல்லதென்னும் பொருட்டாகிய சொல்லொணாதென்பது ஈறு உள்ளதும் இல்லதும் உளதிலதும் என்னும் மூன்றுங்கூட்ட * எழுபக்கமாயின எனக் காண்க.

பொருளியல்பு இவ்வெழுவகையுள் ஒன்றுகச் சொல்லவும்படும் சொல்லவும்படாது என்பது கருத்தாகலின் முரணையுமறிக. இவ்வெழுவகையுள், ஒவ்வொன்றேபற்றிக் கூறும் ஏனைச்சமயத்தார் சோகாட்பாடெல்லாம் உள்ளடக்கிற்றலின், இங்ஙனம் அநேகாந்தவாதம் கூறுஞ் சமயமே மேற்பட்ட சமயம் என்பது அவர் கருத்து. ஆருகதம் முடிந்தது.

இவருள், உலோகாயதன் காட்சிவாதி எனவும், பௌத்தன் கணபங்கவாதி எனவும், ஆருகதன் அநேகாந்தவாதி எனவும், பௌத்தருள்ளும் மாத்தியமிகன் சூனியவாதி எனவும், யோகாசாரன் விஞ்ஞானவாதி எனவும், வைண

* வடநூலார் இதனை சப்தபங்கம் என்றும் சப்தபங்கிநியாயம் என்றும் கூறுவர்.

இருவருஞ் சமுதாயவாதிகள் எனவும் உணர்க. இவ்வாறு புறப்புறச்சமய மாறும் கண்டுகொள்க.

புறச்சமயம்.

தருக்கம்.

இனிப், புறச்சமயமாறனுள் தருக்கமாவது:—வைசேடிகமும் நையாயிக மும் என இருவகைப்படும். அவற்றுள், வைசேடிகதூலிற் கூறும் பொருளா வன, திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மை எனப் பதார்த்தம் எழுவகைப்படும்.

இவற்றுள் திரவியம், நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனம் என ஒன்பது வகைப்படும். அவற்றுள், நிலம் முதலிய நான்கும் அநித் தப்பொருள். அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகா யம் முதலிய ஐந்தும் நித்தப்பொருள்கள். அவற்றுள் ஆகாயம் காலம் திசை மூன்றும் ஓரோவொன்றேயாய் வியாபகமாயுள்ளன. ஆன்மாக்கள் வியாபக மாய் எண்ணிறந்தனவாம். மனம் அணுவளவிற்றாய் ஆன்மாக்கடோறும் வெவ் வேறாயிருக்கும். ஆன்மா பரமான்மா சீவான்மா என இருவகைப்படும். பரமா ன்மா முற்றுணர்வுடையவன்; எல்லாம் வல்லவன்; அவனிச்சைவசத்தாலே உலகந் தோன்றி ஓடுங்கும்; அவனுற் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவா ன்மாக்கள், சிற்றறிவினவாய் வினைக்கீடாகப் பிறந்திறந்து இன்பத்துன்பங் களை நுகர்வனவாம். ஆன்மாக்களுக்கு மனத்தோடு கூடாதவழி அறிவில்லை. இங்ஙனம் திரவியம் ஒன்பதுங் கண்டுகொள்க.

இனிக் குணங்களாவன, திரவியம் பற்றுக்கோடாக நிகழ்வன. அவை, உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்துநான்குவகைப்படும். அவற்றுள், புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவம் என்னும் எட்டுக் குணமும், *பாவனை என்னும் வாதனையும் சீவான்மாக்களுக் குச் சிறப்புக்குணங்கள். இவற்றுள், புத்தி விருப்பு முயற்சி மூன்றும் பரமா ன்மாவுக்குச் சிறப்புக்குணங்கள். பரமான்மாவின் குணங்களாகிய புத்தி முத லிய மூன்றும் நித்தியம். சீவான்மாக்களின் புத்தி முதலிய மூன்றும் அநித்தி யம். வினையும் ஓர்ந்துணர்க.

தொழிலாவன, எழும்பல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என ஐவ கைப்படும்.

சாதியாவது, பலபொருட்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரம் என இருவகைப்படும்.

விசேடமாவது, ஒவ்வொருபொருட்கே உரிய தன்மை. அவை, நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்துமாகிய நித்தப்பொருள் களின் வேறுபாடுணர நிற்பனவாய்ப் பலவாம்.

* பாவனை - அநுபவத்தாற்றோன்றி நினைவிற்குக் காரணமாயுள்ளது.

சமவாயமாவது, அவயவம் முதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு. அஃது ஒன்றேயாம்.

இன்மையாவது, முன்னின்மையும் அழிவுபாட்டின்மையும் என்று மின்மையும் ஒன்றினொன்றின்மையும் என நான்குவகைப்படும்.

ஆக இங்ஙனம் கூறும் எழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு பொதுவியல்பு வேற்றியல்புகளை உணரவே உடம்பு முதலியவற்றின் வேறுகிய ஆன்மாவினியல்பு விளங்கும். விளங்கவே, உடம்பு முதலியவற்றை நானென்று எண்ணிய மித்தையுணர்வு கழியும். அது கழியவே, முயற்சியின்மையின் அறம்பாவங்கள் இல்லையாய்ப் பிறவி ஒழியும். ஒழியவே, வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின் உடம்பு முகந்துகொண்ட வீணப்பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மனத்தோடு கூடுதற் கேதுவின்மையின் அறிவின்றிப் பாடாணம்போற் கிடப்பதே முத்தி என்பதாம். வைசேடிகதூல் செய்தவன் கணாதமுனிவன்.

இனி, நையாயிகமாவது:—வைசேடிகதூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறுபடுத்திப் பிரமாணம் பிரமேயம் முதலாகப் பதினாறுவகையான் விரித்துக் கூறுவதாம். நையாயிகதூல் செய்தவன் அக்கபாதமுனிவன்.

இங்ஙனம் இருவகைப்படுங் தருக்கநூலார் சிலவற்றிற்குக் கணபங்கங் கூறுமாறுவது, உண்டவுணவின்சாரமே அவயவங்களாய்ப் பரிணமித்துக் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வேறுபடுதலின் அவயவியாகிய உடம்பும் வளர்ந்துந் தேய்ந்துங் கணந்தோறும் பிறிது பிறிதாம்; அங்ஙனம் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும், மழைத்தாரையால் நிறையும் பொய்கைநீரும் இறைப்பக் குறையுங் கூவல் நீரும் போல முடிவின்கட் காணப்படுதலிற் கணந்தோறும் வளர்தலுந் தேய்தலுமுடைமை பெற்றும். இவ்வாறே மண்டொடுதல் பூரித்தல் முதலியவற்றுல் நிலமும், யாற்று நீர்ப்பெருக்கு முதலியவற்றுற் கடலும், கணந்தோறும் நிறைவு குறைவுடைமையான் இன்னோன்னவையெல்லாம் கணபங்கமாய்ப் பிறிது பிறிது தோன்றும் எனக் கொள்வர்.

சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் தார்க்கிகரும் பரமாணுகாரணவாதிகளாயினும், அவருட் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் பரமாணுக்கள் ஒருங்கு பலதொக்குக் காரியமாமென்பர். தார்க்கிகர் அவ்வாறன்றி இறைவனிச்சைவயத்தாற் பரமாணுக்களிற் கிரியையேதான்றி இவ்விரண்டு பரமாணுக்கள் தம்மிற்சேர்ந்து இரட்டையணுவாய், அவை மும்மூன்று தம்முட்சேர்ந்து மும்மையணுவாய், அவை நங்நான்கு தம்முட்சேர்ந்து நான்மையணுவாய், இவ்வாறே ஒன்றற்கொன்று சினையும் முதலுமாய் முறையே தோன்றிக் காரியப்படும் என்றும், ஒடுங்குங்காலும் இறைவனிச்சைவயத்தான் அம்முறையே ஒடுங்கும் என்றுங் கொள்வர்.

தார்க்கிகரும் சௌத்திராந்திகர் வைபாடிகரும் நிலவணு நீரணு தியணு வளியணு எனப் பரமாணுக்கள் நால்வகைப்படும் எனக் கொள்வர். சமணர்

அவ்வாறு கொள்ளாது பரமாணுக்களெல்லாம் ஒருதன்மையனவே என்பர். இவை தம்முள் வேற்றுமை.

இங்ஙனமாயினுந் தார்க்கிகர், வேதநெறியினெழுகி வேதத்திற்குப் பிரமாணங் கோடலிற் புறப்புறச்சமயிகளாகிய நாத்திகரோடு சேராது வைதிகருள்வைத் தெண்ணப்பட்டாரென்க. தார்க்கிகமதம் முடிந்தது.

மீ ம ா ஞ் சை.

இனி, மீமாஞ்சையாவது:—வேதத்திற் கருமகாண்டவாராய்ச்சி செய்தற்கெழுந்த நூலாகலின் அதுவும் வேதம் எனப்படும். அது, பன்னிரண்டத்தியாயமாகச் சைமினி முனிவனுறச் செய்யப்பட்டது.

அந்நூல் கூறும்பொருளாவது:—வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியேசுயம்புவாயுள்ளது; அங்ஙனமாகலின் வேதம்பிரமாணம்எனப்படும்.

வேதத்துள்ளும் "நீராடுக," "வேள்விசெய்க," "வழிபடுக" என்றுற்போலத் தொழிற்படுத்துவனவாகிய சோதகவாக்கியங்களே பிரமாணமாம். உலகத்துச் சொற்பொருளுணரும் அவாவினராகிய இளையோர், "ஆவினை யாக்க" "மேதியைவிடுக்க" என வவும் முதியோன் கூறும் மொழி கேட்டும், அதுபற்றி இயற்றும் முதியோன் செய்யுந் தொழிலினைக் கண்டும், "பின்பு மேதியை யாக்க" "ஆவினை விடுக்க" என மாறிக்கூறியவழி அங்ஙனஞ் செய்யுந் தொழிலினைக்கண்டும், இச்சொற்கு இதுபொருள் இச்சொற்கு இதுபொருள் எனவும், இங்ஙனஞ் சொற்பொருளெல்லாந் தொழிற்படுத்துஞ் சொல்லானே உணர்தற்பாலன எனவும் உணர்ந்து கொள்வாராகலின், வேதத்தினும் அவ்வாறு தொழிற்படுத்துஞ் சொற்களே பொருள்விளக்கிப் பிரமாணமாம் என்பது தெளியப்படும்.

அங்ஙனமன்றி, "உலகந் தோன்றி ஒடுங்கும்" என்றும், "தோற்றி ஒடுக்குதற்கோரிறைவனுண்டு"என்றும், "இந்திரன்முதலியகடவுளர்உளர்"என்றும், "அவர் இவ்வியல்பினர்" என்றும் பொருளியல்புகூறும் வாக்கியங்கள் பிரமாணமாகாவாயினும், அவை தொழிற்படுத்துவனவாகிய சோதகவாக்கியங்கட்குப் புனைந்துரைவகையால் உபகாரமாதல்பற்றிப் பிரமாணமெனக் கொள்ளப்படும்.

"இந்திராயசுவாகா," "வருணயசுவாகா" என்றுற்போலும் வேதமந்திரங்களும் பொருளுடையவல்லவாயினும் விதிவாக்கியங்கட்கு உபகாரமாதல் பற்றிப் பிரமாணம் எனப்படும்.

"சோதிட்டோமம்" "பரிமேதம்" என்றுற்போலும் வேள்விப்பெயர்களும், வேள்விகளின் வேறுபாடு முதலிய உணர நிற்றலிற் பிரமாணமாம்.

இங்ஙனம் வேதத்தின் விதிவாக்கியமல்லாதனவும் ஒருவாற்றுன் விதிக்கு உபகாரப்படுதல்பற்றிப் பிரமாணம் என உபசரித்துக் கொள்ளப்படும்.

வேதமெல்லாம் இங்ஙனம் விதியும் புனைந்துரையும் மந்திரமும் குறியீடும் என நான்குவகைப்படும். இவற்றுள், விதி அங்கியும் ஏனைமூன்றும் விதிக்கு அங்கமுமாம். விதிவாக்கியம் விதித்தலும் விலக்குதலும் என இருவகைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும் அறமும் பாவமும் என இருவகைத்து.

"ஆன்மாவை அறிக" என விதித்தலின் ஆன்மாக்கள் பலவாய்நித்தமாய் வியாபகமாய்ப்பிறந்திறந்துவினைகளைச்செய்துவினைப்பயன்களைநுகர்ந்துவரும்.

வினைசெய்தவர்க்கு வினையே துறக்கம் முதலிய பயன்களை உதவும். காமியப்பயன்களைக்குறித்து வினைசெய்யின் அவ்வப்பயன்களை உதவும். காமியம் வேண்டாது விலக்கியனவும் ஒழித்து வேள்வி செய்யின் அவ்வினை முத்தியை உதவும்.

இவ்வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒருவன் உண்டு என்பது உம், உலகந் தோன்றி அழியும் என்பதூஉம் பொய்; உலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பதாம்.

இங்ஙனம் செய்யப்பட்ட சைமினிசூத்திரங்கட்குப் பாடியஞ் செய்தான் சபரமுனிவன். சூத்திரத்திற்குப் பாடியத்திற்குஞ் சிறுபான்மை வேறுபடுகொண்டு பட்டாசாரியன் சூத்திரமதம்பற்றி வழிநூல் செய்தான். பட்டனும் மாணாக்கனுகிய பிரபாகரன் பாடியமதம்பற்றி வழிநூல்செய்தான். இங்ஙனமாகலின் மீமாஞ்சைமதம் இருவகைப்பட்டது.

பட்டாசாரியன், கன்மமே பயன்கொடுக்கும் என்றும் முத்தியில் ஸ்யாயிகர்போல ஆனந்தமுண்டு என்றுங் கொள்வன். பிரபாகரன், கன்மகாரத்தில் அபூருவம் என ஒன்று தோன்றின்று பயன்கொடுக்குமென்றும் வைசேடியர் போலப் பாடாணம்போற் கிடப்பதே முத்தியென்றுங் கூறுவன்; பொருட்டன்மைகளினுஞ் சிறுபான்மை பட்டாசாரியனில் வேறுபடக் கூறுவன். பிரபாகரமதம் எனினுங் குருமதம் எனினும் ஒக்கும்.

மீமாஞ்சைநூல் பன்னிரண்டத்தியாயத்துள் முதலத்தியாயம் முதற்பாதத்திற் கருமங்களுக்கு நேரே பிரமாணமான விதிவாக்கியங்கட்குப் பிரமாணம் இல்லை என வாதிகள் கூறுஞ் சங்கைகளை மறுத்து வேதம் சுயம்புவாகலிற் பிரமாணமாமென்றும், இரண்டாம் பாதத்திற் புனர்த்துரைவாக்கியங்களுந் மந்திரங்களுமாகிய இரண்டும் விதிக்கு வேண்டப்படுகிற திரஷியங்களுக் துதிகளும் முதலியவற்றைத் தெரிவித்தலிற் பிரமாணமாமென்றும், மூன்றும் பாதத்தில் வேதத்தோடு முரணுது மனு முதலிய ஆன்றோராற் செய்யப்பட்ட ஸ்மிருதி முதலியவற்றிற்கு மூலவேதம் உண்டென்று வழியளவையான் உணர்ப்படுதலின் அவை பிரமாணமாமென்றும், காலாம்பாதத்தில் விதிவாக்கியத்தில் அகப்பட்ட வேள்விப்பெயர்கள் கருமவேறுபாடும் மாட்சிமேற்றும் அநுவாதமும் முதலியன உணர்விற்றலானும் கருமத்திற்குப் பெயராதலானும் பிரமாணமாமென்றும் இவ்வாறு பிரமாணமாமாறு உணர்த்துதலிற் "பிரமாணவியல்" என்னும் பெயர்த்து.

இரண்டாமத்தியாயம் அங்ஙனம் பிரமாணமாகிய வேதத்திற் பெறப்பட்ட கருமங்கள் வேதவாக்கியங்களிற் கூறும் பருதிவினை வேறுபடுதலும், ஒரு வினை பலகாற்கூறுதலும், தொகைகூறுதலும், வேறுவேறு குறியிடுதலும், குணவேறுபாடு கூறுதலும், வேறுபிரகாணத்திற் கூறுதலுமாகிய இவற்றுள் ஒன்றற்கொன்று வேறுபாடிடைமை தெரிவித்தலிற் "கருமபேதவியல்" என்னும் பெயர்த்து.

மூன்றுமத்தியாயம், அங்ஙனம் பலவேறுவகைப்பட்ட கருமங்கட்குச் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணம் தானம் குறியீடு என்னும் இவற்றுளே இதற்கு இஃது அங்கம்எனவும், இஃது அங்கி எனவும், அங்கமுமங்கியுமாம் முறைமை கூறுதலின் "அங்காங்கியியல்" என்னும் பெயர்த்து. தலைமைப்பொருள் அங்கியுங் கீழ்மையில் பொருள் அங்கமும் எனக்கொள்க.

சுருதி முதலியவற்றுள் சுருதியாவது, வேறொன்றனை அவாவாது தான் கருதிய பொருளைத் தானே தெரிவிப்பது. அது விதிக்குஞ்சொல்லும் குறியீட்டுச்சொல்லும் விவகரிக்குஞ்சொல்லும் என மூவகைப்படும்.

இலிங்கமாவது, ஆற்றலாற் பொருளை உணர்த்துவது. அது சொல்லாற்றலும் பொருளாற்றலும் என இருவகைப்படும். ஒருமந்திரத்தின் வருந் தொழிற்றி அத்தொழில்கேடிங் கருமத்திற்கு அம்மந்திரம் அங்கமென்பது சொல்லாற்றலாற் பெறப்படும். அவியினைக் கருதியாற் சுருவத்தாற் கையால் வாங்குகஎனப் பொதுப்படக் கூறியவழி, கருவி இறைச்சிக்குஞ் சுருவம் நெகிழ்ந்த பொருட்குஞ் கை * புரோடாசம் முதலியவற்றிற்கும் அங்கம் என்பது பொருளாற்றலாற் பெறப்படும்.

வாக்கியமாவது, இருவரது சுருதியும் இலிங்கமுமின்றிச் சொற்றொடர்பு மற்றி உணரவருவது.

பிரகரணமாவது "சோதிட்டோமம்வேட்க" என்றுற்போலும்விதிவாக்கியங்களாற் பெறப்பட உணர்த்து சிறப்பானறியப்படாத கன்மங்களான் அவாவப்பட்டு ஒன்றாறு செய்யற்பாற்றென வருத்துக்கூறுவது. அது பெரும் பிரகரணம் என்றும் இடைக்கட்பட்ட பிரகரணம் என்றும் இருவகைப்படும்.

தானமாவது, நிரனிறையிடமும் அண்மையிடமும் என இருவகைப்படும். அவற்றுள் அண்மை, சொல்லினண்மையும் அநுட்டானத்தினண்மையும் என இருவகைத்து.

குறியிடாவது, காரணத்தான்வரும் பெயர். அது வேதமாபுபற்றிய பெயரும் உலகமாபுபற்றிய பெயரும் என இருவகைப்படும். இவ்வாறு சுருதிமுதலியவற்றின் இயல்பு உணர்ந்துகொள்க.

காலமாத்தியாயம், இங்ஙனம் அங்கமும் அங்கியுமாகிய கன்மங்களை அனுட்டிப்பிக்கும் பிரயோகமாமாறு கூறுதலிற் "பிரயோகவியல்" என்னும் பெயர்த்து. அங்கம் பிழைத்தவழி அங்கியின்பொருட்டு வேறங்கம் வேண்டப்படும்; அங்கி பிழைத்தவழி அங்கத்தின்பொருட்டு வேறங்கிவேண்டப்படுவதின்று; அங்கம் பிழைத்தவழி அதற்கு அங்கி பலவுளவாயின் யாதொன்றற்கு அங்கமாயே மற்றொன்றற் கங்கமாம் அதன்பொருட்டே வேறங்கம் வேண்டப்படும்; மற்றொன்றன்பொருட்டு வேண்டப்படுவதின்று என்றுற்போலத் தெரிவிப்பது பிரயோகமுறை என்க.

அஞ்சாமத்தியாயம், ஒருபிரயோகத்துட்பட்ட அங்காங்கிகளை அநுட்டிக்கும் முற்பிற்பாட்டு முறைமையைச், சுருதிமுறைமை பொருண்முறைமை

* புரோடாசம் - யாகத்திற்கொடுக்கும் ஒருவகையவி.

பாடமுறைமை முதலியனபற்றித் தெரிவித்தலின் ''முறைமைப்பாட்டியல்'' என்னும் பெயர்த்து.

இங்ஙனம் இரண்டாவதில், உற்பத்திவிதியான் அறியப்படுங் கன்மபேதமும், மூன்றுவதில், உபகரிக்கும்விதியான் அறியப்படும் அங்காங்கியியல்பும், நான்கினும் ஐந்தினும், பிரயோகிக்கப்படுவனவற்றின் விதியான் அறியப்படும் பிரயோகமும் முறைமைப்பாடுந் தெரித்துணர்த்தியபின், ஆறுமத்தியாயம், பயன்கூறும் முகத்தான் அதிகாரிகளாவாரைத் தெரிவித்தலிற் ''பயனியல்'' என்னும் பெயர்த்து; அதிகாரவியலெனினுமாம்.

இங்ஙனம் நால்வகைப்படும் எடுத்தோத்துவிதிகளை ஆராயுமாறு ஆறத்தியாயத்துள் உணர்த்தி, மேல் ஏழாவது முதற் பத்தாவதிறுவாய் நான்கத்தியாயங்களான் மாட்டேற்றுவிதி ஆராயுமாறு உணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்யற்பாற்று என எடுத்தோதுவது எடுத்தோத்துவிதி எனவும், அதுபோலச் செய்க என மாட்டெறிவது மாட்டேற்றுவிதி எனவும் உணர்க.

அவ்வற்றுள் ஏழாமத்தியாயம், ''அதுபோலச் செய்க'' என்னும் வசனத்தானும், அங்ஙனம் வசனமில்லவற்றிற்குப் பெயரொருமையானும், அதுவுமில்லவற்றிற்கு இதுசெய்க என விதித்தலான் அது செய்யுமாறு யாதானும் ஒன்றனோடு மாட்டெறியும் வசனமுண்டென வழியளவையா னுணரப்படும் விதியானும் மாட்டெறியுமாறுணர்த்தி, எட்டாமத்தியாயம், அங்ஙனம்பொதுப்பட வழியளவையான் உணரப்படுவனவற்றுள் எதுபோல் எது செய்யப்படும் என்று அவாயவழிச் சொல்லொப்புமை பொருளொப்புமைபற்றி இன்னதுபோலின்னது செய்யப்படும் எனத் தெரிந்தெடுத்துணர்த்துதலின் ஏழாவதும் எட்டாவதும் ''மாட்டேற்றியல்'' என்னும் பெயரினவாம்.

ஒன்பதாமத்தியாயம், அங்ஙனம் மாட்டெறிந்தமைபற்றிப் பகுதிப்பொருளிற் செய்யுங்காரியம் விகுதிப்பொருளிற் செய்வுழிப் பகுதியிற்கூறும் மந்திரமும் சாமமுந் தொழிலும் விகுதிப்பொருளுக்கேற்ப வேறுபடக்கொள்ளுந்திறம் நியாயம்பற்றி ஊகிக்குமாறு உணர்த்துதலின் ''ஊகவியல்'' என்னும் பெயர்த்து.

பத்தாமத்தியாயம், அங்ஙனம் ஊகித்தபின்னர் மாட்டெறிந்தவற்றுள் ஆண்டைக்கு உரியனவாகாதவற்றை நியாயம்பற்றி விலக்குமாறு உணர்த்துதலின் ''விலக்கியல்'' என்னும் பெயர்த்து.

இங்ஙனம் பத்தத்தியாயத்திலும் எடுத்தோத்துவிதியினும் மாட்டேற்றுவிதியினுந் தெரித்துணர்த்த வேண்டியவற்றைத் தெரித்துணர்த்தியபின்னர் ஏனை இரண்டத்தியாயத்திலும் இவ்விருவகைக்கும் பொதுவாகிய தந்திரமும் பிரசங்கமுமாமாறு உணர்த்துதலின், பதினொராமத்தியாயம் ''தந்திரவியல்'' என்னும் பெயர்த்து. பன்னிரண்டாமத்தியாயம் ''பிரசங்கவியல்'' என்னும் பெயர்த்து.

தந்திரமாவது, கருமஞ்செய்யுங்காற் றலைமைவினை பலவுளவாய் ஒருதேசமும் ஒருகாலமும் ஒருகருத்தாவுமாயவழி அவற்றிற்கெல்லாம் பொதுப்பட

அங்கவனுட்டானம் ஒருகாற்செய்ய அமையும் என்றுற்போல்வது. அங்ஙன மன்றி மறித்துஞ் செய்யற்பாலதாதலே அவாபம் என்பர். பிரசங்கமாவது,முதற்கண்வந்த ஆசிரியன் அமுதுசெய்தற்கட்ட அறுசுவையடிசில் ஆசிரியனையன்றியும் ஒருதலையான் அங்ஙனம் அட்டிடுதற்குரியனுப்பின்புவந்த மருகனுக்கும் உபகாரமாதல்போல, ஒன்றன்பொருட்டுச் செய்தவினை மற்றொன்றற்கும் உபகாரமாதல். ஆசிரியனுக்கட்ட அடிசில் ஆசிரியனுடன் வந்தவர்க்கும் உபகாரமாதல் பிரசங்கமன்றென்பது.

மீமாஞ்சைநூலிற் பன்னிரண்டத்தியாயமும் நுதலிய பொருள் இங்ஙனம் தொகுத்துணர்த்தப்பட்டது. இவற்றிற்கு உதாரணம் விரிப்பிற் பெருகும். நையாயிகநூலிற் கூறுந் தருக்கமும் மீமாஞ்சைநூலிற் கூறும் நியாயங்களும் எல்லாநூல்கட்கும் உபகாரமாமெனக் கொள்க. மீமாஞ்சைமதம் முடிந்தது.

ஏகான்மவாதம்.

ஏகான்மவாதமாவது:—மாயாவாதமும், பாற்கரியவாதமும், கிரீடாப்பிரமவாதமும், சத்தப்பிரமவாதமும் என நான்குவகைப்படும்.

மாயாவாதம்.

அவற்றுள், மாயாவாதமாவது:—சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரமம். பரமார்த்தத்திலே சத்தொன்றே மெய்ப்பொருள்; ஏனைய எல்லாம் பிரமத்தின்விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவிச்சையினுற் காணப்படுவனவாகலிற்பொய். இங்ஙனம் தோன்றும் உலகத்திற்கு முதற்காரணமாகிய மாயை, பிரமம்போலச் சத்துமன்றி முயற்கோடுபோல அசத்துமன்றி அநிருவசனமாயிருக்கும். அநிருவசனம் என்பது சொல்லொணாதது என்னும் பொருட்டு. இந்தமாயைக்கு வேறுகிய பிரமரூபமேயான் என வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி என்பதாம்.

பாற்கரியவாதம்.

பாற்கரியவாதமாவது:—முன்கூறப்பட்ட பிரமமே சடமுஞ் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமையினுற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தில் ஒருபொருளே. வேதாந்த ஞானத்தான் உடம்பிற்கு வேறுகிய ஆன்மரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி என்பதாம்.

கிரீடாப்பிரமவாதம்.

கிரீடாப்பிரமவாதமாவது:—முன்கூறப்பட்ட பிரமமே நான். நான் ஒருபடித்தன்றிப் பலவேறுவகைப்பட்ட விகாரப்பொருள்களோடுகூடிப் பலவாற்றுன் விளையாடுகின்றேன் என்று இவ்வாறறிவதே முத்தி என்பதாம்.

சத்தப்பிரமவாதம்.

சத்தப்பிரமவாதமாவது:—காரணமாகிய பரப்பிரமம் இறுதிக்காலத்திற் சத்தவடிவிற்றாயிருக்கும். அஃது அவிச்சையினுற் சடமுஞ் சித்துமாய உலகங்களாய் விரியும். முடிவின்கட் சத்தமாத்திரையே உள்ளது என்று இங்ஙனமறிவதே முத்தி என்பதாம். இங்ஙனம் நால்வேறுவகைப்பட்ட ஏகான்மவாதநூல் செய்தவன் வியாதமுனிவன்.

சாங்கியமதம்.

இனிச், சாங்கியமதமாவது:—மூலப்பகுதி, நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப்பொருட்குங் காரணமாய் முக்குணங்களும் ஒப்பகின்ற அவதரமாய் அருவாய் உள்ளது. இஃது இருபத்துநாலாந் தத்துவம். இதன்கட்டோன்றுங் காரியம் புத்திமுதல் நிலமீறான இருபத்துமூன்றுதத்துவமுள. இத்தத்துவம் இருபத்துநான்கிற்கும் வேறுய் நித்தமாய் வியாகமாய் அருவாய்ப் பல சாங்கியமாய் அறிவதுஞ்செய்வதுமின்றி அறிவுமாத்திரமாய் ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமின்றி நிற்கும் ஆன்மாக்கள் இருபத்தைந்தாந் தத்துவமெனப்படும். இவ்விருபத்தைந்தாந் தத்துவமாகிய புருடன் முத்தியினும் பெத்தத்தும் ஒருதன்மையனேயாம். புருடனுக்கு மலினமென்பதில்லை. காமரையிலை நீர்போல் ஒட்டற்று நிற்பன். அகாதியே புத்தியைச் சார்ந்த அவ்விச்சைவயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத்துன்பவுணர்வு தோன்றுகின்றது. புத்தியாவது மூலப்பகுதியின் பரிணமம்; அதுவே மான் என்றும் அந்தக்கரணம் என்றுங் கூறப்படும். அது பொறிவழியான் ஞானமாய்ப் பரிணமித்து விடயத்திற் செல்லும். புருடன் செய்வானென்பதும் புத்தி அறியுமென்பதும் வேற்றுமையுணராமையான் என்பது. மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணரவே அவிச்சை நீங்கும்; அதுவே முத்தி எனப்படும். ஆன்மாக்களுக்கு வேறுய் இறைவனொருவன் உண்டென்பது பொய் என்பதாம். இந்நூல் செய்தவன் கபிலமுனிவன். இதனுட் கூறுஞ் சற்காரியவாதம் சைவமுதலிய சற்காரியவாத நூல்கட்கெல்லாம் உபகாரமாம். இதனுட் கூறும் அத்தியாசவாதம் மாயாவாதத்துக்கு உபகாரமாம். சாங்கியமதம் முடிந்தது.

யோகமதம்.

யோகமதமாவது:—நிலம்முதற் புருடனீருகிய இருபத்தைந்து தத்துவமும் பெத்தமுத்திகளும் நீதிக்கதுவாம். இருபத்தாருந் தத்துவம் இறைவனொருவனுளன்; அவன், முற்றுணர்வுடையனுய்ச் சாத்திரங்களை அருளிச்செய்து புருடருந்கு ஞானத்தை அறிவுறுப்பனுகலின், இவ்வான்மாக்களுக்கு வேறென்றுரைப்படும் என்பதாம். இந்நூல் செய்தவன் பதஞ்சலிமுனிவன். யோகமதம் முடிந்தது.

பாஞ்சராத்திரமதம்.

இனிப், பாஞ்சராத்திரமாவது:—இருபத்துநாலாந் தத்துவமாகிய குணதத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்று ஒருவனுளன். அவனே பரம்பொருள். அவனிடத்தினின்றுங் கண்ணனும் அநிருத்தனும், மகரத்துவசனும், இரௌத்திரனையனும் என நால்வர் உலகங்களைப் படைத்தற்பொருட்டுத் தோன்றினர். இந்த நால்வகை வியூகங்களாற் சடமுஞ் சித்துமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டனவாகலான், எல்லாம் வாசுதேவன் பரிணமமேயாம். இங்ஙனங்கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களினுறுதிப்பயனுண்டாகாது. ஆகலாற் பாஞ்சராத்திரமுறையே தீக்கைபெற்று வாசுதேவனைவழிபட்டு வாசுதேவனுருவில் இலயமாதலே முத்தி என்பதாம். இந்நூல்செய்தவன் வாசுதேவன் என்க. பாஞ்சராத்திரமதம் முடிந்தது. இவ்வாறு புறச்சமயமாறும் கண்டுகொள்க.

அகப்புறச்சமயம்.

பாசுபதம்.

இனி, அகப்புறச்சமயமாறனுள் பாசுபதமாவது:—ஆன்மாக்கள், பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரியகாரணக் கூட்டரவாற் றோன்றும் ஞானத்தாற் றனித்தனி வேறுபுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவமலம் என்பதொன்றில்லே. மாயை கன்மம் என்றிரண்டாற் பந்தமுற்று இன்பத்துன்பங்களே அனுபவிக்கும். இவற்றின் உவர்ப்புத்தோன்றிச் சாத்திரமுறையானே தீக்கை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப் பற்றும். அப்போது, குடும்பத்தின் பாரம் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார்போல, ஈசனுந் தன்னுடைய குணங்களே அவன்பாற் பற்றுவித்துத் தான் அதிகாரத்தினெழிவுபெற்று இருப்பன் என்பதாம்.

மாவிரதம்.

மாவிரதமாவது:—மேற்கூறிப்போந்த இயல்பையுடைய ஆன்மாக்கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களே அனுபவிக்கும். சாத்திரத்திற் கூறும் முறையே தீக்கைபெற்று எழும்புமாலையணிதல் முதலிய சரியைகளின் வழுவாதொழுகினவர் முத்தராவார். முத்தருக்குச் சிவனோடு சமமான எல்லாக்குணங்களும் உற்பத்தியாம் என்பதாம்.

காபாலம்.

காபாலமாவது:—ஆன்மாக்களியல்பும் பந்தவியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே தீக்கைபெற்றுப் பச்சைக்கொடி ஒன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்பர். உன்மத்தராய்ச் சிவனுவிசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பதாம். இம்மூவரும், முறையே சங்கிராந்தசமவாதி எனவும், உற்பத்திவாதி எனவும், ஆவேசவாதி எனவு முணர்க. இம்மூன்றுமதமுஞ் செய்தார் முறையே மாயை வித்தை காலம் என்னுந் தத்துவங்களில் வைகும் உருத்திரர் மூவர் எனக் கொள்க.

வாமம்.

இனி, வாமமாவது:—பாற்கரியன் கூறியவாறே சடமுஞ் சித்துமாகிய அனேகத்துலகும் சத்தியின் பரிணமமே. வாமநூலில் விதித்த முறையே ஒழுகிச் சத்தியில் இலயித்தலே முத்தி என்பதாம். இந்நூல் செய்தார் சித்தபுருடர். சத்திதத்துவத்தில் வைகும் ஓரான்மாவாற் செய்யப்பட்டது சுத்தசாத்தம் என்றறிக.

வைரவம்.

இனி, வைரவமாவது:—பெரும்பாலும் வாமமதத்தோடொத்துச் சிறுபான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருள் எனக் கொண்டு வைரவபதத்திற் சேர்வதே முத்தி என்பதாம்.

அயிக்கவாதசைவம்.

இனி, அயிக்கவாதசைவமாவது:—* "இன்மைமல மாயைகன்ம மென்றி ரண்டே யிறைதா னிலங்குபல வுயிர்களுமுன் புரிந்தவிரு வினையின்—றன்மை களா லெவர்களுக்குந் தனுகரண புவனந் தந்திடுமிங் கிதனுலே யிருபயனுஞ் சார்ந்து—கன்மமெலா நேராக நேராதன் மருவக் கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவ னதனுற்—பின்மலமா னவையணுகா பெருகொளிமுன் புளதே பெற்றிடும்" என்பதாம். இவ்வாறு அகப்புறச்சமயமாறுங் கண்டுகொள்க. காளாமுகம் சாம்பவம் முதலியனவும் இவற்றின் பகுதியாய் அடங்கும்.

இனிப், பாடாணவாதம் முதலிய † அகச்சமயங்களாறின் கருத்துஞ் சங் கற்பநிராகரணத்தில் விரித்தோதியவாற்றுனறிக. ஈண்டும் வந்துழி வந்துழிக் காட்டுதும். ‡ஈண்டுக் கூறுத சமயங்களும், கூறியவற்றின் பகுதியாய் இவற் றுள்ளே அடங்கும். அஃதறிந்து அடக்கிக்கொள்க.

அவையடக்கம் முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

---

* சிவப்பிரகாசம், உ–ம் சூத்திரம். கசு † அகச்சமயமாறையும் கூம் பக்கத்திற் காண்க. அவற்றுள் பாடாணவாதமாவது:—ஆன்மாவிற்கு ஆணவமலம் குணம்போலச் சகசமாய் அநாதியேயுள்ளது. அதனுல் மாயை கன்மங்கள் ஆன்மாவைத் தீலைக்கூடும். இறைவன் இருவினைக்கீடாகச் சரீரங்களைக் கொடுப்பன்; ஆன்மா அவற்றைப் பொருந்தி இன்பத்துன்பங்களை நுகரும்; அப்பொழுது கண்ணெளியைக் காசபடலம் மறைத்தாற் போல ஆன்மசைதன்னியத்தை ஆணவமலம் மறைக்கும்; அதனுற் பிறவித்துன்பம் அதி கரிக்கும்; பாசஞானமெல்லாந் தன்கீழ் வியாப்பியமென்றறிந்து நீங்குதன்மாத்திரையே முத்தி; முத்திபெற்றவழியும் ஆன்மாச் சகசமலம் நீங்குதலின்றிச் சுட்டறிவுஞ் சுகதுக் காதுபவமு மற்றுப் பாடாணம்போற் கிடக்கும் என்பதாம்.

பேதவாதமாவது:—மும்மலங்களுஞ் செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களுக்கு அநா தியே உள்ளன. அவற்றுல் ஆன்மாச் சுகதுக்கங்களை அநுபவிக்கும். சேய்மைக்கட்சென்ற ஒருவனிழல் உச்சிப்போதில் அங்ஙனஞ்சேறலொழிந்து அவனடியில் வந்தொடுங்குஞ் போல, கரணங்களிற்சென்ற தன்னறிவு பக்குவம் வந்துழி அங்ஙனஞ்சேறலொழிந்து தன்மாட்டு வந்தொன்றி நிராதாரமாய் நிற்கும். இரசகுளிகையினுற் செம்பு களிம்பு நீங் கிப் பொன்னையாறுபோல ஆன்மாவும் இறைவன்றிருவருளான் மும்மலங்களும் நீங்கிப் பெறுவானும் பேறுமாயிருக்கும். அதன்மேலும் அடிமையாதலில்லை என்பதாம்.

சிவசமவாதமாவது:—பதிஞானம் பசுஞானம் பாசஞானம் என்னும் மூன்றும் அநா தியே உள்ளன; பாசஞானமாகிய இந்திரியங்கள் விடயங்களே விளக்கப் பசுஞானம் அவ ற்றைப்புசிக்கும்; இவ்விருஞானங்களும் நீங்கியவழி ஆன்மாச் சுவாலையின்றிக் கிடக்குந் தழல்போல ஒன்றையுஞ் சுட்டியறியாது அறிவுமாத்திரையாயிருக்கும்; அப்பொழுது, வேட்டுவன் புழுவை எடுத்துக்கொள்வதுபோலப் பதிஞானம் ஆன்மாவை எடுத்துக்கொ ள்ளும். புழு வேட்டுவனை நினைத்து அதன்வடிவாதன்மேலும் அதன்றொழிலேயும் இயற்றி நிற்றல்போல, ஆன்மாவும் அப்பதியை நினைந்து அதன்வடிவாதன்மேலும் அதன்றொழி லேயும் இயற்றிநிற்கும் என்பதாம்.

சிவசங்கிராந்தவாதமாவது:—ஆன்மாவின் சங்கியிற் காந்தபாசம்போல உடல் இயங்குழி அதன்கணின்று கருவிகளே விடயங்களே அநுபவிக்கும். மலம்நீங்கும்வழிக்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொதுவியல்பு.

பிரமாணவியல்.

முதற்சூத்திரம்.

ஈண்டு வடமொழிச் சிவஞானபோதத்துட் கூறியவாறே பொது உண்மை என்று இரண்டதிகாரமாகப் பகுத்துக்கொண்டு, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் என நான்குதிறத்தாற் பொருளியல்புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர், அவற்றுள் முப்பொருளின்வைத்து முதற்கட் பதியுண்மைக்குப் பிரமாணங் கூறும் முதற்சூத்திரத்துக்கு வார்த்திகமாகிய பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்துச்செய்கின்றார்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றேற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனர் புலவர்.

எனவரும்.

இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டு இனி அதன் கருத்துரைக்கின்றார்.

எ-து. சூ-ம். எ-னின். சங்காரகாரணனுயுள்ள முதலேயே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதனுதலிற்று.

எனவரும்.

கண்ணாடியின் முகவொளி தோற்றுமாறுபோல முதல்வன் றிருவருள் ஆன்மாவின்மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றும். அவ்வழி உப்பளத்திலிட்டவையெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தை அறியும் என்பதாம்.

ஈசுரவவிகாரவாதமாவது:—பலதூளையுடைய குடத்திலேற்றிய தீபம்போல ஈவத்துவாரமுடைய உடம்பில் ஆன்மா அறிவாய்நிற்கும். நிற்பினும் அவ்வப்பொறிகளளவாய் அவ்வவற்றைக்கூடி அறியும். அது மலபரிபாகமுஞ் சத்திநிபாதமுஞ் சேர்ந்தவழி முதல்வன்றிருவருளால் ஞானத்தைப்பெற்று, வெய்யிலிற் றிரிந்தாளெருவன் மாநிழல்கண்டு ஆறுவதுபோல அம்முதல்வன் றிருவடிநிழலைத்தலைக்கூடும். இங்ஙனங் கூடியவழி, உயிர் முதல்வனது உபகாரத்தை அவாவாது என்பதாம்.

சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் முதலாவது, *நிவிர்த்திகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இரண்டாவது, †பிரதிட்டாகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; மூன்றாவது, ‡வித்தியாகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; நான்காவது, ¶ சாந்திகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்; இறுதியது, § சாந்தியதீதகலையில் அடங்கிய தத்துவபுவனங்களின் சங்காரம்.

சிவாத்துவிதசைவமாவது:—பதிபசுபாசங்களதியல்பும், தத்துவங்களுக்குத் தோற்ற வொடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும், அனேகாந்தஞ் சித்தாந்தசைவரோடொப்பக்கொண்டு, பசுபாசங்கள் பதிவியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்தமுதலன்மையின் முப்பொருட்குந்தம்முள் வேற்றுமை குணகுணிகட்குத்தம்முளதாகியவேற்றுமைபோல உட்பேதமேயன்றிப் புறப்பேதமின்மையான் மரத்தில் வியாப்பியமான கவடுகோடுமுதலியன எல்லாம் மரமேயாமாறுபோலச் சதசத்தும் அசத்துமாகிய அனேகத்தும் சத்தேனவேபடும். படவே, பதித்தன்மையின் வேறுப்பசுவுக்கறியுந்தன்மை உண்டென்னிற் றனித்தமுதலெனப்பட்டு வழுவாமாகலிற் சத்தாகியபதிப் பொருளே ஆன்மாவினிடமாக நின்றறியும். அனேகத்துஞ்சதாயவழிச் சத்தின்வேறுப்பெறப்படும் பொருளொன்றின்மையின் அஃது அறியுமாறு யாங்ஙனம்? எனக் கடாயினுர்க்குப் புறப்பேதமாய் இன்றுயினும் அகப்பேதமாகி அசத்தாகிய பாசமுண்மையின் அதனை அஃதறிதல்கூடும் என்பதாம்.

உஉம் பக்கம். ‡ ஈண்டுக்கூறுதசமயங்களாவன:—துவிதவாதம், சௌரமதம், சௌமியமதம், பாணிநிமதம், இரணியகருப்பமதம், ஸ்மார்த்தமதம், பௌராணிகமதம், கௌளமதம், யாமளமதம் முதலியனவாம்.

---

*நிவிர்த்திகலையில், பிருதிவிதத்துவம் ஒன்றும், காலாக்கினிருத்திரம் முதற் பத்திரகாளி இறுதியாகிய நூற்றெட்டுப் புவனங்களும் அடங்கும். † பிரதிட்டாகலையில், அப்பு முதற் பிரகிருதி இறுதியாகிய இருபத்துமூன்று தத்துவங்களும், அமரேசம் முதற் சிகண்டம் இறுதியாகிய ஐம்பத்தாறு புவனங்களும் அடங்கும். ‡ வித்தியாகலையில், புருடன் முதல் மாயை இறுதியாகிய ஏழு தத்துவங்களும்,வாமம் முதல் அங்குஷ்டமாத்திரம் இறுதியாகிய இருபத்தேழு புவனங்களும் அடங்கும். ¶ சாந்திகலையில், சுத்தவித்தைமுதற் சதாசிவம் இறுதியாகிய மூன்று தத்துவங்களும், வாமம் முதற் சதாசிவம் இறுதியாகிய பதினெட்டுப் புவனங்களும் அடங்கும். § சாந்தியதீதகலையில் சத்தி சிவம் என்னும் இரண்டு தத்துவங்களும், நிவிர்த்திமுதல் அநாசிரிதை இறுதியாகிய பதினேந்து புவனங்களும் அடங்கும்.

இவைகளேயன்றிச் சத்திவடிவாகிய ஐவகைக் கலைகளும் உள. அவை, முறையே மண் பெண் பொன் முதலிய பிரபஞ்சப் பற்றுக்களினின்றும் ஆன்மாக்களே நிவிர்த்தி செய்தலால் நிவிர்த்திகலை எனவும், அங்ஙனம் நிவிர்த்திசெய்யப்பெற்ற அவ்வான்மாக்களே வாசனைபற்றி மீளப் பிரபஞ்சத்தை நோக்காதவண்ணம் பிரதிட்டைசெய்தலாற் பிரதிட்டாகலை எனவும், (பிரதிட்டை - நிலேபெறுத்தல்.) அங்ஙனம் பிரதிட்டைசெய்யப்பெற்ற ஆன்மாக்களுக்கு அநுமானஞானம் ஆகமஞானமின்றிச் சுவாதநுபூதிஞானத்தைப் பயப்பித்தலால் வித்தியாகலை எனவும், அங்ஙனஞ் சுவாதநுபூதிஞானம்பெற்ற ஆன்மாக்களுக்கும் விருப்பு வெறுப்புச் சங்கற்பம் விகற்பம் முதலிய எல்லாத்துன்பங்களேயும் சாந்தமாகச் செய்தலாற் சாந்திகலை எனவும், அங்ஙனஞ் சாந்தமாய் நின்றதும் ஒழியச் செய்தலாற் சாந்தியதீதகலை எனவுங் காரணப்பெயர் பெற்றன. சிவசத்தியாகிய திருவருட்சத்தி ஒன்றே காரியவேறுபாட்டால் இங்ஙனம் ஐந்து பேதமாயிற்று.

அவற்றுள், ஈண்டைக்கேற்புடையது இறுதிக்கண்ணதாகலின், ஈண்டுச் 'சங்காரகாரணன்' என்றது சுத்தமாயாபுவனந்தஞ் சங்கரிக்கும் சங்காரகாரண ஞாகிய பரமசிவனே; அயன்மாலொடுங்கூடக் குணதத்துவத்தில் வைகிப் பிரகி ருதிபுவனந்தஞ் சங்கரிக்குங் குணிருத்திரனையன்று என உணர்க. என்னை? அவன் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்காரகாரணனன்மையா னும், பரமசிவன் இலயபோகவதிகாரம் என்னும் மூன்றவத்தையினும் முறை யே அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்று திருமேனிகொண்டு, சத்தன் உத்தியுத்தன் பிரகிருத்தன் எனவும், சிவன் சதாசிவன் மகேசன் எனவும் பெயர்பெற்று நிற்பனென்றும், இங்ஙனம் தொழிலான் வேறுபட்ட கன்றிப் பொருளான் வேறுபாடில்லை என்றும், பகவர்க்கத்திற் பிரளயாகல ரிற் பக்குவமுடையவன் சிகண்டருத்திரன் என்றுந் சைவாகமங்களெல்லாம் ஓதுதலின் மகேசுரமூர்த்தி இறுவாயான திருமேனியே பரமசிவனுக்குச் சுதந்திரவடிவம், ஏனையவை அன்னவல்ல என்பது பெறப்படுதலானும் என் பது. இவ்வேறுபாடுணர்த்தற்கன்றே பொதுப்படச் சங்காரகாரணனே என் றெழியாது 'சங்காரகாரணனுயுள்ள முதலே' என விருந்தோதியதூஉமென்க.

இவ்வேறுபாடுணராது மகாருத்திரனுகிய பரமசிவனேக் குணிருத்திரனுக வுரைத்தெண்ணுவோரை நோக்கி *"நம்மவரவரே—மூவரென் றேயெம் பிரா னெடு மெண்ணிவின் ஞண்டுமண்மேற்—றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே." என வாதவூரடிகள் இரங்கிக் கூறிய திருவாக்கும் அறிக. இன்னும் †தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனேத் தேவர்—மூவராய் நின்ற தோரார்" எ-ம், ‡தேவராய மகராயுஞ் சித்தர்செழு மறை சேர்—நாவராயு ரண்ணுபாரும் விண்ணோரி காளீரு—மேவராய விரைமல ரோன் செங்கண்மா லீசனென்னு—மூவராய முதலொருவன் மேயது முதுகு ன்றே." எ-ம், ¶"மாவை யுரித்ததள்கொண் டங்க மணிந்தவனே வஞ்சர் மனத்திறையு நெஞ்சணு காதவனே—மூவரு ருத்தனதா மூல முதற்கருவை." எ-ம், §வரியாய மலராணும் வையந் தன்னே—யுரிதாய ளந்தாணு முள்ளு தற்கங்—கரியாணு மறியாத கள்ளின் மேயான்—பெரியானென் றறிவார்கள் பேசு வாரே." எ-ம், o"படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினே." எ-ம், **தேவ ரிகோ வறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற் றை—மூவரிகோ ஞய்நின்ற முதல்வன்." எ-ம், ††"முந்து நடவு முடிவு மாகிய மூவ ரறியாச்—சிந்துரச் சேவடி யாணே." எ-ம், ‡‡"முந்திய முதனடுவிறுதியு மாஞய் மூவரு மறிகிலர்." எ-ம், ¶¶"அரியாகிக் காப்பா னயனுப்ப்படைப்பா—னரனு யழிப்பவனுந் தானே." எ-ம், §§"மீனயனரி—யாரு மறியா வகையெ ங்க ளீசர் பரிசுகளே." எ-ம் வரும் திருவாக்குக்களானும் ஓர்ந்துணர்க. இதுவே

---

* திருவாசகம், திருச்சதகம். ச. சாவமுன்னுள். † சிவஞானசித்தி. கூ-ம் சூ. சகூ. ‡ திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் தேவாரம், திருமுதுகுன்றம், பழந்தக்காகம். க. ¶ சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம், திருக்கானப்பேர். எ. § திருஞானசம்பந்தமூர்த்திநாய னுர் தேவாரம், திருக்கள்ளில். கூ. o மேற்படி தேவாரம், திருப்பிரமபுரம், திருவெழு கூற்றிருக்கை. ஈ-ம் அடி. ** திருவாசகம், திருச்சதகம். கூ. †† மேற்படி குயிற் பத்து. இ. சுந்தர. ‡‡ மேற்படி திருப்பள்ளியெழுச்சி. அ. ¶¶ பதினெராந்திருமுறை, திருக்கைலாயஞானவுலா. கூ-ம் அடி. §§ மேற்படி பொன்வண்ணத்தந்தாதி. கூ.

சுருதி மிருதி புராணம் இதிகாசம் எல்லாவற்றிற்குங் கருத்தென்பது, சிவதத்துவவிவேகமுடையார் *"குணிதீதன்" என்னுஞ் சுலோகத்திற் கடாவிடைகளான் விரித்துக்காட்டியவாற்றுன் அறிக.

இங்ஙனமாயினும், சிகண்டருத்திரன் அயன்மால்போலச் சகலரினன்றிப் பிரளயாகலரிற் பக்குவமுடையோனுய்க் கட்டுநீங்கி முத்திபெற்ற் கடவுளாகலானும், †பரமசிவனுக்குரிய எல்லாப் பெயர்களும் வடிவமுந் தொழிலும் பெற்றுடையவனுகலானும், சைவாகமங்களை அறிவுறுக்குங் குரவனுகலானும், அயன்மாலிருவர்க்கு மேலாய்ச் சைவத்தினெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடுகடவுளாயினுன் என்க.

இங்ஙனம் கருத்துரைத்துக் கண்ணழித்துரைப்பான் புகுந்து ஈண்டு முதற்கண் உரைவகையாமாறு உணர்த்துகின்றுர்.

இதன்பொழிப்பு உரைத்துக்கொள்க.

எனவரும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண்ணழித்துரைக்கும் உரைபற்றி உரைத்துக்கொள்க என்றவாறு.

எனவே, பொழிப்புரை இங்ஙனம் இருவகைப்படும். அவற்றுள், கண்ணழித்துரைக்கும் பொழிப்புரைமாத்திரையே யாம் ஈண்டுரைக்கின்றும். பிண்டமாகக்கொண்டுரைக்கும் பொழிப்புரை இதுபற்றி உணர்க்துகோடலாமாகலின், அஃது யாமுரைக்கின்றிலம் என மாணுக்கர்க்கு அறிவுறுத்தவாறுயிற்று.

இங்ஙனம் பொழிப்புரை இருவகைப்படும் என்பது, ‡"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்—பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே." எ-ம், ¶"பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை—நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே." எ-ம் ஓதியவாற்றுனறிக.

இஃது, ஏனைச் சூத்திரங்களினும் உய்த்துணர்தற்பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது. பிண்டப்பொருளெளினும் ஒக்கும்.

உரைத்துக்கொள்க என்புழிக் 'கொள்' என்பது, தற்பொருட்டுப் பொருட்கண் வந்த விகுதியாய், பகுதியோடியைதற்குரிய துச்சாரியை பெற்று உரைத்துக்கொள் என நின்றவழி, அதுவும் பகுதித்தன்மைப்பட்டு மேல்வரும் வியங்கோள் விகுதிபெற்றுத் தற்பொருட்டுப் பொருள் இனிது விளங்குதற் பொருட்டு உரைக்க என்னும் பொருளாய் நின்றது. இது §சூத்திரவிருத்தியுள் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க.

---

* கந-ம் சுலோகம். † சைவபுராணம் வாயுசங்கிதை பூருவபாகம், கஉ-ம் அத்தியாயம். கதஉகூரா யிஷ்டிகஃ ஸஸ்ருஜ் கதஹ்ம்ஹெ ரவி ஹிஹ்நிதஃ|கஹாரி நாரீ கதூலவ ஸ்துதாயஃ கராரண கூஃ||தத்தஸ்ரு வுவஹாரஸ்ரு கதாஜ்ஞா வரிவாகஃ| ‡ திவாகரம், ஒலிபற்றியபெயர்த்தொகுதி. சூ. கo. ¶ இதனை நச்சினர்க்கினியர் தொல்காப்பியத் தெழுத்ததிகாரச் சிறப்புப்பாயிரவுரையில் உதாரணமாக எடுத்துக்காட்டினர். § தொல்காப்பியச்சூத்திரவிருத்தி. சக. சஉ-ம் பக்கம்.

இங்ஙனம் ஆசிரியர் ஆணைதந்தமையின் கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

அவனவளது—என்மனார் புலவர். என்பது ஆண் பெண் அலி என்றாற் போலும் உலகத்தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலுடைமையான், ஒருவனுற்றோற்றப்பட்டு நின்றுள்ளதேயாம். அற்றேல், அஃது யாவனினுளதாமெனின், தானெடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே ஒழியாது மீள உளதாவது எதனுலெனின், சகசமான ஆணவமலந் தீர்ந்தொடுங்காமையான் உளதாம். இங்ஙனமாகலின் சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே முதற்கடவுளென்று கூறுவர் அறிவுடையோர் என்றவாறு.

'எனும்' என்பது, இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சமாய் இவ்வாறு என்னும் பொருள்குறித்து நின்றது. வடமொழி முதற்சூத்திரத்தில் * "ஆதி" என்றதும் அப்பொருட்டு. அவை என்பது தொகுதி; அஃறிணைப் பன்மைச்சுட்டுப்பெயரெனக் கொள்ளின், உள எனப் பிரித்துப் பயனிலையாக்கித் தாம் என்பது அசையாகக் கொள்க. வினைமை—வினையுடைமை. உடைமை—உடைத்தாந்தன்மை.

அவ்வக்காலத்தன்றி மூவினையும் ஒருகாலத்துப்படுதல் கண்டிலம் என் பாரை நோக்கித் தன்மையின் வைத்து ஓதினர்.

'தோற்றிய' எனப் பிறவினை வாய்பாட்டானேதுதலின், அதற்குரிய வினைமுதல் வருவித்துரைக்கப்பட்டது. தோற்றிய என்புழிப் படுசொற் ரொக்குநின்றது; † "இல்வாழ்வான்" என்புழிப்போல.

திதிப்படும் உலகத்தைத் திதி எனவும் அந்தத்தைச் செய்யுங் கடவுளை அந்தம் எனவும் உபசரித்தார்.

காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'தோற்றிய திதியே யொடுங்கியுளதாம்' என உலகின்மேல் வைத்துக் கூறினர். சங்காரகாரணனுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்றதும் இக்கருத்தேபற்றி என்க.

'தோற்றுவானெருவனுளனேன்; அவன் ஒடுக்கி உளதாக்குவன்" எனக் கடவுளின்மேல் வைத்தோதிய வடமொழிச் சூத்திரத்திற்குந் தாற்பரியம் இதுவே எனக்கொள்க.

எகாரம் தேற்றம். ஒடுங்கி என்பது பெயர். ஒடுங்கி என்புழி இன்னுரும் மலத்து என்புழி ஆனுருபுந் தொக்குநின்றன. ஆம் என்பதனை முன்னுங் கூட்டுக. என்மனார் என்பது செய்யுண் முடிபாயதோர் ஆசிரியர் முற்றுச்சொல். மன் எதிர்காலவிடைநிலை. அது ‡ "உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே" என்னுஞ் சூத்திரத்துச் சேனவரையருரையானும் அறிக.

---

* वीवाहवाहकाग्निहोत्र | † திருக்குறள், நிலம் அதி, இல்வாழ்க்கை. க.

‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம். க.

ஈண்டுப் புலவர் என்றது அளவையினியல்புணர்ந்தாரை.

இதனுள், அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின் என்பது ஓரதிகரணம்; தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என்பது ஓரதிகரணம்; அந்தமாதி யென்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

இம்மூன்றும், ஒன்றற்கொன்று முறையே எதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வருதலின், ஒருசூத்திரத்தாற் கூறினர். வருஞ் சூத்திரங்களினும் இவ்வாறே கண்டுகொள்க.

தன்னாற் கூறப்படும் * பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனை மறுத்துக்கூறுஞ் சித்தாந்தத்துணிபும், இயைபும் என்னும் இவற்றிற்கு நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும். அவற்றுள் இயைபு, நூலியைபும் அதிகாரவியைபும் ஒத்தியைபும் பாதவியைபும் அதிகரணவியைபும் என ஐவகைப்படும். அவையெல்லாம் ஆண்டாண்டுக் காட்டுதும்.

முதலதிகரணம்.

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது, மேற் கருத்தாவின் உண்மை சாதித்தற்பொருட்டு உலகிற்கு முத்தொழிலுண்மை சாதித்தல்.

[உலகம் முத்தொழி லுடைத்து என்பதாம்.]

[அதற்கு அவை உளவோ இலவோ என்று இரட்டுறத்தோன்றும் ஐயப்பாடு.]

[ஈண்டு மீமாஞ்சைநூலாரும் உலோகாயதநூலாரும் உலகந் தோன்று தலும் அழிதலு மின்றி என்று மிவ்வாறே நிலைபெறுவதாகலின், உலகம் காரியப்பொருளன்றுமெனவும், எனவே இதுகொண்டு கருத்தா உண்மை சாதித்தல் "முயல் கோடுடைத்து; ஆன்வயிற்றுப்பிறத்தலான்." என்பதனோடு ஒக்கும் எனவும் கூறுவர்.

அவருள் மீமாஞ்சைநூலார் கூறுமாறுவது, உலகந் தோன்றிநின்றழியும் என்பது காட்சியளவையாற் பெறப்படுவதுமன்று. அனுமானாபாவமாகிய எதுக்காணுமையின் வழியளவையாற் பெறப்படுவதுமன்று. வேதத்துட் கூறப்படுதலாற் பெறுதுமெனின், வேதத்தில் "நடாத்துக," "நிறுவுக," "செய்க" என்றாற்போலத் † தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளுணரும் வேட்கையாளர்க்கு அங்ஙனம் வவ்வேவார் சொற்கேட்டு இயற்றுவோர் செய்யுந் தொழிலானே அவ்வச்சொற்பொருளுணரநிற்றலின் பிரமாணமாம்; அவ்வாறன்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்களாற் சொற்பொருளுணரப்படாமையின் அவை பிரமாணமாகாவாயினும், தொழிற்படுத்தும் வாக்கியங்கட்கு யாதானும்ஒருவாற்றான் உபகாரமாதலுடைமையான் உபசரித்துப் பிரமாணமெனக்

* இவற்றை வடநூலார் முறையே விடயம், சம்சயம், பூர்வபக்கம், சித்தாந்தம், சங்கதி என்பர். † தொழிற்படுத்தல் - ஏவுதல்.

கொள்ளப்படுமாகலான், அதுபற்றி உரையளவையாற் பெறப்படும் என்பதும் இன்றுகலான் உலகிற்கு முத்தொழிலுண்மை பெறப்படாது என்பதாம்.]

இவ்வாறு ஆசங்கை நிகழ்ந்தவழி அவ்வாசங்கையை நீக்கி முத்தொழி லுண்மை சாதித்தற்பொருட்டு எடுத்துக்கொண்ட மேற்கோள்;

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப் பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்தென்றது.

எனவரும்.

எனவே, உலகந் தோன்றிநின்றழியும், அவனவளது என்று இவ்வாறு பகுக்கப்படும் அவயவப்பகுப்புடைமையின்; ஆடைபோலும். என்னும் அது மானத்தானே மூவினையுடைமை துணியப்படும் என்பதாயிற்று.

'ஈண்டு' என்பது மூன்றதிகரணத்துள்வைத்து முதலதிகரணத்தில் என் பதாம்.

சொற்பொருளுணர்ச்சி தொழிற்படுத்துஞ் சொன்மாத்திரையானே துணியப்படும் என்னும் வரையறையின்றித் தாய் தந்தை முதலியோர் இச் சொற்கு இது பொருள் இச்சொற்கு இது பொருள் எனத் தெரிவித்தலானும், நிகண்டுநூலானுந் துணியப்படுமாகலின், அதுபற்றிப், பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமல்ல என்றல் பொருந்தாமையின், உரையளவை யே பிரமாணமென்றேதல் அமையுமாயினும், அவர் மதமேபற்றி அவரை மறு த்தற்பொருட்டு மூவினையுடைமையும் வழியளவையாற் சாதிப்பார், அவய வப் பகுப்புடைமையான் முத்தொழிலுடைமை துணியப்படுமென்றுணர்த்துவார், ஒருவனொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமெனச் சூத்திரத்தி னெதியவாறே உடம்பொடுபுணர்த் தோதினரென்க.

ஈண்டு அவயவமென்றது, ஆடையின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப் படும் நூல்கள்போல ஒரு பொருளின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படுந் தகுதியுடையவற்றை. நிலம் மலை கடல் முதலியவற்றின் ஏகதேசமாகிய மண் சிலை நீர் முதலியன தொடுதல் போழ்தல் முகத்தல் முதலிய தொழில்க ளானே தனித்தனி பிரித்தற்குரியவாமாறு காண்க. கலை ஆணவமலத்தின் ஏக தேசத்தை நீக்கிக் கிரியையை எழுப்பும் எனவும், பரமசிவன் சுத்தமாயையின் ஏகதேசத்தைக் கலக்கிச் சுத்தத்துவங்களைத் தோற்றுவிப்பன் எனவும், அந் தமூர்த்தி அசுத்தமாயையின் ஏகதேசத்தைக் கலக்கிக் கலைமுதலியவற்றைத் தோற்றுவிப்பன் எனவும் வழங்குவதுபற்றி அவயவம் எனப்படா; வேறு வேறு பிரித்தற்குரியன அன்மையின். இவற்றை நீக்குதற்கன்றே ஒருபொரு ளின் ஏகதேசமென்றெழியாது வேறு வேறு பிரித்தற்குரியன அவயவம் என் றதூஉம் என்க.

இங்ஙனமாயினும், தார்க்கிகமதத்திற் பரமாணுக்கள் அவயவமுடையன வல்லவாகலான் அவை தோன்றி நின்றழியும் என்பது பெறப்படாமையின், அவயவமுடைமை காரியப்பாட்டிற்கு ஏதுவென்றல் யாண்டுஞ் செல்லாதாலெ னின், அற்றன்று: அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் இவ்வாறு

சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன எல்லாந் தோன்றியழியும் என்பது கருத்தாகக்கொள்க.

அ ''இன்னுழை கதிரின் றுன்ன ணு''க்களே பரமாணுக்களாம். அவற்றை மும்மைய ணு எனக்கொண்டு அவற்றினும் நுண்ணியவாய்க் கட்புலனுகாதன உள என்றற்குப் பிரமாணமின்மையின் பரமாணுக்களும் அவயவமுடையன வேயாம். அல்லவெனக் கொள்ளினும், அவை சடமுமாய்ப் பலவுமாகலான் தோன்றி நின்று அழிவனவேயாம் என்க. ஆணவமலம் சடமாயினும் பலவன்று; ஆன்மாக்கள் பலவாயினுஞ் சடமல்ல; ஆகலான் அவற்றின்கட் செல்லாமை அறிக.

இங்ஙனமாயினும், மாயை சுத்தமாயை அசுத்தமாயை என இரண்டாய்ச் சடமுமாகலான் அவை காரியப்பொருளாவான் செல்லும். அவை தனித்தனி ஒன்றேயாமெனின் குடமுதலியனவுந் தனித்தனி ஒன்றேயாகலாற் பலவாதல் யாண்டையது என்பதாய் முடியுமாலோவெனின், அற்றன்று: அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு சுட்டி அறியப்படுவன எல்லாந் தோன்றி நின்று அழியும் என்பதே சித்தாந்த முடிபெனக்கொள்க. இது விளங்குதற்பொருட்டன்றே ஆண் பெண் அலி என்றுதல் ஒருவன் ஒருத்தி ஒன்று என்றுதல் ஒதாது, அவனவளது எனச் சுட்டுப்பெயர்களாலோதியதூஉமென்க. இதற்கிதுவே பொருளாதல் உணர்த்துதற்கன்றே ஒருவனொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் என உரைசெய்து எடுத்துக்கொண்ட தூஉமென்க. *''அசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்'' †''அறிவினு லறிந்த யாவு மசத்தாத லறிதி'' என்னுந் திருவாக்குக்களானும் இதுவே இதற்குச் சிறந்த ஏதுவாதல் கண்டுகொள்க.

அற்றேல், ‡''அவனேதானே'' எ-ம், ¶''அவனிவனுய் நின்றமுறை'' எ-ம், §''அவனிவனுனது'' எ-ம், o''அதுநீயானுய்'' எ-ம், **''பாவிக்கச் சொல்லுவது'' எ-ம் கூறுமாற்றுல் நித்தப்பொருள்களுஞ் சுட்டியறியப்படுமாலோவெனின்,—அற்றன்று: அவை அங்ஙனம் பொதுமையிற் சுட்டியறியப்படுமாயினும் அநுபவநிலையிற் சுட்டி அறியப்படா என்பது, ††''உரையுணர்விறந்துநின் றுணர்வதோ ருணர்வே'' எ-ம், ‡‡''அறிவிறந்தங் கறிந்திடீர்'' எ-ம், ¶¶''பாவனை யிறந்து நின்று–பாவிக்கப் படுவ தாகும்'' எ-ம், §§''ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்புங்–கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா''எ-ம், oo''ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலு மிக்குச்–சோதிக்க வேண்டா'' எ-ம் ஓதுவனவற்றுல் அறிக.

அ திருவாசகம், திருவண்டப்பகுதி. கூ-ம் அடி.

* சிவஞானசித்தி. சூ-ம் சூ. உ. ஆவதாய். † சிவப்பிரகாசம். கூ-ம் சூ. ச. ‡ இந்நூல். க0-ம் சூ. ¶ சிவஞானசித்தி. க0-ம் சூ. க. இவனுலகில். § அவனிவனுனது என்பது சுயோ தாவூ ஹ என்னும் வேதாந்தமகாவாக்கியம். இது பிருகதாரணியம், ச-ம் அத். கூ-ம் பிராமணம் ககூ-ம் மந்திரத்திலுள்ளது. o அதுநீயானுய் என்பது தகுவலி என்னும் வேதாந்தமகாவாக்கியம். இது சாந்தோக்கியம், சூ-ம் பிரபாடகம் அ-ம் கண்டம் எ-ம் மந்திரத்திலுள்ளது. ** சிவஞானசித்தி. கூ-ம் சூ. எ. கண்டவிவை. †† திருவாசகம், கோயிற்றிருப்பதிகம். கூ. அரைசனே. ‡‡ சிவஞானசித்தி. கூ-ம்சூ. கூ. காரணங்கள். ¶¶ மேற்படி. கூ-ம் சூ. எ. பாவிப்ப. §§ திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் தேவாரம், பொது, திருப்பாசுரம். ச. oo மேற்படி. கி.

பிரபஞ்சம் அவ்வாறன்றிச் சிறப்பியல்புபற்றி அநுபவமாய் உண்மையாற் சுட்டப்படும் என்னுங் கருத்தானன்றே, ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சமென்றுழியாது, 'உளதாய்' என விசேடித்ததூஉமென்க. நித்தப்பொருள் சுட்டியறியப்படாதென்பது ஆருஞ்சூத்திரத்திற் காண்க.

இங்ஙனம் வழியளவையானே உலகந் தோன்றிநின்றழியும் எனச்சாதித்து மீமாஞ்சைநூலாரை மறுத்தவழி, உலோகாயதநூலார் காட்சியளவை ஒன்றே பிரமாணமன்றி வழியளவை முதலியன பிரமாணமல்லவாகலான் அவற்றுற் சாதிப்பன பொருள்படாவாம் என்பர். வழியளவையின்றுயின், மேல் வரும் பயனைக் குறித்து முயற்சி செய்வாரில்லையாதல் வேண்டும். *"இம்மையின் முயற்சி யாலே யிருநிதி யீட்" டப்படும் என்பதே அவர் கொள்கையாகலான் வழியளவையும், அதுபற்றி உரையளவையும் பிரமாணம் எனக் காட்டியவழி, அவரும் அதனானே மறுக்கப்படுவாராயினும் அவர் மதமேபற்றி அவரைமறுத்தற்பொருட்டுத் தோன்றியழிதல் கண்கூடாகக் காட்டுவார் வேறு மோர் ஏதுக் கூறுகின்றார்.

தோற்றமுமீறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

எனவரும்.

வார்த்திகப் பொழிப்பாவது உரைச்செய்யுளானும் பாச்செய்யுளானும் செய்யப்படும் என்னும் வடமொழிமதம்பற்றி, கருத்துரையும் மேற்கோளும் ஏதுவும் உரைச்செய்யுளான் உரைத்து, உதாரணம் பாச்செய்யுளான் உரைக்கின்றார்.

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி—னேதாரோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

எனவரும்.

ஈறும் முதலுந் துணைக்காரணமாகக் கொண்டே திதி நிகழும். அற்றுயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழியக் கண்டிலமாலெனின், ஒவ்வொரு காலவிசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிவதனைக் காண்டலால், என்றுயினும் அதற்குரிய காலம்வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதலுண்டென்று அக்காட்சிபற்றி அறியப்படும் என்பதாம்.

பூதாதி அன்மொழித்தொகை. பூதாதிக்கு என நான்கனுருபு விரித்து உரைக்க. ஆகும் என்பது முற்றுவினை. பெற்றிமை என்றது ஈண்டுச் சாதியை. ஓகாரம் எதிர்மறை. ஒன்றொன்றினென்பது, †"ஒன்றொன்றுப்பார்த்துணர்வதுள்ளமே" என்புழிப்போல அடுக்குமொழி. கண்டும் உம்மை சிறப்பு. பெற்றிமையின் ஒன்றொன்றிற்றோன்றி யுளதா யிறுதலாவது, ‡"பயில்வித் தெல்லாங்-

* சிவஞானசித்தி. உ-ம் சூ. எ. † இந்நூல். கக-ம் சூ. க-ம் அதி. ஐந்தையு. ‡ சிவஞானசித்தி. க-ம் சூ. கூ. ஒரிடம்.

காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" என்றதுபற்றி உணர்ந்து கொள்க. இங்ஙனஞ் *சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்னு மிரண்டனுட் பொருட்பிரபஞ்சந் தோன்றிநின்றழியும் என்பது ஏதுக்களாற் சாதிக்கப்பட்டது.

இனி இரட்டிறமொழிதலான், அவனவள் என்பதனுற் பெறப்படும் உயர்திணையும் அது என்பதனுற் பெறப்படும் அஃறிணையும் என்னும் இருதிணைப் பகுதித்தாய சொற்பிரபஞ்சக் கூட்டம், இங்ஙனம் அவயவப்பருப்புடைமையானும், சடமுமாய்ப் பலவுமாகலானும், சுட்டியறியப்படுதலானும், திதியின்பால் ஏனையிரண்டுங் காணப்படுதலானும் தோன்றிநின்றழிதலுடைத்து எனவும் பொருளுரைத்துக்கொள்க.

அற்றேல், வேதம் நித்தியம் என்னுஞ் சுருதிகளோடு முரணும் பிறவெனின்,—முரணுது; நித்தனுகிய பரமசிவனுற் செய்யப்பட்டமையானும், இறுதிக்காலத்துப் பரமசிவனிடத் தொடுங்கிய வேதம் படைப்புக்காலத்து முன்போலவே தோன்றுதலானும் நித்தமென்று உபசரித்துக் கூறப்படுமாகவின். சிவாகமங்களே நித்தம் என்பதும் இக்கருத்தேபற்றி என்க. அங்ஙனமல்லாக்கால், †வேதம் "பரமசிவனுற் செய்யப்பட்டது" என்னுஞ் சுருதிகளோடும், ‡ "அட்டாதச வித்தைக்கும் முதற்கருத்தாவாகிய இச்சூலபாணி" என்றற்றொடக்கத்துப் புராணவசனங்களோடும், ஈண்டுக் கூறும் வழியளவையோடும் முரணுமாறறிக.

வித்தை பதினெட்டாவன:—இருக்குமுதலிய வேதம் நான்கும், சிக்ஷை கற்ப்சூத்திரம் வியாகரணம் நிருத்தம் சந்தோவிசிதி சோதிடம் என்னும் அங்கமாறும், புராணம் நியாயநூல் மீமாஞ்சை மிருதி என்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம் வில்வேதம் காந்தருவவேதம் அருத்தநூல் என்னும் இருக்குமுதலியவற்றிற்கு உபவேதம் நான்கும் என இவை.

இவற்றுள், வேதம் நான்கும் பிரமகாண்டமும், பிரமஞானத்திற்கு நிமித்தமான கருமகாண்டமும் உணர்த்துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாயடங்குமென்க.

வேதங்களே எடுத்தல் படுத்தல் முதலிய இசைவேறுபாட்டான் உச்சரிக்குமாறு உணர்த்துவது சிக்ஷை.

வேதங்களிற் கூறுங் கருமங்களே அனுட்டிக்கும் முறைமை உணர்த்துவது ¶கற்பசூத்திரம்.

---

* சொற்பிரபஞ்சமாவது - மந்திரம் பதம் வன்னம். பொருட்பிரபஞ்சமாவது - புவனம் தத்துவம் கலை. † பிருகதாரணியம். கூ-ம் அத்தியாயம். கூ-ம் பிராமணத்து மந்திரம். கூஷ்ரு ஷஹெ.தா ஹஅதஷ்ரு) நுஸ்ஸவஸி.தம் வன.தஷ யஜ்ஞஹெஜ யஜ-ஹெ-ரு ஜ்ஞ் வாஷெவெஜ்ஞ யுவ-ரூ-மிரஸ ஜ்ஞிஹாவஷ்ஞ் வ-ரூணம் ‡ சைவபுராணம், பூருவபாகம், கூ-ம் அத்தியாயம், உச-ம் சுலோகம். கூஷ்ரு ஜ்ஞாநரூ விஜ்ஞாநரூ ஜெதாவாரூ ஸிஹுவத-ரு-நாரூ|சூஜ்ஞிகூத-ரூ கூவிஜ்ஞவாகூஷ்ர ஹ்ஹுவாணிரஸிதி ஸ்ரு-கிஜ்ஞ்| ¶ ஆசுவலாயநீயம், போதாயநீயம் முதலியன.

வேதங்களின் எழுத்துச்சொற்பொருளியல்பு உணர்த்துவது வியாகரணம்.

வேதங்களின் சொற்பொருள் உணர்விப்பது நிருத்தம்.

வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரும் அவ்வவற்றிற்கு எழுத்து இனைத்தென்றலும் உணர்த்துவது சந்தோவிசிதி.

வேதத்திற் சொல்லப்படுங் கருமங்கள் செய்தற்குரிய காலவிசேடங்களை உணர்த்துவது சோதிடம். இங்ஙனமாகலின் இவையாறும் வேதத்திற்கங்கம் எனப்பட்டன.

பரமசிவன் உலகத்தைப் படைக்குமாறு முதலாயின கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்து விரித்துணர்த்துவது புராணம். இதிகாசமும் ஈண்டு அடங்கும்.

வேதப்பொருளை நிச்சயித்தற்கு அநுகூலமான பிரமாணம் முதலியவற்றை உணர்த்துவது நியாயநூல்.

வேதப்பொருளின் தாற்பரியம் உணர்தற்கு அநுகூலமான நியாயங்களை ஆராய்ச்சி செய்து உணர்த்துவது மீமாஞ்சை. அது, பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை எனவும், அவற்றுள், முன்னையது வேதம் எனவும், பின்னையது வேதாந்தம் எனவும் வழங்கப்படும்.

அவ்வவ்வருணங்கட்கும் நிலைக்கும் உரிய தருமங்களை உணர்த்துவது மிருதிநூல். புராணம் முதலிய நான்கும் வேதத்திற்கு உபாங்கம் எனப்படும்.

எல்லாம் அநுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலை பெறச் செய்வது ஆயுள்வேதம்.

பகைவரான் கலிவின்றி உலகங் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலம் பயிறலை உணர்த்துவது வில்வேதம்.

எல்லாக்கடவுளர்க்கும் உவகையைச் செய்யும் இசை முதலியவற்றை உணர்விப்பது காந்தருவவேதம்.

இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களை ஈட்டும் உபாயமுணர்விப்பது அருத்தநூல். இவை நான்கும் உபவேதம் எனப்படுமென் றுணர்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்திற் பிரபஞ்சம் நித்தியம்எனக்கொண்டமீமாஞ்சைநூலாரையும் உலோகாயதநூலாரையும் மறுத்துச், சொல்லும் பொருளும் என்று இருவகைப்பட்ட பிரபஞ்சம் உற்பத்திநாசமுடைத்தெனக் கருத்தாவினுண்மை சாதித்தற்கோதிய ஏதுவை ஏதுக்களாற் சாதித்தவழி, ஏது உண்டு; சாத்தியம் இல்லை; எனப் பிணங்கும் புத்தர் முதலியோரை மறுத்துப் பொதுவ

கையானுஞ் சிறப்புவகையானுங் கருத்தாவண்மை சாதித்தற்கு எழுந்தது இரண்டாம் அதிகரணம்.

அதிகரணவியைபும் இதனுனே விளங்கும்.

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை என்றது.

எனவரும்.

'இனி' என்பது அதிகரணவியைபுணர்த்துதற்பொருட்டு. முன்வரும் அதிகரணங்களினும் இவ்வாறே கண்டுகொள்க.

சூத்திரத்தின் ஒடுங்கி என உலகவினமேல் வைத்தமையின், அதற்கேற்ப ஈண்டும் ஒடுக்கின என்னாது 'ஒடுங்கின' என உலகவினமேல் வைத்துரைத்தார். சங்காரகருத்தாவைச் சங்காரம் என்று உபசரித்தார். அல்லதில்லை என எதிர்மறைமுகத்தாற் கூறினர், ஏனைக்கடவுளிற் செல்லாமை அறிவித்தற்பொருட்டு.

அற்றேல், உலகம் ஓரிடத் தொடுங்கி நின்று மீள உண்டாம் என்றதென்னை! உள்ளதாயி னுண்டாகவேண்டுவதில்லை யாகலான். இல்லது உண்டாம், உள்ளது அழியும், இல்லவை தோன்றுங்காற் சந்தானமாய்க் கணந்தோறுந் தோன்றி அழிவனவற்றுள் முற்கணத்தினின்றழியும் பொருள் பிற்கணத்திற் றோன்றும் பொருட்குச் சார்பாகலின் அவை அவ்வச்சார்பிலே வித்தின் கேட்டின் அங்குரம்போற் றோன்றும், இதற்கொரு கருத்தா வேண்டுவதில்லை எனப் புத்தர் கூறுவர். அதனை மறுத்து மேற்கோளைச் சாதித்தற்கெழுந்தது;

இல்லதற்குத் தோற்றமின்மையின்.

எனவரும்.

அற்றேல், உள்ளதற்கு உண்டாகவேண்டுவ தில்லையாலோ என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்.

எனவரும்.

உள்ளதற்கு உண்டாகவேண்டுவதென்னை? என்னும் ஆசங்கையை நீக்குதற்கு 'இலயித்தது இலயித்த தன்னில் ஆம்' என்றும், அற்றேல், இலயித்தது இலயித்தவாறே ஒழியாது மீள உண்டாக வேண்டாம், வேண்டுமாயின் முன் இலயித்தலின்றி நிலைபெறவே அமையும் என்னும் ஆசங்கையை நீக்குதற்கு 'மலத்தால் ஆம்' எனவும், நசித்தலேயன்றி ஒடுங்கிநின்று மீள உண்டாம் என்றற்குப் பிரமாணம் என்னை? என்பாரை நோக்கி 'இலயித்தவா றுளதாவேண்டும்' என்றுங் கூறினர். இலயித்தவாறன்றி உண்டாகா தென்னும் நியமமில்லையாயின், நெற்கமுகாய் நீளாது நெல்லாயே நீளுதற் கேது என்னை? என்னுங் கருக்கமே அதனை வலியுறுத்தும் என்றவா றுயிற்று.

சிறப்புப்பாயிரம்.

சிற்றுரை.

சைவாகமங்களினுளவாகிய நாற்பாதங்களுள்வைத்து ஞானபாதத்தோதிய பொருள்களே ஆராயும் ஆராய்ச்சி இந்நூலின்கண் எடுத்துக்கொள்ளப்பட்டது. இது கேட்டலுறுவார்க்கு இதனுற்போந்த பயன் யாதோ? எனவும், இது கேட்டற்குரியார் யாவர்? எனவும், இதனுன் நுதலப்படும் பொருள் யாது? எனவும், இதனைப் பயப்பிக்கும் கருவியாய் இதற்குமுன் ஒருதலையான் உணர்தற்பாலது யாது? எனவும், இதனை வழங்குதற்கிட்ட பெயர் யாது? எனவும், இஃதியாண்டு வழங்குவது எனவும், இதன் முதனூல் யாது? எனவும், இந்நூல் செய்தார் யாவர்? எனவும் பலவாற்றுன் ஆசங்கை நிகழுமன்றே! அவ்வாசங்கை நீங்கி மனவெழுச்சி சேறற்பொருட்டு இந்நூன்முகத்து உரைக்கப்படுவதாகிய சிறப்புப்பாயிரம்:—

மலர்தலை யுலகின் மாயிரு டிமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருளூர்ந்
தருந்துயர்க் குரம்பையி னுன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புணைந்த தலைமை யோனே.

எனவரும்.

இ-ள். மலர் தலை உலகில் மா இருள் துமியப் பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல், எ-து. விரிந்த இடத்தையுடைய ஞாலத்தின்கண்ணே தூன்றிய பெரிய புறவிருள் கெடும்படி பலசமயத்தாராலும் புகழப்படுகின்ற பரிதியங்கடவுள் உதயகிரியினின்றும் போந்தாலன்றிக் காட்சியெய்தமாட்டாத கண்ணொளிபோல,—அருந் துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி, எ-து. பொறுத்தற்கரிய துயரங்களுக்கெல்லாம் ஒரு நிலைக்களமாய்ச் சத்ததாதுக்களாற் பொத்திய குரம்பையாகிய காணப்பட்ட உடம்பானே காணப்படாத ஆன்மாவையும், பரமான்மாவையும் * அணுமானவளவையான்வைத் தாராய்ந்து அவற்றது தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்புணர்ந்து,—† கண் இருள் தீர்ந்து, எ-து. அவ்வுணர்ச்சியானே கருதியுண

* அணுமானமெனினும், வழியளவையெனினும், கருதலளவையெனினும் ஒக்கும். இது மாபாடியத்துட்கண்டது. † புறப்பொருள்களேமறைத்துத் தான் கட்புலப்படும் பூதவிருள் போலாது, ஆன்மாவினது சிற்சத்தியை மறைத்து, அது, தன்னேயும் சிவத்தையுந் தெரியவொட்டாது செய்து, தானுங் கட்புலப்படாதிருத்தலிற் கருதியுணரப்படும் இருளென்பார் ஆணவத்தைக் கண்ணிருளென்றார்.

ரப்படும் அகவிருளாகிய ஆணவமலத்தினின்று நீங்கி,—ஈண்டிய பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு. எ-து. அதுநீங்கியவழி எல்லாநூல்களும் தன்பொருளேயாகத் திரண்டு கூடிய *பெரும்பெயர் எனப்படும் ஒருவார்த்தையாகிய மகாவாக்கியத்தான் எடுத்தோதாதப்படும் முதற்கடவுளது திருவருளானே அப்பொருள்களது சொரூபலக்கணம் எனப்படுஞ் சிறப்பியல்பை † அநுபூதியிற்கண்டுணர்ந்து,—மயர்வு அற. எ-து. இம்முறையானே மயக்கவாசனையற்றுச் சிவாநுபவம் பெறுதற்பொருட்டு,—நந்தி முனி கணத்து அளித்த. எ-து. சிகண்டிதேவர்பாற் கேட்டருளிய நந்திபெருமான் சனற்குமாரமுனிவன் முதலிய முனிவர்கணங்கட்கு முறையானே அளித்தருளப்பட்ட,—உயர் சிவஞானபோதம். எ-து. சரியை முதலிய மூன்று பாதப்பொருள்களே ஆராயும் நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதம் என்னும் வடநூலை,—உரைத்தோன். எ-து. மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகம் எனப்படும் பொழிப்புரை செய்தோன்,—பெண்ணைப் புனல் சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன். எ-து. பெண்ணையாற்று நீராலே சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தருளிய சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாம முடையான்,—பொய் கண்டு அகன்ற மெய்கண்டதேவன். எ-து. பொய்ச்சமயங்களின் பொருள் இது இது என்று கண்டு கழிப்பித்த காரணத்தாற் பெற்ற மெய்கண்டதேவன் என்னுஞ் சிறப்புத்திருநாமமுடையான்,—பவம் நனி வன் பகை கடந்த தவர் அடி புணர்ந்த தலைமையோன். எ-து. பிறவியாகிய மிக்கவலிய பகையினை வென்ற தவத்தோர், தனது திருவடியைப் புணர்ந்துகோடற்கேதுவாகிய தலைமைப்பாட்டினையுடையோன் என்றவாறு.

படரிற் காண்டல்செல்லுங் கண் எனற்பாலதனை எதிர்மறைமுகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு. இப்பொருள்பற்றிக் கண்மேல் வைத்துக் கூறினோரனும், உவமேயப்பொருட்கேற்பக் காண்டல்செறற்குப் படர்ந்த ஞாயிறுபோல் என்பது கருத்தாகக் கொள்க.

இருட்கேட்டிற்கும் நிருவிகற்பம் சவிகற்பம் என்னும் இருவகைக்காட்சிக்கும் ஞாயிறு இன்றியமையாச் சிறப்பிற்றாயவாறுபோல, மலத்தீர்விற்கும் ஆராய்ச்சி அநுபூதி என்னும் இருவகை உணர்விற்கும் இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந்நூல் என்பார், துமியப், படரினல்லதைக் காண்டல் செல்லாக் கண்போல், நாடித், தேர்ந்து, கண்டு, மயர்வற, அளித்த சிவஞானபோதம் என்றார்.

தலைமைபற்றி அருந்துயர்க்குரம்பையின் என்றாரேனும், இனம்பற்றிக் காரணம் புவனம் முதலியனவும் உடன் கொள்ளப்படும்.

அருந்துயர்க்குரம்பையின் நாடப்படுவதாகிய பொதுவியல்பு முன்னுறு சூத்திரத்தானும், பெரும்பெயர்க் கடவுளிற் காணப்படுவதாகிய சிறப்பியல்பு பின்னுறு சூத்திரத்தானும் ஓதுப.

---

* பெரும்பெயரெனினும், மகாவாக்கியமெனினும் ஒக்கும். இது மாபாடியத்துட் கண்டது. † அநுபூதி பிறபொருளின் உபகாரம் வேண்டாது தன்னியற்கையாற் பொருள்களே எதிருற்றுணரும் அறிவு.

'காடி' எனவே அதுமானவளவையான் என்பதூஉம், 'கண்டு' எனவே அதுபூதியில் என்பதூஉம் தாமே போதரும்.

பொதுவியல்பு அளவைமுகத்தானும் இலக்கணமுகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும் இருதிறத்தான் உணரப்படும்; சிறப்பியல்பு சாதனமுகத்தானும் பயன்முகத்தானுங் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்குதிறத்தான் உணரப்படும்.

*இஃது என்சொல்லியவாறே எனின்:—இவ்விருவகை இயல்பும் வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணரமாட்டாது ஒரோவொன் றேபற்றி ஐக்கவாதம் முதற் பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முண்மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காது அவற்றின் பொருளொருமையுணர்த்தற்கு எழுந்தது இந்நூல் என்றவாறுயிற்று. சிவஞானபோதம் என்பதூஉம் இக்காரணத்தாற்பெற்ற பெயர் என்பது வடமொழிச்சிவஞானபோதத் திறுதிச் *சூத்திரத்தோதியவாறுபற்றி உணர்க.*

சரியை முதலிய மூன்றுபாதப்பொருளை ஆராயும் நூல்களாவன, சோமசம்பு பத்ததி முதலாயின. அந்நூல்களின் மேற்பட்ட சிவஞானபோதம் எனவே, அந்நூல்களுணர்ந்தபின்னர் இந்நூல் கேட்கற்பாற்று என்பது பெறப்பட்டது; படவே, முன்னர்த் தீக்கையுற்றுச் சிவாகமங்களை ஓதி அதன் பின்னர்ச் சரியாபாதம் முதலியவற்றை ஆராயும் நூல்களை முறையே கேட்டு அவ்வாறொழுகி மனந்தூயராய் † நித்தியாநித்தியவுணர்வு தோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் வந்த அதிகாரிகளுக்கு இந்நூல் உணர்த்துக என்பது போந்ததெனக் கொள்க.

'உயர் சிவஞானபோதம்' எனவே யாப்பும், கேட்போரும், நுதலியபொருளும், நூற்பெயரும், 'காடித் தீர்ந்து கண்டு மயர்வற' எனவே நுதலியபொருளின் வகையும், பயனும், 'நந்திமுனிகணத்தளித்த' எனவே வழியும், 'வெண்ணெய்ச்சுவேதவனன்' 'மெய்கண்டதேவன்' எனவே ஆக்கியோன் பெயரும், தமிழ் வழங்கும் நிலமே இந்நூல் வழங்கும் நிலம் என எல்லையும் போந்தவாறுணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியம் என்றும், நுதலியபொருளை விடயம் என்றும், கேட்போரை அதிகாரிகள் என்றும், பயனைப் பிரயோசனம் என்றுங் கூறுப. யாப்பு - சம்பந்தம் என்பாருமுளர்.

சிறப்புப்பாயிரமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

---

* வஸவம் விஞ்ஞாநாந வொயெ மெஸவாய-ருநிண-யெழு॥

இ - ள். இங்ஙனமே சிவஞானபோதத்திற் சைவாகமங்களின் பொருணிச்சயத்தை அறிக. † நித்தியா நித்திய வுணர்வு - இப்பொருள் நித்தியம்; இப்பொருள் அநித்தியம் என்று உணர்தல்.

மங்கலவாழ்த்து.

காமிகம் முதலிய சைவாகமங்களுள் ஞானபாதத்திலுளதாகிய ஆசங்கை நீக்கி அவற்றின் பொருளுண்மை பொதுவியல்பு சிறப்பியல்பு என்று இருவே றுவகைப்படுத்துக் காட்டிப் போதித்தற்கு இரௌரவாகமத்தி லெழுந்த சிவ ஞானபோதநூலினைத் தமிழுலகம் உயதற்பொருட்டு மொழிபெயர்த்துச் செ ய்து பொழிப்புரைப்பான் எடுத்துக்கொண்ட ஆசிரியர், சாக்கிரத்தே அதீதத் தைப் புரியுந் தமக்கு இடையூறு சிறிதுமணுகாமை அறிந்தாராயினும், ஆன் மோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும், மாணாக்கர்க் கறிவுறுத்தற்பொருட் டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுளை வாழ்த்துவதா கிய மங்கலவாழ்த்துக் கூறுகின்றார்.

கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா வினைமலர்
நல்லார் புனைவரே.

இ-ள். கல்லால் நிழல். எ-து. அருள்வடிவாகிய கல்லாணிழலின்கண் ணே எழுந்தருளி இருந்து,—மலைவு இல்லார். எ - து. சுந்திபெருமானுக்கு இந்நூலான் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர்,—அருளிய. எ-து. மேன்மேற் கருணைகூர்ந்தருளுதற்பொருட்டு,—பொல்லார் வினை மலர். எ-து. பொல்லாத பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடித்தாம ரைகளை,—நல்லார். எ-து. கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்,— புனைவர். எ - து. தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோல் அடங்கி நிற்பர். எ - று.

'நல்லார் புனைவர்' எனவே, ஏனையோர்க்கு அது கூடாது என்றவா றுயிற்று.

மூவகை வாழ்த்துள் இது பொருளியல்புரைத்தல் எனக் கொள்க.

இல்லார் இல்லாகச் செய்தார் எனப் பண்படியிற் பிறந்த வினைப்பெயர்.

அருளிய என்பது செய்யிய என்னும் வாய்பாட்டுவினையெச்சம்; அது புனைவர் என்னும் பிறவினைமுதல்வினை கொண்டது.

அருளிய பொல்லார் எனப் பெயரெச்சமுடிபாகவைத்து உரைப்பினும் அமையும்.

மலைவில்லார் அருளப் பொல்லார்தாள் புனைவர் எனவே, அவ்விருவருந் தம்முள் வேற்றுமையின்மை பெற்றும். உலகத்துப் புதல்வர்கண்மாட்டுச் செய் யும் வழிபாடு தந்தையர்க்குக் கழிபேருவகை பயப்பிக்குமாகலின், அந்நயம் பற்றி அங்ஙனங் கூறியதுமாம்.

மங்கலவாழ்த்து முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

அவையடக்கம்.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

இஃது அவையடக்கங் கூறும்முகத்தானே ஈண்டெடுத்துக்கொண்ட சித்தாந்தசைவரின் உயர்வும் ஏனைச்சமயத்தார்கள தியிவுங் கூறுகின்றது.

இ - ள். தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார். எ - து. உடைப்பொருளாகிய தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையாஞகிய தலைவனை உணருஞ் சித்தாந்தசைவர், —எம்மை உடைமை எமை இகழார். எ - து. தமக்கு உடைப்பொருளாகிய எம்மை உடையராகவின், எம்மைக் குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதன்றி இகழ்தல்செய்யார்; ஆகலான் எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வர்,—தம்மை உணரார் உணரார். எ - து. அங்ஙனந் தம்மையுணராதார் தம்மையுடையாஞகிய தலைவனையு முணரார் ஆகலான்,—உடங்கு இயைந்து தம்மிற் புணராமை. எ - து. அவர் ஒருங்கே குழீஇக்கொண்டு தம்மிற்றமே சோராது முரணுதலான்,—புறன் கேளாம். எ - து. அவர் எம்மையும் எம்மாற்செய்யப்படும் நூலையும் இகழ்ந்துரைக்கும் மொழியை யாம் பொருளாகக் கொள்ளாம். எ - று.

ஆகலான் எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வர் என்பது குறிப்பெச்சம்.

தன்னை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

உடைமை புணராமை என்புழி இன்னுருபும் ஆனுருபும் விரித்துரைக்க.

'தம்மையுணரார்' எனப் பொதுப்படக் கூறுதலானே, தாமொரு பொருளுண்டென்பதை உணராத உலோகாயதரும், தம்மைக் குணிப்பொருளென்றுணராத புத்தர் சாங்கியர் மாயாவாதிகளும், தம்மை முதல்வனுக்கு உடைப்பொருளென்று உணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். பாஞ்சராத்திரிகளும் சிவாத்துவிதசைவரும், தம்மை உடைப்பொருளெனக் கொள்ளினும், அவருள், பாஞ்சராத்திரிகள் உடைப்பொருளாகிய தமக்கு அணுபரிமாணங் கோடலானும், உடையானுக்குப் பரிணமங் கூறுதலானும், உடையானல்லாதானை உடையானென மயங்கிக்கோடலானும், சிவாத்துவிதசைவர் உடையானது சிற்சத்திக்குப் பரிணமங் கூறுதலானும் பிறவாற்றானும் அவருந் தம்மை உணரார் என்பது.

புறன் புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும் மொழியும் புறங்கூற்றுமொழியும் என்பது இரட்டுறமொழிதலென்னும் உத்தியாற்கொள்க. புறங்கூற்று மொழியாவது முக்கூற்றுப் புறச்சமயிகளின் வேறுறை பாடாணவாதசைவர் முதலியோர் முன்னன்றிப் புறத்தே இகழ்ந்து கூறும் மொழி என்க.

அவையடக்கமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொதுவியல்பு.

பிரமாணவியல்.

முதற்சூத்திரம்.

ஈண்டு ஆசிரியர், முதனூலிற் கூறியவாறே சிவாகமங்களின் ஓதப்படும் ஞானபாதப்பொருள் எல்லாவற்றையும் பொது உண்மை என்று இரண்டாகத் தொகுத்து, பிரமாணவியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என நால் வகைப்படுத்து, பிரமாணவியல் மூன்று*பாதத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் உலகிற்கு முதற்கடவுள் சிறப்புவகையான் உண்டென்னும் ஆகமப்பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப்பிரமாணங் கூறுகின்றார்.

†அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதி யென்மனுர் புலவர்.

எ-து. சூ-ம். எ-னின். சங்காரகாரணனுயுள்ள முதலியே முதலாகவுடைத்துஇவ்வுலகம்என்பதுஉணர்த்துதனுதலிற்று

இது சூத்திரக்கருத்து உரைக்கின்றது.

இ-ள். நிஷிர்த்திகலே முதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினைமுதலாயுள்ள முதல்வனியே தனக்கு முதற்கடவுளாக வுடைத்து அவன் அவள் அது என்று இவ்வாறு சுட்டியுணரப்படுவதாய உலகம் என வேதாகமங்களுட் கூறப்படுவதனை அநுமானவளவையான் உணர்த்துதலைக் கருதிற்று இச்சூத்திரம். எ-று.

ஏகாரம், இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை.

---

* பாதம் - சூத்திரம். † இச்சூத்திரப் பொருள்பற்றிய சுருதிகள்:—பிருகுவல்லி, க-ம் அதுவாகம். யதோவா இமானி பூதானி ஜாயந்தெ யெந ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஸந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்மேதி. அதர்வசிகை.

இதன்பொழிப்பு உரைத்துக்கொள்க.

இஃது, இவ்வுரைமுகத்துக் கேட்போரால் உரைவகைபற்றிச் செய்து கோடற்பாலதொன்றினை அறிவுறுத்துகின்றது.

இ - ள். இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு முன்னர்க் கண்ணழித்து ரைக்கும் பொழிப்புரைபற்றி உரைத்துக்கொள்க. எ - று.

எனவே, இங்ஙனம் இருவகைப்படும் பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடாவிடைகளானுரைக்கும் வார்த்திகமாய பொழிப்புரைமாத்திரையே யாம் ஈண்டுரைக்கின்றும்; பிண்டமாகக் கொண்டுரைப்பதாய பொழிப்புரை இது பற்றி உணர்த்துகோடல் எளிதாகலின், அஃது யாம் உரைக்கின்றிலம் என உரைமுகத்து மாணாக்கர்க்கு அறிவுறுத்தவாறுயிற்று.

இஃது, ஏனைச்சூத்திரங்களினும் உய்த்துக்கொண்டுணர்தற்பொருட்டு, முதற்கண் வைக்கப்பட்டது.

இவ்வாறு ஆசிரியர் ஆணைதந்தமையின் கண்ணழித்துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுதும்.

அவன் அவள் அது எனும் அவை-புலவர். எ-து. அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டியுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் *பிரபஞ்சத்தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலுடைமையால், ஒருவனுற் றோற்றப்பட்டதாய உள்பொருளேயாம். அது, தோன்றுங்கால், தான் ஒடுங்குதற்கு எதுவாய் நின்ற கடவுளினின்றும், *சகசமலம் நீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாறுகளின் சங்காரத்தொழிலைச் செய்யுங் கடவுளே உலகிற்கு முதற்கடவுள்; ஏனையோர் அன்னரல்லர் எனக் கூறுவர் அளவை நூலுணர்ந்தோர். எ - று.

அவை தொகுதி; சுட்டுப்பெயரெனக்கொள்ளின், உள எனப் பிரித்துப் பயனிலையாக்கித், தாம் என்பதனை அசைநிலையாகவைத்துரைத்து, ஆக்கச் சொல் வருவித்துக்கொள்க. வினைமை-வினையுடைமை.

தோன்றிய என்னுது 'தோற்றிய' எனப்பிறவினை வாய்பாட்டா னெஞ்சுதலின், அதற்குரிய வினைமுதல் அவாய்நிலையான் வந்தது. தோற்றிய என்னும் பெயரெச்சம் திதி என்னுஞ் செயப்படுபொருட்பெயர் கொண்டது. திதியாய் ஒருவனுற் றோற்றப்பட்டதென்பார் தோற்றிய திதி என்றார். திதி என்றது ஈண்டு உள்பொருளென்னுந்துணையாய் நின்றது.

ஸவ-ரூபிகம்ப்ரஹ விஷ-யாகூத்ரஹே வாக்ப்ரவ்ருத்தயே, ஸவ-ரூபிணி தே நிபுணாணி ஸஹஜமலயோத, நகாரணகாரணா நாம்யா தாயபாதா, காரணதா யையாஸவை-ருத்ய-ருத்வஸ்ருஜ்யஸம்ஹா ரகாரகா ஸக்தியே). சர்வஜித்தாந்தவிவேகம். ஈஸ்வராய நமஸ்தாஸ்மை ப்ரஹ்மாத்யாஸ்வ ஸவஸ்ப்ரஹோ| ஸவ-ருத்ஜ்ஞாயதேஸ்மாஸ்மை வ்ருத்யுவதி ஹநிஷ்யது|| * சகச மலம்-ஆணவமலம்.

மூவினையுடைமையால் உள்பொருளாதலும், அவ்விரண்டுமுடைமையால் நிமித்தகாரணனையுடைத்தாதலுக் துணியப்படுமென்பார், 'மூவினைமையிற் ரோற்றிய திதி' என்ரார்.

ஏகாரந் தேற்றம். ஓடுங்கி என்பது பெயர். உருபுகள் தொக்கு நின்றன.

அந்தத்தைச் செய்யுங் கடவுளே அந்தம் என்றது உபசாரம்.

காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவே ண்டுதலின், 'தோற்றிய திதியே' எனவும், 'ஓடுங்கியுளதாம்' எனவும் உலகின்மேல்வைத்துக் கூறினர். கருத்துரையுட் கூறியதும் அது நோக்கி.

இச்சூத்திரத்துள், அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின் என்பது ஓதிகாரணம்; தோற்றிய திதியே யொடுங்கி யுளதாம் என்பது மூன்றதிகாரணத்தை உள்ளடக்கி நிற்பதோர் திகாரணம்; அந்தமாதி என்பது ஓதிகாரணம்; ஆக மூன்றதிகாரணத்தது இச்சூத்திரமென் றுணர்க. இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன்று எதுவும் பயனுமாய் ஒருபொருண்மேல் வருதலின், ஒருசூத்திரத்தாற் கூறினர். தன்னைற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஔயப்படும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மதுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபும், இயைபும் என்னும் இவற்றது விலக்கணம் ஈண்டி அதிகாரம் எனப்படும்.

மூதலதிகரணம்.

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது.

எ–து. மே–ள். எ–னின். மூவினையுடைத்தா அவ்வீசு என்னும் ஔயப்பாட்டின்கண் நித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினையுடைத்தென்றல் பொருந்தாது என மீமாஞ்சகரும் உலோகாயதரும் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப் பகுப்புடைத்தாயும்பலவேறுவகைத்தாய்ச் சடமாயுஞ் சுட்டியுறியப்படுவதாயும் இருத்தலின் இம்முன்றோதுவானும் பிரபஞ்சந் தோன்றி நின்று அழியும் என்பது துணியப்படு மென்பார், 'உளதாயொருவனிருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்' என உடம்பொடுபுணர்த்தோதினர்.

உளதாய்ச்சுட்டப்பட்ட என இயையும். உளதாய்ச் சுட்டப்படுதல், முயற் கோடு முதலியனபோலத் † நிரிவையங்களானன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

தோற்றமும் ஈறும் உளதன்பாலே கிடத்தலின்.

* நிரிவு - விபரீதவுணர்வு.

எ–து. ஏது. எ–னின். காட்சியளவைக்கெய்தாது உரைப்பனவெல்லாம் பிரமாணமாகா என உலோகாயதர் கூறுங் கடாவை ஆசங்கித்துக் காட்சியளவைபற்றியும் மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். உற்பத்தியும் காசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக் கிடத்தலின் 'உளதாயொருவஞ்ஞருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி காசமுடைத்து' என மேற்கொண்டது. எ-று.

பூதாதி யீறு முதலுத் துணையாகப்
பேதாப் திதியாரும் பெற்றிமையி—னேதாரோ
வொன்றென்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து.

எ–து. உ–ம். எ–னின். உள்ளதன்பால் அவ்விரண்டுங் கிடத்தல் யாங்ஙனம்? என்னுங் கடாவை ஆசங்கித்து எதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பேதாய். எ–து. காட்சியளவைகளானும் அறியப்படாத மடவோனே,—பூதாதி. எ–து. பூதம் முதற்காரணமாகவுடைய பிரபஞ்சத்திற்கு,—திதி சூறும் முதலும் துணை ஆக ஆகும். எ–து. திதி, நிகழ்வழி, காசமும் உற்பத்தியுந் தனக்குத் துணைக்காரணமாகக்கொண்டே நிகழாநிற்கும். அற்றாயினும் ஒன்று தோன்ற ஒன்று நிற்ப ஒன்றழிவதன்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழியக் கண்டிலமாலெனின்,—ஒன்று ஒன்றின் பெற்றிமையின் தோன்றி உளதாய் இறக் கண்டும். எ-து. ஒவ்வொரு காலவிசேடத்திற் சாதிபற்றி ஒருங்கே தோன்றி ஒருங்கே நின்று ஒருங்கே அழிவதனைக் கண்டுவைத்தும்,—என்றும் அன்று உண்டி என்ன ஆய்ந்து ஓதாரோ. எ–து. என்றாயினும் அதற்குரிய காலம் வருமென்று உலகத்திற்கும் அங்ஙனமாதல் உண்டென்று அக்காட்சிபற்றி ஆராய்ந்து சொல்லார்களோ! உண்மைபோலும் மடமையில்லாதோர். எ-று.

பூதாதி அன்மொழித்தொகை. பூதத்துக்கு மேலுளவாய தத்துவங்கள் உலோகாயதருக்கு உடம்பாடன்மையின், பூதம் முதலாய தத்துவங்களென உரைத்தல் ஈண்டைக் கேலாமை அறிக.

பூதாதிக்கு எனக் கான்கனுருபு விரித்துரைக்க: அது பின்னருஞ் சென்றியையும். ஆகும் என்பது முற்றுவினை. ஈண்டுப் பெற்றிமை என்றது சாதியை. ஓகாரம் எதிர்மறை.

ஒன்றென்றின் என்பது *"ஒன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே" என்றாற்போல அடுக்குமொழி; அது காலவிசேடமாதல் என்றும் அன்று எனப் பின்வருதலாற் பெற்றாம்.

ஒருங்கே என்பது சொல்லெச்சம்.

* இந்நூல். கக-ம் சூ. க-ம் அதி. க. ஐந்தையு.

ஒன்றென்றிற்றென்றியுளதாயிறுதலாவது ''பயில்வித்தெல்லாங்–காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்'' என்பதனு ணறிக.

கண்டும் உம்மை சிறப்பு.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இல்லதற்குத் தோற்றமின்மையின் உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் ஒருங்கின சங்காரத்தி னல்லது உற்பத்தியில்லை என்றது.

என, இங்ஙனஞ் சொற்பல்காமைப்பொருட்டித் துணிந்ததாக வைத்து உரைத்தாராயினும், பொருளியைபிற்கேற்ப இதனை மூன்றதிகரணமாகவைத்து உரைப்பது ஆசிரியர் கருத்தெனக் கொள்க; அஃதாமாறு காட்டுதும்:—

[இனி உலகமுள்ளதுஎன்றது.]

எ–து. மே–ள். எ–னின். உலகம் இல்பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றியழிதல் இயல்பென்றலே அமைவுடைமையின், அது மூவினையுடைத்தாயினும் தோற்றுவானொருவனை யுடைத்தாதல் செல்லாது எனப் புத்தநூலார் கூறுங் கடாவை ஆசங்கித்துத் 'திதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

இல்லதற்குத் தோற்றமின்மையின்.

எ–து. எது. எ–னின். உள்ளதாதல் யாங்ஙனம் என்னுங் கடாவை ஆசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்தும் உற்பத்தி இன்மையின் ஈண்டு உற்பத்தி காணப்படுதலான் 'உலகமுள்ளது' என மேற்கொண்டது. எ-று.

[இனி உலகஞ் செய்வோ னுடைத்துஎன்றது.]

எ–து. மே–ள். எ–னின். உள்பொருளெனப்பட்ட பிரபஞ்சம் தத்தம் முதற்காரணத்தினின்றுந் தானே தோன்றி அழியும் இதற்கொரு நிமித்தகாரணமாய் ஒருகருத்தா வேண்டாம் எனச் சாங்கியர் கூறுங் கடாவை ஆசங்கித்துத் 'தோற்றிய' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின்.

எ–து. எது. எ–னின். அதற்குப் பிரமாணமென்னை? என்னுங் கடாவை ஆசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். மண் முதலியவற்றி னுள்ளதாகிய கடம் முதலிய பொருட்குக்குயவன்முதலிய செய்வோரையின்றி வனைதன் முதலிய செய்தொழில் நிகழாமை

யின், உலகம் இவ்வியல்பிற்றுகலான் 'இனி இவ்வுலகஞ்செய்வேரணியுடைத்து' என மேற்கொண்டது. எ - று.

இனி ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தி இல்லை என்றது.

எ–து. மே–ள். எ–னின். இத்துணையுங் கூறியவாற்றுன் உலகத்தைத் தோற்றுவிப்பான் உண்டெனப்பட்ட கருத்தா திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரில் ஒருவனேயாதல் அமையும் எனப் பாஞ்சராத்திரிமுதலியோர் கூறுங் கடாவை ஆசங்கித்து 'ஒடுங்கியுளதாம்' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ - ள். உலகம் தான் ஒடுங்குதற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவி னின்றன்றி உளதாகாது. எ - று.

ஒடுங்கின என்னும் பெயரெச்சஞ் சங்காரம் என்னும் இடப்பெயரோடு முடிந்தது. சங்காரம் ஆகுபெயர்.

அல்லதில்லை என்று எதிர்மறைமுகத்தாற் கூறியது, ஏகைக்கடவுளரின் உளதாகாமை யாப்புறுத்தற்பொருட்டு.

இதனுள் ஒடுங்கின என்பதனுற் போந்த குறிப்பேதுவைப் புலப்படக் காணுமாறு:—

[ஆண்டு ஒடுங்குதலின்.]

எ–து. ஏது. எ–னின். அதற்குப் பிரமாணமென்னை? என்னுங் கடாவை ஆசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ - ள். யாது யாண்டொடுங்கும் அஃது அதனில் உற்பத்தியாம் மண் ணிற் குடம் போலும் என்னும் அவிநாபாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகார ணன்மாட்டு ஒடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் ஆண்டு நின்றுந் தோன்று தலே பொருத்த முடைமையின் அவ்வாறு மேற்கொண்டது. எ - று.

இவ்வாறு மூன்றதிகரணப்பொருளும் இதன்கட் போந்தவாறும், இவ்வா றுரையாக்காற் பொருள் இயைபுபடாமையும், நுண்ணுணர்வாற் கண்டு கொள்க.

இலயித்த தன்னில்ல யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்—

எ–து. உ–ம். எ–னின். உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாக வேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாதம் அடாது எனப் புத்தர் கூறுங் கடா வை ஆசங்கித்து 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்ற ஏதுவை வலியுறு த்துத னுதலிற்று.

இ - ள். இலயித்தது இலயித்த தன்னில் ஆம். எ–து. உள்ளதாயினுஞ் சங் காரகாலத்தி லொடுங்கியதாகலான் அவ்வொடுங்கிய உலகம் தான் ஒடுங்கு தற்கு நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றும் படைப்புக்காலத்தின் மீள

உளதாம். அற்றேல், ஒடுங்கியது ஒடுங்கியவாறே ஒழியாது மீள உண்டாக வேண்டாம்: வேண்டுமாயின், முன் ஒடுங்காது நிலைபெறவே அமையும்: அவ் வாறன்றி ஒடுங்கி மீள உளதாவது எற்றுக்கு? எனின்,—மலத்தால். எ-து. உள் ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி, ஆணவமலம் பரி பாகமாதற்பொருட்டு மீளவும் உண்டாம். அற்றேல், முன்னின்ற பிரபஞ்சம் நாசமாக வேறு தோன்றுமென்னுமல் அதுவே ஒடுங்கி நின்று மீள உளதாமெ ன்றற்குப் பிரமாணம் என்னை? எனின்,—இலயித்தவாறு உளது ஆ வேண்டும். எ-து. எஃது எவ்வாறு நின்று ஒடுங்கிற்று அஃது அவ்வொடுங்கியவாறே உள தாதல் எல்லாரானும் விரும்பப்படும். ஈ - று.

எனவே, அந்தியமமில்லையாயின் நெல் கமுகாய் நிளாது நெல்லாய் நிலுந த ற்கு ஏது என்னை? என்னுந் தருக்கமே அதனை அறிவுறுத்தும் என்றவாறுயிற்று. சற்காரியவாதத்தினியல்பு * "தந்துமுதல காரகம்" என்னும் ஞானமிர்தத்தி னுங் காண்க.

இதனானே, இல்லதுமுள்ளதுமல்லாத பொருடோன்றும் என்னுஞ் †சூனி யவாதிகளும், இல்லதுமுள்ளதுமாய பொருடோன்றும் என்னும் ‡அநேகாந் தவாதிகளும் மறுக்கப்பட்ட வாறறிக.

இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு.

எ-து. உ-ம். எ—னின். இனிச் சற்காரியவாதத்தின் அவ்வக்காரியங்கள் தத்தம் முதற்காரணத் தொடுங்குமெனவே கோடலின் உலகிற்கு முதற்கார ணமாகிய மூலப்பகுதி வாசகேதவருருவாகலான் உலகம் அவன்மாட்டொடுங் குமென்றலே அமையுடைத்தன்றி முதற்காரணத்தின் வேறுய் நிமித்தகாரண மெனக் கொண்ட சங்காரகருத்தாவின்மாட்டு ஒடுங்குமென்றல் பொருந்தா தெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங் கடாவை ஆசங்கித்து 'ஒடுங்கின சங்காரத் தின்' எனவும் 'இலயித்ததன்னில்' எனவுங் கூறிப்போந்த குறிப்பேதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். இலயித்தது அத் திதியில் என்னின். எ-து. உலகம் ஒடுங்கியது அந்த மூலப்பகுதிவடிவாய திதிகருத்தாவின்கண் என்பையாயின்,—அவை அழியாது. எ-து. நீ அங்ஙனங் கொள்ளினும் மூலப்பகுதிக்கு மேலுள்ள புவ னங்கள் அதனுல் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள வகேதசமாத்திரமே ஆண்டு ஒடுங்குவதன்றி மாயாகாரியத்தொகுதி முழுவதும் ஆண்டொடுங் காது. அற்றேல், மாயாகாரியத்தொகுதி முழுவதும் யாண்டொடுங்குவதெ னின்,—அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது. எ-து. அந்தத் திதிக்கட வுளும் படைப்புக்கடவுளுந் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக்கட வுளிடத்தே அவ்விருவரோடுங்கூட அழிவதாம் அத்தொகுதி. எ - று.

* ஞானமிர்தம், தூல். கடு. † சூனியவாதி பௌத்தருள் மாத்தியமிகன். ‡ அநே காந்தவாதி ஆருகதன். அநேகாந்தம் - அநேகமுடிபு. அதனை கசு-ம் பக்கத்திற்காண்க.

இவ்வெண்பாவினைச் *"செய்யுட்க ளோசை சிதையுங்காலீரளபு—மையப்பா டின்றி யமையுமா—மைதீசொற் – றின்றியுஞ் செய்யுட் கெடிஞெற்றை யுண்டாக்கு—குன்றுமே லொற்றளபுங் கொள்." என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்படுமாறு இருதொடராக வைத்துரையாக்காற் 'பொருளியைபுப டாமையறிக.

இலயித்த வென்னும் பெயரெச்சம் தன்னென்னும் இடப்பெயரோடு முடிந்தது.

இலயித்ததென்றது எதுப்பொருண்மை யுணராநின்ற பெயர். இலயித்த தெனச் சற்காரியவாதங் கூறவே இலயித்தவவத்தையின் அவ்வக்காரியசத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்றுண்டு. அதுவே முதற்காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது.

ஆவென்பது முதனிலைத்தொழிற்பெயர். வேண்டுமெனச் செயப்படுபொ ளாச் செய்ததுபோலக் கூறினர்.

அவை தொகுதி; அஃறிணைப் பன்மைப் பெயரென்பார்க்கு அழியாது அழிவதென்னும் ஒருமைகளோடியையாமையும் உத்தரமாகாமையுமுணர்க.

திதியும் ஆதியும் ஆருபெயர். ஆமங்கு பெயரெச்சமுடிபு.

இரணியகருப்பமதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக்கடவுளையும் உடன்கூறினர்.

நிமித்காரணனுகிய முதல்வன் உலகிற்கு முதற்காரண னல்லனுயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டுநின்று தோன்றுதல் அமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்ரு ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனு மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொ
கூட்டானே மண்போற் குளிர்ந்து. [டித்துக்

எ—து. உ—ம். எ—னின். உலகந் தனக்கு முதற்காரணமாகிய மாயையினெடுங்குவதன்றி நிமித்தகாரணன் ஒருவனுண்டெனக் கொள்ளினும் அவன்மாட்டொடுங்குமென்றல் பொருந்தாமையின், யாது யாண்டொடுங்கும் அஃததனிலுற்பத்தியாம் என்னும் அவிநாபாவத்தான் மாயையினெடுங்கிய உலகத்தை மாயையே தோற்றுவிக்கும் இதற்கோரிறைவன் வேண்டா எனச் சாங்கியநூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின் என்னுமேதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ—ள். மண் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம் அத்தன் தான் நிற்றல் அவர் வினையால் வித்தகம் ஆம். எ—து. மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின் வித்துக்கு ஆதாரமாகி

* இதனை மாபுராணச்செய்யுளென்பர் நச்சினர்க்கினியர்.

யநிலங் குளிர்ந்தவழி அதன்கண் வித்துள்ளதாக அதனினின்றும் அங்குரந் தோன்றியவாறுபோல மேலிவெண்பாவின் இலயித்தது என்றதனாற் பெறப் பட்ட மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியி ன்கணுள்ளதாய் நிற்றலால் அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீ டாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுர்ப்பாடு டைத்தாம்: அல்லுழி உடைத்தன்று. நிலங் குளிர்ந்தவழி அதன்கட்கிடந்த ன்றி வித்து முளையைத் தோற்றுதவாறுபோலும். ஆகலான் மாயையினெடுங் கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியினெடுங் கித் தோன்றியதேயாம். எ – று.

ஆகலானென்பது முதல் குறிப்பெச்சம். இது கிழங்கினின்றுந்தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானுமறிக. வழிநூலாசிரியர்*''உயிரவையொடு ங்கிப் பின்னு முதிப்பதெ னரன்பால்'' எ–ம். †''உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடும்'' எ–ம். ஓதியதூஉம், உலகவனுருவிற்றோன்றி யொடுங்குமாறு ‡வாதுளாகமத்தில் வகுத்தோதியதூஉம் இவ்வியல்பு நோக்கியென்க. இஃதறி யாதார்இன்னோரன்னவற்றைத் தத்தமக்கு வேண்டியவாறெழுதுரைப்ப.

உவமவினை பொருளினும் பொருளடை உவமையினுஞ் சென்றியையும்.

உண்டாகவெனச் சற்காரியத்தை வலியுறுத்துதல், வித்தில்வழி நிலத்தி னின்றும் அங்குரந் தோன்றுதவாறுபோல மாயையில்வழிப் பிரமத்தினின்றும் உலகந்தோன்றுதெனப் பரிணமவாதிகளையும், மாயை அநிர்வசனமென்னும் மாயாவாதிகளையும், வித்துநிலனும்போலென்றதனான் மாயை முதல்வனின் வேறுபொருளன்றென்னுஞ் சிவாத்துவிதசைவர் பாஞ்சராத்திரிகளையும், மறு த்தவாறுமாயிற்று.

---

* சிவஞானசித்தி, சுக்ம சூ. ஊஉ. † ,, சஅ. உலகினையிறந்தது. ‡ வாதுளாகமம்.

கமிஃபுஸவூவஸஹஜ்ரஃஸர நுஜெஹஸவூ வஸிஃஹ்லவ்ஃ| ஃஜெஹஸஹவூவஸஹ ஜ்ரஃஸாஃஸக ரஃஹ்ரு ஜெவஃஸஃஹ்லவ்ஃ॥வத நுஜெஹஸ கொடூஃஸாஃஸக ஐ ஹவிஷ்ண வஸிஃஹ்லவ்ஃ|உக்ஷிணாஃம ஸவொ வ்ரூஹா ஹரி வ்ரூஸாஃம ஸஃஸவஃ॥ ஹ்ரூஉயா நீஜ்ரஸ்ரஃஹ்ரு ஸ்ரஃக ஸிவவூ ஸிவஸஃஜ்ஞக்ஃ|நெதி ருஷ்ண வவூவாஜொயெ ஃபுவஸ்ரபுஜொஸாரிஜ்ஹ்லஸஃஸவஃ॥வ்ரணவாய ஸ்ல ஃஹ்வ்தளஜ்ஞஃ ஜெரொதி கீஜ்ஹாழி ஸஃஸவஃ|க்ஷுவெவூ ஜ்ரா நா, வஸிஃஸ்வஜ்ஞ ஃ மணெஸஜ்ஹ்ஸ ஃமஜொஷவஃ॥ஷுண்ணவொஜ்ஹ்ரு ஏயெ ஜ்ரஃதொ நாஃஸள ஜெவா ஃ வஸிஃஹ்லவாஃ|வஜ்ரஸக கொழிஜெவாஸ்ரு ஃஜெஹஸாஃமஸிஃஹ்லவாஃ||ஸ்ஷயஸ்ரு தயா கொடூஃஜொரொகூஸவாக வஸிஃஹ்லவாஃ|ஃஜெநா நுஜெஹ்ரு வ ஸுஸஹஸ்ரஃஸாக மௌரீஜாதிகிஸ்ரு கஃம்ஸ்ரீவாஸ்ரவ்ஸதீ ஏஃமஃபா உசிரஜெவ வ்ரூஹா தயா|ஸவீஜ்ரூஷ்டாஃப ஜுகூஃப தயெவாநூஸ்ரு ஸகுயஃ| வாதாஜெவ கெஃழிஸகிஸ்ரு மௌரீஜெ ஹஸவஸிஃஹ்லவா॥

முதல்வன் பலவேறுவகைப்படச் சங்கற்பித்தவாறென்னை என்னுங்கடாவை யாசங்கித்து, அவ்விலையாலென்றார்.

வித்தகம் விசித்திரமென்றுரைப்பினுமமையும்.

அற்றேல், தன்வயத்தானன்றி விலைவயத்தாற் றோற்றுவிப்பான் இறைவனுகானெனின்,

வேட்டுவன் ஆம் அப்புழுப்போல் வேண்டி உருவைத் தான் கொடுத்துக் கூட்டானே. எ–து. வேட்டுவனுகலே விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறுபோல, இறைவனும் அவரவர் வேண்டுமுருவினைக்கொடுத்து அவ்வினைக்குத் தக்க பயன்களையுங்கூட்டுவன். ஆகலான் அது கொண்டு சுதந்திரத்திற்கிழுக்கென்னை. எ–று.

ஆகலான் அதுகொண்டு சுதந்திரத்திற் கிழுக்கென்னையென்பது குறிப்பெச்சம்.

போல் அசை. குளிர்ந்தவழியென்பது குளிர்ந்தனைத் திரிந்துநின்றது.

நிற்றலினென்னும் ஐந்தாவது விகாரத்தாற் றொக்கது. எகாரம்எதிர்மறை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றூக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—னுக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்றுங் கட்டு.

எ–து. உ–ம். எ–னின். மேலையுதாரணத்திற் கூறியவாற்றுன் உலகிற்கு முதற்கடவுள் உண்டெனக்கொள்ளினும் அவன் படைப்பு முதலியன தொழில் செய்வானுயின் விகாரமெய்தி அதனிற் பந்தமுறுவானென்னுமவர்மதம் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ–ள். இறைவன். எ–து. முதல்வன்,—காலத்தில் தாக்காதுநின்று.எ–து. இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலுஞ்செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங் காலம்போல விகாரப்படாது நின்று,—ஆக்காதே கண்டு. எ–து. பிரபஞ்சத்தைக் காரணத்தாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து,—நோக்காது நோக்கி நொடித்து. எ–து. அவ்வாறே காவாது காத்து அழியாதழித்தலால்,— இன்று ஆம் கட்டு. எ–து. இவ்வமல னுக்குப் பந்தமின்றுதல்,—உளத்தில் கனவு கண்ட கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனில் இற்று. எ–து. கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்திற் றேன்றுங்கால் உள்ளம் அவற்றிற் றொடக்குண்ணுதவாறுபோலும் கனவின்கட் கண்டவற்றைப் புறத்துவிடயங்களோ யறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே விளங்கவறிந்தவன் அப்பொழுது அவற்றிற் றொடக்குண்ணுதவாறுபோலு மித்தன்மைத்து. எ–று.

எனவே *இஃதிவ்வாறுக வென்றெண்ணுதலாகிய சங்கற்பமாத்திரையாற்செய்வதூஉம் காரணத்தாற் செய்வதூஉமென வினைமுதல் இருவகைப்படுமென்பதூஉம், காரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்திரையாற் செய்யுமுதல்வனுக்கு வினைமுதலாதற்பொதுமை பற்றி ஒருபுடையுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமையானும் சங்கற்பமாத்திரையாற் செய்புஞ் செய்திக்குக் கட்டுண்டன்முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானும் அவை ஆண்டுளவாதற் கோரியைபின்றென்பதூஉம் கூறி, எதுவை வலியுறுத்தவாறு காண்க.

ஆக்குதல் படைத்தல்; காண்டலும் அது. நோக்குதல் காத்தல். கொடித்தல் அழித்தல்; அது †"கொடித்தான்மலே" என்பதனுணுமறிக.

ஆக்காது நோக்காது என்றமையால் கொடியாதென்பது வருவித்துரைக்கப்பட்டது. கொடித்தலானென்பது கொடித்தெனத்திரிந்தது.

அன்றே அசை; அநாதியேயெனினுமமையும்.

இல் மூன்றும் உவமவுருபுகள்.

உளத்தினென்பதற்குச் சங்கற்பத்தாலென்றுரைப்பினுமமையும்.

இன்றுங்கட்டு என்பது ‡"அருங்கேடன்" என்பதுபோல நின்றது.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

இனிச் சங்காரமே முதலென்றது.

61–து. மே–ள். எ–னின். 'ஒடுங்கினசங்காரத்தினல்ல துற்பத்தியில்லை' எனவே சங்காரகருத்தா உலகிற்கு முதற்கடவுளென்பது போந்ததாயினும் தேர்முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலின் அவற்றினும் அதிவிசித்திரமான உலகத்திற்கு மற்றுமதற்கமையாய முதற்கடவுளர் உண்டெனக்கோடும் என்னும் அநேகேசுரவாதிகண் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவையாசங்கித்து 'அந்தமாதி' என்னுஞ் சூத்திரக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ–ள். சங்காரகருத்தா ஒருவனே உலகிற்கு முதற்கடவுளென்றது.எ–று.

---

* இதனை கூர்ரக்ஷ ஜிவியம் விவ்ரஃ வம்கூவ்ராக கூரணா ஏவி| நஹி வம்கூவ ஃரெத்ரண கூவ்ரஃலெஃ க்ரியதெ வட்ட:||ஸிவஃ வம்கூவ ஃரெத்ரண வித்-க்ஷோஹகரஃ வஹ்ரா| என்னும் பௌஷ்கராகம சுலோகத்தானுமறிக.

† சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், ஸ்ரீ கயிலாயச், பஞ்சமம். க. தானெனே.

‡ திருக்குறள், உக-ம் அதி. தீவினையச்சம். கo.

சங்காரம் ஆகுபெயர். ஏனையோர் முதல்வராகாரெனப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின்வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ–ள். ஒன்றொன்றுய்ச் சுட்டியறிவதாகிய உருவும் அருவுமென்றிருவே றுவகைப்பட்ட பிரபஞ்சம் அவ்வாறு சுட்டியறிதலின்றி எவ்வுலகும் ஒன்றுய றிந்து நின்ற சங்காரகருத்தாவின்வழிப் பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெ னச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன்றுகலாற் சங்காரகாரண னொருவனே உலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுள ரல்லரென மேற் கொண்டது. எ – று.

பிரபஞ்சத்திற்குச் சுதந்திரமின்மையுஞ் சங்காரகாரணனுக்குச் சுதந்திர முண்மையும் எதுமுகத்தாற் காட்டுவார் சுட்டுணர்வாகிய பிரபஞ்சமெனவுஞ் சுட்டுணர்வின்றிநின்ற சங்காரமெனவும் ஈரிடத்தும் உடம்பொடு புணர்த்தோ திஞர். சுட்டுணர்வுடையதனைச் சுட்டுணர்வென்றது உபசாரம்.

ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை; பிரிநிலையேகாரத் தான் விலக்குதற்குரியது அதுவேயாகலின்.

தேர்முதலாயின பலரான்செய்யப்படினும் அப்பலரும் ஒருவனேவல்வழி நின்றேசெய்ப வாகலானும், வேதத்துட் *காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வி னராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோ ரைக் காரணமென்றது குயவன்போல் அவர்தர காரணமாதல்பற்றியே யாக லின் அவையெல்லாம் †ஆகுபெயராற் சங்காரகாரணனுகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்கு மாகலானும், செய்துஞ் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்கு முதற்கடவுள் சங்காரகருத்தா வொருவனே யென்பது கருத்து.

ஒன்றலா வொன்று லுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறுத—லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு.

எ–து. உ–ம். எ–னின். அங்ஙனமாயினுஞ் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினுற்போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பலவுளவெனக்கோ

---

* நாராயணன்முதலியோரைக் காரணரென்றுணர்த்தியசுருதிகள் முறையே வாகொஹவெ நாராயண ஆவீக்ஷ ஹிரண்யமஹ்ந் வாவ த்வ்தா ஹ்ரு நஹீந்ர ஊர்த்வ்ஸ் கஸ்மிந்வ யஸோ தெவதா நாம் வாயு ர்வை கௌதம ஆதித்ய வஷட்கார என்பன. † இடவாகுபெயர்.

மும், ஒன்றேயென்றற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ–ள். அவை. எ–து. சேதனப்பிரபஞ்சத் தொகுதி,—ஒன்று அலா ஒன்முல். எ–து. உருவும் அருவுமென்னும் அவ்விருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத ஒப்பற்ற பரம்பொருளாலே,—உளது ஆகி நின்றவாறு. எ–து. சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே,—ஒன்று அலா ஒன்றில் ஈறுதல். எ–து. அந்தப் பரம்பொருளின்கண்ணே சங்காரப்படுதலால்,—ஒன்று அலா ஈறே முதல். எ–து. அச்சங்காரக்கடவுளொருவனே உலகிற்கு முதற்கடவுள். அற்றேல், இவ்வாறு முத்தொழிற்படுஞ் சேதனப்பிரபஞ்சம் வீடுபெற்றவழிச் சுட்டுணர்வின்றிச் சிவசமமாமென *வேதத்தும் ஆகமத்தும் ஓதுதலின் அவ்வழி அவையும் முதற்கடவுளாமென்றற்கு இழுக்கென்னையெனின்,—அதனின் ஈறு அலா ஒன்று. எ–து. அப்பரம்பொருள்போல் அழிவின்றி நித்தமாய சேதனப்பிரபஞ்சம்,—†அங்கு. எ–து. வீடுபேற்றின்கண்ணும்,—பலவாறே தொழும்பு ஆகும். எ–து. பலவாற்றுணும் பரம்பொருளுக்கு அடிமையாம். எ–று.

இது சொற்பொருட்பின்வருநிலை.

காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்சம் அவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்தற்கு இவற்றின் வேறாய் ஒருமுதற்கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திரகாரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறு கடாத்தும் முதற்கடவுள் முற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளுஞ் சுதந்திரமும் முதலிய நிரதிசயகுணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது: படவே, இத்தன்மையனகிய முதற்கடவுளொருவனே அமையுமாகலின் வேறுமத்தன்மையருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம்: அல்லதூஉம், இலக்கணத்துள் ஒருவாற்றுணும் வேற்றுமையில்வழி இலக்கியம்பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால், ஒன்றலாவொன்று என வரையறுத்தோதினர்.

ஈறே முதலென்றது முடிந்தது முடித்தல். ஈறு ஆகுபெயர்.

இறந்ததுதழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது.

பலவாறுவன, இருணீங்கியவழியுங் கண்ணுக்குக் காட்சி ஞாயிற்றையின் றியமையாதவாறுபோல, மலநீங்கிய முத்திநிலையினும் ஆன்மாவுக்கு அறிவு வியஞ்சகமாய் உடனின்றறிவிக்கு முதல்வனையின்றி யமையாதவாறுங், கண்படிகம் ஆகாயம்போலச் சார்ந்ததன்வண்ணமாயன்றி முதல்வன்போலத் தனித்துநிற்கு மியல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாமுரிமையின்றிச் சிவானுபவமொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான் விளக்கொளியுட் கண்

* முண்டகோபநிடதம், ஈ–ம் முண்டகம், க–ம் கண்டம், ங–ம் மந்திரம் கீஶா வாஸ்ய மிதꣳ ஸர்வம் யத்கிஞ்ச ஜக³த்யாம் ஜக³த்।

† அங்குமென்பதன் உம்மை தொக்கது.

ஞெளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறும் முதலாயின. அற்றேல், முத்திநிலையின் ஆன்மாச் சிவமாமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னையெனின்; அஃது உண்மை யதிகாரத்துட்பெறப்படும்.

இதனானே சிவசமவாதி சங்கிராந்தவாதி உற்பத்திவாதி ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன.

பதியுண்மைக்குப் பிரமாணங்கூறுவார் 'மலத்துளதாம்' எனப் புனருற்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமும் உடன்கூறினர். அதனை ஈண்டு வேறோரதிகரணமாக வைத்துரையாராயினர்;அதிகரணத்திற்குரிய ஐயப்பாடு முதலியனவெல்லாஞ் சகசமலத்துணராதென அதனிலக்கணங்கூறும்வழிப் பெறப்படுதலால், ஈண்டு மிகைபட வேறோதல்வேண்டாமையின்.

இச்சூத்திரத்ததிகரணங்களாற்போந்த தொகைப்பொருளாவது:—தோற்றக்கேடுகளதுண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையிற் பிரபஞ்சம் நித்தப்பொருளேயாம். அன்றித் தோன்றியழியுமெனக் கொள்ளினும், இல்பொருள் தத்தஞ்சார்பிற்றோன்றி நின்றழிதல் இயற்கையெனவுமையும்; செயற்கையென்றற்கு ஓரேதுவின்மையின். மற்றுள்பொருளாயின், அது வேயமையும் இறைவன் வேண்டா; இரண்டுள்பொருள்கோடல் மிகையாகலின். வேண்டுமாயினும், மாயோன் முதலிய கடவுளரில் ஒருவனேயமையும் அவரையொழித்துச் சங்காரகருத்தா முதற்கடவுளென்றதற்குப் பிரமாணமென்னை? பிரமாணமுண்டாயினும், அதிவிசித்திரமாய பிரபஞ்சம் ஒருவனுற் செய்தல்கூடாமையின், மற்றும் அவ்வியல்பினராய முதற்கடவுளர் உளராதல் வேண்டும் என உலோகாயதர் மீமாஞ்சகர் புத்தர் சமணர் சாங்கியர் பாஞ்சராத்திரிகள் அநேகேசுரவாதிகண் மதம்பற்றிப் பூருவபக்கநிகழ்ந்தவழி அவரை மறுத்துச் சித்தாந்தஞ்செய்து முதற்கடவுளதுண்மை *பொதுவகையானுஞ் †சிறப்புவகையானுங் கருதலாலவையின்வைத் தணர்த்தியவாறென உணர்க. இவ்வாறு சூத்திரந்தோறும் உணர்ந்துரைத்துக்கொள்க.

மூன்றுமதிகரண முடிந்தது.

முதற்சூத்திரமுடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

---

* பொதுவகையானுணர்த்தியது உலகஞ் செய்வோனே யுடைத்து என்றது.

† சிறப்புவகையானுணர்த்தியது ஓடுங்கினசங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது.

இரண்டாஞ்சூத்திரம்.

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

எ-து. சூ-ம். எ-னின். புனருற்பவம் வருமாறுணர்த்துத லுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்துணர்த்துதலுதலிற்று.

இ-ள். உலகம் ஒடுங்கியினின்றும் மீளவுளதாமாற்றை வருத்துணர்த்து முகத்தானே துணைக்காரணமுதலியன இல்வழி இறைவன் உலகிற்கு நிமித்த காரணனுதல் சாலுமாறு யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்ற துண்மைக்குப் பிரமாணமுணர்த்துதலுதலிற்று இச்சூத்திரம். எ - று.

சூத்திரவியையும் இதனானே விளங்கும்.

'ஒடுங்கியுளதாம்' என்றவழி ஒடுங்கியினின்றும் மீளவுளதாவது எவ்வா றென்று அவாய் நிற்றலின், அவ்வவாய்நிலைபற்றிப் புனருற்பவமே ஈண்டுக் கூறப்பட்டது.

*இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரத்து எடுத்துக் கொண்ட சங்காரகாரணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற் றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம்போல் உடனுமாய் நின்று, * ஆணையென்னும் பரியாயப்பெயருடைய தனது சிற்சத்தியான்வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன். எ-று.*

அவையேதானேயா யென்பதனை இரட்டுற மொழிந்துகொண்டுரைக்க. இக்கருத்தேபற்றி † "உலகெலா மாகி வேருயுடனுமாய்" என்றார் வழிநூலா சிரியரும்.

மேலைச்சூத்திரத்தின் 'அந்தமாதி' என்புழி விகாரத்தாற்றொக்க பிரிநிலை யேகாரத்தான் விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சத்தை ஈண்டு அவை யெனச் சுட்டிக்கூறினர்.

"ஒடுங்கியுளதாம்" என்றதற்கேற்ப ஈண்டும் போக்கினை முற்கூறினர்.

---

* ஆணை சிற்சத்தி என்பதனை "ஆஜ்ஞா ஸஹவெதயா" என வடமொழிச் சிவஞானபோதத் திரண்டாஞ்சூத்திரத் தோதியவாறுபற்றியுணர்க. சிற்சத்தி பரிக்கிரக சத்திபோலாது சிவனுக்கு அபின்னமாயுள்ள தென்பது, நஹாதி விஜ்ஞாதெரூவி தயா ஸகூர்வ விநாசிவஸ்ய வ்யவயாஹி விநாயபுக ஹாந-ரெஷ நவிஜ்ஞெ || என்னும் வாயசங்கிதைச் சுலோகத்தானு முணர்க. †சிவஞானசித்தி, உ-ம் சூ. க.

புரிதல் எப்பொழுதும் மேற்கோடல்.

ஆணவமினென்பது சிங்கநோக்காய் இருவினையென்பதனோடும் நீக்கமின்றியென்பதனோடும் இயைத்து பொருடந்துநின்றது. ஆண்டு இன்னுருபு முன்னர் ஏதுப்பொருட்கண்ணும், பின்னர் நீக்கப்பொருட்கண்ணுமாய், நின்றது. இன்னென்பது சாரியையெனக் கொண்டு ஈரிடத்தும் எற்குமுருபுகள் விரித்துரைத்தலுமொன்று.

அன்றே அசை; அநாதியே இவ்வாறு நிற்குமெனினுமமையும். ஆய்ப்புரிய நிற்குமெனவே, அச்செயல்களெல்லாம் முதல்வன் கரணத்தானன்றிச் சங்கற்பமாத்திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது.

இதனானே மேல் 'அத்தம்' என்று உத்தேசமாயெடுத்துக்கொண்ட முதல்வனுக்கு இலக்கணங் கூறியவாறுமாயிற்று. இது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆணவினிருவினையினைனவே, தனது சிற்சத்தி துணைக்காரணம், இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணம். இருவினையினைனவே அதற்குப் பற்றுக்கோடுண்டென்பதூஉம் பெற்றுமாகலின், அது முதற்காரணமென்பதூஉம், இருவினையிற் போக்குவரவுபுரியவெனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைகட்கேற்பப் பலவேறுவகைப்பட்டு விரியுமென்பதூஉம் போந்தவாறு காண்க.

இதனுள் அவையேதாமேனையாய் என்பதோ ரதிகரணம்; ஆணவினிருவினையின் என்பதோ ரதிகரணம்; போக்குவரவுபுரிய என்பதோ ரதிகரணம்; ஆணவினீக்கமின்றி நிற்குமன்றே என்பதோ ரதிகரணம்; ஆக நாற்கூற்றது இச்சூத்திரமெனக் கொள்க.

முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் ருனேயாய் நிற்கும் என்றது.

எ-து, மே-ள், எ-னின், மேன் முதற்கடவுளல்லவென விலக்கப்பட்டு நின்ற சேதனப்பிரபஞ்சமும் முதல்வனும் *பொன்னும் பணியும்போல் அபேதமோ †இருளும் வெளியும்போற் பேதமோ ‡சொல்லும் பொருளும்போற் பேதாபேதமோ என்னுமையப்பாட்டின்கண் அம்மூன்றனுள் ஒசோவொன்றேபற்றி அவ்வம்மதத்தார் கூறும் கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

ஈண்டும் இரட்டுறமொழிந்துகொள்க.

---

* பொன்னும் பணியும்போல் அபேதங் கொள்வார் மாயாவாதிகள்.

† இருளும் வெளியும்போற் பேதங்கொள்வார் மாத்துவர். வெளி-ஒளி.

‡ சொல்லும் பொருளும் போற் பேதாபேதங் கொள்வார் பாஞ்சராத்திரிகள்.

இதனானே, ஒருவிடயத்தைக் காணுங்கால், ஆன்மபோதம், கண்ணொளி யெனத் தானென வேறின்றி உடனாய் நின்று காணுமாறுபோல, முதல்வன் புனருற்பவஞ்செய்யுங்கால் உயிர்களோடு உடனாய் நின்று செய்வனென்ப தூஉம் பெறப்பட்டது.

அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

எ–து. ஏது. எ–னின். முதல்வன் அவ்வாறு மூவகையுமாய் நிற்பனென்றற்குப் பிரமாணமென்னை என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாத்தித்தனுதலிற்று.

இ–ள். அத்துவிதமென்ற சொல்லின் நகரம் இன்மை அன்மை மறுதலை என்னு முப்பொருளுணர்த்துமன்றே, அவற்றுள் இன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்ற மொழிமாத்திரையானே ஒருபொருளென்றல் பொருத்த முடைத்தெனின்,—தானே தன்னையொன்றெனக் கருதல்வேண்டாமையின் அவ்வாறுகருதும் பொருள் வேறுண்டென்பது பெறப்படுதலானும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருண்மாத்திரையே யுணர்த்திப் பொதுமையினிற்பதன்றி ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல இன்மை மறுதலைப்பொருள்களையுணர்த்துதல் வழக்கின்கணின்மையின் அத்துவிதமென்கின்ற மொழிதானே பிரிதுகாரணம் வேண்டாது வேறன்மையை யுணர்த்தி நிற்குமாகலானும், ஈண்டிவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் றானேயாய் நிற்குமென மேற்கொண்டது. எ–று.

ஆகலானென்பதற்கு ஆயிட்டென்பது அக்காலவழக்குப்போலும்; அற்றாகலினன்றே * "நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு." என்றார் வழிநூலாசிரியரும்; இனி "மழைபெய்து குளநிறைந்தது." என்புழிப்போல ஆயிடலாலென்பது ஆயிட்டெனத் திரிந்ததென்றலுமொன்று.

எண்ணும்மை விரித்துரைக்க.

வேறின்றி உடனுதல் பெறப்படவே, பொருண்மையாற் பேதமென்ப தூஉம் கலப்பினுல் அபேதமென்பதூஉந் தாமே போதருமென்பது கூறுத்து.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றும்--கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.

எ–து. உ–ம். எ–னின். ஒருபொருள் மூவகையியல்பை யுடைத்தால் யாங்ஙனம் என்னுங்கடாவை யாசங்கித்து அவற்றுள் அவையேயாதலை உவமைமுகத்தான் வலியுறுத்துதனுதலிற்று.

* இருபாவிருபது. சு. கூறியமூன்று.

இ—ள். உள்ளம் கட்டும் உறுப்பும் காரணமுங்கொண்டு. எ—து. உயிர் நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டு நின்று,—இட்டது ஒருபேர் அழைக்க என் என்றாங்கு. எ—து. சாத்தா கொற்று என உடம்பிற் கிட்டபெயராற் பிறரழைத்தவழித் தான் என்னையென வந்து நிற்றல் காண்டுமென்றே, இருவர் கைகோத்து நின்றழியும் அவருள் அழைக்கப்பட்டோனேயன்றி மேனின் என்னையென்றல் உலகத்தின்மையின் அவ்வாறன்றி உடம்பின் பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக்காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின் அருத்தாபத்தியளவையானே அவ்வுயிர் உடம்பெனத் தானென வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெற்றும் அதுபோல,—ஒட்டி. எ—து. முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்,—அங்கு அவன் உளம் ஆகில்லான் உளம் அவனுமாட்டாது அவன் உளம் ஆப் அல்லனும் ஆம். எ—து. அவ்வாறொட்டியவழி உயிர் உயிரே, உடம்பு உடம்பே, உயிர் உடம்பாயொழியாது உடம்பு உயிராகமாட்டாது. அவ்வாறுயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறுயுநிற்கும். உடம்பு அங்ஙனநில்லாது. அதுபோல முதல்வன் முதல்வனே, உயிர் உயிரே, முதல்வன் உயிராயொழியான், உயிர் முதல்வனுகமாட்டாது. அவ்வாறுயினும் முதல்வன் உயிராயும் அதனின்வேறுயுநிற்பன். உயிர் அங்ஙனநில்லாது. எ—று.

'அவனுளமா கில்லா னுயிமவனு மாட்டா—நவனுளமா யல்லனுமா மங்கு.' என்றது ஒன்றாயும் ஒன்றன்மைக்கு அநுபவங் காட்டியவாறு.

உறுப்பு ஆருபெயர். எவனென்பது என்னென மரீஇயிற்று. ஒட்டியென்பது பெயர்; விண்ணெச்சமாகக் கொள்ளிற் சிறப்பும்மை விரித்துரைக்க.

ஒட்டுதல் பொருந்துதல். அங்கு அதுபோல.

ஒன்றென்ற தொன்றேகா ணைன்றே பதிபசுபா
மொன்றென்ற நீபாசத் தோரினேகா—ணைன்றின்று
லெக்காலங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு.

எ—து.உ—ம். எ—னின். *வேதத்துள் அத்துவிதமென்றதூஉமன்றி ஏகமெனவுமோதுதலின் அதற்கு மறுதலையாய் உயிர்களேனாடொட்டி நிற்பினைனப் பேதப்படக் கூறுவதென்னை என்னுங்கடாவை யாசங்கித்து அச்சொற்குத் தாற்பரியங கூறுமுகத்தால் நானேயாதலை வலியுறுத்துதலுதலிற்று.

இ—ள். இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண். எ—து. வேதம் ஒன்றென்றதற்குப்பொருள் ஒன்றென்பதேயாம்; வேறுபொருள்படாது.—டிஇ ஒன்றே. எ—து. அதற்குத் தாற்பரியம் பதிப்பொருளொன்றே; இரண்டில்லையென்பதாம்,—ஒன்று என்ற நீ பசு ஆம் காண். எ—து. இஃதறியாது ஒன்றென்று

* வேதத்துள் அத்துவிதமென்றதூஉமன்றி ஏகமெனவு மோதுதலை, சாந்தோக்கியம், சுபம் பிரபாடகம், உபம் கண்டத்து **வாசகமேவாவி தீயம்** என்னும் முதன்மந்திரத்தாலறிக.

சொல்லுகின்ற நீ அப்பதிப்பொருளின் வேறுய பசுவென்றறிவாயாக. பதியுஞ் சேதனமாக யாணுஞ்சேதனமாக என்னைப் பசுவென்றதென்னையெனின்,—பாசத்தோடு உளே. எ—து. நீ மலத்தோடு கட்டுற்று நின்றுயாகலிற் பசுவெனப்பட்டனே. அற்றேல் இவ்வாறு வேற்றுமைகூறிற் பிரமமில்லையாயின் ஒருபொருளுமில்லையென்னும் வேதத்திற்குத் தாற்பரியமென்னையெனின்,—அகரவுயிர்இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம் இக்கிரமத்து ஒன்று இன்று என்னும். எ—து. *அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாமென்னும் இம்முறைபற்றி வேதம் பிரமப்பொருள் இல்லையாயின் ஒருபொருளு மில்லையென்றேதும் அத்தனே. எ—று.

'ஒன்றின்று—லக்கரங்க ளின்று மகரவுயி ரின்றே—லிக்கிரமத் தென்னும்.' என்றது வேறுகியும் வேறன்மைக்கு அநுபவங்காட்டியவாறு.

இக்கிரமத்தாலென உருபு விரித்துரைக்க. இன்றென்னுமொருமை அப்பண்பின்மேனின்றது. காணென்பதனே மேலேகூட்டுக. ஆல் அசை.

பண்ணையு மோசையும் போலப் பழமதுவு
மெண்ணுஞ் சுவையும்போ லெங்குமா—மண்ணுரு
ளத்துவித மாத லருமறைக ளொன்றென்னு
தத்துவித மென்றறையு மாங்கு.

எ—து. உ—ம். எ—னின். வேதாகம மகமாய பிரமத்தை ஏகமென்றெழியாது பிரமம அத்துவிதமெனவும் ஓரோரிடங்களின் ஓதுதலின் அத்துவிதம இருபொருட் கண்ணதென்பார்க்கு ஏகமாய பிரமத்தை அத்துவிதமென்றல் பொருந்தாதாய்முடியும் எனனுங்கடாவை யாசங்கித்து அதனை நீக்குமுகத்தானே அவையேதானேயாதலை வலியுறுத்துதனுதலிற்று.

இ—ள். பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும் போல் எங்குமு ஆம அண்ணல் தான் அத்துவிதம் ஆதல. எ—து. பண்ணுமு அத

* இதனை உரராவரணாம் ஜஞமநாம் ஸிவெவ வ்ராணஉயுதெ| வெரகஜுயிநாநாவயுவாகூராணாசகாரவசு|என்னும் கிரணகம சுலோகத்தானும், ஸிவஸ் வஷஸ்ரு ஜஞமநா சகூராணா சகாரவசு|| எனனும் வாதுளோத்தர சுலோகத்தானும், இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒபபமுடிந்தாற் போல அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங்கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பதுசான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது, "அகரமுதல" என்னுங் குறளான் அகரமாகிய முதலியுடைய எழுத்துக்களெல்லாம் அதுபோல இறைவனுகிய முதலியுடைத்து உலகமென வள்ளுவனுர் உவமைகூறியவாற்றுனும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானேயெனக் கூறியவாற்றுனும் பிறநூல்களானும் உணர்கவென நச்சினர்க்கினியர் தொல்காபபியம் எழுத்ததிகாரம் மொழிமரபு பதின்மூன்றுஞ்சூத்திரத்திற்குரைத்தவுரையானும் நன்குணர்க.

னின் வேறன்றுயெண்ணப்படும்இசையும் போலவும் *பழமும் அதனின்வேற
ன்றுயெண்ணப்படுஞ் சுவையும்போலவும் யாங்கணும் வியாபகமாய முதல்வன்
றிருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்பதாகலான்,—அரு மறைகள்
ஒன்று என்னுது அத்துவிதம் என்று ஆங்கு அறையும். எ—து. வேதங்கள்
ஏகமென்னுது பிரமம் அத்துவிதம் என்று அவ்விடங்களிற் கூறும். எ—று.

ஆண்டுப் பிரமம் அத்துவிதமென்றது பிரமம் உயிர்களின் வேற்றுமை
யின்றி நிற்குமென்னும் பொருட்டாகலான், அஃது ஏகமென்பதோடு முரணு
மாறில்லை யென்பதாம்.

பண்ணீபென்னும் ஈகாரம் பகுதிப்பொருள்விகுதி. பண் பாலீப்பண்
முதலாயின.

எங்குமாமண்ணுமுளன எடுத்தோதி, குணகுணிகள்போல் உடனு
யும் அவ்வாறுடனுகாமைக்கு அநுபவங்காட்டியவாறு. வியாப்பிய வியாபகமா
தலொப்புமைமாத்திரையேயபற்றிக் குணகுணிகளே உவமை கூறினுரென்பது.

அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று.

எ—து. உ—ம். எ—னின். இங்ஙனம் வெவ்வேறுவமை யெடுத்துக்காட்டின்
அதிகாந்தவாதமா மென்னுங்கடாவை யாசங்கித்து அஃதாகாமை உவமைமு
கத்தான் விளக்கி மூன்றனையும் ஒருங்கே வலியுறுத்துகனுதலிற்று.

இ—ள். உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற்போல் உடங்கு
யைந்து நின்று பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம். எ—து. அரக்கையுருக்கி
அதனெடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினெடொன்முய் ஒருங்கி
யைந்து நீக்கமின்றி நின்முற்போல, முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று
நீக்கமின்றி உடனுகலால், தானேயாம், உலகேயாம், தானே உலகேயாம். அற்
றேல், †வாமதேவமுனிவன் முதலினேயார் யானேயுலகெல்லா மாயினேன் எனக்
கூறுதலானும், ‡ சர்வஞ்ஞானேத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய்

* இதனே ஸமுராஹொரிஷ்ஷ கூஷ்ஷ ஸஸிவொ ஹாகிதநுஃ| என்
னுஞ் சிவஞானசங்கிரகவசனத்தானுமறிக.

† வாமதேவன் யானேஉலகெலாமாயினேன் என்றது ஜவிவஹாஉவெஷ் வுகி
வெஷெஹம் உநுஹஹவம் வஷயஹுஸ்ரீதி, கதிஹஉவெ்தஹிஷ் யவஹவம்
வெஹாஹம் வ்ஹாஷ்ஷீதி ஸஹஉம் ஷவஹ்ஹவதி என்னும் பிருகதாரணியம்,
கூ—ம் அத்தியாயம், ச—ம் பிராமணம், க0—ம் மந்திரத்தானுணர்க.

†சர்வஞ் ஞானேத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய் நின்றே
னென்று உயிர்க்கண்மேல்வைத்தோதுதலே ஷயிம்மஷிகூஹாஸஹாஹவிஷயாகீதமொ
ஹாஸ்ஷவிஹாவ்ஷ ஷஷஹெஹாஹ ஜஷஹ ஹாகுஷஸ்ஸஹ்ஸாஸ்ஷ:||ஷஷஹிவெஷவொ

உடனுமாய் நின்றேன் என்று உயிர்கண்மேல் வைத்தோதுதலானும், உயிர்க ளும் இவ்விலக்கணத்தனவாவான் செல்லும்போலுமெனின்;–தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று. எ-து. அம்முதல்வன் பாசக்கூட்டத்தி னீங்கித் தனியாய் நின்ற என்னகத்துச் சோகம்பாவணியாற் *புகுந்து வேற்று மையின்றித் தோன்றலான் யானேயுலகெல்லாமென்பேனுயினேன் இம்முத்தி காலத்து, ஆகலின், அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்று. எ-று.

அதுபற்றி உயிர்களும் அவ்வாறுவான் சேறலின்றென்பது குறிப் பெச்சம்.

இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைதூல் செவியறிவுறு த்த †கண்ணன் யானே யுலகெல்லாமாயினேனென்றதூஉம், முதல்வனது விச் சுவரூபத்தைத் தான்காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனை உறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன் கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன்மே லிட்ட போதுகள் முதல்வன்திரு முடிமேற் கண்டதூஉமென்க. கண்ணன்உப

தெவஃ வவ-ழ்ஜ ூயஃஸிவஃ|வவ-ழ்ஜ்ஜவு தீதஸு வ்ஷ்ஹிஸ ஹாரவஜி-ழ் தஃ,||யோவவுர்வ்ஷிஃ-வவ-ழ்ஞ்ஷுர்ஷ்ஷுர்ஸ் உரரவுர ஃ|கஹஇதெவ ஜமஹர யொஃதஃ வவ-ழ் வ்வத்த-ழ்தெ॥கூநெகாகாரு வஸ்ஹிஹ்ர வீஷ்ஸ ஹ-வநவ ஹ்கயஸ்|ஸிவாஷ்ஸுவநிவய-ழ்ஹ்ஸ தகவவ-ழ் யிவஸ்ஷ்ஸ்தஸ,||யஷ்கிஜ்கி ஜம தஸுஹ்ஸிஹு ஷ்ஸுஸிதெ ஸுஅயதெவிவர|வஹ்ஹிரஜவி-ழ்ஹமெநதகவவ-ழ், வுரவிதஃயோ॥ என்னும் மேற்படியாகம சுலோகங்களா னுணர்க.

* புகுதல் புதிதாகப்புக்கதன்று; அநாதியே ஒன்றுய்நின்ற முறைமை முன்புதோ ன்றுமல், இந்திரியங்களோ நீக்கியவிடத்தே காண்டலால் பின்பிரகாசித்தலெனவறிக.

† கண்ணன் யானே உலகெலாமாயினென் என்றது விஷ்ஹுர ஹ ரிஃஃகூஜ்க ஷ்ஹ வஸகார ஸெந ஷ்ஸிதோ ஜமகு| என்னும் பகவற்கீதை, கo-ம் அத்தியாயத்து சுஉ-ம் சுலோகத்தானும், முதல்வனது விச்சுவரூபத்தைக்காட்டியது வஸரி-ஃ்கூர தெதோரரஜஷுரஹாரயொஸெஷ்ஸரொ ஹரிஃ'ஏஸ-ழ்பாரிஷவாயு-ழ்யவர ஃ,ரஷவ வெஷ்ஷரஸ்॥ என்னும் சுக-ம் அத்தியாயத்து கூ-ம் சுலோகத்தானும், ஏனைய வற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றது வவ-ழ்யஃ-ழ் வரிதகுஜ்ஜுரே தெகூ ஸரணம் ஏ-ஜ்|கஹா கூர வவ-ழ்வாவெஜஹ்ர தோக்ஷயி ஷ்ஹாதி ஃ,ஸ-ஊஃ॥ என்னும் பகவற்கீதை, கஅ-ம் அத்தியாயத்து, சுசு-ம் சுலோகத், தானும், கண்ணன்மேலிட்ட போதுகள் முதல்வன்திருமுடிமேற் கண்டது தஞ்ஹ்வ ஹாரஸ ஷ்ஸகுஜ்தூ தெநஸ தெநதகுக ரோத்த நஃ|ஏஷ-ழ் தூர்வைகாஹ்ர ஸெ வாஷ-ஊதெவெ நிவெஷ்தி தஂ॥ என்னும் பாரதம், துரோணபருவம், அக-ம் அத் தியாயத்துச் சுலோகத்தானும், கண்ணன் உபமன்னியமுனிவர்பால் தீக்ஷைபெற்றது ஷ்ஹி நஷ்ஜ ஃதெ-ஸ வீஷ்ஸ்ரண ஷ்கஷ்தி தோ ஹாம்யஸ்ரோவியி| என்னும் பாரதம் அநு சாசன பர்வத்து கச-ம் அத்தியாயத்து ங-எக-ம் சுலோகத்தானும் உணர்க.

மன்னியமுனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையு முணர்ந்தோனுகலிற் சிவோகம்பாவனையைத் தலைப்பட்டோனதலறிக.

கலப்பாய்நிற்றலான் உலகேயாமென்பார் உடங்கியைந்து எனவும், பொருட்டன்மையால் வேறுநிற்றலால் தானேயாமென்பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாமென்பார் பிரிப்பின்றி எனவுங்கூறினர்.

ஈண்டும் இரட்டுறமொழிந்துகொண்டுரைக்க.

இன்றியென்னுஞ் செய்தெனெச்சக்குறிப்பு "மழைபெய்து குளநிறைந்தது" என்புழிப்போலக் காரணகாரியப் பொருட்டாய் நின்றது.

இவ்வதிகாரணத்தானே பேதமென்றும் அபேதமென்றும் பேதாபேதமென்றும் பிணங்குஞ்சமயிகளையெல்லாம் மறுத்து அம்மூவகையியல்புந் தன்கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களானும் உவமைகளானும் உணர்த்தியவாறு. புடைநூலாசிரியரும் இவ்வதிகரணப் பொருளேபற்றி * "புறச்சமயத்தவர்க்கிருளாய்—தெரிக்கலுற்றும்" என வகுத்தோதினர்.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணையின் வரும் என்றது.

எ—து. மே—ள். எ—னின். முதல்வன் அவ்வாறு உயிர்களோடியைந்து நின்று புனருற்பவஞ்செய்யுங்கால் உலகத்துக்குப்போல் அவனுக்குத் துணைக்காரண முதலியன வேண்டப்படுமோ படாவோ என்னும் ஐயப்பாட்டின்கண் முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியுமாகலின் அவனுக்கு அவைவேண்டப்படா எனப் பரிணமவாதிகள் கூறுங் கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ—ள். வெ-டை.

ஈண்டு இருவினையென்றது முற்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணியபாவங்களையென்க; எனவே, மாயையினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லையென்பார், முதல்வனுணையின்வரும் என்றார்.

ஒருநகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினை யாகலான்.

எ—து. வ—து. எ—னின். ஆணையியமையும் இருவினையெற்றுக்கு என்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ—ள். ஒருபட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடிகாவற்றொழிலைக் கீழ்களுணர்வினொருவன்மாட்டு வைத்தாற்போல எல்லாவறிவு முதன்மை யது

* சிவபிரகாசம், பாயிரம். எ.

க்கிரகங்களுடைய அம்முதல்வன் புனருற்பவத்தைச் செய்வதாகிய தனதாணை அவ்விருவினைகண்மாட்டுவைத்து நடாத்துதலே முறையாகலான் இனி யிவ்வான்மாக்களுக்கு இருவினைமுதல்வனணையின் வரும் என மேற்கொண்டது. எ–று.

முதல்வன் செய்யுஞ் செய்தியெல்லாம் உலகத்தோடொப்ப நிகழ்வனவாகலின் ஈண்டைக்கு அரசன்செய்தி உவமையாயிற்று.

பாடிகாவலாவது கீளகணுவானெருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விசேடம். அது * ‘‘கோடி காவலனைக் கூறுத நாளெல்லாம்—பாடிகாவலிற்பட்டுக் கழியுமே” என்னுந் திருப்பாட்டானுமறிக. இஃது அறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லா முரைப்ப.

உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலி
னுள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

எ–து. உ–ம். எ–னின். வினை உண்டென்பதற்கும் அதுவே உயிர்க்குப்பயனுய் வருமென்றதற்கும் மேல் வினையுமாற்றிற்கும் அது முதல்வனையின்றியமையாமைக்கும் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து வதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ–ள். உள்ளதே தோற்ற. எ–து. இல்லது தோன்றுதென்பது மேற்கூறிப் போந்தமையான் முன் உள்ளதாய புண்ணியபாவமென்னும் இருகூற்றுச் சஞ்சிதவினையே தன் பயனுகிய இன்பத்துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந் தோற்றுவிப்ப,—உயிர் அவ்வுடலின் அணையும். எ–து. அவ்வின்பத் துன்பநுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற் சித்தாகிய உயிரே அவ்வுடம்பிற் பொருந்தி அவற்றையநுபவிக்கும். முன்வினையை ஈண்டநுபவித்தொழிந்தால் மேலுக்கு வினையுண்டாமாறி யாங்ஙனமெனின்;—முன் செய் வினை உள் அடைவே உள்ளதாம். எ–து. முன் செய்த வினை அநுபவித்தற்கேதுவான முறைமையிலே மேலுக்கு வினையுளதாம். அற்றேல், அவ்வினையேபயனுகவருமென வமையும் முதல்வன் எற்றுக்கெனின்;—செய்பவர் செய்திப் பயன் விளக்குஞ் செய்யேபோல். எ–து. உழுவர் செய்யுந் தொழிற்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அத்தொழிருனே விளைவிக்கமாட்டாததுபோல,—வள்ளலவன் செய்வன். எ–து. உணவும் வித்துமாய்த் தொன்றுதொட்டு வரும் அவ்வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன்,—செயல் சென்று அணையா. எ–து. அவ்வாறன்றி வினை தானே உயிர்கட்குப் பயனுய்வந்து பொருந்தமாட்டாது. எ–று.

வள்ளலென்றார், தற்பயன் குறியாது †‘‘வேண்டுவார் வேண்டிய” வாறே நல்கும் அருளுடைமை நோக்கி.

---

* திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், திருக்கோடிகாத் திருக்குறுந்தொகை. சு. நாடிகாரணன். † ‘‘ திருமறைக்காட்டுத் திருத்தாண்டகம். க. தூண்டுசுடரனைய.

உள்ளடைவு உள்ளுதற்கேதுவாகிய அடைவென விரியும். ஏகாரம் ஏழாவதன்பொருட்கண் வந்தது. உள்ளுதல் ஈண்டநுபவித்தல். அதற்கேதுவாய முறைமையாவன அநுபவித்தற்குத் துணைக்காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள். அவற்றின்கணுண்டாமாறு முன்னர்க்காட்டுதும்.

மேல் முதல்வனுக்கு வினை வேண்டப்படுமென்பதற்கு அரசனை யுவமை கூறினார்; ஈண்டு வினை முதல்வனையின்றி யமையாதென்பது உணர்த்துதற்கு உழவுதொழிலையுவமை கூறினரெனக் கொள்க.

அவ்வினையைச் செய்வதனி லவ்வினைஞர் தாஞ்சென்*றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போ—லவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானி னுகராதே
லார்தா மறிந்தணைப்பா ராங்கு.

எ-து. உ-ம். எ-னின். இருவினை சடமாகலிற் சென்றணையமாட்டாவாயினும் உயிர்கள் சேதனமாகலின் அவைசெய அவற்றது பயனை யறிந்து எடுத்துக்கொண்டு நுகரும் வள்ளல் பற்றுக்கு என்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். காந்த பசாசம்போல். எ-து. ஒருவனெடுத்து நேரொக்கப் பிடித்தவழி இருப்பினை வலித்துக் கொள்ளுங் காந்தம்போல,—அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின். எ-து. அவ்வினைப்பயன்களைப் பிறழாமல் நுகர்விக்கும் முதல்வனுல்,—அவ்வினைஞர் தாம். எ-து. அவ்வினைகளைச் செய்யும் ஆன்மாக்கடாம்,—அவ்வினையைச் செய்வதனில் சென்று அவ்வினையை நுகராசேல் ஆர் தாம் அறிநது அணைப்பார். எ-து. அவற்றைச் செய்தற்கு நிலைக்களமாகிய உடம்பின்கட்பொருந்தி அவற்றதுபயனை அநுபவிப்பர்; அவ்வாறநுபவியாராயின், வேறே எவர் தாம அவற்றையறிந்து கூட்டுவார்,—ஆங்கு. எ-து. அறிவுஞ் சுதந்திரமுமின்றி மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் அப்பெத்தகாலத்து.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. S. IYER LIBRARY.
BESANT NAGAR :: MADRAS-90.

ஒருவருமில்லையென்பதாம்.

ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும், வினை சடமாகலானும், மாயை தாரகமாமத்தன்முனிற்றல் மனப்போந்தமையானும், முதல்வனே அறிந்தணைப்பனெனப் பாரிசடவளவை கூறுவார், பிரானினுகராசேலார்தா மறிந்தணைப்பாரென்றார். இது சொற்பொருட் பின்வருநிலை.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்தமலத் தாம்.

---

* அங்கு-அசை.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. S. IY

எ–து. உ–ம். எ–னின். அவ்வினை ஆதியோ அநாதியோ ஆதியெனின் முன்பில்லது இடையே தோன்றுமென்பது * சற்காரியவாதத்துக்கேலாது அநாதியெனின் ஒருவர் கூட்டவேண்டுவ தில்லையென்னுங் கடாவை யாசங்கித்துஅதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ–ள். நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லின் தோன்மையே புதிது அன்று. எ–து. நெல்லின்கணுமியும் செம்பின்கட்களிம்பும் எக்காலத் துளவாயினவென்று ஆராய்ந்து சொல்லுங்கால் அந்நெல்லுஞ் செம்பும் உளவாயினவன்றே உள்ளனவன்றி இடையே வந்தனவல்ல; அது போல,—வல்லி மலகன்மம் அன்று உளவாம். எ–து. மாயை மலம் கன்மமென்னுமும்மலங்களும் அநாதியேயுள்ளனவாம்,—கமலத்து அலர் சோகம் பொன் வாள் செய் வள்ளலால் ஆம். எ–து. முன்னேயுள்ளதாய தாமரைப்பூ அலர்தலும் கூம்புதலும் ஞாயிற்றினுற் செய்யப்படுமாறுபோல அவை தத்தங்காரியங்களைச் செய்தல் முதல்வனுலேயாம். எ–று.

† இஃதெடுத்துக்காட்டுவமை.

புதிதன்றென்பதனைத் தனித்தனி கூட்டுக.

தொன்மையிலுள்ளவற்றைத் தொன்மை என்றுபசரித்தார்.

ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

மாயை இறைவனுக்குப் பரிக்கிரகசத்தியாகலின், வல்லியென்றார்.

வினைக்குத் தொன்மைகூறுவார் இனம்பற்றி மாயைமலங்களுக்குந் தொன்மைகூறினர்.

‡மூலமலத்தின்காரியம் மோகம் மதம் முதலாயின. இருவினையின் காரியம் இன்பத்துன்ப முதலாயின. மாயையின்காரியம் தநுகரண முதலாயின. வள்ளலாலாமெனவே திரோதானசத்தியது உண்மையும்பெற்றும். அது பாகம் வருவித்தற்பொருட்டு மலத்தின்வழி நின்று மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பத்திற் கேதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மல கன்ம மாயை திரோதானம் மாயாகாரியமென்னும் ஐவகைப்பாசமுங் கண்டுகொள்க.

---

* சற்காரியவாதம் உள்ளதுகாரியப்படும் என்று சொல்லுவது. வாதம்-சொல்லுதல்.

† எடுத்துக்காட் டென்னு முவமையினை வடநூலார் நிதரிசனலங்கார மென்றுரைப்பர். நிதரிசனலங்காரத்திற்கும் உவமாலங்காரத்திற்கும் வேறுபாடு யாதெனின்,—உவமான வுவமேயங்களிரண்டன் சாதிருசிய தருமம் பேதநெறியானே உவமவுருபு பற்றிவெளிப்படையால் விளக்குவ துவமாலங்காரம். அவ்விரண்டன் சாதிரூசிய தருமம் அபேதநெறியாற் குறிப்பி னுணர்த்துவது நிதரிசனம். இதுவே தம்முள் வேறுபாடென்க.

‡ மூலமலத்தின்காரியம், மோகம் மதம் இராகம் கவலே தாபம் வாட்டம் விசித்திரம் என ஏழுவகைப்படும். இவை முறையே மயக்கத்திற்கேதுவாதலும், மதித்தற்கேதுவாதலும், ஆசைமிகுதிக் கேதுவாதலும், கவலுதற் கேதுவாதலும், தபித்தற் கேதுவாதலும், வாடுதற்கேதுவாதலும், நாணுவித வேதுவாதலுமாம். இது திராவிட மாபாடியத்திற் கண்டது.

இவற்றுண் மாயை சுத்தமாயை அசுத்தமாயையென் றிருவகைப்படும். இவ்விரண்டனுள் * சுத்தமாயையின் காரியமே அசுத்தமாயையென்பாரும், சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அகாதியேயாமென்பாரும், † ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயையென் றிருவகைப்படுமென்பாரும் எனப் பல திறத்தர் ஆசிரியர். இனி முதல்வனது கிரியாசத்தியே சுத்தமாயை யெனப்படுமென்பாருமுளர். அது முதல்வனுக்குத் தாதான்மியசத்தியாகலிற் பரிக்கிரகசத்தியாகிய சுத்தமாயையாதல் யாண்டையதென்றெழுதிக. சுத்தமாயையினின்றும் பஞ்சகலைகளும் நால்வகைவாக்குஞ் சிவதத்துவமைந்துஞ் ‡ சுத்தகாலமுதற் சுத்தநிலமீறாகிய முப்பத்தொன்றுந் தோன்றும். அசுத்தமாயையினின்றும் அசுத்தகாலமுதல் அசுத்தநிலமீறாகிய முப்பத்தொரு தத்துவங்களுந் தோன்றும். இத்தத் தத்துவங்களெல்லாம் ¶ பொதுவும் சிறப்பும் பொதுச்சிறப்புமெனத் தனித்தனி மூவகைப்பட்டு உயிர்க்போதமும் வெவ்வேறுளவாம்.

§ கன்மமுமா o "நாசோற்பத்தி பண்ணிவரு மாதலா லநாதி" என்பதுபற்றிப் பிரபஞ்சம்போலப் ** பிரவாகாநாதியென்பாரும், †† "ஏக னேகனெருள் கருமா மாயையிரண்—டாகவிவையா ரு தியில்" எ—ம், ‡‡ "ஆணவ முதலன் றது போற் கருமமும்" எ—ர், ஒப்ப வோ தாதல்பற்றி மூவகைவினைக்கும் முதற்காரணமாய மூலகன்மமொன்று அநாதித்தமாயுண்டென்பாருமென்று இருதிறத்தாசிரியரென்க.

இவ்வினை ஈட்டப்படுங்கால், ¶¶ பஞ்சாக்கரமுதலிய அத்துவாக்களிடமாக மனவாக்குக் காயம் என்னும் மூன்றன் ஈட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியமெ

* சுத்தமாயையின்காரியமே அசுத்தமாயை; சுத்தமாயைபோல அசுத்தமாயையும் அனாதியே யென்பார் இரத்தினத்திரய நூலார்.

† ஒன்றுதானே ஊர்த்துவமாயை அதோமாயை என்று இருவகைப்படும் என்பார் அகோரசிவாசாரியர்.

‡ சுத்தமாயையினின்றும் சுத்தகாலமுதல் முப்பத்தொன்றும் தோன்றுமென்பது ஸுத்தாவி காலுச்சவ்யாதி வஹ்நிதத்வா நயோயாயா|கி ரூ்தாதயூ தி ஸுத்த ஊர்மிலைஹ்வாதி விஜ்ஞா தவ்யா:|| என்னும் பௌஷ்கராகம சுலோகத்தானறிக.

¶ புவனவடிவாகிய தத்துவங்கள் எல்லாருக்கும் பயன்றருதலின் பொது. சுக்கும தேகவடிவாகிய தத்துவங்கள் தனக்குப போகநுகர்தற் கருவியாதலின் சிறப்பு. தூலதேகவடிவாகிய தத்துவங்ள் தனக்குப போகநுகர்சிக்கும் சந்தனம் பூமாலை போல மனைவி முதலியோர் அதுபவித்தற்கும் கருவியாதலின் பொதுச்சிறபபு. இது திராவிடமாபாடியத்திற்கண்டது.

§ கன்மம் நாசோற்பத்தி பண்ணுதலாவது:—வித்தின்கேட்டினங்குரம்போல ஒரு கன்மம் கெடும்பொழுது மற்றொரு கன்மதத்தை யுண்டாக்கிவிடுதல்.

o சிவப்பிரகாசம், பொது. கசு. நண்ணியிடு.

** பிரவாகாநாதி இடையருதோடும் நீர்ப்பெருக்குப்போலத் தொடர்ச்சியாய்த் தொன்று தொட்டுவருதல். †† திருவருட்பயன், அறியுநெறி. உ. ‡‡ ஞானமிர்தம், உஉ. கருமம்.

¶¶ மந்திரமுதலிய அத்துவாக்களாவன:—மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாதத்துவா என்பன. அத்துவா—வழி. இவற்றின்கட்படுமியல்பெல்லாம் அரும்பதவுரையிற்காண்க.

னப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற்கிடந்து, சாதி ஆயுப் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே * சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணியபாவம் என்னும் பரியாயப்பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டுப் பிராரத்தமெனப் பெயர் பெறும். ஆதிபௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆத்தியான்மிகமாவது சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது. ஆதிதைவிகமாவது ஒருவாயிலானன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது.

இன்னும் இவ்வினைகள் †உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு, ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்திமுதலிய பஞ்சகலைகளினடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தமெனப்படும் போகங்களைப் பயப்பிக்குமென்றறிக.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

எ–து. மே–ள். எ–னின். புனருற்பவம் சடத்துக்கன்றிச் சித்துக்கு மூலதாயினன்றே முற்செய்வினையே ஈண்டைக்குவருமென மேற்கூறியதமையும். அஃதுண்டோ இல்லையோ என்னுமையப்பாட்டின்கட் ‡குடமுடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறுபோல உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடு கூடுமென்னுஞ் சுருதிபற்றி இறந்தவுயிர் மீளப்பிறப்பதில்லையெனக்கிரீடாப்பிரமவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ–ள். வெ–டை.

வருதல் தொன்றுதொட்டவ்வாறுகல்.

மாறுதல் ஈண்டு இறத்தலென்பது 'போக்குவரவுபுரிய' என்னு மூலத்தானும், ஏதுவுதாரணங்களோடு உளதாகிய இயைபானும் உணர்க. இஃதுணராது

---

* சனகம்–காரணமாய்நின்று சரீரம் முதலியவைகளோப பிறப்பிப்பது. தாரகம்–சரீரரூபமாய்நின்று ஆன்மாவைத்தரித்திருப்பது. போக்கியம்–விடயவடிவமாய்நின்று அநுபவிக்கப்படுவது.

† உலகவினை கூவல் தண்ணீர்ப்பந்தலாதி அமைத்தல். வைதிகவினை வேள்வியாதி செய்தல். அத்தியான்மிகவினை சிவபூஜையாதிசெய்தல். அதிமார்க்கவினை யோகஞ்செய்தல். மாந்திரவினை மந்திரோச்சாரம் ஞானநூல் ஓதலாதிசெய்தல். இது திராவிடமாபாடியத்திற் கண்டது.

‡ பைங்கலோபநிடதம் சு–ம் அத்தியாயம், யதா யதா ரீரெதாஜா ரீயெநவா கெதீரீ ரீரூநா|யாவஷ்மதம்வெரீதத்ததீதுயம்மதீ|வடாகா ஸீவாதீரா நம்வீயாவெதீதீகூதீ|

அச்சு வேறுபடுதலென்று உரைப்பாருமுளர். அஃதீண்டைக்கு யாதும் இயையாமையுணர்க.

தோற்றமுமீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

எ–து. ஏது. எ–னின். அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். உற்பத்தியும் நாசமுங் தொடர்ச்சியாயுள்ள பொருட்கன்றி ஏனைப்பொருட்கு உற்பத்தி கூடாமையான் 'இனி இவ்வான்மாக்களே மாறிப் பிறந்துவரும்' என மேற்கொண்டது. எ-று.

தோற்றமும் ஈறுமென்னுமும்மைகளே *எதிரது தழீஇயினவாகக் கோடலிற் றொடர்ச்சியாயென்பது போந்தவாறறிக. உளதாதல் ஈண்டுத் தோன்றுதல்.

இனி இவ்வாறன்றிக் குடாகாயவுவமையேபற்றி இருவினையான் வரும் புனருற்பவம் உயிரின்பொருட்டுச் சிவத்துக்கேயாமெனச் சிவாத்துவிதிகள் கூறுங்கடாவை யாசங்கித்தும், †மூலப்பகுதியிற்றோன்றும் புத்திதத்துவத்திற்கே அதுவெனச் சாங்கியர் கூறுங்கடாவை யாசங்கித்தும் மேற்கோடனுதலிற்று இவ்வதிகரணமெனக்கொண்டு, தோற்றமும் ஈறும் அவ்வரிமையுள்ளதற்கேயன்றி ஏனையவற்றிற்கு உளதாதலின்மையான் இவ்வான்மாக்களே மாறிப் பிறந்துவருமென மேற்கொண்டதென் றுரைப்பினுமாம். இப்பொருட்கு உரிமையென்பது அவாய்நிலையான் வந்தது.

உளதாதலென்னும் ஒருமை தோற்றவீறுகளோடு தனித்தனி சென்றியையும்.

ஆன்மாக்களேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது.

இனி மாயாவாதி முதலியோர் மதத்தை மறுத்தற்பொருட்டு மேற்கொண்டதென்பாருமுளர். ‡ அத்துவிதமென்ற சொல்லானே அவரை மறுத்து ஆன்மாக்களைப் பெறுவித்தமையின் ஈண்டு அவர்மதம்பற்றிக் கடாநிகழ்த்தற் கோரியையின்மையுணர்க.

> கண்ட நனவைக் கனவுணர்விற் றூன்மறந்து
> விண்படர்ந்தத் தூடு வினையினுற்—கண்செவிகெட்
> டுள்ளதே தோற்ற வுளமனுவாய்ச் சென்றுமனந்
> தள்ள விழுங்கருவிற் றூன்.

எ–து. உ–ம். எ–னின். புனருற்பவமாங்காற்படும் இயல்புகளுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படர்ந்து கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து மனம் தள்ள வினையினுல் அணுவாய்ச் சென்று கருவில் விழும் எனக் கொண்டுகூட்டுக.

---

* எதிரதுதழீஇயினவாகக் கோடல்–பின்னரும் தோற்றமும் ஈறும் உள்ளனவாகக் கொள்ளல். † மூலப்பகுதி – பிரகிருதி. ‡ இசு-ம் பக்கத்திற்காண்க.

இ-ள். கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற. எ–து. கண் செவி முத லிய உறுப்புக்களையுடைய இவ்வுடம்பு கெட்டவழித் தனக்குக் கேடின்றிப் படைப்புக்காலந் தொடங்கிச் *சங்காரகாலமளவும்நிலைபெற்றுள்ளதாகிய சூக் குமதேகம் †பூதசாரவுடம்பு ‡முதலியனவாய்க் காரியப்பட,—உளம் அத்தூடு விண்படர்ந்து. எ–து. உயிரானது அப்பூதசாரமுதலிய உடம்பின்கட்பொருந் தித் துறக்கநிரயங்களிற் சென்றநுபவித்து, பின்னர்,—கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து. எ–து. நனவின்கட்கண்டவற்றைக் கனாக்காணுங்கா லத்து மறந்து அறிவுவேறுபட்டாற்போல, முன்னைக் கண் செவி கெட்டவா றும் உள்ளதே தோற்ற அத்தூடு விண்படர்ந்தவாறும் ஆண்டநுபவித்தவாறு மாகிய இன்னோன்னவற்றை மறந்து அறிவு வேறுபட்டு,—மனக் தள்ள வினை யினால் அணுவாய்ச்சென்று கருவில் விழும். எ–து. முன்னுடம்பு இறக் குங்கால் அடுத்த வினை காட்டுங் ¶ கதிநிமித்தம்பற்றி உயிர் அவாவுமாறு மன ஞ்செலுத்துதலான் அக்கதிக்கட்சேறற்கேதுவாய் எஞ்சிநின்ற புண்ணியபாவ சேடத்தாற் சூக்குமதேகமாத்திரையாய்ச் சென்று அம்மனக்தள்ளிய கதிக்கு அமைந்த அக்கருவின்கட்படும். எ-று.

இன் உவமவுருபு. தான் அசை. மறந்தற்குச்செயப்படுபொருள் அவாய் நிலையான் வந்தது.

விண்படர்ந்தென்னும் § உபலக்கணத்தால் நிரயம்படர்ந்தென்பதூஉம் பெறுதும். படர்ந்தெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

அத்தூடென்புழி அன்சாரியை விகாரத்தாற்றொக்கது. பொருந்தியென் பது சொல்லெச்சம். வினை ஆகுபெயர்.

உடம்புநீங்கிப்போங்கால் முதற்கட் கெடுவன கண்ணுஞ்செவியுமாக லின், அச்சிறப்புநோக்கிக் கண்செவிகெட்டென் றுபசரித்தார். கெட்டவழி யென்பது கெட்டனைத் திரிந்து நின்றது.

ஐம்பெரும்பூதத்தின் காரியமெனப்பட்ட தூலவுடம்பு சூக்குமவுடம் பின்காரியமாமா றென்னை யென்னும் ஐயநீக்குதற்கு உள்ளதே தோற்ற வென்றார். எகாரம் தேற்றம்.

ஆகாயமுதலிய தூலபூதங்கள் சத்தமுதலிய சூக்குமபூதங்களின் காரிய மாதலின், அதுபற்றியே தன்மாத்திரைமயமாகிய சூக்குமவுடம்பிற் றோன்று வதாய தூலவுடம்பு ஐம்பெரும் பூதமயமெனப்பட்டதன்றிப் பிறிதில்லையென் பது, o "பூதனு சரீரம் போனறே புரியட்ட ரூபக் காயே–யாதனு சரீர மாகி" எ–ம். **"சூக்கும வடிவே தென்னிற் றூலகா ரணமு தாகும்." எ–ம். ††"தூல மா முருவி னுக்குச் சூக்கும முதல்." எ–ம். ‡‡ "மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெங் கேகின் றென்னிற்–கூறிய சூக்கு மத்தாம்." எ–ம். ¶¶"விதிப்படி-

* சங்காரம் ஈண்டுமாசங்காரமெனவறிக. † பூதசாரவுடம்பு தேவசரீரம். ‡ முத லிய என்றதனால் யாதனுசரீரமுங்கொள்க. ¶ கதிநான்கு. அவை தேவகதி, மக்கட் கதி, விலங்கின்கதி, நரகர்கதி என்பன. § உபலக்கணம் இனமானபொருளையும் விடா தறிவிப்பது. o சிவஞானசித்தி, இரண்டாஞ்சூத்திரம். கூசு. ** நான்காஞ்சூத்திரம்.கo. †† இரண்டாஞ்சூத்திரம். டுo. ‡‡ இரண்டாஞ்சூத்திரம். சஎ. ¶¶ இரண்டாஞ்சூத்தி ரம். சகூ.

சூக்கு மத்தோ யுருவரும்." எ–ம். * "மனுதி தருமுடல்." எ–ம். வழிநூலாசி ரியரும் இவ்வாறே கூறியவாறு காண்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டி யவாறே யுரைப்ப. அது தோன்றுங்கால், † "கால முற்று–நீக்கிட மரம்பின் வேரோர் நீண்மர நிகழ்த்து." மாறுபோலச் சூக்குமவுடம்பு கெடாதுநிற்பத் தூலவுடம்பு ‡ "வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியுமா" தல்போல வினைக் கீடாக அச்சுவேறுபட்டு ¶ "மதிக்கெழு கலிகள் போல வருவது போவதாம்." என்பதூஉம் வழிநூலாசிரியர் கூறியவாற்றுணர்க.

அணு சூக்குமவுடம்பு. தள்ள தள்ளுதலாமெனக. அக்கருவிலெனச் சுட்டுவருவிக்க. தான் அசை.

உள்ளதேதோற்ற என்றதனால் உடற்றிரிவும், விண்படர்ந்து என்றத னால் இடந்திரிவும், கண்ட நனவைக் கனவுணர்விற் றுன்மறந்து என்றதனால் அறிவுத்திரிவும் பெறப்பட்டன.

உள்ளதேதோற்ற என்றதனால் புதிது புதிதாய்த் தோன்றுதல்பற்றிச் சற்காரிய வாதத்திற்கு இழுக்கின்மையும், அத்தூடு விண்படர்ந்தெனவும் அணுவாய்ச் சென்று கருவில் விழுமெனவுங் கூறியதனால் போக்குவரவுபற்றி வியாபகத்துக்கு இழுக்கின்மையும், வினைச்சேடத்தாலென்றதனால் துறக்க நிரயங்களின் அநுபவித்தொழிந்தமைபற்றிப் புனருற்பவகாரணத்திற்கு இழு க்கின்மையும், மனம் தள்ள என்றதனால் அஃதெஞ்சுதற் கேதுவுங்காட்டி யவாறு.

வேதத்துட்கூறப்படும் § பஞ்சாக்கினிவித்தையின் இயல்பு உணர்த்துவார் கண் செவி கெட்டவழி விண் படர்ந்து மறந்து அணுவாய்ச் சென்று கருவில் விழுமென்றார். பஞ்சாக்கினிவித்தையின் இயல்பு நீலகண்டபாடியத்திற் காண்க.

* பதினெராஞ்சூத்திரம். கூ. அகாதியுட. † இரண்டாஞ்சூத்திரம். சஅ. சூக்குமங். ‡ இரண்டாஞ்சூத்திரம். சஎ. மாறியிவ்வுரு. ¶ இரண்டாஞ்சூத்திரம். சக. விஇப்படி.

§ பஞ்சாக்கினிவித்தையி னியல்பாவது:—பார்ப்பனச்சாதிமுதலியவற்றிற்பிறந்து வேள்விமுதலிய நல்வினைசெய்தவுயிர்கள், அவ்வினையின்பயனுகர்தற்பொருட்டினிவ்வு டம்பினீங்கிச் சூக்கும தேகத்தோடுந் துறக்கத்திற் சென்று இன்பமனுபவித்தற்குரிய பூதசாரவுடம்பெடுத்து ஆண்டு வைகுங்கடவுளரோடுவாழ்ந்து நல்வினைப்பயன்களனுப வித்துத்தொலைந்தவழி, மீள நிலத்தின்வந்து பார்ப்பனச்சாதிமுதலியவற்றிற் றோன்றி வினைகளையீட்டுதற்கேதுவாய் எஞ்சிநின்ற வினைச்சேடத்தால்அவ்வுடம்பினை நீங்கிச் சூக்குமதேகத்தோடு மேகமண்டலத்தினையெய்தி, ஆண்டுநின்று மழைத்தாரையினோடு கூடி நிலத்தினை யடைந்து நென்முதலிய பைங்கூழின் விரவி நின்று, அவையுணவாய்ப் பரிணமித்தவழி அவற்றோடுகூடித் தந்தைவயிற்றுச்சென்று ஆண்டுச் சுக்கிலமாய்ப் பரிணமித்து, அதனோடுகூடித் தாய்வயற்றிற்சென்று ஆண்டுக்கருவாய்ப் பரிணமித்துப் பார்ப்பனச்சாதிமுதலியவற்றிற் குரித்தாகிய தூலதேகத்தோடு நிலத்திற்றோன்றுமென் றுணர்க.

ஆன்மாத் தூலவுடம்பினீங்கியவழித் துறக்கமும், மேகமண்டலமும், நிலனும், தந் தையும், தாயுமென்னு மைந்துநிலைக்களத்தும் வைகித் தோன்றுதலின் இவை ஐந்திட மும் அங்கியாகவும், அவற்றினெய்தியவான்மா ஆகுதியாகவும் இங்ஙனங் தியானிப்ப தொரு சாதகமாகலின் இது பஞ்சாக்கினிவித்தை. இது திராவிடமாபாடியத்துட்கண் டது. இதனை நீலகண்டபாடியம், கூம் அத்தியாயம், கம் பாதத்திற்காண்க.

மறந்து விண்படர்ந்தெனக் கூட்டியுரைப்பாருமுளர். துறக்கநிரயங்களிற் படர்ந்து அநுபவிப்புழி அறிவுதிரியாமை புராணங்களுட்காண்க.

அவுதன் ரோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

எ—து. உ—ம். எ—னின். உயிர்க்குப் புனருற்பவமாகாமைக்கு வாதிகளான எடுத்துக் காட்டப்படுங் குடாகாய வாகாயவுவமைக்குப் பொருள்கூறி மேல தனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். அரவு தன் தோல் உரிவும் அக்கனவும் பரகாயம் போய் வரும் அப்பண்பும்-பரவில் வேறு, எ—து. முன் செனி கெட்டவழி உள்ளதே தோற்ற அத்தூடு விண் படர்தற்குப் பாம்பு தோலுரித்துப் புதிதொருதோல் போர்த்துச் சேறலும், புருடன் கனவுடம்பினீங்கிக் கனவுடம்பிற் சேறலும், யோகிகள் தம்முடம்பு நீங்கிப் பரகாயத்திற் சென்று மீடலுமாகிய இவ்வுவமைகள் மிக்கு வழங்குதற்கண் இவற்றிற்கு மாறுக,—குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது அடாது. எ—து. குடவாகாயங் குடமுடைந்தவழி ஆகாயத்தோடு கூடுமாறு போல்வதோர் கூத்தாட்டாமென்று நீ கூறுதல் பொருந்தாது,—உள்ளம்போம் ஆறு அது. எ—து. சூக்குமவுடம்பு விட்டுப் போமாற்றிற்கே அவ்வுவமை யாகலான். எ - று.

எனவே, உடல்விட்டுப் போமாற்றிற்கு இவ்விருவகையுவமைகளும் ஆகமங்களிற் கூறுதலின், அவை தம்முண் முரணுதலாறு, அரவுதன்தோலுரிவு முதலியன தூலவுடல் விட்டுப் போமாற்றிற்கும், குடாகாயவுவமை சூக்குமவுடம்புவிட்டுப் போமாற்றிற்குமெனக் கோடல் பொருத்தமுடைமையின் அவ்வேறுபாடுணராது குடாகாயவுவமையுந் தூலவுடம்புவிட்டுப் போமாற்றிற்கேபோலுமென மலையற்கவென மேலதனை வலியுறுத்தவாறு காண்க.

மேலவெண்பாவில் 'கண்டகனவைக் கனவுணர்விற் முன்மறந்து' என்றது அறிவு வேறுபடுமுறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவும், ஈண்டு அக்கனவுமென்றது அதனையே உடல் வேறுபடுமுறைமைக்கு எடுத்துக்காட்டியதெனவுந் தெரிந்துகொள்க.

பரவு முதனிலைத்தொழிற்பெயர். இல்லுருபு தொழினிகழ்ச்சிக்கண் வந்த ஏழாவது.

பரவுதல் எல்லார்க்கும் புலனுமாறு மிக்குநிகழ்தல்.

ஈண்டு உள்ளமென்றது சூக்கும உடம்பை.

போமாற்றிற்கு என்னும் நான்காவது விகாரத்தாற் றொக்கது; *"ஐந்தவித்தான் ஞற்றல்" என்புழிப்போல.

* திருக்குறள், நீத்தார்பெருமை. ஞ.

குளவாம்பல் குளாம்பலென மரீஇயினுற்போலக் குடவாகாயங் *குடாகாயமென மரீஇயிற்று.

ஆகாயக் கூத்தாட்டென்பது உவமத்தொகை. இதனை உம்மைத்தொகையாகக்கொண்டு குடாகாய வாகாயமுங் கூத்தாட்டும்போ லென்றுரைப்பாரு முளர்.

மூன்றுமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

இவி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

எ–து. மே–ள். எ–னின். அங்ஙனம் புனருற்பவமாதற் கேதுவாய் இருவினைகளைச் செலுத்தி நிற்பதெனப் போந்த ஆணவமெனப்படுஞ் சத்தியாவது முதல்வனின் வேறோ அன்றோவென்னும் ஐயப்பாட்டின்கட் பொருட்குச் சத்தி வேறென்று மீமாஞ்சகர் முதலியோர் மதமும் அன்றென்னும் கையாயிகர்முதலியோர் மதமும் பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். முதல்வன் நனகாணையாகிய சிற்சத்தியோடு †சமவேதமாய் நிற்பன். எ - று.

அன்னியயோக வியவச்சேதம் அயோக வியவச்சேதம் என்றற்றொடக்கத்து வடசொற்கள் பிறிதினியைபு நீக்குதல் இயைபின்மை நீக்குதல் என்றற்றொடக்கத்தனவாக மொழிபெயர்த்து வழங்கப்படுமாறுபோலச் சமவாயமென்னும் வடமொழி தமிழின்கண் நீக்கமின்றி நிற்றலென மொழிபெயர்த்து

* குடம், தமிழியற் சொல்லாதல் "குடந்தம்பட்டு" "குடக்கூத்து" "குடமுழா" என்றற்றொடக்கத்தாற் பயின்றுவருந் தமிழ் வழக்குரைகளானறிக. இன்னும், குடம் தமிழ்ச்சொல்லாகலினன்றே "குடந்தம்பட்டு" எனவரும் ஆற்றுப்படைத்தொடர்க்கு–"வழிபட்டு என்றும், வணக்கம்பட்டு என்றும், உரைப்பர்" என்றும், "குடவென்பது தடவென்பதுபோல் வளைவையுணர்த்துவதோ ருரிச்சொல்லாகலின், அதனடியாகப்பிறந்தபெயருமாம்" என்றும் ஆசிரியர் நச்சினர்க்கினியர் உரைகூறுவாராயினர். குடவு வளைவுப் பொருட்டாதல் "குடாவடியுளியம்" என்னும் குறிஞ்சிப்பாட்டுரையால் நன்கு அறியக்கிடத்தலின் இது தமிழ்ச்சொல்லாதல் தெற்றென உணர்க.

வடமொழி அமரநிகண்டுள் அந்நூலார் 'குடம்' வடமொழியாகக்கொண் டோதுதலின் அது வடவியற்சொல்லுமாம். ஆயினும், அஃதாண்டுத் தமிழிற்போலப் பெருவரவிற்றாகாது அருகிவழங்குதலானும், வடநூலார் 'கடாகாசம்' 'மடாகாசம்' எனவழங்குவதன்றி 'குடாகாசமெனயாண்டும் வழங்காமையானும் அதனை வடசொல்லெனவைத்து முடிபுகூறுது, தமிழ்ச்சொல்லெனவைத்து அவ்வாறு மரூஉ முடிபுகொண்டாராசிரியரென்றுணர்க. குடம் பொதுவெழுத்தாலுய சொல்லாகலின், இருமொழிக்கண்ணும் அங்ஙனம் வெவ்வேறு பொருள்குறிக்கு மொழியாதற் கேற்குமாறு அறிக.

'குடாகாயம்' வடநூன் முடிபென்று கோடலுமொன்று, எனச் சிவஞானமாபாடியத்துள் ஆசிரியர் சிவஞானயோகிகள் உரைத்ததுங்காண்க.

† சமவேதம்–சமவாயத்தோடுகூடியது.

வழங்கப்படுமென்றுணர்க. வடமொழி இரண்டாஞ் சூத்திரத்திறுதியின் ஆணை முதல்வனோடு சமமேவதமாய் நிற்குமென ஆணிமேல் வைத்தோதியதனை ஈண்டு முதல்வன்மேல் வைத்தோதினர். கண்ணழிப்புழி இருவினை முதல்வன் ஆணையின் வருமெனக் கூறிப்போந்த ஆணை ஈண்டுக் கூறுமையே இனிது விளங்குமென்னுங் கருத்தாற் சொற்பல்காமைப் பொருட்டு அதனை யொழித்தெடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பொருள் காணமாட்டாதார் சருவவியாபியாய் நிற்றலாலென்னும் ஏதுவின் பொருளே மேற்கோளுக்கும் பொருளாகக் கொண்டு சாற்ப. அது கூறியது கூறலாதலுமன்றி மொழிபெயர்த்தல் யாப்பிற் கேலாமையுமுமறிக. ஈண்டிச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றுற் பேதமாதற்கு உரிமை யுடைமை.

அவன் ஏகானேக மிரண்டுமின்றிச் சருவவியாபியாய் நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். அதற்குப் பிரமாண மென்னையென்னுங் கடாவை ஆசங்கித்து மேற்கோளை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். அம்முதல்வன் ஒன்றே வேறே யென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலான் 'இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே' என மேற்கொண்டது. எ - று.

அவினாபாவமுணர்த்துவார் † 'ஏகானேக மிரண்டுமின்றி' என மேற் கோளிற்போந்தபொருளை அநுவதித்துச் சருவவியாபியாய் நிற்றலானென வதுக்கூறினர். சருவவியாபியாய் நிற்றல் 'அவையே தானேயா' யென்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டோதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்குமென்னு மேற்கோளைச் சாதித்தவாறு.

> எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னி
> லெங்கு முளனன் றெவற்றெவ னும்—மங்க
> ணவையவ னன்றில்லைப் பொன்னெளிபோ லீச
> னவையுடைமை யாளாநா மங்கு.

எ–து. உ–ம். எ–னின். ஏதுவும் மேற்கோளுந் தம்முள் அவிகாபாவ மாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று. எ–து. யாங்கணும் 'அவையே தானேயா' யென மேற்கூறிய அளவையானே முதல்வன் ஒரு பொருளாதல் கூடாது. எ - று.

ஒன்றுயிற் கங்கைக் கரையினின்ற ஒருமானுடனேகாவிரிக்கரையினும் ஒருங்கு நிற்கமாட்டான் அதுபோல ஒருபொருள் ஓரிடத்துளதாதலன்றி யாங்கணும் வியாபித்து நிற்கமாட்டாதென்பதாம்.

* அவினாபாவம்–விட்டுநீங்காமை. † ஏகானேகமின்றி–நீக்கமின்றி.

இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று. எ - து. அற்றேல் முதல்வன் இருபொருளாய் நிற்குமெனக் கோடுமெனின் யாங்கணும் 'அவையே தானே யா' யுளனுதல்கூடாது. எ - று.

தன்மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின்கண் வேற் றுமையின்றி வியாபித்து நிற்றல் சாலாதென்பதாம்.

அற்றேல், இவ்விரண்டோடு முரணுதலின் எங்குமுளனல்லனெனக் கோடுமெனின்;—

எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லே.எ - து. எவ்வி டங்களினுள்ள எத்திறப்பொருளுமாகிய அவ்விடத்து அவைகளெல்லாம் 'அகரவுயிரின்றேல் அக்கரங்களில்லே' யாமாறுபோல அம்முதல்வனையின்றி யமையாவாகலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்தாது. எ - று.

ஆகலான்எங்குமுளனல்லனென்றல் பொருந்தாதென்பது *குறிப்பெச்சம்.

அற்றேல், வேறு விடுக்குமாறென்னே யெனின்;—

ஈசன் பொன் ஒளிபோல். எ - து. எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போல ஒன்றுதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத் தாற் சிவமுஞ் சத்தியுமென்று இயைந்து நிற்கும். எ - று.

அற்றேல், பசுபாசங்களும் வியாபகமெனக் கோடலின் அவையும் இம் முறைமைபற்றி 'ஏகானேக மிரண்டுமின்றி' முதல்வன்போலத் தத்தஞ் சத்திக ளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனொடு சமமாவான் செல்லுமெனின்;—

அவை உடைமை ஆம் நாம் ஆள் அங்கு. எ - து. அவ்வாறுயினும் முதல்வனது வியாபகத்தைநோக்கி வியாப்பியமாகலின் அப்பாசங்கள் உடை மையாம்; பசுக்களாகிய நாம், அடிமையாமேவம் அம்முதல்வன் மாட்டு. எ - று.

அன்றெனப் பாடமோதுவாரு முளர்.

பாசங்கள் உடைமையாமாறும் பசுக்கள் அடிமையாமாறும் 'தாரகமா— மத்தன்மு ணிற்றல்' எ - ம். 'அதனி னீறலா வொன்றுபல—வாறே தொழும்பா கும்' எ - ம் மேற்பெறப்பட்டனமின், அவற்றை ஈண்டெடுத்துக்காட்டி ஆச ங்கை நீக்கியவாறு.

என்ற என்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற் றொக்கது; † "புகழ் புரிந்தில்" என்புழிப்போல. அளவையானென ஆனுருபு விரித்துரைக்க.

ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளன் என்னுந் தருமிவாசகங்கள் ஆகுபெயரால் அத்தருமங்களின் மேனின்றன வாகலான் உளனென்பதும் அஃறிணை யொருமையோடு முடிந்தது.

---

* குறிப்பெச்சம்—குறிப்புப்பொருளே வெளிப்படத்தந் தொடர்ச்சொல் எஞ்சிநிற் றல். † திருக்குறள், சுஉம் அதி. வாழ்க்கைத்துணைநலம். கூ.

அன்மை கூடாமைப்பொருட்டு. எவற்றெவனுமென்பது ஏழாம் வேற்றுமைத்தொகை. அஃறிணைக்கண்வரும் *எவனென்னும் வினாவினைக்குறிப்புச் சொல் ஈண்டுப் பெயர்த்தன்மைப்பட்டு எவனுமென எஞ்சாப் பொருண்மையுணர்த்தி நின்றது.

அன்றி யென்னும் வினையெச்சம் செய்யுளாகலின் அன்றெனத் திரிந்தது.

இன்மை ஈண்டு அமையாமைப்பொருட்டு. பொன் ஆகுபெயர். ஆம் என்பது உடைமையோடு இயையும்.

பொன்னெளிபோலீசனென்பது †தொகையுவமமாகலிற் பொதுவியல்பு விரித்துரைக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தாற் போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனுதலின் வியாபகப்பொருட்கு ஒன்றுய் நிற்றல் கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின் வியாபகனுதல் கூடாது; வியாபியல்லனெனின் பசுபாசங்கள் அவனியின்றி யமைதல் கூடாது; ஆகலான், முதல்வனெனுமவனே ஞாயிறு மொளியும்போலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையி னிற்பனெனச் சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்கு முகத்தானே தாதான்மிய சத்தியுண்மைக்குப் பிரமாணங் கூறியவாறு மென்றுணர்க. அஃதாமாறு,—தன்னே விளக்குவதூஉம் விடயங்களே விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறு ஒன்றுதானே விடயங்களே விளக்குழிக் கதிரெனவுந் தன்னே விளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட் டியைந்து நிற்றல்போல, புறப்பொருளே நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்பினிற்பதூஉம் புறப்பொருளே நோக்கிநின்று உணர்த்துவதூஉமாகிய இருதன்மையையுடைய பேரறிவாய சைதன்னியம் ஒன்றே அங்ஙனம் புறப்பொருளே நோக்கிநிற்கு நிலையிற் சத்தியெனவும் புறப்பொருளே நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு இயைந்துநிற்குமென வுணர்க.

இனித் தீயின் சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி யென்றற்றொடக்கத்துப் பலவேறு வகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டினே பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச் சத்திகளாயும், முறையே ஈங்தும் ஈான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ‡ ஈசானி

* நச்சினர்க்கினியாரும் எவனென்னும் வினாவினைக்குறிப்பு, படித்தலோசையாற் பெயராகுமென்று, "வஃகான்மெய்கெட" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்துக்குரை ஈந்த உரையிற்கூறினர். † தொகையுவமம் பொதுத்தன்மை தொக்கவுவமம்.

‡ ஈசானிமுதலிய ஐவகைச் சத்திகளாவன:—ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்பன. இவற்றுள் ஈசானியின் ஐந்து கூறுகளாவன:—சசினி, அங்கதை, இட்டை, மரீசி, சுவாலினி என்பன. பூரணியின் நான்கு கூறுகளாவன:—சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்பன. ஆர்த்தியின் எட்டுக்கூறுகளாவன:—தமை, மோகை, சயை, நிட்டை, மிருத்தியு, மாயை, பயை, சரை என்பன. வாமையின் பதின்மூன்று கூறுகளாவன:—இரசை, இரட்சை, இரதி, பாவி, காமை, சம்யமினி, கிரியை, புத்தி,

முதலிய ஐவகைச் சத்திகளாயும், *ஆரணி சென்னி முதலிய மூவகைச்சத்திகளாயும், † நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், ‡வாமை சேட்டை முதலிய அட்டசத்திகளாயும், பரவாகீசுவரி அபரவாகீசுவரி மனோன்மனி மகேசை உமை திரு வாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையேயெழுவகைச் சத்திகளாயும், அத்தியான்மிக மெனப்படும் ¶உன்மனீ சமனீ முதலிய கலைகளாயும் இன்னும் §பலவேறுவகைப்பட்டு நிற்கும். அவ்வச் சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப்பெயர் பெற்று நிற்கும். அவ்வச் சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறுவகையான் விருத்திப்பட்டு அப்பெயர்பெறும். இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

நான்காமதிகரண முடிந்தது.

இரண்டாஞ்சூத்திர முடிந்தது.

மூன்றுஞ்சூத்திரம்.

உளதில தென்றலி னெனதுட லென்றலி
னேம்புல னெறிக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தனுவினு ளான்மா.

எ–து. சூ–ம். எ–னின். ஆன்மப்பிரகாச முணர்த்துதனுதலிற்று.

எ–து. க–ரை. எ–னின். சூத்திரக் கருத்துணர்த்துதனுதலிற்று.

இ - ள். மேல் 'அவையே தானே' என்று எடுத்துக்கொள்ளப்பட்ட உயிர் சூனிய முதலியவற்றுள் ஒன்றுகற்பாற்றென அவ்வம்மதம் பற்றி நிகழுங்கடாவை ஆசங்கித்து உயிர் அவற்றிற்கு வேறுபுண்டென்பது கருதலளவையான்

காரி, தாத்திரி, பிராம்மணி, மோகினி, பவை என்பன. மூர்த்தியின் எட்டுக் கூறுகளாவன:–சத்தி, இருத்தி, திருதி, இலக்குமி, மேதை, காந்தி, சுவதை, திருதி என்பன.

*. ஆரணி முதலிய சத்திகளாவன:–ஆரணி, சென்னி, இரோதயித்திரி என்பன.

† நிவிர்த்திமுதலிய ஐவகைச்சத்திகளாவன:—நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்பன.

‡ வாமைமுதலிய எட்டுச்சத்திகளாவன:—வாமை, சேட்டை, இரௌத்திரி,காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்பன.

¶ உன்மனீமுதலியகலைகளாவன:–உன்மனீ,சமனீ, வியாபினி, சத்தி, நாதாந்தம், நாதம், நிரோதி, அர்த்தசந்திரம், விந்து,மகாரம்,உகாரம், அகாரம் என்பன. இவற்றோடு அனந்தை முதலிய நாலுகலைகளையும் சேர்த்துப் பதினாறு கலைகள் கொள்வதுமுண்டு.

§ பலவேறுவகைப்பட்டு நிற்றலாவது:–சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, இந்திகை, தீபிகை,உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை முதலிய பல கலைகளாகநிற்றல்.

விளக்கி மேலிலச்சூத்திரத்தின் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வனதிலக்க ணத்தை வலியுறுத்துதல் மூன்றுஞ் சூத்திரத்தின் கருத்து. எ - று.

முதன்மையுடைமை பற்றி உலகிற்கு நிமித்தகாரணமாகிய பதிப்பொரு ளுண்டென்பது முதற் சூத்திரத்துட் கூறி, காரணமாதற் பொதுமையான் இயைபுடைமை நோக்கித் துணைக்காரண முதற்காரணங்களது உண்மையும் அவற்றுன் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்துட்கூறி, அவற்று ளுய பயன்கோடற்குரிய பசுக்கள துண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறுகி ன்றுரென்றுணர்க. இதனுனே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. இலதென்றன்முதலிய அறுவகை யேதுக்களானும் மாயாவியந்திரதனுவென்னும் பெயரடையாற் பெறப்படும் குறிப்பேதுவானும் இவற்றின்வேறுய் இவ்வுடம்பினுள் உயிரெனப்படுவ தொன்றுண்டு. எ - று.

இது † பூட்டுவித்பொருள்கோள்.

உளதென்றது சாதியொருமை. அறிதலினென்றது ஐம்புலனினுஞ் சென்றியையும்.

'தனுவினுளான்மா உளது' என்றுரேனும், காணப்பட்ட உடம்பாற் காண ப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின் இவ்வுடம்பு சூனியமுதலியவற் றின் வேறுய ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசி ரியர்கருத்து. அற்றுகலினன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉ மென்பது.

ஈண்டு மேற்கோள் ஒன்றுயினும் எழுவகைமதங்களே வேறுவேறு மறுக்கு மேதுக்கள் எழாகலான் ஆன்மாவுளதென்னும்மேற்கோள் அவற்றொடு தனித் தனிசென்றியைதலின் எழுதிகரணத்ததாயிற்று இச்சூத்திரமென்றுணர்க. இதனுட்கூறிய எதுவே எஞ்சாமேற்கோளும் அதுவேயாகலான் ஏனைச்சூ த்திரங்களுட்போல வேறேறுதற் கூறவேண்டாமையின், இவை எதுவாமாறும் இவற்றுன் மேற்கோளைச் சாதிக்குமாறும் இனிது விளக்கி வலியுறுத்துதன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

முதலதிகரணம்.

ஈண்டு இலதென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ—து, மே—ள். எ—னின். சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியா ன்மவாதி, அந்தக்கரணன்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணன்மவாதி,

* குறிப்பேது எதுப்பொருளைக் குறிப்பாகக் காட்டிநிற்பது. † பூட்டுவித்பொரு ள்கோளாவது:—பொருள்கொள்ளும்வகை எட்டனுள் ஒன்று. அது நாண்பூட்டிய வில் லின் நுனியும் அடியும் அந்நாணுற் றம்முட் சம்பந்தமுடையனவாதல்போல, செய்யு ளின் முதலினும் ஈற்றினும் உள்ள மொழிகள் பொருளாற் றம்முட்சம்பந்தமுடையனவா கக் கொள்ளும்பொருள்கோள். ஈண்டு உளது என்னும் முதன்மொழியும் ஆன்மா என் னும் இறுதிமொழியும் பொருளால் தம்முட் சம்பந்தமுடையனவாதல் காண்க.

விஞ்ஞானன்மவாதி, சமூகான்மவாதி என்னுமெண்மருள் அந்தக்காணண்ம வாதிகள் ஆன்மாவினதிலக்கணங்கூறும்வழி அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின் அவரையொழித்து, ஒழிந்த எழுவர்மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான்றொடங்கி, அவற்றுள் இது சூனியமே ஆன்மாவென்னுமாத்தியமிகர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ–ள். வெ–டை.

ஆன்மாவிலதென்றலினென வருவித்துரைக்க.

எவற்றினையும் அன்றன்றென விட்டுஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ–து. பொ–ரை. எ–னின். ஆன்மா இலதென்றலேபற்றி அஃதுண்டெனக் கோடல் முயற்கோடு இல்லையென்னு மேதுவால் அஃதுண்டெனச் சாதித்தலோடொக்கும் என்னுங்கடாவை யாசங்கித்து அதன்மூற்பரிய முணர்த்துதனுதலிற்று.

இ - ள். ஆன்மா இலதென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லையென வாளா கூறுகலமையாமையின் உடல் பொறி விடயம் அனைத்தினையும் முறையானேஇஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றுகக் கழித்து இவ்வாறுகலின் ஆன்மாவென்பது சூனியமென்று அங்ஙனங் கூறுபவாகலான் அவற்றை ஒரோவொன்றுக விட்டு அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்பதோரறிவுண்மையின் அவ்வறிவே மேல் 'அவையே தானேயாய்' என்பதனுள் ஆகமவளவையாற் சாதித்துப்போந்த ஆன்மா என்றவாறும். 'ஈண்டிலதென்றலின் ஆன்மாவளது' என மேற்கொண்டது. எ - று.

அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃது என்னையின்மூண் மலடியென்பதனை டொக்குமென்றெழுகை வென்பது கருத்து.

இன்மை ஈண்டுச் சூனியப்பொருட்டு. சூனியமாவது உள்ளதுமன்று இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று வேறுமன்று எனப்படும் பாழ்.

எகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

> அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
> நின்றொன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
> தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
> தற்பரமு மல்லை தனி.

எ–து. உ–ம். எ–னின். அவ்வறிவை உடல் பொறி விடயமுதலியவற்றின் வேறுகப்பிரித்துக் காணுமாறும் அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். அனைத்தும் நின்று. எ–து. உடல் பொறி விடயமுதலிய அனைத்தினும் அதுவது தானுகநின்று,—அன்று அன்று என விட்டு. எ–து. முறை

யானே இது ஈனன்று இது ஈனன்று என ஓரோவொன்றுகக் கண்டு நீக்கிய வழி,—அஞ்சு எழுத்தாய் ஒன்று நின்றுளது. எ—து. அவ்விடத்து அகரமுத லிய சூக்குமபஞ்சாக்கர ரூபமாயறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே,—அதுவே நீ. எ—து. அதுவுஞானன்றெனக் கழிப்பின் அங்ஙனங் கழித்தஉணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடுமாகலிற் சூக்குமபஞ்சாக்கர ரூபமாய் நின்றறிந்துவந்த அவ்வறிவுதானே நீயென்பதறிவாயாக.— அற்றேல், மாயேயமுஞ் சிவமுமுளவென்பது மேலிலச்சூத்திரங்களாற் சாதிக்கப்பட்ட மையின் அவையே அவ்வறிவினையுமறிந்து நீக்குமெனவமையுமாகலான் வரம் பின்றியோடுமாறில்லையாலெனின்;—சார் மாயை. எ—து. நின்ஞற் சாரப்பட்ட மாயை,—அனேத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலான் நீ அல்லை. எ—து. நிலமுதலிய காரியமனேத்துமாய் நின்ஞடி விரவி நின்று இப்பெத்த காலத்துக் கண்ணுக்குக் கண்ணுடிபோல் உனக்கறிவை விளக்கி நிற்றன்மாத் திரையேயன்றி அறிவதன்றுகலான் நீ அம்மாயையல்லை.—தற்பரமும் அல்லை. எ—து. மாயையான் விளங்கி யறியும் நீ அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை.—தனி. எ—து. அவற்றின்வேறு. எ - று.

விட்டவழியென்பது விட்டெனத் திரிந்துநின்றது.

அவ்வறிவாவது இதுவென்றுணர்த்துவார் 'அன்றன்றென நின்றனேத் தும் விட்ட' வழியென எதுப்பொருளே அநுவதித்து அஞ்செழுத்தாயொன்று நின்றுளதென அடையாளங் கூறினர். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வரு கின்ற சூத்திரத்துட்பெறப்படும். இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென் னும் வழுப்பட மேலுமோரியைபின்றி யுரைத்தார்.

'அனேத்துநின்று' என்புழி முன்னர்க் கண்ணுருபும் பின்னர் ஆக்கச்சொ ல்லுந் தந்துரைக்க. ஏகாரந் தேற்றம். தற்பரமென்றது குறிப்பேதுவாய் நின்றபெயர்.

*'அனேத்து நின்றின்று தர்ப்பணம்போற்காட்டலால் சார்மாயை நீயல்லை † தற்பரமுமல்லை ‡ தனி' என்றதனுனே வருகின்ற அதிகரணங்களுக்கெல் லாந் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி எனதுடலென்றலின் ஆன்மாவுளதென்றது.

எ—து. மே—ள். எ—னின். அவ்வறிவு உடம்பின்கணன்றி நிகழுக் காணு மையானும் நானுணுகினேன் பருத்தேன் என உடம்பினையே நானென்றுவழங் கக் காண்டலானும் உடம்பே ஆன்மாவெனத் ¶ தேகான்மவாதிகள் கூறுங்க

* இதனுல் உ ம், ஊ ம், ஈ ம், ஊ ம் அதிகரணங்களுக்குத் தோற்றுவாய் செய்தார்.
† இதனுல் ஊ ம் அதிகரணத்திற்குத் தோற்றுவாய்செய்தார்.
‡ இதனுல் எ ம் அதிகரணத்திற்குத் தோற்றுவாய்செய்தார்.
¶ உலோகாயதருள் ஒருசாரார்.

டாவை ஆசங்கித்துச் சூத்திரத்தினிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ - ள். வெ–டை.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பான் என உடம்பின் குணவிசேடங்களே உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும், யான்உடம்பு யான்கை யான்கால் என உடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின் அதுவே உயிர் வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுரையேபற்றி அவனை மறுத்தவாறு.

என்பதி என்மனையென்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

எ–து. பொ–ரை. எ–னின். எனதுடலென்பது * பிறிதின் கிழமைப்பொருள்படாது தலைமாத்திரையாய் நிற்குமிராகுவை இராகுவினது தலையென்று வழங்குமாறுபோல அபேதகம்பற்றியே வழங்கப்படுமென அமையுமென்னுங் கடாவை ஆசங்கித்து அதன்றூற்பரிய முணர்த்துதனுதலிற்று.

இ - ள். இராகுவினது தலையென்றாற்போல்வன சிறுபான்மைவழக்கமாகலின் ஆண்டொற்றுமைப்பொருள் கோடலைமையும் ஈண்டவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருள் என்றுவழங்குமாறுபோல என்கை என்கால் என் கண் என்செவி என்பொறி என்பிராணன் என்னறிவு எனப் பலவாற்றானும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்டலின் இவ்வழக்கமிகுதிப்பாடு *பிறிதின்கிழமைப்பொருட்கணன்றி வாரான்மையான் அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்கும்பொருள் வேறுரென்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மாவென்றவாறும். 'எனதுடலென்றலின் ஆன்மாவுளது' என மேற்கொண்டது. எ - று.

எனதென்ற மாட்டி னெனதலா தென்னு
தனதலா துன்கைகால் யாக்கை—யெனதென்று
மென்னறிவ தென்று முரைத்துநீ நிற்றிகா
ணுன்னிலவை வேறு முணர்.

எ–து. உ–ம். எ–னின். பதி.மனைவி முதலிய பொருள்கள் தம்மின் வேறுதல் கண்டி பிறிதின்கிழமைப்பொருள்பட எனதென்றூற்போலன்றிக் கைகால் முதலியவற்றைத் †தற்கிழமைப்பொருள்பட எனதென்று கூறிநிற்றலின், அவ்விருவேறுமொழியுந் தம்முளொக்குமா றென்னையென்னுங் கடாவை ஆசங்கித்து அதனைவலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். எனது அலாது என்னது எனது என்றமாட்டின். எ–து. நீ உலோகாயதநூல் கேட்குமுன்னெல்லாம் பதி மனைவி முதலிய புறப்பொருளை

* பிறிதின்கிழமைப்பொருளாவது:—ஆறும்வேற்றுமைக் கிழமைப் பொருள்களுள் ஒன்று. அது தன்னின்வேறுயது. † தற்கிழமைப்பொருளாவது:—ஆறும்வேற்றுமைக் கிழமைப்பொருள்களுள் ஒன்று. அது தன்னோடொற்றுமையுடையது.

யே உயிரெனக்கொண்டு மயங்கிநின்றுயன்றே, அக்காலத்து அவற்றை எனதன்றென வேறுகாணுது தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நின்றுற்போல,—உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றி காண். எ—து. உனதன்றுகிய உன் கை கால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙனமறிந்த பாசவறிவை என்னறிவதென்றுந் தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீ யொருபொருள் வேறு நிற்கின்றுய் காண்,—உன்னில். எ—து. உலோகாயத நூல் ஆராய்ந்தபின்னர்ப் பதி மஹிவி முதலியபொருள்கள் உனக்கு வேறுதல் கண்டாற்போலக் கை கால் முதலியவற்றி னியல்புகளையும் ஏதுக்கண்முதலியவற்றுன் ஆராய்ந்து பார்த்தியாயின்,—அவை வேறும் உணர். எ—து. அக்கை கான் முதலியன உனக்கு அன்னியமாம் அதனியறிவாயாக. எ - று.

இன் உவமவுருபு. உனதலாதென்பதனைக் கை கால் யாக்கைகளோடு தனித்தனி கூட்டுக.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

இனி ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ—து. மே—ள். எ—னின். ஐம்பொறிகள் ஐம்புலன்களை யறியுமென்றல் எல்லார்க்குமொப்ப முடிந்தமையின் அவை உடல்போற் சடமன்மை பெறப்படுதலானும், அவற்றை எனதென்னும் வழக்கம் பெரும்பான்மையன் முகலானும், அவையே உயிராதலமையுமென * இந்திரியான்மவாதிகள் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற் கோடனுதலிற்று. இ—ள். வெ—படை.

ஐம்புலனுகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்ததொன்றறியாமையின் இவ்வைந்தினுனும் ஐம்பயனுமறிவதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ—து. பொ—ரை. எ—னின். ஐம்புலனறிதலின் ஆன்மா ஐம்பொறியின் வேறெனச் சாதித்தற்கேதுவாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றூற்பாரிய முணர்த்துதனுதலிற்று. இ—ள். வெ—டை.

> ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடன்மன்னி
> யன்றும் புலனுயவ் வஞ்செழுத்தை—யொன்றறித
> லுள்ளதே யாகி லதுநீ தனித்தனிகண்
> டுள்ளலவை யொன்றல்லை யோர்.

எ—து. உ—ம். எ—னின். இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியா தென்ற தொக்கும் ஐந்தும் ஐந்துபொருளைக் கோடலின் அதனனைமக்காவதோரிழுக்

* உலோகாயதருள் ஒருசாரார்.

கில்லை. இனி இவ்வைந்தையுங்கொண்டு ஐம்புலனையும் ஒருபொருளே யறியு மெனின் அதற்குப் பிரமாணங் கண்டிலம். "குடத்தைக்கண்ட யானே அதனைத் தீண்டினேனென மறித்துணர்வு" நிகழ்தல் ஐந்துமோருடம்பின்கண்ணே நிலை பெறும் ஒற்றுமைபற்றி அமையுமெனக் கோடும் என்னுங்கடாவை ஆசங் கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி. எ-து. உடம்பின்கண்ணே நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாதாய்,—*அன்றும் புலன் ஆய் அவ்வஞ்செழுத்தை. எ-து. அங்ஙனந் தம்முண்மாறுபடுஞ் சத்தமுதலிய புலன்களைச் சூக்குமபஞ்சாக்கரத் தாற் செலுத்தப்பட்டு ஆராய்ந்தறிகின்ற அவ்வைம்பொறிகளின் தொழிற்பாட் டை,—அறிதல் ஒன்று உள்ளதேதாகில்,எ-து. கண் உருவத்தை அறிவது செவி ஓசையை அறிவது என்று இவ்வாறுணர்தலே உடையதோர்பொருள் இல்லதேதா உள்ளதேதாவென வினாயினார்க்கு இல்லதெனின் அவ்வறிவு நிகழாதாதல்வே ண்டுமாகலான் உள்ளதேதாயினின்,—அது நீ. எ-து. அவ்வாறுணர்வதியாது அதுவே நீயாகியஆன்மா,—அவ்வாறுணர்வனவும் அவ்விந்திரியங்களே என் றுற்பமி முழுக்கென்னையெனின்;—அவை தனித்தனி கண்டு உள்ளல். எ-து. அவ்விந்திரியங்கள் தத்தம்விடயங்களே வேறுவேறு கண்டறிதன்மாத்திரை யேயன்றி இத்தொழிற்பாட்டை யுடையேம் யாமெனவும் அறியமாட்டா ஆக லான்,—ஒன்று அல்லை ஓர். எ-து. அவ்வைந்தின் தொழிற்பாட்டையுமறிந்து அவற்றின் வரும் பயன்கொள்வதாய நீ யவற்றின் வேறுவை அதனையாராய்ந் தறிவாயாக. எ - று.

ஆகியென்னுஞ் சிறப்புவினை ஆயென்னும் பொதுவினையோடு முடிந்தது; "இவனுமிவனுஞ் சிற்றிலிழைத்துஞ் சிறு பறைபறைந்தும் விளையாடிய" என் றாற்போல. ஆயென்பது வினைத்தொகை. அவ்வஞ்செழுத்தென்க. அஞ்செழுத் தாற் செலுத்தப்பட்ட பொறியை ஆருபெயரான் அஞ்செழுத்தென்றார். அஃ திருமடியாரு பெயராய் ஐம்பொறியின் தொழிற்பாட்டை யுணர்த்தி நின்றது.

உள்ளல் உள்ளலான் என்க.

இம்மூன்றதிகரணங்களானுஞ் சாக்கிரத்தின் நிகழுமியல்பு பற்றி ஆன்மா வின் உண்மை சாதிக்கப்பட்டது.

மூன்முமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது.

எ-து. மே-ள். எ-னின். † "நேசவிந் திரியங் கட்டு நிகழறி விதனுற் காண்டும்" என நீவிருங் கோடலின் அவ்விந்திரியங்களின் வேறுபட் அங்ஙனம்

* அன்றல் – இப்பொருட்டாதல் "அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ" என்னும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானு முணர்க. † சிவஞானசித்தியார், உ-ம் சூ. சுசை. ஓசைநற்பரிச.

அறிவது *புரியட்டக வுடம்பேயாமென அமையும், அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி அறியுமெனக் கோடுமெனச் † சூக்குமதேகான்மவாதிகள் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் நாலாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். ஐம்பொறிகளும் ஒடுங்கின சொப்பனத்தானத்தின் நிகழ்ந்தவற்றை யறிதலின் ஆன்மா வேறுண்டு. எ - று.

ஒடுக்கம் ஆகுபெயர்.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

எ–து. பொ–ரை. எ–னின். சொப்பனத்தின் நிகழ்ந்தவற்றை அறிவதுஞ் சூக்குமதேகமேயாகலின் இது ‡ சித்தசாதனமாமாலென்னுங் கடாவை ஆசங்கித்து அதன் முற்பரிய முணர்த்துதனுதலிற்று.

இ - ள். வெ–படை.

இஃது என் சொல்லியவாறுவெனின் ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தி னிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்னும் பொருட்டாதலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனையறியுமாயிற் கண்டபடி அறியாது மயங்கி அறிதல் கூடாமையின் உயிர்க்காயின் அதுபோல் ஒருதன்மைத்தாகலின்றி அகத்துச் சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையான் அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின் அங்ஙனமறியும் உயிர் வேறுண்டென்பது கண்டுகொள்க.

> அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம்பொறிக டாங்கிடப்பச்
> செவ்விதி னவ்வுடலிற் சென்றடங்கி—யவ்வுடலின்
> வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
> மாறலுட னீயல்லை மற்று.

எ–து. உ–ம். எ–னின். கனவின்கட் செல்லுமாறும் ஆண்டு நிகழுமாறும் மீளவருமாறும் உணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். அவ்வுடலின் நின்று உயிர்ப்பப் ஐம்பொறிகள் கிடப்ப,எ–து. ¶மேல் உயிரன்றெனக் கூறிப்போந்த தூலவுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப்பொழிந்து கிடப்ப,—அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று. எ–து. அவை யங்ஙனங்கிடந்தவழிப் புறத்துநிகழுந்தொழிற்பாடெல்லாம் அடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று,—அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி. எ–து. அத்தூலவுடம்புபோல

---

* புரியட்டகவுடம்பாவது:—காரணதன்மாத்திரைகளோடும் மனம் புத்தி அகங்காரமும் என்னும் எட்டினுடனும் ஆக்கப்பட்டவுடம்பு. இது சூக்குமதேகமெனவும்படும்.
† உலோகாயதருள் ஒருசாரார். ‡ சித்தசாதனம் முன்சித்தித்ததைப் பின்னரும் சாதித்தல். ¶ இச்சூத்திரம். உ–ம் அதிகரணத்திற் காண்க. § இன் உவம உருபு.

அதனின் வேறுயதோருடம்பை எடுத்துக்கொண்டு வேறோராற்றுற் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி,—மீண்டு அதனை மாறல். எ—து. மீள அதனை மாறி மேற்சேறலான்,— நீ உடல் அல்லை. எ—து. நீ அச்சூக்கும தேகமல்லை அதனின் வேறுவை. எ - று.

உயிர்ப்ப என்றது அன்பெறுத அகரவிற்றுப் பலவறிசொல். உயிர்த்தல் தொழிற்படுதல்.

தாமும் மற்றும் அசை. மீண்டு மீள. மாறல் மாறலானென்க.

இவ்வதிகரணத்தாற் சொப்பனத்தினிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது.

நான்காமதிகரண முடிந்தது.

ஐந்தாமதிகரணம்.

இனிக் கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவுள தென்றது.

எ—து. மே—ள். எ—னின். சொப்பனத் தானமாத்திரையினன்றித் தொழிற்படாத சூக்குமதேகம்போலன்றிச் சுழுத்தி துரியங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்ததனிவதாகிய ஆன்மாவாதல் அமையுமெனப் *பிராணன்மவாதிகள் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் ஈந்தாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். வெ—படை.

உண்டிவினை உம்மைத்தொகை. அஃது † ''உண்டியும் விளையு மின்றிக் கிடந்து'' என வழிநூலாசிரியர் கூறியவாற்றுனு முணர்க.

ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியாநிற் பதனுலதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எ—து. பொ—ரை. எ—னின். கண்படைகொண்டவழி 'உண்டிவினை' யில்லை என்றது, உடற்கோ பிராணவாயுவுக்கோ என வினுபினுர்க்கு உடம்பு உயிரன்மையான் அதற்கு அவை யில்லாமைபற்றி ஈண்டைக்காவதோரிழுக்கில்லை. இனிப் பிராணவாயுவுக்கென்னின் அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேன்என்று அறிதல் பிறிதோராற்றுற் பெறப்படாதென்னும்‡ அருத்தாபத்தியான் ஆண்டும் இன்பத்துன்ப நுகர்ச்சியுண்டென்பது பெற்றும். விழித்

* உலோகாயதருள் ஒருசாரார். † சிவஞானசித்தி, சூ-ம் சூ. உ0. கண்ணெர்.
‡ அருத்தாபத்தி—பொருட்பேறு. அது பகலுண்ணன் பருத்திருந்தான் என்றவழி இராவுண்டான் என்னும் பொருள் பெறப்படுவதுபோல்வது.

துழிப்போல உறங்குழியும் பிராணவாயு இயங்குதலான் வினையுண்மையுங் கண்டாம் ஆகலின் அதற்கு அவை ஆண்டு இல்லை என்றல் மாறுகோள்போலும் என்னுங் கடாவை ஆசங்கித்து அதன்மறுபரிய மூணர்த்துதனுதலிற்று.

இ - ள். ஈண்டு உண்டியென்றது விடயங்களினிடமாகவரும் இன்பத்துன்பநுகர்ச்சியை, வினையென்றது உடம்பு சேட்டித்தலை, ஆகலின் இவ்விரண்டும் பிராணவாயுவை யொழித்தொழித்த கருவிகளெல்லாம் ஒடுங்கிய துயிலிடத்து அஃது இயங்காநிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தலின்மையின் அவையொடுங்காத நனவினிடத்து அவை இரண்டும் அதன்கணிகழ்தலுண்மையின் அவ்வின்மையுண்மைகட்கு எதுவாகக் கருவிகளை ஒடுக்கியும் ஒடுக்காதும் நிற்பது யாது அதுவே அவ்வான்மா என்றவாறும். 'கண்டபடில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளது' என மேற்கொண்டது. எ - று.

பிராணவாயுவை யொழித்து ஒழிந்த கருவிகள் என்பது ஆற்றலான் வந்தது.

இன்பத்துன்ப நுகர்ச்சியை இன்பத்துன்பமென்று உபசரித்தார்.

சிவனம் சிவித்தல். சேட்டித்தலென்றதாம்.

செவ்வெண்டொகை விகாரத்தாற்றொக்கது.

சிவியாநிற்பதென்பது சிவியாநிற்றலென்னுந் தொழிற்பெயர்மாத்திரையாய் நின்றது; *"உறங்குவதுபோலும்" என்புழிப்போல.

உளதென்றது தனித்தனி சென்று இயையும்.

துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத்தாதல்பற்றி உடம்பு †பிரகிருதியெனப்பட்டது. பிரகிருதிக்கென்றது உருபுமயக்கம்.

இரண்டுகாலத்தும் ஒப்ப இயங்குதல்பற்றிப் பிராணவாயுவைப் பிரகிருதியெனக்கொண்டு அதற்கு அவையின்மையின் என்றுரைப்பாரும், பிரகிருதிவிகாரமாகிய சித்தத்திற்கு அவையின்மையின் என உரைத்துக் கழுக்கியில் கண்ணுந் தொழிற்படுவதாய சித்தமே உயிரென்னுஞ் சித்தான்மவாதிகளை மறுத்தற்கு எழுந்தது இவ்வதிகரணமென்று உரைப்பாருமுளர்.

> கண்டறியு மிவ்வுடலே காட்டோடுங்கக் காணுதே
> யுண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியு
> முள்ளம்வே றுண்டா யொடுங்கா துடனண்ணி
> லுள்ளதா முண்டிவினை யூன்.

எ–து. உ–ம். எ–னின். துயிலிடத்துக் கருவிகளெல்லாம் ஒடுங்குதலின் இன்பத்துன்ப நுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லையாயின ஆகலான்அதுபற்றிப் பிராணவாயுவை ஆன்மாவென்றற்கு இழுக்கென்னை என்னுங் கடாவை ஆசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

* திருக்குறள், கூ-ம் அதி, நிலையாமை. கூ. † பிரகிருதி–இயல்பாயிருத்தல்.

இ - ள். கண்டு அறியும் இவ் உடலே. எ–து. கண்டறிதற்கு நிலைக்கள மான இவ்வுடம்பின்கண்ணே,—காட்டுக் காணுதே ஒடுங்க. எ–து. காட்டாய கருவிகள் தொழிற்படாதே ஒடுங்கவும்,—உண்டி வினை இன்றி. எ–று. அவை யொடுங்கியவழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கு இல்லையாகவும்,—உயிர்த்த லான். எ–து. பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான்,—கண்டு அறியும் உள் ளம் வேறு உண்டு. எ–து. கண்டறியும் உரிமையையுடைய உயிர் பிராணவாயு வின் வேருயுண்டு,—ஒடுங்காது உடல் கண்ணில் ஊன் உண்டி வினை உள்ளதாம். எ–து. அவ்வுயிர் ஒடுங்காது அவ்வுடலின்கண் எய்திற்றுயின் அவ்வுடம்பு கரு விகளின் றொழிற்பாட்டானுய உண்டியும் வினையும்உடைத்தாம்.—ஆய். எ–து. அதனையாராய்ந்தறிவாயாக. எ - று.

இது அருத்தாபத்தியளவை.

*கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

இன்றியென்னும் வினைக்குறிப்புச் செயவெனெச்சத்திரிபு. சிறப்பும்மை கள் தொக்கன. அவை † "அறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை கரண மின் மை—யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் காரணம் போகாது" என்னும் பொருள் விளைத்து நின்றன.

ஊன் ஆகுபெயர்.

உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டு முகத்தானும் ஓதினர்.

இவ்வதிகரணத்தானே சுழுத்தி துரியங்களினிகழும் இயல்புபற்றி உயி ருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறுஞ் 'சார்மாயை நீயல்லை' என்றதனை வலியுறுத்தியவாறு.

ஐந்தாமதிகரண முடிந்தது.

ஆ ரு ம தி க ர ண ம்.

இனி உணர்த்தவுணர்தலின் ஆன்மாவளது என்றது.

எ–து. மே–ள். எ–னின். பிரமப்பொருள் மேற்கூறிப்போந்த சடப் பொருள்கள்போலன்றிச் சித்தாகலான் அதுவே உயிராதலமையும் என ‡விஞ் ஞானவாதிகள் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் ஆருங்கூற் றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். தொழிற்படுங்கருவிகள் ஒன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத் தையினின்றுழி அறியுமாறின்றிப் பின்னர்க் கலைமுதலிய கருவிகளால் அறி விக்கவறிந்துவருதல் உண்மையின் எக்காலத்துந் திரிபின்றி அறிந்தாங்கறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இது தகாமையான் அங்ஙனம் உணரும் ஆன் மா வேறுண்டு. எ - று.

* குழிந்தாழ்ந்தகண் என்புழிப்போல.

† சிவஞானசித்தி, சூ-ம் சூ. ச. அறிந்திடும். ‡ மாயாவாதிகள்.

உணர்த்தவுணர்தலெனவே முன்னுணராது கிடத்தல் பெற்றும்.

அவன் அறிந்தாங்கறிவனென் றறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

எ–து. பொ–ரை. எ–னின். அறிந்தாங்கறிவதாகிய பிரமப்பொருள் அவிச்சைக்காலத்துக் கருவிகளோடுங்கூடியன்றி அறியாதெனக் கோடுமாகலின் அதுபற்றி உயிர் வேறுண்டென்றல் பொருந்தாது என்னுங்கடாவை ஆசங்கித்து *'அவ்வளவினவன்மகிழுக' என்னுநியாயத்தால்வேறும் அதன்றுற்பரியம் உணர்த்துதலுதலிற்று.

இ - ள். கருவிகளோடு கூடியவழியுந் தன்னியல்பு உணருமாறில்லாத ஆன்மாவைப்போல அம்முதல்வன் மறந்து மறந்து அறிதலின்றி அறிந்தவாறே அறிந்து நிற்கும் பேரறிவுடையனென வேதாகமங்களான் அறிவிக்கவறிந்து குரவனறிவுறுக்கு முபதேசமொழியைப் பெற்றுடையதாய் நிற்பதொன்றுளதாகலின் அதுவே †மேலுரையளவையாற் சாதித்துப் போந்த ஆன்மா என்றவாறும். 'உணர்த்தவுணர்தலின் ஆன்மாவளது' என மேற்கொண்டது. எ–று.

அறிந்தாங்கென்பது அப்பொருட்டாதல் ‡ ''எண்ணிய வெண்ணியாங் கெய்துப'' என்பதனுணுமறிக. இதற்குப் பிறவாறுமுரைப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

அறிந்து மறிவதே யாயு மறியா
தறிந்ததையும் விட்டங் கடங்கி—யறிந்த
தெதுவறிவு மன்றுகு மெய்கண்டா ளென்றி
னதுவதுதா னென்னு மகம்.

எ–து. உ–ம். எ–னின். கருவிகளோடு கூடியவழியும் அவிச்சை நீங்காமையின் விடயங்கண்மாத்திரையே அறியுமன்றித் தன்னியல்பறியுமாறு இல்லை அஃது உபதேசத்தால் அறியற்பாலதேயாமாகலான் அதுபற்றி இழுக்கென்னை என்னுங்கடாவை ஆசங்கித்து அதனையும் மேற்கூறிய நியாயத்தானுடம் பட்டு இன்னுமொருதாற்பரிய முரைக்குமுகத்தானே விடயங்களையறிவழியும் படும் வேறுபாடுகூறி அதனை வலியுறுத்துதலுதலிற்று. அவனறிந்தாங் கறியுமாறும் உயிர் மறந்துமறந்தறியுமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துதலுதலிற்று எனினுமமையும்.

இ - ள். அறிந்தும் அறிவது ஆயும் அறியாது. எ–து. கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களையறியுமிடத்தும் ஒருங்கேயறியமாட்டாது ஒன்றனையேயறிந்தும் ஒன்றனையறியப்புகுவதாயும் முன்னறிந்த தொன்றனை அறியாதொழிந்தும்,—அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி. எ–து. இங்ஙனமொரோவொன்றுக அறியப்பட்ட விடயத்தையும் இடையிடின்றி அறியமாட்டாது விட்டுவிட்டாங்கே ஐந்தவத்தைப்பட்டு அட

* இதனைவடநூலார் கூஷ்டூஜூஜ்ஹ்ஸ் என்பர். † அவையேதானேயாய் என்பதனுட்போந்ததனை. ‡ திருக்குறள், சுஎ ம் அதி, வினைத்திட்பம். சு.

ங்கி,—அறிந்தது எது. எ—து. மீளவறிந்து வருதல் கண்கூடாகக் காணப்படுதலான் அங்ஙனமறிந்து வந்த பொருள் யாது அது சடமன்றென்பது *மேற் காட்டப்பட்டது †முன்னருங் காட்டப்படும்,—அறிவும் அன்று. எ—து. ஒன்றுக இயல்பாக உணர்தலே பேரறிவாகலின் அதுவுமன்றும்,—மெய் கண்டான் ஒன்றின். எ—து. இனி மெய்யாகிய சித்தாந்தநெறியினையுணர்ந்தோன் வேறென்னையோவென மனமொருங்கியாராயுமாயின்,—அது அது தான் என்னும் அகம் ஆகும். எ—து. காட்டுமொளிக்குவேறாய கண்ணொளிபோல அவ்வறிவிற்கு வேறாய் அதுவதுவே தானெனச் சார்ந்ததன்வண்ணமாய் நின்று அறியுமியல்பையுடைய உயிராம். எ - று.

அறிந்தும் அறிவதேயாயும் என்னும் உம்மைகள் எண்ணின்கண் வந்தன. அறியாது என்னும் எண்ணும்மை விகாரத்தாற்றொக்கது. அறிந்ததையும் என்னும் உம்மை இழிவுசிறப்பு. அறிவுமென்னும் உம்மை இறந்தது தழீஇயது. ஏகாரம் அசைநிலை.

அங்கு உணர்த்துமுறைமைத் தானமாகிய இலாடத்தின் என்றவாறு.

அறிந்ததையும் விட்டங்கடங்கி அறியுமாறு ‡வருகின்ற சூத்திரத்திறுதியினும், அதுவதுதானெனச் சார்ந்ததன்வண்ணமாமாறு ¶உண்மையதிகாரத்தும் பெறப்படும்.

‘அறிந்துமறிவதேயாயுமறியாதறிந்ததையும் விட்டங்கடங்கியறிந்ததெது’ என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதே உணர்த்தும் பலகாலோதி உணர்வதாயும் பலகாலோதியுமுணர்தலின்றியும் உணர்த்தனையும் பின்னர் மறந்தொழிக்தும் இவ்வாறு ஓதியுணர்த்துதலாதலென்றுரைத்தலும் ஒன்று. இப்பொருட்கு அடங்கியென்புழியும் எண்ணும்மை விரித்துரைக்க.

இங்ஙனம் மூவகைப்படுத்துரைப்பவே, உணர்ந்தவுணர்தலென்னும் ஏதுவான் முறையே அதீதத்தின்கணிகழுமியல்பு பற்றியும் சுத்தத்தின்கணிகழுமியல்புபற்றியும் உணர்த்துமுறைமைக்கணிகழுமியல்புபற்றியும் உயிருண்மை சாதிக்கப்பட்டது.இது‘தற்பரமுமல்லே’ என்றதனை வலியுறுத்தியவாறுகாண்க.

விஞ்ஞானமே ஆன்மாவென்னும் புத்தரின் யோகாசாரன்மதத்தை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக்கொண்டு அதற்கியையவுரைப்பாருமுளர்.

ஆறுமதிகரண முடிந்தது.

ஏழாமதிகரணம்.

இனி மாயாவியந்திர தனுவினுள் ஆன்மா வளதென்றது.

எ—து. மே—ள். எ—னின். உடம்புமுதலியவற்றுள் ஒரோவொன்றே ஆன்மாவாதல் இன்றென்றதொக்கும், அவற்றுள் ஒன்று குறைந்தவழியும் அறிவு

* இச்சூத்திரத்து இரண்டாமதிகரணமுதலியவற்றிற்காண்க. † நாலாஞ்சூத்திரம் முதலியவற்றிற்காண்க. ‡ நாலாஞ்சூத்திரத்து மூன்றுமதிகரணத்திற்காண்க. ¶ ஏழாஞ்சூத்திரத்திற்காண்க.

நிகழாமையானும் எல்லாங் கூடியவழி அது நிகழ்தலானும் அனேத்துங் கூடிய சமுதாயமே உயிராதலமையுமெனச் சமூகான்மவாதிகளாகிய சௌத்திராந் திகர் வைபாடிகர் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தினிறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

இ - ள். மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப்பாவைபோலு முடம்பின்கண்ணே அவற்றிற்குவேறாய் ஆன்மாவுண்டு. எ - று.

எனவே அவையெல்லாம் மாயையின்காரியங்களாய் நிலேபெறுதனவாக லின் நிலேபேறுடைய உயிராகாவென்றவாறாயிற்று.

மாயை ஆகுபெயர். இகரம் விரித்தல்விகாரம்.

அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். *சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாய மைந்தும் மாயாகாரியமென்பது எம்மனேர்க்கு உடம்பாடன்மையின் அது பற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தலமையுமாறென்னேயென்னுங்கடா வை ஆசங்கித்து 'அவ்வளவினவன் மகிழுக' என்னும் நியாயம்பற்றி வேறு மோசாற்றுற் சாதித்தனுதலிற்று.

இ - ள். நீ ஐந்துகந்தமெனக் கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெனப் பெயர்பெறுமாறின்றி வேறுவேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் 'மாயாவி யந்திரநனுவினுள் ஆன்மாவுளது' என மேற்கொண்டது. எ - று.

வேறு வேறு என்பது வெவ்வேறென மரீஇயிற்று.

> கலேயாதி மண்ணந்தங் காணிலவை மாயை
> நிலேயாவாந் தீபமே போல—வலேயாமன்
> ஞானத்தை மூன்னுணர்ந்து நாடி லதுதனுவாந்
> தானத்தின் வேறுகுந் தான்.

எ–து. உ–ம். எ–னின். அவை தனித்தனி வெவ்வேறு பெயர்பெறினுந் தொக்க சமுதாயத்தின்கண் ஆன்மாவெனப் பெயர்பெறுமெனக் கோடுமாக லின் அதுபற்றி இழுக்கென்னேயென்னுங் கடாவை ஆசங்கித்து அவை வெவ் வேறுபெயர் பெறும்வழியும் அவர்கூறியவாறு பெயர்பெறுது வேறுபெயர் பெறுமாறும், அவை மாயாகாரியங்களேயாமாறும், அவை தொக்க சமுதாய த்தினும் ஆன்மாவெனப் பெயர்பெறுது வேறுபெயர் பெறுமாறும் உணர்த்தி அதனே வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். காணின் கலே ஆதி மண் அந்தம் ஆம்.எ–து.அங்ஙனஞ் சமுதாய மாதற்குரியவை யாவையென்று அளவைகளா னறியப்புகில் கலேமுதல் நிலமீறு கிய தத்துவங்களேயாம்.—அவை மாயை நிலேயாவாம். எ–து. அவையனேத்தும் மாயையின் காரியங்களாகலின் நிலேயுதலின்றிச் சிலகாலம் நின்று அழிவன வாம்.—ஞானத்தை அலேயாமல் முன் உணர்ந்து நாடில்.எ–து. அவை தொக்க

* சித்தம்–உருவக்கந்தம். சித்தப்பகுதி–வேதனே, ஞானம், குறி, வாசனே என்பன.

சமுதாயத்தின் விளங்கித்தோன்றுவதாய ஞானத்தினியல்பை அசையாமற் கருத்தையொருக்கி முன்னுணர்ந்து பின் அச்சமுதாயத்தை யாதென்றாயின்,—அது தீபமேபோலத் தனுவாம். எ–து. அச்சமுதாயங் கண்ணுக்கு விளக்குப்போல உயிர்க்குத் தூலசூக்குமபரங்களாகிய உடம்பாம்,—தான் அத்தின்வேறு ஆகும். எ–து. ஆதலாற் கண் விளக்கின் வேறுயினும்போல உயிர்அவ்வுடம்பின்வேறும். எ - று.

ஆமென்பது மேலுஞ்சென்றியையும்.

மாயை ஆருபெயர்.

தானென்பது முன்னியதெழுவாய்; பின்னியது அசை.

அதனினென்பது அத்தினென மரீஇயிற்று, * ''இத்தைமெய்யெனக் கருதி'' என்புழிப்போல.

இதனானே 'தனி' என்றதனை வலியுறுத்தவாறு.

இவ்வாறு மூன்றுசூத்திரத்தானும் சைவாகமங்களுட் கூறப்படும் பதிமுதலிய பொருள்களதுண்மை அனுமானவளவையான் வலியுறுத்தப்பட்டது. ஆகமவளவையே யமையுமாகலின் அனுமானவளவை மிகையாம்போலுமெனின்,—ஆகாது: மந்தவுணர்வுடைய மாணாக்கர்க்கு வேற்றுச்சமயநூல்களை நோக்கியவழிச் சைவாகமப்பொருளின் மலிவு நிகழாமைப்பொருட்டும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென்னு நான்குவகையானன்றி ஆகமங்களைக் கேட்ட துணையானே அநுபவங் கூடாமையிற் சிந்தனை செய்து வன்மை மென்மைகளையுணர்ந்து தெளிந்துகோடற்பொருட்டும் கருதலளவையும் வேண்டப்படுமாகலானென்க.

ஏழாமதிகரண முடிந்தது.

மூன்றுஞ்சூத்திரமுடிந்தது.

பிரமாணவியன் முற்றிற்று.

---

* திருவாசகம், அதிசயப்பத்து. எ. பொத்தை.

சிவமயம்.

இலக்கணவியல்.

நான்காஞ்சூத்திரம்.

அந்தக் கரண மவற்றினென் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பதின் றஞ்சவத் தைத்தே.

எ–து. சூ–ம். எ–னின். இதுவுமது.

எ–து. சு–ரை. எ–னின். சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

இ - ள். பிரமாணம் இலக்கணம் இரண்டானும் பொருணண்மை பெறற் பாற்றென்னும் முறைமைபற்றி மேற்பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட பதி பாச பசுக்களுக்கு இலக்கணம் எதிர்நிரனிறையாக வைத்துக் கூறுவான்றொ டங்கி அவற்றுள் இது மேலடுக்கநின்ற ஆன்மாவின் இலக்கணங் கூறுதனுதலிற்று.

சொற்பல்காமைப்பொருட்டும்* ஒத்து வேறுயவழியும் இயைபுடைமை யுணர்ந்துகோடற்பொருட்டும் ஈண்டு 'இதுவுமது' என மாட்டெறிந்துரைத்த ஆசிரியர், இங்ஙனம் உரைத்துக் கோடற் கேற்பவன்றே ஆண்டு ஆன்மாவினது உண்மையுணர்த்துதனுதலிற்றெனச் சிறந்தெடுத்தோதாது பொதுப்பட ஆன் மப்பிரகாச முணர்த்துதனுதலிற்று என்றதூஉமென்க. இவ்வாறன்றி மேலைச் சூத்திரத்தின் ஆன்மாவினது உண்மைகூறுமுகத்தாற் றெருட்டோதிய அஞ்சவத்தை ஈண்டிலக்கணங் கூறுமுகத்தான் விரித்தோதப்படுதலின் 'இது வுமது' என்றது மேலைச்சூத்திரப்பொருளோடு மாட்டெறிந்ததென்று உரைப் பினுமாம். இதனுனுஞ் சூத்திரவியைபு இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஆன்மா அந்தக்கரணங்களாகிய மனம் புத்தி அகங்காரஞ் சித்தமென்னும் நான்கனுள் ஒன்றன்றுயினும் நண் ணுணர்வின்மையிற் சூழ்ச்சித்துணைவராகிய அமைச்சரோடு கூடிநின்று தன் றெழினடாத்தும் அரசன்போல, சகசமலத்தினுன் உணர்வின்றிக் கஞ்சுகம் போனுங் கலாதிகளாற் பொதுவகையான் உணர்வு நிகழினுஞ் சிறப்புவகை யான் நிகழுமாறு அவற்றுற் பெறப்படாமையிற் சிறப்புவகையானுணருமாறு தனக்குச் சூழ்ச்சித்துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடி நின்று சாக் கிரமுதலிய ஐந்தவத்தையுடைத்தாம். எ - று.

* ஒத்து–இயல்.

எனவே, அங்ஙனநின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவுக்கு இலக்கண மென்றவாருயிற்று. இஃது உயிர்க்குத் தடத்தலக்கணமெனப்படும் பொது வியல்பு.

ஒன்றன்றுயினும் சகசமலத்து உணராது அமைச்சாசேய்ப்ப அவற் றொடு சந்தித்ததுநின்று அஞ்சவத்தைத்தாம் என இயையும்.

உணராது சந்தித்தது என்பது காரணகாரியப்பொருட்டாய் நின்றது. சந்தித்தது வினையெச்சமுற்று.

இவ்வாறன்றி, ஆன்மா அவற்றினொன்றன்றுயினும் சகசமலத்துணரா மையால் அவற்றொடு சந்தித்தது, சந்தித்தவழி அவையுந்தானும் அமைச்சா சேய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்தாயிற்று எனவதிகரணம் பகுத்துக்கோ டற்கேற்ப வேறுவேறு வினைமுடிபுசெய்துரைத்தலும் ஒன்று.

வடமொழிச்சூத்திரத்து ஒதுதலின் ஈண்டும் ஆயினும் என வருவித்து ஒரு தொடராகவைத்துரைக்க. அந்தக்காரணமவற்றினொன்றன்றுயினும் எனவே, அவற்றினொன்றன்றுதலும் * அதுவாதமுமுதத்தால் ஈண்டேபெற்றும். இஃது னாதார் அந்தக்காரணமவற்றினொன்றன்று என்றதனை வேறுதொடராகவை த்துரைப்ப. அங்ஙனமுரைப்பின், முன் வருவனவற்றை அவாய்நின்று ஒரு பொருண்மேல் வாராமையின் ஒருசூத்திரமாதற்கு வலாமையறிக.

அவை சந்தித்தது என்புழி ஓடிவருபு விகாரத்தாற் றொக்கது; இரண்டா வது விரிப்பினும் அமையும்.

ஆன்மா என்பது மேலிச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கற்பால தாகவும், ஈண்டு வேறுரைகியது ஒத்து வேறுதல்பற்றி என்றுணர்க.

ஆன்மா என்னுஞ்சொற்குப் பொருள் வியாபகமென்பதூஉம் சித்தசித் து என்பதூஉமாம்.

மலத்து மலத்தாலெனவிரிக்க.

அமைச்சரசு அமைச்சரோடுகூடிய அரசு என உருபும் பொருளும் உட ன்றொக்கன.

காரணப்பொருட்டாய நின்றென்னும் வினையெச்சம் அஞ்சவத்தைத்து என்னும் வினைக்குறிப்புமுற்றோடு முடிந்தது.

இதனுள் அந்தக்காரணமவற்றினொன்றன்று என்றது ஓதிகரணம்; ஒன்ற ன்றுயினுஞ் சகசமலத்துணராது அமைச்சாசேய்ப்ப அவை சந்தித்தது என் றது ஓதிகரணம்; அமைச்சாசேய்ப்பநின்றஞ்சவத்தைத்தே என்றது ஓதிகர ணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

* அதுவாதமெனினும் வழிமொழிதலெனினும் ஒக்கும். அதுவாதமாவது முன்னர் ப்பெறப்பட்ட தொன்றனை மற்றொன்று விதித்தற்பொருட்டுப் பின்னருமெடுத்தோது தல். அதனால் அது கூறியது கூறலென்னுங்குற்றமாகாது வழிமொழிதலென்றுயிற்று.

முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தியகங்காரசித்தங்களில் ஒன்றன்று என்றது.

எ–து. மே–ள். எ–னின். ஏனையவெல்லாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்பனவாகலான் உயிராகா வாயினும் மனமுதலிய அந்தக்கரணங்கள் * ''நிந் தையைச் சீவனென்றுஞ் சீவனைச் சிந்தையென்றும்'' இங்ஙன முயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதலுண்மையானும் இந்நியமமுதலியவற்றை அவ் வாறு கூறுமையின் அஃதாகுபெயரென்றற்கேலாமையானும் அவையே தனி த்தனி ஆன்மாவாமென்றல் அமைவுடைத்தென † அந்தக்கரணன்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்து ரைத்து மேற்கோடனுதலிற்று. இது மேலைச்சூத்திரத்துள் ஓதற்பாலதேயா யினும் ஈண்டிலக்கணங்கூறும்வழியும் அவற்றொடு சந்தித்து அமைச்சரசேப்ப நிற்பதென அவத்தைக்கேதுவாக எடுத்தோதாதவேண்டுதலின் ஈரிடத்தும் எடுத்தோதாதுதல் ‡ ''சில்வகையெழுத்தின் செய்யுட் டாகிச்—சொல்லுங்கா லியுரையகத் தடக்கி—நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகி'' என்னு மிலக்கணத்ததாய சூத்திரத்துக் கேலாபையான் அநுபற்றி விநிமுகத்தான் ன்றி அநுவாதமுகத்தான் ஈண்டுணர்த்தப்பட்டது. இ - ள். வெ–டை.

ஈண்டு அந்தக்கரணமென்றது உள்ளந்தக்கரணமாகிய கலாதிகளினுஞ் செல்லாமைப்பொருட்டு மனோபுத்தியகங்காரசித்தங்களிலெனக் ளெங்தெடு த்துரைத்தார். கலாதிகளுண்டெனக்கொண்டோரின் உயிர் வேறுண்டெனக் கொள்ளாதார் இன்மையின் ஆண்டாசங்கை நிகழாமையானும் அமைச்ச ரோடு உவமிக்கப்பட்டு ¶அவத்தைக் கேதுவாவன அம்மனமாதியெயன்றிக் கஞ்சுகத்தோடு உவமிக்கப்பட்டு அறிதற்கிறு நீங்காது உடனிற்பனவாய கலாதிகளன்மையானும் அவற்றை ஈண்டெடுத்தோதாதவேண்டாமையின் மன முதலிய புறவந்தக்கரணங்களே ஈண்டுக் கூற நின்றனவென்பது கருத்து.

அவைதாம் பிரகாசமாய்நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ–து. எது. எ–னின். § ''மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு— மருவியான் மாவே யென்ன வரும்'' என நியிருங்கோடலின் உயிர் அவற்று ளொன்றுதலமையுமென்றுற்பதி மிழுக்கெல்லை என்னுங்கடாவை ஆசங்கி த்து மேற்கோளாச் சாதித்தனுதலிற்று.

இ - ள். அவ்வந்தக்கரணங்கடாம் தம்மிற் கிழுள்ளவற்றை நோக்கிச் சித் தாய்நின்றே தம்மை நோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ்சித் தாய் நிற்கும் 'இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யக ங்காரசித்தங்களில் ஒன்றன்று' என மேற்கொண்டது. எ - று.

---

* சிவஞானசித்தி, சூ–ம் சூ. உஅ. புந்தியை. † உலோகாயதருள் ஒருசாரார். ‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல். சூ. கூ0. ¶ அவத்தை–நிலை. § சிவ ஞானசித்தி, சூ–ம் சூ. உ. கருவியா.

எனவே, உயிரான் அதிட்டிக்கப்பட்டு ஐம்பொறிகளறிந்த விடயங்களுள் ஒன்றனை இஃதியாதாகற்பாற்றெனச் சித்தஞ்சிந்தித்தறியும்; யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனை இஃதின்னதாகற்பாற்றெனவும் அஃதாமோ அன்றோ வெனவும் இவ்வாறு சங்கற்பவிகற்பஞ்செய்தறியும்; யான் சங்கற்ப விகற்பஞ்செய்தேனென்றறியமாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன் யானென்று ஒருப்பட்டெழுந்தறியும்; யானொருப்பட்டெழுந்தேனென்றறியமாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும்; யான் நிச்சயித்தேனென்றறியமாட்டாது. ஆகலான் அவ்வாறின்றி அவற்றொடு கூடி யான் சிந்தித்தேன் பற்றினேன் எழுந்திருந்தேன் நிச்சயித்தேன் என்றும் அதன்பின் அதுவதுவாய்ப் பரிணமித்துச் சுகதுக்க மோகரூபமாய்த் தன்மாட்டு வந்த புத்திதத்துவத்தின் பரிணமங்களைக் கலாதிகளோடு கூடி நின்று இதுசுகம் இதுதுக்கம் இதுமோகமென்று அறிந்தும் யான் சுகித்தேன் யான் துக்கித்தேன் யான்மோகித்தேன் என்றறிந்தும் இங்ஙனம் பிறவற்றை நோக்கியுந் தன்னை நோக்கியுஞ் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்றுமாறுயாண்டையதென மறுத்தவாறுயிற்று. * "இவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோ புத்தி" என வழி நூலாசிரியர் கூறியதும் இவ்வியல்புநோக்கி.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து அசித்தென்னும் பொருளவாம்.

ஏனையோரை நோக்கி அரசனுக்கு அணுக்கராதற் சிறப்புப்பற்றி அமைச்சரை அரசரென்று உபசரித்துக் கூறப்படுமாறுபோலப் புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற்சிறப்புப்பற்றி 'மனம்புத்தியகங்காரஞ் சித்தநான்குமருவி யான்மாவேயென்ன' உபசரித்துக் கூறப்படுமத்தனையென்றெழுக. சூழ்ச்சித்துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரையொக்குமெனவே, ஏனைக்கருவிகள் ஏனைப்பரிசனங்களை ஒக்குமென்பது பெற்றும். அது †ஞானமிர்தத்திற்காண்க.

மேலைச் சூத்திரத்தினோதிய ஏதுக்களை ஈண்டைக்கு மமையுமாயினும், சிறந்தமைபற்றி வேறோதுக்கூறினார்.

மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன்—மனமே
லுதித்தொன்றை யுள்ள முணர்த லதனி
னுதிக்குங் கடற்றிரையை யொத்து.

எ—து. உ—ம். எ—னின். அவ்வந்தக்கரணங்கள் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் தம்மின் மேலுள்ளவற்றை நோக்கியுந் தம்மைநோக்கியும் அசித்தாமாறுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள். எ—து. மனமுதலிய அந்தக்கரணங்களாலுணரப்படுவன ஐம்பொறிகளாற்றரப்பட்டுப் புறத்தே

* சிவஞானசித்தி, சுக—ம் சூ. கக. சிவன் சீவ. † ஞானமிர்தம், நூல். கூ. கால் கொடுத்தது.

நிலைபெற்ற விடயங்களாம்:—உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை எ—து. ஆன்மாவுணர்வது மனத்துக்கு மேலெனப்படும் புத்தியிற்றோன்றிய தொன்றாமாயாம்:—*கடற்றிரையை ஒத்து உதிக்கும். எ—து. அவ்விருவேறுணர்வுங் கடலிடை யெழுந்து கரைசாருந் திரைபோலப் பரம்பரையின் ஆன்மாவின்மாட்டு வந்து தோன்றும்:—அதனின் மனம் ஆகி புலனின் அல்லன். எ—து. அதனுனே மனமுதலியன அவ்விடயங்களின் வேறுயினும்போல ஆன்மாவும் அம்மனமுதலியவற்றின் வேறும். எ - று.

உதிக்குமென்னும் பயனிலைக்கு உணர்தலிரண்டும் எழுவாய்.

செவ்வெண்டொகை விகாரத்தாற் றொக்கது.

மன்-அசை. புலனின் இன் உவமவுருபு.

அல்லனென ஆடீஉவதிசொல்லாற் கூறியது வடமொழிமதம்பற்றி.

உதித்தலென்னும் பெயரெச்சவீறு விகாரத்தாற் றொக்கது.

புத்தியிற்றோன்றியதொன்றுவது சுகதுக்கமோகரூபவிடயம்.

பரம்பரையிற் றோன்றுதலாவது முன்னர் வாயிற்காட்சியுணர்வு தோன்றி அதன்பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி அதன்பின்னர்த் தன்வேதனைக் காட்சியுணர்வு உயிரின்கண் வந்து தோன்றுதல்.

இதனுனே அந்தக்கரணங் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாமாறும் மேலுள்ளவற்றை நோக்கி அசித்தாமாறும் உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ் சித்தாமாறுங் கண்டுகொள்க.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புத்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள மிவ்வேரு
மவ்வேரும் போதுபோ லாங்கு.

எ—து. உ—ம். எ—னின். மேற்பொதுவகையாற் கூறிப்போந்த அந்தக்கரணங்களினியல்பு சிறப்புவகையாற் கூறுமுகத்தான் மானதக்காட்சியுள்ளுங் கடற்றிரைபோலப் பரம்பரையின் வெவ்வேறுயுணர்வு நிகழுமாறுணர்த்தி உயிர்வேறுதலை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். உள்ளம். எ—து. புருடதந்துவமென நின்றவுயிர்,—ஆங்கு. எ—து. வாயிற்காட்சியாற் கண்டவிடயங்களினென்றீனை மனமாதியானுணரும் மானதக்காட்சியின்கண்ணும் ஒருபெற்றித்தாதலின்றி,—சித்தமாய்ச் சிந்தித்து. எ—து. சித்தமாய் நின்று இஃதியாதாகற்பாற்றெனச் சிந்தித்தும்,—மனம் ஆகிப் பந்தித்து. எ—து. அதன்பின் மனமாய்நின்று இஃதின்னதாகற்பாற்றெனப் பற்றியும்,—ஆங்காரம் ஆய்த் தெளியாது. எ—து. அதன்பின் அகங்காரமாய் நின்று இஃதாமோ அன்றே இதனை இன்னதெனத் தெளிவேன்பாலென

* ஐம்பொறியும் புத்தியும் கடலையும், அவ்விருவேறுணர்வும் திரையையும், ஆன்மாக்கரையையும் போலும் என்க.

னத் தெளிவுபிறவாதெழுந்தும்,—புத்தியாய் ஆய்ந்து, எ—து. அதன்பின்ன ர்ப் புத்தியாய்நின்று இஃதின்னதெனத் தெளிந்தும்,—வெவ்வேறே துணி ந்து இவ் வேறும். எ—து. இங்ஙனம் வெவ்வேறுகவேயுணர்தலான் அவ்வாறு ணரும் புருடன் இவ்வந்தக்காரணங்களின் வேறும்,—போது அவ் வேறும் போல்.' எ—து. ஞாயிறுமுதலியவற்றோடு கூடிநின்று காழிகை நாள் பக்கம் திங் கள் யாண்டு முதலியனவாய்ப்படும் பாகுபாடுசெய்யுங் காலதத்துவம் அஞ்ஞா யிறுமுதலியவற்றின் வேறுபினைப்போல். எ - று.

ஆய்தல் ஈண்டு நிச்சயித்தற்பொருட்டு.

துணிதலென்பது அறிதலென்னும் பொருண்மாத்திரையாய் நின்றது.

தான் அசை. ஏகாரம் தேற்றம்.

இவ் அவ் என்பன வகரவீற்றஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்.

'வேறும் போதுபோல்' எனவே, ஆண்டு நீக்கப்பொருள் ஞாயிறுமுதலிய னவென்பது தானே விளங்கும் என்பது நோக்கி அவ்வெனச் சுட்டியொழிந் தார். சாரியையும் உருபும் உடன்றொக்கன.

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஆங்கும் 'வெவ்வேறு தானே துணி ந்து' எனவே மானதக்காட்சியும் இங்ஙனம் நால்வேறுவகைத்தாய் ஒன்றற்கொ ன்று முறையே ஏதுவும் பயனுமாய்க் கடற்றிரைபோலப் பரம்பரையிற் றோன் றுமென்றவாறுயிற்று.

செய்யுளாகலின் முறைபிறழ வைத்தார்.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாத மூளவடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று.

எ—து. உ—ம். எ—னின். அம்மானதக்காட்சியினிகழுஞ் சவிகற்ப வுணர் விற்கு ஏதுவாய் அவற்றை உடனின்று செலுத்தும் அக்காரங்கள் இவையென் பதும் அவற்றுன் உணர்வு மாறிமாறித் தோன்றுமாறும் உணர்த்துதனுதலி ற்று. இ—ள். வெ—டை.

"மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை—யுன்னு முகார முபகரி க்கு-முன்னுகு—மாங்காரந் தன்னை யகாரஞ் செலுத்தியிடு—நீங்காத சித்தம் விந்து நேர்." என்பவாகலானும், ஈண்டோதிய முறையே முறை எனவும், †"அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்" என வழிநூலாசிரிய ரோதியது எதிர்நிரனிறைப் பொருளெனவுங் கொள்க. "அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்" என்றதே முறையெனக்கொண்டு அதற்கி யையக்கொண்டுகூட்டி யுரைப்பாருமுளர்.

பகாதிவற்றை நாடிற்பிரணவமாம் எனவும் போன்று ஆமெனவுங்கூட்டுக.

---

* துகளறுபோதம், நூல். கக. † சிவஞானசித்தி, நான்காஞ்சூத்திரம். கூ.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்காங்களைக் கூறுவார் ஒப்புமைபற்றிப் புருடனைச் செலுத்தும் அக்காரமும் உடன்கூறினர்.

உடனின்று செலுத்துதல்பற்றி அபேதமாக வைத்தோதப்பட்டன.

"நிகழ்ந்திடும் வாக்கு ஈன்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றி" அகாரமுதலிய பஞ்சகலைவடிவாய் நின்று இவற்றை வேறுவேறு செலுத்துதல்பற்றிக் கணங்தோறும் நிகழ்ப்பும் மறப்புமாகிய சகலகேவலங்கள் அதிநுட்பமாய்க்கற வ்கோலிபோல மாறிமாறி நிகழுமெனவும் மாசகலத்தின்கட் கணங்தோறும் அங்வனமுணர்வு உதித்தும் ஒடுங்கியும் வருதல் சமுத்திரத்தின்கட் புதிதுபுதிதாய்த் திரைதோன்றியும் ஒடுங்கியும் வருமாறுபோலுமெனவும் உணர்க. கடற்றிரையுவமை மேற் பரம்பரையாய் உணர்வுவருதற்கு எடுத்துக் காட்டினர்; ஈண்டுப் புதிதுபுதிதாய்வருதற்கு எடுத்துக்காட்டினர்; ஆதலாற் †புனருத்தியன்மை யுணர்க.

எண்ணில வோங்காரத் திசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

எ—து. உ—ம். எ—னின். அவ்வக்கரங்களுஞ் சடமாகலின் அவற்றை யநிட்டிக்கும் அதிதெய்வங்கள் இவையென்பதுணர்த்துத லுதலிற்று.

இ - ள். எண்ணிலவோங்காரத்து நண்ணியவிந்துவொடு நாதத்ததிதெய்வங் கண்ணில் ஈசரொடு கூடிய சதாசிவமாம். அகரவுகரமகரத்ததி தெய்வங் கண்ணிற் பகரயன் மாலோடு பரமனும். எ - று.

எண்ணிலவோங்காரம் எண்ணத்தின்கண் நிலவிய ஓங்காரமென விணைத் தொகை. எண்ணம் ஈண்டு மானதக் காட்சி.

ஓடி எண்ணின்கண் வந்தது.

ஈண்டு அயன் மால் பரமனென்றது சுத்தவித்தையின் வைருவாரை. பரமன் உருத்திரன். அகரவுகரம் மகரத்தாம்என்புழி மகரம் இசைப்பொருட்டாய் ஒற்றில்வழி யொற்றுய் வந்தது.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின்றென்றது.

எ—து. மே—ள். எ—னின். ஆன்மா அந்தக்கரணங்களி னொன்றன்றுயின் அவற்றுடு சந்தித்து நிற்றற் கேதுவென்னையென ‡அவர் கூறுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ—ள். வெ—டை.

---

* சிவஞானசித்தி, முதற்சூத்திரம். உசு. † இதனைத் தமிழ்நூலார் கூறியதுகூறலென்பர். ‡ உலோகாயதருள் அந்தக்காரணன்மவாதிகள்.

ஆகந்துக மலங்களி னீக்குதற்குச் சகசமலமென விசேடிக்கப்பட்டது: படவே, உயிர் முதல்வனைப்போல் அத்தக்காரணமுதலியவற்றின் வேறுய சேதனப்பொருளாயினுஞ் செம்பிற்களிம்புபோல வேறுகாரணமின்றி மூலமலங் தன்னெடு உடனுப்நிற்றலிற் றன்னியல்பானுணருமாறின்றிக் கருவிகளைக்கூடி நின்றுணர்வதாயிற்றென விடித்தவாறுயிற்று. இதனுனே 'மலத்துளதாம்' என மேற் பிரமாணத்தாற் பெறுவிக்கப்பட்ட மூலமலத்திற்கு ஈண்டிலக்கணங்கூறி ஞென்பது பெறுதும். அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தினிகழுமிய ல்பே மலத்திற்குத் தன்னியல்பு, கருவிகளோடு கூடி அவற்றையுறுவதாகியவி பரீதவுணர்வைச் செய்யுஞ் சகலத்தினிகழுமியல்பே பொதுவியல்பு, ஆகலான் மலத்திற்கு இருவகையிலக்கணமும் ஈண்டே பெறப்பட்டன.

அதுதான் † ஞானதிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்.

எ–து. *வது.* எ–னின். சகசமலத்தினுல் உணர்வின்றியொழியிற் பின்கருவிகளோடு கூடியவழி அறிவுண்டாமாறியாங்ஙனமெனச் சற்காரியவாதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். அச்சகசமலமாவது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனையில்லை யென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் 'இனி இவ்வான்மாச் சகசமலத்தினுல் உணர்வின்று' என மேற்கொண்டது. எ - று.

மலத்தினதிலக்கணம் வடமொழியதற்குப்பற்றிக் கூறுவார் ஞானதிரோதகமாயெனவும் அதனைத் தமிழ்மொழியான் விளக்குவார் மறைத்துக்கொடு நிற்றலானெனவுங் கூறினுராகலான், அது கூறியதுகூறலன்மையுணர்க. திரோதகமென்னும் வடமொழி மறைத்தலைச் செய்வதென்னும் பொருட்டாய் விளை முதன்மேனின்ற விணைப்பெயர்.

இதனுனே ஞானபாவமே அஞ்ஞானமென்பார்மதமும் மறுக்கப்பட்டது; அபாவம் ஒருகாரியத்தைச் செய்யமாட்டாமையின்.

> மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணுதே
> லாயா தா மொன்றை யாதுவதுவாய்—வீயாத
> வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் காட்டம்
> றன்னைமல மன்றணைத லுன். [போற்

எ–து. உ–ம். எ–னின். ஆகந்துகமலமே ஞானதிரோதகமாக லமையும் வேறுமோர் மலமுண்டென்றல் மிகையோபாலுமென ஐக்கவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து ஆகந்துகமலத்தானுஞ் சகசமலத்தானுஞ் செய்யப்படுங்காரியங்கட்குத் தம்முள் வேற்றுமை பெரிதாமாணர்த்துமுகத்தான் ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். உள்ளம் மாயா தனு விளக்கு ஆக் காணுதேல் ஒன்றை ஆயாது. எ–து. உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயாகாரியமாகிய உடம்பு தனக்

---

* ஆகந்துகமலம்–இடையில்வந்துகூடும் மலம், அவை மாயைகன்மங்கள். † இதனை "அபேதமாகிப் பிறிதாது" என்றுற்போலக் கொள்க.

குக் காட்டாகக்கொண்டு காணுதாயின் ஒருவிடயத்தையு மறிவதில்லையாம்,—மற்று மலம் தன்னை அன்று அணைதல் எ—து. சகசமலம் உயிரை அநாதியே பற்றிநிற்றல்,—அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்று ஆம் காட்டம் போல். எ—து. காட்டமுதலியவற்றுள் அதுவதுவேயாய் நின்றுந் தனக்குக் கேடில்லாத வன்னியைத் தனக்குண் மறைத்துவைத்து ஒன் றேயாய் நிற்குங் காட்டம்போலும். எ - று.

எனவே, காட்டாய் நின்று விடயங்களை யறியும் வண்ணம் உயிர்க்கறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடைசெய்துகொண்டு நிற் றல் மலத்தின் செய்தி; இவ்விரண்டும் இங்ஙனம் ஒளியுமிருளும்போல் இகலி நிற்பனவாகலான் அத்தன்மைத்தாய மாயை இத்தன்மைத்தாய மலமாதல் யாண்டையதென மறுத்தவாருயிற்று.

மற்றென்பது மலமன்றணுதலென்பதனெடியைந்து *வினைமாற்றின்கண் வந்தது.

முற்றும்மை சிறப்பும்மைகள் தொக்கன.

ஆமுந் தானுங் †கட்டுரைக்கண் வந்த அசை.

வன்னி அதுவதுவாதல் காட்டத்துண் மறைந்தழிக் காட்டமேயாயுஞ் சூரியகாந்தத்துண்மறைந்தழி அதுவேயாயும் இவ்வாறே அவ்வவற்றின் மறை ந்தழித் தானென்பதொன்றில்லை யென்னும்படி நிற்றல். அங்ஙனமாகியும் வீயாமை, கடைதன் முதலிய தொழிற்பாடு நிகழ்ந்தவழித் தோன்றுதலாற் பெற்றும். தன்னுண்மறைத்தல் வன்னியென்பதொன்றில்லை யென்னும்படி பொதிந்துகொண்டு தானேயாதல். ஒன்றுங்காட்டம் ஒன்றேபோல் அத்துவிதமாங் காட்டமென்றவாறு. இவ்வாறு உவமைக்கோதிய ‡அடையுந் தொழிலும் இயைபும் பொருட்கண்ணுங் கூறிக்கொள்க.

மாயைகன்மங்கள்போல ஆதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை கூறுவார் அன்றணுதலென்றார்.

இங்ஙனங் கூறிப்போந்த மலமாவது ஞானாவரணமென்பாரும், பிராந்தி ஞானமென்பாரும், தமோகுணமென்பாரும், ¶பஞ்சக்கிலேசத்துள் ஒன்றாகிய §அவிச்சையென்பாரும், ○மாயைகன்மங்களென்பாரும், சிவசத்தியென்பாரும், ** உயிர்க்குணமென்பாருமாய், அவ்வச் சமயநூல்பற்றி மயங்குவாரு முளர்.

அம்மலத்திற்குப் பற்றுக்கோடாகிய சூனிய முதலியவற்றின் வேறென்பப்பட்ட ஆன்மாவும் ††இயற்கையாற் சடமென்பாரும், அறிவுமாத்திரையே

* வினைமாற்று முன்சொல்கின்றதொழிய இனி வேறொன்று என்னும் பொருண்மையது என்பர் நச்சினார்க்கினியர். † கட்டுரை—புனைந்துரை. அசைத்தல்—சேர்த்துதல். ‡ அடை அதுவாதல், தொழில் தன்னுண்மறைத்தல், இயைபு ஒன்றுதல் என உணர்க. ¶ பஞ்சக்கிலேசம்—அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்பன. §சாங்கியர். ○ ஐக்கவாதி பாசுபதி முதலியோர். ** பாடாணவாதிகள். †† இயற்கையாற்சடமென்பார்-வைசேடிகர். குணிப்பொருளன்றென்பார்-சாங்கியர். சுதந்திரவறிவுடைத்தென்

யெனக் குணிப்பொருளன்றென்பாரும், சுதந்திரவறிவுடைத்தென்பாரும், அவ்வவ்வுடம்பளவிற்றென்பாரும், அணுவளவிற்றென்பாரும், உருவென்பாரும், அருவென்பாரும், உருவருவென்பாருமாய் இன்னும் பலதிறப்படக்கூறி மயங்குவாருமுளர். அவையெல்லாம் பொருந்தாமை ஆகமங்களுட் காண்க. ஈண்டுரைப்பிற்பெருகும்.

இச்சகசமலம் ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய்ச், செம்பிற் களிம்புபோல உயிரின்குற்றமாய், அநாதிபந்தமாய்ச், சடமுமாய்ப் பலவுமாயின் அழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படாமையின் ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் உயிர்ப் பாகுபாட்டிற் கேதுவாய் உயிர்கடோறுந் தனித்தனி வெவ்வேறுமுப் மறைத்துநின்று தத்தங்காலவெல்லையினீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், உயிர்கண் மூன்றவத்தைகளும் படிதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகவுயிர் அணுத்தன்மைப்படியாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்ப், *பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதியென்றற் றொடக்கத்துக் காரணக்குறிகளு முடைத்தாய் நிற்பதெனவும், படலம் படர்ந்தகண் ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியை யிழந்து இருளினழுந்துமாறுபோல முதல்வன் சந்நிதியினிற்பினுஞ் சோபானமுறையின் அறிவிக்க அறியுந்தன்மைத்தாய உயிர் அநாதியே அறிவித்தால் அறியமாட்டாமையின் அம்மாட்டாமையான் அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃது அவ்வுயிர்க்குப் பந்தமாயிற்றெனவும் உணர்க. அநாதியே மலத்தினீங்குதல் முதல்வன்விஜையாய் அநாதிமுத்தத்தன்மையென † எண்குணங்களுள்வைத்து எண்ணப்படுவதென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல அநாதியே மலத்தைப்பற்றுதல் உயிரின்விஜையாய் உயிர்க்குற்றங்களுள்வைத்து எண்ணப்படுவதென்பதூஉம் அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்தது. ஈண்டுப்படுங் கடாவிடைகளெல்லாம் சிவிடத்தும் ஒக்கும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

பார்-பாட்டாசாரியர். அவ்வவ்வுடம்பளவிற்றென்பார்-சமணர். அணுவளவிற்றென்பார்-பாஞ்சராத்திரிகள். உரு என்பார்-பௌராணிகர். அரு என்பார்-பாதஞ்சலர். உருவரு என்பார்-கவுளர்.

* இதனை வமஸ்கவ வமஸ்நீ ஹாரஸ ஜ்ரகஸ்ய ஸுஷுப்ரா ஸுஸாஜ்ஜ்வலெந்ரிகவஸி ஸுரவஜ்ரிஸ்ஸ்ரஜ்மி வாவசீஷ்வ கூயாஸிஜிஷ்॥ என்னும் மிருகேந்திரசுலோகத்தானும் உணர்க.

† எண்குணங்களாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவைமுறையே சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயான்மா, சருவஜ்ஞத்துவம், அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி எனப்படும்.

மூன்றாம் திகரணம்.

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுப் நிற்குமென்றது.

எ–து. மேல். எ–னின். இருளினகப்பட்டகண் விளக்கோடு கூடியவழி விடயங்களைக் காண்டலேயன்றி வெவ்வேறவத்தைப்படுமாறு இல்லை, அது போல மலத்திலகப்பட்ட உயிர் கருவிகளோடு சத்தித்தவழி ஒருதன்மைத்தா யறிதலேல அமைவுடைத்து, அவ்வாறன்றி மேலிச்சுத்தரத்தோதிய முறை யான் ஐம்புலனறிதலும் ஓடுக்கமறிதலும் உண்டிவினையின்றிக்கிடத்தலும் உணர்த் தவுணர்தலும் இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப்படுமாறு யாங்ஙனம் என *அவர் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரந்தின் இறுதிக்கூற்றைக் கண்ணி ழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ–ள். வெ–டை.

அவத்தையெனப்படுவன பலவுளவாகலின் அவற்றுள் ஈண்டு ஐந்தவத் தையெனப்பட்டவை யாவையென்னும் ஐயம் நீக்குதற்குக் கொள்தெதிர்துரை த்தார்.

அவத்திதன் என்னும் வடமொழி ஆடுஉவறிசொல்லாற் கூறியது அம்ம தம்பற்றி.

'அமைச்சரசெய்ப்ப நிற்ற'லான் என்பதனுஉம் ஈண்டுவருவித்துரைத்துக் கொள்க. கொள்ளவே, † ''படைகொடு பலனிபோதும்'' வேந்தன் † ''கடை தொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டு'' அந்தப்புரத்திற் செல்லுமாறுபோல ஆன்மா அங்ஙனம் அஞ்சவத்தைப்படுதல் அமைவுடைத்து என விதித்தவா முயிற்று.

அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூபசொரூபி யாய் நிற்றலான்.

எ–து. எது. எ–னின். அரசன்போல் உயிர் அங்ஙனம் அஞ்சவத்தைப்ப மோயின் வியாபகத்திற்கு இழுக்காய்முடியும்போலுமென்னுங் கடாவை யா சங்கித்து மேற்கோளாச் சாதித்தனுதலிற்று.

இ–ள். அவ்வுயிர்தான் மலவடிவின் மறைப்புண்டவழி அருவுடம்பாகிய தத்துவசொரூபியாய் நிற்றலான் அத்தத்துவங்கள் தொழிற்படும் அவத்தை வேறுபாடுபற்றி 'இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுப் நிற்கும்' என மேற்கொண்டது. எ–று.

‡ ''சிவனே னியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் சூற்றமாங்கருவி, சேருகல் பிரிதல் விஸ்லியா முறையிற் செயற்படுங் கருவியே தெரியுந்—தாவி லா வறிவு தங்கின விடமே தருமுயிர்க் கிருப்பிடம்'' என்றதூஉம் இப்பொரு ளைப்பற்றியென்க.

* உலோகாயதருள் அந்தக்கரணமுண்டெனவாதிகள். † சிவஞானசித்தி, சூம் சூ. கூஉ.
‡ உலகுடையாயனார் கழிநெடில். கூ.

தத்துவவன்னரூபனுதல் வீடு பெற்றழியும் உண்டுபோலும் என்று ஆசங்கை நிகழாமைப்பொருட்டு, 'மலசொரூபத்தின் மறைந்து, என மேற்கூறிப் போந்ததனை வழிமொழிந்துகொண்டு 'அரூபசொரூபியாய் நிற்றலான்' என்று முதுக்கூறினார்.

மறைந்தவழியென்றது மறைந்தெனத் திரிந்துநின்றது.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

எ-து. உ-ம். எ-னின். தத்துவங்கள் தொழிற்படுதற்கண் நிகழும் அவத்தைவேறுபாடு தெரிந்துணர்த்தி அஃது எதுவாதலே வலியுறுத்துதனுதலிற்று.

நல் நுதலில் வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்து ஆம் கண்டத்தின் வாக்காதி மெய்யாதி விட்டு அகன்று வேறு ஐயைந்தாம் இதயத்திற் சித்தஞ் சென்று அணையும் நாபியினில் உயிர் அணையும் அணையா மூலத்து ஒன்று என இயையும்.

இ-ள். சாக்கிரத்தானமெனப்படும் இலாடத்திற் புறவிந்திரியம் பத்தினையுங் தேற்றமாகப் பொருந்திய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சொப்பனத்தானமெனப்படுங் கண்டத்தின் அப்பத்தினையும்விட்டு நீங்கி வேருய இருபத்தைந்து கருவி தொழிற்படும்; சுழுத்தித்தானமெனப்படும் இதயத்தின் அவற்றுள் இருபத்திரண்டு கருவிகளே விட்டு நீங்கி முன்னர்க்கூறப்படும் இரண்டு கருவிகளோடு கூடிய சித்தந் தொழிற்படும்; துரியத்தானமெனப்படும் உந்தியிற் சித்தத்தையும் விட்டுநீங்கி முன்னர்க்கூறப்படும் புருடதத்துவத்தோடு பிராணவாயுக்கூடித் தொழிற்படும்; இக்கருவிகளொன்றும் அணையாத அதீதத்தானமெனப்படும் மூலாதாரத்திற் புருடனெவ்வேற நிலைபெறும். எ-று.

எனவே, இலாடத்தானம் முதலிய ஐந்தினும் நிற்கும் கருவிகள் முறையே *முப்பத்தைந்தும் இருபத்தைந்தும் மூன்றும் இரண்டும்ஒன்றும் என்பது போந்தவாறுணர்க.

† மன்ற என்பது தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல்.

---

* இதனை:—"சாக்கிரமா தீதலினிலிந் திரியம் பத்துஞ் சத்தாதி வசனுதி வாயு பத்து—மீக்கமிலந் தக்காரணம் புருட னோடு நின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத்—தாக்கியசொப் பனமதனில் வாயு பத்து மடித்தனசத் தாதிவச ஞதி யாக—நோக்குகரணம்புருட னுடனே கூட துவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே. சுழுத்தியித யத்தனிற் பிராணன் சித்தஞ் சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்—வழுத்தியநா பியிற்றுரியம் பிராண னோடு மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கு—மழுத்திடுமூ லந்தன்னிற் றுரியா தீத மதனிடையே புருடனென்றி யமரு ஞானம்—பழுத்திடுபெக் குவாறிவ ரவத்தை யைந்திற் பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே." என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கானுமுணர்க.

† இதனை "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்னும் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தானுணர்க.

வய்தல் பொருந்துதல்; விணைத்தொகை.

வாக்காதி மெய்யாதியை என இரண்டாவது விரித்துரைக்க. அஃது ஈரிடத்துஞ்சென்றியையும்.

வருகின்ற சூக்கிரத்தின் மெய் வாய் கண் மூக்கு எனச் செய்புட்கேற்ப மெய்யை முற்கூறுதலின் அம்முறைபற்றி ஈண்டுச் 'செவியாதி' என்னாது 'மெய்யாதி' என்றார். அவற்றிறுமிகூடிய இருபத்தைந்தாவன அவ்விந்திரியம் பத்துக்கும் விடயமாகிய வசனாதி சத்தாதி பத்தும், அவற்றினுக்கு உட்கருவியாகிய அந்தக்கரணங்களுன்கும், அவற்றொடு கூடி அவத்தையுறுவதாகிய புருடனொன்றும், அஃது அவத்தையுறுதற்குரிய மலமுதைக்கேதுவாய் அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணாதிவாயுக்கள் பத்துமென இவை, ஈண்டுச் சத்தாதியென்றது வசனாதிபோலும்விடயங்களை எனக்கொள்க. எனவே, பூதங்களின் கூறுய் அவற்றுடனின்று தேராழிக்குத் தேருறுப்புப்போல இந்திரியங்களின் றொழிற்பாட்டுக்கு மலமுதையை விளைத்து நிற்பனவாய புறக்கருவி அறுபதில் ஈண்டுக் கூறிப்போந்த விடயங்கள் பத்தும் வாயுக்கள் பத்தும் ஒழித்தொழிந்த புறக்கருவிகள் காற்பதும், அவற்றையுடைய பூதங்களைந்தும், அவற்றிற்கு வலியாய் உடனிற்பனவாய சூக்குமபூதமெனப்படுகின் தன்மாத்திரைகளைந்தும் என்னும் ஐம்பதுகருவிகளுங் கீழ்நோக்கிய சாக்கிரத்தானத்தில் தமது சத்திமடங்கி விணைக்கீடாகத் தொழிற்படாதொழியும் எனவும், அவை யொழிந்தவழி அவத்தைக்கேதுவாய் நின்ற வினைப் பொறிமுதலிய முப்பத்து நான்கும் அவற்றொடு கூடிய புருடதத்துவமும் இருவகைப் பூதங்களானும் புறக்கருவிகளானுங் தரப்படும் மலமுதையின்மையின் ஆண்டுப் பொறிகளின் றொழிற்பாடு மெத்தென நிகழுமெனவுங் கொள்க. கலாதிகளுஞ் சுத்தாதத்துவமும் அவத்தைக் கேதுவாகாமையான் உடனெண்ணாயினர். வினையமும் விரிந்தநூல்களுட் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க.

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

*எ—து. உ—ம். எ—னின். அங்ஙனம் அதீதத்தையெய்திய புருடன் மீளப் பிரேரகவவத்தையாகிய உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்படுமாறு அநுவாதமுகத்தான் விளக்கி அவ்விடத்தினும் முறைமையிற் செலுத்தும் * பிரேரகக்கருவிகளைந்தின் றொழிற்பாடுபற்றி ஐந்தவத்தை நிகழுமென்பது உம் அவை இவையென்பதுஉஞ் சுத்தாவத்தையும் இவைபோலுண்டென்பதுஉங் கூறி அதனை வலியுறுத்துகின்றதுலிற்று.*

இ - ள். இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம். எ—து. இலாடத்தானத்தினீங்கி ஆண்டாண்டவத்தைப்பட்டுக் கீழ்ப்போந்து மூலாதாரத்தினையடியின் மறித்தும் அவ்வாறே ஆண்டாண்டவத்தைப்பட்டு மேற்சென்று இலாடத்தானத்தின் உணர்த்துமுறைமைச் சாக்கிரத்தைத் தலைப்பட்ட புரு

* பிரேரகக்கருவிகளைந்தாவன:-சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தை என்பன.

டன்,—இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும். எ—து. ஆண்டுஞ் சாக்கிரச்சாக்கிரமுதலிய ஐந்தவத்தையுமும்:—இலாடத்தே அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டு. எ—து. அவையாவன அவ்விலாடத்தானத்தின்கண்ணே அவ்வப்பொறிகளான் அவ்வவ்விடயங்களே யுணர்ந்து,—அதுவே. எ—து. அப்போதப்போதே,—அவ்வவற்றின் நீங்கல். எ—து. அவ்வவ்விடயங்களின் நீங்குதலாம்.—அது ஆங்கு. எ—து. இனி முன்னர்க் கூறப்படுஞ் சுத்தாவத்தையும் இவைபோல ஐவகைப்படும். எ - று.

மேற்செல்வழி ஆண்டாண்டுப் படுமவத்தைகளுங் கீழ்ச்செல்வுழிப்போலன்றி விசேட மின்மையின் வருந்தோதாது 'இலாடத்தே சாக்கிரத்தையெய்திய வள்ளம்' என அநுவாதமுகத்தாற் கூறியொழிந்தார்.

இழியுங்காலும் ஏறுங்காலுங் கண்டத்தானத்திற் கலக்காண்ட லுண்டென்பது முறையே * ஞானமிரத்திலும் † போற்றிப்பஃ றொடையினுங் காண்க.

அவ்வவ விந்திரியம் ஆண்டாண்டு விடயித்தற்குரிய இந்திரியம்.

அவ்வவ்விடயம் ஆண்டாண்டுப் புலனுதற்குரிய விடயம்.

கண்டு நீங்கலென வியையும்.

அது அவ்வக்காலம். ஈண்டும் அதிக்கிக்கூறிக்கொள்க.

கண்ணுருபு தொகுத்து ஏகாரம் விரித்தார்.

கண்டதென ஒருமொழியாகவைத்து உரைப்பாருமுளர்; குற்றியலுகரத்தின்முன் உடம்படுமெய் பெறுதற்கு ஒத்திலாமையானும் பொருட்சிறப்பின்மையானும் அஃதுரையன்மை யறிக.

அப்போதப்போதே நீங்கலாவது விடயங்களைக் கண்டகண்டபொழுதே அவற்றை அயர்த்துவிடுதல். ‡ "ஒன்றன்பாலும் வருபயன் மாறி மாறி வந்திடும்" என வழிநூலாகிரியர் கூறியதும் இவ்வியல்பு நோக்கி யென்க. ¶ "காரணத்தன்னிற் செயலுறுங் கண்டு கொண்மே" § "உந்திடுங் காரணந்தன்னிற் செயலுறு முணர்ந்து கொள்மே" என்பனவுமது. இந்நுட்ப முணர்ந்து கோடற்குத் தூலாருந்ததிநியாயம்பற்றிக் o கைப்பொருளே வீழ்த்தித் தெளிதன் முதலிய தூலத்துள் வைத்துக்காட்டுப.

இனி அரூபசொரூபியாய் நிற்புழிப்படும் ஐந்தவத்தையினியல்பு கூறுதற்கு எடுத்துக்கொண்ட இவ்வதிகரணத்தின் அருமைஞுடையேயில்லாத சுத்தத்தின்கட்படும் ஐந்தவத்தை கூறுதற்கு ஓரியை பில்லையாயினும் அவத்தையெனப்படுவன ஈண்டோதியன மாத்திரையே போலுமென மயங்காமைப்

---

* கூ. கால்கொடுத்து சo ம் அடியிற் காண்க. † கூகூ ம் அடியிற் காண்க. ‡ சிவஞானசித்தி, இரண்டாஞ் சூத்திரம். கூச. ஒருபுலனுகரு. ¶ நான்காஞ் சூத்திரம். கூடு. அறிதரு. § கூசு. ஐந்து.

o இதனை, "விரும்பு மரும்பொருளே வீழ்த்து மயங்கு—விரிந்த வனிலன் பெறுகை-வருந்தறிவு—தோன்றுத லேயம் விழுந்தவிடந் தோன்றுதலென்—றன்றவைந்துஞ் சாக்கிரத்தி னும்." என்பதனுணர்க.

பொருட்டு வேறுமைந்தவத்தையுள அவை முன்னர்க் கூறப்படுமென்னுந் துணியே கூறுவார் 'அதுவாங்கு' என்றெழிந்தார். இக்கருத்தே பற்றி *"பிறிவிலா ஞானத்தோரும் பிறப்பற வருளா லாங்கே—குறியொடு மைந்தவத்தை கூடுவர் வீடு கூட" என்றெழிந்தார் வழிநூலாசிரியரும்.

இவ்விரண்டு வெண்பாக்களானுங் கூறிப்போந்த முத்திறத்தைந்தவத் தைகட்கு முறையே மூலமாய கேவலஞ் சகலஞ் சுத்த மென்ற மூன்றனு ள்வைத்துத் †"தன்னுண்மை" யெனப்படுங் கேவலத்தினியல்பு 'சகசமலத் ராது' என்பதனானே பெற்றும். ஏனைச் சகலத்தினியல்பு வருகின்றசூத்திரத் தினுஞ் சுத்தத்தினியல்பு அப்பாலைச்சூத்திரத்தினும் பெறுதும்.

மூன்றுமதிகரண முடிந்தது.

நான்காஞ்சூத்திர முடிந்தது.

ஐந்தாஞ் சூத்திரம்.

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

எ–து. சூ–ம். எ–னின். இவ்வான்மாக்களிடத்துத் தமது முதலுபகார முணர்த்துதலுதலிற்று.

எ–து. க–ரை. எ–னின். சூத்திரக் கருத்துணர்த்துதலுதலிற்று.

இ - ள். ஐந்தவத்தைப்படும்வழிக் கருவியும் உயிரும் அமைச்சும் அரசு மேய்ப்ப நிற்பின் அவையே அமையுமாகலான் முதல்வனுல் ஆண்டைக் காகற் பாலதொரு பயனில்லேபோலும் என்னுங் கடாவை ஆசங்கித்து ஆண்டும் இன்றியமையாது வேண்டப்படுவதாய முதல்வனுடைய உதவியை அறிவிக்கு முகத்தானே இரண்டாஞ் சூத்திரத்தினுதிய துணைக்காரண முதற்காரணங் களது இலக்கண முணர்த்துதல் இவ்வைந்தாஞ் சூத்திரத்தின் கருத்து. எ - று.

இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அதனுளடங்குக ளிற் றமதுமுதலுபகாரமெனப்படுந் திரோதானசத்தியது இலக்கணங் கூற வே அவற்றது இலக்கணமுங் கூறியவாறுதலறிக.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரங்களின் அங்க னங் கூறிப்போந்த உயிரானே மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன தந்

* சிவஞானசித்தி, சூ–ம் சூ. உடு. அறிதரு. † மேற்படி சூத்திரம். உஎ கேவல.

தம் விடயங்களே இஃது இன்னதென்று அளவிட்டறிந்தும் அங்ஙனமறியுந் தம்மையுந் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறிய மாட்டா; அவ்விந்திரியங்கள்போல், உயிர்களுந் தமதறிவிற்கு *வியஞ்சகமாகிய முதல்வனது சிற்சத்தியான் மேற் கூறிப்போந்த இருவகை யஞ்சவத்தையினின்று விஞ்ஞப்பயன்களே யறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்தி நிற்குந் திருவருளையும் அறியமாட்டா; உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் சந்நிதிமாத்திரையின் வலித்துக்கொள்ளப்படுமாறுபோலக் காரணத்தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கும் முதல்வன்சந்நிதிமாத்திரையினும் ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்று. எ-று.

ஆகலான் அதுபற்றி முதல்வன் விகாரியாதலின்றுஎன்பது குறிப்பெச்சம்.

செவியென்பது † சொல்லெச்சம்.

ஈம்பொறிகளைக் கூறியது உபலக்கணமாகலின் ஏனைக்கருவிகளும் அவ்வாறுதல் கொள்ளப்படும். அற்றுகலினன்றே ‡ ''பொறிபுலன் காரணமெல்லாம் புருடனு லறிந்து'' என்றார் வழிநூலாசிரியரும்.

விடயங்களே யறிவுழி முதல்வன் உடனின்று செலுத்துவனுயின் அவ்விடயங்களோ டொப்ப முதல்வனையும் அறிதல்வேண்டும் என்பாரை நோக்கி, 'அளந்தறிந்து' என்றெழியாது 'அறியா' என்றார்.

ஆங்கவை ஒருசொன்னீர்மைத்து. 'தம்முணர்வின்றாமி' என்றது தமது முதலென்னும் பொருள்பட வந்த ஆறாம்வேற்றுமைத் தொகை.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலால் திரோதானசத்தியின்மேனின்றது. அருளாலென விரித்து 'அளந்தறிந்தறியா' என உவமைக்கோடிய வினையைப் பொருளினுங் கூட்டியுரைக்க.

இதனுள் விளம்பிய வுள்ளத்து மெய் வாய் கண்முக் களந்தறிந்தறியா என்றது ஓதிகரணம்; ஆங்கவைபோலத் தாந்தமுணர்வின் றாமியருள் காந்தங் கண்ட பசாசத்தவையே என்றது ஓதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

மூதலதிகரணம்.

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணரு மென்றது.

எ-து. மேல். எனின். தாமரையிலையி னீர்போற் புருடன் பற்றற்று நிற்பப் புருடன் சந்நிதியிற் புத்திதந்துவமே ஈம்பொறிவழியான் விடயங்களை அறியுமெனவமையும் அவ்வாறன்றிக் கருவிகளோடு கூடிப் புருடனே அவத்தைப்படுமெனை ¶ மேற்கூறிய தமையுமா றெவ்வினையெனச் சாங்கியநூலார்மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ-டை.

* வியஞ்சகம்-விளக்குவது. † சொல்லெச்சம் ஒருசொல்லெஞ்சி நிற்பது. ‡ சிவஞானசித்தி, சூ-ம். சூ. க. ¶ இந்தூல் சு-ம் சூ. கூ-ம் அதிகரணத்திற்காண்க.

உணர்விற் கேதுவாகிய பொறிகளே உணர்வென்று உபசரித்தார்.

அவற்றினுன் ஆன்மா வொற்றித்துக் காணினல்லது அவை ஒன்றையும் விடயியாவாகலான்.

எ–து. ஏது. எ–னின். அதற்குப் பிரமாணமென்னை *என்பாரை நோக்கி மேற்கோளேச் சாதித்தனுதலிற்று.

இ - ள். அவ்வைம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந்தா லன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டா வாகலான் 'ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவாலுணரும்' என மேற்கொண்டது. எ - று.

†ஆன் உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது.

உம்மை இழிவுசிறப்பு; முற்றுமாம்.

எதிர்மறைமுகத்தாற் கூறினர் இன்றியமையாமை விளக்குதற்கு.

ஐம்பொறியை யாண்டங் கரசா யுளநிற்ப
வைம்பொறிக ளுள்ள மறியாவா—மைம்பொறியிற்
காணுதேற் காணுது காணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி.

எ–து. உம்ம். எ–னின். உயிர் அங்ஙன மொற்றுமைப்பட்டுநின்று செலுத்துதலும் அவை உயிரையின்றி அமையாமையும் எற்முற்பெறுதும் ‡ என்பாரைநோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். அரசு ¶ஆப். எ–து. அரசன் அத்தாணிமண்டபத்தின் வைகித் தன்கீழ்க் கருமஞ்செய்வாரை அவரவர்க்குரிய காரியங்களிற் செலுத்தி ஆளுமாறுபோல,—உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப. எ - து. உயிர் ஐம்பொறிகளே அவ்வவற்றிற்குரிய விடயங்களிற் செலுத்தி ஆண்டு இலாடத்தானத்தில் நிற்றலான்,—ஐம்பொறிகள் உள்ளம் அறியா ஆம். எ–து. அரசனுலேவப்பட்டோர் ஏவிய கருமமாத்திரையினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரை யறியமாட்டாவாயின. அற்றேல், ஐம்பொறிகள் உயிரானன்றி யறிதல் அமையாதாயினும் உயிர் ஐம்பொறிகளானன்றியும் அறிதலமையும்போலுமெனின்,—ஐம்பொறியில் காணுதேல் காணுது காணும் உளம் காணுதேல் காணு கண் கேளா செவி. எ–து. ஒரு கருமஞ் செய்தற்கண் அரசரும் அமைச்சர் முதலாயினுருந் தம்முள் இன்றியமையாதவாறுபோல ஒன்றனே விடயித்தற்கண் உயிரும் ஐம்பொறிகளுந் தம்முள் இன்றியமையா. எ - று.

அன்னவாதல் உயிர் ஐம்பொறியினீங்கிச் சொப்பனத்தானத்தினெய் தியவழிக் கண்டுகொள்க.

---

* சாங்கியர். † "தூங்குகையா னேங்கு நடையு" என்புழிப்போல. ‡ சாங்கியர். ¶ ஆக்கம் ஈண்டு உவமைப்பொருள் குறித்துநின்றது. "ஆள்வா ரிலிமா டாவேனே" என்புழிப்போல.

நிற்ப என்னுஞ் செயவெனெச்சம் "மழைபெய்யக் குளநிறைந்தது" என் புழிப்போல நிற்றலாலெனக் காரணப்பொருட்டாய் நின்றது. இவ்வாறுரை யாக்கால் இஃது எதுவின் பொருள் வலியுறுப்பதாய உதாரணமாதற் கேலா மையறிக.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இதுவுந் தமது முதலாலே யுணருமென்றது.

எ–து. மே–ள். எ–னின். கருவி சடமாகலிற் சித்தாகிய உயிரானன்றி அமையா ஆயினுஞ் சித்தாகிய உயிர் முதல்வனது உபகாரத்தை அவாய்நிற்ப தன்று, அவாவுமாயின் முதல்வனும் அவ்வாறே பிறிதொன்றனுபகாரத்தை அவாவுமெனப்பட்டு மேலும் வரம்பின்றியோடும் என ஈசுரவவிகாரவாதி முதலியோர் கூறுங்கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் பிற்கூற்றைக் கண் ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ-ள். வெ–டை.

தமது முதலென்பது "யான் எம்மூர் புகுவன் நீ நும்மூர் புகுவை" என் புழிப்போல வேறுமுடிபு கோடலிற் பால்வழுவன்மை யுணர்க.

உம்மை இறந்ததுதழீஇயவெச்சம்.

*இம்முறைமை தமக்கொரு முதலுடையவற்றிற்கேயன்றி ஏனைப்பொரு ட்கு இன்மையின் வரம்பின்றியோடுமாறு இல்லை என்பார், 'தமதுமுதல்' என்று † உடம்பொடுபுணர்த்தோதினார். 'தம்முணர்வின்றமி' என்றதுமது.

தத்துவங்களும் உயிருந் தமக்கொரு முதலுடையனவாதலும் முதல்வ னுக்கு அஃதின்மையும் ‡ மேற்கூறிப்போந்த சூத்திரங்களாற் பெறப்பட்டன என்பது கருத்து.

இவ்வான்மாத் தன்னுலே யுணரு மிந்திரியங்களைப்போ லத் தானுந் ¶ தன்னை யுணராது நிற்றலான்.

எ–து. எது. எ–னின். உயிர் ஐம்பொறியிற் சடமன்மையான் அவற்றை யெடுத்துக் காட்டி மேற்கோடல், ஈண்டைக் கமையாது §என்பாரை நோக்கி அதனைச் சாதித்தனுதலிற்று. இ–ள். வெ–டை.

---

* இம்முறைமை–உணர்த்த உணரும் முறைமை. † உடம்பொடுபுணர்த்தல் ஒரு த்தி; அது கருத்துடையடைபோல ஒன்று கூறும்போது வேருெருபொருளையும் அதன் பாற் புணர்த்தி வைத்தல். ‡ மேற்கூறிப்போந்த சூத்திரங்கள்:–'எங்குமுள னென்ற ளவை' 'அவனவளதுவெனுமவை' என்பனவற்றை முதலாகவுடைய சூத்திரங்கள். அவ ற்றுற் பெறப்படல் 'அவையுடைமை யாளாநா மங்கு' 'அந்தமாதி' என்பனவற்றுட்கா ண்க. வெண்பாவும் சூத்திரம் எனப்படும். அது தொல்காப்பியத்திற் பொருளதிகாரத் துட் செய்யுளியலிற் காண்க. ¶ தன்னை யுணராது என்பதற்குத் தன்னையுந் தன்முதல் வனையுமுணராது எனப் பொருள் கொள்ளப்படும். தன் ஐ–தன்முதல்வன். § ஈசுரவவி காரவாதிகள்.

சடமுஞ் சேதனமுமாய வேறுபாடுபற்றித் தம்முள் ஒவ்வாவாயினுந் தம்மையுந் தமது முதலையும் அறியமாட்டாமைக்கண் ஊமபொறியும் உயிருந் தம்முள் ஒக்குமாகலின், அதுபற்றி அங்ஙனம் மேற்கோட லமையுமென்பது கருத்து.

மன்னுசிவன் சந்நிதியின் * மற்றுலகஞ் சேட்டித்த
தென்னு மறையி னியன்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு வுளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்கா
ணெண்ணுன் சிவனசத்தை யின்று.

எ—து. உ—ம். எ—னின். தன்னுடனுணரும் இந்திரியங்களை ஈண்டைக்கு உவமை கூறின் அவ்விந்திரியங்கட்கு வரும்பயன் அவற்றினுலொற்றித்துக்காணும் உயிர்க்காயவாறுபோல உயிர்க்குவரும் இன்பத்துன்பப்பயனும் உயிராலுறுத்துக் காணும் முதல்வனுக் காதல்வேண்டும் †என்பாரை நோக்கி அங்ஙனமாகாமை கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். மன்னு சிவன் சந்நிதியின் உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய். எ—து. ‡ஈண்டுக் கூறிய கருதலளவையேயன்றி நிலை பெற்ற முதல்வனது சந்நிதியிற் பிரபஞ்சஞ் செயற்படுகின்றதென்று ஓதும் வேதப்பொருளையும் அறியாது பிணங்குகின்ற பேதாய்,—உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண். எ—து. உயிராவது (தமக்கெனவோர் காரணமின்றித் தன்பொருட்டே அறிவனவாய அவ்விந்திரியங்கள்போலன்றி) அவ்வேதத்துள் ஓதித்தோதப்படும் முதல்வன் தனக்குக் காட்டாகிநிற்பத் தான்செய்த வினைக்கீடாக ஒன்றனையறிந்து நிற்கும், இவ் ¶ வேறுபாடு அறிவாயாக.—இன்று (ஆகலாற்) சிவன் அசத்தை எண்ணுன். எ—து. அங்ஙனங் காட்டாகி நிற்பினுந் தனது சந்நிதியின் அசத்தெல்லாஞ் சூனியமாகலான் மங்கலவடிவினனுய முதல்வன் அவ்வயிர்போல் அவற்றை அநுபவியான். எ - று.

இதனுட் சிவனென்றது 'மன்னுசிவன்' என்புழிப் பேரின்பத்துக்குக் காரணனென்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; 'சொன்னசிவன்' என்புழி முற்றுணர்வினனென்னும் பொருட்டாய்க் காட்டாதற்குரிய இயைபுணரநின்றது; 'எண்ணுன் சிவன்' என்புழித் தூயதன்மையனென்னும் பொருட்டாய் அசத்தை எண்ணுமைக்குரிய இயைபுணரநின்றது. ஆகலாற் கூறியதுகூறலன்மையுணர்க. அஃது அம்முப்பொருளுடைத்தென்பது சோமசம்புபத்ததி வியாக்கியான முதலிய வற்றுட் காண்க. §சிவதத்துவவிவேகத்துள் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையேயாமாறு கண்டுகொள்க.

---

* மற்று அசை. † ஈசுரவவிகாரவாதிகள். ‡ ஈண்டு—இவ்வதிகரணத்தில். ¶ ஐம்பொறிகள் ஆன்மாவின்பொருட்டு உணர்வன, தம்பொருட்டு உணர்வனவல்ல. ஆன்மாக்கள் தம்பொருட்டே உணர்வன, முதல்வன்பொருட்டு உணர்வனவல்ல. இவையேவேறுபாடு. § சிவதத்துவ விவேகம் கடவுள்வாழ்த்து யஸ்யாஹ ராமவிஷ் வரிவஶ

ஈண்டு உலகம் என்றது உயிர்களை.

மறையின் இயலும்பொருளை மறையின் இயலென்று உபசரித்தார்.

இறந்ததுதழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

மறந்தாய் என்பது விளியுருபேற்றபெயர்.

ஈண்டுச் சந்நிதி என்றது அவிகாரவாதிகள் கூறும் அபிமுகமாத்திரை யன்றென்பார் 'சொன்னசிவன் கண்ணு' வென்றார். சிவசத்தி அவ்வக்காரியங்க ளின் *உன்முகமாதலாகிய சங்கற்பமே ஈண்டுச் சந்நிதி எனப்படும் என்பதாம்.

'காந்தங்கண்ட பசாசத்தவையே' என்றது ஒருபுடையுவமையாதல்பற் றியே பிறிதன்றென்பது கருத்து.

வினையாலென்றது ஐம்பொறிபோலன்றி உணர்தற்பயன் உயிர்க்கேயா தற்கேதுக் காட்டியவாறு.

கண்டறிதல் ஒருபொருட்பன்மொழி.

எண்ணல் ஈண்டநுபவித்தன்மேற்று.

இன்றென்பது சாதியொருமை.

அவனெதிர் என்பது அவாய்நிலையாய் வந்தது.

ஆகலானென்பது சொல்லெச்சம். இன்றுதல் †"யாவையுஞ் சூனியஞ் சத் தெதிர்" என்புழிப் பெறப்படும். இக்கருத்தேதபற்றி ‡ "மாயை மருவிடான் சிவனவன்க—ணுறைதரா தசேத னத்தால்" என்றார் வழிநூலாசிரியரும். ¶"உன்னுதரத் தேகிடந்த கீட முறுவதெல்லா—முன்னுடைய தென்னுயிரீ யுற்றனையோ—மன்னுயிர்க—ளவ்வகையே காணிங் கழிவதுவு மாவதுவுஞ்—செவ்வகையே நின்றசிவன் பால்." என்றதும் இவ்வியல்பு நோக்கி.

ணஃஸ்ரெ ரஂஸ்ரெ கிய தூவி நிவிஷ்ட ஏக்ஂ வ்ரஷ்ஃ|கஸ்ரெ கதோ ரஂவிஹாவ்ரை கஃநாய நாராயணீ வஹ்ரயாய நஃஸிவாய॥ சூக ணஃக்ரஷ்ட யநஂராஹித ஸொஹநாஷ்ஃ சூராந்நீக்ஷ்ய ஏதஂ கஂவித வ்யஃவ்ய|ஸஂஹாஃ வஸோயி வ்ஸ்யை விகவஸ கூர்ஸாநஂ ஜ்ரூராகஸ்ரவ ஜிஷ்ணு நயநஂ ஸ்ரராதி॥ ஸ்ரீகூஹ ஒஂஹிணொவசிநூ்ஂ கவ நஷ்ஸ்ரெ ந நஃநூஏயஃ வ்ராவீ நா ஸஂரவொவி யவ்ய கஂணாஸ்ரெஸாக மதா ஸௌரவஂ|கஂவவ-ழாதிஸஂரஂ ஏஸ்ரநாஜ்ர வவஂஷ்ட ஏஃவ்ஸிதாஸஂக்ரதிஂ ஸிநூ்ஏ்ராக்ரத ஏஂ ஏ்ரவாணி நஸிநஂ ஸிஸ்தி ஸிவஂ கஂஏ்ழுஹ॥ எனவ

ரும் சுலோகங்களால் மூவகைப்படுத்தோதிய பொருளும் இவையேயாமாறு உணர்க.

* உன்முகம்—எழுச்சி. † இந்நூல் எழாஞ்சூத்திரம். ‡ சிவஞானசித்தி, ஙூம். சூ. சூ. இறைவன்றன். ¶ திருக்களிற்றுப்படியார். அஎ.

வெய்யோ ளொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனே யாகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டுடனுப் மன்னுதலைக் காண்.

எ—து. உ—ம். எ—னின். உயிர் அங்ஙனமுணர்த்த வுணருங்கால் முதல்வனின் வேறுகின்றுணருமோ ஒன்றுய்நின்றே உணருமோ *என்பாரை நோக்கி அவ்விரண்டியல்புமின்றிநின்றுணருமாறுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ - ள். வெய்யோன் ஒளியில் ஒடுங்கி.எ—து.ஞாயிற்றினொளியினடங்கி,—விளங்காது. எ—து. அதனின் வேறுய் விளங்கித் தோன்றுதலின்றி,—வெய்யோன் ஆகாத மீன் போல. எ—து. அதுவாயொழிதலுமில்லாத நாண்மீன்கள் அஞ்ஞாயிற்றினே ஒளியுடையவாமாறுபோல,—கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு. எ—து. கண்டுங் கேட்டுங் உண்டும் உயிர்த்துந் தீண்டியும் அறியப்படும் ஐவகைவிடயங்களையும் உயிர் மெய்ப்பொருளாகிய முதல்வனுல் உணர்ந்து,—உடனுப் மன்னுதலைக் காண். எ—து. வேறுதலும் ஒன்றுதலுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் அடங்கி உடனுப் நிலைபெறுதலை அறிவாயாக. எ - று.

†உவமையடை பொருளினும், பொருள்வினை உவமையினுஞ் சென்றியையும். ஐ சாரியை.

நாண்மீன் முதலியவற்றின் ஒளியெல்லாம் ஞாயிற்றினுடைய ஒளியேயென்பது வேதாந்தாற்றுணிபாகலான் அஃதீண்டைக்கு உவமையாயிற்று.

உயிரென்னும் எழுவாய் பேலிவெண்பாவினின்றும் வருவித்துரைக்கப்பட்டது.

அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணுர் கண்ணுக்
கிரவிபோ னிற்குமர னேய்ந்து.

எ—து. உ—ம். எ—னின். அங்ஙனமாயினும் உயிர்கட்குப் பலவேறுவகைப்பட உணர்வு நிகழ்தலின் அஃது உணர்த்துதல்வேறுபாட்டானுமதனல்வேண்டும்; வேண்டலே, நிருவிகாரியென்னுஞ் சுருதியோடு முரணி முதல்வன்

* ஈசுரவிகாரவாதிகள். † உவமை நாண்மீன்; அதனடை, ஞாயிற்றின் ஒளியின் அடங்கி அதனின் வேறுய்விளங்கித்தோன்றுதலின்றி அதுவாயொழிதலு மில்லாமை. அது சிவசத்தியினடங்கி அதனின் வேறுய்விளங்கித்தோன்றுதலின்றி அதுவாய் ஒழிதலுமில்லாத உயிர் எனப் பொருளின்கட் சென்றியையும். பொருள் உயிர்; அதன்வினை முதல்வனுல் உணர்தல்; அது ஞாயிற்றினொளியையுடைத்தாதல் என உவமைக்கட் சென்றியையும். பொருள்-உவமேயம். ஆகாத என்பது வினையாயினும் அது மீன்வினையன்றுதலின் உவமைவினை என்னுது உவமையடை எனப்பட்டது.

விகாரியாவான் செல்லும் *என்பாரை நோக்கி விகாரியாகாமை யுணர்த்தி அதனை வலியுறுத்ததனுதலிற்று.

இ-ள். அருள் ஈசற்கு அன்மே உண்டாம். எ-து. உயிர்கட்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதற்கனுளதாகிய இரக்கம் முதல்வனுக்கு அநாதியேயுள்ளது.—அது சத்தி. எ-து. அவ்விரக்கம் வேறுபொருளன்று முதல்வனுக்குளதாகிய சத்தியேயாம்;—அருளும் அவன் அன்றி இல்லை அவன் அருள் இன்று இல்லை. எ-து. †இரக்கமும் அவனுங் குணமுங் குணியுமாகலின் அவ்வருளு முதல்வனையின்றி அமையாது முதல்வனும் அதனையின்றி அமையானுய்,—அருட்கண்ணுர் கண்ணுக்கு இரவி போல் ஏய்ந்து நிற்கும் அரன். எ-து. ஞானக்கண்ணுடையா ருணர்விற்கு ஞாயிறு தன்னொளியோடு தாதான்மியமாயியைந்து நிற்குமாறுபோல அவ்வருளோடு தாதான்மியமாயியைந்துநிற்பன் முதல்வன்; ஆகலாற் றன்வயத்தனுகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்திசங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடும். எ-று.

ஆகலாற் றன்வயத்தனுகிய அம்முதல்வன் விகாரமின்றிநின்றே தனது சத்திசங்கற்பமாத்திரையான் அனைத்துஞ் செய்தல் கூடுமென்பது குறிப்பெச்சம்.

உம்மை எதிரதுதழீஇயது.

இன்றி என்னும் வினையெச்சக்குறிப்பினிகரஞ் செய்யுளாகலின் உகரமாய்த் திரிந்தது. அன்மே அசை.

இவ்வியல்பு சித்தாந்தநெறி யுணர்ந்தார்க்கன்றி விளங்காதென்பார் அருட்கண்ணுர் கண்ணுக்கு என்றார்.

சத்தியதுண்மையும் அதனியல்பும் ‡'நீக்கமின்றி நிற்குமன்றே' என்பதனுள்வருத்துரைத்தமையின் ஆண்டுக் காண்க.

இரண்டாமதிகரண முடிந்தது.

ஐந்தாஞ்சூத்திர முடிந்தது.

---

* ஈசரவிகாரவாதிகள். * இரக்கமாகிய அருளும் இறைவனும் குணமும் குணியுமாதலை ம-ணஷஷ-தாவஸாஸகி ஷூஷாஸ்ய ம-ணீ ஸிவ3¦ என்னும் காலோத்தராகம சுலோகத்தானுமுணர்க. ‡ இந்நூல் உ-ம் சூ.

ஆறுஞ்சூத்திரம்.

இனி, ஆசிரியர் ஆறுஞ்சூத்திரத்திற்கு வார்த்திகப்பொழிப்புரைப்பான் புகுந்து சூத்திரத்தை மொழிபெயர்த்தருளிச் செய்கின்றார்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

எனவரும்.

பாடத்தை மொழிபெயர்த்துக்கொண்டென்பது சூத்திரம் எனக்காட்டி. இனி, அதன் கருத்துரைக்கின்றார்.

எ–து. சூ–ம். எ–னின் சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்துதனு தலிற்று எனவரும்.

மேலைச் சூத்திரத்தில் ஐம்பொறிகள் ஆன்மாவால் அளந்தறிந் தறியாத வாறுபோலத், 'தாந்தமுணர்வின்றமியரு'ளான் அளந்தறிந்தும் அங்ஙனம் அறிவிக்கும் முதல்வனையும் தம்மையும் அறியமாட்டா என்றது பற்றி, (அற் றேல்)முதல்வன் எவ்வாற்றானும் அறியப்படாத பொருளோ என்று ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை நீக்கி, இலக்கணமோத்துட் கூறுதற்கு எஞ்சி நின்ற பதிப்பொருளதிலக்கணம் பாரிசேடவளவையானுணர்த்து முகத்தானே,மேற் பொதுவியல்பாற் கூறிப்போந்த ஆன்மாவிற்குச் சிறப்பியல்பு பாரிசேடவள வையான் வருஞ் சூத்திரத்தின் விளக்குதற்பொருட்டு அவ்வான்மாவின் வேறுகிய சத்தினையும், அசத்தினையும் இலக்கணத்தாற் றம்முள் மயங்காத வாறு வரைந்துவைத்துணர்த்தி உண்மையதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய் தல் இவ்வோத்தின் மூன்றும்பாதமாகிய ஆறுஞ்சூத்திரத்தின் கருத்தென்க.

ஆசங்கைபற்றிய இயைபான் அதிகரணவியைபு பெறப்பட்டது. மேலை ச்சூத்திரங்களிற் கேவலசகலங்களினியல்பு முறையே விளக்கி ஈண்டுச் சுத்த த்தினியல்பு விளக்குதல் முறைமைபற்றிய இயைபாகலான் அதனானே பாத வியைபு பெறப்பட்டது. பிரமாணமோத்துட் கூறிய பொருள்களுள் ஏனைப் பொருள்களுக்கு இலக்கணங் கூறி எஞ்சிநின்ற பதிப்பொருளுக்கு இலக்கணங் கூறுதல் அவாய்நிலைபற்றிய இயைபாகலான் அதனானே ஒத்தியைபு பெறப் பட்டது.

பதிப்பொருளுக்குப் பொதுவியல்பு மேற்பெறப்பட்டமையின் ஈண்டுக் கூறும் இலக்கணஞ் சிறப்பியல்பெனக்கொள்க. அற்றுகலினன்றே, இதனை முதற்கட் கூறுது உண்மையதிகாரத்தைச் சாரவைத்து இறுதிக்கட் கூறிய தூஉமென்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. 'தம்முணர்வின்றமி' ஆகிய முதற் பொருள் அளவைகளான் அறியப்படு மியல்பிற்றெனின்; அங்ஙனம் அறிய ப்படும் பிரபஞ்சம்போல அழிபொருளாகிய அசத்தாம்: எவ்வாற்றானும் அறி

யப்படாத இயல்பிற்றெனின், அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு ஆமைம யிர்க்கம்பலம் போலச் சூனியமாம்: ஆகலான், இவ்விரண்டு கூறுபாடுமன்றி ஒருவாற்றான் அறியப்படாமையும் ஒருவாற்றான் அறியப்படுதலும் என்னும் இரண்டு வகையானுஞ் சிவமாகிய சத்தாயுள்ளதெனக் கூறுவர் மெய்யுணர்வி னிலேபெற்றுயர்ந்தோர். எ - று.

உணருரு எனின் அசத்து என மாறுக. எனின் என்பதனை உணராதெ ன்பதனோடுங் கூட்டி உரைக்க. இன்மையின்–இல்லையாகலானென்க. முற்றும் மைகள் தொக்கன. அல்லதென்பது வினையெச்சக்குறிப்புமுற்று. அன்றி ஆம் எனக்கூட்டுக. ஒருவாற்றான் அறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமை. ஒருவாற்றான் அறியப்படுதல் சிவஞானம் ஒன்றனே அறி யப்படுதல். இரண்டுவகையிற் சிவசத்தாமென இசைக்கும் எனக் கொண்டு கூட்டுக. பாசஞான பசுஞானங்களா னறியப்படாமையிற் சிவமாதலும், பதி ஞானத்தா னறியப்படுதலிற் சத்தாதலும் பெற்றுமென்பார் 'இரண்டுவகை யிற் சிவசத்தாம்' என்றார். சிவசத்து என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வடநூன் முடிபு. சடமாகிய சத்தின் நீக்குதற்குச் சிவசத்தென்றார். சிவசத்தென்பது சித்துச்சத்தென்னும் பொருட்டு. உலகென்றது உயர்ந்தோ ரை. எழுவாய் மேலிச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது. இரு திறனுமன்றி இரண்டுவகையானுஞ் சித்துமாய்ச் சத்துமாய்நிற்றல் முதல்வ னுக்குச் சிறப்பியல் பென்பது போந்தவாறு கண்டுகொள்க. இன்னும் முத ல்வனுக்குரிய ஏனைச் சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுள் அட ங்கும்; அஃதறிந்தடக்கிக்கொள்க.

அற்றேல், *"நின்னைக் காணு மாந்தர்–தம்மையுங் காணுந் தன்மை யோ ரே" எனவும், †"கன்னிலே தனைய றிந்தாற்–றன்னையுங் தானே காணுங் தா னது வாகி நின்றே" எனவும், ‡"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை–யாயவா ருயிரின் மேவு ¶மருளெனி லொளியாய் நிற்கும்" எனவும், §"உன்னரிய திருவருளே யொழியமல முளதென் றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே" எனவும், ०"சுடரா லிருடேடச் சொல்லார்க ளெந் தாய்–சுடரா லிருடேடச் சொன்னாய்" எனவும் ஓதியவாற்றான் வினைப் பசு பாசங்களுஞ் சிவஞானத்தானன்றி அறியப்படா என்பது போதருதலின், அவையும் அவ்விரண்டுவகையும் உடைமையாற் சிவசத்தாவான் செல்லும் பிற வெனின், செல்லா; என்னை? அவை சிறப்புவகையா னறியப்படுதல் சிவஞான மொன்றனேயன்றி ஆகாதாயினும் பொதுவகையாலே வினை ஞானங்கட்கு விடயமாதல் உண்மையின் ஒருவாற்றான் உணருருவாதற்கு இழுக்கின்மை யான் என்க.

அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்:-**"ஆன்மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு னர்ந்தோர்–தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம்"

* பட்டணத்துப்பிள்ளையார், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. கூ. மேவிய. † சிவப்பிரகாசம், உண்மை. அ-ம் சூ. உ. தன்னறி. ‡ மேற்படி. எ-ம் சூ. உ. ¶ அருளி னில் என்பதும் பாடம். § மேற்படி, பொது. உ-ம் சூ. கஅ. அங்கிய. ० சதமணிக் கோவை சுக. ** சிவஞானசித்தி. ச-ம் சூ. உ. கருவியா.

எனவும், *"காதலினு ஞண்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்." எனவும் ஒதுதலிற், பசுஞானத்தானே உண்மைசுட்டும் உணர்விற்கும் நான்பிரம மென்னும் உணர்விற்கும் ஆன்மா விடயமாதல் பெற்றும். †"வருந்தீப மெனத்தெரிந்தாங்–கொருவி" எனவும், ‡"இவைகீழ் நாடலாலே" எனவும் ஒதுதலின் ஒருவுதலுங் கீழ்நாடுதலுமாகிய அப்பசுஞானத்திற்குப் பாசம் விடயமாதல் பெற்றும். இனி, இதனை யான் அறிந்தேன் அறிகின்றிலேன் என்புழி, இது என்னுஞ் சுட்டுணர்விற்கு விடயம் புறத்தே தோன்றுங் குடமும், யான் என்னும் உணர்விற்கு விடயம் அந்தக்காரணங்களை அதிட்டிக்கும் ஆன்மாவும், அறிந்தே னென்னும் உணர்விற்கு விடயம் அவ்வான்மபோதமும், அறிகின்றிலே னென்னும் உணர்விற்கு விடயம் அறியாமையுமேயன்றி வேறின்மையின், இங்ஙனம் உணரு முணர்வு எல்லார்க்கும் ஒப்ப நிகழ்கின்றமையிற் பசுபாசங்கள் பாசஞானத்திற்கு விடயமாதல் கண்கூடாகப் பெறப்பட்டது. மெய்யுணர்வில்லாதார் உடம்பு முதலியவற்றை யானென மயக்கத்தான் மதிப்பினும், இதனையானறிந்தேன் என்புழி, யானென்னும் உணர்விற்கு விடயம் ஆன்மாவே என்பது, அநுபவந் தன்மாட்டு நிகழ்தல்பற்றி உணர்ந்துகொள்க. இருளின் கட் கயிற்றை அரவென மதித்து இது கிடக்கின்றதெனக் கூறினும் ஆண்டு இது என்னும் உணர்விற்கு விடயமாய்க் கிடந்தது கயிறேயன்றி அரவன்மை யான் யாண்டும் அவ்வாறே கண்டுகொள்க.

அற்றேல், சிவனுண்டு, சிவனில்லை எனவும் மெய்யுணர் வில்லாதார் வழங்கக் காண்டலின் சிவனும் பொதுவகையான் அவ்வாறே பாசஞானத்திற்கு விடயமாம்போலுமெனின், அற்றன்று; என்னை? குடமுண்டி குடமில்லை என்றவழிக் குடம் புத்தியிருத்தியிற் பரிணமித்துத்தோன்றி ஆன்மாவின்கண்வந்து அநுபவமாமாறுபோல, உலகத்துள்ளார் சிவனுண்டு சிவனில்லை என்றவழிச் சிவப்பொருள் அவ்வாறு பொதுவகையானுயினும் அநுபவத்தானுணரவாராமையின் இன்னோரன்னவாய் உணர்ந்து உரைப்பனவெல்லாம் பேதைப்பருவத்துப்பெண் காமநூற்பொருளை உணர்ந்துரைக்குமாறுபோல, வாசகஞானபாத்திரையேயன்றி அநுபவஞானமல்ல வாகலானென்க. அநுபவஞானத்திற்கு விடயமாவதே ஈண்டு 'உணருரு' என்றெடுத்துக்கொள்ளப்பட்டது என்றுணர்க.

அற்றேல், ஈண்டுக் கூறியவாற்றானே பசுபாசங்கள் சிறப்புவகையான் உணருரு வல்லவாயினும் பொதுவகையான் உணருருவாமாகலின், முதல்வன் போற் சிவசத்தாவான் செல்லா என்பது பெற்றும். அங்ஙன மாயினும், உணருருவெல்லாம் அசத்தென்றலின் அவையும் அசத்தாவான் செல்லும்; செல்லவே, மும்பொருளுஞ் ¶ "சத்து" என்னுஞ் சைவசித்தாந்தத்தோடு முரணி அவசித்தாந்தமாமாலோ வெனின், அறியாது கடாயினுய், சற்காரியவாதங் கூறுஞ் சைவசித்தாந்தத்திற் சத்தின்வேறாய் அசத்தென்ப தொன்றின்மையிற் பிரபஞ்சமுஞ் §சத்தியப்பொருளேயாம்என்பது மேலேகாட்டப்பட்டது. அங்ஙனமாகவும், ஒருதன்மைத்தாய் நில்லாது காரிய அவத்தையிற் றூலமாய்

* சிவஞானசித்தி. கூ-ம் சூ. உ. வேதசாத்திர. † மேற்படி. சு-ம் சூ. உ. கருவியா. ‡ மேற்படி. கூ-ம் சூ. உ. வேதசாத்திர. ¶ சத்து - உள்ளது. § சத்தியம் - உள்ளது.

விளங்கி நின்ற பிரபஞ்சம் காரண அவத்தையிற் சூக்குமமாகிய சத்திவடிவாய் விளங்காது நிற்கும் வேறுபாடுடைமை மாத்திரையேபற்றியன்றே பிரபஞ்சம் அசத்தெனப்பட்டது. அவ்வாறே, காரணவவத்தையின் விளங்காது சூக்கும மாய்நிற்குந் தத்தமியல்பினீங்கிக் காரியவவத்தையிற் றூலமாய் விளங்கி நிற் கும் வேறுபாடுமாத்திரையேபற்றிச் சத்தாகிய மாயை கன்மங்களையும், ஒளி முன் இருள்போலப் பெத்தகாலத்து மேற்பட்டு நின்ற தனது சத்தி முத்தி காலத்து மடங்கிச் சூனியம்போல் நிற்றன் மாத்திரையேபற்றிச் சத்தாகிய ஆணவமலத்தினையும், அசத்தென்றற் கிழுக்கென்னை என்க. இக்கருத்தேபற் றியன்றே * ''பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே.'' எனவும், †''பொய்ம்மாயப் பெருங்கடலுள்.'' எனவும் பிறுண்டும் இவ்வாறோதியதூஉமென்க. இஃதறி யாது, ''பொய்யாவது மெய்க்கெதிர்மறையாவதொன்று.'' என்னும் கையாயிகர் முதலியோர் மதம் அடாதென்பதூஉம் அபாவவாதத்தில் விரித்துக்காட்டி னும். ஆண்டுக்காண்க.

இனிச் சத்தாகிய ஆன்மாவும் அநாதியே தனக்குரிமையில்லாத மலத்தின் மறைப்புண்டு தனது சத்தி மடங்கிச் சூனியம்போற் கிடத்தன்மாத்திரையே பற்றி அவ்வா றசத்தாதற்கும்முத்திகாலத்தின் மறைப்பு நீங்கியவழித் தனது சத்தி விளங்கித் தனக்குரிய சிவானந்தத்தை அநுபவிக்கும் முதன்மையுடை த்தாய் மீள மலத்தின் மறைப்புண்ணுதலின்றி என்றும் ஒருதன்மைத்தாதல் பற்றிச் சந்தாதற்கும் பொதுவாய் நிற்றலிற், சதசத்தெனப்படும். ‡ ''அசத் தைச்—சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத் தாமே.'' என்றதும் இப் பொருட்டு. இதனானே, சத்தாகிய ஆன்மாவை ஒருவாற்றான் அசத்தென்ற லும் சத்தாகிய மலம் மாயை கன்மங்களை மேற்கூறியவாறுபற்றி அசத்தென் றலும் அமையுமாகலின் அவை அங்ஙனம் பொதுவகையான் உணருருவாதல்பற்றிச் சித்தாந்தத்திற் கிழுக்கென்னை என்றெழுக.

அநாதி முத்தனாகிய முதல்வன் வினையேபோலத் தனது சத்தி மடங்குதலின்றிப் பெத்தத்தும் முத்தியினும் ஒருதன்மையனேயாய் மேம்பட்டுநிற்ற லின் ஆண்டு ஒருவாற்றானும் அசத்தென்றற்கு உரிமையின்மையின் எவ்வாற் றானுஞ் சந்தேயாதலும் எவ்வாற்றானுஞ் சித்தேயாதலும் முதல்வனுக்கேயுரிய இலக்கணமாதல் கண்டுகொள்க. ஆன்மா சித்தாயினும் ¶ ''அவனுக் கிவனுமசித் தாமே.'' என்றோதுதலின் முதல்வனைச் சாக்கச் சித்தாதலின்மையின் எவ்வா ற்றானுஞ் சித்தாதலாகிய இலக்கணம் எவ்வாற்றானுஞ் சத்தாதலாகிய இலக்கண மிம்பால ஆன்மாக்கண்மாட்டுச் செல்லாமை கண்டுகொள்க. 'உணருருவசத்து' என்றவழி மலம் மாயை முதலியனவும் உணருருவாகலின் அவையும் அசத் தாவான் செல்லுமால் எனக் கடாயினார்க்கு இங்ஙனஞ் செவ்வனே இறுக்கமா ட்டாதார் அபாவத்தினியல்பாவது கையாயிகர்முதலியோர் கூறியதேபோலும் என மயங்கி மூப்பொருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுமைப் பொருட்டு ஈண்டுச் 'சத்தசத்தென்ப' 'சித்தசித்'தென்னும்பொருள எனவும்,

* திருவாசகம், கோயிற்றிருப்பதிகம். கூ. அரைசனே. † திருநாவுக்கரசுநாயனார் திருத்தாண்டகம், சுஉ திருமுறை. க. ‡ சிவப்பிரகாசம், உண்மை. கூ—ம் சூ. சு. சத் திது. ¶ சிவஞானசித்தி, கக—ம் சூ. கக. சிவன்சீவன்.

'சுத்தமசுத்தம்' என்னும் பொருள எனவும் இடர்ப்பட்டுத் தமக்கு வேண்டிய வாறே உரைப்ப. மூலமலம் முதலியனபோலப் பிரபஞ்சமும் மெய்ப்பொருளே யாயினுங் காரியவவத்தையினின்ற தூலவடிவம் இத்துணைப்பொழுது நிற்கும் என நம்மனோரால் அறியவாராது நீர்மேலெழுத்தும் கனவும் பேய்த்தேரும் போல நிலேபெறுவதுபோலத் தோன்றிக் காட்சிப்புலனுய் விரையக்கெட்டு மறைந்துபோதற் கிறப்புடைமைபற்றி அசத்தென்றும், அழிபொருளென் றும் மிக்கு வழங்கப்படுமென்க.

அஃதங்ஙனமாக, ஆசிரியர் வடமொழி ஆருஞ்சூத்திரத்தோதியவாறே 'உணருருவசித்து' எனச் சூத்திரஞ்செய்யாது 'உணருருவசத்' தெனச் சூத்திரித்தது முதனூலோடு முரணும் பிறவெனின்; முரணுது, அசத்தெனவே *சடம் என்பதுந் தானேபோதருமென்னுங் கருத்தான் அவ்வாறுசூத்திரித்தாராகலானென்க.அக்கருத்துணர்ந்துகோடற்கன்றே †"அறிபொருளசித்தசத்தாம்." எனக் கூட்டி உரைத்தார் வழிநூலாசிரியரும். அற்றேல், அம்முறைமை பற்றி அசித்தெனவே அசத்தென்பதுந் தானேபெறப்படுமென்னுமோவெனின்; என்னும், என்னே? அசித்தாகிய மலமாயைகன்மங்கள் நீர்மேலெழுத்து முதலியனபோல நிலேபெறுவதுபோலக் காட்சிப்புலனுய்த்தோன்றிச் சடதியின் மறைந்துபோமசத்தாதலின்மையின் என்றும் ஒருதன்மையனுகிய முதல்வனேகோக்க அசத்தெனப்படுமாயினும் அங்ஙனந்தோன்றி மறைவதாகிய பிரபஞ்சத்தை நோக்கச் சத்தேயாமாகலிற் சிறப்புவகையான் உணருருவாகிய அசத்துப் பொதுவகையான் உணருருவாகிய சடத்தின் வியாப்பியமாவதன்றி வியாபகமாதலின்மையா னென்றெழுதிக. ஈண்டு அசத்தென்றதற்குப் பக்கம் காரியப்பிரபஞ்சமாத்திரையே யென்பது வருஞ்சூத்திரத்திற் காட்டுதும்.

இதனுள் உணருருவசத்தெனி னுணராதின்மையி னென்பது ஓதிகரணம்; இருதிறனல்லதுசிவசத்தாமென விரண்டுவகையி னிசைக்குமன்னுலோக என்பது ஓதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

முதலதிகரணம்.

அவற்றுட் பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அறியப்படும் பொருளேயாம் என்னும் கையாயிகர் முருலியோர் மதத்தை மறுத்தற் கெழுந்தது முதலதிகரணம்.

ஈண்டு அறிவினுல் அறியப்பட்ட சுட்டு அசத்து.

எனவரும்.

சுட்டப்படும்பொருளேச் சுட்டென்றார், ஆருபொபரான். சிவஞானத்தான் அறியப்படும் பொருளினீக்குதற்கு அறிவினுலெனவிசேடித்தார். ஈண்டு அறிவு என்றது உலகத்துள்ளாரறியும் அளவையறிவினை, சுட்டென்றதனுற் சுட்டி அறிவதனுவேயாகலின். இஃதுணர்ந்துகோடற்கன்றே ‡"அறிவினு லறிந்தயாவு மசத்தாக லறிதி." என்ற புடைநூலாசிரியர் ¶ "தொன்மை–யறிவுதா

சடம்-அசித்து. † சிவஞானசித்தி, சூ–ம் சூ. க. அறிவுமு. ‡ சிவப்பிரகாசம், உண்மை. கூ–ம் சூ. ச. ¶ சிவபபிரகாசம், உண்மை. கூ–ம் சூ. ச.

ஞென்றை முந்தி யதுவது வாகக் காணு–மறிவுகா ணசத்து." என மீளத் தெரித்துணர்த்தியதூஉ மென்க.

அற்றேல், இல்லே என்னும் உணர்விற்கு விடயமாய் *அநுபலத்தியைப் பயப்பிப்பதுமாத்திரையன்றே அசத்தாவது; அவ்வாறன்றி, "இது குடம்" "இஃதாடை" என்றாற்போல உள்ளதென்னும் உணர்விற்குவிடயமாய் †உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சமும் அசத்தேயாயிற் சத்து அசத்து என்னும் பாகுபாடே பெறப்படாமையின் உணருருவாதன்மாத்திரையேபற்றி அறி பொருள் அசத்தென்றல் சாலாதென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி அதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கெழுந்த ஏது;

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற் றலான்.

எனவரும்.

இல்லே என்னும் உணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பித்தலன்றே அசத்தினியல்பாவதெனின், நன்றுசொன்னாய்! அங்ஙனம் அநுபலத்தியைப் பயப்பிப்பது முன் உண்டென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் இராசதகுண மிகுதிப்பாட்டின் நின்ற பொருளேயன்றிப் பிறிதன்மையாற் பாவம்போல அபாவமும் பாவப்பொருளின்றன்மை எய்தற்குக் காரணம் பொருட்பெற்றியாகிய தாமதகுண மிகுதிப்பாடே என்பது பெறப்படுதலிற் பொருட்பெற்றியின் வேறாய் அபாவம் என ஒன்றின்மையான் அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்தே என்றற்கு இழுக்கென்னை! என்பதாம்.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாசம் என்பன உபலத்தி அநுபலத்தி என்னும் பொருளவாய் ஆகுபெயரான் அவை நிகழ்தற்கிடனாகிய பொருளை உணர்த்தி நின்றன.

அற்றேல், ஒருசாரன அங்ஙனமாயினும் அறியப்பட்டனவெல்லாம் அவ்வாறசத்தாமென்றல் பொருந்தாது, பிரமாணமின்மையின். அன்றியும் இவ்வேதுவேபற்றி அறியப்பட்டனவெல்லாம் அசத்தெனக்கொண்டு பதிமுதற் பொருள்களினுஞ் செல்லாமைப்பொருட்டு நித்தப்பொருள்கள் அளவைகளான் அறியப்படா எனக் கொள்ளின், ‡"அருளினு லாக மத்தே யறியலா மளவினுலுத்தெருளலாம்" என்றற் றொடக்கத்துச் சருகிகளோடு முரணி இந்நூலின் மேற்கோளும் ஏதுவும் எடுத்துக்காட்டுமாக வைத்துப் பதிமுதலிய பொருள்களின் இயல்பு வழியளவையாற் சாதித்தற் கெழுந்த அதிகரணங்களும் பயனிலவாய் அஃது உமக்கே ¶அவசித்தாந்தமாமாலோ என்னும் ஆசங்கையைநீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா ஞயின்—

எனவரும்.

---

* அநுபலத்தி - இல்லையென்றறியு மறிவு. † உபலத்தி - உள்ளதென்றறியு மறிவு.
‡ சிவஞானசித்தி, பாயிரம். 6. ¶ அவசித்தாந்தம் - நிக்கிரகத்தானத்துள் ஒன்று.

அறியாய் என்பது விளியுருபேற்ற பெயர். மெய்கண்டான் ஆயின் அறிவறிந்த எல்லாம் அசத்தாகும் என மாறுக. அசத்தினியல்பை அறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவாயல்லை என்பார் 'அசத்தறியாய்' என்றும், * "எந்தை–தாட்பால் வணங்கித் தலைநின்றுகேட்க" என்பார் 'கேணீ' என்றும், உபலத்திக்கு விடயமானவையெல்லாம் அநுபலதிக்கு விடயமாதல் ஒருதலை என்பார் 'அறிவறிந்த வெல்லா மசத்தாகும்' என்றும், சத்தினியல்புணர்ந்தார்க் கன்றி அசத்தினியல்புணர வாராதென்பார் 'மெய்கண்டான்' என்றும், ஆய்தற்கருமைநோக்கி 'ஆயின்' என்றுங் கூறினர். கூறவே, உபலத்திப்பட்டனவெல்லாம் அநுபலத்திப்படுதலும் ஒருதலையாகலின், அவ்வாறன்றி என்றும் ஓரியல்பாய் நிற்பதாகிய பதிப்பொருள் அறிவினால் அறியப்படுவதன் றென்பதூஉம் பெறப்பட்டது. †"போதமிகுத் தோர்தொகுத்த பேதைமைக்கே பொருந்தி னே னிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல–வேதுநெறி யெனுமவர்கட்" கே நூல் ஆகலின், ‡"அருளினு லாக மத்தே" அறிதலும், அளவினுற் றெருளுதலும் உண்மை ஞானத்தைத் தோற்றுவிக்கும்முகத்தான் அவருக்குப் பயன்படுதலுடைமையின், ஈண்டுக் கூறும் அதிகரணங்கள் பயன்படாமையும் அறியப்படாதென்றதனோடு மூணுதலு மின்மைபான் அவசித்தாந்தமாதல் யாண்டையது! என்பது கருத்து. இஃதுணர்ந்துகோடற் கன்றே! ‡"ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே–மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்" என்பதனை அவற்றின் பின்னுக வைத்தோதியதூஉமென்க. ‡"அருளினு லாக மத்தே யறியலா மளவினுலுங்–தெருளலாம்" எனப் பொதுப்பட வோதி, ‡"ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே–மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்" என விதந்தோதுதலின், "மருளெலாம் நீங்கச் சிந்தையுள்ளே காண்டல்" ஞானச்செய்தி ஒன்றுணன்றி வேறியவற்றுங் கூடாதென்பதூஉம், அவையெல்லாம் அநுபவஞானத்தைத் தோற்றுவித்தன் மாத்திரையாற் பயன்படுதலுடைய என்பதூஉம் போந்தவாறு காண்க. அவை அங்ஙனம் பயன்படுதலும் அநுபவமுடைய தேசிகனருள் இல்வழிக் கூடாதென்பார் ¶ "மறையினு லயனென் மாலான் மனத்தினுல் வாக்கான் மற்றுங்–குறைவிலா வளவி னுலுங் கூறுணர் தாகி நின்ற–விறைவனர்" எனவும், § "அருளினு லாக மத்தே யறியலா மளவி னுலுங்–தெருளலாம்" எனவுங் கூறினர்.

இங்ஙனம் அசத்தென்றது வேறுபொருளெனக் கொண்டு சத்தாகிய திரவியம் முதலிய பிரபஞ்சத்தை உணருருவாதல்பற்றி அசத்தென்றல்சாலாது, சாலுமாயினும் அதுபற்றி முதல்வன் அறியப்படாத பொருளென்றல் பொருந்காது, என்னும் நையாயிகர்முதலியோரை மறுத்து மேற்கோளைச் சாதித்தவழிச், சற்காரியவாதத்திற் சத்தாகிய பிரபஞ்சத்தை அசத்தென்றல் அவசித்தாந்தமெனச், சாங்கியர் முதலியோர் கூறும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்ததாகலின், அதனையே ○ "பெரியாரைப் பிழையாமை" என்புழிப்போல இரட்டுற மொழிந்துகொண்டு வேறுமோரதிகரணமாக வைத்துப் பொருள் கோடற்பாற்று. அஃதாமாறு:—

---

* திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருப்பாசுரம். ச. ஆட்பாலவர்க். † சிவஞானசித்தி, பரபக்கம், மங்கலவாழ்த்து. கூ. ‡ மேற்படி, சுபக்கம், பாயிரம். இ. ¶ மேற்படி பாயிரம். ச. § மேற்படி. இ. ○ திருக்குறள். கo-ம் அதி. பரிமேலழகருரையிற் காண்க.

[அறிவினுலறியப்பட்ட சுட்டு அசத்து.]

அஃதெங்ஙனமெனின், மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது;

[அவைதாம்பிரகாசமாய்நின்றேறஅப்பிரகாசமாய் நிற்றலான்,] எனவரும்.

காரியவவத்தையிற் றூலமாய் விளங்கி நின்றே காட்சிப் புலனுய்ச் சடிதியின் மறைந்து, காரணவவத்தையில் விளங்காது நிற்கும் வேறுபாடுடைமையான் அங்ஙனம் புலனுகாத காரணமாகிய மாயை முதலியவற்றை நோக்கக் காரியமாகிய பிரபஞ்சம் அசத்தாதல் சானுமாகலின் ஈண்டு அறிவினுல் அறியப்பட்ட சுட்டு அசத்தென மேற்கொண்டதென்பதாம்.

அற்றேல், அங்ஙனம் நிலைபெறுதல்போலத் தோன்றிக் காட்சிப்புலனுய்க் கணத்தின் மறைந்துபோதன்மாத்திரையே பற்றிச் சத்தியமாகிய பிரபஞ்சத்தை அசத்தென்பதெவ்வாறென்னும் ஆசங்கையை நீக்கி உவமை முகத்தானே அவ்வேதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

அசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றுமா றுரைப்பு.

எனவரும்.

அசற்காரியவாதியல்லாத அறிவுடையாமே! அங்ஙனந் தோன்றி மறைவனவாகிய பிரபஞ்சம் அசத்தாமாற்றிற்கு உவமை ஆராயின் நீர்மேலெழுத்து முதலியனவாம் என்பதாம்.

எனவே, அப்போதுள்ளனவாகிய நீர்மேலெழுத்து முதலியவற்றை அங்ஙனே சடிதியின் மறைந்துபோதல்பற்றி அசத்தென்றல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின் அவைபோலப் பிரபஞ்சத்தையும் அசத்தென்றல் சானுமென்றவாறுயிற்று. * "உண்டுபோலின்றும் பண்பிலுலகினே யசத்து மென்பர்." என்றூர் வழிநூலாசிரியரும். உண்டுபோலின்றுதல் இத்தன்மைப்பொழுதின் நிகழ்கும் என்றறியவாராது நெடுங்காலம் நிலைபெறுவனபோலத் தோன்றிக் காலம்வந்துழி அங்ஙனே சடிதியின் மறைந்துபோதல். † "நெருநலுளனொருவனின்றில்லை யென்னும்–பெருமை யுடைத்திவ் வுலகு." என்றுரியதூஉம் இவ்வியல்பினேக்கி என்க. அசத்தும் என்பர் என்னும் எதிர்மறையும்மையாற் பொருட்டன்மைபற்றிச் சத்தேதயாம் என்பது போந்தவாறுணர்க. அசற்காரியவாதியை அசத்தென்று உபசரித்தார். நிகழ் என்பதனே யாண்டுங் கூட்டுக. குவ்வுருபு விகாரத்தாற்றொக்கது. நீரில் எழுத்துத், தோன்றியபொழுதே மறைந்துபோதற்கும், கனவிற் காட்சி, முடிவுபெறுதலின்றி இடையேயமறைந்துபோதற்கும், அருஞ்சுரத்தின்கண் முதுவேனிலின் நண்பகற் கடுமைபற்றித்தோன்றி ஞாயிற்றின்கிரணம் முகிற்படலத்தில் மறைந்தவழித் தானும்மறைந்துபோவதாகிய ‡ பேய்த்தேர், ஒருகாரணங்காட்டி மறைந்துபோதற்கும் உவமைஎனக்கொள்க.நீரிலெழுத்துமுதலியன பொய்யென்பாரை மறுத்தற்கு நிகழ் என்று

* சிவஞானசித்தி, சூ–ம் சூ. கூ. மண்டனில். † திருக்குறள், கூசு–ம் அதி. நிலையாமை. சூ. ‡ பேய்த்தேர்-கானல்.

அடைகொடுத்தார். நீரிலெழுத்து எழுதுங்கால் உள்ளதாய்த்தோன்றுதலின் அது பொய்யாமாறு யாண்டையதென்பது. கனவு மெய்யென்பது மேற்காட்டினும். அன்றியும் கனவின்கண் மகளிரை மணந்து பேருவகையுற்றுழியும் புலி முதலியவற்றைக்கண்டு அச்சம் மிக்குற்றுழியும் அவ்வநுபவக்குறி தூலவுடம் பின்கண் நிகழக்காண்டலானும் இன்னோரன்னவை மெய்யாதல் பெறப்பட்ட மையின் ஈண்டுக்கனவின்நிகழ்ச்சியும் அவ்வாறே மெய்யாமென்பது தானேபோ தரும். சூக்குமவுடம்பிற் பெறப்படும் அநுபவங்கள் மிக்குநிகழ்ந்துழி ஒற்று மைபற்றித் தூலவுடம்பினும் குறிநிகழும்; மிக்குநிகழாதவழித் தூலவுடம்பிற் குறிநிகழுமாறில்லை என்று உணர்ந்துகொள்க.

இனிப் பேய்த்தேரை நீரெனக் காண்டன்மாத்திரையே பொய்யாவதன்றிப் பேய்த்தேர் பொய்யன்று என்பது கண்கூடாக அறியப்படும். இங்ஙனமாகலின் நீர்மேலெழுத்துமுதலியன சத்தேயாகவும் ஒருவாற்றுற்பிரபஞ்சத்தை நோக்க அசத்தென்றற் குரிமையுடையவாயினுற்போல நாதம் முடிவாகிய பிரபஞ்சமும் காரணப்பொருளேநோக்க ஒருவாற்றுன் அசத்தென்றற் குரிமையுடைமையின் அதுபற்றிச் சற்காரியவாதத்திற் கிழுக்கின்மை உணர்க.

இவ்வெண்பாவின் அசத்தறியாய் எனவும் அசத்தலாய் எனவும் வேறு வேறு விளித்தலானும், ஆயின் ஓரின் எனவும், அசத்தாகும் இன்றுமாறு எனவும் ஒருபொருட்கிளவியை இருகாற் கூறுதலானும், இதனை இங்ஙனம் இருதொடராகவைத்து * "இலயித்ததன்னின்." என்பதுபோல இரண்டதிகரணப் பொருள்பட உரைத்துக் கோடலே ஆசிரியர்கருத்தாதலறிக. இவ்வாறன்றி, இதனை ஒருதொடராகவைத்துரைப்பின் அசத்தறியாதாகின அசத்தலாய் என்றதனுல் ஒருபயன்படாமையும், ஆயின் ஓரின் என்று இருகாற்கூறுதலும், அசத்தாகும் இன்றும் என்று இருகாற்கூறுதலும் கூறியது கூறலென்னுங்குற்றமாதலும் அறிக.

இனி, ஒருவாற்றுனும் உணரப்படாதபொருள் சூனியம் என்பது எல்லாச்சமயத்தாருக்கும் ஒப்பமுடிந்தமையின் ஆண்டு அதிகரணத்திற்குரிய ஔப்பாடுமுதலியன நிகழாமையான் அதனை வேறோரதிகரணமாக வைத்துரைத்திலர். அங்ஙனமாயினும், உணராதபொருளைச் சத்தென்றற்படி மிழுக்கென்னையோ என மாணாக்கர்க்கு ஆசங்கை நிகழாமைப்பொருட்டு வழிநூலாசிரியர் †"உணராத பொருள்சத் தென்னி லொருபய னில்லை தானும்–புணராது நாமுஞ் சென்று பொருந்துவ தின்று மென்றுந்–தணவாத கருமம் மொன்றுந் தருவது மில்லை வானத்–திணரார்பூந் தொடையு மாமைக் கெழுமயிர்க் கயிறும் போலும்." என விடுத்தொழிந்தாரென்க.

முதலதிகரணம் முடிந்தது.

* இந்நூல், முதற்சூத்திரம், உம் அதி. க. † சிவஞானசித்தி, சூம் சூ. ச.

இரண்டாமதிகரணம்.

மேலியதிகரணத்தின் உணர்பொருளியல்பும் உணராதபொருளியல்பும் உரைக்குமுகத்தான் அசத்தினியல்பை வரைசெய்து உணர்த்தியவழி இரண்டும் இவ்வாருயின் முதல்வனதியல்பு வேறென்னையோ என்னும் ஆசங்கையை நீக்கிப் *பாரிசேடவளவையான் முதல்வனது சிறப்பியல்புணர்த்து முகத்தானே சத்தினியல்பு வரைசெய்துணர்த்துதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனி என்றது இவ்வியை புணர்த்துதற்பொருட்டு. அதிகரணங்தோறும் இனி என்பன அவ்வவற்றிற்கு மேற்போந்த அதிகரணங்களோ டளவாகிய இயைபுணர்த்துதற் பொருள என்பது † மேலே காட்டினும். யாண்டுங் கடைப்பிடித்துக் கொள்க.

இனி இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனுதீத கோசரமாய்நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணர்தற் பாற்று.

எனவரும்.

இருதிறனுவன யாவை என மலியாமைப் பொருட்டு இவ்விரண்டு தன்மையும் என மேற்போந்தவற்றைச் சுட்டிக் கூறினர். இரண்டு வகையாவன இவை என்பார் 'வாக்குமனுதீத கோசரமாய்' என்றார். ஈண்டு வாக்கென்றது வாக்காகிய நாதம் முடிவான பாசஞானத்தை. மனமென்றது அவற்றின் வேறுகிய பசுஞானத்தை. வாக்குமனுதீத கோசரமாய் நின்ற என்பது அவ்விரண்டன் விருத்திகளைக் கடந்து அதீதமாயும் வேறறநின்றுணரும் அநுபவஞான மாத்திரையின் விளங்கிக் கோசரிப்பதாயும் நின்ற என்றவாறு. அங்ஙனம் நின்ற பொருள் இதுவென அளவைகளான் அறியவாராமைபற்றி ‡அது எனப் பொதுப்பட மகாவாக்கியத்துட் கூறியதனை அநுவதித்துச், சத்தாயுள்ள சிவமாதலைச் செவியறிவுறுக்கின்ற ராகலின், அது சத்தாயுள்ள சிவமே எனப் பிரிநிலை யேகாரத்தை மாறிக் கூட்டுக. சத்தென்னும் வடமொழிக்குப் பொருளுரைப்பார் 'சத்தாய்' என்றெழியாது 'உள்ள' என்றார். என்றுணரற்பாற்று—என்று உயர்ந்தோரான் அறியும் பான்மைத்தென்க.¶வாக்கு மனுதீதம்என்றது தமிழ்நூன்முடிபு. மரவடி மராடி என மரீஇயினுற்போல மனவதீதம் எனற்பாலது மனுதீதம் என மரீஇயிற்று. அதீதகோசரம் என்பது வடநூன்முடிபு. வாக்கு மனுதீதப்பொருளாகலான் உணருருவாந் தன்மையும், கோசரப்பொருளாகலான் உணராதாந் தன்மையும் இல்லை என்பது பெறப்படுதலின் இவ்விரண்டு வகையுமின்றி என்றார்.

அற்றேல், ஐந்தொழிற்கும் விணைமுதலாதல் பற்றி உண்டெனத் துணியப்பட்ட முதல்வன் வாக்குமனுதீத கோசரமாய் நிற்பன் என்பது எற்றுற் பெற்றும்; ஆகமவளவையாற் பெற்றுமெனின், வழியளவைக் கேலாவாய் ஆகமங்களுட் கூறப்படுவனவெல்லாம் புனைந்துரை வகையானன்றிப் பிரமாணமா

---

* பாரிசேடம்—ஒழிபு. † முதற்சூத்திரத் திரண்டாமதிகரணத்தின் மேற்கோளுரையிற் காண்க. ‡ அது என்பது மகாவாக்கியத்துட் கூறப்பட்டதென்பதனை கூ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. ¶ இது வடநூன்முடிபாயின் வாங்மனோதீதம் எனவரும்.

காவால் என்னும் ஆசங்கையை நீக்கி "அவ்வளவினவன் மகிழுக," என்னும் நியாயம்பற்றி வாக்குமனுதீத கோசரமாய் நிற்றலே வழியளவையாற் சாதித்து இவ்விரண்டு தன்மையு மின்றி என்றதனை வலியுறுத்துதற் கெழுந்த ஏது;

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாச மின்மையானும்.

எனவரும்.

வாக்குமனங்களான் ஓதி உணரப்படுவதாகிய பிரகாசப்பொருட்கு முன்னர் உண்மை யதிகாரத்துட் கூறப்படுஞ் சாதகங்களினின்று அறியப்படவேண்டுவ தின்மையானும், ஒருவாற்றானு மறியப்படாத அப்பிரகாசப் பொருட்குச் சாதகத்தினின்றும் அறியப்படுந் தன்மை யின்மையின் அநுமானாதார் பயனின்மையானும், இவ்விரண்டு தன்மையு மின்றி வாக்கு மனுதீத கோசரமாய் நிற்றல் பெறப்படுதலின், அங்ஙனம் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் ஈன் பதாம்.

பிரகாசிக்கப்படுவதனைப் பிரகாசமென்று உபசரித்தார்.

அற்றேல், வாக்குமனுதீதம் என்றல் பொருந்தும் கோசரமாம் என்றல் பொருந்தாது; என்னை? பரப்பிரமப்பொருள் அவிச்சையவத்தான் ஞாதா எனவும் ஞேயம் எனவும் பகுக்கப்பட்டு முன்னர்க் கூறப்படுஞ் சாதகங்களினின்று அறியவும் படும், அவிச்சை நீங்கியவழி ஞாதிரு ஞானம் ஞேயம் என்னும் பாகுபாடு சிறிது மின்மையிற் சத்தென்றுதல் அசத்தென்றுதல் ஒருவாற்றானும் ஞேயமாமாறின்றிக் கேவலம் ஞானமாத்திரையேயாய் நிற்பதொன்றுகலான். என மாயாவாதி மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி அதனைநீக்கிக் கோசரமாதலே வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்;

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்று ளாம்.

எனவரும்.

பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விகாரத்திற் கருதப்பட்ட சத்துமன்று அசத்துமன்றென்னில், அங்ஙனம் ஒருபொருள் உண்டென்றல் யாதுபிரமாணங் கருதியோ அதனைக் கூறுவாயாக. பிரமாணமொன்று உண்டென்னின் அதற்கு அது பிரமேயம் எனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென்றஞ்சி ஆண்டு அதற்குப் பிரமாணமில்லை என்பையாயின், சத்தினியல்புணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சிமுதலிய பிரமாணங்களான் அறியப்பட்டதூஉம் ஒருவாற்றானும் பிரமாண மில்லாத சூனியமு மாகிய இரண்டும்மேற்கூறிய வாற்றான் அசத்தேயாம்; ஆகவே † "சத்து" என்னுஞ் சாந்தோக்கியம் முத

* பரமார்த்தம்–மிகமேலாகியபொருள். † சாந்தோக்கியம், சு–ம் பிரபாடகம், உ–ம் கண்டம். ஸதேவ ஸோம்யே3த3 மக்3ர ஆஸீத்|| என்னும் முதலாம் மந்திரத்துள் பரம்பொருளைச் சத்தென்றோதியிருத்தல் காண்க.

லிய சுருதிகளோடு முரணுமாதலாற் சத்தென்றோதப்படும் அறிவினால் அறியப்படாத மெய்ப்பொருள் நீ கூறுஞ் சூனிய மன்று; சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் *அந்நியமின்றி நின்று உணரும் அநுபவமாத்திரையிற் †கோசரிப்பதென் றோதப்படுஞ் ‡ சிவனருளாம் என்க.

அறிய என்னுஞ் செயவெனெச்சம் ''மழைபெய்யக் குளநிறையும்.'' என் புழிப்போலச் செயினென்னும் எச்சப் பொருட்டாய் நின்றது. இரண்டும் என முற்றும்மை விரிக்க. அசத்தாம் என மாறுக. சத்தாகியமெய் எனக் கூட்டுக. ¶''அடியளந்தான்றுயது.'' என்புழிப்போல அறிவறியாமெய் என்றது வாளா பெயராய் நின்றது § ''பெயர்நிலைக் கிளவியி னஃறிணையும்.'' என்றது ஒத்தாகலின். சிவன்றுளெனச் சிவசத்தியின் மேல் வைத்து உயர்த்துக் கூறினர். o''இறைவனூர் கமலபாதம்.'' என்றது மது.

இதனுற் போந்த பொருள் சத்துமன்றி அசத்துமன்றி ஒருபொருளுண்டென்பதற்குப் பிரமாணம் என்னை? பிரமாணமில்லாத சூனிய மெனிற் சூனியமும் அழிபொருளும் என்னு மிரண்டும் அசத்தேதயா மென்பது **மேற்காட்டினமையிற் பிரமப்பொருள் அசத்தெனப்பட்டுச் ''சத்து'' என்னுஞ் சுருதிகளெல்லாவற்றோடும் முரணுமாகலான், அவற்றிற் சத்தென்றோதப்படும் பரப்பிரமப் பொருள் உண்மைஞானத்திற் கோசரிப்பதென யாங் கூறுஞ் சிவமேயன்றி நீ கூறுஞ் சூனியமன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரமென்றதனை வலியுறுத்திய வாறுமென்க.

எண்ணியறிய விரண்டா மசத்காதல் என்பதற்குப் பிறசெல்லாம் வருகின்ற வெண்பாவிற் கூறும் பொருள்படக் கூறியதுகூறலாக்கி உரைப்ப.

அற்றேல், முதற்பொருள் கோசரமாமென்றல் பொருந்தும், வாக்குமனாதீதம் என்றல் பொருந்தாது; என்னை? பிரகாசித்த பொருளையும் வேறோராற்றான் அறிதுமெனவேட்கை சென்றுழி அவ்வாற்றாற் புதுவதாய்ப் பிரகாசிக்க வேண்டுதலிற் பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதின்மையின் என்னும் எது யாண்டுஞ் செல்லாமையானும், மனத்தோடு கூடாதவழி ஆன்மாவுக்கு அறிவுண்டாகலின்மையின் வாக்குமனாதீதமாயவழிக் கோசரமாமா றின்மையானும், ஆன்மாவினோடு கூடி மனம் முதலிய கருவியாதல் அவற்றோடு கூடி ஆன்மாவாதல் அறியுமென்றல் பொருத்த முடைத்தாகலான். என கையாயிகர் முதலியோர் கூறும் மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி அதனை நீக்கி, முதற்பொருள் வாக்கு மனாதீதமாய் நின்றே கோசரமாமென வலியுறுத்தற் கெடுத்துக்காட்டும் உதாரணம்;

---

* அந்நியம்-வேறுபாடு. † கோசரிப்பது–விடயமாவது. ‡ சிவனருளுஞ் சத்தாமென்பதை ஸகி³ஂ ஶிவஸ்ய ஸ்வ ரூபஂ ஸ்வ ப்ரகாஶ ஆனந்த³ரூபஂ ஸத்யஂ ஜ்ஞான மனந்தஂ ப்³ரஹ்ம ஸத்யஂ ஜ்ஞானமனந்தஂ ப்³ரஹ்மேதி ஶ்ருதே: என்னும் அபியுக்தர் வாக்கானுமுணர்க. ¶ திருக்குறள், சுகம்-ம் அதி. மடியின்மை. கo. மடியிலா. § தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல். நூசு. o சிவஞானசித்தி, சுபக்கம், பாயிரம். ச. மறையிலை. ** இச்சூத்திரத்து முதலதிகாணத்திற் காண்க.

உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
யுணருநீ தானுணரா யாயி—னுணருமுளிற்
றுணிரண்டா மெய்கண்டான் றன்னு லுணர்தலாற்
றுணிரண்டாய்க் காணன் றமி.

எனவரும்.

நின்னுல் அறிவனவாகிய கருவிகளெல்லாம் மேற்கூறியவாற்றுன் அசத்தாம். அசத்தெனவே, அசித்தாதலும் பெறப்பட்டது. ஆகலின் அவற்றுள் ஒரு கருவியும் முதற்பொருளை அறியமாட்டாது; அவற்றுன் அறிகின்ற நீதானும் அதனை அறியமாட்டாய்; நீ ஆய்ந்தறிவையாயின் அங்ஙனம் அறியப்படும் பொருள்கள்போல உணர்கின்ற நின்னின் வேறும். ஆகவே அதனுன் உனக் காவதோர் பயனின்றும். அற்றேல், மனம் நீங்கியவழி ஆன்மாவுக்கு அறிவுண் டாமாறில்லை. உண்டாயினும் அதனு லறிவுழியும் வேறுய் நின்றன்றி அறிதல் கூடாதாலெனின், அற்றன்று; ஆன்மாவுக்கு இயல்பா யுள்ள அறிவினை மனம் முதலிய கருவிகள் விளக்குவனமாத்திரையேயன்றி முன்னில்லதனை உண்டாக்குவனவல்ல என்பது * மேற் காட்டப்பட்டதாகலின் அவ்வுண்மையை உணர்ந்தோன் சத்தாயுள்ள சிவத்தை அறியுங்காற் றன்னறிவதன்கணடங்கி அதுவாய் நின்று அதனுனே அதனை அறியுமாகலான் ஏனைப் பொருள்களைப்போல அத்தனிமுதற்பொருளை வேறுய்நின்று அறிவானல்லனென்க.

இதனுற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானுதல் பசுஞானத்தானுதல் அறியப்படாது. அறியப்படிற் குடம் முதலியனபோல ஆன்மாவின் வேறுய் அவிச்சையான் வருஞ் சுகதுக்கங்களைப் பயப்பதன்றி அவிச்சையினீங்கிய †பெரும்பயனைப் பயவாதாகலான் ஆன்மா அறிபு முண்மையை உணர்ந்தோன், ஏனையபோல அசத்தல்லாத தனிமுதற்பொருளாகலான் அதனை அதனுனே ஒற்றித்து நின்று காண்பனென கையாயிகர் முதலியோரை மறுத்துக் கோசரமா மாறுணர்த்தி வாக்குமனுதீதம் என்றதனை வலியுறுத்தியவாறு மென்க.

உணர்ப என்பது அகரவீற் றஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல். ஒன்றும் என முற்றும்மை விரித்துரைக்க. உனின் என்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒற்றிரட்டியாமை புறனடையாற் கொள்க. இரண்டாதல்—வேறுதல். தான் அசை. தமியை என இரண்டனுருபு விரித்துரைக்க. உணராயாயினென ஒருதொடராக்கி உரைப்பின் உணராத பொருளில்லையென விடுத்தல்வேண்டும். அவ்வாறன்றி இரண்டாமென விடுத்தல் உணர்பொருட்கன்றி ஏலாமையின் அஃதுரையன்மை அறிக.

அற்றேல். ‡தன்னை அறிந்தாலன்றித் ‡தன்னுல் அறிதல் கூடாமையாற் றன்னுலே தனையுணரும் என்பது ¶தன்னைப்பற்றுதலென்னுங் குற்றமாமாகலின் அவ்வாறன்றி வாக்குமனுதீதமாய் நிற்கின்ற பொருள் யோக நூலிற்

* காலாஞ்சூத்திரத்திற் காண்க. † பெரும்பயன்-பேரின்பம். ‡ ஈண்டுத் தன் என்பன பாதஞ்சலர்கொள்கைப்படி சிவத்தையுணர்த்தின. ¶ தன்னைப்பற்றுதல்—ஒன்றனை ஒன்று பற்றுதல்.

கூறுங் கியானபாவனைகளிற் கோசரமாம் என்றலே பொருத்த முடைத்தெனப் பாதஞ்சலர்மதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி, அதனை மறுத்துத் தன்னுலன்றிக் கோசரமாகா தென்பதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

> பாவகமேற் ருனசத்தாம் பாவநா தீதமெனிற்
> பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
> பாவித்த ருனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
> பாவிப் பதுபரமில் பாழ்.
>
> எனவரும்.

நீ கூறும் பாவனை எனைப் பாவகங்கள் போல மனம் முதலியவற்றோடு கூடிநின்று பாவிக்கும் பாவனையோ? அவற்றோடு கூடாதுநின்று பாவிக்கும் பாவனையோ? இரண்டு மின்றிப் பாவிக்கும் பாவனையோ? இம்மூவகையு மின்றிப் பசித்தவனுண்டவனைப் பாவிக்குமாறுபோல உணராத பொருளை உணர்ந்ததாகவைத்துப் பாவகஞ் செய்வதாகிய பாவனையோ? கூறுவாயாக, என இந்நான்கினையும் முறையே மறுத்தவாறு. அற்றேல், ஒருவாற்றானும் பாவனைக் கெய்தாத பொருள் சூனியமாம்போலும் என்பாரை நோக்கித், தன்னருளாற் பாவிப்பதுபரம் இல்பாழ், எனச் சித்தாந்தஞ் செய்தார்.

எனைப் பாவகங்கள் போல மனம் முதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும் பாவகமெனின், அறிவினால் அறியப்பட்ட சுட்டாகலான் அசத்தேயாம். தான் அசை. பாவகமா மென்பது பாவனைமாத்திரையேயன்றிப் பயனில்லை என்பதாம். பாவகத்தைப் பாவித்தல் என்புழிப் பாவித்தல் என்பது செய்தலென்னும் பொருட்டாய் நின்றது; * "உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்." † "கறைமிட றணியலு மணிந்தன்று." என்புழிப்போலக் கொள்க. மேலே வெண்பாவில் தன் என்றது தனது சத்தியை ஆகலால், தன்னைப்பற்றுதல் என்னுங் குற்றமாமாறு யாண்டையதென விடுப்பார் தன்னருளாற் பாவிப்ப தென்றார். தன்னருளை அறியுமாறும் அதனாற் பாவிக்குமாறும் ‡ உண்மையதிகாரத்திற் பெறப்படும்.

அற்றேல், பாவனையும் பாசஞான பசுஞானங்களா னுவதாகலிற் சத்தாகிய சிவம் அதன்கட் கோசரமாகாதென்றலொக்கும், அங்ஙனமாயினுந் தன்னருளாற் பாவிக்கவேண்டா; ஆன்மா பசுத்துவம் நீங்கிய முத்திகாலத்திற் சிவனைப்போல முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களுமுடையன் என்று ஆகமங்களிற் கூறுதலின் ஆண்டு ஆன்மாவினறிவு சிவஞானத்தோடொத்த ஞானமேயன்றிப் பசுஞானமன்மையான் அவ்வறிவா னறியப்படுங் கோசரப் பொருளென்றலே பொருத்தமுடைத்தெனச் சிவசமவாதிமதம்பற்றி ஆசங்கை நிகழ்ந்தவழி அதனை மறுத்துத் தன்னருளா னன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

---

* கலித்தொகை, பாலை. உஉ. இலங்கொளி. † புறநானூறு. க. ‡ இந்நூல் ஒன்பதாஞ்சூத்திரத்துட் காண்க.

அறிய விரண்டல்ல ஞங்கறிவு தன்ஞ
லறியப் படானறிவி ஞுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்ரூனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

எனவரும்.

சிவாகமங்களில் அத்துவிதமே கூறுதலின் ஆன்மா தன்னறிவா னறி வதற்குத் தன்னின் வேறல்ல ஞகலானுஞ், சமமாக லின்றித் தூல சூக்கும முறையில் தன்னறிவிற் குள்ளாய் நிற்றலிற் றன்னறிவினு லறிய வாரானு கலானுங், தன்னறிவிற்கு வியஞ்சகமாய் அறிவித்து உயிர்க்குயிராய் நிற்றலா னும், அத்தன்மையனுகிய முதல்வனைப் பசுத்துவம் நீங்கிய வழியும் ஆன்மாவி னறிவு தான் கண்டறிந்து தன்குணியாகிய ஆன்மாவுக்குக் கோசரமாம்படி காட்டமாட்டாது; தன்னின் வேறின்றித் தனக்குண் ணிற்றலிற் றன்னும் காணப்படாது தனக்குக் காட்டாகி நின்ற ஆன்மாவை யறியமாட்டாத கண் ணொளியைப்போல என்பதாம்.

அல்லன் படான் நின்ரூன் என்பன குறிப்பேதுக்களாகலின் இங்ஙனம் ஒருதொடராகக் கொண்டுரைக்க. ஆங்கு அசை. அறிவினுள்ளாஞகலின் அறியப்படானென்க. காட்டு முதனிலைத் தொழிற்பெயர். கண்டறிந்து காட்டாது எனக் கூட்டுக. கண்டறிதல் * "குழிந்தாழ்ந்தகண்." என்புழிப்போலச் சிறப்பின்கண் வந்த மீமிசை. மெய் அறியாக் கண் என்ன என இயைத்துரைக்க. கண்முதலியவற்றை நோக்க ஆன்மா சத்துச் சித்தென்பது தோன்ற மெய்யென்ரூர்.

கண்ணறியா மெய்யென்ன வென்றதற்குக் கண்ணையறியாத உடம்புபோ லென்று உரைப்பாரு முளர். உடம்பிற்கு அறியுந்தன்மை யின்மையானும், உடம்பிற்குக் கண் காட்டாத லின்மையானும், ஈண்டு உவமையாதற்கு ஏலா மையின் அது போலியுரையென்றுழிக.

அற்றேல், அத்தன்மையனுகிய முதல்வனைத் தலைப்பட்ட ஆன்மா அம் முதல்வனை டொன்றுப்போதலேயன்றித் தானென வேறு நிற்குமாறின் மையிற் றன்னருளா லான்மா உணருமென வேறுபடுத்துக் கூறுதல் பொருந் தாதெனச் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி ஆசங்கைகிகழ்ந்தவழி அதனை மறு த்து முத்தியின் முதல்வனைடு நிற்கு மியல்பு உணர்த்துமுகத்தானே தன்ன ருளாலுணரு மான்மாவிற் கோசரமாமாறு வலியுறுத்துதற் கெடுத்துக்காட் டும் உதாரணம்;

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணிற்ற
லறியுமறி வேசிவமு மாம்.

எனவரும்.

* நாலடி, தூய்தன்மை. கூ. கழிந்தாரிடு.

சத்தாகிய சிவம் மாயாவாதிகள்போல் அநிருவசனமாய்க் கூறப்படுவதொன்றன்மையான் முத்தியினும் அறிபொருள் வேறுண்டென்பது துணியப்படுமென்பார், 'அது வென்னு மொன்றன் றதுவன்றி வேறே யதுவென் றறியறிவும் ஆங்குண்டு' என்றும், அங்ஙனமறிதல்பற்றி யொன்றுப் நிற்றற் கிழுக்கில்லை யென்பார், 'அதுவென் றறிய விரண்டல்லன் அறிவு ணிற்ற லறியு மறிவே சிவமு மாம்' என்றுங் கூறினர். உம்மை சிவமாயும் சிவமாகாமையை விளக்கி நின்றது. அறிவு மென்ற உம்மை இறந்ததுதழீஇயது. அதுவென்னுமொன்றன் றுகலானென ஏதுப் பொருள்படக் கொண்டுரைக்க.

இங்ஙனம் ஐந்து வெண்பாக்களானும் முறையே வாக்குமனுதீதம் என்றல் பொருந்தும் கோசரமென்றல் பொருந்தாதென்னும் மாயாவாதிகளையும், கோசரமென்றல் பொருந்தும் வாக்குமனுதீத மென்றல் பொருந்தா தென்னும் நையாயிகர் முதலியோரையும் பாவனைக்குக் கோசரமாதலே யன்றித் தன்னு லுணரும் உணர்விற்குக் கோசரமென்றல் பொருந்தா தென்னும் பாதஞ்சலரையும், பசுத்துவம் நீங்கியவழி ஆன்மாவின் ஞானத்திற் கோசரமாமென்னும் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமேயன்றி ஆன்மா என வேறின்மையின் ஆன்மாவுக்குக் கோசரமாமாறு யாண்டையதென்னுஞ் சிவாத்துவிதசைவரையும் மறுத்து வாக்குமனுதீத கோசரமாய் நிற்றலே வலியுறுத்துதலின் இவ்வைந்தும் ஒருபொருண்மேல் வந்தவாறு காண்க.

சமவாத வாதம்.

அற்றேல், * பொருந்துமாற்றாலும் சிவாகமங்களோடும் முரணுதலான் ஏனையோர் கூறுவனவெல்லாம் பொருள்படாமையின் அவற்றை மறுத்தல் அமையும்; சமவாதசைவரில் ஒருசாரார் முத்திகாலத்தில் அறுவகைக் குணங்களும் விளங்கிச் சதாசிவக் கடவுளோ டொப்பதின்று ஐந்தொழில் செய்வன் என்பதூஉம் அவற்றாலும் முரணுதலின் மறுக்கப்படுவதேயாம். மற்றொருசாரார் கூறும் சிவசமவாதம் பொருந்துமாற்றிற்கும் சைவாகமங்கட்கும் இயைபுடையதுபோலத் தோன்றுதலின் அவ்வொருசாரார் மதம் பற்றி ஆன்மா தன்னறிவானே முதல்வனை அறியுமென்றல் பொருத்தமுடைத்துப்போலும்; அஃதெங்ஙனமெனின், அவர் கூறுமாறு:—

†"ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தென." என ஆசிரியர் உருவக முகத்தான் ஓதிய ஆன்மாவி னியல்பை வழிநூ லாசிரியர்.

‡"மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப், பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமை யொடுந் தாஞுக்கிப் பேணு மாபோற், றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத் துணைவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை, மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி மலமகற்றித் தாஞுக்கி மலரடிக்கீழ் வைப்பன்."

என உவமமும் பொருளுமாகவைத்து விளங்கக் கூறினர். கூறவே, மன்னர் சாதியிற் பிறந்தமன்னவன்மகன் அம்மன்னவனை டொப்ப எல்லாக் குண

* பொருந்துமாறு—யுத்தி. † இந்நூல். அ-ம் சூ. ‡ சிவஞானசித்தி, அ-ம் சூ. க.

ங்களுமுடையவனுகியும் வேடரிடத்தே தங்குதலான் அவ்வாற்றலு அறியாது மயங்கிச் சிறுமைப்பட்டு நின்று, பின் அதனை அவனறிந்து பலவகை உபாயங் களினுலும் அவ்வேடரினின்றும் பிரித்து 'நீ என்மகனுகலின் நீயும் நானும் ஒருசாதியேம், என்னுடொப்ப அரசுரிமைசெய்யும் எல்லா வாற்றலு முடை யை' எனத் தெரிவித்து முடிசூட்டித் தன்னைப்போலாக்கி உதவி செய்த வழி, முன்னின்ற சிறுமை நீங்கி, அங்ஙனம் எல்லாப் பெருமையுமுடையனுய், மீளு அவனுதவியை வேண்டாது தானே சுதந்திரனுய் இன்புற்றுவாழ்வன்; அதுபோல, ஆன்மா சிவனுடொப்ப முற்றுமுணர்தன் முதலிய எண்குணங் களையுமுடையனுயும் ஐம்புலவேடர் சுழலிற்பட்டமையாற் சிவனுக் தானும் ஒருசாதி எனத் தன்னுற்றலு அறியாது செயற்கையபத்தாற் சிற்றுணர்வுஞ் சிறுதொழிலுமுடையனுய்ச் சிறுமைப்பட்டு நின்று, பின்பு சிவன் குருவை அதிட்டித்து நின்று சிவதீக்கை செய்து செவியறிவுறுத்தி அவ்வைம்புலவே டரினின்று நீக்கி என்னுடொப்ப நீயும் எண்குணங்களுமுடையை எனத் தெரிவித்துத் தன்னைப்போ லாக்கி உதவிசெய்தவழிச், செயற்கையானுகிய சிற்றறிவு சிறுதொழில்களை விட்டு, இயற்கையானுள்ள பேரறிவு பெருந்தொ ழில்களின் பகுதியாகிய எண்குணங்களுமுடையனுய், மீளவுஞ் சிவன் உதவி செய்ய வேண்டாமையிற் பரதந்திரம் நீங்கிச் சிவனைப்போலத் தன்வயத்தனுய் நின்று இன்புற்று வாழ்வன் என்பது பெறப்படுதலானும், *"உன்னைப்போ லென்னைப் பாவிக்க மாட்டேன்." எனவும் †"எண்குணத்து ளோமே." என வும் பிறண்டும் ஆன்றே செல்லாம் இவ்வாறே கூறுதலானும், சிவாகமங்களில் ஆண்டாண்டுச் சிவசமமாதலே முத்தியென்று ஓதுதலானும், முத்தனுகிய ஆன்மா தன்னறிவானே சிவன் முதலிய எல்லாப் பொருளையும் அறிவன் என்பது.

இன்னும், ‡முத்திபெற்ற ஆன்மாக்கள் சிவனுடொப்பர், ¶மலம் முழுவதும் நீங்கி விளங்கிய சிற்சத்தி யுடையராகலின், §யார் யார் சிவனு டொப்பாரல்லர் அவர் அவர் முழுவதும் மலம் நீங்கிய சிற்சத்தியை யுடைய ரல்லர், சகலர் முதலியோர் போல. என்னும் வழியளவையானுஞ் சிவசம மாதலே முத்தி என்பது பெறப்படும்.

இன்னும், முத்தியிற் சிவசமமாகாதவழிச் சுதந்திரமுடையனல்லனும்; ஆகவே, ○"பரதந் திரியங் கரைகழி பந்தம்" என ஞானபிரகாசத்திற் கூறுத லானும், சிவாகமங்களினும் இவ்வாறே கூறுதலானும் முத்தியும் பெத்தமை னப்பட்டு வழுவாம். அற்றேல், முத்தி பெற்ற ஆன்மாக்கள் சிவசமமாயவழிச் சிவனைப்போல ஐந்தொழில் செய்வரெனல் வேண்டும், செய்வரெனக் கொள் ளின் அநேகேச்சுர வாதமாய் முடியுமாலெனின்; முடியாது. ஐந்தொழில் செய்யுங் கருத்தாவாதற்றன்மை சிவனுக்குக் கருணையா னுள்ளது, முத்தி

* சுந்தரமூர்த்திநாயனுர் தேவாரம், எ-ம் திருமுறை. கி. வழித்தலை. † திருநாவு க்கரசுநாயனுர் தேவாரம், பொது. சு-ம் திருமுறை. திருமறுமாற்றத்திருத்தாண்டகம். கo. நாவார. ‡ இது பிரதிஜ்ஞை; என்பது மேற்கோள். ¶ இது ஏது; என்பது கார ணம். § இது திருட்டாந்தம்; என்பது உதாரணம். இவற்றின்விரிவைத் தருக்கசங்கிரக உரை முதலியவற்றுட்காண்க. ○ தொல். கஉ. ஆருயிர்.

பெற்ற ஆன்மாக்களுக்குத் தள்ளப்படாமையா னுள்ளதாகலான் ஐந்தொழில் செய்வதற்குச் சிவனொருவனே அமையுமாகலின், அவர் மிகைபடச் செய்யுமா றின்மையா னென்பது. இக்கருத்தானன்றே *"உம்பர்பிரா னுற்பத்தி யாதி களுக்குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே." என வழிநூலாசிரியரும் ஓதினர். ஆண்டுச் சிவானுபவம் என்றது ஆகுபெயராற் றன்னுடையதாகிய சிவத்துவத்தை அநுபவித்தல் என்றவாறும்.

இன்னும் நூல்களின் ஆண்டாண்டுச் சிவசமமாதல் முத்தி என்பதனோடு மொணுவனவாகத் தோன்றுவன எல்லாம் முரணுதவாறு ஆகுபெயராகவைத் துப் பொருள்கொள்ளப்படுமென்று இங்ஙனம் சைவரி லொருசாரார் உருவ சமவாதிகளிற் சிறுபான்மை வேறுபடப் புதிதாக ஒருமதங்கொண்டு தாங் கள் கோண்டதற்கேற்பச் சிவாகம வாக்கியங்களையுந் தமக்குவேண்டியவாறெ ல்லாம் இடர்ப்படுத்தி நலிந்து பொருள்கொண்டு உரைசெய்து தாமே தம்மில் வியந்து கொள்வாராகலான் ஆண்டு இழுக்கென்னை யெனின்; நடுவுநிலைமை யுடையராய்ச் சிவாகமங்களை ஒதி உணர்ந்தார்க்கு அவருரைப்பனவெல்லாம் இந்திரசாலம்போல ஆரவாரமாத்திரையே யன்றி நிலைபெற மாட்டா வாகலின் அவை ஒரு பொருளாக வைத்து மறுக்கற் பாலனவல்ல வாகலானும், எத்தன் மையராயினுஞ் சிவநிக்கை யுடையராய்ச் சிவாகமத்தில் விதித்தவாறுழுகி அகச்சமயத்தி னிற்றலின் அவரைப் பழிக்க லாகாமையானும் அவரறிவு அவ் வளவிற்றென்று போதலே பொருத்தமுடைத்தென் றுழுக.

அற்றேல், வழியளவைக்கும் ஆகம வளவைக்கும் இயைவன போல இத் துணை வலியுறுத்தி அவருரைத்தனவெல்லாம் ஆரவாரமாத்திரையாய்ப் போ மாறு யாங்ஙனம்? அதனை அறியுங் †குதூகல முடையேன் என்பையாயிற் சிறிது காட்டுதும்.

மறுப்பு.

மன்னவன் மகனை ஆன்மாவுக்கு உவமை கூறியதுபற்றிச் சிவசமமாதல் முத்தியெனக் கொண்டாய்; ஈண்டு வினவுதும்: மன்னவன்மகன் வேடரினீங்கி மன்னவனைச் சார்ந்தவழி மன்னவ னேவலின் நின்று பணிக்தொழுகுவா னோ? மன்னவனோடொப்பத தன்னுணையும் உடன்செலுத்தி அரசாட்சி செய் வானோ? கூறுவாயாக. மன்னவனேவலினின்று பணிந்தொழுகுவ னெனில் ‡தாட்டாந்திகப் பொருளினும் அவ்வாறு கொள்ளப்படும். படவே, அஃது எம் மினுஞ் சித்தாந்தமாகலின் உனக்கு அவசித்தாந்தமாம். இனி மன்னவனேவல் வழிநின்று அரசாட்சி செய்யினும் அது ¶பரதந்திரமாவதன்றிச் §சுதந்திர மன்மையான் உனக்கேலாது; அதிகாரத்தைத் தன்மாட்டு வைத்து மன்னவன் வறிதே யிருப்பத் தான் அரசாட்சி செய்வனெனினும் அது பாசுபதர்மதமாய் முடியு மாகலின் உனக்குச் சித்தாந்த மன்று; மன்னவனோடொப்பத் தன்னு ணையும் உடன்செலுத்திச் சுதந்திரனாய் அரசாட்சிசெய்வ னென்னின்; அஃது அநேகேச்சுரவாதி மதமாய் முடியும். அன்றியுந் தந்தையைப் பணிந்தொழுக

* சிவஞானசித்தி, சுகூ-ம் சூ. கo. செம்பிரத. † குதூகலம்–அபூருவமானபொருளா யவாவுகை. ‡ தாட்டாந்திகம்–திருட்டாந்தசம்பந்த முடையது. ஈண்டுத் திருட்டாந்தம் ஆன்மா. ¶ பரதந்திரம்–பிறர்வயமுடைமை. § சுதந்திரம்–தன்வயமுடைமை.

லின்றி அவன் செய்த நன்றியும் மறந்து அவனெடொப்பத் தானும் அரசாட்சி செய்வனாயின் அவன் நன்மக்களுள்வைத்து எண்ணப்படாமையின் ஈண்டைக்கு உவமையாதல் செல்லாது; இனிப் பணிந்தொழுகுதலு மின்றி அரசாட்சி செய்தலு மின்றித் தனக்கு வேண்டும் போகங்களே நுகர்ந்துகொண்டு சுதந்திரனுப் இருப்ப னெனினும் * "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை–செய்ந்நன்றி கொன்ற மகற்கு." என்ப வாகலின், வேடரோடு கூடி மயங்கிச் சிறுமைப்பட்டு நின்ற தன்னை அவரி னீக்கிப் பெருமையொடுந் தானுக்கிப் பெரியதோர் உதவி செய்து தந்தையுமாயினனே அவனேவல்வழி நின்று பணிந்தொழுகாது தானும் மன்னவனெடொப்பச் சுதந்திரமாய்த் தன்னுணையும் உடன்செலுத்தி அரசாட்சி செய்யும் மகனெடொப்பவனே யாகலான் ஈண்டைக் கேலாதென் றுழிக. அஃதேல் அநாதிமுத்தனுகிய சிவனும் ஆதிமுத்தனுகிய ஆன்மாவும் ஒருசாதி என்பது உணர்ந்துகோடன் மாத்திரைக்கே மன்னவனையும் அவன்மகனையும் ஒருபுடை ஒப்புமைபற்றி எடுத்துக்காட்டிய தெனின்; நன்றே கூறினுய்! ஒருசாதிமாத்திரையால் உனக்குப் போந்த தென்னை? மன்னவனும் அவன்மனைவியும் மன்னர்சாதியேயாயினும் மன்னவன் செய்யும் அரசாட்சி அவன் மனைவியுஞ் செய்வா ளென்றற் குரிமையின்மையின். அது போலச் சிவனும் ஆன்மாவுஞ் சித்தாதல்பற்றி ஒருசாதியேயாயினுஞ் சிவனெடொப்ப ஐந்தொழில் செய்யும் உரிமையுடையனல்லனென் றுழிக.

இன்னும் மன்னவன்மகன் ஏனையோர்போல ஆணையிற் பிறழுத லின்றி அந்தரங்கவுரிமை யுடைமையின் மன்னவன் செய்யுந் தண்டத்தை நோக்கச் சுதந்திரனேயன்றிப், பரதந்திரமுடையனல்ல னுயினும் மன்னவனுணைவழி நிற்கும் உரிமை யுடைமையான் மன்னவனை நோக்கப் பரதந்திரனேயாவன்; அதுபோல, முத்தனுகிய ஆன்மாவும் ஏனைய ஆன்மாக்கள்போலப் பந்தமுற்றுப் பிழைபடுதலின்றி இறைபணி வழுவாது நிற்கும் அந்தரங்க வுரிமையுடைமையான் இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைபற்றிப் பொதுவியல்பி னின்ற முதல்வன் செய்யும் ஐந்தொழிலை நோக்கச் சுதந்திரனேயன்றிப் பரதந்திரனல்ல னுயினும் இறைபணி வழுவாது நிற்றல்பற்றி இலயம் முதலியவற்றி னீங்கித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கப் பரதந்திரனே யன்றிச் சுதந்திரனல்லனென்றறிக. இஃதுணர்ந்துகோடற்கன்றே சர்வஞானேத்தரத்திற் "சிவன்" என்றும் "பதி" என்றும் வேறுவைத் தெண்ணியதூஉ மென்க. சிவாகமங்களி லோரோ விடத்தில் ஆன்மா பெத்தத்திற் பரதந்திரன் முத்தியிற் சுதந்திரன் எனவும் பரதந்திர ஞதல்பற்றி மல வுண்மை துணியப்படும் எனவுங் கூறுவன வெல்லாம் பொது வியல்புபற்றிப் பதியென நின்ற முதல்வன் செய்யும் ஐந்தொழினைகப்பட்டு நிற்றலும் அவற்றி னைகப் படாது நிற்றலும் பற்றியே பிறிதில்லையாகலின் அதுபற்றித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கியுஞ் சுதந்திர ஞவன்போலு மென மலையற்க.

இவ்வுண்மை உணராததூஉ மன்றி விஞ்ஞான தீக்கையின் உடல் †பொருள்களோ டொப்பச் சற்குரவன்கையிற் றுனஞ்செய் தளித்துந், தானஞ் செய்

* திருக்குறள், கக–ம் அதி. செய்ந்நன்றியறிதல். க0. † பொருள் என்றது ஈண்டுக் கன்மமாதல் பாடியகாரர் தாமே முன்னர்க் கூறுமாற்ரு னுணர்க.

களித்த பொருளென் றறியும் அறிவு சலியாமைப் பொருட்டு நாளும் காலுஞ் சிவபூசையிற் செபகன்மங்களோ டொப்பச் * "சிவோதாதா" என்னும் மந்திரம் ஓதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூரோடும் தானஞ்செய்தளித்தும், தாம் சுதந்திரரே சிவனுடைமையல்லர் எனப் பிணங்கிப் பரமசற்பாத்திரத்திற் ருனஞ்செய்தபொருளே அபகரிக்க நினைக்கும் நினைவுடையாரோடு பேசினும் உய்தியில்லதோர் கொடிய பாவமா மென்றுழிக. தம்மைத் தானஞ்செய்தலாவது தாம் சிவனுக்குப் பரதந்திரரென் றறிந்து அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராகிநிற்றலேயாமென் றுணர்க.

அற்றேல், மலவாசனை நீங்குதற்பொருட்டுத் தம்மைத் தானஞ்செய்ததாகப்பாவித்தன்மாத்திரையேயாகலின் அதுபற்றி இழுக்கென்னை யெனின்; அங்ஙனமாக, அப்பாவனை உண்மையோ? போலியோ? எனக் கடாயினுர்க்கு உண்மையெனிற் பரதந்திராதற் கிழுக்கில்லை; போலியெனிற், பசித்தவன், உண்டான்போல எத்துணைப் பாவகஞ் செய்யினும் பசிநீங்குதல் கண்டிலமாகலின் அதுபோலப் போலிப்பாவனையான் மலவாசனை நீக்குமாறின்மையின் அது வீண் தொழிலாய் முடியும்.

இன்னும் பாவனை போலியென்பார்க்குப் †பாவனையின் வழியவாய்ச் செய்யும் மந்திர கிரியைகளும் போலியாய் முடியும்; முடியவே, பாவனைமுதன் மூன்றனும் அவர் செய்யுஞ் சிவதீக்கையுஞ் சிவபூசையுஞ் செபம் தியானம் முதலிய எல்லா ஆசாரங்களும் அங்ஙனம் போலியாய்ச் செய்வது தமக்கானும் பிறர்க்கானும் பயன்படுமாறின்மையின் மாணக்கரை வஞ்சித்துப் பொருள்கொண்டு தம்முடம்பை ஓம்புதற்பொருட்டுச் செய்யும் ஆசாரமாத்திரையே போலுமென் றுழிக.

அற்றேல், கருடபாவனை செய்வோன் கருடனுதல் கண்டிலம் அப்பாவனையால் விடந்தீருதல் கண்டாமாகலிற் போலிப் பாவனையும் பயன்றரும் என்பது பெறப்படுமாலெனின்; அறியாது கூறினுய், மாந்திரிகன் தன்னுடம்பைக் கருடனுகப் பாவிப்பானல்லன்; மற்றென்னையோவெனிற், கருடனுக்கு அதிதெய்வமாகி நிற்கும் மந்திர மூர்த்தியாகத் தன்னுன்மாவைப் பாவிப்பன். அங்ஙனம் பாவித்தவழிச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு மியல்புடைய ஆன்மா ஆண்டு அம்மந்திர ரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையின் அதுபற்றி ஆசங்கையின்மை உணர்க. இன்னும் பாவனைகளும் உபாசனைகளுங் கற்பித்துக்கொண்டு செய்யும் போலியென்றன் மாயாவாதிகூறுங் கூற்றுகலின். அது சைவசித்தாந்தத்திற் கேலாமையறிக.

அற்றேல், ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு மியல்புடையன் என்றற்கும், அதனனே தன்னுற் கணிக்கப்படும் மந்திரரூபியாய் நிற்பன் என்றற்கும், விலங்கு புள்ளுக்கு அதிதெய்வமாய் நின்று அதிட்டிக்கும் மந்திர முண்

* சிவோதாதா என்னும் மந்திரம் சிவொ ஧ாதா சிவொ ஹ்ருதா சிவஃ ஸவ-ுதிஂ ஜமஸ்சிவொயஜி ஸவ-ுதி யஃசிவஃ ஹொஹ ஷ்வேதஃ॥ என்பது. † பாவனையின்வழி அவர் செய்யும் என்பதும் பாடம்.

டென்றற்கும் பிரமாணமுண்டாயினன்றே அதுபற்றிக் கருடபாவனை முதலாயின உண்மைப்பாவனையென்று கொள்ளப்படுமாகலின் இவற்றிற்குப் பிரமாணம் என்னையெனிற் சர்வஞாஜ்ஞத்தரம் முதலிய ஆகமங்களே பிரமாணமாமென்றறிக. அஃதெங்ஙனமெனிற்காட்டுதும்:—

சர்வஞாஜ்ஞத்தரத்திற் *பசுவும், பாசமும், அதிகாரஞ் செய்து நிற்பதாகிய பதியும், அதிகாரத்தி ஞெழிந்து தன்னியல்பி னிற்பதாகிய சிவமும் எனப் பதார்த்தம் நான்கென் றெடுத்துக்கொண்டு, அவற்றிற்குத் தனித்தனி இலக்கணமு முணர்த்திப், பின்பு அதுகேட்ட அறுமுகக்கடவுளுக்கு அங்ஙனம் †அப்பிரமேயமாய் ஒன்றோடு உவமிக்கப்படாததாய் அதிருக்குமமாய்வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை அறியுமா றெங்ஙனம்? என்று ஆசங்கை நிகழாமைப் பொருட்டுச் ‡சிவப்பொருள் அத்தன்மைத்தாயினும் அதனை அறிதற்கு உபாயங் கூறுகின்றும், அவ்வுபாயம் வாதிக ளெவரானும் அறியப்பட்டதன்றாய்க் குருபரம்பரையின் அறியப்படுவது, ஒருவர்க்கும் யாங் கூறினேமல்லேம், அதனை நீ கேட்பாயாக என்று அதன் பெருமை எடுத்துக் காட்டி, ¶அநாதிமுத்தனாய் நின்ற §சிவனுக்குரிய தன்மைகளும், ०அத்தன்மைய

இங்கே கூறிய சர்வஞாஜ்ஞத்தராகமத்தின் பொருள்களைப் பின்னர்க் குறிக்கப்படும் மேற்படி ஆகமத்தின் சுலோகங்களோடு அடையாளப்படி ஒட்டி உணர்க.

* கெவாஸாஃ கெஜாஃ வெ்ரகாஃ கஷாஸு வந்ஜீ வ-ரோதி்தி|வ திஷ்ட கிம்வியொ ஜ்ஞேயஃ ஷாயிகாரு வதெஷ்டி்தஃ॥ஸிவஷ்டகீஷ்டஸஃ வெ்ரகெ்தா யொயிகாரவிவஜி-ுதஃ|

† கூதீந்ரியொ நிராலம்வஃ ஷ-ஷஷ்டகஃ ஸாஷ்வதொ யு-வஃ॥ஷவன வஜமவாநுவ்யாவீ கூவ்ரதெியொ ஹ்யநளவஃ|வஷிராத வி-ுஹாமெந திஷ்டெதெஜஸிவஷ்டி்தஃ॥ அப்பிரமேயம் அளவையானளக்கப் படாதது.

‡ கூயாநுஜ் வாவ்ரவக்ஷ்யாமி உவாய ஹகூவதொ ம-ஹ|கூஸ்ராஹ்ய வ்யாவி வஜீகூஷவ் வவ-ுமவ்யுத-ு நிஷ்டீழி|யெநவிஜ்ஞாயதெஷவிஜ்யஜ்ஞாகூவாத-ு ஸிஃவாஜவெகூ|நகூவ்யவி நியாவ்யாத-ு தத்விஜ்ஞாநஷ்ரஷ்ணஷ்வதெ|ஸ-ரஷ-ுவரஃவரயா ஷ்ரஷ்டீ ஷ்ரஷ்டஃ வவ-ுவாஜிஜீ॥

¶ யொவெள வவ-ுமதொ தெவஃ வவ-ுரந்தா வவ-ுதொ:ஷவஃ| வவ-ுதகூஜியொ விஜீயஃ வவ-ுவ்யொவரி வஃஷ்டி்தஃ॥வவ-ுதகூ வ்யதீதஷ்ட வாஷ்டெநா நாஃ வஜி-ுதஃ|

§ சிவனுக்குரியதன்மைகளாவன:—சர்வான்மாக்களாதல், எங்கும்வியாபியாதல், தத்துவரூபியாதல், தாத்துவாதீதராதல், எப்பொருளினும்மேம்படுகை, வாக்கு மனம் பெயர் இவற்றை நீங்குதல் முதலியன.

० ஹொ ஹஜெவ ஃ-வாவீத நிவி-ுகெ்ரந வெதவா|

ஞகிய சிவனே நான் எனச்சிவோகம்பாவனை செய்யுமாறும், *அவ்வாறன்றித் †துவித பாவனை செய்தாற்படி மிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித், ‡துவித பாவனையைக் கைவிட்டுச் சிவோகம் என அத்துவித பாவனை செய்வோன் ஏகதேசமாய் நின்றறிவதாகிய சிற்றறிவினீங்கி முழுவதும் வியாபகமாய்நின்று அறிவதாகிய முற்றுணர்வு விளங்கிச் சிவனை அறிந்து தான் சிவனேயாவனை னச் சிவனை அறிதற்கு ¶உபாயங் கூறிப், பின் அதுகேட்ட அறுமுகக் கடவு ளுக்கு மேல் §உத்தேசங் கூறும்வழியும் oஇலக்கணங் கூறும்வழியுஞ் சிவனும் ஆன்மாவும் இருபொருள் என வைத்தோதுதலிற் சிவனின் வேறாகிய ஆன்மா சிவோகமெனப் பாவிக்கும் அத்துவித பாவனையாற் சிவனே தானாக**அயிக்க மாமா றெங்ஙனம்? என்று ஆசங்கை நிகழாமைப்பொருட்டு, ஆன்மா தன்னியல் பை அறியாது பசுத்துவத்தோடு கூடியவழிப் பசுவாய் நின்றுன்; அதுபோ லத் தன்னை அறிந்து சிவத்துவத்தோடு கூடியவழிச் சிவமாய் நிற்பதற்கு ஐய மில்லையாகலாற் றன்னையுந் தலைவனையும் ††பராபரபேதத்தானும் தூலசூக்கும பேதத்தானும் எப்பொழுதும் பயின்றறிதல் வேண்டுமென் றோதி, அற்றேல், ஆன்மாவினியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடு கூடிப் பசு எனவுஞ் சிவத்துவத்தோடு கூடிச் சிவம் எனவும் பலதன்மைப்பட்டு நிற்குமாறென்னை? என்று மீளவும் ஐயுறுமைப்பொருட்டு, ‡‡"அதவா" என்றுஎடுத்துக்கொண்டு தெளிவு பிறவாது மீள மீள மயங்குதற் கேதுவாய வார்த்தைகளை விகற்பித்து

---

* ஈஹரோ ஹிவொ ஹ்யநுஃ வரஃரொ த்தி யஃஸ்ய தஃ॥ஸவம்உவா ஸயெஸு தொஹா ஹமிவஷ்ய சிவாஒ்யாஸ்|

† துவிதபாவனை செய்தாற்படி மிழுக்கு சிவத்துவ மடையாமை.

‡ ஸிவொ நு ஷ்ஹரெவா நுஃ வ்யஸ்ஹாவம் விஜ்ருயெஸ்| யஃஸிவஃ வொ ஹ்ருதி கரெதெ தம் ஹாவயெஸ் வை ஹா॥கரெதெ தஹரவ நாயஃ ஸ்ரீ வவ்ருதா நி வம்ஸ்யி தஃ|வவ்ருமம்வவ்ருதெ ஹஹ்ரம் வஸ்ருதெ நா தர வம்ஸயஃ॥தஸ்மா ஏ தஸ்மா வை ஏஃ வஃவிஷாயு ஸ்ரீ விஜ்ஞெ ஸ்ரீணஃ|வவ்ருஜ்ஞா வ்ருகரெ்ரத விக்ரு ரஹி தவ்ய|ச॥

¶ சிவனை அறிதற்கு உபாயம் சிவோகம்பாவனை. § உத்தேசம் கூறல் பேர்மாத்தி ரையாற் பொருளையெடுத்துரைத்தல். o இலக்கணங்கூறல் பொருளின்சிறப்பியல்பு உரைத்தல். ** அயிக்கம் என்பது ஐக்கியம் என்பதன் விகாரம்.

†† வராவர விஹாமெந வ்ருஷ்ஹ விஹாமஸ்|வவ தெகா தஸ் ஹாவெந வம்ஸ்யி தவ்ய தஸ் யொமி நஃ॥வரஃ வரஃ நிவ்ருணஃ கவரஃ வ்ருஷ்ஹி மெஷ தஃ|வ்ருஷ்ஹ்ரொ ஜ்ரு யஃவெ்ரா கஃ வஸ்ரெஷ்ரா யுராரெ நகவம் ஷ்யி தஃ॥

‡‡ கயவா ஐஹ ஸொ ரெ்ரந கிஃ ரெ்ரந ஷயா நந|வாமி க்ரு விஸொ ஷெண ஃ நஸ்ஸ்ரொ ஹகாரிணா॥ அதவா என்பது இனியென்னும் பொருள்படும் ஓர் அவ்வியயம்.

இங்ஙனம் பலவாகச் சொல்லி என்னே? எனக்கூறியொழித்து,எல்லாச் சங்கைகளும் நீங்கித் தெளிவு பிறத்தற் கேதுவாகத் தொகுத்து ஒருவார்த்தையின் உணர்த்துவான் புகுந்து 'சர்வே தர்ம' வவெ-யசி-ா தந்ஸ்ஸந்தி யதெவ வரிகவுயெக|தத்தகவஅதந வஎஹஹாக வஹாதஹ்ாவஹாவதஃ||உதெயு வசாதவிஜாதந கயிதஅந வசாவதஃ|என்று அருளிச்செய்தார்.

இதன்பொருள் ஆன்மா அங்ஙனம் இருதன்மைப்படுமாறென்னே? என்று வினவுதிகேள்; எல்லாப் பொருளின் தன்மைகளும் ஆன்மாவுக்கு உளவாம்; அஃதெங்ஙனமெனின், ஆன்மா யாதனையாதனைப் பற்றினன் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந்தன்மை யுடைமையான் அதுவதுவாயே நிற்பன் என்று இங்ஙனம் ஆன்மாவை அறியுமாறு தொகுத்துக்கூறினும் கண்டுகொள்க. என்பதாம்.

இங்ஙனந் தொகுத்துணர்த்திப், பின்னும் இவ்வாறறியும் * ஆன்மஞானத்தினபெருமையும், அதனைப் பெறும் பேறும், அதனை அறிதற்கு உபாயமும், அறிந்தானது பெருமையும் விரித்துக் கூறி, † இதற்குமேற் சொல்லற்பாலது சிறிதுமில்லை யாகலான் மனிவகற்பங்களை ஒழித்து இங்ஙனந் தன்னுண்மை அறிந்து உபாயங்களைச் செய்வோன் இங்கே சீவன்முத்தனுய் அகம்புறமெங்கும் வியாபித்துத் தற்றருமதருமியாய்த் தற்றருமம் எனப்பட்ட முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களுமுடையனுய் இங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருட்டிப்படுந்தன்மை முதலியனவின்றிச் சிவசமமாவன். ‡இத்தன்மையு

---

* ஜாகெவவாத யோவவு சாதாநம வயு-வாவயெக||நதத்ர தெவாவெதாவா யஜாவாவஹ-ஷ்கிணாஃ|கூகஃவிஜாந சாஶ்ரிதெ விஶ்வம் வவ-ுதிசி-வ:|வம்வாரராண-ுவ சிஹ்ரநாம ஹஶ்தாநாம ஶரணாயி-ு நாம்|நாநுஃ ஶரணஷ்ஃகஶ்ரிக கூகஃஜாநாஷ்டுதெ கவிக||கூகஃசாநம் வரதொ ஹஶ்வா யொவிஜாநாதி தக்வதிஃ|வசி-வுதெ கவயத்தந வவ-ுா வவ்ரம் மதெசாவிவஸ்ு||கூகஃஶுஹாக வரொஶுாஹஃ கவிஷ்டெநுா நவிஷுதெ|

† கவ்ரக வராஜாநு கிஹாவஸ்திகிஶ்ரக ஜாகெவ வவஜுஜு சிநாவிகவு ழ்||விஜாந தெவம வசி-வாவஸ்ு விசாரு நியசிகாயம வததகம நிய-கஶ்|வவ-ுது மாசி ஹவ தீஹ சி-க வஃவசி-ுயசீ-ு வெஹிராஜாவஸ்ு||வவ-ுஜு தாதுவஸ்ி ரு நாதி வொயஃ வ்வதஜு தாநிது சிவ-வ ஶகஸ்ஃ|கநதகஶ கிஶ்ரு நிராசி யாகசா விஶ-ஃ தெஹஃ வஶிவகவ தெகி||

‡ நஜவொ நாவ-ுநம வ்ரநம நஹொதொ தெநெவ வ:ய நழ்|யசி-ாயசி-ு மஹம நாவஸ்ி நவிணொ தெநாகெகிஸ்யா||நியாநி நதவாரு

டையானுக்குத் *தவஞ் செபம்தியானம்பூசைமுதலியன ஒன்றும்வேண்டாம்; சத்தியம்!சத்தியம்!சத்தியம்!,முக்காலுஞ் சத்தியம்!;இதற்குமேல் அறியற்பாலன ஒருநூலினுமில்லை. என வலியுறுத்திப்,பின்னும் ஆன்மா எல்லாவற்றினும் அதுவதுவாய்நிற்குமாற்றைப் †பூதான்மா முதல் அறுவகைப்படுத்துவிரித்து இன்னுங் கூறுதும் கேட்பாயாக என்றெடுத்துக்கொண்டு, பூதபரிணமமாகிய உடம்பினியல்புகளும், ஆன்மா அவ்வுடம்பைப் பற்றியவழிப் பூதான்மா எனநிற்குமாறும், அகத்தின்கண்ணவாகிய வாக்குக்களினியல்பும், ஆன்மா அவற்றைப் பற்றி அந்தரான்மா என நிற்குமாறும், சூக்குமபூதம் முதலிய தத்துவங்களினியல்பும், ஆன்மா அத்தத்துவங்களைப் பற்றியவழித் தத்துவான்மா என நிற்குமாறும், அத்தத்துவங்களுள்ளும் ஆன்மா எவ்வெத் தத்துவங்களைப்பற்றினனவ்வவத் தத்துவமயமேமாய் நிற்பன் என்பதூஉம், ஆன்மா ‡போத்திருத்துவமெய்திப் புருடதத்துவமென நிற்குமியல்பும், அங்ஙனம் புருடதத்துவமாய் நின்று பிரகிருதி குணங்களைப் பற்றி இன்பத்துன்பங்களை நுகரும்வழிச் சீவான்மா எனநிற்குமாறும், ¶சுரர் நரர் விலங்கு புள்ளுதாவரம் எல்லாவற்றிற்கும் அதிதெய்வ மந்திரங்கள் உளவெனவும், தாவர சங்கமங்களுள் மந்திரங்களான் அதிட்டிக்கப்படாத உயிர்களில்லை எனவும், மந்திரங்களை உச்சரிக்கும் முறைமை இவ்வாறெனவும், இவ்வாறு மந்திரங்களினியல்பும், அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மா படிகம்போல அவ்வம்மந்திரமயமேமாய் மந்திரான்மா என நிற்குமாறும், தன்னின் வேறுகிய இவ்வைவகைப் பெயரினீங்கியவழி மேற்கூறிய அத்துவிதபாவனையாற் பரமான்மா என நிற்குமாறும் விரித்துந் தொகுத்துங் கூறி,ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு

வரிதெரவவரவொ வியியதெ|வ்வ்ஜ்ஜீஜ்ஜு ந்வ்ஜ்ஜீஜ்ஜு வ்ஜ ஹஜவயய்ஜ் வ்ஜ தாநிஜ|கூநிவ்ஜ வெஜ நம்நரவ்ஜி வத நம்கூஜ மூஜெதரஜெ|ஜிவஜ்ஜரா ஜ்ஜ தம்வீகூவரிவரவ்வ யஜரவ்ஜ-வ்ஜ்ஜ்||ஜிவவ ஹ்ரஜ்வ்ஜ்தீ ஜூஜ்ஜீ வ்ஜ்வ்ஜியதீஜ் விவஜ்ஜ்தீ|வ்ஜ்தய் வ்ஜ்தும் வ-நீஜ்வ்ஜ்தய் ஜ்ரீவ்ஜ்தும் ஜவயஜீ கூஜ்தீ|| கூதீ வரதரரம் நரவ்ஜி விஜ்ஜேயம் கூ-ஜ்ரேயிஜ் மூஹ|

* முதலியன என்றதனுல் ஸ்நானம், ஓமம், நியமம், உபவாசம், விரதம், பிண்டதானம், தர்ப்பணஞ்செய்தல், அக்கினிப்பிரவேசம் என்பனவும் பிறவும் கொள்க.

† ஹூஜ்தாஜரஜ ஹ்ரூஜ்ஜராஜரஜ தகூவாஜரஜ ஜீவவம ஜகூஜீ|ஜஜ்ராஜரஜ வராஜவ்ஜ்ரு வஜகூவபி வஜஹூயர வ்ஜ்ஜ்தீ||ஹூஜ்தாஜரஜ ஹூஜ்தவம்யொமாஜ் தகூவாஜரஜ தகூவவம்வ்ஜ்ஜ்தீ|ஜஜ்ராஜரஜ ஜஜ்ரீஜ்யொ ஜ்ரேயீ ஜகூஜ்ராஜரஜ்மி ராந்ஜ்தீ||ஹொகூத- வ-வ்ரேஜீவர நரம் வ்ரூஜ்ரீவ்ரூ மூணாந்ஜ்தீ| ஜீவாஜரஜ ஜீவ நஜ்ரெஷரம் வஜஜ்ரு-கூஜீ வரவஜ-வஜீ||

‡ போத்திருத்துவம் போகதுகர்ச்சிக்கு வினைமுதலாந்தன்மை.

¶ வஜ்ரெவாவஜ-ர யகூஜாணரம்கிஜ்ராவ்ரூ ரகூஜவரழ்|வீதரூரீதரூம ணாநாஜ வரிஜவிஜ்ரூயரராஜிஷ-ர்நாம மந்ரூவ்ஜ் தியஜகூ-ர வீஸரவரநா கூ ரந-ஷரழ்|ஜிவரஜி வவ்ஜ் தகூவாநரம ஜ்ஜ்ரா விஜ்ரூங்கி ஸரஸ்ரூதரீ||

மென மேற்கூறியதனீ மீளவும் வலியுறுத்தி, இவ்வறுவகையுள் ஏனையவெல்லாம் உபாதிபற்றிய செயற்கையாதலும் அத்துவிதபாவனீயாற் பரமான்மா என நிற்றல் சித்தென்னுஞ் சாதிப்பொதுமைபற்றிய இயற்கையாதலுந் தெரித்துணர்த்தி, இங்ஙனமாகலான் *அத்துவித பாவனீயுடையோன் ஞானக்கண்ணுற் சிவனீ ஆன்மாவிற் கண்டு முழுதும் வியாபகமாய் நின்று அறிவதாகிய முற்றுணர்வுடனுய் அவ்வப் பொருளியல்பெல்லா மறிந்து மலவாசனீ நீங்கிக் கேவலமாய் நின்று முடிவுகாண்கில்லாப் பேரின்பத்தைப் பெறுவன் என முடிக்கத முடித்துக்காட்டி, இங்ஙனம் சீகண்டவருத்திர நாயனுர் அறுமுகக்கட வுளுக்குச் சர்வஞானேத்தரத்தின் ஞானபாதஞ் செவியறிவுறுத்தருளினுர். இன்னும் இதனீ ஈண்டுரைத்தவாறுபற்றி விரித்துரைத்துக்கொள்க.

இவ்வாகமத்துள் இத்தனீ வலியுறுத்திச் சிவனீ டொற்றுமைப்பட நின்று தன்னீப் பாவிப்பதாகிய ஆன்மஞானம் ஒன்றே அப்பிரமேயமாய் ஒன்றுடு முவமிக்கப்படாது நின்ற அச்சிவனீ அறிதற் குபாயமென்றும், அங்ஙனம்பாவிக்கவே அச்சிவனீ டொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவனென்றும், அசுத்தப்பொருளோ டொற்றுமைப்பட்டு நின்ற ஆன்மா சுத்தப் பொருளோ டொற்றுமைப்பட்டு நிற்குமா றெங்ஙனம்? என்னும் ஐயம்நீக்குதற்குத் தொகுத்து ஒருவார்த்தையாற் கூறுதுமென் றெடுத்துக்கொண்டு ஆன்மா எதனீ எதனீச் சார்ந்தான் அதனதன் சுபாவமே தன்சுபாவமாய் அதுவதுவாய் நிற்பனென்றும், இங்ஙனமாகலாற் சிவனீ டொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன்குணங்களாகிய எண்குணங்களுந் தன்றன்மையாகக்கொண்டு சிவனேயாய் நிற்பன்; இதுவே சிவத்துவத்தைப் பெறுகலென்றும், இதற்குமேல்

நாவஷீ ழெஞ்ஜ வீஃநா கிஞ்ஜஃ வஷஃ, ஷ்ஷாவரா ஜாமஃழ்|யாவஜஃஃ கெஷநஃ வஷ்ஷா ழஞ்ஜாயிஷ்தி வீஃஜஹாஃ॥வஷெஃஷாவாஜ்ரய வஸ்வஜ்ஞம் ஷ்ஷுபி கொவஜ்ஷவீஃயா|உகிழஞ்ஜாகஃகஃவ்ஷாஷஃ வெஃராஃஃ வஷஃராய்ஃவாயகஃஃ॥

*கஷெஉ.தஹாவ,நா ய்ஷ்ஃஃ வஷிராகஃ,நகீஃவாஹயெகஃ|கஷ்ஷாகஃஃஜ்ஃத நநிதெஃந நிகீஃஷெநாவிகாரிணா|வ்ஷாவகெ நாதிஹஷெஞ்ஜண வஷிராணஜிர நஜ்ஷ்ஷா|விஷ்ஷஃ ஷாஷ்ஷ்தம் நிதஃ்ஃ கஷ்ஜயெய கநஜ்ஷவழி॥ நீவீஃகஷ்ஷ ழஜிஞ்ஜ்ஞ ஹொதஃஃஷ்ஷாஜ்ஞ வழிஃஃ.தகி|ஹஷ்ஜ்ஞ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷம் நிஃஃஷ்ஷாணம் ஷாஜ்ஞம் தகஷாதீதம் நிராஜ்ஞநழி॥கவிஹாவ்ஷ ஷஹஜ்ஞ்ஹம் வஷ்ஷ நீஃஷாநாகஃகநி|ஹவஃஃஷ்ஷம் ஹவஃஃஜ்ஞ்ஹஷ்ஷ்ஷ் வ்ஷாவகஃ ஹவஃஃதாகஃவழி॥நிராகஃயா நிராயாரா கஃகஃராநம் வஷ்ஷுதெ ஶிவழி|விஜிஹ்ஷ்ஷ் வ்ஷ்கியா ஷாமஃஷ்ஷ ஜஞ்ஜ் தஞ்ஜ் வராகஃவராழி॥ஶ்ஜ்தஃஃ ஶ்ஜ்தஃஃ ஜாமகஃ கூஜகஹ்ஷ் வஷ்ஷ்ஷுகாகஃகஃ நீஃவவ்ஷி்தழி|ஹவஃஃஜ்ஞ் ஹவஃஃஜ்ஞ்ஷ்ஷ்ஷ் வரிஹஷணஃஃ வஃஃநிகஃஃ॥விகஃஃகெஹவீஜ்ஹஜ்ஞ் வஃவ ஶிகஃய ஶஃஷ்ஃவாகஃ|

அறியற்பாலன ஒருநூலினுமில்லை! முக்காலும் சத்தியம்! என்று வலியுறுத்தியும், ஆன்மா எல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்குமாற்றை இன்னும் விளங்கக்கூறுதுமென்று எடுத்துக்கொண்டு பூதான்மா தத்துவான்மா மந்திரான்மா அந்தரான்மா சீவான்மா பரமான்மா என அறுவகைப்படுத்து அவ்வவற்றிற் கூடியவழி அவ்வப் பெயர்பெற்று அதுவதுவாய் நிற்பனென ஆண்டாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தை உவமைகூறியும், இங்ஙனம் ஏனை யாகமங்கள்போலப் பொருள் கவர்ச்சிப்படுதற்கு இடங்கொடாதவண்ணம் அறுமுகக்கடவுண்மாட்டு வைத்த கருணைமிகுதியான் அங்கையி னெல்லிக்கனிபோல ஆன்மாவினியல்பு விளங்க வுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி, எல்லாவாகமங்களினும் இது சிறந்ததென்பது தோன்றச் ''சர்வஞானோத்தரம்'' எனப் பெயருமிட்டு அருளிச்செய்த சிகண்டிவருத்திரக் கடவுளின் திருவளக்குறிப்போடு முரணித் தமக்குவேண்டியவாறே இவ்வாகமத்திற் கூறப்படும் வாக்கியப்பொருளையெல்லாம் இடர்ப்படுத்தி நவிலுது பொருள்கொண்டு உரைசெய்வாருமுளர். அவருரை போலி என்பது சொற்கிடக்கை முறையானும், மேற்பாயிரத்துட் கூறிய நியாயத்தானும் விளங்கக் கிடந்தவாறறிக.

இன்னும் மதமும் மறுப்புமாகவைத்து ஓதப்படும் பௌட்கரம் மதங்கம் மிருகேந்திரம் முதலிய சிவாகமங்கட்குச் சுபக்கம் பொதுவகையாற் கூறிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களே மறுப்பதுமாத்திரையே கருத்தென்பதூஉம், அவ்வாகமங்களானே பரபக்கங்களினுளவாகிய ஐயப்பாட்டினீங்கிச் சுபக்கத்தைச் சிறப்புவகையான் அறிய லுறுவார்க்குத் * தூலாருந்ததி நியாயம்பற்றி அதனைச் சிறந்தெடுத்தோதுதல் உபதேசமாத்திரையான் உணர்த்துவனவாகிய சர்வஞானோத்தரம் தேவிகாலோத்தரம் முதலிய சிவாகமங்கட்குக் கருத்தென்பதூஉம், இங்ஙனமாகலாற் பௌட்கரம் முதலியவற்றின் ஓதப்படுஞ் சுபக்கப்பொருள் சர்வஞானோத்தரம் முதலியவற்றின் பொருள் பற்றியே தெளிந்து கொள்ளப்படு மென்பதூஉம், மாறிக் கொள்ளின் வழுவா மென்பதூஉம் அவ்வச் சிவாகமங்களினியல்பு நோக்கி வன்மை மென்மை பற்றி உணர்ந்துகொள்க.

இன்னும் பௌட்கரத்தில் காட்சிப் பிரமாணத்தி னியல்பு கூறும்வழி இந்திரியத்திற்கும் விடயத்திற்கும் உளவாகிய சம்பந்தம் † சையோகம் முதல் அறுவகைப்படும் என நையாயிகர் மதம்பற்றிக் கூறி, உதாரணமும் அவ்வாறே காட்டப்பட்டன. ‡ஆங்காரத்தின் காரியமாகிய சோத்திரத்திற்கும் ஆகாயத்தின் குணமாகிய ஓசைக்கும் சமவாயசம்பந்தங் கூறுதல் மேற் பாசபடலத்துட் கூறிப்போந்ததனோடு முரணுதலின் அது சித்தாந்தமன்று; பிறர்மதம் பற்றிப் பொதுவகையாற் கூறியதென்பது உனக்கும் ஒப்பமுடிந்தது. குண

* தூலாருந்ததிநியாயம் பெரிதான ஒருகூத்திரத்தை முன்னர்க்காட்டி அதுவாயிலாகச் சிறிதான அருந்ததியைக் காட்டுதல்போலக் கொள்ளப்படும் ஒருநெறி. † சையோகம் முதல் அறுவகைச் சம்பந்தங்களாவன:—சையோகம், சையுத்தசமவாயம், சையுத்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடணவிசேடியத்தன்மை என்பன. இவற்றின்விரிவைத் தருக்கசங்கிரகவுரையிற் பிரத்தியகூப்பிரமாணத்திற் காண்க. ‡ ஆங்காரமென்றது ஈண்டுத் தைசசாகங்காரத்தை.

குணிகளும் சாதி வடிவுகளுந் தம்மின் வேறல்ல என்பதூஉம் *ஆண்டுக் கூறிப் போந்தமையின், ஈண்டு வேற்றுமைப்படுத்துக் குடவுருவத்தைக் கண் காணுங்காற் சையுத்தசமவாயம் என்றும், உருவத்தன்மையைக் காணுங்காற் சையுத்தசமவேதசமவாயம் என்றும் ஓதியதூஉம், சித்தாந்தத்திற் கேலாமையின் †பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறியதேயாமெனக் கொள்ளப்படும். சுத்தமாயையின் உண்மைக்குப் பிரமாணங் கூறும்வழிச் சுத்தாத்துவாவிற் கன்மமில்லை எனச் சாதித்ததும் பிறர்மதம்பற்றிப் பொதுவகையாற் கூறிய தேயாமென்பது இருவினையதிகரணத்திற் காட்டினும். இன்னோரன்னவை யெல்லாம் உபசாரம்பற்றிப் பொதுவகையாற் கூறப்பட்டனவன்றிச் சித்தாந்த மல்ல என்பது உனக்கு மூடம்பாடேயாமாகலிற், சுபக்கப்பொருளைப் பொதுவகையா னுட்டிவைத்துப் பலவாற்றானும் பரபக்கங்களை மறுத்தற்பொருட்டேயெழுந்த சிவாகமங்கள்பற்றிப் பொருளுண்மை தெளியப்படாதென்பதூஉம், அவற்றை முன்னெடுபின் மலிவற உய்த்துணர வல்லார்க்குச் செம்பொருள் இனிது விளங்குமென்பதூஉம், பரபக்கங்களைச் சிறிதுந்தீண்டாது சிறப்புவகையாற் சுபக்கமாத்திரையே கூறுதற்பொருட்டெழுந்த சர்வஞானோத்தரம் முதலியவற்றில் அங்ஙனம் உய்த்துணரவேண்டாது சித்தாந்தப் பொருள் இனிது விளங்குமென்பதூஉம் கண்டுகொள்க. அற்றாகலினன்றே பௌட்கரம் முதலியவற்றின் இத்துணை வலியுறுத்தி யெடுத்துக்கொண்டு ஓதாததூஉஞ், சர்வஞானோத்தரம் முதலியவற்றின் ''இதற்குமுன் ஒருவர்க்குங் கூறினேமல்லேம்; அதனை நீ கேட்பாயாக.'' எனவும், ''இதற்குமேற் சொல்லற்பாலன ஒருதூலினு மில்லை'' எனவும், ''தெளிவுபிறவாமைக் கேதுவாய்ப் பலபடச் சொல்லி என்னை?'' என் றெடுத்துக் கொண்டு ''சார்ந்ததன் வண்ணமாயே நிற்றல் ஆன்மாவின் இயல்பாம்; இங்ஙனம் ஆன்மாவினிலக்கணந் தொகுத்துரைத்தாம் உணர்ந்துகொள்க'' எனவும், ''சத்தியஞ்! சத்தியம்! முக்காலுஞ்சத்தியம்!'' எனவும் இத்துணை வலியுறுத்தி ஓதியதூஉமென்க.

அற்றேல், இங்ஙனங் கூறியவாற்றாற் சர்வஞானோத்தரத்திற்குச் சொற்கிடந்தவாறன்றி நலிந்து பொருள்கோடல் பொருந்காதென்ற தொக்கும்; ஏனையவெல்லாஞ் சொற்கிடந்தவாறே வேறுபொருள்படா வாயினும், ஆண்டுத் ''தற்றருமதருமி'' என்றது தற்றருமத்தோடொத்த தருமத்தை யுடையன் என வேறுபொருள்படு மென்றற் கிழுக்கென்னையெனின்; அறியாதுகூறினாய், அங்ஙனம் பொருள் கொள்ளிற் படிகம்போலத் தன்னைச் சாரப்பட்ட பொருளின் தன்மையே தன்றன்மையாகக்கொண்டு அதுவதுவாய் நிற்பது ஆன்மாவின் இலக்கணமெனத் தொகுத்து ஒருவார்த்தையின் விளங்க மேலோதிய வாக்கியத்தோடு மூரணுதலே மறந்தாய்போலும். இன்னும், ''ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய்நின்றறிவன், ஒன்றறியும்வழி மற்றுமொன்றனை அறியாமையின், யாவன் சார்ந்ததன் வண்ணமாகாது நின்றறிவான்? அவன் ஒன்றறியுங்கான் மற்றுமொன்றனை அறியாதானல்லன், சிவன்போல.'' என்னும் வழியளவையும் இவ்வாகம அளவையை வலியுறுத்திய வாறுகாண்க. இதனானே ''தற்றருமதருமி'' என்றதூஉம் பின் அதனை எண்வகைப்படுத்தோதியதூஉம் மிரு

* ஆண்டு என்றது பாசபடலத்தைக்குறித்தது. † பிறர் என்றது-தார்க்கிகரை. அவர் குணமும் குணியும் வேறெனக்கொள்ளுதலை பதினேழாம்பக்கத்திற் காண்க.

கேந்திரத்திற் கலிமுதலியவற்றைச் *"சிற்சங்க சித்து" என்றதுபோல வைத்துப் பொருள் கோடலே பொருத்த முடைமை அறிக.

இன்னும், "தற்பருமதருமி" என்பது தற்பருமத்தாற் பருமி என வேற்றுமைத்தொகைப்பொருள்படாது தற்பருமம்போலுந் தருமத்தையுடையன் என்று அன்மொழித்தொகைப்பொருள்படுமாயின், ஆண்டுத் தற்பருமதரும என நிற்பதன்றி அன்மொழித்தொகைமேல் உடைப்பொருள் விகுதி வாரா தென்னும் வடமொழி வியாகரணவிதியோடு முரணித் "தற்பருமதருமி" என உடைப்பொருள் விகுதிபெற்று நிற்றல் பொருந்தாமையிற் சொல்லியல் பானும் அது பிறிதுபொருள் படுதற் கேலாமை அறிக.

அற்றேல், சார்ந்ததன்வண்ணமாய் நிற்றல் ஆன்மாவி னியல்பன்று; செயற்கை யென்றுற்படு மிழுக்கென்னையெனின், அவ்வாறுதாமையானும், செயற்கை ஈண்டோதுதற்கோ ரியைபின்மையானும், செயற்கையாயவழி அத்துவிதபாவனையால் இருபொரு ளொற்றுமைப்பட நிற்றல் எவ்வாறென மேலோதியதுபற்றி நிகழும் ஆசங்கைக்கு விடையாகாமையானும், சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமாற்றைப் பூதான்மாமுதற் பரமான்மா ஈறுக அறுவகைப் படுத்து இன்னும் விரித்துக்காட்டுகின்றேமும் என இயற்கை செயற்கை இரண்டினுஞ் சேறற்குரிய இலக்கணமாக அதனைக் கூறுதலானும், மலத்தானுய செயற்கை அறியாமையாதலும் கலிமுதலிய கருவிகளானுய செயற்கை ஏகதேசவறிவாகலுமாத்திரையே யாகலின் இவற்றின் வேறுகிய சார்ந்ததன்வண்ணமாந் தன்மை இவைபோல மலம் முதலியவற்றுனுய செயற்கை என்றற்கோ ரியைபின்மையானும், அஃதான்மாவி னியல்பென்பதன்றிச் செயற்கை என்றற் கேலாமை அறிக.

அற்றேல், அவ்வவற்றின் குணமே தன்குணமாதலன்றித் தனக்கென வேறுகுணமில்லே போலுமெனின், ஆன்மாவுக்கு விசேடகுண மில்லேயாயிற் குணகுணிகட்கு வேற்றுமை இல்லே என்பது மேற்காட்டுதலிற் குணமில்வழிக் குணியும் இல்லேயெனப்பட்டுச் சிவாத்துவித மதமாய் முடியுமாகலின் அது பொருந்தாது. படிகத்திற்குச் சார்ந்ததன்வண்ணமாதன் மாத்திரையேயன்றி அதனைப் பற்றுந்தன்மையும், கண்ணுக்குச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்றன் மாத்திரையேயன்றி அவ்வாறு நின்று அவ்வப் பொருள்களைக் காணுந்தன்மையும் வேறுளவாயினுற்போல, ஆன்மாவுக்குச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்றன் மாத்திரையே யன்றி அவ்வாறுநின்று அவற்றை அறியுந்தன்மையாகிய விசேடகுணம் அவற்றின் வேறுய் உண்டென்க. இவ்வுண்மை விளங்கப் புடைநூலாசிரியரும் †"இருளொளியலாக் கண்டன்மையதாம்" எனச் சித்தாந்தஞ் செய்

---

* மிருகேந்திரத்தில் இந்திரியாதிப் பிரகரணத்தில் **உதாஹ்ருதி வாஹித ஜிஹ்ம வவ-ஸ்ருஜஞோஸ்ருஜ்ஜ்ஞ மஜ்ஞவிவத்ருத்வ மெஸாகூ** என்னும் சுலோகத்திற் கலிமுதலியவற்றைச் சிற்சங்கசித்து என்று கூறியிருத்தல் காண்க. அவை சித்தாகிய ஆன்மாவுடன் சேர்ந்தமையாற் சிற்சங்கசித்து என்னும் பெயரவாயின.† சிவப்பிரகாசம், உண்மை. உ–ம் சூ. கூ. சத்திது.

தார். இதனுனே தனித்துநின்றறியும் அறிவும் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியும் அறிவும் எனச் சித்து இருவகைப்படுமாறும், இரண்டுங் தம்மு ளொவ்வாதவாறும், படிசும் மாணிக்கத்தைச் சார்ந்தவழி மாணிக்கவண்ணம் முழுதுந் தன்வண்ணமாகக்கொண்டு நிற்றல்பற்றிப் படிகத்தைமாணிக்கமே என அதனே டொப்புமைகூறுதலமையும்: அதுபற்றி மாணிக்கத்தைப் படிகத்தோ டொப்புமை கூறுதலமையாதவாறுபோல, ஆன்மா சிவத்தைச் சார்ந்த வழிச் சிவத்தின் குணம்முழுவதுந் தன்குணமாகக் கொண்டு நிற்றல் பற்றி ஆன்மா சிவமே எனச் சிவத்தோ டொப்புமை கூறுதல் அமையும்; அதுபற்றிச் சிவத்தை ஆன்மாவோ டொப்புமை கூறுதல் சாலாதென்பதூஉம், படிகம் போலச் சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் ஆன்மா மலமுழுவதும் நீங்கித் தன்னறிவு வியாபகமாய் விளங்கியவழியும் தன்னுற்சாரப்பட்ட சிவத்தை மாத்திரம் அறிதலின்றி மற்றென்றனே அறிதல் செல்லாதென்பதூஉம், இது பற்றியன்றே சிவனுக்கடிமை எனப்பட்ட தென்பதூஉம், இன்னோரன்னவை பிறவும் அறிந்துகொள்க.

இக்கருத்தேபற்றிச் * "சிவன்சிவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னில்** அவனுக் கிவனுமசித் தாம்." என்றார் வழிநூலாசிரியரும். இதனுனே முழுவதும் மலம் நீங்கிய சிற்சத்தியுடைமைபற்றி ஆன்மாவுஞ் சிவமுந் தம்மு ளொப்பரென் றேதிய வழியளவையும் போலியாய் ஒழிந்தவாறுணர்க. என்னே? மலம் நீங்கித் தன்னறிவுமுழுவதும் விளங்கியவழியும் அதுவதுவாய் நின்றறிதலே ஆன்மாவின் இயல்பாதலின், அவ்வா றன்றித் தனித்துநின் றறிவதாகிய சிவமுந் தானுந் தம்முளொத்தல் சாலாமையா னென்பது. இன்னும் இதனுனே, நீரொடு நீரும் பாலொடு பாலுஞ் சேர்ந்தாற்போலென ஐக்கியவாதங் கூறுவார் மதமும் குடமுடைந்தவழிக் குடாகாயம் மகாகாயத்தோடு கூடி ஒன்றுமாறும் சிறை முறிந்தவழி யாற்றுநீர் கடனீரோடு கூடி ஒன்றுமாறும் போலெனச் சிவாத்துவிதங் கூறுவார் மதமும் மறுக்கப்பட்டன. ஆகமங்களின் அவ்வாறு அவற்றை எடுத்துக்காட்டியது ஒற்றுமைபடச் சேர்தன் மாத்திரைக்கு ஒருபுடையொப்புமையாதல்பற்றியே பிறிதில்லை என்க.

இன்னும், "தற்றருமதருமி" என் றேதியதனே மீளவும் விரித்துணர்த்துவான் புகுந்து, முற்றுணர்தன் முதலியனவாக எண்வகைப்படுத் தோதியவற்றுள் அநாதிபோதம் என்றொரு குணம் முற்றுணர்வு முதலியவற்றின் வேறுவைத் தெண்ணப்பட்டது. படவே, அஃது அநாதி முத்தத்தன்மை என்னுங் குணத்திற்குப் பரியாயப் பெயராய் அநாதியே ஞானம் விளங்குதல் எனப் பொருள்தருவதேயாமாகலின், அக்குணம் அநாதி முத்தனுகிய சிவனுக்கன்றி இடையே முத்திபெற்ற ஆன்மாவுக்கில்லை என்பது உனக்கும் ஒத்தலான், அநாதிபோதனல்லாத ஆன்மாவுக்கு அநாதிபோதத்தன்மை கூறியது மாணிக்க வொளிமுழுவதுந் தன்னைச் சார்ந்த படிகத்தில் விளங்கினுற்போலச் சிவனுக் குரியதருமம் தன்னைச் சார்ந்த ஆன்மாவின்மாட்டு விளங்குதன்மாத்திரையே பற்றி யாகலின், எனைக் குணங்கள் ஆன்மாவிற் கோதியதூஉம் அவ்வாறேயா மென்பது தெளியக்கிடந்தவாறறிக.

* சிவஞானசித்தி, சுசு–ம் சூ. சுசு.

இன்னும் பௌட்கரம் மதங்கம் முதலிய சிவாகமங்களிற் சிவனுக்குரிய எண்குணங்களே யன்றி அவற்றோடொப்ப வேறுய் ஆன்மாவுக்கு எண்குணங்களுளவென யாண்டானும் ஓதாமையானும், ''தற்றருமதருமி'' என்பதற்குத் தற்றருமமே தனக்குத் தருமமாக வுடையனென்னுது தற்றருமமாகிய சிவத்துவத்தோடொப்ப அதனின் வேறுதருமமாகிய சிவத்துவமுடையன் எனப் பொருள் செய்தல் * அவசித்தாந்தமென் றுழிக. அதுவதுவேயாய் நின்றறிதல் ஆன்மாவி னியல்பாதலின் ஆன்மா மலமுழுவதும் நீங்கிச் சிவத்தைச்சார்ந்தவழித் தன்னறிவு முன்போல் ஏகதேசமாதலின்றி வியாபகமாய் விளங்கினும், மாணிக்கத்தை முழுவதும்பற்றிய படிகம் அம்மாணிக்க மாத்திரையேயன்றி மற்றொன்றனையும் பற்றுதலாறுபோல அச்சிவத்தையேயன்றி மற்றொன்றனையும் அறியுமாறில்லை எனவும், மாணிக்கத்தினெளி படிகத்தின் முழுவதும் விளங்காதவழி விளங்காத பாகத்தான் மற்றொன்றனைப் பற்றுமாறுபோலச் சிவத்துவமாகிய எண்குணங்களும் தன்பால் முழுவதும் விளங்காதவழி மற்றொன்றனையும் அறியும்; அறியவே அதுவதுவாய் அழுந்துந் தன்மையானது பந்தத்திற் கேதுவாமாகலின், அங்ஙன மாகாமைப் பொருட்டுச் சிவத்துவம் முழுவதுந் தன்பால் விளங்கும்படி சிவோகம்பாவனையில் உறைத்துநிற்றல் வேண்டும் எனவும், அறிக.

அற்றுகலினன்றே சிவதிக்கையிற் †பிராசாதநெறியானே ஆன்மாவைச் சிவனிடத்தில் ‡யோசித்துப் பின்னுஞ் சிவனுடைய எண்குணங்கள் அதன்மாட்டு முழுவதும் விளங்கும்படி ஓரோவொன்றனை மும்மூன்றுகுயான் விளக்குவித்துச் சிவசமமாகச் செய்வதூஉம் என்றுணர்க.

இவ்வாறன்றிச், சிவன்குணத்தோ டொப்ப வேறுகுணமுடைமையே சிவசமம் என்னுஞ் சொற்குப் பொருளென்பாரைக் குணங்க ளொருபுடையொத்தலாற் சிவசமமோ? முழுவது மொத்தலாற் சிவசமமோ? எனக் கடாயினார்க்கு ஒருபுடை யொத்தலாற் சிவசமமென ¶விடுப்பின்; ஒருபுடை ஒக்கும் என்பது எல்லா வாதிகட்கும் உடம்பாடாதலின், அதனுன் உனக்குப்போந்ததொன் றின்மையானும், முழுவது மொத்தலாற் சிவசமம் என விடுப்பின் முழுவதும் ஒத்தவழி ஒன்றே யாதலின் இருபொருளாய் நிற்குமா றின்மையானும், குணங்களான் வேற்றுமை யின்றுயினும் குணிப்பொருள் வேறுதல் அழையுமெனிற், சைவசித்தாந்தத்திற் குணமே குணியுமாய் நிற்பதாகலின் அதனை மறந்து நையாயிகர்மதத்தில் வீழ்ந்து குணமுங் குணியும் தம்முள்வேறெனக்கொண்டு இரண்டிற்குங் குணங்கள் ஒன்று குணியான் வேறு என்றல் பொருந்தாமையானும், குணங்களின் வேற்றுமை இல்வழிக் குணிகளின் வேற்றுமை பெறப்படாமையானும், நித்தப் பொருள்களின் வேறுபாடு தெரிப்பதற்கு விசேடம் என்றொரு பதார்த்தம் உண்டெனத் தார்க்கிகர் கொண்டதுபோலச் சைவசித்தாந்தத்திற் கொள்ளாமையின் இலக்கண வேறுபாடே

* அவசித்தாந்தம் தருக்கநூலிற் கூறபபட்ட எதப்போலிகளுள் ஒன்று; அது தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளேச் சொலிச் சித்தாந்தஞ் சாதித்தல். † பிராசாதநெறி—துவாதசகலே முதலியன. இவற்றின் விரிவை பிராசாத சட்சுலோகி சித்தாந்த சாராவலி முதலியவற்றுட் காண்க. ‡ யோசித்தல்—சேர்த்தல். ¶ விடுத்தல்—விடைகூறல்.

இலக்கியத்தின் வேறுபாட்டைத் தெரிவிப்பதாகலானும், இதனானே அதுவதுவாய் நின் றறிதலாகிய பொது இலக்கணமாத்திரையே யன்றி ஆன்மாக்களுக்குத் தனித்தனி சிறப்பிலக்கணங்களுள என்பதும் பெறப்படும்: அற்றாகலினன்றே மலசத்திகள் பலவாயின: அவை இவை என்பது உண்மைபதிகாரத்திற் காட்டப்படுமாகலின் அதுபற்றி ஆசங்கை யின்மையானும், இன்னும் சிவமும் ஆன்மாவும் இலக்கணத்தான் ஒன்றுபவழிப் பதி பசு என வேறுவைத்தெண்ணுதல் பொருந்தாமையானும், பசுத்துவசாதி வேறுகலின் அதுபற்றி வேறெண்ணியதெனிற் பசுத்துவம் உபாதியாதலன்றிச் சாதியாகாமையின் அங்ஙனங் கூறுதல் சாதி இது உபாதி இது என் றறியாதார் கூற்றே யாகலின் அதுபற்றி வேறெண்ணுதல் பொருந்தாமையானும், இதனானே பசுவாய்நின்ற ஆன்மசாதி வேறு, சிவமாய் நின்ற ஆன்மசாதி வேறெனக்கொண்டு அவ்விரண்டற்கும் அத்துவிதங் கூறுதல் சர்வஞானேத்தரத்தின் கருத்தெனத் தமக்குரிய நயத்தைவிட்டு மாயாவாதிமதம்பற்றி உரைசெய்தலும் போலியாகலானும், இன்னும் சிவனும் ஆன்மாவும் இலக்கணத்தான் ஒன்றுபவழிச் சிவனீ மறைக்கமாட்டாது ஆணவமலம் ஆன்மாவுக்கு * ஆவாரகமாதல் செல்லாமையானும், ஞாயிற்றை இருள் மறைத்தல் கண்டிலமாகலானும், சிவனுக்கு † ஒப்பாரும் மிக்காரும் இல்லை என எல்லாச் சிவாகமங்களும் முழக்குதலானும், பிறவாற்றானுஞ் சிவசமம் என்னுஞ் சொற்கு அதுபொருளன்மை உணர்ந்துகொள்க.

இங்ஙனம் சிவாகமங்களையும் பொருந்துமாறுகளையும் முன்னெடுபின் மலிவறநோக்கிப் பொருண்மை துணியமாட்டாதார், ஐந்தொழிலி னேவப்பட்டுப் பிணிப்புண்டு முன்னின்ற பரதந்திரத்தை நோக்கி முத்திபெற்றவான்மா சுதந்திரனென் றோதப்படும்: அங்ஙனமாயினும் அதுவதுவாய் நிற்குமியல்பானே உபாதியினீங்கிச் சிவமேயாயவழிச் சிவமொன்றனையே அறிந்து நிற்பதாகலிற் சிவனுக்கடிமையாம் என்னும் உணர்வு நிலைபெறும்படி சிவதீக்கையினும் சிவபூசையினும் மந்திரம் முதலிய மூன்றினும் தானஞ் செய்தனித்த பொருளாகலான் அதனை நோக்கிப் பரதந்திரனேயாமென்பதும் உணராது, ‡"தன்பமா மெல்லாம் பரவசனுய்த் தான்றுவளி–லின்பமாந் தன்வசனு யேயிருக்கில்." என்றதும் இக்கருத்தேபற்றி ஓதியதென்பதற்கு ஆண்டுத் "துவளில்" என்றதே சான்றுமென்பது முணராது, மாசு நீங்கியவழி ஆடையின் வெண்மை ஆடை முழுவதும் விளங்கினாற்போல மலம் நீங்கியவழி "ஆன்மவியாபகம் முழுதினும் விளங்கி நின்ற ஆன்மஞானம் முன் ஏகதேசத்தின் விளங்கிச் சிற்றறிவாய் நின்றதனைநோக்கப் பேரறிவெனப்படும்: அங்ஙனமாயினும் வியாபகம் முழுதினுஞ் சிவமாய் நின்று சிவமொன்றனையே அறிவதன்றி மற்றொன்றனை அறியுமாறின்மையின் முழுதும் ஓருங்கேயுணரும் பேரறிவாகிய சிவஞானத்தை நோக்கச் சிற்றறிவேயாமென்பதும்

---

* ஆவாரகம்–மறைத்தல். † சிவனுக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை என ஆகமம் முழக்குதலை. கஉஉ ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. இன்னும் இதனை நதி தீஸ்ரா ஹ்யகஸ்ய ஸ்ரீஸ்ய என்னும் சுவேதாசுவதரத்து சு ம் அத்தியாயத்தின் சு ம் மந்திரத்தானும் உணர்க. ‡ திருக்களிற்றுப்படியார். சசு.

உணராது, *"பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்–பெருகி." என்றதும் இக் கருத்தேதபற்றி ஓதியதென்பதற்கு *"நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமா மே."என ஆண்டோதியதே சாவ்ரூமென்பதும் உணராது, சிவத்துவ முழுவ துந்தன்மாட்டுவிளங்குதலாற் சிவனதாகிய சுதந்திரமும் முற்றுணர்வுந் தாணு டையனுயினும் †"ஆழவமுக்கி முகக்கினு மாழ்கடலி–னுழிமுகவாது நானுழி" என்னும் நியாயத்தாற் றன்னுல் அறியற்பாலது சிவமொன்றே என்பதும் உணராது, தனக்குவேண்டும் பெரும்பயனிற் சிறிதுங் குறைவின்மையின் ஏனையவற்றை அறியாமை பற்றி ஒருதாழ்வில்லை பென்பது முணராது, அது வதுவாய்நின் றனுபவிக்கும் ஆன்மா ஏனையவற்றையும் அறிவுழிச் சிவானுபவ விளைவிற் குறைபடுமாகலின் ஏனையவற்றை அறிதல் முத்திப் பெரும்பயனு க்கு இடையூறென்பதும் ஏனையவற்றை அறியாமையே முத்திப்பெரும் பய னுக்குச் சிறந்த காரணம் என்பதும் உணராது, இக்கருத்தேதபற்றியன்றே ‡"இன்பங் கொடுத்தலிறை யித்தை விளைவித்தன் மலம்" என்ருேதியதென்ப தூஉம் உணராது, எண்குணங்களின் அநாதிபோதம் என முற்றுணர்வின் வே றுவைத்தெண்ணியது அநாதிமுத்தத் தன்மைக்குப் பரியாயப் பெயரேயாக லின் அதுவும் அதனேடெண்ணிய ஏனைக்குணங்களும் அநாதிமுத்தனுகியசிவ னுக்கே யுரியகுணங்களென்பது முணராது, அக்குணங்கள் முழுவதும் படிகம் போலப் பற்றியதன்வண்ணமாய் நிற்கு மியல்புடைய ஆன்மாவின்மாட்டு விள ங்கிய உபசாரத்தால் அவையே ஆன்மாவிற் குரிய குணங்களுமாமென்பது முணராது, ¶"வளம்படவேண்டாதார் யார்யாரு மில்லே." என்னும் முறையா னே முடவன் மலேயிற்றேனே அவாவி வாயுறினுற்போலச் "சிவனே டொப்ப யாமும் எல்லாமறிந்து ஐந்தொழில் செய்வேமாக என் றெண்ணும் ஆசைமிகு திப்பாட்டாற் சிவாகமங்களின் ஓரோரிடங்களின் ஆன்மா முத்தியிற் சுதந்தி ரன் எனவும் முற்றுணர்வினன் எனவும் எண்குணமுள்ளான் எனவும் சிவசம மாவன் எனவும் மேற்கூறிய முறைமைபற்றி ஓதிய வாக்கியங்கண்மாத்தி ரையே எடுத்துக்கொண்டு தமக்குவேண்டியவாறெல்லாம் வலியுறுத்தி உரை செய்து, சிவகதி சிவலயம் சிவயோகம் சிவசாயுச்சியம் சிவாந்தியம் சிவதாதா ன்மியம் சிவைக்கியம் என்பனவும் ஆகுபெயராற் சிவசமம் என்னும் பொருள் பயக்குமென மாறிக் கூறித் தாமே தம்மை வியந்துகொள்வர். அதனுற் றம் மாணுக்கரை வஞ்சித்தன் மாத்திரையே யன்றித் தம்மாசை நிரம்புமாறில்லை யென்றுழிக.

அற்றேல், ஆன்மா சிவனேடத்துவிதமாய் நிற்பன் என்பது பெறப்படு மாயினன்றே அதுபற்றிச் சிவசமமென்று உபசரித்துக் கூறியதென்றதமை யும்; அத்துவிதமாய் நிற்குமா றெங்ஙனம்? எனின், அஃது அத்துவிதம் என் னுஞ் சொற்குப் பொருளுணரவே இனிதுவிளங்கும். அற்றேல் அதற்கென் னேயோ பொருளெனிற் காட்டுதும்:–அத்துவிதம் என்னுஞ் சொல்லின் அக ரம் இன்மை அன்மை மறுதலே என்னும் மூன்றனுள் ஒருபொருள் பயக்கும். அவற்றுள்; இன்மைப்பொருள் கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை ஒரு

---

* சிவஞானசித்தியார், சூ–ம் சூ. சூ0. இருவினைச். † வாக்குண்டாம். சக. ‡ உண் மைவிளக்கம். கூ0. முத்திதனின். ¶ நாலடியார், பழவினை. கூ.

பொருண்மாத்திரையினன்றி இரண்டு முதலியவாய் எண்ணப்படும் பொருள் களி னில்லாமையான் அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென் பதேயாம் எனவும், ஒருபொருளாயினுங் குண குணி என வேற்றுமைதோ ன்ற நிற்பிற் கேவலம் ஒன்றுதலின்மையின் அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியுமாகலாற் றன்னின் வேறு யொருபொருளு மின்றித்தானுங் குணமுடைப் பொருளென விசேடிக்கப்படுதலின்றி நிருவிசேடமாய் நிற்கும் பரப்பிரமப் பொருள் என்பது அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளெ னக் கோடலின் அவர், ''கேவலாத்துவிதிகள்'' எனவழங்கப்படுவர்.

இராமாநுஜர் சிவாத்துவிதசைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைப் பொருள்பற்றி ஒன்றெனப் பொருள்கொண்டு சதசிசங்கற்ப முதலிய குணங் கள் பரப்பிரமப் பொருட்கு உள என்று உபநிடதங்களிற் கூறுதலானும், அவை செயற்கைக் குணமென்றற் கோரியை பின்மையானும், பசுபாசங்க ளது உண்மையும் உபநிடதங்களு ளோதப்படுதலானும், அவற்றொடு மூணிக் கேவலாத்துவித மெனக் கோடல் பொருந்தாமையிற் றன்னெடியபுடைய பசு பாசங்களானும், தன்குணங்களாகிய சத்சிசங்கற்பம் முதலியவற்றானும், விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை; ஒன்றென்ப தே அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங்கோ டலின், அவர் ''விசிட்டாத்துவிதிகள் என வழங்கப்படுவர்.

பேதவாதிகள் மறுதலைப்பொருள்பற்றி இரண்டன் மறுதலையாகிய ஒன் றெனப் பொருள் கொண்டு அங்ஙனம் கொள்ளவே அவ்வொன்றன் மறுதலை யாகிய இரண்டாவது மூண்டென்றற் கிழுக்கின்மையின் அத்துவிதம் என்ப தும் துவிதம் என்னும் பொருளைப் பயக்குமென்று போவர். அவரெல்லாரும் அத்துவிதம் என்ற சொற்குப் பொருள் ஒன்றென்பதேயாம் எனக் கொண்டு தத்தம் மதங்களோடு முரணுமைப்பொருட்டுக் கேவலம என்றும் விசிட்டம் என்றும் மறுதலை என்றும் அடை கூட்டி இடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள், மாயாவாதி கூறுங் கேவலமும், பேதவாதிகள் கூறும் மறுதலையும், சுருதிகளோடு முரணுதலின் ஈண்டைக் கேலாவாம். ஏனையோர் கூறும் விசி ட்டம் என்பது பொருந்துமாயினும் அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொ ருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது என்னை? ஒன்றென்பது பொருளா யின் ஒன்றெனவே விளங்கக் கூறலமையும், அவ்வாறன்றி ''அத்துவிதம்'' என உய்த்துணரவைத் தோதவேண்டாமையானும், ஒன்றெனப் பொருள் கொள் ளின் மகாவாக்கியப் பொருள் பயப்பதோர் விசேட மின்மையின் ''அத்துவி தம்'' என்றதுபற்றி ஆண்டொரு பயன்படாமையானுமென்க.

மற்றென்னையோ அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளென்னின், சித்தாந்த சைவருரைக்குமாறு காட்டுதும்:—*''அது நீ ஆகின்றாய்'' எனவும், †''அது நான் ஆகின்றேன்'' எனவும், ‡''அது இது ஆகின்றது'' எனவும் மூவி

* இதனை நூசும் பக்கத்திற்காண்க. † அது நானாகின்றேன் என்பது வொ ஹூஉவி ஜ என்னும் வேதாந்தமகாவாக்கியம் இது; சாந்தோக்கியம் சு-ம் பிரபாடகம், கூ-ம் கண்டம், சு-ம் மந்திரம். ‡ இதனை சுஉசூ-ம் பக்கத்திற்காண்க.

ம்பற்றி நிகழுங் "தத்துவமசி" முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பது ஒருபொருள் நீ என்பது ஒருபொருளாகலின் ஒருபொருள் மற்றொருபொருளாமா றியாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்ததாகலின், அது இது ஆதற் கேதுவாய் அவ்விரண்டிற்கு மூலதாகிய சம்பந்தவிசேட முணர்த்துதலே அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளென் றுணர்ந்துகொள்க.

அற்றேல், அத்துவிதம் என்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம் ஐக்கியமோ? தாதான்மியமோ? சமவாயமோ? சையோகமோ? சொரூபமோ? வேறோ? எனக் கடாயினார்க்கு, யாற்றுநீருங் கடனீருந் தம்மிற் சேர்ந்தாற் போலவும் சூடாகாயமும் மகாகாயமுந் தம்மிற் சேர்ந்தாற் போலவும் ஐக்கியமெனின், அங்ஙனஞ் சேர்ந்தவழி ஒருபொருளே யாகலின் ஒன்றெனவே அமையும் அத்துவிதம் என்று உய்த்துணரவைத் தோதவேண்டாம்; அன்றியும் ஒன்றுபவழி அதுவதுவாய்நின்றறிதலாகிய ஆன்மாவினிலக்கணம் முத்திக்காலத்தில்லையெனப்பட்டு வழுவாமாகலின் அது பொருந்தாமையானும், குணகுணிகட்குத் தம்மினுளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மியமெனின், ஆன்மா முதல்வனோடுபோலக் குணகுணிபொருளாய் நிற்பதன்றி முதல்வனுக்குக் குணமாகாமையின் அவ்வாறியைதல் கூடாமையானும், தாதான்மியத்தின் வேறுபாய் சையோகமெனின், *அவ்வியாப்பிய விருத்தியாகிய சையோகம் வியாபகபொருள்கட்குக் கூடாமையானும், யாதானுமோ ரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின், அது மகாவாக்கியப் பொருளே வலியுறுத்துதற் கெழுந்த அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளாகாமையானும், சொரூபசம்பந்தமாந்திரையாற் சிவாநந்தத்தை அதுபவித்தல் கூடாமையானும், இவற்றின் வேறுபாய் இன்னதென் றறியவாராத அகிர்வசனமெனின், அங்ஙனம் கூறுதல் மாயாவாதி கூற்றாய் வழுவாமாகலானும், அவையெல்லாம் கண்டைக் கிலாமையின் வேறுவிடுக்குமா றென்னையெனிற் கூறுதும்:—

ஒருபொருளே அவயவ அவயவிகளாயதல் குணகுணிகளாயதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே அதுவதுவாய் ஒற்றுமைப்பட் டொன்றாய் நிற்றற் கேதுவாகிய தாதான்மியமும் எனத் தாதான்மியசம்பந்தம் இருவகைப்படும். அவற்றுள், முன்னையது தாதான்மியம் என்றும் பின்னையது அத்துவிதம் என்றும் வழங்கப்படும்; அத்துவிதம் என்னுஞ் சொல்லியல்பு மேறகூறியவாற்றுன் வேறுபொருள் தருமாறின்றி அன்மைப்பொருள்பற்றி இரண்டன்றென வேற்றுமைப் படாமையை விளக்கி நிற்றலானென்க. இதுவே ஆசிரியர் கருத்தென்பது, †"அத்துவிதமென்ற சொல்லே அந்நிய தாத்நிபை உணர்த்துமாயிட்டி." என்ற தனுனும், புடைநூலாசிரியர் ‡"பிரிவருமத் துவித மாகுஞ்–சிறப்பினதாய்" என்று உடம்பொடுபுணர்த்தோதியதனுனும் அறிக.

---

* அவ்வியாபபியம்-வியாபிக்கபபடாதது. † இந்நூல், இரண்டாஞ்சூத்திரம், கூம் அதிகரணத்தின் ஏது. ‡ சிவபபிரகாசம், மங்கலவாழ்த்து. எ. புறச்சமயத். பிரிவரும் என்னும் பாடம்.

இவ்வத்துவிதம், அபேதசம்பந்தமாகிய ஐக்கியமுமன்றிப், பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப், பேதசம்பந்தமாகிய சையோகமுமன்றிக், கலப்பும் உடனதலும் வேறுதலுமாகிய மூன்றுந் தன்கட் டோன்ற நிற்றல்பற்றி அம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாகலான், இவ்வத்துவிதத்திற்கு ஓரோரிடங்களின் *"அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்." எனவும், †"ஆனகத்தில் வானும் மணத்தின் மணமும்போல்." எனவும், அபேத வுவமையும், ‡"பண்ணீயு மோசையும் போலப் பழமதுவு–மெண்ணுஞ் சுவையும் போல்." எனவும், ¶"நீரு மிரதமும்போ–லாங்கா ணரனு ரருள்." எனவும், பேதாபேத வுவமையும், §"இரும்பைக் காந்தம் வலித்தாற்போ லியைந்து."எனப் பேதவுவமையும் ஒருபுடையொப்புமைபற்றி ஈடுத்துக் காட்டுப வாகலின், இங்ஙனந் தம்முண் முரணுவனபோல வேறுவேறு எடுத்துக்காட்டுதல்புற்றி மலையற்க. இம் மூன்றியையுந் தன்கட்டோன்ற இவற்றிற்கு வேறுய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது ஆன்ம போதமுங் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய்நிற்றலாமென்க.0"காணுங் கண்ணுக்குக் சுடர்ப்பு முளம்போற்–காணவுள் ளத்தைக் கண்டு காட்டலின்." எனவும், **"காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்–கேயுமுயிர் காட்டிக் கண் டிடுமா போல வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன்." எனவும், ††"அறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகும்." எனவும், ‡‡மூன்று நூலாசிரியரும் சித்தாந்த முடிபுணர்த்தும்வழி இதனையே எடுத்துக்காட்டியவாறறிக.

இவ்வத்துவிதம், ஏனையோர் கூறும் அத்துவிதம்போலக் கேவலமென்றுதல் விசிட்டமென்றுதல் மறுதலையென்றுதல் யாதானு மொன்றன் விசேடிக்கப்பட்டுநின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்றது யாதானு மொன்றன் விசேடிக்கப்படாது நிற்றலை; அது "விசிட்டசத்தை" "சுத்தசத்தை" எனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானு மறிக. ஏனையோர் கூறும் அத்துவிதம் கேவலம் முதலியவற்றன் விசேடிக்கப்படாதவழி அவர் கூறும் பொருடருதற் கேலாமையின், அவையெல்லாஞ் சுத்தாத்துவிதமாகாமையுங் காண்க.

இங்ஙனம் ஒருபொருள் இருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டுநிற்குந் தாதான்மியம்போல வியாபகமும் வியாப்பிய முமான இருபொருள் ஒருதன்மையான் ஒற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்தம் ஒன்றுண்டெனவும், அதுவே அன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்னுஞ் சொல்லா னுணர்த்தப்பட்டதெனவும் அறியமாட்டாதார், அத்துவிதமென்னுஞ் சொற்குத் தத்தமக்கு வேண்டியவாறே பொருள் செய்வாரும்,

* இந்நூல், அ-ம் சூ. ச-ம் அதி. சிறைசெய்ய. † துகளறுபோதம், நூல். கௌ. ‡ இந்நூல், உ-ம் சூ. க-ம் அதி. கூ. ¶ துகளறுபோதம், நூல். கூக. § சிவஞானசித்தி, கக-ம் சூ. கஉ. 0 இந்நூல், கக-ம் சூ. ** சிவஞானசித்தி, கக-ம் சூ. க. காயமொழிந்தாற். †† சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து. எ. புறச்சமயத். ‡‡ மூன்றுநூல்-மூதனூல் வழிநூல் சார்புநூல்கள்.

* "நிலத்தின்கண்ணே தயிலம்போல முதல்வ னெல்லாப் பொருளினுமகமும் புறமுமாய் விரவிநிற்பன்" என்னுஞ் சுருதியும், † "ஆன்மா எதனை எதனைப் பற்றினன் அதனதன்வண்ணமே தன்வண்ணமாக்கொண்டு அதுவதுவாய் நிற்பன்" எனத் தொகுத்து ஒரு வார்த்தையிற் றெளிய உணர்த்துஞ் சுருதியும், "முப்பொருளும் சமவியாபகமாயினும் நீரும் எண்ணெயும் போல ஒன்றற் கொன்று தூல சூக்குமங்களா மியல்புடைமையின் அதுபற்றி வியாப்பியமும் வியாபகமுமாய் நிற்பனவாம்." என்னும் சுருதியும், இன்னும் இவைபோல்வன பிறவும் பயின்றறியாமையிற் ‡ "கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்–பெற்றதாம் பேதையோர் சூத்திர-மற்றதனை–நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்–புல்லறிவு காட்டி விடும்." என்னும் முறைமையாய்த் தாங்கற்றதுகொண்டு முன்னெடுபின் மலைவற நோக்குமாறின்றிச், சிவதீக்கையின் அத்துவசுத்தி செய்தபின் ஆன்மாவைத் துவாதசாந்தத்திற் சிவனோடு சம்பந்தப்படுத்திச் சிவனுக்குரிய எண்குணங்களையும் ஆன்மாவின் மாட்டு விளக்கிச் சிவசமமாகச்செய்த முறைமையும் மறந்து, சாங்கியர்மதத்தில் வீழ்ந்து, முப்பொருட்குஞ் சந்நிதிமாத்திரையே சம்பந்தம் பிறிதில்லையெனத் தம்மறிவின்மையைப் புலப்படுத்திச், சுத்தாத்துவிதமெனச் சைவத்திற் கூறும் வாய்பாட்டோடு முரணுமைப்பொருட்டு அநாதிமுத்தனாகிய சிவனும் இடையே முத்தனாகிய ஆன்மாவும் சுத்தமாதற் சாதியொருமையே பற்றிச் சுத்தாத்துவிதமென வழங்கப்படுமென்று போவாரு மாயினு ரென்றெழுதிக. முப்பொருள்களுள், ஆன்மா சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு மியல்புடைமையின் எவ்வெவற்றைச் சார்ந்தான் அவ்வவற்றோடு சார்தன்மாத்திரையே அத்துவிதமாய்த் தத்தம் வண்ணமாகச் செய்யும் அவ்வவற்றை நோக்கத் தூலமாதலுடைமையின் அவ்வவற்றின் வியாப்பியமேயாய் நிற்பனென்றுணர்க. இப்பொருளே பயப்ப ¶ "வசித்திடவரும் வியாபி." என்றார் வழிநூலாசிரியரும். அங்ஙனம் நிற்கும் முறைமையுள்ளும் தனக்கு அந்நிய சாதியாகிய ஏகதேசப்பொருள்களைச் சார்ந்து அவற்றின் வியாப்பியமாய் நிற்றல் மலத்தானுகிய செயற்கை எனவும், சார்ந்ததன்வண்ணமாய் நின்றறியும் அறிவாகிய தன்னை நோக்கச் சூக்குமமாய்த் தன்சாதியாகிய சிவத்தைச் சார்ந்து அதனின் வியாப்பியமாய் நிற்றல் இயற்கை எனவுந் தெரிந்துணர்ந்து கொள்க. இவ்வாறன்றித் தன்சாதியாகிய சிவத்தின் வியாப்பியமாய்நிற்றலும் ஏனையவற்றின் வியாப்பியமாதல்போலச் செயற்கை என்றல், சார்ந்ததன்வண்ணமாய் நின்றறிதல் செயற்கையென்பார் கூற்றே யாகலின் அது பொருந்தாமை மேற்காட்டியவாற்றுன் அறிக.

அற்றேல், ஈண்டு ஓதியனவெல்லாம் ஒக்கும்; முத்தியில் ஆன்மா சிவானந்தத்தை அநுபவிப்பன் என்றற்குப் பிரமாண மென்னையெனின், § "சிவானுப

---

* சுவேதாசுவதரம், க0-ம் அத்தியாயம், கடு-ம் மந்திரம். தி஬ெஷு ெதை஬ு டயிநீவஷவிபூ ஸாவ:ஹ்ரைத ஷ்வஸணீஷு ஸர்ஹ்ரீ|வஸர்தாத்ரிமஸ்ரு ஹ்ரெதஹொவ ஷ்ரெதுஹ்ரெநநம் தவஸா யொநஷ்வஸ்ரு கி‖

† இதனை கஉ-ம் பக்கத்திற்காண்க. ‡ நாலடியார், அவையறிதல். ச. ¶ சிவஞானசித்தி, ச-ம் சூ. உ0. அசித்தரு. § சிவஞானசித்தி, அ-ம் சூ. ஙஉ. இங்ஙிலை.

வம் சுவாது பூதிகமாம்" என்றற்றொடக்கத்துச் சுருதியே பிரமாணமென்க. இன்னுஞ் "சிவாநந்தம் ஆன்மாவால் அநுபவிக்கப் படுவது; ஆனந்தமாகலின்; உலகானந்தம் போல." என்னும் வழியளவையும் பிரமாணமாதல் கண்டு கொள்க.

அற்றேல், அநுபவிக்கப்படுவன வெல்லாஞ் சடமாதல் காண்டு மாகலின் அதுபோலச் சிவானந்தமும் சடமாவான் செல்லும் பிறவெனின், அவ்வாறே அறியப்படுவனவெல்லாஞ் சடமாதல் காண்டும் ஆகலின் அதுபோலச் சிவ மும் அறியப்படிற் சடமாவான் செல்லுமென்பதுபற்றிச் சிவம் ஞேயப்பொரு ளன்றென்றல் வேண்டும். வேண்டாமே, உணராதபொருள் சூனியம் எனப்ப ட்டு அவசித்தாந்தமா மாகலின் அது கடாவன் றென்க.

அற்றேல், சத்தாகிய சிவம் ஏனையபோலன்றிச் சுட்டிறந்துநின் றறியப் படும் வேற்றுமை யுடைமையான் அவைபோலச் சடமாவான் செல்லுமெ னின், நன்று சொன்னாய்; சுட்டிறந்துநின் றறியப்படும் பொருள் சுட்டிறந்து நின் றறிந்தே அநுபவிக்கப்படுவதாகலிற் சுட்டியறிந்து அநுபவிக்கப்படும் ஏனைய பொருள்கள்போலன்றி வேற்றுமை யுடைமையான் அவைபோலச் சடமாவான் சேறல்யாண்டையது றென்க. இன்னும் ஆன்மாவாலறியப்படும் பொருளெல்லாம் அவனுல் அநுபவிக்கப்படும் பொருளேயாம் என்னும் அவி நாபாவத்திற்கு யாண்டும் இழுக்கின்மையானும் ஆன்மாவால் அறியப்படுஞ் சிவானந்தம் அவனுல் அநுபவிக்கப்படும் என்றற்கு ஐயமென்னே? என்றெழுகி. இதனுனே சிவானந்தம் அநுபவப் பொருளாயிற் போக்கியரூபமோ? போக ரூபமோ? என்று ஆசங்கித்துக்கூறுவார் கூற்றும் போலியாயவாறு காண்க. ஆன்மாவுக்குப் பிரமேயரூபமாய் ஞேயமெனப்பட்டன வெல்லாம் அவனுக்குப் போக்கியமா மென்க.

அற்றேல், இம்முறைமையற்றிச் சிவனுக்கு ஞேயமெனப்பட்ட பசு பா சங்கள் அவனுக்குப் போக்கியமாம்போலு மெனின், அறியாது கூறினுய்: அறிந்த பொருளில் அழுந்துதலே சார்ந்தநன்மையாய் அறிதல், அதுவே அநுபவம் என்னுஞ் சொற்குப் பொருளாகலின், அவ்வியல்பு ஆன்மாவிற்கே யன்றிச் சிவனுக் கில்லையாம் சிவனுக்கு வெல்லாப் பொருளும் அறியப்படும் ஞேயமாதன்மாத்திரையே யன்றி அநுபவிக்கப்படும் பிரமேயரூப மாத லின் மையிற் போக்கியமாவான் செல்லாமை உணர்க. இன்னும் பிரமாணரூபமாகிய ஆன்ம சிற்சத்தி சிவனுக்காக தனக்காக நன்ஞெடொந்த பிற ஆன்மாக்களுக் காக மெய்யாகிய நிஜவுணர்விற்கு விடயமாதல் போல்வதோர் ஞேயமாதன் மாத்திரையே யன்றிப் பிரமேயமாதலில்லை என்பதற்குப், பௌட்கரத்தில் * "ஆன்மாவே பிரமாதா, வியஞ்சகத்தால் விளங்குவதாகிய ஆன்மஞானமே பிரமாணம், அதனறிதல்வியாபாரமே பிரமிதி, ஏனையவெல்லாம் பிரமேயம்."

* பௌட்கரம், பிரமாணபடலம். ஜீவ ஹிரு வராவெகூரா வொயவஷவ நவாவரூ|நதஹவ்ராஹி ஊவீஜ்ரா நா ஜோதாரோ நா வரோரு ஷவ்ரு|| வரோ வ்ருஜேயா ஹாவாதி வ்ருவாரரூ|ஹமஜிவ்ருஜெதி|

என்னுஞ் சுருதியும், *"ஒருவாற்றானும் பிரமாணம் பிரமேயமாகாது பிரமேயம் பிரமாணமாகாது." என வரைசெய்துவைத்தோதி இதனானே †"பிரமேயமாய் அறியப்படுவனவாகிய ஐம்பொறி முதலியவற்றைப் பிரமாணமென்றல் பொருந்தாது" என கையாயிகர் முதலியோரை மறுத்துச் சித்தாந்தம் வலியுறுத்திய சுருதியுமே சான்முகலான். ஒருவாற்றான் ஞேபமாயினும் பிரமேயமாகல் பெறப்படாத ஆன்மசித்சத்தி தன்னைதல் பிறிதோரான்மாவானுதல் சிவசத்தியானுதல் அநுபவிக்கப்படும் போலுமென்று ஆசங்கித்தற்குச் சிறிது மேலாமை அறிக.

அற்றேல், இன்பமெல்லாம் வினையின் பயனுதல் காண்டு மாகலிற் சிவானந்தமும் இன்பமாயின் அதுவும் வினையின்பயனுய் முடியுமாலெனின், அறியாது கூறினுய்; என்னை? தோன்றியழியுஞ் சடவின்பமாத்திரையே வினையின் பயனுவதன்றி அதனின் வேறுய நித்தியானந்தமான சித்தின்பம் அதுபோல வினையின் பயனும்போலும் என்றெண்ணுதற் கோரியைபின்மையானென்க.

அற்றேல், சிவானந்தம் இன்பப் பொருளென்றற்குப் பிரமாணம் என்னை? ஆனந்தம் என்னுஞ் சொல்லே பிரமாணமெனின், ஆனந்தம் என்னுமவடசொற்கு நிறைதல் என்பதே பொருளாகலின் அது பிரமாணமாகாதாலெனின், அற்றன்று; ‡தாதுக்கள் பலபொருள் விளக்கும் என்பது வடநூலார் துணிபாகலின், உண்மை உணர்த்தி நிற்கும "பவம" என்னுஞ்சொல் அநுபவம் பரிபவம் விபவம் என உபசர்க்கங்களோடு கூடியவழி வேறுபொரு ளுணர்த்திநின்றுற்போல நிறைதலே யுணர்த்திநிற்கும் "நந்தம" என்னுஞ்சொல் ஆ என்னும் உபசர்க்கத்தோடு கூடியவழி இன்பம் என்னும் பொருளுணர்த்தி நிற்றல் சாலும். அற்றுகலினன்றே, இன்பம் ஆனந்தம் என்பன ஒருபொருட் கிளவியாகவைத்து யாண்டும் வழங்கப்பட்டன. ஆகலான் அதுவே பிரமாணமென்க.

இன்னுஞ் சர்வஞாஞானந்தம் முதலியவற்றின் ஆனந்தமென்னுஞ் சொன்மாத்திரையானன்றி முந்தியிற் ¶பரமசுக முண்டெனச் "சுகம்" என்னுஞ் சொல்லானும் பெருமபாலும ஓதுதலின் ஆனந்தந்நிற்குப் பொருள் இன்பமன்றெனக் கொண்டதனுமை நின்கருத்து நிறைவு மாறிலதெனென்க.

அற்றேல், உலகத்தில் இன்பமென்னும் பொருளாவதுபிறபொருள்களினப்பற்றி வந்த புத்தித்தாதுவத்தின் பரிணமத்தானிய சத்துவகுணத்தின் விளக்கமே வேறென்றன்முகலின் முந்தியினும முற்றுணர்வு முதலிய எண்குணங்களின் விளக்கமே இன்பமாவதன்றி வேறுப் இன்பமென்பதொன்றில்லை யெ

---

* யஞவ்ரோண ஸுதந்ரயம் ஸ்வாஸாவிஂ வஂஸ்ஸ்ரிதகிஂ| யதந்ரய ஸுஹிதஸ்ஸாநம் யதோஸாதந்ரயிக॥ † நகஸ்வாவிஷாயஂஸ்வயஸ்ரி நா ஸுவதிவ்ரோ| ததிஷ்வரோந ஸ்ரேஷ்வஂ யக்ஷுஸ்ராஜி நதாஸ்ரஂஸ்ரி॥

‡ தாதுக்கள்-வினைபகுதிகள். ¶ சர்வஞானந்தரம் தத்ரவ: வரஸ்ரொ கூஸிநாஸ்ரஸ்ர ஸ்ரொளவஸ்ரி|

னின், நன்று சொன்னாய்; ஆன்மாவின் வேறுகிய மூலப்பகுதியின்கண்ணதா கிய சாத்துவிககுணம் ஆன்மாவின்மாட்டு மேற்பட்டு விளங்குதலே உலகவின் பம், அதுவதுவாய் முந்திநின்றறிதலே அநுபவம் எனப்படு மாகலின், அது போல ஆன்மாவின் வேறுய்ச் சிவன்கண்ணே உளவாகிய முற்றுணர்தன் முத லிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விள க்கமே சிவானந்தவின்பம், ஆன்மா அதுவாய் அழுந்திநின்று அவ்விளக்கத்தை அறிதலே அநுபவம் எனப்படுமென்பது எம்மினோர் சித்தாந்தமாகலின், அத னன் உனக்குப் போந்த தென்னை? என்பது.

அற்றேல், சாத்துவிககுணம் ஆன்மாவின் குணமே மூலப்பகுதியின் குணமன் றென்றுற்படு மிழுக்கென்னையெனின்; அதுசிவாகம வழக்கோடு முர ணுவார் கூற்று மென மறுக்க.

அற்றேல், பசுத்துவமாய்நின்ற ஆன்மஞானமே சிற்றின்ப மெனப்படும்; அதுபோலச் சிவத்துவமாய்நின்ற ஆன்மஞானமேமுத்தியின்பம் எனக் கோ டுமெனின், அற்றன்று; ஆன்மாவின் ஞானமே இன்பமாயின் அதனையறிந்து அநுபவிக்கும் ஞான்ம் வேறியாதெனவெனக் கடாயினுர்க்குக் குணியாய் நின்ற ஞானமே அதனையறிந்து அநுபவிக்குமென விடுப்பிற், குணியாய் நின்ற ஞானம் அறிவு மாத்திரையாய் நிற்பதன்றி எதிர்முகமாய் நிற்றலின்மையா னும், எதிர்முகமாகாமையும் ஆதலுமாகிய வியல்புபற்றியே ஞாதா எனவும் ஞானம் எனவும் பகுத்தோதியதனை மறந்து ஞாதாவும்அதனை எதிர் முகமா குமென முரணிக் கூறின், ஞாதாவும் ஞானமாவான்சென்று இலக்கண வழுவா மாகலானும், அதுவும் ஞானமே யாயவழி ஞாதா என்பதொன் றின்றாய் முடியு மாகலானுங் குணகுணிகளிரண்டிற்கும் இடையே பொதுவாக ஒரு ஞானமு ண்டு; அதுவே ஆண்டு ஞாதா எனப்படுமெனின், மேலும் அவ்வாறு * அநவ த்தையாய் முடியு மாகலானும், ஒருபொருள் குணகுணியென்று இருபகுதிப் படுவதன்றி.

இரண்டாமதிகரண முடிந்தது.

ஆறுஞ்சூத்திர முடிந்தது.

இலக்கணவியன் முற்றிற்று.

பொதுவியல்பு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

{ ஆறுஞ்சூத்திர பாடியத்திறுதியிற் சிறிது பாகம் கிடைத்த பிரதிகளில் இல்லை. }

* அநவத்தை-முடிவுபேறின்மை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்பியல்பு.

சாதனவியல்.

ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்,
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

எனவரும்.

இவ்வதிகாரம், தூலாருந்ததி நியாயம் பற்றி மேலியதிகாரத்தில் முப்பொருள்களின் பொதுவியல்பு பிரமாணமுகத்தானும் இலக்கணமுகத்தானும் உணர்த்திய ஆசிரியர் அவற்றது சிறப்பியல்பு, சாதனமுகத்தானும் பயன் முகத்தானும் உணர்த்துவான் எடுத்துக்கொண்டாராகலின், உண்மை யதிகாரம் என்னும் பெயர்த்து. சிறப்பியல்பு பொதுவியல்புபோல் இடையே நீங்குதலின்றி எக்காலத்தும் ஒருதன்மைத்தா யுள்ளதுபற்றி உண்மையெனப்படுமாகலின் அப்பெயர்த்தாயிற்று. இதனானே அதிகாரவியையும் இனிது விளங்கும்.

இதனுள் இம்முதலோத்து மேற்பொதுவியல்பாற் பெறப்பட்ட முப்பொருள்களினுள்ளும் விள்ளற்பாலதனை விண்டு அதனான் வருந் துன்பத்தினீங்குதலுங் கொள்ளற்பாலதனைக் கொண்டு அதனான் வரும் இன்பத்தை உறுதலுமாகிய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனஞ் செய்யுமா றுணர்த்துதலிற் சாதனவியல் என்னும் பெயர்த்து. *"உழப்பின் வாரா வுறுதிக ளுள வோ—கழப்பின் வாராக் கையற வுளவோ." என்ப வாகலிற் பெரும்பயன், பெறுதற்குரிய முயற்சி செய்தபின்னர்த்தே யாகலின் இவ்வோத்து முன் வைக்கப்பட்டது. ஒருபொருட்கு இலக்கண முணர்ந்தவழி அதனான் வரும் பயன் பெறுதற்குரிய சாதனஞ் செய்யுமாறு யாங்ஙனமெனச் சாதனத்தை அவாவுதல் ஒருதலையாகலின் அவ்வவாய் நிலைபற்றிய இயைபானே ஒத்தியைபு கண்டுகொள்க. இதனுள் இம்முதற்பாதமாகிய ஏழாஞ்சூத்திரமஃதாசிரியர் தாமே உரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

வரலாறு:—

மேலதற்கோர் புறனடை உணர்த்துத லுதலிற்று.

---

* பட்டணத்துப்பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. கo.

எ–து. க–ரை. எ–னின், சூத்திரக் கருத்துரைக்கின்றது.

*இ - ள். மேலைச் சூத்திரத்தின் *'உணருரு வசத்து' எனவும் *'இருகிற னல்லது சிவசத்து' எனவும் வரைசெய் துணர்த்தியவழி அவ்வாறுணரும் பொருள் அவ்விரண்டினி லொன்றே வேறே என்று ஆசங்கை நிகழுமன்றே, அதனை நீக்கி அச்சூத்திரத்திற்குப் புறனுகை எடுத்து ஒரொழிபாகிய சதசத்தி னியல்பு வரைசெய்துணர்த்து முகத்தானே மேற் பொதுவியல்பு கூறிப்போந்த ஆன்மாவுக்குச் சிறப்பியல்பு கூறுதல் நுதலிற்று இச்சூத்திரம் என்றவாறு.*

அதிகாரம் வேறுய வழியும் பாதவியைபு உணர்ந்து கோடற்கு இவ்வாறு ரைசெய்தார் என்பது. புறனடையை வடநூலார் வாக்கிய சேடம் என்ப. இதனுட் கூறப்படும் மூன்றதிகரணமும் மூன்று புறனடைபோலும் என மலை யாமைப்பொருட்டு ஓர் புறனடை என்றார். முன்னைய இரண்டும் இறுதி யதி கரணத்தைச் சாதித்தற் கேதுவாய் ஒருபொருண்மேல் வந்தனவேயாமென் பது கருத்து. ஒன்றனை அறிந்தவழி அதனைன் வரும் பயன்பெறுதற்குரிய முயற்சி செய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்கும் ஆற்றல் தமக்குண்டென்ப தூஉம், சாதித்தால் வரும் பயன் இது என்பதூஉம், அதனைப் பயப்பித்தற்குச் சிறந்த சாதனமாவது இது என்பதூஉம், அது வருவாயும் உணர்ந்தாலன்றி அதன்கண் மனவெழுச்சி செல்லாமையின் ஈண்டோதப்படுஞ் சாதனஞ் செய்து பயன்பெறுதற்குரிய அதிகாரியை உணர்த்துவதாகிய இது, சாதக வோத்தின் முன் வைக்கப்பட்டது.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. மேலைச்சூத்திரத்துட் கூறிய இர ண்டனுள் வாக்கு மனுதீதமாகிய சிவசத்தின் சந்நிதியில் உணருருவாகிய அச த்தெல்லாம் பாழே யாகலாற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை யறிந்து அநுபவியாது: அசத்தாகிய பாசம் அறிவில்லாத சடமாகலிற் சத்தாகிய சிவ த்தை யறிந்து அநுபவியாது: ஆதலாற் பாரிசேட வளவையாலே இருகிற னறிவுளதொன்று உண்டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற்றன் மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள ஆன் மாவா மென்றவாறு.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தே என்னும் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. அசத்திலதாகலின் என்றுரைக்க. அசத்துச் சத்தை அறியாமைக்கும் சத்தெதிர் சூனியமாதலே எதுவாதல் அமையுமாயினும், வலியுறுத்துதற்பொருட்டு வேறுமோரேதுக் கூறினார். இக்கருத்தே பற்றி †"சத்தின்முனிலாமை யானும்–தனைக்கொடோன் றுணர்த லானும்." என இர ண்டனையு முடனெடுத்தோதினார் வழிநூலாசிரியருமென்க. அறிதல் ஈண்டு அநுபவித்தன் மேற்று. ‡ "இனைத்தென அறிந்த." பொருட்டு வினைப்படு தொருதிக்கண் வேண்டப்படும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

இதனுள் யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தே யறியாது என் றது ஓரதிகரணம்; அசத்திலதறியாதென்றது ஓரதிகரணம்; இருதிறனறிவுள

* இந்நூல், சூ–ம் சூ. † சிவஞானசித்தி, எ–ம் சூ. க. அனைத்துஞ். ‡ தொல்காப் பியம், இளையாக்கம். கூக.

திரண்டலா வான்மா என்றது ஓதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திர மென்றுணர்க.

மூதலதிகரணம்.

அவற்றுள், *"மண்டிய வுணர்வு யிர்க்காய்மன்னிகின் றறியும்." என்னுஞ் சிவாத்துவித சைவரை மறுத்தற் கெழுந்தது முதலதிகரணம்.

அஃதாமாறு:—சிவாத்துவித சைவர் மேலைப் பொதுவதிகாரத்திற் கூறியவாறே பதிபசுபாசங்கள தியல்பும், தத்துவங்களுக்குத் தோற்ற மொடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும், அணைத்துஞ் சித்தாந்தசைவரோடொப்பக் கொண்டு, பசுபாசங்கள் பதியியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்த முதலன்மையின் மூப்பொருட்குந் தம்முள் வேற்றுமை குணகுணிகட்குத் தம்முளதாகிய வேற்றுமைபோல உட்பேதமேயன்றிப் புறப்பேதமின்மையான், மரத்தின் வியாப்பியமான கவடு கோடு முதலியன வெல்லாம் மரமேயாமாறுபோலச் சதசத்தும் அசத்தும் ஆகிய அணைத்துஞ் சத்தெனவே படுமெனவும், படவே, பதித்தன்மையின் வேறுப்ப பசுவுக் கறியுந்தன்மை யுண்டென்னிற் றனித்த முதலெனப்பட்டு வழுவாமாகலிற், சத்தாகிய பதிப்பொருளே ஆன்மாவினிடமாகின்று அறியும் எனவும், அணைத்துஞ் சத்தாயவழிச் சத்தின் வேறுப்பெறப்படும் பொருளொன்றின்மையின் அஃதறியுமாறியாங்ஙனம்? எனக் கடாயினுக்குப், புறப்பேதமாய் இன்றாயினும் அகப்பேதமாகி அசத்தாகிய பாசமுண்மையின் அதனை அஃதறிதல் கூடுமெனவும், சத்தின் முன்னர் அசத்தெல்லாஞ் சூனியமாகலின் அஃதனை அறிதல் கூடாதெனிற், சத்தின்முன் அசத்துச் சூனியமென்றல் †"தந்திடுஞ் சிவனை வன்றன் சந்நிதி தன்னி லின்றே." எனவும், ‡"கூடுமொளி வளர் குடிலை மாயை மேவி." எனவும், ¶'தாரகமா—மத்தன்று னிற்றல்.' எனவும், §"விமல னுக்கோர்—சத்தியாய்." எனவும், o"உலகமே யுருவமாக." எனவும், **"அத்துவா மூர்த்தியாக." எனவும், ††"இருநிலனுய்த் தீயாகி நீரு மாகி." எனவும் வரும் இத்தொடக்கத்துச் சுருதிகளோடு முரணி மாயாவாதிகூற்றுய் முடியுமன்றே எனவும் கூறுவாராகலான், அதனை மறுத்துச் 'சத்தே தறியாது' என்னும் மேற்கோளைச் சாதித்தற்கு எடுத்தோதிய ஏதுவை வலியுறுத்துகின்றது. இவ்வதிகரணமெனக் கொள்க.

அதிகரணவியைபுபற்றியும் தலைமைபற்றியும் சத்தினியல்பு முதற்கண் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஈண்டுச் சத்தினிடத் தசத்துப் பிரகாசியாது என்றது.

எனவரும்.

---

* சிவப்பிரகாசம், உண்மை. கு-ம் சூ. கூ. கண்டறிபுலன். † சிவஞானசித்தி, க-ம் சூ. ககூ. விந்துவின். ‡ சிவப்பிரகாசம், பொது. க-ம் சூ. உ. நீடுபராசத்தி. ¶ இந்நூல். க-ம் சூ. உ-ம் அதி. வித்துண்டா. உ. § சிவஞானசித்தி, உ-ம் சூ. குகூ. நித்தமா. o சிவஞானசித்தி, கு-ம் சூ. எ. ** சிவஞானசித்தி, க-ம் சூ. குசு. †† திருநாவுக்கரசுநாயனார் திருத்தாண்டகம், பொது, சு-ம் திருமுறை. க.

வாக்குமனாதீதகோசரமாய்ச் சுட்டுணர்வின்றிநின்றறியப்படுஞ் சிவசத் தின்முன்னர்ச் சுட்டியறியப்படும் அசத்தாகிய பாசம் விளங்கித்தோன்று தென்பதாம்.

ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப்பொருட் டென்பார் பிரகாசியா தென்றுரைத்தார். *"முனைத்திடாது." என்றார் வழிநூலாசிரியரும். முனைத் திடாமையாவது இது குடம் இஃது ஆடை என நம்மினாற் சுட்டி யறியப் படுமாறுபோல முதல்வனுற் சுட்டி யறியப்படுவதாய் வேறு நில்லாமை என்க. எனவே, ஈண்டுச் சத்தெதிர் யாவையும் சூனியம் என்றது கொண்டு †"தந்தி டுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னி னின்றே." என்றற்றொடக்கத்துச் சுருதிக ளோடு முரணுதலும் மாயாவாதி கூற்றுதலு மின்மையின், இவ்வேதுவானே இது குடம் இஃது ஆடை என்று இவ்வாறு அசத்தின்கண் நிகழுஞ் சுட்டு ணர்வுடையது சிவசத்தென்றல் பொருந்தாமையிற் சத்தே அசத்தை அறியு மாறு யாங்ஙனம்? எனச் சிவாத்துவிதசைவரை மறுத்தவாறு காண்க.

அற்றேல், அசத்து விடயமாய் விளங்குதற்குரிய சிற்றுணர்வு சிவசத்துக் குண்டென்றற்பி மீழுக்கென்னீ? என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த வது;

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

எனவரும்.

ஆன்மாவுக்குச் சிவத்தைச் சார்ந்து சுட்டிறந்தறிவதாகிய தன்னியல்பு விளங்கினவிடத்துச் சுட்டியறிவதாகிய பொதுவியல்பு விளக்கமின்றி நிற் றலான் 'ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது' என மேற்கொண்ட தென்றவாறு.

எனவே, முத்திநிலையின் ஆன்மா சிவத்தைச் சார்ந்து தன்னியல் பைத் தலைப்பட்டவழிச் சுட்டுணர்வு நிகழாதென்பது இருவர் மதத்தினும் ஒக்குமாகலான், ஆன்மாவுக்கு ஆண்டுச் சுட்டுணர்வு நிகழாமை பிறிதொன்றுற் பெறப்படாமையின் அநாதிமலமுத்தனுகிய முதல்வனுக்குச் சுட்டுணர்வில்லை என்பது பெறப்படுதலின், அத்தன்மையனுகிய முதல்வனிடத்து அசத்துச் சுட்டியறியப்படுவதாய் விளங்கி வேறுநிற்பது யாங்ஙனம்? என மேற்கோ ளைச் சாதித்தவாறு காண்க.

எக்காலத்தும் நிலைபெற்றுள்ளதாகிய தன்னியல்பே மெய்யெனப்படும், இடையே விளங்கி மறைவதாகிய பொதுவியல்பே பொய்யெனப்படும் என் பது, மேலையதிகரணத்தும் சற்காரியவாதத்தும் அபாவவாதத்தும் உரைத் தாம் கடைப்பிடிக்க. மெய்யினிடத்து-மெய்ப்பிரகாசித்த இடத்து எனவுரைக்க. மெய்ப்பிரகாசித்த இடத்தெனவே ஆன்மாவுக்கென்பது பெற்றும். இவ்வாறு சைக்க அறியாதார் மேற்கோளும் ஏதுவும் ஒரு பொருளே பயப்ப உரைசெய் வர். அவ்வாறுரைப்பின், "மலை தீ உடைத்து; தீ உடைமையான்" என்பது போல மேற்கோளைச் சாதிக்கு மேதுவாதல் செல்லாமை அறிக.

* சிவஞானசித்தி, எ-ம் சூ. க. அனைத்துஞ். † சிவஞானசித்தி, க-ம் சூ. கக. விக் துவின்.

அற்றேல், இதுபற்றி முதல்வன் அசத்தை அறியானெனின் அவனது முற்றுணர்வுடைமைக்கு இழுக்காமால் என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்;

அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்ரு
மன்னியமி லானசத்தைக் காண்குவனே-லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

எனவரும்.

தன்னுள் வியாப்பியமான பசுபாசங்களோடு வேற்றுமையில்லாத முதல்வனுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன் றில்லையாகலான், அத்தன்மையனாகிய முதல்வன் அசத்தை அறியலுறுவானெயிற் சுட்டுணர்வின்றிநின்றவாறே அறிவானன்றி எம்மனோர்போலத் தனக்கு வேருகச் சுட்டியறிவானல்லன். நன்மையில்லாத அசத்து ஞாயிற்றின்முன் இருள்போல அவனெதிர் விளங்குதலில்லை ஆகலானென்க. எனவே, சுட்டுணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர்வுக்கு மேம்பாடாவதன்றி இழுக்கன்மையான் அதுபற்றி ஆசங்கையில்லை என்பது வலியுறுத்தவாறு காண்க.

*''மாயா தநுவிளக்காய்.'' எனவும், †''ஆதலா லிரண்டுஞ் சோதி யிரு ளென வேறும்.'' எனவும், ‡''இகலிவரு மிவையுணரி லிருள்வெளியாந் தன்மை.'' எனவும், ஓதுதலின் மாயையும் அதன் காரியமும் மலம்போல முதல்வனுக்கு மறுதலைப்பொருளன்மையான், ஈண்டுக் 'கதிர்முன்னிருள்போல' என்றது விளங்காமைமாத்திரைக்கு ஒருபுடையுவமையாக எடுத்துக் காட்டியதேயாமென அவற்றோடு முரணுதலவாறு காண்க.

மற்று அசை. மற்றுக் காண்குவனேல் என மேலே கூட்டியுரைத்துவினைமாற்றின்கண் வந்ததெனினு மமையும். மாணு என்பது பெயரெச்சவெதிர்மறை. இன்மை—இன்மையான் என்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

மேலையதிகரணத்திற் சிவாத்துவிதசைவரை மறுத்துச் 'சத்தேயறியாது' என்றதனைச் சாதித்தவழி அதனை உடன்பட்டுச் சிவசங்கிராந்தவாதசைவர் ஆன்மா விளக்கம்போல விகாரமின்றி அறிவுமாத்திரையாய்நிற்பதன்றி ஒன்றனை அறியுமாறில்லை; அவ்வான்மாவின் சந்நிதியிற் காந்தபசாசம்போல உடலியங்குழி அதன்கணின்று கருவிகளை விடயங்களை அநுபவிக்கும் எனவும், மலம்நீங்கும்வழிக் கண்ணுடியின் முகவொளி தோற்றுமாறுபோல முதல்வன்றிருவருள் ஆன்மாவின்மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றும் எனவும், அவ்வழி உப்பளத்திட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மா சிவமே

* இந்நூல், சு-ம் சூ. உ-ம் அதி. க. † சிவஞானசித்தி, உ-ம் சூ. அ.ச. போதகா. ‡சிவப்பிரகாசம், பொது. உ-ம் சூ. ககூ. புகலுமல.

யாய் அவ்வான்மாவின் சங்கிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகர ணங்களாய் மாறிச் சிவத்தை அறியும் எனவுங் கூறுவர். அவற்றுட் சங்கிதிமா த்திரையானே கருவிகள் விடயங்களை அறியும் என்பது, ஐம்பொறிகள் ஆன்மா வாலுணருமெனச் சாங்கியரை மறுத்த அதிகரணத்தானே மறுக்கப்பட்டமை யின், அவையே சிவகரணங்களாய்ச் சிவத்தை அறியும் என்பதனை மறுத்து 'அசத்தறியாது' என்றதனைச் சாதித்தற்கெடுத்தோதிய எதுவை வலியுறுத் தற் கெழுந்தது இரண்டாம் அதிகரணம்.

இவ்வதிகரணம் முன்வைக்கற்பாலதாயினும் அசத்து அதிகாரப்படாமை யின் அவ்வியைபுபற்றி அதனை முன்வைத்தா ரென்பது.

இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

எனவரும்.

ஈண்டு அசத்து என்றது தத்துவப்பிரபஞ்சத்தை. எனைப்பிரபஞ்சத்தி ற்கு அறிவுண்டெனக்கொள்வார் யாருமின்மையான் ஆண்டு ஓப்பாடு நிகழா மையின் அதனை ஓதிகரணமாகவைத்துச் சாதிக்கவேண்டாமையான் என் பது. சூத்திரத்தில் 'இலது' என்றது அறிவிலதென்னும் பொருட்டென்பார் உணர்வின்று என உரைத்தார்.

அற்றேல், ஆன்மசங்கிதி இல்வழித் தத்துவங்களுக்கு உணர்வில்லை என்ற தொக்கும், அஃதுள்வழியும் அவற்றிற்கு அறிவில்லை என்றல் பொருந்தாது; என்னை? பதிஞான பசுஞானங்களோ டொப்பப் பாசஞானம் ஒன்றெனவைத் தெண்ணுதலின் அவற்றிற்கு அறிவுண்டென்பது பெறப்படுமாலென்று ஆச ங்கைநிகழ்ந்தவழி, அதனை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த எது;

அதுதான் நிரூபிக்கில் இன்றுகலான்.

எனவரும்.

அவ்வசத்தாகிய தத்துவப்பிரபஞ்சமானது பொதுமையான் நோக்கும் வழி அறிவுடையதுபோலத் தோன்றினும் ஐயதிரிபின்றி மாசறுகாட்சியான் ஆராயும்வழி அறிவில்லதாகலான் 'அசத்தினுக்கு உணர்வின்று' எனமேற்கொ ண்டதென்றவாறு.

எனவே பாசம் வாயிலாக நிகழும் பசுஞானமே பாசஞானம் என்று உப சரித்துக் கூறப்படும்; அதனைப் பாசத்திற்குள்ள ஞானமெனக் காண்டல் நிரூ பியாதவழிப்படும் மடமையே பிறிதில்லை என்றவாறுயிற்று.

அற்றேல், உள்ளதுபோலத் தோன்றி இல்லதாதல் யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை உவமைமுகத்தா னீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட் டும் உதாரணம்;

பேய்த்தேர் நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்லதெனக் காண்.

எனவரும.

பாலிகிலத்தின்கட் காணப்படும் பேய்த்தேரை நீரென்றுகருதி அதனை உண்ண வருகின்ற நீர்வேட்கையுடைய மடவோனுக்கு அதனை அடித்தவழித் தன்னுலணையப்பட்ட அப்பேய்த்தேர் நீராதலின்றி அசத்தாந்தன்மைபோலக் குரவன் அறிவுறுக்கும் உபதேசமொழி கிடைப்ப அவ்வசத்தினியல்பை ஆராய்ந்தறிவாரின்றி அறியமாட்டாதாருள்வழி அவர்க்கு அவ்வசத்தின்கண் அறிவில்லதாய் அசத்தாந்தன்மையின்றி அறிவுள்ளதாய்ச் சத்தாந்தன்மையே காணப்படும். குரவ னறிவுறுக்கும் உபதேசமொழி கிடைப்ப அவ்வசத்தினியல்பை ஆராய்ந்தறிய வல்லார்க்கு அஃதறிவில்லதேயாமென்று அறிவாயாக என்க.

மற்று வீணைமாற்றின்கண் வந்தது. மை பகுதிப்பொருள்விகுதி. இன் உவமவுருபு. வாய்த்தல்-கிடைத்தல். இல்வழியின் என்பதூஉம் அசத்தின்மை என்பதூஉம் மறுதலைப்பொருளுணர நின்றன. நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது; *"ஐந்தவித்தானுற்றல்." என்புழிப்போல.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

மேலை யதிகரணங்களாற் சிவசத்தின்றன்மையே ஆன்மாவுக்குத் தன்மையன்றி வேறில்லை என்னுஞ் சிவாத்துவிதசைவரையும் ஆன்மாவுக்குத் தன்மையென்ப தொன்றில்லை என்னும் சிவசங்கிராந்தசைவரையும் மறுத்துச், சத்தும் அசத்துந் தம்முள் ஒன்றனையொன் றறியுமா றில்லையெனச் சாதித்தவழி, இரண்டும் இவ்வாறுயின் இவற்றை அறியும் பொருள் வேறென்னை? என்னும் ஆசங்கையை நீக்கிப் பரிசேடவளவையாற் சதசத்தாகிய ஆன்மாவினியல்பை வரைசெய்துணர்த்துதற் கெழுந்தது மூன்றுமதிகரணம்.

இனி இருதிற னறிவுள திரண்டலா வான்மா என்றது.

எனவரும்.

ஈண்டுச் சத்தெதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்மு ளொன்றுனொன் றறியப்படாமையான் ஆன்மாவாலும் அறியப்படாதவழி அவை பயப்பாடின்றிச் சூனியமாய் முடியுமாகலான் இரண்டலா வான்மா இருதிற னறிவுள தேயாம். தம்முளொன்றுனொன் றனுபவிக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அநுபவிக்கும் கண்போலுமென அநுமானங் கூறிக் காண்க.

ஈண்டு 'இருதிறனறிவுளது' என்னும் தொகைச்சொல் விரியுங்காற்படும் பொருள்வேறுபாடுரைக்குமுகத்தானே ஆன்மாவினியல்பு வேறுவேறு கூறுஞ் சமயங்களெல்லாவற்றையும் மறுத்தவாறுணர்த்தற்கு எழுந்த பொழிப்புரை;

இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டின்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

எனவரும்.

* திருக்குறள், கூ-ம் அதி. நீத்தார்பெருமை. கூ.

மேற்கூறிப்போந்த சத்து மசத்துமாகிய இவ்விரண்டினையு மறியுந்தன்மைத்தாய், அறிவிக்க அறிவதாகிய உபதேசியாய், நிலைபெற்ற சத்தசத்திரண்டன்பாலும் அநுபவ அறிவுளதாய் உள்ள அதுவே சத்து மசத்து மல்லாத சதசத்தாகிய ஆன்மா என்றவாறும். 'இருதிறனறிவுள திரண்டலாவான்மா' என மேற்கொண்டதென்றவாறு.

ஆய் என்னும் வினையெச்சம் இரண்டும் நின்ற என்னும் பெயரெச்சவினையோடு தனித்தனி முடிந்தன. நின்ற என்னும் பெயரெச்சம் உள்ள என்பதன் முடிபாகிய அது என்னும் பெயர்கொண்டு முடிந்தது. இருதிறனறிவென்னுந் தொகைச்சொல் ஈண்டு மூன்று பொருளின் மயங்கிற்றென்னுங் கருத்தான் இவ்வாறுரைக்கப்பட்டது. அவற்றுள், இருதிறனையும் அறியும் அறிவு என்னும் இரண்டாம்வேற்றுமைத்தொகைப்பொருள் பற்றி இரண்டினையு மறிவதாய் நின்ற அதுவெனவும், இருதிறனுள் விளங்கிய அறிவு என்னும்மூன்றாம்வேற்றுமைத்தொகைப்பொருள் பற்றி உபதேசியாய் நின்ற அதுவெனவும், இருதிறனிலுமுள்ள அறிவு என்னும் ஏழாம்வேற்றுமைத்தொகைப் பொருள் பற்றி இரண்டன்பாலு முளதாயுள்ள அது எனவும் உரைத்தாரெனக் கொள்க.

இரண்டினையும் அறிவதாய் நின்ற அது என இரண்டாம்வேற்றுமைத் தொகைப்பொருள் பற்றி இரண்டு மிவ்வாறுயின் இவற்றை அறியும் பொருள் வேறென்னை? என்னும் வினாவுக்கு விடைகூறி அவ்விருவர் மதங்களையும் அவற்றோ டொருதன்மையவான புறச்சமயங்களையும் மறுத்தவாறு.

உபதேசியாய் நின்ற அது என மூன்றாம்வேற்றுமைத் தொகைப்பொருள்பற்றி ஆன்மா அறிவிக்க வேண்டாது தானே அறியுமியல்பிற்றென்னும் சமவாதசைவர் ஈசுரவவிகாரவாதசைவர் ஔக்கவாதசைவர் மதங்களையும் அவற்றோ டொருதன்மையவான புறச்சமயங்களையும் மறுத்தவாறு.

இரண்டன்பாலு முளதாயுள்ள அது என ஏழாம்வேற்றுமைத்தொகைப்பொருள்பற்றி ஆன்மாவினறிவு சந்தோடு கூடுமாறில்லை என்னும் பாடாணவாதசைவர் பேதவாதசைவர் மதங்களையும், சத்திநீடு கூடியவழி ஒன்றாய்ப்போதலேயன்றி அதன்பா லுளதாமாறில்லை என்னுஞ் சுத்தசைவர்மதத்தையும் அவற்றோ டொருதன்மையவான புறச்சமயங்களையும் மறுத்தவாறு.

இவ்விரண்டினையு மறிவதாய் எனவே அவ்வறியுந்தன்மை இவ்விரண்டன் றன்மைபோலன்றி *"இரு பொளிய லாக்கண் டன்மை." போல வேறு யதோர் தன்மை என்பதூஉம், உபதேசியாய்நின்ற எனவே அத்தன்மை ஆகாயத் தன்மையாகிய ஒசைபோலத் தன்னை விளக்குவதாகிய வியஞ்சகமுள்வழியே விளங்குவதோர் தன்மை என்பதூஉம், இரண்டன்பாலு முளதாய எனவே அது படிகம்போலச் சார்ந்ததன்வண்ணமாய் அழுந்துவதோர் தன்மை என்பதூஉம் பெற்றும்.

இனி இம்மூன்றனுள் இரண்டினையு மறியும் என்றதனை வலியுறுத்தி இரண்டலாமையை உணர்த்துதற்கெடுத்துக் காட்டும் உதாரணம்;

* சிவப்பிரகாசம், உண்மை. நூ-ம் சூ. சு. சத்திது.

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்றாகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றுது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றொக்கு.

எனவரும்.

தூணுகியதூல்களே ஆராயும் ஆன்மாவே அருவாகிய சத்தினையும் உருவாகிய அசத்தினையும் அறிவதாகலான், அஃது அவ்விரண்டுமன்றி வேறுமென்க. அற்றேல், அவ்வான்மா தன்னையறியுமோ? அறியாதோ? எனக்கடாயினர்க்கு அறியுமெனில் தன்னேடுளப்பட மூன்றனையும் அறிவதென்னுது அவ் 'விரண்டனையும் அறிவதாய்' என்றல் பொருந்தாது; அறியாதெனின் அறியாத பொருள் சூனியமெனப்பட்டு வழுவாமாலெனின், ஆன்மாவினுண்மைத்தன்மை சத்து மசத்தும்போல விளங்கித்தோன்றி யவற்றேடொப்பநிற்பது மன்றாய், விளங்கித்தோன்றுது சூனியமாய் நிற்பதுமன்றாய் மலரின்கண் வாசம் இவ்விருவகையுமின்றி அதனக ணடங்கித்தோன்றுமா றுபோலச் சத்தினு மசத்தினுஞ் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித்தோன்றுவதோரியல்பாம். ஆகலான், அஃது அவ்விரண்டினையும் அறியுமுகத்தான் அறியப்படுவதன்றி அவை போலத் தனித்தனி யறியப்படுவதொன்றன்றென்க.

ஆகலான் அஃது அவ்விரண்டினையும் அறியுமுகத்தானறியப்படுவதன்றி அவைபோலத் தனித்தனி அறியப்படுவதொன்றன்றென்பது குறிப்பெச்சம். சுட்டியுணரப்படாமைபற்றிச் சத்தை அரு என்றும் சுட்டப்படுதல்பற்றி அசத்தை உரு என்றுங் கூறினர். *'உணருருவசத்து.' என்புழி உரு என்றதும் அதுபற்றி. அறிதலான் அன்று ஆகும் எனக் கூட்டுக. இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை உணர்த்திற்று. அய்தல்-தூணுதல். †''ஒய்தலாய்த னிழத்தல் சாஅ—யாவயி னுன்கு மூள்ளத னுணுக்கம்." என்றார் தொல்காப்பியனாரும். ஆயிழை எனப் பொருளினுணுக்கம் நூன்மேல் ஏற்றப்பட்டது. இழையை என இரண்டாவது விரித்துரைக்க. ஆன்மாவுக்கு அறியுந்தன்மை உண்டாகலானன்றே வேதாகமம் முதலிய நூல்கள் உளவாயின என அதனை வலியுறுத்துவார் ஆயிழையாயான்மா என உடம்பொடுபுணர்த்தோதினார். ‡''பலகலை யுலகினிலவுத லானும்." என்றார் புடைநூலாசிரியரும். இவ்வாறன்றி ஆயிழையாய் என்பதனை மகடூமுன்னிலையாக வைத்து உரைப்பின் இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்துதற்கு எழுந்ததன்றாய்க் கூறியதுகூறலென்னுங் குற்றப்படுமென்றுழிக. அருவுருவாய் என்புழி ஆக்கச்சொல் உவமப்பொருள்குறித்து நின்றது. ¶''ஆள்வா ரிலிமா டாவேனே." என்புழிப்போல. தொக்குத் தோன்றல் எனக் கூட்டுக.

அற்றேல், ஆன்மாவுக்கு அவ்வறியுந்தன்மை சிவசத்தோடொப்பச் சுதந்திரமா யுண்டென்றுற் படுமிழுக்கென்னை? என்னும் ஆசங்கையை நீக்கி உப

* இந்நூல். கூ-ம் சூ. † தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல். கூக. ‡ சங்கற்பநிராகரணம், நிமித்தகாரண பரிணமவாதி நிராகரணம். சஅ-ம் அடி. ¶ திருவாசகம், கோயின்மூத்ததிருப்பதிகம். எ. இரங்கு.

தேகியாய் என்றதனை வலியுறுத்தி இரண்டலாமையை உணர்த்துதற்கு எடுத் துக்காட்டும் உதாரணம்;

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர் நீ சத்தாகாய் பேசி—லசத்துமலை
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

எனவரும்.

நீ அறியும் முறைமை சொல்லில் அறிவை விளக்குதற்குரிய வியஞ்சக மில்வழி ஒரு விடயத்தை இன்னதென்று அறியமாட்டாது மயக்கத்தைப் புற் றும், பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்க நோய்க்கு மருந்தாகிய வியஞ் சக முள்வழி அம்மயக்கம் நீங்கி அதனை இன்னதென நிச்சயித்தும், இங்ங னம் அறியுழியும் ஒருங்கே அறியமாட்டாது ஒருவிடயத்திற் சென்ற அறிவை மாற்றி மற்றொரு விடயத்தை அறிந்து வருகின்ற யாகலின் இவ்வாறு மாறி மாறி ஒன்றொன்றை உணர்கின்ற நீ எல்லாவற்றையும் ஒருங்கே ஓரியல்பா னுணர்வதாகிய சத்தின்றன்மை யுடையா யல்லை. அற்றேல், வியஞ்சக முள் வழியன்றி அறியமாட்டாத யான் அசத்தின்றன்மை யுடையேனுமேனை னின் வியஞ்சக முள்வழியும் நீ முன்னறிந்து செய்த வினைகளை இப்பொழுது நீயே அறிந்து அநுபவிக்கின்ற யன்றி அசத்தாகிய பிரபஞ்சம் அறிந்தநுப வித்தலின்மையான் அவ்வசத்தின்றன்மை யுடையாயுமல்லை வியஞ்சக முள் வழி அறிதலொப்புமையாற் சத்தாதலும் அஃதில்வழி அறிவு நிகழாமை ஒப் புமையால் அசத்தாதலுமாகியமேதார் தன்மையுடைய நீ அவ்விரண்டினும் வேறுகிய சதசத்தாவை என்க.

பேசில் நீ சத்தாகாய் துய்யாமையால் அசத்துமலை வேறு எனக்கூட்டுக. வியஞ்சக மில்வழித் தலைப்பட்டும் அஃதுள்வழி நீங்கியும் நிற்பதாகிய மயக் கம், உண்டியில்வழித் தலைப்பட்டும் அஃதுள்வழி நீங்கியும் நிற்பதாகிய பசி யோடொத்தலின் அதனைப் பசிநோயாகவும், தீர்த்தலொப்புமை பற்றி வியஞ் சகத்தைப் பசிதீர்க்கும் மருந்தாகவும் உருவகஞ்செய்தார். இஃது ஏகதேசவு ருவகம். மருந்தெனப் பொதுப்பட வுருவகஞ் செய்தாராயினும் பசிநோய் தீர்க் கும் மருந்தே ஈண்டைக்கேற்புடையதாகலின் ஏற்புழிக்கோடலான் அவ்வாறு சைக்கப்பட்டது. அது பகுதிப்பொருள்விகுதி. தானென்பது முன்னியது எழு வாயுருபுபட நின்றது. பின்னியது அசைநிலை. துய்வாமை துய்யாமை என மரீஇயிற்று.

அற்றேல், இம்மயக்கம் ஆன்மாவுக்கேயன்றிச் சிவத்துக்கில்வழி இரண் டிற்குந் தம்முளியைபு கூடாதாகலிற் சிவசத்துக்கும் அஃதுண்டெனக் கோட ல்வேண்டுமென்னும் ஆசங்கையை உவமமுகத்தான் நீக்கி ஆன்மாவிரண்டின் பாலு மூளதாதலை வலியுறுத்தி இரண்டலாமையை உணர்த்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்;

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான மூள்ள மணிதல்காண்—மெய்ஞ்ஞானத்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாய்த் தான்.

எனவரும்.

மேலே வெண்பாவிற் பெறப்பட்ட மயக்கமாகிய அறியாமை வியஞ்சக மில்வழிக் கூலப்பட்டும் அஃதுள்வழி நீங்கியும் இவ்வாறு நிலைபேறில்ல தாகலான், அஃதெப்பொழுதும் ஒருதன்மைத்தாய் நிலைபெற்று விளங்கும் ஞான மாகிய சிவசத்தின்கண்ணே நிகழாது, மெய்ஞ்ஞானமாகிய அச்சிவசத்துள்ள அகாதியேதானே குளிர்ந்த கடலின்கண் மருவாது கடலிடத்துளதாகிய நீரின்கண் மருவும் உப்புப் போலத், தான் பொருந்துதற்குரிய சதசத்தா மியல்புடைய ஆன்மாக்களும் உள்ளனவாக அவ்வான்மாக்களைப் பொருந்துமாற்றை அறிவாயாக என்க.

அஞ்ஞான மசத்தாகலான் மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாது. மெய்ஞ்ஞானம் உள அன்றே தானே என்புழித் தானே என்பது கட்டுரைக்கண் வந்தது. 'தானே யுளமுளவாய்த் தான்' என்புழித் தானென்பது மூன்றையது எழுவாய்.பின்னையது அகைநிலை. எயுளம் விளைத்தொகை. அப்அணைதல் எனக்கூட்டுக. ஆயிணைதலென்பது ''மழைபெய்து குளநிறைந்தது.'' என்றற்போலக் காரணகாரியப் பொருட்கண் வந்தது. கடலென்றது நீர்க்கிடங்கொடுத்து நிற்கும் ஆகாயம். உப்பு, தான் மருவுதற்குரிமையில்லாத கடலின்க ணின்றிக் கடலோடியை புடைத்தாயுந் தான் மருவுதற் குரிமையுடைய நீரின்கண்ணே உளதாயினுற்போல, அஞ்ஞானமுந், தான் மருவுதற் குரிமையில்லாத மெய்ஞ்ஞானத்தின்கணின்றி அம்மெய்ஞ்ஞானத்திலிருந்து அகாதியே இயைபுடைத்தாயுந் தான் மருவுதற் குரிமையுடைய ஆன்மாவின்க ணுளவாகல் அமையுமென்பார் 'தண்கடனீருப்புப்போல்' என்றார். இதனானே வியாபக வியாப்பியங்களாறும் பெறப்பட்டது. இதனுள், ஆன்மாவுக் கிரண்டன்கண்ணும் இயைபுடைமை கூறலே, இரண்டின்பாலு முளதாதலே வலியுறுத்தியவாறு காண்க.

இவ்வதிகாணத்தில் இருதிறனையும் அறியுமறிவுளது எனலே, இருதிறனுகிய சத்தும் அசத்தும் எனப்பட்டனவெல்லாம் பிரமேயம் அவற்றையறியும் ஆன்மாவே பிரமாதா ஆன்மாவி னறிவாகிய சிற்சத்தியே பிரமாணம் அவ்வறிவுநிகழ்ச்சியே பிரமிதி என்பதூஉம், இருதிறனுள் விளங்குமறிவுளதெனலே, இரண்டனுள் அசத்தான் விளங்கும்வழித் தனக்கு வேறுய் நின்று விளக்குங் காட்சியும் அநுமானமும் ஆகமமும் எனப்படும் அசத்தாகிய பாசஞானம் மூன்றும் தனக்கு வியஞ்சகங்களாம்; சத்தான்விளங்கும்வழி அன்னியமின்றித் தனக்காதாரமாய் உடனின்று விளக்குஞ் சிவஞானந்தானே வியஞ்சகமாம்: ஆகலின், அதுபற்றி அவையும் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுமென்பதூஉம், இருதிறனிலும் அறிவுளதெனலே, ஈரிடத்துங் கேடின்றி அசத்தான்விளங்கி அசத்தையறிவுழி அசத்தின்பாலும் சத்தான் விளங்கிச் சத்தையறிவுழிச் சத்தின்பாலும் அதுவதுவாய் நின்றுளதென்பதூஉம் பெறப்படும்.

இவ்வாறன்றி, வியஞ்சகங்களேயே பிரமாணம் என்னுந் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களான் நிகழும் பிரமிதிவேறுபாகளும், அவற்றதியல்புகளும் ஈண்டு விரிக்கிற் பெருகும். பௌட்கரம் முதலிய சிவாகமங்களிற் காண்க.

மூன்றுமதிகரண முடிந்தது.

ஏழாஞ்சூத்திர முடிந்தது.

எட்டாஞ் சூத்திரம்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி னுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

எனவரும்.

எ-து. சூ-ம். எ-னின். ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துத னுதலிற்று.

மேலைச் சூத்திரத்தாற் சாதித்தற்குரிய அதிகாரம் தனக் குண்டென்ற நிந்த ஆன்மாவுக்குச், சாதித்ததனாற் பெறப்படும் பயன் இது என்பதூஉம், அதற்குச் சிறந்தசாதனமாவது இது என்பதூஉம், அது வருவாயும், உணர்த்துமுகத்தானே, அவ்வான்மாவின் ஞானம் மேல் இருதிறன் என்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பா லுளதாய் அசத்தினை அறிந்து நின்றவாறும் சத்தான் விளங்கிச் சத்தின்பா லுளதாய்ச் சத்தினை அறிந்து நிற்குமாறும் தரிசிக்கும் முறைமையினை உணர்த்துதல், சாதகவியலின் இரண்டாம் பாதமாகிய இவ்வெட்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேல் *'இருதிற னறிவுளது' என்றவழித், தம்முண் மாறுபட்ட பொருளிரண்டின்பாலும் அறிவுளதாமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை ஈண்டு நீக்குதலின் அவ்வாசங்கைபற்றிய இயைபானே அதிகரணவியையும், மேல் ஆன்மரூபம் உணர்த்தி ஈண்டு அதனைத் தரிசிக்குமாறுணர்த்துதல் முறைமையாகலின் அம்முறைமைபற்றிய இயைபானே பாதவியையும், மேலைச்சூத்திரத்தாற் சாதித்தற்குரிய அதிகாரியை உணர்ந்தவழி வேண்டப் பயனுஞ் சாதனமும் வருவாயும் யாவை? என இவற்றை அவாய் நிற்றலின் அவ்வவாய்நிலை பற்றிய இயைபானே ஒத்தியையும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஆன்மா முன்னே செய்துகொள்ளப்பட்ட புண்ணியவிசேடத்தால் இப்பொழுது தமக்கு அந்தரியாமியாய் உண்ணின்று இதுகாறும் உணர்த்திவந்த பரம்பொருளே குருவடிவமுங்கொண்டு எழுந்தருளிச் சிவதீக்கைசெய்து, "மன்னவகுமாரனுகிய நீ, ஐம்பொறிகளா

* இந்நூல் ... சூ. யாவையுஞ்.

கிய வேடசோடு கூடி வைகி வளர்ந்து நின்பெருந்தகைமை அறியாது மயங்கி இடர்ப்பட்டாய்; நின்பெருந் தகைமையாவது இவ்வியல்பிற்று" என்று அறிவுறுப்ப, அறிந்தமாத்திரையே அவரைவிட்டு நீங்கி, அங்ஙியமின்றி * அகங்கிய மாந்தன்மையி னிலேபெற்று,அம்முதல்வன் றிருவடிகளே அணையும் என்றவாறு.

ஆன்மா என்பது மேலேச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. தவத்தினிற் றம்முதல் குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனே எனஉணர்த்த விட்டு அன்னியம் இன்மையின் அரன் கழல் செலும் எனக் கூட்டுக. மன்னவ குமாரனுகிய நீ என்பது தோன்ற எழுவாயாய் நின்றது. புலன் ஆகுபெயர். வளர்ந்தயர்ந்தனே என்பது ''ஈந்து புகழ்பெற்றனன்." என்புழிப்போலக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது. அயர்த்தல்-மறத்தல். தம்முதல் என்றது வேறு முடிபாகலின், ''யான் எம்மூர் புகுவன்; நீ நும்மூர் புகுவை." என்புழிப் போலப் பால்வழுவின்மை கண்டுகொள்க. குருவும் என்ற உம்மை இதுகாறும் உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்தியதூஉமன்றி என இறந்ததுதழீஇற்று; சிறப்புமாம். 'அன்னியமின்மையின்' என்பது 'அயராவன்பின்' என்பது போலச்சேறற்கேதுவாய் நின்றது; அன்னிய மின்றுந் தன்மையுடையவனுகிச் செல்லும் என்பதாம். அரன் என்பது சுட்டுப்பெயர்மாத்திரையாய் நின்றது; †''கற்பாடழித்த கனமாமணித் தூண்செய் தோளான்." என்புழிப்போல.

வெண்கொற்றக்குடையும், நவமணிமுடியும், சிங்காதனமும் மன்னவர்க்கேயுரிய சிறப்படையாளமாம். அதுபோலப்,பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒருபெரு வெண்கொற்றக்குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான் அறியும் பேரறிவாகிய ஒருபெருஞ் சுடர்முடியும், எவற்றினேயும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்து மியல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும் பிறர்க்கின்றித் தனக்கே உரிமையாகச் சிறந்தமைபற்றிப், பசுக்களுக்குப் பாசங்களே அரித்தலான் அரனென்னுந் திருப்பெயருடைய முதல்வனே மன்னவனுகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதுந் தனதேயாகக்கொண்டு அநுபவிக்குஞ் சுதந்திரமுடைமையுஞ் சித்தெனப்படுஞ் சாதியொப்புமையும் பற்றி ஆன்மாவை மன்னவகுமாரனுகவும், அவ்வான்மாவை அறிவுப்பெருஞ்செல்வம் முழுவதும் ‡ஆறலைத்துக்கொண்டு சிறுமையுறுத்துதலும் விதிவிலக்கை இழப்பித்து இழிதொழிலில் நிற்பித்தலுமாகிய இயல்பு பற்றி ஐம்பொறிகளே வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃது ஏகதேசவுருவகம். ¶''மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி." என வழிநூலாசிரியர் ஓதியது முற்றுருவகம். 'ஐம்புல வேடரி னயர்ந்தனே வளர்ந்தென' எனவே ஐம்புலவேடரின் வளர்ந்தயர்தலும் அதுவாதமுகத்தான் ஈண்டே பெற்றும்.

இதனுள், தவத்தினி லுணர்த்த என்பது ஓரதிகரணம்; தம்முதல் குருவுமாயுணர்த்த என்பது ஓரதிகரணம்; ஐம்புல வேடரினயர்ந்தனே வளர்ந்து என்பது ஓரதிகரணம்; விட்டன்னியமின்மையி னரன்கழல் செலும் என்பது ஓரதிகரணம்; ஆக நான்கதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

* அகங்கியம்-அத்துவிதம். † சீவகசிந்தாமணி, பதிகம். கச. பொற்பூண். ‡ ஆறலைத்தல்-வழிப்பறித்தல். ¶ சிவஞானசித்தி, அ-ம் சூ. க.

மு த ல தி க ர ண ம்.

அவற்றுள் ஈண்டைக்குச் சிறந்த சாதனம் இது என்பதூஉம் அது வரு வாயும் உணர்த்துதற் கெழுந்தது முதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தால் ஞானம் நிகழும் என்றது.

எனவரும்.

இவ்வான்மாக்களுக்கு–சாதிக்கும் ஆற்றலாகிய அதிகாரமுள்ளன என மேலைச்சூத்திரத்தாற் பெறப்பட்ட ஆன்மாக்களுக்கு. ஞானம்–சாதனமா கியஞானம் என்க.

ஆளுடையபிள்ளையார் முதலிய நாயன்மார்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்ததாலோ என்னும் ஆசங்கையை நீக்குதற்கும், படி முறையானன்றி இவ் வொரு பிறவியிற் செய்த தவந்தானே அமையாதென்பது உணர்த்துதற்கும் 'முற்செய் தவம்' என விசேடித்தார்.

ஈண்டு ஞானமென்றது, குரவனுணர்த்தியவாறு சிவஞானம் கண்ணுதற் கொண்டறிவதாகிய அறிவினை.

நிகழ்தல்–ஐயந்திரிபின்றி விளங்குதல்.

அற்றேல், *"மும்மைநற் பதிக டம்மின் முனைத்தவர் முடிந்தோர் மூவாச் செம்மைநற் கழல்கண் டோர்கள் சிவத்தினைச் சேர்வர்." எ-ம், †"செறிந்தடி காணச் சிவன் முத்தராய்த் திரியலாமே." எ-ம், ‡ "சிவார்ச்சனமார்ச் சனமா கிற்–பவமகலும் பாபோகம் பெறலாகும்". எ-ம், ¶"ஆதார யோக நிராதார யோகமென–மீதானத் தெய்தும் விதியிரண்டே." எ-ம், பிறவும் இவ்வாறு துதலின் வீடுபேற்றிற்குக் காரணம் இத்தன்மையவாகிய தவங்களுளொன்றே அமையும், அன்றி ஞானங் காரணமெனினும் இவற்றோடொப்பதொரு கா ரணமே என அமையும்; அவ்வாறன்றிச் சிறந்த சாதனமென்றற்குப் பிரமாண மென்னை? எனவும், §"பொருவினிருவாண**மறுவகையு மொருவினீண வரி தாம் பரபதத்து ளுயிர்விரவப் பயிற்றும்." என இவ்வாறு சிவாகமங்களினுந் தீக்கையே வீடுபேற்றிற்குச் சிறந்தகாரணம் என்று ஓதுதலின், அதுவே அமை யும், ஏனைச் சரியை கிரியா யோக ஞானங்களெல்லாந் தீக்கைக் கங்கமாக விதி க்கப்பட்டன எனக் கோடல் பொருத்தமுடைத்து; அதனையொழித்து ஞான மேவீடுபேற்றிற்குச் சிறந்தகாரணம் என்றற்குப் பிரமாணமென்னை? எனவும், ஆசங்கை நிகழ்வழி அதனைநீக்கி மேற்கோளைச் சாத்தித்தற் கெழுந்த வது;

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடா வாகலான்.

எனவரும்.

---

* கோயிற்புராணம், இரணியவன்மச்சருக்கம். சுஎ. மெய்ம்மைநற். † மேற்படி சருக்கம். சுஅ. பிறந்தில. ‡ மேற்படிபுராணம், வியாக்கிரபாதச்சருக்கம். ச. தவமெலை யும். ¶ திருக்களிற்றுப்படியார். உஉ. § சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து. கூ. விரும்பிய.

தவமெனப்பட்டன இவை யென்பார் சரியை கிரியா யோகங்களே என விதந்துரைத்தார். கிரியாயோகங்களென்னும் உம்மைத்தொகை வடநூன் முடிபு. சரியை என்பது தொகைநிலைச்சொல். கிரியாயோகமிரண்டற்குந் தீக்கை ஒன்றென்பது தோன்ற அவ்விரண்டினையுந் தொகுத்தோதிச் சரியையை வேறு வைத்தார். மேற்கோளில் 'முற்செய்தவத்தான்' என்றதற் கேற்ப ஈண்டும் 'மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி' என்றார். மேலாகிய உண்மைச் சரியை கிரியாயோகங்களே என்றுரைப்பினு மமையும். கொடா என்னும் பயனிலைக்கு ஏழுவாய் அவை என்றெடுத்துக்கொள்க. காட்டிக்கொடுக்கும் எனற்பாலதனை இரண்டெதிர்மறையாற் கூறினர், ஞானத்தினையின்றி அமையாமை உணர்த்துதற்கு. சரியை கிரியா யோகங்களைச் செய்துழி வந்தது உபலக்கணமாகலின் தீக்கை செய்துழி அதுவும் ஞானத்தைக்காட்டியல்லது மோட்சத்தைக்கொடா எனவும் உரைத்துக்கொள்க. அவையெல்லாம் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாமையை வலியுறுத்துவார் நன்னெறியாகிய என ஞானத்தை விசேடித்தார். நன்மையெனப்படுவன எல்லாவற்றுள்ளுஞ் சிறந்த நன்மையெனப்படுவது வீடுபேறென்ப. அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறி எனப்பட்டது.

விழுச்சுடர்ச் செம்பொன் மேருமால்வரையைத் தலைப்பட லுறுவாராய்த் தென்றிசைக்கணின்றும் வழிவினைப்க்கொண்டு சென்று நாவலந்தீவிற் பாரத *வருடத்தினை எய்தி ஆண்டு நின்று நெறிவினையினர்க்கு அஃதறிந்துள்ளார் ஆண்டுக்காட்டிய நெறியே அதற்குச் சென்னெறியாயினும் அந்நெறி இமயத்தை இடையிட்டுக் கிம்புருட வருடத்திற் செலுத்தும், ஆண்டு நின்றுஞ் செல்லும் நெறி ஏமகூடத்தை இடையிட்டு அரிவருடத்திற் கொண்டு செலுத்தும், ஆண்டு நின்றுஞ் செல்லும் நெறி நிடதத்தை இடையிட்டு இளாவிருத வருடத்திற் கொண்டுசெலுத்தும், ஆண்டுநின்றுஞ் செல்லும் நெறி இடையிடின்றி மேருமால்வரைக்கே கொண்டுசெலுத்தும். இவ்வாறு நாற்றிசையுள் யாண்டுநின் றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு இளாவிருத வருடத்திற் கொண்டுசெல்லுதலும், ஆண்டுநின்றுஞ் செல்லும் நெறி இடையிடின்றி மேருமால்வரைக்கே கொண்டுசெலுத்தும். இவ்வாறு நாற்றிசையுள் யாண்டுநின்றெய்தினும் நாவலந்தீவினைத் தலைப்பட்டு †இளாவிருத கண்டத்தினைத் தலைப்பட்டன்றி மேருமால்வரையை எய்தல் கூடாதென்பதூஉம், கூடாதாயினும் அவையெல்லாம் இளாவிருதகண்டத்திற் செலுத்து முகத்தான் மேருமால்வரைக்கு வழியேயா மென்பதூஉம் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. அதுபோல, வீடுபேற்றைக் காதலித்து அவ்வச்சமயந்தோறு முளவாகிய ‡ "பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற் படிவழி சென்றுசென் றேறிச்." சைவத்தினெய்தப்பெற்றோர், ஆசிரியன் காட்டுஞ் சைவாகமநெறியிற் சமயதீக்கையுற்றுச் சரியைநெறியைத் தலைப்பட்டு, அது முற்றியபின்னர் விசேட தீக்கையுற்றுக் கிரியை நெறியைத் தலைப்பட்டு, அது முற்றியபின்னர் யோக

---

* வருடம்-கண்டம். † இளாவிருதகண்டம்-மேருமலையைச் சூழ்ந்திருக்குங் கண்டம். ‡ கருவூர்த்தேவர் திருவிசைப்பா, திருவிடைமருதூர். கூ.

நூல் கேட்டு யோகநெறியைத் தலைப்பட்டு, இம்மூன்றும் முறையான் முற்றிய பின்னர் நிருவாணதீக்கைபெற்று ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேறடைவர். இவ்வாறன்றி வீடுபேறடைதல் கூடாது என்பதூஉம், கூடாதாயினும் அவையெல்லாம் ஞானத்திற்கு நிமித்தமா முகத்தான் ஏதுவாதல்பற்றி அவையவையே வீடுபேறடைவிக்கும் என்பதூஉம் சாலுமென்றுணர்த்துவார் 'நெறி' என்று உருவகஞ் செய்தார். இக்கருத்தேபற்றிப் * ''புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம–வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங் கள் படித்துஞ்–சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளே மிக த்தெளிந்துஞ் சென்றுற் சைவத்–திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.'' எ-ம், †''சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கம் ** ஞானம்.'' எனவும் ஓதினர் வழிநூலா சிரியரும். நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒருபொருட்கிளவி. ''சென்றுற் சைவத்–திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத் தாற் சிவனடியைச் சேர்வர்.'' எனவும், ''படிவழி சென்றுசென் றேறி.'' எனவும் ஓதியதனானே முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும் ஆன் மாக்களினறிவு தூலவறிவாகலின் அவ்வாறு விளங்கமாட்டாது தத்தமக்கே ற்ற சோபானமுறையே சிறிதுசிறிதாக ஏகதேசமாய் விளங்கிவிளங்கி மேம் பட்டுவந்தே வியாபகமாய் விளங்குவதோ ரியல்பிற்றென்பதூஉம், அத்தன் மைநோக்கி அதற்கேற்பச் சோபானமுறையாய்த்தானே முதல்வனது சிற்சத் தியும் முற்பக்கத்திற் றிங்கள்போலத் திரோதானசத்திரூபமாய் நின்றறிவி க்கு மென்பதூஉம், எனவே, ஆன்மாக்களினறிவு அங்ஙனம் விளங்காதவழி நிகழும் அறியாமையாகிய மலமும் அதற்கேற்ற பலபல சத்திகளுதைத்தாய் அம்முறையே சிறிதுசிறிதாக முற்பக்கத்திருள்போலக் கீழ்ப்பட்டுத் தேய்ந்து தேய்ந்து முடிவின்கட் பற்றறக் கழியுமென்பதூஉம், அது தேயத்தேய, அதற் கேற்பத் திரோதானசத்தியும் அம்முறையே சிறிதுசிறிதாகத் தன்றன்மை நீங்கிச் சிற்சத்திரூபமாய்ப் பதிந்துபதிந்து முடிவின்கண் அதிதீவிரசத்தியா ய்ப் பதியுமென்பதூஉம், அது பதியப்பதிய, அம்முறையே விடயவெறுப் புண்டா மென்பதூஉம், அஃது உண்டாக உண்டாக, அம்முறையே வீட்டின் கண் விருப்பம் நிகழுமென்பதூஉம், அது நிகழநிகழ, அதற்கேற்ப ஆண்டா ண்டுப் பலவேறுவகைப்பட உபதேசங்கள் சோபானமுறையான் மேற்பட் டுளவா மென்பதூஉம், அதற்கேற்ப ஆன்மாவின்கண் அநுபவஞானங்களும் அவ்வாறே மேற்படுமென்பதூஉம் கண்டுகொள்க. இனித், தீக்கையும் ஞான த்திற்கு அங்கமாய்நின்றே வீட்டினைக் கொடுக்குமென்பதூஉம் பாயிரத்திறு தியிற் காட்டினும்; கடைப்பிடித்துக்கொள்க.

அற்றேல், காரணமுள்வழிக் காரியநிகழ்ச்சிக் கிடையீடின்மையின் முற் செய்த சரியை கிரியா யோகங்கள் ஞானத்தைக்காட்டும் நிமித்தமென்பார்க்கு அவை செய்துகொண்டபொழுதே இடையீடின்றி ஞானம் நிகழ்தல்வேண் டும், அவ்வாறன்றி மற்றொரு பிறவியின் ஞானம் நிகழுமாறென்னை? என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெழுந்த உதாரணம்;

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கக. † மேற்படி சூ. கஅ.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து,பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

எனவரும்.

சரியை கிரியா யோகங்களாகிய தவத்தினைச் செய்தவர் ஒருதலையாக அவ்வத் தவப்பயன்களை எய்துதற்குரிய உலகத்தினை எய்தி ஆண்டு அவற்றை நுகர்ந்து வைகி மீள நிலத்தின் வந்து பிறத்தலைச் செய்தே எஞ்சிய வினைப் பயன்களை நுகர்ந்து விடயப் பற்றறுத்தற்பொருட்டு அவ்வாறு தவஞ்செய்து தோன்றிய நல்லினத்தின் வந்து பிறந்து அவற்றுன் விடயப்பற்றறுத்து ஞானத் தினைத்தலைப்படுவர் என்பதனை யீட்டுநூலையுணர்ந்தாரது சூழ்ச்சி அந்நூலின் கருத்துணர்ந்து சொல்லும் என்க.

'நற்சார்பில் வந்துதித்து ஞானதைதை நண்ணுதல்' தவமுதிர்ச்சியுடையார்க்கன்றிக் கூடாதென்பார் 'தவஞ் செய்தார்' என்றும், தவ * மாக பிறிதொன்றுக இவ்வுலகத்து உடம்பொடுநின் றீட்டிய வினைகள் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் பயன் நுகர்விக்கப்படுதலை ஒருஞான்றும் பிறழமாட்டாரென்பார் 'என்றுந் தவலோகஞ் சார்ந்து' என்றும், அத்தவஞ் செய்தழியும் ஞானம் நிகழ்ந்தாலன்றி ஏகதேசப்பற்றறுதல் கூடாமையின் அதுபற்றி அவ்வுடம்பு இறக்கும் ஞான்று மனம் ஒருவிடயத்திற் சென்று பற்றியதாயின் அதனை அநுபவித்தற்குத் துணையாகி எஞ்சிநின்ற உடல்வினையோடும் ஆண்டுப் பிறந்து அநுபவித்தன்றி அவ்விடயப்பற்றறுதல் கூடாதென்பார் 'பவஞ் செய்து பற்றறுப் பாராக' என்றும், தவஞ்செய்தார்மனம் நல்விடயங்களினன்றிப் பற்றுதலின் மையின் அவற்றை அநுபவித்தற் குரித்தாய்ச் சிறந்த பிறவி எய்துவரென் பார் 'தவஞ்செய்த நற்சார்பில்வந்துதித்து' என்றும், தவமுதிர்ச்சி யுடையார்க் கெழுந்த நுகர்ச்சி மெலிதாய்க் கழிதொழிவதன்றி ஏனோர்க்குப்போல முறுகுதலின்மையின் இடையீடின்றி ஞானம் நிகழுமென்பார் 'ஞானத்தை நண்ணுதலை' என்றும், இவையெல்லாம் வேதாகமநூற்றுணிபென்பார் 'கற்றூர் சூழ் கண்டு சொல்லுமாம்' என்றும கூறினர். ஆக என்னுஞ் செயவெனெச்சம் ''உண்ணவந்தான்'' என்புழிப்போலத் தற்பொருட்டாய் நின்றது. கற்றூரது சொல்லுதற்றொழிலைச் சூழ்ச்சிமேலேற்றிக் கூறினர். கற்றூர் தமதுசூழ்ச்சியான் உணர்ந்து சொல்லுவர் என்பது. ஆம அசை. தவஞ்செய்தாரென்றுந் தவலோகஞ் சார்ந்து எனப் பொதுப்படக் கூறினராயினும் சரியைக்குச் சாலோகமும் கிரியைக்குச் சாமீபமும் யோகத்திற்குச் சாரூபமுமாம் என்பது, † ''சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமாம்.'' எனவும், ‡ ''உண்மைச்—சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச் சாலோக சாமீப சாரூ பங்கண்—மருவியிடும்.'' எ-ம், வழிநூலாசிரியரும் புடைநூலாசிரியரும் விரித்தோதிய வாற்ருனறிக.

---

* ஆக என்பது விகற்பப் பொருள் பயக்கும் ஒரிடைச்சொல். † சிவஞானசித்தி, அ-ம் சூ. கஅ. சன்மார்க்கஞ். ‡ சிவபிரகாசம், மங்கலவாழ்த்து. கo. கிரியையென.

அற்றேல், *"பால்போ–லொருதன்மைத் தாகு மறவினை யாபோ–லுருவு பலகொள லீங்கு." என்பவாகலின், நல்வினை எனப்பட்டனவெல்லாம் புண்ணியங்களா மன்றே; அவற்றுள் ஏனையவற்றை ஒழித்துச் சரியைகிரியாயோகங்கண் மாத்திரையே ஈண்டுத் தவம் என விதந்தெடுத்துக்கொண்டோதியது என்னையோ? என்னும் ஆசங்கையைநீக்கி எதுவை வலிறுத்துதற் கெழுந்த உதாரணம்;

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப—மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவனு ஞானத்தை வந்து.

எனவரும்.

நல்வினை செய்யத் தொடங்கி அறநூலை ஆராய்வாரது உணர்விற்கு விடயமாய் வரும்பொழுதே தம்மாற் றலைப்படுங் காமியப்பயன்களைக் கூறிக்கொண்டே வருவினைவாகிய புண்ணியங்களா னுளவாய இன்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியான் வரும் இன்பத்தை ஒக்குமாகலான் ஒருவனுக்குப் பந்தமுறுத்துதற்கட் பொன் விலங்கும் இருப்பு விலங்கும்போலத் தம்முட் சமமாகச் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்கள் இரண்டும் தம்மைப் போற் கெடுதலில்லாத சரியை கிரியா யோகங்களானே துலையொப்ப நேராயின், அத்தவங்களின் பயனுகிய பதமுத்திகளை அநுபவித்துவைகு மாண்டே தானே ஞானநெறியைத் தலைப்படுவன். அவை அங்ஙனம் நேராகாவிடின் மீளநிலத்தின்கண் வந்து பிறந்து வினையொப்பு நிகழ்ந்து குரவன் றிருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்படுவன் என்க.

பொருளுக்கோதிய பயனை உவமையினுங் கூட்டி உரைக்க. அறநூலிற் கூறப்படும் நல்வினையின் பயனெல்லாம் அழிவெய்துவன என்பதற்கு அவ்வறநூலே சான்றென்பார் 'இசைத்துவருவினை' என்றார். எனவே வேள்வி முதலியனவற்றை விதித்த அறநூலே, அவற்றிற்குப் பயன் காமியம் என்பதூஉமுடன் கூறுதலின் காமியப்பொருளெல்லாம் அழிவெய்தும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையான் அவ்வழிவெய்துவனவற்றைப் பயப்பனவாகிய புண்ணியங்கள் அழிவின்றி நிலைபேறுடைத்தாகிய ஞானத்தைப் பயக்கமாட்டாதென்றவாறுயிற்று. இசைத்து வருதல் "ஆடி வருதல்" "பாடி வருதல்" போல உடனிகழ்ச்சிவினை. நூலின்வினை வினைமேலேற்றப்பட்டது. சரியை கிரியாயோகங்களான் வரும் பயன் இவைபோல் அழிவெய்துவ தன்றென வேற்றுமை கூறுவார் 'இறப்பிறவம்' என்றார். இசைத்து வருவினையி லின்பம் நிலைபெறுமை, பசித்துண்டு பின்னும் பசிப்பார்க்கு அவ்வுண்டியான் வரும் இன்பத்தை ஒக்கும் எனவே இறப்பிறவத்தான் வரும் இன்பம் நிலைபேறுடைமை,பசித்துண்டு பின்னர்ப் பசியாதாராகிய கடவுளர்க்கு அவ்வமிழ்தவுண்டியான்வரும் இன்பத்தை ஒக்கும் என்பதூஉமாயிற்று. சரியை முதலியவற்றிற்குச் சிறந்த பயன் ஞானமேயாகலாற் சாலோகம் முதலிய பரமுத்திகள் அவாந்தரப்

* நாலடியார், மெய்ம்மை. அ. ஆவேழுருளின.

பயன் என்றுணர்ந்து கொள்க. பின்னும் என்ற உம்மை இறந்ததுதழீஇ யது. ஒப்பில் என்பது செயின் என்னும் வினையெச்சம். தவத்தான் என்பதனைத் தவத்து ஆன் எனப் பிரித்து, தவத்து என்பதற்கு ஏதுப்பொருட்கண் வரும் இன்னுருபு விரித்துரைக்க. ஆன்-அவ்விடம். * ''ஆன்வந் தியையும் வினைநிலை யானும்'' என்றார் தொல்காப்பியனாரும். ஒப்பில் என்றதனால் ஒவ்வாவிடில் என்பது வருவித்துரைக்கப்பட்டது. ஆம் அசை. தவத்தான் எனக் கூட்டி எழுவாயாகவைத்து உரைப்பாரும், ஆனுருபேற்ற சொல்லாக வைத்து உரைப்பாரு முளர்.

ஈண்டுக் கூறப்பட்ட இருமூவறு புண்ணியங்களுள் 'இசைத்துவரு வினை' களெல்லாம் பசுக்களை நோக்கிச் செய்யப்படுதலிற் பசுபுண்ணியம் எனவும், 'இறப்பிறவாங்' களெல்லாஞ் சிவனையே நோக்கிச்செய்யப்படுதலிற் சிவபுண்ணியம் எனவும் பெயர்பெறும்.

அற்றேல், † ''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாக னர்தாம் வருவர்'' என்பவாகலிற், பசுக்களை நோக்கிச் செய்தலும் சிவபிரானே ‡ என்றுகோடலிற் பசுபுண்ணியமுஞ் சிவபுண்ணியமாகுமாலோ வெனின், அறியாது கூறினாய்; ஈண்டுப் பசுபுண்ணியம் சிவபுண்ணியம் எனப் பகுத்தது செய்வாரது கருத்துவேறுபாடு பற்றியே யன்றி வன்றுகோடல்பற்றியன்று; செய்வாரது கருத்துவேறுபாடு நோக்கி அவற்றிற் கிசையவே முதல்வன் பயன் கொடுப்ப னாகலானென்பது. அற்றாகலிவன்றே, மகனெனப் பல்லுயிரீனத்தையு மொக்கப் பார்க்கும் மெய்ஞ்ஞானிகள் பசுக்கண்மேல்வைத்த கருணையான் அவற்றின்கட் செய்தனவும் சிவபுண்ணியமே யாயினவாறு. அற்றாயினும், தண்ணீர்ப்பந்தர் முதலிய உலகவினைபோலன்றி வேள்வி முதலிய வைதிகவினை சிவனை நோக்கி அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலு முடைமையின் அவை சிவபுண்ணியமுமா மென்றற்கு இழுக்கென்னை? எனின் அற்றன்று; ஈண்டுச் சிவபிரானுக்கு அவிப்பாகங் கொடுத்தலும் வழிபடுதலும் பசுக்களாகிய ஏனைக் கடவுளரை நோ டொப்பவைத்துச் செய்தலேயன்றிப் பொதுநீக்கிப் பசுபதி என்னுங் கருத்தாற் செய்தலின்மையின் அவையெல்லாங் கருத்துவகையாற் பசுபுண்ணியமேயாம். ஆண்டுச் சிவபுண்ணியமும் அபுத்திபூருவமாய் நிகழ்தலின் அது புத்திபூருவமாய் இனிச்செய்யக் கடவனவாகிய சிவபுண்ணியங்களுக் கேதுவாதன்மாத்திரையாற் பயன்படுதலுடைத்தென்க. அவ்வேள்வி முதலியனவுஞ் சிவபிரானை நோக்கிப் பொதுநீக்கிச் செய்யின், அஃது ஏனையோபோலப் பசுபுண்ணியமாகுலின்றி முன்னர்க் கூறப்படும் பொதுச் சிவபுண்ணியமாமெனக் கொள்க. இஃது உலகவினைக்கண்ணும் ஒக்கும். ¶ ''வேம்பினெஞ் நீங்கரும்பு விரவியெனைத் நீற்றி'' என்றோதியதூஉம் இவ்வியல்பு நோக்கி யென்க.

இனி, சிவபுண்ணியம் அபுத்திபூருவம் புத்திபூருவமென்று இருவகைப்படும். அவற்றுள், அபுத்திபூருவம் வேள்வி முதலியவற்றுட்போலப் பொது

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல். கூடு. எனையெச்சம். † சிவஞான சித்தி, உ-ம் சூ. உடு. ‡ என்றுகோடல் - ஏற்றுக்கொள்ளல். ¶ சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம், திருநாகைக்காரோணத்திருப்பதிகம். கொல்லிக்கௌவாணம். உ.

நீக்கி அறியுமாறின்றிச் சிவபிராணே நோக்கிச் செய்வதூஉம், அந்நோக்கமு மின்றி * மாவலி முன்னைப் பிறப்பிற் செய்ததுபோலச் செய்தவினே யாதானு மோராற்றூற் சிவபிராணுக்குரிய பணியாய் முடிவதூஉம் என இருவகைப்படும்.

இனி பொதுநீக்கிச் செய்யப்படுவதாகிய சிவபுண்ணியமும் பொது சிற ப்பு என்று இருவகைத்து. அவற்றுட் பொதுவாவது சிவபுண்ணியத்திற்கு அங்கமாகிய சிவதீக்கை யின்றி அவ்வாறு செய்வது. சிறப்பாவது சிவபுண்ணி யத்திற்கு அங்கமாகிய சிவதீக்கையுடையராய் அவ்வாறு செய்வது. இவ்விரண் டும் பத்திகாரணமாக உண்மையாற் செய்வதூஉம், புகழ் முதலிய உலகப்ப யனே நோக்கிச் செய்வதூஉமென வெவ்வேறிருவகைப்படும். அச்சிறப்புச் சிவபுண்ணிய மிரண்டும் சரியையுங் கிரியையும் யோகமும் அவற்றுன் நிகழும் ஞானமு மென ஒரோவொன்று நந்நான்காய் அந்நான்கினுள்ளும் சரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், கிரியையிற் சரியை கிரியை யோகம் ஞானம், யோகத்திற் சரியை கிரியை யோகம் ஞானம், ஞானத்திற் சரியை கிரியை யோகம் ஞானம் என ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப் பட்டு விரியான் இன்னும் பலதிறப்படுமென் றுணர்க.

சரியையிற் சரியை முதலியன.

அவற்றுள், திருக்கோயில் அலகிடல், மெழுகல், முதலியன சரியையிற் சரியை. †ஐயைந்து மூர்த்திகள் விநாயகக்கடவுள் முதலிய ‡ஆவரணமூர்த்திக ளில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. நெஞ்சின்கண் உருத்தி ரக்கடவுளைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகம். அத்தியான பாவனையின் உறைப்பான் ஓரநுபவ வுணர்வு நிகழ்தல் சரியையில் ஞானம்.

கிரியையிற் சரியை முதலியன.

சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னுகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் ¶ மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியா கம் கிரியையில் யோகம். அவ்வந்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓரநுபவ வுணர்வு கிரியையில் ஞானம்.

யோகத்திற் சரியை முதலியன.

இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத் தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். இந்த யோகம் சகளமும் சகளநிட் களங்களைப்பற்றி நின்று செய்யுஞ் சாலம்பயோகமும் நிட்களத்தைப்பற்றி நின்று செய்யும் நிராலம்பயோகமுமென் றிருவகைப்படும். இயமம் முதலிய

* மாவலி-ஓரசுரன்: இவன் விரோசன் மகன். இவனது முன்னைப்பிறப்பை, "சக மதி லெலிதா னன்றே மாவலி யாய்த்துத் தானே" என்னுஞ் சிவஞானசித்தித் திருவி ருத்தத்தால் அறிக. † ஐயைந்து மூர்த்திகள்-சந்திரசேகர், உமாமகேசர் முதலிய இரு பத்தைந்து கேவலவடிவங்கள். ‡ ஆவரணம்-பரிவாரம். ¶ மூவிடம்-இதயம், உந்தி, புருவநடு என்பன.

அட்டாங்கங்களின் இயல்பெல்லாம் சண்டு விரிப்பிற் பெருகும், சிவாகமங்களுட் காண்க.

ஞானத்திற் சரியை முதலியன.

இனி, கேட்டன் முதலிய நான்கனுள் கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டை கூடல் ஞானத்தில் ஞானம் என்றுணர்ந்து கொள்க.

இவற்றுள், உபாயச்சரியையிற்சரியை முதல் உபாய ஞானத்தின் ஞான மீறுகிய பதினாறு வகையினின்றும் பல வேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பக் காலாக்கினியுருத்திரர் முதல் குணதத்துவ மத்தகத்திற் சீகண்ட புவனத்தின் கீழுள்ள உருத்திரர் ஈறுன அவ்வப் புவனபதிகளுலகத்திற் சாலோகம் முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச்சரியையிற்சரியை முதல் உண்மையோகத்தின்ஞானமீறுகிய பன்னிருவகையினின்றும் பல வேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக் கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பச் சீகண்ட புவனம் முற்றச் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம் முதலிய பதமுத்திகளைப் பெறுதலாம். உண்மைஞானத்திற் சரியை முதலிய மூவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்கட்கெல்லாம் பயன், அவ்வவற்றிற் கேற்பச் சுத்தவித்தை முதலிய அதிகாரதத்துவம் போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோகம் முதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப் பலவேறுவகைப்பட்டு விரியும் ஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயன். ஏனையவற்றிற்கு இலயதத்துவத்திற் பலவேறுவகைப்பட்ட அபரமுத்திப்பய னெனக் கொள்க.

உண்மைச்சரியை முதலியவற்றிற்குச் சுத்தவித்தை முதலிய தத்துவத்துச் சாலோகம் முதலியவற்றிற் சேறல் பயனென்று உரைப்பாருமுளர். சிவதத்துவ புவனங்கள் ஆணவமலம் நீங்கி வாசனைமாத்திரமுடையவரான் எய்தப்படும் அபரமுத்தித்தானமன்றி ஏனையோரெய்தும் பதமுத்தித்தான மன்றென்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்ப முடிந்ததாகலின் ஞானத்திற் றகுப்பட்டன்றி மலநீங்குதல் கூடாமையானும், *"ஈசனியோகக்கிரியா சரியையினினீறோர்–ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா மொடுங்கும்போதரன்முனிலா தொழியினுற் பவித்து–ஞானநெறி யடைந்தடைவர் சிவனே." எனப் பதமுத்திகளைப் பெற்றோர்க்கு மீட்சி கூறுதலிற் சுத்தவித்தை முதலிய தத்துவபுவனங்களின் எய்தியோர்க்கு ஆண்டுநின்றவாறே பரமுத்தியைத் தலைப்படுதலன்றி ஒருவாற்றானும் மீட்சியில்லை என்பது சிவாகமநூற்றுணிபாகலானுஞ், சிவாகமங்களோடு முரணி அவ்வாறு கூறுதல் பொருந்தாமை யறிக. சரியை முதலியவற்றில் நின்றோர்க்குப் பயன் புத்திதத்துவபுவனத்துச் சுத்த சாலோகம் முதலாயின எனச் சில இடங்களிற் கூறியது ஞானத்திற் சரியை முதலியவற்றில் நின்றோர்க்கென்னுங் கருத்தேயாமென் றெழிக.

---

* சிவஞானசித்தி, அ-ம் சூ. உடு. தானமியாகந்.

சரியை.

சரியை முதலியவற்றின் இயல்பு என்னெனினிற் கூறுதும்:—அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபிரான், உயிர்கள் சோபானமுறையானுணர்ந்து உய்தற்பொருட்டுத் தூலமாகவுஞ் சூக்குமமாகவும் அதிசூக்குமமாகவும் மூவடிவங் கொண்டருளி அவ்வடிவங்களின் வழிபடும் முறைமையும் வேதாகமங்களில் அவனுல் வருத்தருளிச்செய்யப்பட்டனவாகலான் அம்மூவகை வடிவின்வைத்துப் பக்குவமுறைமையான் மேம்பட்டு நிகழும் நுண்ணுணர் வின்மையிற் சகளமாகிய தூலவடிவமாத்திரத்தைப் பொருளென்றுணர்ந்து காயத்தொழின் மாத்திரையான் ஆகமத்தின் விதித்தவாறு வழிபடுவது சரியை.

கிரியை.

அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான் நுண்ணுர்வுடையராய்ச், சகளநிட்களமாகிய சூக்குமவடிவமே பொருள், சகளவடிவம் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி, என்று இவ்வாறு உணர்ந்து புறத்தொழிலானும் அகத்தொழிலானும் விதித்தவாறே வழிபடுவது கிரியை.

யோகம்.

அஃது அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவவிசேடத்தான் அதிநுட்பவுணர்வுடையராய், நிட்களமாகிய அதிசூக்குமவடிவமே பொருள், சகளமும் சகளநிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனி, என்று இவ்வாறு உணர்ந்து அகத்தொழின் மாத்திரையான் ஆண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்.

ஞானம்.

மூன்றும் இவ்வாறு முறையே அடிப்பட்டுவரவர நிகழும் பக்குவமுதிர்ச்சியானே உள்ளவாறு உணர்வு விளங்கி, அகண்டாகாரநித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பே சொரூபம், எனைச்சகளம் முதலிய மூன்றும் தூலாருந்ததிநியாயமாக அதனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற்பொருட்டும் கொண்ட திருமேனி, என் றிவ்வாறு உணர்ந்து, காயத்தொழின் மனத்தொழிலிரண்டினையுங் கைவிட்டு, கேட்டன் முதலிய அறிவுத்தொழின்மாத்திரையான் வழிபடுவது ஞானம்.

ஆகலான், அறிதலொப்புமையாற் சரியை முதலிய நான்கும் ஞானமேயாமெனவும், ஆயினும் *"அரும்பு மலர் காய் கனி" யாதல்போலச் சோபான முறையாகிய தம்முள் வேறுபாட்டான் முறையே ஒன்றற்கொன்று அதிகமாய் நான்காம் எண்ணுமுறைமைக்கண் நின்ற ஞானமே முடிவாகிய ஞானமாம் எனவும், எனவே, இந்நான்கினும் அறிவு நுணுகிவரவர அறியாமையாகிய மலமும் அம்முறையே தேய்ந்துதேய்ந்து வருதலின், இவற்றின் பயனுகிய சாலோகம் முதலிய நான்கும் முத்தியேயாம் எனவும், ஆயினும், அம்மலநீக்கமும் அவ்வாறு நிகழுஞ் சோபான முறையானே அவை ஒன்றற்கொன்று ஏற்ற

* தாயுமானசுவாமிபாடல், பராபரக்கண்ணி. கஞ. விரும்புஞ்.

மாய் அவற்றுள் நான்கா மெண்ணுமுறைமைக்கண் நின்ற சாயுச்சிய மொன்றே முடிவாகிய முத்தியா மெனவும் உணர்ந்து கொள்க.

சாலோகம்.

சாலோகம் முதலிய நான்கனுள் அவ்வச்சரியையைக் கேற்ப அவ்வப் புவன பதியுலகங்களினெய்தி ஒருவர்மணியிற் பணிசெய்யும் அகத்தொண்டர்க் குள தாகிய உரிமைபோல, அவ்வவ் வுலகத்துள் யாண்டுந் தடையின்றி இயங்கி அவ்வப்போகங்களை நுகர்ந்து வாழ்வது சாலோகம்.

சாமீபம்.

அவ்வளவினன்றி மைந்தர்க்குளதாகிய உரிமைபோல அவ்வப்புவனபதி களுக்கு *அணுக்காய் வைகிஅவ்வப் போகவிசேடங்களை நுகர்ந்து வாழ்வது சாமீபம்.

சாரூபம்.

அவ்வளவினன்றித்தாழ்க்குரிய உரிமைபோல அவ்வப் புவனபதிக ளோடொத்த வடிவமும் ஒத்த அணிகலனும் ஒத்த போகநுகர்ச்சியும் பெற்று வாழ்வது சாரூபம்.

இம்மூன்றும் உரிமை விசேடம்பற்றி முறையே தொண்டர் முதலியோ ரியல்பை ஒத்தலின், இவற்றை அடைதற்கு நெறியாகிய சரியை முதலிய மூன்றும் தாதமார்க்கம் புத்திரமார்க்கம் சகமார்க்கம் எனப் பெயர்பெற்றன என்பது.

சாயுச்சியம்.

இனி, சரியையின்ஞானம்முதல் யோகத்தின்ஞானமீறுகிய ஞானவிசே டங்கட்குப் பயனெனப்படும் சாயுச்சியமாவது,ஒத்தவடிவினராய் வாழ்தன்மா த்திரையேயன்றி அவ்வப்புவனபதிகளான் அதிட்டிக்கப்பட்டு அவ்வவ்வதி காரங்களை அவ்வவர்போலவே செய்துகொண்டு வாழ்வதென் றுணர்க.

அற்றேல், இவ்வாறன்றிப் புவனபதிகளுடைய சாயுச்சியமாதலாவது அவ்வப்புவனபதிகளான் அதிட்டிக்கப்படுதலின்றியே அவரோடொப்ப அதி காரஞ் செய்யும் ஆற்றலுடைமை என்றுற்படி மிழுக்கென்னை? எனின், நன்று சொன்னாய்! அவ்வச் சாயுச்சியத்தினின்றீர் அவ்வப் புவனபதிகளான் அதிட் டிக்கப்படுதலின்றியே அவரோடொப்ப அதிகாரஞ்செய்யும் ஆற்றலுடையரா யவழி, வறிதே யிருப்பரோ? அதிகாரஞ்செய்துகொண்டிருப்பரோ? எனக் கடாயினர்க்கு வறிதேயிருப்பரென விடுப்பின், அவ்வாற்றலாற் போந்த பய னென்னை? அல்லதூஉம், வீடுபயக்கும் மெய்யுணர்வு நிகழுங்காறும் மேன் மேல் அவாச்சேற லொருதலையாகலின் ஆற்றல் பெற்றழி வறிதேயிருத்தல் கூடாது. இனி அதிகாரஞ் செய்துகொண்டிருப்பரென விடுப்பின், அவ்வப் புவனபதிக ளதிகாரத்தை மாற்றி முழுவதுந் தாமே அதிகாரஞ் செய்வரோ? அவரும் அதிகாரஞ் செய்யத் தாமும் அதிகாரஞ் செய்வரோ? அவரதிகாரத் தை மாற்றித் தாமே அதிகாரஞ் செலுத்துவரெனின், அவ்வப் புவனபதிகளா

* அணுக்கர்-அணுகிவசித்தலுடையவர். அணுகல்-சமீபித்தல்.

தலே சாயுச்சிய மெனப்பட்டு வழுவாம்; அன்றியும், பிரளயாகலர் விஞ்ஞான கலரிற் புண்ணியப்பே றுடையார்க்கன்றிச் சகலரிற் புண்ணியப்பே றுண்டயார்க்குப் புவனபதிகளாதல் கூடாது; அவ்வாறின்றி அவரும் அதிகாரஞ் செலுத்தத் தாமும் அதிகாரஞ் செலுத்துவரெனின், ஒருகம்பத்தில் இரண்டானே போலவும், ஒருநகரியில் இருவேந்தர் போலவும், மாறுதலேயன்றி அவ்வதிகாரம் இனிது செல்லாது; அல்லதூஉம், தமக்குப் பாதியதிகாரமாய் முடியும், அப்புவனபதிகட்குப் பாதியதிகாரங் குறையும் என்று இவ்வாறெல்லாம் எள்ளலாய் முடியுமாகலின், அவ்வப்புவனபதிகளோடொத்த ஆற்றலுடைமை அவ்வச்சாயுச்சியம் என்றல் போலியென் றுழிக.

இனி, முடிவாகிய ஞானத்திற்குப் பயனெனப்படுஞ் சாயுச்சியத்தினியல்பு முன்னர்க் காட்டுதும். சரியை முதலியவற்றிற்குச் சாலோகம் முதலியன அவாந்தரப் பயனெனவும் ஞானமொன்றே உண்மைப் பயன் எனவுங் கொள்க.

இனி, தவம் இவ்வாறு சரியை முதல் நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டு நிகழ்தற்கேற்பப், பக்குவமாதற்பொருட்டு மலத்திற்கு அதுகூலமாய் நின்று நடாத்திய திரோதானசத்தி மலம் பரிபாகமெய்தியவழி அக்கருணைமறமாகிய செய்கை மாறிக் கருணையெனப்படும் முன்னைப் பரா சத்திரூபமேயாய் ஆன்மாக்கண்மாட்டுப் பதிதலாகிய சத்திநிபாதமும், மீசானமுறையான் மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என நால்வகைப்பட்டு, அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டு நிகழுமெனக் கொள்க. எனவே, சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாக மென்பதூஉம், அதுவும் அவ்வாறு பலவேறுவகைப்பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன. சத்திநிபாதம் என்னுஞ் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. "நி" என்பது ஏற்றமாக என்னும் பொருள்குறித்துநின்றதோரிடைச்சொல். ஓரவைக்களத்தின் நடுவே ஒருகல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத்துள்ளாரை ஆண்டுநின்று மகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்தமாத்திரையே அஃது அவ்வான்மாவை மலவி மக்கண் முதலிய உலகத் துழனியின் அச்சநிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக்குரவனே நாடிச் செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்றச் சத்திநிகழ்ச்சி என்னுது சத்திவீழ்ச்சி என்றோதப்பட்டது.

மலபரிபாகமாவது மலம் தனதுசத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலேயாம். இனி, இறப்பிறவத்தான் நிழும் இருவினையொப்பாவதுயாதெனிற் கூறுதும்:—சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த இருவினைகளும் பக்குவமுறையானே பயனுய் வரும்வழி, நல்வினையுண் மிக்கதாகிய பரிமேதவேள்விப் புண்ணியமும் தீவினையுண் மிக்கதாகிய பிரமக்கொலைப் பாவமும் ஒருங்கே பக்குவமெய்திப் பயன்படுதற்கண் ஒத்தனவாயின், அவை தம்முள் ஒன்றுனென் றடிக்கப்பட்டுச் *சுந்தோபசுந்தநியாயமாய்க் கெட்டொழியுமாகலின், அவை அவ்வாறு தம்முளொத்தலே இருவினையொப்பு

* சுந்தோபசுந்தநியாயமாவது:—சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரரிருவரும் திலோத்தமை என்னும் பெண்பொருட்டாக ஒருவரை ஒருவர் கொன்றதுபோன்ற ஒருநெறி.

என்பர் ஒருசாரார். சஞ்சிதமாய்க்கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முளொத்தல் இருவினையொப்பென்பர் ஒருசாரார். மிக்க வினை இரண்டுந் தம்முளொத்துக் கெட்டனவாயினும் அவையொழித் தொழி ண்ணியபாவங்கள் தத்தம் பயனைத் தருதற் கிடையீடின்மையானும் இரு ண் முழுதுந் தம்முளொக்குமாறில்லை; ஒக்குமெனினும் அதுபற்றி ஆ வமலம் நீங்குமாறின்மையான் விஞ்ஞானகலராவாரன்றி முத்தியெய்து தல் கூடாமையானும், இவ்வாறு பௌட்கரத்துள் எடுத்தோதி அவ்விரண் டினையும் மறுத்தலானும், ஈண்டோதிய இருவினையொப்புக்கு அவை பொரு ளல்லவென் றுழிக.

இனி, இவ்விரண்டும் இவ்வாறுக வேறுவேறு பொருள்படுதற் கேலாமை யானும், சிவப்பிரகாசத்தில் *"எதிர் வினையுமுடி வினையுதவு பயனு னேராக." என வினைவினைகள்போல ஆகாமியவினையும் முடிவினையும் ஒத்தல்வேண்டுமென் றோதுதலின் அஃது ஒத்தல் பிறிதோராற்றுற் பெறப்படாமையானும், மலபரி பாகக்குறி சத்திநிபாதக்குறி சிவபுண்ணியக்குறிகளெல்லாம் ஆன்ம வறிவின் கண் விளங்குமாறுபோல இருவினையொப்புக் குறியும் தன்னறிவின்கண் விளங் குமாறில்லையாயின் அது முத்திக்கேதுவாதல் கூடாமையானும், ஒன்றில் விரு ப்பம் ஒன்றில் வெறுப்புமாத லின்றிப் புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்துவிடுவோனதறிவின்கண் அவ்விருவினை யும் அவ்வாறொப்ப நிகழ்தலே ஈண்டு இருவினையொப் பென்றதற்குப் பொரு ளென நுண்ணுணர்வாற் கண்டுகொள்க.

†"எதிர்வினை**நேராக." எனப் புடைநூல் செய்த ‡ஆசிரியர், இஃதறி யாது வேறுவேறுரைப்பாரை நோக்கியன்றே, ¶"அருவினை தூக்க வருவினை நில்லா—வொருவினை புரிகா லிருவினை யாகா—வொப்புறு மாறு செப்புக." எனச் சங்கற்பநிராகரணத் தோதியதூஉமென்க. §"இனையபல பிறவிகளின்." என் னுஞ் செய்புளில் "எதிர்வினையும்" என்பதற்கு வேறுமுடிபாகவைத்துத் தம க்கு வேண்டியவாறே உரைப்பாருமுளர். அதுபொருந்தாமை சொற்கிடக்கை முறை நோக்கி உணர்க. ஆண்டிருபயனும் என்ற உம்மை வினையிரண்டும்மைக ளோடொப்ப எண்ணும்மையாதலே பொருத்தமுடைத்தாகலின், அதனை வேறுபிரித்து முற்றும்மையாகக்கொண்டு உரைத்தலும் பொருந்தாமை அறிக. இன்னும் அவர் o"உம்முந் தாகு மிடனுமா ருண்டே". என்னுஞ் சூத்திரவிதி பற்றி. **"நீர்க்கோழி கூப்பெயர்க் குரு." என்றுரைபோல நுகருமென்னும் பெயரெச்சத்தை நுகருந்து என வைத்தோதிய ஆசிரியர்கருத் துணராது நுகர் என்பதனை முதனிலைப்பெயராக்கிக் கண்ணுருபு விரித்திடர்ப்பட்டுரைப் பர். "ஒருகாலத்து" எனவும், "முந்து" எனவும் ஓதிய சொற்குறிப்பும் அறிந் திலர்போலும். அன்றியும், அவ்வாறுரைப்பார்க்கு "அந்தமுறவந்தவினையும்" எனவே அமையுமாகலின் "ஒருகாலத்தருந்த முந்துநுகருந்துபயன்" என்ற

* சிவப்பிரகாசம், பொது. உ-ம் சூ. கூ0. இனையபல. † மேற்படி. ‡ உமாபதி சிவா சாரியர். ¶ சங்கற்பநிராகரணம், சைவவாதி நிராகரணம். உஉ, உங, உச-ம். அடிகள். § சிவப்பிரகாசம், பொது. உ-ம் சூ. கூ0. o தொல்காப்பியம், சொல்லதிகாரம். இடை யியல்.சச. ** புறநானூறு. கூகஞ.

சொன்முழுவதும் வெற்றெனத்தொடுத்தலாய் முடியுமாகலானும் அவ்வுரை போலியென் றுழிக.

இனி, இருவினைகள் பசுநல்வினை தீவினை என்றுஞ் சிவநல்வினை தீவினை என்றும் இருவேறுவகைப்படும். எனவே, இருவினையொப்பும் அவ்வாறு பசுநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினையொப்பென்றும் சிவநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினையொப்பென்றும் இருவேறுவகைப்படுமென்பதூஉம் பெற்றும். சிவநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாவது, சிவநல்வினையுந் தீவினைபோலத் தமது முதலுபகாரத்தை மற்றது பிறவிக்கேதுவாய்ப் பசுபோதம் மூன்றுத்துச் செய்யப்படுவதொன்றெனத் தெளிந்து உவர்த்துவிடுவோனது அறிவின்கண் அவ்வாற்று ளெப்பகிழ்தல். இவ்விருவகை யிருவினையொப்புள், முன்னியது பக்குவத்தானிகழும் பசுபுண்ணியத்தினும் நிகழ்வனவாயுள எனை மேற்கூறப்பட்ட அபுத்திபூருவம் புத்திபூருவம் என்னும் பொதுச்சிவபுண்ணியத்தான் உண்டாவதாய் மலபரிபாகத்தைத் தோற்றுவிக்கு முகத்தானே மந்ததரம் எனப்படும் முதற் சத்திநிபாதத்தில் நிகழும். பின்னியது பலதிறப்படுவனவாகிய நால்வகைச் சத்திநிபாதத்தான் அவ்வாறே நால்வகைப்பட்ட முறையா னிகழ்ந்து முடிவின்கண் ஞானத்திற்கு ஏதுவா மென் றுணர்க.

இனி, ஞானத்திற்குக் காரணம் கிரியை முதலியன என்பதூஉம், சரியை முதலியவற்றிற்குக் காரணம் மந்ததரம் முதலிய சத்திநிபாதம் என்பதூஉம் யாண்டும் இனிது விளங்கக்கிடந்தன. இவையெல்லாவற்றிற்கும் மூலகாரணமெனப்பட்ட பக்குவமாவது தமக்குரிய சோபானமுறையானன்றி அறியமாட்டாததோரியல்புடைய ஆன்மாக்களுக்கு அம்முறையான் நிகழும் அறியவல் லுதலேயாம் என்பது மேல் ஆண்டாண்டுக் கூறியவாறுபற்றி உணர்ந்து கொள்க. அவ்வல்லுதற்குக் காரணம் கேவலக்கிடையினும் நீங்காது உடனுப் நின்று நோக்கிவரும் முதல்வனது கருணைநோக்கத்தின் அடிப்பாடென அறிக.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

மேலையதிகரணத்தின் உயிர்க்கு வீடுபயக்கும் நல்லறிவு தவத்தினுலேயே வருமெனச் சாதித்தவழி, அற்றேல், மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழிப் பிறிதுகாரணம் வேண்டாது அவைதாமே ஞானத்தைக் காட்டும் போலும் என்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது இரண்டாம் அதிகரணம்.

இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதருனே குருவுமாயுணர்த்தும் என்றது.

எனவரும்.

இது, மேலையதிகரணத்தோதிய சரியை முதலியவற்றுன் நிகழும் ஞானம் குரவனியின்றி அமையாதவாறும் அக்குரவன தியல்பும் உணர்த்துகின்றது.

'இனி' என்பது சரியைமுதலிய மூன்றுஞ் செய்து முற்றியபின் என்றவாறு. 'இவ்வான்மாக்களுக்கு' என்பது இம்முற்றுப்பேறுடைய ஆன்மாக்களுக்கு என்றவாறு. தமக்கு முதலாய் இதுகாறும் உண்ணின் றுணர்த்தி வந்த பரம்பொருட்கன்றி ஏனையோர்க்கு அவ்வியல் பறிந்து உணர்த்துதல் கூடாதென்பார் 'தமது முதலுனே' என்றார். ஏனையோரிற் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இக்கருத்தேபற்றி *"அகத்துறுநோய்க் குள்ளின ன்றி யதனைச்—சகத்தவருங் காண்பரோ தான்." என்றார் புடைநூலாசிரியரும். இனி, தானே என்பதனைத் † "தானே தருபவன்" என்புழிப்போலக்கொண்டு உரைத்தலு மொன்று. இதனானே கருணைமிகுதி கூறியவாறாயிற்று. உம்மைக்குப் பொருள் மேலுரைத்தாம். ஈண்டுக் 'குரு' என்றது மாநுடவடிவினை.

• அற்றேல், ‡"மாயாவுருவன் மாயாவுருவினை யேயான்." ஏய்வனுயின் எம்மனோரி லொருவனுப் முடியும். அல்லதூஉம் ஆகமங்களில் ஆசான்மூர்த்தி யாகிய ஆதாரத்தை அதிட்டித்து நின்று உணர்த்துவன் முதல்வனென வேற் றுமைப்படுத் தோதுதலின் ஈண்டிவ்வாறு கூறுதல் அவற்றோடு முரணுமால் என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது;

அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

எனவரும்.

அம்முதல்வன் வேற்றுமையின்றி உடலின்கண் உயிர்போல்வதோர் கலப்பினுல் ஆன்மாவே திருமேனியாகவுடையனுப் நிற்றலான் 'இனி இவ்வான் மாக்களுக்குத் தமது முதலுனே குருவுமாய் உணர்த்தும்' என மேற்கொண்டது என்றவாறு.

முதல்வன் கலப்பினுல் அவையேயாதல் பொதுவதிகாரத்துட் பெறப்பட்டமையின் ஈண்டு அதனை ஏதுவாகவைத்து மேற்கோளைச் சாதித்தார். ஈண்டுச் சைதன்னியம் ஆன்மா என்றது ¶"அறிவொளிபோல்" என்றற்றொடக்கத்துப் போல ஏற்புழிக்கோடலாற் பெறப்படும். இவ்வாறன்றி அறிவுசொரூபியாய் எனப் பொதுப்பட உரைப்பின் அவ்வேது ஆன்மாக்கண் மாட்டுஞ் சேறலின் ஈண்டெடுத்துக் கொண்ட மேற்கோளைச் சாதிக்கமாட்டாது §அநைகாந்திகமாய் முடிவதூஉமன்றி மேற்கூறிய ஆசங்கைக்கு விடையாகாமையு முணர்க.

அற்றேல், இது விடையாமாறு யாங்ஙனமெனிற் கூறுதும்:—சில ஆகமங்களிற் குருமூர்த்தியாதாரத்தை அதிட்டித்துநின்று உணர்த்தும் என்றது பொருட்டன்மையாற் றானேயாமென மேலோதிய இயைபுபற்றி. ஈண்டுத் தம்மூலே குருவுமாய் உணர்த்துமென்றது கலப்பினுல் அவையேயாமென் றேதிய

* திருவருட்பயன், அருளுநிலை. உ. † கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம். டுஅ. ஆலவா. ‡ சங்கற்பநிராகரணம், சைவவாதி நிராகரணம். உசு-ம் அடி. ¶ சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து. எ. புறச்சமயத். § அநைகாந்திகம்-பிறழ்ச்சியுடையது; தருக்கநூலிற் கூறப்பட்ட ஏதுப்போலிகளுள் ஒன்று. அது பொதுவுஞ் சிறப்பும் முடிவுபெறுமையும் என மூவகைத்து. அவற்றுள் இது பொதுவென் றுணர்க.

இயைபுபற்றி. ஆகலின் இரண்டுந் தம்முண் முரணுமா றின்மையாலும், *"மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை–யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்." என்பவாகலின் முதல்வனுக்குத் திரு மேனியாகிய சைதன்னியம் முதல்வனேச் சார்ந்து அவ்வண்ணமாயவழி அவ் வுடம்பும் அவ்வா றருண்மயமே யாகலின் இழுக்கின்மையான் †அவ்வுடலிடங் கோடல் பொருத்தமுடைமையானும், தமதுமுதறனே குருவுமாய் உணர்த் துமென மேற்கொண்டது சாலுமென விடுத்தவாறென் றறிக. "மாயைமா மாயை" என்னுஞ் செய்யுள் வேறுபொருள்படுதற் கேலாமை மேல் இருவினை யதிகரணத்தின் விரித்துரைத்தாம்; கடைப்பிடிக்க.

அற்றேல், சில ஆன்மாக்களுக்குக் குருவடிவங்கொண்டு உணர்த்துத லின்றியும் ஞானம் நிகழ்த்த லுண்மையின் ஈண்டுக் குருவடிவங்கொண்டு உணர் த்தியபின்னன்றி ஞானம் நிகழாதென வரைந்தோதியது யாண்டுஞ் செல்லா தால் என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட் டும் உதாரணம்;

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.

எனவரும்.

விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும் அன்றிப் பிரளயா கலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும் அஞ்ஞான அச்சகலர்க்கு அக் குருவாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் என மாறுக.

எளிதின் அடப்படுதலைக்கி "அரிசி தானே யட்டது." என்றாற்போல எளிதின் விளைவிக்கப்படுத லைக்கி 'மெய்ஞ்ஞானந் தானேவிளையும்' என்றார். "அரசனெடுத்த ஆலயம்." என்புழிப்போல விவ்விருதி குன்றி நின்ற தென்றலு மொன்று. இவ்வாறுரையாது வியஞ்சகமின்றித் தானே விளையும் என்றுரைப் பிற் சிவாகமமெல்லாவற்றோடும் முரணுமென் றெழுக. தானே விளைதலாவது வேறிடத்தின் நில்லாது தன்மையி னின்றே விளைப்ப விளைதல். ‡"உண்ணின் றறுத்தருளி." என்றார் புடைநூலாசிரியரும். பிரளயாகலருக்குத் தான் குரு வாய் நின்று முன்னுணர்த்துதலாவது விஞ்ஞானகலர்க்கு உண்ணின்றுணர்த் தியவாறுபோலன்றி ஈற்றோளும் முக்கண்ணும் கறைமிடறும் முதலிய உறுப்பி ற்றாய் முத்தொழில் நடாத்திநின்ற தனதியற்கைவடிவே குருவடிவாகக் காட்டி முன்னின்று உபதேசமுகத்தான் உணர்த்துதல். சகலர்க் கக்குருவாய்ப் பின் னுணர்த்துதலாவது அவர் வடிவுபோலுங் குருவடிவாகிய மானுடப்போர்வை யின் மறைந்துநின்று உபதேசமுகத்தான் உணர்த்துதல். மெய்ஞ்ஞானம் வீடு பயக்குமுணர்வு. ஈண்டு அஞ்ஞானமென்றது அவிச்சையை; சகலர்க்கே விசே

* சிவப்பிரகாசம், உண்மை. எ-ம் சூ. உ. மாயை மாமாயை. † அவ்வுடலிடங்கோ டல் பொருந்துமாறு "எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய்." என்னுந் திருவாசகத் தானு முணர்க. ‡ போற்றிப்பஃறொடை. சுக-ம் அடி.

டணமாய் ஒதுதலானென்பது. அச்சகலர்-மேற்கூறிய சரியை கிரியா யோகங் கள்செய்து முற்றிய சகலர். அக்குரு-மேற்கொளிற் கூறிப்போந்த குரு எனக. எனவே, ஈண்டுச் சரியை கிரியா யோகங்களைச் செய்தோர்க்குத் தம்முதல் குருவுமாய் உணர்த்துமெனச் சகலர்வர்க்கமே எடுத்துக்கொண்டு ஓதியதாக லின் அஃது ஏனைப் பிரளயாகலர் விஞ்ஞானகலர் வர்க்கத்துச் செல்லாமைப் பற்றி இழுக்கில்லை என விடுத்தவாறு உணர்க. செய்யுளிறுதியின் முன் என்றது முன்னுகிய முதல்வன் என எழுவாயாய் நின்று, உணர்த்தும் என்னும் பயனிலைகள் கொண்டது.

இம்மூவருட் சகலர்க் குணர்த்துங்கால் இயற்கைவடிவை ஒழித்துப் பிறி தொரு மாறுபடவடிவ மாதாரமாக நின்று உணர்த்துதலின் அது சாதாரமென்றும் ஏனையிரண்டும் அன்னவல்லவாதலான் நிராதாரமென்றுங் கூறப்பட்டன.

அற்றேல், மூவகை ஆன்மாக்களுக்கும் ஓரியல்பாய்நின்று உணர்த்தல் அமையும் அவ்வாறன்றி விஞ்ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலையினும் சகலர்க்குப் பின்னிலையாகிய படர்க்கையினும் நின்று இவ்வாறுணர்த்துதல் எற்றுக்கென்னும் ஆசங்கையை, ஆன்மாக்களது சிறப்பியல்பும் அவற்றிற்குத் தம்முள் வேறுபாடும் உணர்த்துமுகத்தான் நீக்கி, அவ்வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறுரும் நின்று உணர்த்துதலே அமைவுடைத்தென அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா மூன்பின் குறைக—ணெறியிற்
*குறைவுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

எனவரும்.

ஆன்மாக்கள் அதுவதுவாய்ச் செறிந்தறிவனவன்றி முதல்வன்போலச் செறியாது நின்று அறிவனவல்ல. ஆகலான், அம்முதல்வன் வியஞ்சகமாய் நின்று படிவழிபோல வைத்து முறையான் விளக்கினலன்றி அவற்றது அறிவு விளங்காதென்பது பெறப்படும். அவ்வறிவுகள் அவ்வாறு படிவழிமுறைபோல விளங்குதலும் ஒருதன்மையானன்றிக் கல்விக்குறைவுடைய கணக்காய்வார் போல முன்னும் பின்னுமாய் விளங்குந் †தாரதம்மியமுடையனவாம். ஆகலே, அவ்வறிவுகள் விரியாற் பல வேறுபாடுகளுடையவாயினும் அவ்வாறுணர்தற் கேற்ப நிகழும் பந்தவேறுபாடுபற்றி விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என வகையான் முத்திறப்படுமென்பதூஉம் பெறப்பட்டது. அவ்வான்மாக்களுட் பலவாற்றானும் ஈட்டிச் சிதித்தன்றித் தெளியப்படாத குறைபாடுடைய தூல்வேண்டாத தூண்ணுணர்வுடையார்க்கு முதல்வனுற் கொள்ளப்படும் உண்மை மாத்திரையானே முத்தி கூடுமென்றறிவாயாக. தூல்வேண்டுந் தூல அறிவுடைய சகலர்க்கு ஞானத்தாற் குறைபாடில்லாத சகத்தினகணுளனுகிய சுரவனுல் முத்தி கூடுமென்றறிவாயாக வென்க.

உளங்கள் செறியுமாம் ஆகலான் நெறியின் அறிவிக்கவன்றி யறியா எனக் கொண்டு கூட்டி உரைக்க. அறிவித்தற்கு எழுவாய் மேலே வெண்பாவினின்

* சிற்றுரையில் குறையுடைய எனப் பாடங்கொண்டார். † தாரதம்மியம்-உயர்விழிவு.

றும் வருவிக்கப்பட்டது.அன்றி அறியா என எதிர்மறையாற் கூறினர் இன்றி யமையாமை யுணர்த்துதற்கு. நெறியின் இன் உவமவுருபு. முன் பின்னை என ஆக்கச்சொல் வருவித்துரைக்க. குறைவுடையார்களைக் குறைகள் என உபசரித்தார். போல என்பது சொல்லெச்சம். சொல்லுஞ் சூழும் ஆகுபெயர். கொள்ளார்க்கு என நான்கனுருபு * ''ஐந்தவித்தானற்றல்'' என்புழிப்போல விகாரத்தாற்றொக்கது. பவம், சம்பவம்,உண்மை என்பன ஒருபொருட்கிளவி. ஈண்டு உண்மை என்றது நிராதாரத்தை. ஈண்டுச் சகம் என்றது நிலவுலகத்தை. சகனுல் என்க. வீடென் என்பதனை ஈரிடத்துங் கூட்டுக. நூல் குறைவுடையதாயினும் அதனைக் கேட்பித்துச் சிந்திப்பித்துத் தெளிவிக்குங்குரவன தறிவாற்றலிற் குறைபாடின்மையிற் றெளிந்து வீடெய்தல் கூடுமென்பார் 'குறைவில் சகன்' என விசேடித்தார். † குறைவில்சகன் என்புழிச் சீர்கிதையாமை முன் ''செய்வினை மாயை'' என்பதற்கு உரைத்தவாறுபற்றி உணர்ந்து கொள்க. கொள்ளார் கொள்பவர் என ஆடூஉவறிசொல்லாற் கூறியது வட மொழிமதம்பற்றி.

ஆன்மா அதுவதுவாய்ச் செறியுமாறும், அதனனை அறிவிக்கும் வியஞ்சகத்தையின்றி அமையாதவாறும், வியஞ்சகத்தா னறிவு விளங்கும்வழியும் ஒருங்கே முழுவதும் விளங்காது படிவழியேற்றம் போல அடிப்பட்டு வரவர மெல்லமெல்ல விளங்குமாறும், அவ்வாறு விளங்கும் அறிவுகளும் ஒன்றுபோலன்றிக் கணக்காய்வார் அறிவின் மந்த தீவிரங்கள் போல முன்னுகவும் பின்னுகவும் விளங்குமாறும், அதற்கேற்ப மலசத்திகளும் பலவாமாறும் ஆண்டாண்டு விரித்துரைத்தாம்; கடைப்பிடித்துக் கொள்க.

இதனுற் போந்தது, தத்தமக்கேற்ற சோபானமுறையான் அறிவு விளங்குதலுடைய மூவகை ஆன்மாக்கண்மாட்டும் விரவி நிற்கும் மூலமலமாகியஅறியாமைப்பொருள் ஒன்றேபாயினும் அவ்வான்மாக்களது பக்குவாபக்குவ தாரதம்மியங்கட் கேற்பப் பலவேறுவகைப்படப் பிணிக்கும் மலசத்திகள் சூக்குமதூல தூல ‡தர வேறுபாட்டாற் பலவேறுவகைய வாகலின் அவற்றின் விஞ்ஞானகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி சூக்குமம், பிரளயாகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி தூலம், சகலர்க்குப் பிணிப்பாகிய மலசத்தி தூலதரமாம். அற்றாகலினன்றே, விஞ்ஞானகலர்க்கு மாயை கன்மங்களுளவாகவும் அவர் அவற்றாற்பிணிப்புண்டு மயங்குதலின்றி மலமாத்திரையாற் பிணிப்புண்ட தூஉம், பிரளயாகலர்க்கு மாயை யுளதாகவும் அவரதனிற் பிணிப்புண்டு மயங்குதலின்றி ஏனை இருமலத்தானும் பிணிப்புண்டதூஉம், சகலர் அவ்வாறின்றி மூவகையானும் பிணிப்புண்டதூஉம், ஆகலான் அம் மூவகை மலசத்தியுட் சூக்குமமலசத்தி உண்ணின்றுணர்த்தியவாறே எளிதி னீங்குதல் கூடுமாகலானும், தூலமலசத்தி எதிர்நின்று உபதேசமுகத்தாற் றெரித்துணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாமையானும், தூலதரமலசத்தி உபதேசமுகத்தானும் நான்முகத்தானும் அநுபவமுகத்தானும் பலவேறுவகைப்பட வலியுறுத்தி உணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாமையானும், அவ்வேறுபா

* திருக்குறள், கூ-ம்அதி. நீத்தார்பெருமை. இ. †குறைவில்சகன் என்புழி லகர மெய்யை நீக்கிக் கருவிளங்காய்ச் சீராக்குக; ''சங்கறுப்ப தெங்கள்குலம்'' என்புழிப் போல. ‡ தரம்என்பது அதிகம் என்பதை உணர்த்தும் ஒருவிகுதி.

ட்டிற்கேற்பத் தம்முள் இருவேறுவகைப்படும் நிராதாரமாயுஞ் சாதாரமாயும் நின்றன்றி உணர்த்துவானல்லன் முதல்வனென மேலேவெண்பாவிற் கூறிய பொருளே வலியுறுத்தியவாறு மென்க.

அவ்வாறுணர்த்தும்வழி, சூக்குமமலமுடைய விஞ்ஞானகலர்க்கும் தூல மலமுடைய பிரளயாகலர்க்கும் மலபரிபாகத்திற்கேற்ப நாலாஞ் சத்திநிபாதந் தீவிரமாயுந் தீவிரதரமாயும் நிகழுமாகலின் அவ்விருவகைச் சத்திநிபாதம்பற்றி உணர்த்தி, தீவிரத்தா னுணர்த்தப்பட்டார்க்கு அபரமுத்தியும் அதி தீவிரத்தா னுணர்த்தப்பட்டார்க்குப் பரமுத்தியும் பயக்குமெனவும், தூலதர மலமுடைய சகலர்க்கும் மலபரிபாகத்திற்கேற்ப மந்ததர முதலிய நால்வகைத் தால் நிகழுமாகலின் அந்நால்வேறுவகைச் சத்திநிபாதம்பற்றி உணர்த்தி, மந்ததரத்தாற் சாதகநிலையும் மந்தத்தாற் சீவன்முத்திநிலையும் தீவிரத்தால் அபரமுத்திநிலையும், தீவிரதரத்தாற் பரமுத்திநிலையும் பயக்குமென்றறிக. ஈண்டுச் செய்யப்படுந் தீக்கையி னியல்பெல்லாம் மேற் பாயிரத்துள் விரித்துரைத்தாம்; கடைப்பிடிக்க.

இவ்வெண்பாவிற்கு இவ்வாறன்றி ஆன்மாக்கள் அறிவித்தாலன்றி அறியாவாகலான் அவற்றிற் கறிவிக்கவே முந்துநூல்க ளேனைய வெல்லாம் அவ்வச் சமயநெறியின் முன்னொடுபின் னிணங்காது மாறுபடுங் குறைகள் செறிவன வாமாகலின் அக்குறைபாடுடைய நூல்களைக் கொள்ளாது குறைபாடில்லாத முதல்வனது சித்தாந்த நூல்களைக் கொள்பவர்க்குக் கொண்ட பிறவியிற்றானே வீடுபேறுமென்று உரைப்பாருமுளர்.

அற்றேல், நூல்கொள்பவராகிய சகலர்க்கு அந்நூலானே அறிதலமையுமாகலாற் குரவன் மிகையாமா லென்னும் ஆசங்கையை நீக்குமுகத்தால் தமது முதற்றானே குருவாமாற்றை உவமையின்மேல் வைத்துத் தெளிவித்து வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்;

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றானே யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று.

எனவரும்.

தவத்தான் நன்மையுடைய மாணுக்கனே! ஏந்திய இழைகளையுடையாட்குக் குழவிமாட் டளதாகிய அருவாகிய அன்பினை வெளிப்படுத்தற்கு அவ்வன்பின் வடிவாகிய முலைப்பாலுங் கண்ணீரும் குழவியைக் காணுமுன் அவண்மாட்டில்லாவாய்ப் பின்னுளவாம். அதுபோல, நீரின்கண் நிழல்போல் ஆன்மாவின் மாட்டுப் பொருந்தி வெளிப்படுதலில்லாத அருவமாய் நின்ற முதல்வனே யார்தாம் அறிவார்! அம்முதல்வன்றானே குருவடிவாய்த் தோன்றிநின்று உணர்த்தாஞயின் என்க. ஒருவரு மறிவாரில்லை என்பதாம்.

ஆகவே அருவாய் நின்ற முதல்வனை அறிவித்தற்கு நூன்மாத்திரையான் அமையாமையின் அம்முதல்வனே குருவாய்த் தோன்றி உணர்த்தல்வேண்

டும் என விடுத்தவாறுயிற்று. எதிர்மறையாற் கூறினார் இன்றியமையாமை உணர்த்துதற்கு. பொருள்வினையை உவமையினுங் கூட்டி உரைக்க. முனிவப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்கும் என்பது * "சுரந்த திருமூலக்கே துய்ய சிவ ஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த—தனமுடையாடென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன்பிருந்த வாறு." என்பதனும், † "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்–புண்கணீர் பூசறரும்." என்பதனனு மறிக. அவ்விரண்டும் அன்பின்வடிவே பிறவல்ல என்பது அன்பைவெளிப்படுத்தற்குரிய காரணமுள்வழி வெளிப்பட்டு அஃதில்வழிவெளிப்படாத ஒற்றுமைநோக்கிக் கண்டுகொள்க. இவ்வொற்றுமை உணர்த்துவார் இல்லாவா யுளவாம்என்றார். இல்லா என்பது வினையெச்சக்குறிப்புமுற்று. ஆல்–அசை. இவ்வுவமையானே முதல்வன் குருவாதல் கூடுமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையும் நீக்கப்பட்டது. இஃது எடுத்துக்காட்டுவமை. நீர் அகத்தியங்கு முயிர்கட்கு இடங்கொடுத்தலுண்மையான் நீரின்கண் வெளி உண்டென்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழல் உண்டென்பதூஉம் பெறப்பட்டன. அந்நிழல் வேறுநில்லாது நீரின்கண் விரவிநிற்றலின் நீர்போலப் புலப்படாதாயிற்று. அதுபோலச் சிவசைதன்னியமும் யான் என்னும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்மசைதன்னியத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்றென்பார் 'நீர்நிழல்போல் உற்று இல்லா வருவாகி நின்றனீ' என்றார். அருவப்பொருள்போற் புலப்படாத இயல்புபற்றி முதல்வனீ அருவென்றல் சாலுமென்பார் 'இல்லாவருவாகி' என்றார். நீர்நிழல் தோன்றுமைமாத்திரைக்கு ஒருபுடையுவமையாகலாற் றோன்றுதற்கு உவமை வேறு கூறினார்.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

இரண்டாமதிகரணத்தில் உயிர்க்கு முதல்வனே சற்குருவாய் வந்து உணர்த்துவனெனச் சாதித்தவழி, அற்றேல், இதுகாறும் பசுகரணமாய் விடயங்களை உணர்த்தி நின்றன ஐம்பொறிமுதலிய கருவிகளா மன்றே! அவை பாகம் வந்துழிச் சிவகரணமாய் நின்று உண்மைஞானத்தினை உணர்த்துதற் கமையுமாகலின் தம்முதல் குருவுமா யுணர்த்துதல் மிகையாமால் என்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது மூன்றாம் அதிகரணம்.

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை உணரா என்றது.

எனவரும்.

'இனி' என்றது இவ்வியை புணர்த்துதற் பொருட்டு. இவ்வான்மாக்கள்–தம்முதல் குருவுமாயுணர்த்த உணருமியல்புடைய ஆன்மாக்கள். ஈவகையுணர்விற் கேதுவாகிய பொறிகளை ஐயுணர்வென்று உபசரித்தார். ஐம்பொறி என்

* திருக்களிற்றுப்படியார். இச. † திருக்குறள். அ-ம் அதி. அன்புடைமை. க.

றது உபலக்கணம். மயங்கி யுணரா என்றது "ஒதி யுணர்ந்தான்" என்பதுபோ லக் காரணகாரியப்பொருட்டாய் நின்றது.

அற்றேல், சகசமலத்தால் உணர்வின்றி நின்ற ஆன்மாக்கள் கருவிகளான் அறிவுவிளங்கி அறியும் என்பது மேற் பொதுவதிகாரத்துட் கூறிப்போந்த மையின், ஈண்டு ஐயுணர்வுகளால் ஆன்மாக்கள் மயங்கும் என்றன் முரணுமா லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த வது;

அவைதாம் பளிங்கி லிட்ட வண்ணம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

எனவரும்.

பளிக்குக் கல்லிற் சேர்த்திய பலவேறுவகைப்பட்ட நிறங்கள் அப்பளி ங்கினொளி தோன்றுதவாறு அடக்கித் தம்மால் அதன்கண் விளக்கப்பட்ட தத்தமியல்பினையே விளக்கி நிற்குமாறுபோல, அவ்விந்திரியங்கடாம் ஆன்ம சொரூபம் விளங்காதவாறு அடக்கி அவ்வான்மாவின்மாட்டுத் தம்மால் விளக் கப்பட்ட தத்தம் விடயமாத்திரையே விளக்கி நிற்பன வாகலான் 'இனி இவ் வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா' என மேற்கொண் டது என்றவாறு. விடயங்களுள்ளும் அவ்வவ் விடயமாத்திரையே அவ்வவ் விந்திரியங் காட்ட வல்லுமென்பார் காட்டிற்றை என ஒன்றறிசொல்லாற் கூறி னார்; கூறவே, ஒன்றறிந்தது ஒன்றறியாதாகிப் பளிங்கிலிட்ட வண்ணம்போல் ஆன்மாவி னியல்பை மயக்கி விடயக்காட்சிக்கே ஏதுவாகிய கருவியான் ஆன் மாவி னியல்பு விளங்குமாறில்லை என அவற்ற தியல்பைத் தெரித்துக்காட்டி ஆன்மசொரூபத்தை உணர்த்துதற்குக் குரவன் ஒருதலையான் வேண்டுமென மேலை யதிகரணத்தை வலியுறுத்தவாறு. இங்ஙனம் உரையாதார்க்கு இனி என்பதனு னுணர்த்தப்படும் மேலை யதிகரணத்தோ டொதாகிய இயைபு கூடா மை அறிக.

அற்றேல், குருவாகிவந்து உணர்த்தியவழியுங் காட்டிற்றையே காட்டி நிற்கும் இந்திரியங்க ளுள்வழித் தன்னியல்பு விளங்காது அவை நீங்கியவ ழிக் கேவலமாய் முடியும் ஆகலின், அறியுமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங் கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனே வேறுணர்ந்து பொய்பொய்யாமெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

எனவரும்.

தன்னைச் சார்ந்த பலவேறுவகைப்பட்ட வண்ணங்களையே தன்மாட்டுக் காட்டு மியல்புடைய படிகம்போல ஆன்மா தன்னைச் சார்ந்த இந்திரியங்களி னியல்பே தன்மாட்டு விளக்குவதாகிய தனது சார்ந்ததன்வண்ணமாந் தன்மை முன்னர்ச் சிந்தித் துணர்ந்துகொண்டு பின்னர்ப் பலவேறுவகைப்பட்ட இயல் புடைய பொதுவியல்பைச் செய்யும் இந்திரியங்களைத் தனக்கு வேறுகக் கண்டு

அவற்றுஞகிய பொதுவியல்பு பொதுவியல்பேயாய் ஒழியுமாறு தனது சிறப் பியல்பை உணர்ந்தாஞயின் அவன் பரம்பொருளாகிய சிவத்துக் கடிமையாய் அப்பரம்பொருளி னியல்பு தன்மாட்டு விளங்கச் செய்வன். அப்பொழுது முன் விளங்கிய பொதுவியல்பு தனக்கு வேறுயொழியும் என்க.

ஆம் என்பதணைப் பின்னுங் கூட்டுக. ஈண்டுப் பொய் மெய் எனப்பட்டன அப்பொருளவாதல் *மேலே காட்டினும்; கடைப்பிடிக்க. ஆக என்பது கடைக் குறைந்தது. 'பொய்பொய்யாக' என்பது ''நிலம் வலிதாயிற்று'' என்பதுபோ லக் கொள்க. இதனுற்போந்தது கருவிகள் செயற்படாது தன்னி னீங்கியவழி யே கேவலமாம்; அவ்வாறின்றி அவை தத்தந் தொழிற்பாட்டின் மடங்காது நிற்புழி அவற்ற தியல்பைக் குருவாய்வந் துணர்த்த உணர்ந்து தான் அவற்றை விட்டு நீங்கியவழிச் சுத்தமாதல் கூடுமாகலான் அவை காட்டிற்றைக் கீர்ட்டி நிற்றல்பற்றி ஆண்டுத் தன்னியல்பு விளங்குதற்கு இழுக்கில்லை என வலியுறுத் தவாரு மென்பது.

மூன்ருமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

மூன்ரு மதிகரணத்தில் உயிர் பஞ்சேந்திரியங்களிற் பற்றுகையாற் றன் னியறியமாட்டாது எனக் கருவிகளி னியல்பு கூறி அதனுனே குருவாய்வந்து உணர்த்துதல் ஒருதலையான் வேண்டுமென இரண்டாமதிகரணத்திற் போந்த பொருளே வலியுறுத்தியவழி, அற்றேல், குருவாய் வந்துணர்த்தினும் இணைய வை ஒழிய அறிகுவ தெவ்வாறு? அறியினும் விட்டுச் செல்லுமாறுதான் எவ் வாறு? என்னும் ஆசங்கையை நீக்குதற் கெழுந்தது நாலா மதிகரணம்.

இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

எனவரும்.

ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா எனப்பட்ட ஆன்மா சித் தாய் வியாபகமாகிய தன்னியல்பைச் சடமாய் ஏகதேசமாகிய இந்திரியத்தின் வேருக வுணரும் வியாபக வுணர்விற்கு இந்திரியத்தா னுக்கடவதொன் றின் மையிற் சற்குரவனுல் அவ்வாறுணரவே பிறிதுகாரணம் வேண்டாது 'தனக் காதாரமாகிய முதல்வனது திருவடியினைத் தலைப்படும் என்பதாம்.

தமது முதல் என்பது வேறு முடிபாகலின் வழாநிலையாதல் அறிக.

அற்றேல், அவ்வாறுணர்தல் கூடுமாயினும் சேறற்குரிய முயற்சியின்றி அறிந்தமாத்திரையே செல்லுமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த வது;

ஊசல் கயிறற்ருற் ரூய்தரையேயாந் துணையான்.

எனவரும்.

* இந்நூலின் எ-ம் சூத்திரத்து கூம் அதிகரணத்தின் ஏது உரையிற் காண்க.

ஒருவன் ஏறியிருந் தாடாகின்ற ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல் ஆண்டுத் தாரகமாவது நிலனே யன்றிப் பிறிதில்லை என்னும் ஒப்புமையால் 'இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமதுமுதல் சீபாதத்தை அணையும்' என மேற்கொண்டது என்றவாறு.

இதனைப் போந்தது கருவிகள் ஆன்மாக்களான் அறியப்படாது நீங்கிய வழி மலந் தாரகமாம். அறியப்பட்டு நீங்கியவழிச் சிவமே தாரகமாம். ஆகலின் ஆண்டுச் செய்யக் கடவதோர் முயற்சி வேறில்லை என்பதாம்.

அற்றேல், கருவிகளி னீங்கி மலந் தாரகமாய்க் கேவலப்பட்ட வுயிர்,மீளவுங் கருவிகளைக் கூடிச் சகலப்படுமாறு போலக் கருவிகளி னீங்கிச் சிவந் தாரகமாய்ச் சுத்தப்பட்ட உயிரும் மீண்டுங் கருவிகளைக் கூடும்போலும் என்னும் ஆசங்கையை உவமைமுகத்தா னீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்;

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

எனவரும்.

சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளஞ் சிறைவிட்டு அலைகடலிற் சென்று அடங்கும் ஆறுபோல் சிறை செய் புலனுணர்விற் றீர்ந்து உலைவில் அரன் பாதத்தை யுற்று மீளாது எனமாறுக.

ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித் தடைசெய்ய ஆண்டுத் தடையுண்டு தேங்கி நின்ற நீர்போலக் கருவிகளாலுகிய பாசஞானம் தனது வியாபகத்தைத் தடுப்ப அதன்கண்ணே ஏகதேசமாய்த் தடையுண்டு நின்ற ஆன்மா அவ்வணைமுறிந்து தடைவிட் டொழிந்தவழி இடையீடின்றிக் கடலிற் சென்றடங்கி அக்நீரேயாய்ப் பின்பு மீளுதல் செய்யாத ஆற்றுநீர் போலக், கருவிகளாலுகிய பாசஞானத்தடையினின்றும் நீங்கியவழிச் சிவபிரானது திருவடியைப் பொருந்தி அத்திருவடிநிறைவேயாய் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது நிலைபெறும் என்க.

புனலின் இன் உவமவுருபு. தேக்கத்தின்மிகுதி உணர்த்துவார் செழும் புனல் என்றார். மலசத்திக்குக் கேடுண்மையிற் கேவலப்பட்ட உயிர் கருவிகளின் மீளுதல் கூடும், சிவசத்திக் கவ்வாறு கேடின்மையிற் சுத்தப்பட்ட உயிர் அதுபோன் மீளுதற்கோ ரியைபில்லை யென்பார், உலைவிலரன் என விசேடித்தார். அடங்கும் என்னும் உவமவினையைப் பொருளினும் மீளாது என்னும் பொருள்வினையை உவமையினுங் கூட்டி உரைக்க.

அற்றேல், *"மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்—தன்னியசாக் கிரமதனிற் றூரியா தீதந் தோன்றமுயல்." எ-ம், ‡"மாயைமா மாயை மாயா வரு

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கூச. இங்நிலை. ‡ சிவப்பிரகாசம், எ—ம் சூ. உ.

மிரு விஜையின் வாய்மை யாயவா ருயிரின் மேவு மருளினி லொளியாய் நிற்கும்." எ-ம், இவ்வாசிரியதலின் ஆண்டுப் பசுசரணம்போலப் பாசஞானமும் சிவஞானமேயாமென்பது பெறப்படுதலின் *"ஆற்று லலிகடற்கே பாய்கதநீ ரங்நீர்மை மாற்றியவ் வாற்றுன் மறித்தாற்போல்." உலிவிலரன் பாதத்தை யுற்ற உயிர் புலன்வழிமீளினும் அதனைத் போக்த இழுக்கென்னை? என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக்காட்டும் உதாரணம்;

> எவ்வுருவுந் தானென்னி லெய்த்துவா ரில்லைதா
> ளிவ்வுருவில் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
> கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
> கண்போறே காணக் கழல்.
>
> எனவரும்.

இனி ஈண்டுக் கூறுவது பதிப்பொருட்கே யன்றிப் பசுபாசங்களுக்கு ஒருதன்மையில்லை எனக்கொண்டு இவ்வாறுகளிற் பசுஞான பாசஞானங்களுமசிவஞானமேயா மென்பதோ? அன்றிப் பசுபாசங்களுக்குப் பதிப்பொருளையன்றித் தமக்கென ஒவ்வொருதன்மை யுளவெனக்கொண்டு இவ்வாறுரையினும், †"உப்பளத்தடுத்த புற் ‡ பலாலங்கள்." அவ்வுப்பேபோலப் பசுஞான பாசஞானங்களிற் சிவஞானம் சங்கிரமமாய்ப்படுதலின் அவையுஞ் சிவஞானமேயாமென்பதோ? சொல்வாயாக. பசுபாசங்களி னுளவாகிய தன்மைகளெல்லாம் பதிப்பொருளின் தன்மையே பிறிதில்லையெனிற் பசுவைக் கொருதன்மையில் வழிப் பசுக்கள் பாசத்தைவிட்டுப் பதியினை யடையுமாறிலையாய்,¶"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை யடைய முந்தி." என்னுஞ் சிவதருகமவசனங்களோடு முரணும். இனிப் பதிப்பொருளையின்றி யமையாதன்மை அவற்றிற்கு வேறுளவெனக் கொள்ளின் அப்பொழுது பசுபாசங்களின் தன்மைகட்குச் சிவனை லாகப்பிரிவதொன்றின்மையிற் சிவனுக்கு இறைமையின்மையும் முடியும் ஆகலின் அவ்விரண்டுங் கூடா. சிவனென்னையோ விடுக்குமாயினும்; ஆன்மாவையின்றி அமையாவாய் ஆன்மாவால் அநிட்டிக்கப்படும் ஐவகையுறுப்புக்களுள்ளும் மெய் வாய் மூக்கு செவி என்னுங்கான்கு உறுப்புக்களுந் தமதமாட்டுவந்த விடயங்களை இயைந்தறியுந் தன்மையனவன்றிக் கண்ணுறுப்புப்போலச் சேய்மைக்கண் ணுளதாகிய விடயத்தையும் வியாபித்தறியுந் தன்மையுடையனவல்ல. கண்ணுறுப்பு அவ்வாறினறிச் சேய்மைக்கண்ணும் ஒளியாற்செல்லு மியைந்தறியுந் தன்மைத்து. அற்றேல், ஒளிமழுங்கிய கண்ணுக்கு அவ்வுறுப்புக்களோடொப்பத் தன்கண் வந்த விடயத்தைமாத்திரமே காண்பதன்றிச் சேய்மைக்கண்ணும் வியாபித்துக் காணுமாறில்லையாலெனின்; மாசுமிகுதியாற் கண்ணொளியிழந்தார் கண் பெற்றவிடத்து அவ்வியல்பிற்குரிய கண்ணினது வெற்றிப்பாட்டைக் காண்பாயாக வென்க. எனவே அதுபோல முதல்வனின்றி அமையாவாய் முதல்வனால் அநிட்டிக்கப்படும் பசுபாசஞானங்களுட் பாசஞானம் ஏகதேசமாய் விளங்குமியல்பிற்றன்றிப் பசுஞானம்போல

---

* திருக்களிற்றுப்படியார். கக. † சங்கற்ப நிராகரணம், சங்கிராந்தவாதி நிராகரணம் உஎ-ம் அடி. ‡ பலாலம்-வைக்கோல். ¶ சிவஞானசித்தி, பரபக்கம். பாஞ்சராத்திரிமத மறுதலை. உடு

வியாபகமாய் விளங்கு மியல்பிற்றன்று. பசுஞானம் அவ்வாறின்றி வியாபகமாய் விளங்குமியல்பிற்று. அற்றேல், பசுஞானம் பாசஞானம்போல் ஏகதேசமா யன்றி விளங்கக் கண்டில்மா லெனின், பசுத்துவத்தால் அவ்வான்மஞானத்தை யிழந்தார் பசுத்துவம் நீங்கி ஆன்மஞானத்தைப் பெற்றவழி வியாபகமாய் நிகழும் அதனது வெற்றிப்பாட்டை அறிவாயாக எனப் பொருளினும் உரை த்துக்கொள்ளப்படும். இஃது * ஓட்டென்னும் அலங்காரம்.

இஃது என்சொல்லியவாறே வெனின், ஆன்மா பசுத்துவம் நீங்கிச் சிவ த்துவம் பெற்றவழிப் பசுகரணமுஞ் சிவகரணமாயவாற்றான் அவ்வழிப் பசு ஞானந்தோ டொப்பப் பாசஞானமும் உப்பளத்திற்த பொருள்போலச் சிவ ஞானமேயா மென்பது சிவாகம நூற் றுணிபாகலின் அவ்வைம்பொறியின் மீளி னும் இழுக்கின்மையின் மீளாதென மேலை வெண்பாவிற் கூறியது எற்றுக் கென்னுஞ் சங்கிராத்வாதசைவரை மறுத்து முதல்வனே பசுபாசமென்று அபேதங் கூறுதலும் முதல்வன் வேறு பசுபாசம் வேறெனப் பேதங் கூறுத லும் வலாமையின் முதல்வனுக்கும் பசுபாசங்கட்கும் சரீரசரீரிபாவத்தான் அபேதங் கூறுதல் வேண்டும். வேண்டவே, சரீரசரீரிபாவத்தின் ஆன்மா ஐம் பொறிகளோடு அபேதமாய் நிற்பினும் அவை தத்தந் தன்மையிற் றிரியாவாய் விடயங்களை நின்றியைத லுந் தன்றியைதலுமாகிய இருவேறியல் புடைமைபாகிய பேதம் கண் ஒளிமழுங்கியவழிக் காணப்படாதாயினும் ஒளிபெற்றவழிக் காணப்படுதலின் அவ்வாறே பசுஞான பாசஞானங்களிற் சிவஞானம் அபேதமாய் விளங்கினும் அவை தந்தமியல்பிற் றிரியாவாய்ப் பா சஞானந்திற்கு ஏகதேச விளக்கமும் பசுஞானத்திற்கு வியாபக விளக்கமுமா கிய பேதமுடைமை பசுத்துவம் நீங்காத பெத்தகேவலக்கண் அறியப்படாதாயி னும் பசுத்துவம் நீங்கிய முத்தி கேவலக்கண் அறியப்படுமாகலின் அவ்வியல்பிற் றிகிய ஆன்மஞானம் அவ்வியல்பினவாகிய யோனிர்வகனோ மீளப்பற்றமாறில்லை என மேலைவெண்பாவின் பொருளே வலியுறுத்தவாறும் என்க. இவ்வாறுரை யாதார்க்குச் சொற்கிடக்கைமுறை எலாமையும் மேலைவெண்பாவினோடு டியை பின்மையும் உணர்க. † ''எங்குற்ற னென்னினு மெய்த வேண்டா.'' என்னும் வழிநூலும் இவ்வாறே பொருள்படுமாறுணர்ந்து உரைத்துக்கொள்க. ஞான கன்கிரியமும் அவ்வவ் விடயங்களினின்றுங்குறின் றியைந்தன்றி அறியமா ட்டாமையும், கண்ணிற்கிரியம் அவ்வாறன்றிச் சேய்மைக்கண்ணுஞ் சென்றி யைந்தறியும் வெற்றிப்பாடும், தந்நவங்களி னியல்புரைப்புழிக் காட்டினும்; கடைப்பிடித்துக் கொள்க.

உரு என்றவற்றுள் முன்னைய இரண்டும் பொருட்டன்மையை உணர்த் தின. பின்னையது உறுப்பின்மேற்று. உறுப்பாதாரமாக நிற்றலானும் உறுப் புப் போறலானும் இந்திரியங்களோ உறுப்பு எனவும் கழலணிதற் கேதுவாகிய வெற்றிப்பாட்டைக் கழல் எனவும் உபசரித்தார். கழல்-காலணிமணிவடம். சுட் டிச் சிறப்பின்கண் வந்தது. கான் முன்னிலையேவல். பேறே என்னும் ஏகாரம் ஏழனுருபின் பொருளுணர நின்றது. ஓற்றிட்டியாமை இலேசாற் கொள்க.

* இதனை, ''கருதிய பொருடொகுத் ததுபுலப் படுதற்-கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென மொழிப.'' என்னுஞ் சூத்திரத்தா னுணர்க. †சிவஞானசித்தி,அ-ம் சூ.உ.

அற்றேல், * "நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள யானும் புலன்கள் கொண்டு—விடுந்தகையேனை விடுதி கண்டாய்." எனப் பிரமுண்டும் இவ்வாறோது பவாகலின் ஒழிவிலரன் பாதத்தை யுற்றோர் மீளுதலு முண்மையின் மீளா தென்பது அமையாதா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்;

ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனை
யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து.

எனவரும்.

நீ, நின்னல் அதிட்டிக்கப்பட்ட வழியும் எகதேசவறிவைச் செய்வன வாகிய ஐம்பொறிகள்போ லல்லை,அவற்றின் மேம்பட்டு வியாபகமாய் அறியும் வெற்றிப்பாடையை, என மேலைவெண்பாவால் உணர்த்தப்படும் நிவிரதரத் திற் நிவிரத்தமான சத்திநிபாத முடையோனே! அவ்வியல்பினவாகிய ஐம் பொறிகளைக் கைவிட்டே சிவன் திருவடியை எய்தி முன் அவ்வைம்பொறியி னின்றுங்கு அதுவாய் உறைத்து நிற்பாயாக. அவ்வா றணைந்து நின்றுயாயிற் சகலனை ஐம்பொறி விட்டுநீங்கா,தவாறுபோல அச்சிவன் உன்னை விட்டுநீங் கான். கல்லெறிவழி நீங்கி அல்லுழிப் பரக்கும் நீரின்கட் பாசிபோல,நீ அவ்வா றுறைத்து நிற்புழி நீங்குவனவாகிய மல கன்ம மாயைகள் உலகப் பயிற்சிவயத் தான் ஓரோவழி அங்கில நிகழ்ந்தமைபற்றி வந்து கூடுமாயின் நின் நிலை குலை ந்தவழியும் நின்னை விட்டுநீங்காத அம்முதல்வனை உணருமாறு முன்னர்க் கூற ப்படும் உபாயத்தினின்று சாதித்து அவற்றைநீங்கிக்கொள்க வென்க.

'ஐம்பொறியி னல்லையெனு மந்தர' என மேலைவெண்பாவிற் போந்த பொருளை அதுவதித்து, விட்டன்றிச் சேறல் கூடாதென்பார் விட்டு அனை என்றும், சிவனை ஐம்பொறியின் விட்டவழி மீளாமையை வலியுறுத்துவார் 'சகல னைம்பொறியினீங்கான்' என்றும், ஓரோவழி மீட்சி யுளதாயின் அதற் குக் காரணம் இஃதென உவமைமுகத்தா னுணர்த்துவார் 'நீர்ப்பாசி போல்' என்றும், ஐம்பொறியின் மீளுமாயின் அவற்றிற்கு மூலமாகிய மல கன்ம மாயைகளும் அது பற்றுக வந்து தலைப்படுமென்பார் 'மலகன்மம் வரின்' என் றும், அம்மீட்சியை நீக்குதற்கு உபாயங் கூறுவார் 'நீங்கானை நினைந்து நீங்கு' என்றுங் கூறினர். இன் இரண்டும் உவமவருபுகள். அந்தம் என்றது நான்காஞ் சத்திநிபாதத்தை. அதுவும் நால்வகைப்படு மாகலின் அவற்றுள்ளும் மேம் பட்ட சத்திநிபாத முடையாய் என்பார் 'அந்ததர' என்றார். சகலனை என்னும் இரண்டனுருபுவிகாரத்தாற் றொக்கது. மல கன்மம் எனவே இனம்பற்றி மாயையுங் கொள்ளப்படும். நீங்கானை நீங்கு நினைந்து எனவே வருகின்ற பாத த்திற்குத் தோற்றுவாய் செய்ததூஉ மாயிற்று; † "மங்கல மென்ப மனைமா ட்சி மற்றத—னங்கல னன்மக்கட் பேறு." என்புழிப்போல.

* திருவாசகம், நீத்தல்விண்ணப்பம். கஉ. † திருக்குறள், சுஉம் அதி. வாழ்க்கைத் துணைநலம். கo.

இம்மூன்று பாட்டும் முறையே திருவடிஞானத்தைப் பெற்ற உயிர் மீளப் பாசஞானத்திற் சேற லில்லை எனவும், பாசஞானத்தின் மீளுதல் இழுக்கு எனவும், ஓரோவழிப் பயிற்சிவயத்தான் மீளுமாயின் மீளாது செய்துகொள்ளற்பாற்று எனவுங் கூறித் 'தாய்தரையேயாம்' என்னும் பிரிநிலையேகாரப் பொருளே வலியுறுத்தி ஒருபொருண்மேல் வந்தவாறு காண்க.

நான்காமதிகரண முடிந்தது.

எட்டாஞ்சூத்திர முடிந்தது.

ஒன்பதாஞ்சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே.

எனவரும்.

எ-து. சூ-ம். எ-னின். ஆன்மசுத்தி பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

மேற் பொதுவதிகாரத்துட் கூறிப்போந்த மும்பொருள்களுள் விள்ளற் பாலதனை விண்டு அதனுன் வருந் துன்பத்தி னீங்குதலுங், கொள்ளற்பாலதனைக் கொண்டு அதனுன் வரும் இன்பத்தைப் பெறுதலு மாகிய வீடுபேறடைதற்கு உரிய இயல்பு தனக்கு உண்டென ஏழாஞ்சூத்திரத்தாற் பெறுவிக்கப்பட்ட ஆன்மாவுக்கு அவ்வீடுபேற்றைப் பயப்பித்தற்கட் சிறந்த சாதகமாவது விள்ளற்பாலதாகிய பசைப்பொருள் இது கொள்ளற்பாலதாகிய நட்புப் பொருள் இது எனக் குருமுகத்தான் விவேகித்தறியும் ஞானம் ஒன்றேயாம் எனவும், அவ்வறிவு பாசப்பற்றற்ற லன்றி நிகழாமையிற் பாசஞானத்தாலெய்தற்பால தன்றெனவும், மேலைச் சூத்திரத்தான் உணர்த்தியவழி, அற்றேல், பாசஞானம் ஏகதேசவுணர்வாகலின் அதனுல் வியாபகப்பொருளை அறியும் விவேகஞானம் நிகழாதாயினும் பசுஞானம் வியாபகவுணர்வாகலின் அதுவே அதற்கமையும் என்னும் ஆசங்கையை நீக்குவதாகிய ஆன்மசுத்தி செய்யுமாறு உணர்த்துமுகத்தானே அச்சாதகத்தை நிகழ்விப்பது இது என் பதூஉம், அதனைப்பெறுமாறும், அது நிலைபெறுமாறும் ஆகிய சாதிக்குமுபாயம் இது என்பதூஉம் வகுத்துணர்த்துதல் சாதகவோத்தின் மூன்றும் பாதமாகிய இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேலைச் சூத்திரத் திறுதியதிகரணத்தாற் பாசஞானப் பற்றற்ற லன்றி அறியக்கூடா தென்றவழி, அற்றேல், பசுஞானத்தா லறிதல் கூடும்போலும்

என்னும் ஆசங்கையை ஈண்டு நீக்குதலின் அவ்வாசங்கைபற்றிய இயைபா னே அதிகரண வியைபும், மேல் ஆன்மதரிசன மாமாறுணர்த்தி ஈண்டு ஆன் மசுத்தியாமா றுணர்த்துதல் முறைமையாகலின் அம்முறைமைபற்றிய இயை பானே பாதவியைபும், மேற் சாதகமாவது இதுவென் றுணர்த்தியவழி அது னைச் சாதிக்குமாறு யாங்ஙனம்? என்று அவாய்நிற்றலின் அவ்வவாய்நிலைபற் றிய இயைபானே ஒத்தியைபும் பெறப்பட்டன.

அற்றேல், பசுத்துவமுடையனுயவழியே ஆன்மா பசுவென நிற்பதா கலின் பாசப்பற்றறுதி கூறவே பசுப்பற்றறுதியும் பெறப்படுதலின் ஆசங்கை நிகழாதால் எனின், அவ்வியல்பு முன்னர்க் கூறப்படுதல் நோக்கி நிகழுமென் பது உணர்ந்துகொள்க.

அஃதங்ஙனமாக, சிவப்பிரகாசத்தில் * "தான்பணியை நீத்தலே," ஆன் மசுத்தி என்றோதுதலின் அத்தன்மைத்தாகிய ஆன்மசுத்தி வருகின்ற சூத்திர த்தின் 'இறைபணி நிற்க' என்பதனுற் பெறப்படுவது எனவே கொள்ளற்பால தாகலானும், அழுக்கு நீங்குதலே † அறுவைக்குச் சுத்தியாமாறுபோலப் பாச க்ஷயம் பண்ணுதலே ஆன்மாவுக்குச் சுத்தியாம் ஆகலானும், அதனை ஆன்ம சுத்தி பண்ணுமாறு உணர்த்திற்றெனல்வேண்டும்; அவ்வா றுரையாது 'பதி யைநாடி' எனவும், 'தண்ணிழலாம் பதி' எனவும் சிவதரிசனம் பண்ணுமாறே உணர்த்துதற் கெழுந்த இச்சூத்திரத்தை ஆன்மசுத்திபண்ணுமா றுணர்த்திற் றென்றல் மலிவாம்பிறவெனின், ஆகாது; சிவதரிசனம் பண்ணுமா றுணர்த் திற்றென்பது சூத்திரத்தா னினிதுளிளங்குதலின் அதனை எடுத்துரையாதுசிவ தரிசனத்தின் நிகழ்வது ஆன்மசுத்தியென்னும் உடனிகழ்ச்சி உணர்த்துதற்கும் தம்முள் வேறுபாடு சிறுபான்மை யுடையனவாகிய இவ்விருசூத்திரமும் ஒரு பொருண்மேலன என்பது உணர்ந்துகோடற்கும் அவ்வா றுரைத்தாராகலின்.

அஃதங்ஙனமாக 'ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணலே தமது முதல் சீபாதத்தை அணையும்' என்றமையின் தமதுமுதல் சீபாதத்தை அணைதற்கு ஆன்மதரிசனமே அமையும் ஆன்மசுத்தி வேண்டுவ தென்றுக்கெ னின், அஃதொக்கும்; திரியக்காண்டலும், இரட்டிறக்காண்டலும், தெளியக்கா ண்டலும் எனக்காட்சி மூவகைப்படும். இம்மூன்றும் அதிபரிபக்குவமுடையார் க்குக் கேட்டமாத்திரையே ஒருங்கு நிகழும். ஏனையோர்க்குச் சோபான முறை யாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் இம்மூன்றுமும் முறையே நிக ழ்வனவாகலின், ஆன்மதரிசனத்தைப் பயக்குஞ் சிவசூபத்தின்பின் ஆன்மசுத் தியைப் பயக்குஞ் சிவதரிசனம் ஒருதலையான் வேண்டப்படுமென்று உணர்ந்து கொள்க. இதனானே உருவதரிசனசுத்திகட்குத் தம்முள் வேறுபாடுங் காண்க. ‡ "நேசமுடன் றிருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நிலையுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி—பாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்". என வழிநூலாசிரியர் கூறியதும் இக்கருத்தேபற்றி யென்க. இம்மூவகைக் காட்சியுமே உருவம் தரிசனம் சுத்தி எனப்படும் என்பது.

* சிவப்பிரகாசம், அ-ம் சூ. க. தேசுற. † அறுவை-சீலை. ‡ சிவஞானசித்தி, அ-ம் சூ. ஙக. பாசிபடு.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. பசுஞானத்தானும் பாசஞானத்தானும் அறியப்படாத முதல்வனே அம்முதல்வனது ஞானக்கண்ணனே தன்னறிவின்கண்ணே ஆராய்ந்தறிக. அப்பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனம்? எனின் நிலம் முதல் நாதமீறுகிய பாசக்கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரி னியல்பிற்றுய்க் கழிவதென்றறிந்து நீங்கவே அப்பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அங்ஙனம் விளங்கிய ஞானத்தான் ஞேயத்தைக் கண்டகாட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ் செழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும் என்றவாறு.

• நாடி என்பது * "நன்றும னதுநீ நாடாய் கூறி" என்புழிப்போல இகரவீற்று முன்னிலை ஏவல். நாடி எண்ணும் எனக்கூட்டி. விதியெச்சமுடிபாகவைத் துரைப்பினும் அமையும். சிந்தையின்கண் என்னும் ஏழனுருபுதொக்கது. உரா முதனிலைத்தொழிற்பெயர். கண்ணுருபு விரித்துரைக்க. "பறவாக்குளவி" "பாயாவேங்கை" என்றாற்போல ஒருவரான் ஊரப்படாத வேகத்தையுடைய தேரெனச் செயப்படுபொருட்கண் வந்த பெயரெச்சமறையாகவைத்து உரைப்பினும் அமையும். இப்பொருட்குத் "திருத்தார் நன்றென்றேன்றியேன்" என்புழித் தியேன் என்பதுபோல உரா என்பது குறுக்கல் விகாரம். பின்வந்த பதி ஆகுபெயர்.

ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி எனவே ஏனை ஞானங்களா னறியவாராமை பெறப்படுமாயினும் இனிது விளங்குதற்பொருட்டு அதனை அநுவாத முகத்தான் ஓதினர்.

உணரா பதியை என்பதனை வேறுதொடராக வைத்து முற்றுப்பொருள்பட வோதுவாருமுளர். அஃது ஆசிரியர்கருத்தாயின் அதனை வேறோரதிகரணமாக வைத்துரைப்பர். அவ்வாறுரையாமையானும், ஞானக்கண்ணினிஞடி எனவே ஏனை ஞானங்களான் நாடப்படாமை தானே பெறப்படுதலின் அதனை விதிமுகத்தான் ஓதவேண்டாமையானும், வடமொழிச் சூத்திரத்திற்கும் † "பாசஞானத் தாலும் பசுஞானத் தாலும் பார்ப்பரிய பரம்பரனை" என்னும் வழிநூற்கும் ஏலாமையானும் அது பாடமன்மை யறிக.

இதனுள், ஊனக்கண் பாசமுணராப் பதியைஞானக் கண்ணினிற் சிந்தை நாடி என்பது ஓரதிகரணம்; உராத்தனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்ணிழலாம்பதி என்பது ஓரதிகரணம்; விதியெண்ணு மஞ்செழுத்தே என்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

* அகநானூறு. உசுஎ. அறியாய்வாழி. † சிவஞானசித்தி; கூம் சூ. க.

மூதலதிகரணம்.

அவற்றுள், மூதலதிகரணம் பாசஞானத்தா லறியப்படாதென மேற் கூறிப் போந்த முதல்வனைப் பசுஞானத்தால் அறிதல் கூடுமென்னும் சிவசம வாத சைவரை மறுத்தற் கெழுந்தது.

ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணினுலே காண்க என்றது.

எனவரும்.

அம்முதலை–ஊனக்கண் பாசங்களா னுணரப்படா தெனப்பட்டமுதலை. ஊனக்கண் பாசங்களே எடுத்தோதி விலக்கினமையின் ஈண்டு ஞானக்கண் என்றது சிவஞானத்தை எனக்கொள்க. ஏனஞானங்களிற் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

அற்றேல், பாசஞான பசுஞானங்களான் அறியப்படாத பரம்பொருள் சிவஞானத்தான் அறியப்படும் என்றற்குப் பிரமாணம் என்னே? என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த ஏது;

அவன் வாக்கு மனுதீத கோசரமாய் நிற்றலான்.

எனவரும்.

இதன்பொருள் சத்தநிகாரத்திற் காட்டினும்.

வாக்குமனுதிதகோசரமாய்நிற்றல் ஆண்டுப் பெறப்பட்டமையின் அதனை ஈண்டு ஏதுவாகவைத்து மேற்கோளைச் சாதித்தார். வாக்குமனுதீதமாயுங்கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாமையிற் சிவஞானத்தானே அறியப்படும் என்பது தானே போதருமென அருத்தாபத்தியளவை காட்டியவாறு.

அற்றேல், வாக்குமனுதீதப் பொருள் கோசரமாதல் பிறிதொன்றாற் பெறப்படாதென்ற தென்னே? பசுத்துவமுள்வழிச்செயற்கையான் வகதேசத்தின் விளங்கும் பசுஞானம் அப்பசுத்துவம் நீங்கியவழிச் சிவஞானத்தோடொப்ப எங்கும் வியாபகமாய் விளங்கும் என்பது சிவாகமநூற் றுணிபாகலின், அவ்வழிச் சுட்டிறந்தறிவதாகிய பசுஞானத்திற்குக் கோசரமாதல் பெறப்படுமால் என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற் கெடுத்துக் காட்டும் உதாரணம்;

நாடியோ வென்போ நரம்புசிக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னுலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்னு மெனவறிவா ரின்று.

எனவரும்,

நாடி முதலியவற்றுள் யான் யார்? என்னைத் தேடியும் அறிகின்றிலேன் என்று இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சிக் கூறபாட்டை இங்ஙனம் ஒன்றிற் றெளிவு பிறவாது மயங்கி நின்று சூழுஞ் சூழ்ச்சிக் குறைவுபாட்டான் நமக் கெய்தியதென் றுராய்ந்து பார்த்து அங்ஙனம் பார்த்தவழி*''உன்னறிவைநீயே

* திருவருட்போதம், நூல். ஙூ.

யுணர்வையே யாமாகி—லிங்கெடுநாட் பாசத் திசையாயே—யுன்னறிவை—நீங் கா வறிவாகி நீரு மிரதமும்போ—லாங்கா ணரனு ரருள்." என்பவாகலின் அத் தன்மைத்தாகிய சிவஞானத்தைப் பெறுமையால் எய்தியதென அறிந்து குரு வருளான் உணரப்படும் சிவஞானத்தானே சிவனே அறிந்தவர் அச்சிவனில் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் அறிவர். அப்படி அறியாதார் மற்றெவ்வியல்பினென்று தம்மை அறிய வல்லுவர்! இம் முத்திகாலத் தென்க.

நாடி என்றது இடை பிங்கலை சுழுமுனை முதலிய நரவகை நாடியை. நரம்பு எனவே அடங்குமேனுங் தலைமை பற்றி வேறு கூறினர். சீ—புண்ணீர். கோழை—ஐ. ஓகாரம் தெரிநிலை. 'நாடியோ வென்போ நரம்புசீக் கோழை யோ?' என்றது உபலக்கண மாகலின் வினைத் தத்துவ நாத்துவிகங்களையும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும். என்று என்பது சொல்லெச்சம். ஒற்றுமை பற்றி அரனது ஞானத்தை அரனென்று உபசரித்தார். உம்மை எதிரது தழீஇயது. எவன் என்னும் வினாவினைக்குறிப்புப்பெயர் ஈண்டு ஆகுபெயராய் என்னென மரீஇயிற்று. ஆம் அசை.

இது தம்மை அறியுமாறு கூறுமுகத்தானே தலைவனை அறிந்தபின் அறி யப்படுவதாகிய தம்மறிவுகொண்டு தலைவனை அறியுமாறு யாங்ஙனம்! எனச் சிவசமவாதசைவரை மறுத்துச் சிவஞானத்தானன்றி அறியப்படாமையை வலியுறுத்தவாறு.

அற்றேல், நாடி எலும்பு நரம்பு முதலிய நத்துவ தாத்துவிகங்களை அறி தற்குச் சிவஞானத்தை யின்றி அமையு மான்மா சிவனை யறிதற்கண்ணும் அவ் வாறமையு மென்றற் கிழுக்கென்னை? எதிர்முகத் தொருபொருளைக் கண்ட கண்ணை மறித்து நோக்கியவழிப் பிறப்பக்கத்துப் பொருளையுங் காண்டற் கமையுமால் என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

> காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
> காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
> வுள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணைய
> கள்வன்ரு னுள்ளத்திற் காண்.
>
> எனவரும்.

எதிர்முகத்துப் பொருள்போல வெளிநிற்புறத்துப் பொருளும் புறத்துத் தோன்றும் விடயமேயாகலிற் கண் அவ்விரண்டினையும் ஒப்பக் காண்டல் அமை யும். காண்கின்ற தன்னைக் காணமாட்டாது. தனக்குக் காட்டாய் உண்ணின்று செலுத்தும் உயிரையுங் காணமாட்டாது. அதுபோலத் தனக்கு வேறுகிய நாடி எலும்பு முதலிய தத்துவ தாத்துவிகங்களைத் தற்போதத்தால் அறிகின்ற உயிரும் தன்னை அறியமாட்டாது. தன்னைச் செலுத்தும் முதல்வனையும் அறிய மாட்டாதுதானே. அங்ஙனமாயினுங் கண்போல் உயிர் சடமன்மையிற் கண் ணிடத்து உயிர் நிற்குமாறுபோலன்றி உயிர்க்கு அதனறிவாகி உடனின்ற கள் வன் அம்முதல்வ னுகலான், அவனை உன்னறிவின்கட் காண்பாயாக என்க.

காட்டிய என்பது தன்னிணப்பொருள்பட நின்றது; *"வாணிக மொன்றுந் தேற்றாய்." † "தேற்ற வொழுக்கம்." ‡"தேற்றுதார் மாட்டு." என்புழிப் போல. ஏகாரம் அசைநிலை. காணது என்னுந் துவ்வீறு தொக்கு நின்றது; ¶"முறைகாக்கு முட்டாச் செயின்." என்புழிப் போல. ஒருமைமப்பன்மைமய க்கம் என்பாருமுளர். கண்ணிய–அறிவாய என்க. உடனின்றும் பசுஞான பாச ஞானங்களா னறியப்படாமை பற்றிக் 'கள்வன்' என்றார். §"கண்ணுகிக் கரண ங்கள் காணுமை னிற்பன்." என்றார் வழிநூலாசிரியரும். தான்–அம்முதல்வன். காட்டாய வுள்ளத்தைக் கண் காணு என உவமைக்கோதியவாறு பொருளி னும் வருவித்துரைத்துக்கொள்க. இஃது எடுத்துக்காட்டுவமை.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

மேலியதிகரணத்தில் இந்திரியத்தின் வேறுவான் காணப்பட்ட தன்னறி வின்கண்ணே சிவஞானத்தாற் சிவனைக் காண்டலொன்றே சிவப்பேற்றிற்குச் சிறந்த சாதனம் என்றுணர்த்தியவழி, அற்றேல், சிவஞானத்தைக் காணுமாறு யாங்ஙனம்? என்னும் அவாய்நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்குப் புறனடையாக எழுந்தது இரண்டாமதிகரணம்.

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களே அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென்று உணரற் பாற்று.

எனவரும்.

படிகசொரூபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்றுநிறங்களே இவை நிலையுதலிலவாகிய வேற்றுநிறங்களெனக் கண்டு நீத்தவழி நிலையுதலுடைத் தாய் விளங்கி நிற்கும் படிகசொரூபம் போல நிலையுதலுடைய ஞானத்தினு டைய சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள பிர பஞ்சத்தை இவை நிலையுதலுடையவல்ல என்று விவேகித்தறியின் அவ்வழி நிராலம்பமாய் விளங்கித தோன்றுவது அச்சிவஞானத்தின் சொரூப மென்று அறியும் பான்மைத்து என்றவாறு.

வன்னபேதங்கள் சித்திரம் எனப் பொருள் கொண்டவழி நிலையுதலு டைய பித்தியின் சொரூபத்தைக் காட்டாது மறைத்து, நிலையுதலிலவாயுள்ள சித்திரங்களே இவை நிலையுதலுடையவல்ல என்று கண்டவழி ஒருதன்மை யாய் விளங்கித் தோன்றும் பித்திபோல என்று உரைத்துக் கொள்க.

---

* சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையார் இலம்பகம். உஎஅ. † காலடியார், பொறையுடைமை. டு. வேற்றுமையின்றி. ‡ திருக்குறள், கடுசு-ம் அதி இரவு. சு இரத்தலும். ¶ திருக்குறள், டுடு-ம் அதி. செங்கோன்மை. எ. இறைகாக்கும். § சிவஞானசித்தி, கூ-ம் சூ. டு. கண்டிடுங்கண்.

ஆசிரியர் சொற்பல்காமைப்பொருட்டு இவ்வாறே ஏகதேசவுருவகமாக வைத்து உடம்பொடுபுணர்த் தோதிய எதுவை ஏனை யதிகரணங்களுட்போல மேற்கோளின் வேறுவைத்துக் காட்டுமாறு:—

இனி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூப மென்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களே வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிகசொரூபமாந் துணையான்.

எனவரும்.

வன்னபேதம் சித்திரபேதம் எனப் பொருள் கொளின் வேற்றியல்பாகிய சித்திரங்களே வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது பித்தியின் சொரூபமாந் துணையான் என்பதாம்.

ஈண்டுப் பாசம் என்றது காரியப்பிரபஞ்சத்தை என்பார் 'அசத்தாயுள்ள' தென்றும், அதுப்பொருளே உடம்பொடு புணர்த்துக் காட்டுவார் பிரபஞ்சத்தை என்னாது 'வன்னபேதங்களே' என்றும், வியாபகப் பொருளுக்கு ஒரு வுதலாவது காட்சிவிசேடமேயா மென்பார் அசத்தென் றெழுதிய என்னாது 'அசத்தென்று காண' என்றும், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்றென்பார் 'உளதாய் நிற்பது' என்றும், ஈண்டுப் பதி என்றது பதிஞானத்தை என்பார் 'ஞானசொரூபம்' என்றும், இஃது அநுபவத்தி னன்றிச் சொல்லளவையின் அறிய வாரா தென்பார் 'உணரற்பாற்று' என்றும் உரைத்தார். அசத்தினியல்பு இது என்பது அசத்ததிகாரத்திற் காட்டப்பட்டது; கடைப்பிடிக்க.

அசத்தெனப்பட்ட காரியரூபப் பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலாவது ஆசிரியன் அறிவுறுத்த உபதேசப் பொருளி னுறைத்து நின்று *"அட்ட குணமெட்டுச் சித்தி கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்—வெறுத்துநெறி யறுவகையு மேலொடுகீ ழடங்கக்."காரண ரூபத்தின் இல்லாமையான் வெறும்பொய்யென நிணைந்திருத்தல்.

அற்றேல், அதனை அவ்வாறு கண்டவழித் தோன்றுவது இன்னதென்றறிய வாராத சூனியமே யன்றிப் பிறிதில்லையாலோ வென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியா னந்தனுய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானு வறிவா யளவிறந்து தோன்றுனே
வானே முதல்களையின் வந்து.

எனவரும்.

அசத்தெனப்பட்ட மூவகைப் பிரபஞ்சத்துள், அசுத்தப் பிரபஞ்ச மெல்லாம் முக்குணமயமாகலிற் சத்துவகுண விருத்தியாகிய பிரகாசரூபம் சாத்த ரூபம் சுகரூபமாகத்தான், இராசதகுண விருத்தியாகிய பிரவிருத்திரூபம் கோரரூபம் துக்கரூபமாகத்தான், தமோகுணவிருத்தியாகிய நியமனரூபம் மூட

* சிவஞானசித்தி, கூ-ம் சூ. சூ. குறித்தடியி.

ரூபம் மோகரூப மாகத்தான் அளவிட்டறியப்படும். முதல்வன் இம்முக் குணங்களுங் கடந்தவனுகலான் இவற்றுளொன்றுக அறியப்படா னென்பார் 'நிர்க்குணனுய்' என்றும், மிச்சிரப்பிரபஞ்சம் முக்குண்ங்களைக் கடந்து நிர்க்கு ணமாய் உள்ளதொன்றுயினும் மலகன்மங்களோடு விரவி நிற்றலின் மல காரிய மாகிய மோகம் முதலிய எழுவகை ரூபமாகத்தான், கண்மகாரியமாகிய சுகரூபம் துக்கரூபமாகத்தான் அளவிட்டறியப்படும். முதல்வன் மலகன்மங்களையுங்கட ந்து நிற்றலான் அவற்றுள்ளும் ஓரியல்பு பற்றி அறியப்படான் என்பார் 'நின்மலனுய்' என்றும், சுத்தப்பிரபஞ்சம் மலகன்மங்களையுங் கடந்து நின்மல மாயுள்ளதொன் றுயினும் காரியப்பட்டு அநித்தமா மியல்புடைமையிற் *சாதி சயானந்தரூபமாய் அளவிட்டறியப்படும். முதல்வன் காரியப்பாட்டினது உப சாரத்தையுங் கடந்தவனுகலான் அவ்வாறும் அறியப்படான் என்பார் 'நித்தி யானந்தனுய்' என்றும், ஆன்மாவும் இம்மூவகைப் பிரபஞ்சத்துட்பட்டுச் சகு ணனுயும் சமலனுயும் சாதிசயானந்தனுயும் பொதுவியல்பு பற்றி அறியப்படும். முதல்வன் அவ்வாறும் அறியப்படான் என்பார் 'தற்பரமாய் நின்ற' என்றும், அங்ஙனம்நின்றநிலை ஒன்றேறு உவமித்தறியப்படாமை பற்றித் 'தனி முதல் வன்' என்றும், இத்தன்மையனுகிய முதல்வன் நிலம் முதல் நாதமீருகிய பிரப ஞ்சங்களை அசத்தென்றுகளைந்தவழிப் பயின்றறியாமையின் இன்னதென் றறி யவாராத சூனியம் போலச் சுட்டறிவினளவினைக் கடந்து தோன்றிப் பின்ன ர்ச் சுட்டிறந்தறியு மறிவின்கண்ணே †''சோதிக்குட் சோதியாய்''வெளிப்பட் டுத் தானேவிளங்கித்தோன்றுவன் என்பார் 'வானே முதல் கலையின் அற்புதம் போல் அளவிறந்து ஆனு அறிவாய் வந்து தோன்றுனை' என்றுங் கூறினர்.

ஈண்டுக் குணம் என்றது முக்குணங்களை. அவ்வாறின்றி நிர்க்குணன் என் பது ஒருகுணமு மில்லான் என்றுரைப்பின் அது தன்வயத்தனுதல் முதலிய எண்குணங்களை இயல்பாக உடைய முதல்வனுக்கு ஏலாமையின், மாயாவாதி முதலியோர் கூற்றுய் முடியுமென் றெழுதிக. தற்பரன்–தனக்குப்பரன் என நான் கனுருபு விரித்துரைக்க. தன் என்றது ஆன்மாவை. அற்புதம் என்றது ஈண்டுச் சூனியத்தின்மேற்று. ஆனு அறிவு–தன்னறிவின்கண் நீங்காது நிலை பெறு மறிவு. ஓகாரம் எதிர்மறை. வானே முதல் என்றதனுனே தோற்றமுறை பற்றி வானுக்குக் கீழுள்ள பூதங்களும் ஒடுக்கமுறைபற்றி வானுக்கு மேலுள்ள தத்துவங்களும் உடன் கொள்ளப்படும். ஏகாரம் அசைநிலை. முதல் ஆருபெயர். நிர்க்குணனுய் நின்மலனுய் நித்தியானந்தனுய்த் தற்பரனுய் என்புழி ஆக்கச் சொல் உண்மை குறித்து நின்றது வடமொழிமதம். ஆனு அறிவாய் என்புழி ஆக்கம் முன்னர்ச் சூனியம்போற் றோன்றுவோன் பின் ஆனு வறிவாய்த் தோ ன்றுவான் என வேறுபாடு குறித்து நின்றது. குணகுணிகட்கு வேற்றுமை இன்மையின் முதல்வனது ஞானத்தை முதல்வன் என்று உபசரித்தார்.

அற்றேல், வானேமுதல் கலைந்தவழி அங்ஙனந் தோன்றும் பொருளும் வேறொன்றெனக் கோடும்; ஞானசொரூபமே அது என்றற்குப் பிரமாணம் என்னை? என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

* சாதிசயம்-அதிசயத்தோடு கூடியது. † சிவஞானசித்தி, அ-ம் சூ. கூஅ. எங்குந்தா.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்த நீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனற் பொய்விட்டுப் போம்.

எனவரும்.

ஏகதேசவுணர்வாற் சுட்டி உணரப்படும் நிலமுதற் சிவ மீறுகிய பிரபஞ்சத்தை அசத்ததிகாரணத்திற் கூறிய இயல்பு பற்றி ஒரோவொன்றுகச் சுட்டி அசத்தென்று கண்டு கழித்துக்கொண்டு சென்றவழி, முடிவின்கட் கோசரமாவது வேறின்மையிற் பரிசேடவளவையான் அது சத்தேயாம் என்று செம்மையே அறிவாயாக. அற்றேல், அசத்தின் வேறுய் அங்ஙனம் கோசர மாவது சத்தே யாமென்ற தொக்கும்; அது முதல்வனன்று; உயிரேயா மென்றுற்படும் இழுக் கென்னை? எனின், நிலைபேறின்றி ஒரோவொன்றுகச் சுட்டி அறிந்துவந்த நீ என்றும் ஒருதன்மைத்தாய் நிலைபெற்று நிகழும் அறிவாகிய சத்தாவாயல்லை; அசத்தை அசத்தென்று கண்டு நீக்கியவழி, உளதாகிய சத்தினை, நீ அடிமை யாகச் சென்று தலைப்பட்டதினல் சுட்டியறிவதாகிய ஏகதேச வறிவைச் செய்யும் பொதுவியல்பு நின்னை விட்டுநீங்கும், ஆகலின் அசத்து மல்லை என்க.

ஆகலின் அசத்து மல்லை என்பது குறிப்பெச்சம். எனவே, *"அசத்தைச்—சத்துட னின்று நீக்குந் தன்மையாற் சதசத்தா."வை என்பதாம்.

†"மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்." என்ற வெண்பாவாற் பெறப்பட்டதனையே ஈண்டுக் கடைப்பிடித்தற்பொருட்டுச் சுட்டி உணர்ந்த நீ சத்தல்லை. உண்மையைத் தைவம் புணர்ந்ததனற் பொய் விட்டுப்போ மாகலின் அசத்து மல்லை என வேமீறு ராற்றுணுந் தெளிவித்தாராகலின் இது கூறியது கூறலன்மையுணர்க. ‡சட்ட என்பது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற் றிடைச்சொல். அது "சட்டம்" என இழிவழக்கில் மகரவீறுய் மரீஇயிற்று. அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. தேவனதுடைமை ¶தைவம் என்பது வடமொழி. § வாதனையு மின்றிப் பற்றறக் கழியு மென் பார் விடும் என்னது விட்டுப்போம் என்றார்.

இனி, அசத்தை அசத்தென்று கண்டு நீங்குமாறும் நீங்கியவழி உண்மையைத் தைவம் புணருமாறும், புணர்ந்தவழிப் பொய் விட்டுப்போமாறும் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றான்.

எனவரும்.

---

* சிவப்பிரகாசம், உண்மை. உ-ம் சூ. சு. சத்திது. † இந்நூல், எ-ம் சூ. உ-ம் அதி. உ. ‡ சட்ட என்பது செப்பப்பொருளுணர்த்து மாற்றை "சட்ட நேர்பட வந்தி லாத." என்னுந் திருவாசகத்தானும் உணர்க. ¶ தைவம் என்பது தத்திதாந்தபதம். தத்திதம் என்பது பெயரடியில் வரும்பெயர்விகுதி. § வாதனை-பயிற்சி, அழுத்தம்.

சுட்டுணர்விற்கு விடயமாகிய பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்று என ஒரோ வொன்றுகச் சுட்டி அசத்தாகக் கண்டு விட்டுநீங்கி, அங்ஙனம் அறிந்து நீங்கிய தன்னறிவின்கண்ணே சுட்டுணர்விற்கு விடயமாகாத முதல்வனை ஆராய்ந்து, அச் சிவஞானத்தானே ஆசாரியன் *"சிவோயம்"எனத் தன்னுள்ளே பாவித்துச் † "சிவத்துவமசி" என் றறிவுறுக்குஞ் சித்தாந்தமகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று "சிவோகம்" எனப் பாவிப்பாளியின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனுல் அநாதியே கூடிய பொதுவியல்பையும், அதற்கேதுவாகிய மல மாயா கன்மங்களையும் தான்விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருடதியானத்தில் விளங்குங் கருடனுல் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறுபோலா மென்க.

ஆக என்பது ஆய் எனத் திரிந்து நின்றது. தான் முன்னியது எழுவ்வாய். பின்னியது அசை. உத்தமனது ஞானத்தை உத்தமன் என்று உபசரித்தார். சானம் பாகதச் சிதைவு. இதனுனே வருகின்ற அதிகரணத்துக்குத் தோற்றுவாய் செய்ததூஉ மாயிற்று.

ஈண்டுக் கருடபாவனை என்றது யாதெனிற் கூறுதும்:—ஆதிபௌதிக கருடன் ஆதிதைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்றுவகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. அவற்றுள் உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன் எனப்படும். அவற்றுள், ஈண்டுக் கருடனென்றது கருடனுக் கதிதெய்வமாய் மாந்திரிக னுளத்திற் காணப்படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சிவிசேடத்தால் அம்மந்திரரூபமே தானுக அகங்கரிப்பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்றுஅம்மந்திரக் கண்கொண்டு பார்ப்பவே அஃது அவ்விஷவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின், அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. இதனுனே கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை அசத்திய மென்பார் மதம் போலி என்பதூஉம், தெற்றெனவுணர்க. புள்ளு விலங்கு மரம் முதலிய சராசரங்களுக் கெல்லாம் அதிதெய்வ மந்திர முள என்பதூஉம், படிகம்போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபி யாவான் என்பதூஉம், ‡சர்வஞானேத்தரம் முதலியவற்றுட் காண்க.

இரண்டாமதிகரண முடிந்தது.

---

* சிவோயம்-இவன் சிவன். † சிவத்துவமசி-சிவன்நீயாகின்றாய். ‡ சர்வஞானேத்தரத்துட் கூறுமாற்றை கூடு-ம் பக்கத்திற் காண்க.

மூன்றாமதிகரணம்.

மேலே இரண்டதிகரணங்களானுந் தன்னை இந்திரியத்து வேறுவான் கண்ட ஆன்மா, அக்காட்சி நிலைபெறுமாறு அசத்தாயுள்ள பாசத்தை அசத் தென்று கண்டு ஒருவுக. ஒருவியவழி உளதாய் நிற்கும் ஞானக் கண்ணினுல் ஒருவிய தன்னறிவின்கண்ணே தனக்கு ஞேயமாகிய முதல்வனை நாடுக. இவ்வி ரண்டும் அக்காட்சியை நிலைபெறுத்தி அரன் கழல் சேறலாகிய சிவானந்த போ கப் பயனைப் பயப்பித்தற்கு முறையே சாதகமாம் என்று உணர்த்தியவழி, அற் றேல், அப்பயனைப் பயப்பித்தற்குரிய இவ்விரண்டினையுஞ் சாதித்தோர்க்கு இனிச் சாதிக்கக்கடவதொன் றில்லைபோலும் என மாணாக்கனுக்கு நிகழும் ஆசங்கையை நீக்குதற்கு எழுந்தது மூன்றாமதிகரணம்.

இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

எனவரும்.

'இனி' என்பது இயைபு உணர்த்துதற்பொருட்டென மேலேயுரைத் தாம்; கடைப்பிடிக்க. 'இவ்விடத்து' என்பது ஆன்மா பாசமொருவி ஞானக் கண்ணினுல் ஞேயமாகிய முதல்வனைக் கண்டவிடத்து என்றவாறு. 'ஸ்ரீ பஞ்சா க்கரத்தை' என்பது முத்திபஞ்சாக்கரத்தை என்றவாறு. 'விதிப்படி உச்சரிக்க' என்பது ஆன்மா பாசமொருவி ஞானக்கண்ணிற் பதியைச் சிந்தை நாடுக என ஈண்டு விதித்த விதியின்படியே ஓதுக என்றவாறு. பஞ்சாக்கரத்தாற் சாதிக் கப்படும்பொருளும் அதுவேயாதலான் வேறு வருத்துக் கூறுது விதிப்படி என மாட்டெறிந் தொழிந்தார். இங்ஙனம் ஆசிரியர் மாட்டெறிந்ததூஉ முணரா தார் சாதித்துநிற்கும் முறை வேறே ஓதும் முறை வேறே எனச் சித்தாந்தவழ க்கோடு முரணிக் கூறுவர். *நிற்கும் முறையும் ஓதும் முறையுந் தம்முள் இயைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையதென் றெழிக. இன்னும் இதனியல்பினைத்தும் உண்மைவிளக்கம் சிவப்பிரகாசம் திருவருட்ப யன் கொடிப்பாட்டு நெஞ்சுவிடுதூது முதலியவற்றில் விரித்தோதுதலின் அவையெல்லாம் ஆண்டுக் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும். மானதம் மந்தம் †உரை என உச்சரிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதம் எனப் படுஉ அறிவாற் கணித்தலே ஈண்டு உச்சரித்தலென்பார் சூத்திரத்துள் உச்ச ரிக்க என்னாது எண்ணுக என்றார். வடமொழிச் சூத்திரத்துத் தியானிக்க என்றது மதம்.

அற்றேல், மேலையதிகரணங்களில் ஓதியவாற்றுற் பாசமொருவி ஞானம் பிரகாசித்து ஞேயத்தைக் கண்டிழி அவ்வளவினமையாது திருவஞ்செழுத்தா னும் அதனைச் சாதிக்க என்றல் மிகையுமாய்ச் சித்தசாதனமுமாமால் என் னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கு எழுந்த ஏது;

---

* நிற்குமுறையும் ஓதுமுறையும் தம்முள் இயைபில்வழி அஃது அதற்குச் சாதன மாகாதென்பதைக் காஞ்சிபுராணத்துள் "நிற்குமுறை ஓதுமுறை விளங்கத்தேற்றி." என ஓதியவாற்றுனும் கண்டுவிளக்கினர். † உரையை வடநூலார் வாசிகம் என்பர்.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அதனை நீக்குதற்கெனக் கொள்க.

எனவரும்.

வேம்பு தின்ற புழு அதனை நீத்துக் கரும்பினிற் றலைப்பட்டு அதன் சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் முன்னர்த் தான் நோக்கிய வேம்பின் சுவையை நோக்கிநிற்குமாறுபோல, மேலையதிகரணங்களிற் கூறிப்போந்த சாதகங்களைச் செய்து முற்றிய ஆன்மாக்களுக்கு அச்சாதகங்களான் ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப்பட்ட விடத்தும் பயிற்சிவயத்தான் முன்னர்த் தான் நோக்கிய பாசத்தை நோக்கி நிற்கும் ஆகலின், அந்நோக்கமாகிய வாசனையை நீக்குதற்கு உரியசாதக மதுவாகலான் 'இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க' என்று மேற்கொண்டதெனக் கொள்க என்றவாறு.

எனவே இரண்டும் ஒருதன்மையவாயினும் மேலே விதிக்கப்பட்ட சாதகருக்குப் பின் ஞானம் பிரகாசித்து நிலைகூடுதலும், ஈண்டு விதிக்கப்படுஞ் சாதகத்திற்குப் பயன் அது கூடியவழியுந் தாக்குவதாகிய வாசனையை நீங்குதலுமாகிய பயன்வேறுபாடு உண்மையின் ஒருதலையாற் சாதிக்கக்கடவதாகிய திருவஞ்செழுத்தீதாதல் மிகையாகலும் சித்தசாதனமாகலும் யாண்டைய! என மாணாக்கனுக்கு ஆசங்கையை நீக்கியவாருயிற்று. ஆகவே, அக்கிலே கூடப் பெற்றவர்க் கன்றி ஏனையோர்க்கு இஃது எளாதென்பது கண்டுகொள்க. ஈண்டு நோக்கு என்றது மனவெழுச்சிவிசேடத்தை; *"வானெக்கி வாழுமுலகெல்லாம்." என்புழிப்போல.

அற்றேல், இச்சாதகம் வாசனையை நீக்குமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி எதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

எனவரும்.

ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறைமையில் வைத்துக் கண்டு தன்னுடம்பினகத்தே இதயம் நாபி புருவநடு என்னும் மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்பே ஞானபூசை செய்யும் முறைப்படி இதயகமலத்திற் சிவனை அவ்வஞ்செழுத்தான் அமைந்த திருமேனியிற் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறுமை இரக்கம் அறிவு மெய் தவம் அன்பு என்னும் அட்டபுட்பங்கொண்டு அவ்வஞ்செழுத்தாற் பூசைசெய்து, குண்டலித்தானமாகிய நாபியில் ஞானவனலை எழுப்பி அதன்கண் அத்திருவைந்தெழுத்தாகிய விங்

* திருக்குறள், இருந்-ம் அதி. செங்கோன்மை. உ.

துத் தானத் தமிழ்தமாகிய கெய்யைச் சுழுமுணைநாடி இடைநாடி ஆகிய சுருக் குச்சுருவங்களால்ஓமஞ் செய்து விந்துத்தானமாகிய புருவநடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமாம் முறைமையின் அவ்வஞ்செழுத்தாற் சிவோகம் பாவனை செய் யின் அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் சேட சேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமையா மென்க.

ஓமித்தலும் தியானித்தலும் பூசைக்கு அங்கம்; பூசை அங்கி என அறிக. கோதண்டஞ் சானிக்கில் என்புழிக் கண்ணுருபும் அண்டனும் என்புழிக் குவ் வுருபும் விரித்துரைக்க. ஆளாம் முறைமை வருகின்ற சூத்திரத்திற் பெறப்ப டும். சுட்டறிவிறந்து ஞானத்தான் ஞேயத்தைக் கண்டு எங்குந் தானுக நிட்டை கூடியவழியும் தொன்றுதொட்டு வரும் ஏகதேசப் பழக்கம் பற்றிப் புறத்தே விடயத்திற் சென்று பற்றுவதாகிய தன்னறிவை அங்ஙனஞ் செல்லாது மடக்கி அகத்தே ஒருகுறியின்கண் நிறுத்தி நிட்டைகூடி நிற்கும் முறைமையை அஞ் செழுத் தோதும் முறைமையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்கச் சிவதரி சனத்தை விளக்கி வாதனாவயத்தாற் புறத்திற் சென்று பற்றும் ஏகதேச வறி வைப் பற்றறத் துடைத்துப் பூரணநிலையிற் கொண்டு செல்லுமாகலான் அது, வாசனை நீக்குதற்குரிய சிறந்த சாதனமாத லறிக.

அங்ஙனம் அஞ்செழுத் தோதுமுறையான் ஒருகுறியின் வைத்தன்றி முதல்வனைக் காண்டல் செல்லாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் தன் மாட்டு விளங்கித் தோன்றுமாறும், தோன்றியவழித் தான் அம்முதல்வனுக்கு அடிமையாமாறும் உவமையில்வைத் துணர்த்தி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் ரேன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாணு மோதஞ் செழுத்து.

எனவரும்.

அந்தரத் தியங்கும் நவக்கோள்களுள், ஏனைக்கோள்கள் போலக் காணப் படாத இராகு கேதுக்களை *உபராகத்திற் சந்திராதித்தரிடத்திற் காணுமாறு போலப், பதிபசுபாசங்களுள் யான் இதனை அறிக்தேன் அறிகின்றிலேன் என னும் உணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசுபாசங்களோ டொப்ப வேறு காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன் இதயத்தின்கண் அஞ்செ ழுத்தோது முறையாற் காணுமாயிற், கோலை நட்டுக் கயிற்றினுற் சுற்றிக் கடை யவே காட்டத்தி னின்றுந் தோன்றும் அங்கி போல் அம்முதல்வன் ஆண்டுத் தோன்றி அறிவுக் கறிவாய் விளங்கி நிற்கும். அப்பொழுது தானும் கனலைச் சேர்ந்த இரும்பு போலத் தன் சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடி மையா மாகலான் அவ்வஞ்செழுத்தை விதிப்படி ஓருதலையா னோதுக என்க.

* உபராகம்-கிரகணகாலம்.

கேது, சாயாக்கிரக மாதலின் வேறு கூறுது இராகுவை என்றெழுதிக்காட்டினார். கண்–அறிவு. தோன்றி ஆம் எனக் கூட்டுக. உந்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று. காட்டாக்கினியின் என்பது காட்டாக்கின் என விகாரமாயிற்று. இன் உவமவுருபு. தான் எழுவாய். ஈண்டும் ஓதஞ்செழுத்து என்றது வலியுறுத்தற் பொருட்டு.

அற்றேல், தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட முதல்வனை இதயத்துட் கண்டு பூசிக்குமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி,* "அண்ட பிண்ட மவைசம மாகலால்." அண்டத்தில் உள்ளன வெல்லாம் பிண்டத்துள்ளுஞ் சூக்குமரூபமாய் உண்மையின் அண்டவடிவாகிய முப்பத்தாறு தத்துவங்களும் இதயத்திற் கமலரூபமாய் விளங்குமாகலின், முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மேற்பட்டு அங்ஙனம் வியாபகமாய் வயங்கும் முதல்வனை அவ்விதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசித்தல் அமைவுடைத்தெனத் தெளிவித்தற் பொருட்டு அவ்விதயகமலத்தின் இயல்புணர்த்தி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

மண்முத னாளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு னோர்.

எனவரும்.

இதயகமலத்தின் இயல்பை உற்றறியப் புகின் நிலம் முதலிய இருபத்து நான்கு தத்துவமும் காரியினின்றுந் தோன்றும் எண்விர னாளைத்தாகிய நாள வடிவும், வித்தியாதத்துவ மேழுஞ் சுத்தவித்தையு மாகிய எட்டும் எட்டிதழ் வடிவும், அவற்றின் மேற் கருதப்பட்ட ஈசுர தத்துவமும் சதாசிவ தத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவும், சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டுவடிவும், சிவதத்துவம் அப்பொகுட்டினுட் காணப்படும் ஓம்பதொரு பீசவடிவு மாகலான், அப்முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகக் கொண்டி அவற்றின்மேல் நிற்கும் முதல்வன் நிருவடிகள் அவ்விதயகமலத்தின் மேல் நிற்கும். அதனை அறிந்து பஞ்சாக்கரத்தாற் பூசை செய்வாயாக வென்க.

வித்தை என்பதனை இரட்டுற மொழிந்துகொண்டு வித்தியா தத்துவம் எனப்படுங் கலாதியும் சுத்தவித்தையும் என்றுரைத்துக் கொள்க. † "மூட்டு மோகினி சுத்தவித்தை." என்னுஞ் சிவஞானசித்தியில் "மோகினி" என்ற தூஉம் ஆருபெயரான் அதன் காரியமாகிய கலாதிகளின் மேற்று. இனி இவ்வாறன்றி நிலம் முதலிய முப்பத்தொரு தத்துவம் எனப்படும் எட்டுக் கொத்தும் எண்விர னாளவடிவம்; (அவற்றிற்குமேலாகிய) அசுத்தமாயா தத்துவம் நாளத்துக்கும் மலருக்கும் நடுக் கண்டமாகிய கிரந்திவடிவம்; அதற்குமேற் சுத்தவித்தையில் வாமை முதலிய எட்டும் எட்டிதழ்வடிவம் என்றுரைப்பாரும், அசுத்த

* கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம். எ0. வலங்கை. இன்னும் இதனை "பிண்டமு மண்டமாகும்." என்னுந் திருவாதவூர்ப்புராணத் திருவிருத்தத்தானும் உணர்க.
† சிவஞானசித்தி, கூம் சூ. கூ. நாட்டு.

மாயை கிரந்தியின் அதச்*சதனம் சுத்தவித்தை ஈசுவரசதாசிவதத்துவச்சதனம் என வைத்து அதற்கு மேல் ஈசுவரதத்துவத்தில் அனந்தன் முதலிய எட்டுமே எட்டிதழ் வடிவம், சதாசிவததத்துவ மொன்றுமாத்திரமே கேசர வடிவம் எனக் கொண்டு அதற்கியையக் கொண்டுகூட்டி உரைபபாருமு, கலாரூப மென்றது நிவிர்த்தி முதலிய கலைகளே எனவும், அஃது யாண்டுங் கூட்டி உரைக்கப்படும் எனவுங் கொண்டு, அவ்வாறு கோடலான் மண்ணும் மண்ணே முதலாக வுடைய வீண இருபத்தாமூன்று தத்துவமு மாகிய கலாரூபமாவன நிவிர்த்தியும் பிரதிட்டையுமே ஆகலான் அவையிரண்டும் முறையே நாளமும் மலருமாம். வித்தியாதத்துவமாகிய கலாரூபமாவது வித்தியாகலை சுத்தவித்தையோடு கூட்டி எண்ணப்பட்ட ஈசர் சதாசிவமாகிய சாந்திகலையாகலான் அவை இரண்டும் முறையே கலையெனப்படுங். கேசரமும் கலைக்குள் உருவெனப்படும் பொருட்டுமாம். நாதமும் சத்தியுமாகிய கலாரூபமாவது சாந்தியதீதகலையாகலான் அது பொருட்டின் கண்ணுகிய பீசமாம் என்று இவ்வாறு உரைப்பாருமுளர். இவையெல்லாம் அவ்வவ்வாகம பேதம்பற்றிக் கொள்ளப்படும்.

கலை அறுபத்துநான் காகலான் அஃது அறுபத்துநான்காகிய கேசரங்களுக்குந் தொகைபற்றிக் கூறப்படும் ஆருபெயராயிற்று. ஈசர் என்றது ஆருபெயராய் அவரான் அதிட்டிக்கப்படும் தத்துவத்தை உணர்த்திற்று. கலையுருகலைக்குள் உரு என உள்ளுருபு விரித்துரைக்க. கலைக்குள் உரு கேசரங்களுக்கு நடுவாய் விளங்கும் பொருட்டென்பது. கலையுருவாஞ் சத்தி நாத மதன் கண்ணும் என மாறி உரைக்க. ஆம் என்பதனை நாளம் மலர் கலாரூபம் என் பனவற்றோடுங் கூட்டி உரைக்க. இது நாளம் முதலாக மேலினைக்கித் தோன்றும் உலகத்திற் கமலம் போலாது கண்முதலாகக் கீழ்நோக்கித் தோன்றுந் நிவ்விய கமலமென்க.

மூன்றாமதிகரண முடிந்தது.

ஒன்பதாஞ்சூத்திர முடிந்தது.

சாதனவியன் முற்றிற்று.

* சதனம்-இதழ்.

சிவமயம்.

பயனியல்.

பத்தாஞ் சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்ஞெடு வல்வினை யின்றே.

எனவரும்.

எ-து. சூ-ம் எ-னின். பாசகஷயம் பண்ணுமா றுணர்த்துத னுதலிற்று.

மேலை ஒத்து மூன்று பாதத்தானும் முறையே சாதிக்கும் பொருளின் இயல்பும், சாதித்துப் பெறப்படும் பொருளி னியல்பும், சாதிக்குமாறும் உணர்த்தி, ஈண்டு அச்சாதகத்தாஞகிய பயனியல்பு வகுத்துக் கூறுவான் எடுத்துக் கொண்டமையின் இவ்வோத்துப் பயனியல் என்னும் பெயர்த்து. பாசவீடுஞ் சிவப்பேறு மெனப் பயன் இருவகைப்படு மாகலான், அவ்விரண்டனுட் பாசவீடாகிய பயனைப் பெறுமா றுணர்த்து முகத்தானே ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்கும்வழிச் செய்யற்பாலது இதுவென அஞ்செழுத் ததிகாரணத்தின் ஒழிபாய்வைத்துணர்த்துதல் பயனெனத்தின் முதற் பாதமாகிய இப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

மேற் சாதக முணர்த்தியவழிச் சாதகத்தாற் பெறப்படும் பயன் யாதோ? எனப் பயனை அவாய் நிற்றலின் அவ்வவாய்நிலைபற்றிய இயைபானே ஒத்தியைபும், ஆன்மசுத்தி கூறிப் பின் ஆன்மலாபங் கூறுதல் முறைமை யாகலின் அம்முறைமை பற்றிய இயைபானே பாத வியைபும், விதிப்படி பஞ்சாக்கரத்தை உச்சரித்தால் வாதனுமலம் போம் என்றவழி அங்ஙனம் உச்சரிக்குங்கால் நிற்கும் நிலையும் இவ்வாறுகற்பாற் றென்பது கூறுக்கால் உச்சரித்தார்க் கெல்லாம் வாதனுமலம் போதல்வேண்டும் என்னும் ஆசங்கை நிகழ்தலின் அவ்வாசங்கைபற்றிய இயைபானே அதிகரணவியைபும் பெறப்பட்டன.

அற்றேல், * விட்–டன்னிய மின்மையி னரன்கழல் செலும். எனப் பயனும் ஆண்டே கூறிப் போந்தமையின் ஈண்டு அதனை அவாவுமா றியாங்ஙனம்? எனின், பயனை அறிவித்தா லன்றிச் [illegible]தனுஞ் செய்தற்கண் மனவெழுச்சி செ

* இந்நூல், அ-ம் சூ. ஐம்புல.

ல்லா தென்பது பற்றி ஆண்டுப் பொதுவகையாற் கூறிப் போந்ததனை ஈண்டுக் கிளந்து எடுத் தோதாக்கால் விடுமாறு யாங்ஙனம்? செல்லுமாறு யாங்ஙனம்? என்று அவாய் நிற்றல் ஒருதலை என விடுக்க.ஏனையவும் உய்த்துணர்ந்துகொள்க.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஞானக் கண்ணினிற் சிக்தை கூட்டப்பட்ட அம்முதல்வன் பொருட்டன்மையால் வேறேயாயினும் வேறு காணப்படாது யானே கண்டேன் என்னும்படி உயிர்தானேயாய் நின்ற அப்பெத்தநிலைபோல ஈண்டுத் தானென வேறுகாணப்படாது அம்முதல்வனேயாம்படி ஒற்றுமைப்பட்டு அவ்விறை பணியின் வழுவாது நிற்பின் 'உராத்துணைத் தோர்த்தெனப் பாசம்' ஒருவியவழியும் வாசனையால் வந்து தாக்கும் மலம் மாயை என்னும் இரண்டனுடனே வலிய கன்மமலமும் இல்லையாய்ப் பற்றறக் கழியும் என்றவாறு.

ஏகாரம் தேற்றம். நெறி உவம வுருபு. விணையை வேறு பிரித்தமையின் இன்றே என ஒன்றறிசொல்லாற் கூறினர்.

ஈண்டு ஏகனுகி ஒற்றுமைப்படுதலாவது, குடமுடைக்தவழிக் குடாகாயமும் மகாகாயமும் ஒன்றுதல் போல ஒற்றுமைப்படுதலோ? அன்றி வெள்ளியை இப்பி என்பதுபோலத் திரிவுகாட்சியான் ஒற்றுமைப்படுதலோ? அன்றி மண்ணே குடம் என்பதுபோல ஒன்றுதிரிந்தொன்றாய் ஒற்றுமைப்படுதலோ? அன்றி வெள்ளியுக் தாமரையும் போலக் குணகுணித்தன்மையான் ஒற்றுமைப்படுதலோ? அன்றித் தீயும் இரும்பும் போல ஒன்றினொன்று விரவுதலான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிப் பாலு நீரும் போலப் பிரிக்கப்படாத சையோகத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிக் கருடனும் மாந்திரிகனும் போலப் பாவனை மாத்திரத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிக் காய்ச்சிய இரும்பின் நீர்போல ஒன்றினொன்று இலயமாய் ஒற்றுமைப்படுதலோ?அன்றிப் பேயும் பேய்பிடிகொண்டவனும் போல ஆவேசத்தான் ஒற்றுமைப்படுதலோ? அன்றிக் காட்டத்தின் எரிபோல விளங்காமையான் ஒற்றுமைப்படுதலோ? அன்றி ஞாயிற்றி னொளியின் விளக்கொளிபோலச் சத்தி கெட்டு நிற்றலான் ஒற்றுமைப்படுதலோ? அன்றித் தலைவனுக் தலைவியும் போல இன்பது. கர்ச்சிமாத்திரையான் ஒற்றுமைப்படுதலோ? அன்றி நட்டோர் இருவர் போல நட்பின் மிகுதியான் ஒற்றுமைப்படுதலோ? அன்றி ஆவும் ஆமாவும் போல ஒப்புமைமாத்திரையான் ஒற்றுமைப்படுதலோ? என அவ்வச் சமயவாதிகள் மதம் பற்றிநிகழும் இன்னோரன்ன ஆசங்கைகளை யெல்லாம் நீக்குதற்பொருட்டு 'அவனேதானே யாகிய வன்நெறி' என உவமை எடுத்துக் காட்டி ஓதினர்.

அற்றேல், ஈண்டுச் சம்பந்த மென்னை? எனின், அது வருகின்ற சூத்திரத்தில் உவமைமுகத்தான் ஓதுகின்றுராகலின் ஆண்டுக் காட்டுதும்.

இதனுள், அவனே தானே யாகிய வன்நெறி யேகனுகி என்பது ஓரதிகரணம்; இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றே என்பது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென் றறிக.

மூதலதிகரணம்.

அவற்றுள், முதலதிகரணம் மேலைச் சூத்திரத்தில் வாசனுமலம் நீங்கி ஆன்மசுத்தி யாதற்பொருட்டு ஸ்ரீபஞ்சாக்காத்தைப், பாச மொருவிப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தை நாடுக எனச் சிவதரிசனம் பண்ணுமா றேதிய விதிப்படியே மகாவாக்கியப் பொருள் பயப்ப உச்சரிக்க என்று உணர்த்தியவழி, வாதனுமலம் நீங்குதற்கு எவ்வாறு உச்சரித்தன்மாத்திரையே அமையும் போலும் என்னும் ஆசங்கையை நீக்கி மேற் செய்யுமாறு இது என்பதாய சித்தாந்தம் உணர்த்துதற் கெழுந்தது.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத் தேகனுகி நிற்க என்றது.

எனவரும்.

ஏகனுகி நிற்றலாவது *"திரண்டாம் பயனெனுந் திருவரு டெளியிற்—சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்று—மென்றிறை யியற்கை யியம்புத றகும்." எனச் சங்கற்பநிராகரணத்துப் பரமசித்தாந்தமாக முடிவின்கண் ஓதியவாறே திருவைந்தெழுத்தின் உய்த்துணர்ந்து நிற்றல் என்றுணர்க.

அற்றேல், வாதனுமலம் நீங்கி ஆன்மசுத்தி பண்ணுதற்கு ஸ்ரீபஞ்சாக்கரத்தை அவ்விதிப்படி உச்சரித்தலே அமையும். அதன்மேலும் ஏகனுகி நிற்றல் எற்றுக்கென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்தது;

அவ்வாறு நிற்கவே யான் எனதென்னுஞ் செருக்கற்று அவனது சீ பாதத்தை அணையு மாகலான்.

எனவரும்.

ஏகனுப் அப்படி நின்றுலே யன்றி யானெனப்படும் † ஞாதாவும், எனதெனப்படும் ‡ ஞானமும், அதற்கு விடயமாய் எனதெனப்படும் ¶ ஞேயமும் எனப் பகுத்துக் காணும் மயக்க வுணர்விற்கு வதுவாகிய மலவாசனை நீங்காது; அது நீங்கினுலன்றி முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தை அநுபவித்தல் கூடாது. ஆகலான், அம்மலவாசனை நீங்கிச் சிவானந்தத்தை அநுபவித்தற்கு அதுவே சாதகம் என்பது பெறப்படுதலான் 'ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேகனுகி நிற்க' என மேற்கொண்டது என்றவாறு. செருக்கு ஆகுபெயர்.

அற்றேல், ஞாதிரு ஞானம் ஞேயம் எனப் பகுத்துக் காணுங் காட்சி மயக்க வுணர்வாமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக்காட்டும் உதாரணம்;

---

* சங்கற்பநிராகரணம், சைவவாதி சங்கற்ப நிராகரணம். சுக, சுஉ, சுங-ம் அடிகள். † ஞாதா-காண்போன். ‡ ஞானம்-காட்சி. ¶ ஞேயம்-காட்சிப்பொருள்.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
ரூனெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை.

எனவரும்.

யானென்றும் அவனென்றும் பகுத்ததிற்கு நிற்பார்க்கும் யானே என நிற்பார்க்குப் போல நாடுகின்ற ஆன்மபோதம் *முனைத்துத் தோன்றும் ஆதலால் அது தோன்றும்வழித் தானென்று ஒருமுதல் காணப்படுமாறின்றித் தான் அவ்வுயிரேயாய்க் காணப்பட்டும், யானென்று ஒருமுதல் காணப்படுமாறில்லை யென்றறிந்து தானே முழுவதுமெனக் காண்பவரை அவ்வாறே வேறு காணப்படுமாறில்லையென்று தனது திருவடியினபாகத்துள் அடங்கிநிற்கச் செய்து தானே முழுவதுமாய்க் காணப்பட்டும் நிற்பன் இறைவன் என்க.

ஆய் ஆம் எனக் கூட்டுக. ஆயாமென்புழிச் செய்தெனெச்சம் காலமுணர்த்தி நில்லாது "மற்று—நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க்கமிழ்தொக்குமிவன்." என்புழிப்போலத் தன்னினைமுதலாதல் மாத்திரையே உணர்த்தி நின்றது.

தூலவொளியாகிய கண்ணொளியும் சூக்கும வொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலை பிரித்தறிய வாராமையிற், கண்ணொளியாய்க் காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத் தோன்று மாகலின் அவ்வழி விளக்கொளி இருந்து மில்லை. விளக்கொளியாய்க் காணுங்கால் காட்டுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளி இருந்து மில்லை. கண்ணொளியும் விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப் புகினும் காணுந் தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் விளக்கொளி திரிவு புலனுகக் காட்சிப்படுவ தல்லது தெளிவு புலனுகக் காட்சிப்பட்டு நிற்பதில்லை. அதுபோல, தூல அறிவாகிய உயிரும் சூக்கும அறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க்கலந்து நிற்கும் நிலையும் பிரித்தறிய வாராமையின், உயிராய்க் காணுங்காற் சிவமில்லை. சிவமாய்க் காணுங்கால் உயிரில்லை. இரண்டுமாய்க் காணப்புகினும் தற்போதம் முற்பட்டு நிற்றலின் அவ்வழியுஞ் சிவம் யேக்காட்சிக்குப் புலனுய் நிற்ப தல்லது தெளிவு காட்சிக்குப் புலனுய் நிற்குமா றில்லை. ஆதலான், 'நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத—ரூனெனவொன் றின்றியேதானதுவாய்' என்றார்.

உம்மை இறந்ததுதழீஇயிற்று. இக்கருத்தே பற்றிக் †"காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை—காண்பார்க ணன்முத்தி காணுர்கள்." என் றோதிய புடைநூலாசிரியர் மீனக் †"காண்பானுங்-காட்டுவதுங் காண்பதுவுந் தன்கடன்தைச் சம்பந்தன்—வாட்டுகெறி வாரா ரவர்." எ-ம், ‡"கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடுங் கருத்தொன் றன்றே." எ-ம் கூறினர் என்பது.

---

* முனைத்துத்தோன்றல்-முற்பட்டுத்தோன்றல். † விருவெண்பா. கக. ‡ சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. எ. கண்ணொளி.

அற்றேல், இக்காட்சி இரண்டனுள் யாது திரிவு காட்சி? யாது தெளிவு காட்சி? எனின், கூறுதும்:—கண்ணொளியானது எவ்வெவ் வொளியோடு கூடினும் அவ்வவ் வொளிவடிவாய்க் காணப்படு மியல்பிற்றன்றி ஒருபெற்றியாய்க் காணப்படு மியல்பிற் றன்மையின், அவ்வவ் வொளிகள் கண்ணொளியோடு கூடிய வழியும் ஒருபெற்றியனவே எனப்படு மியல்பினவாகலின், அவ்வியல் பறியாது அங்ஙனம் அவ்வவ் வொளிவடிவாய்க் காணப்படும் இயல்பிற்றன்றி ஒருபெற்றியாய் விளங்காத கண்ணொளியைத் தனித்துக் காண்டல் திரிவுகாட்சி எனவும், ஒருபெற்றியனவாய் விளங்குவனவாகிய அவ்வொளிகளைத் தனித்துக்காண்டல் தெளிவுகாட்சியவேயாம் எனவும், நுண்ணுணர்வாலைக்கி உணர்ந்துகொள்க.

அற்றேல், காட்டும் ஒளியின் வேறுய்க் கண்ணுக்கு ஒரொளிக்குணம் உண்டென்றற்கு ஏது என்னை? உண்டெனின் மின்மினித்தூணையாயினுந் தானே விளங்குமாதல் வேண்டுமாலெனின்; ஆகாயத்தின்கண்ணதாகிய சத்தகுணம் முரசு*குணிற் சையோகம் முதலிய வியஞ்சகங்களான் விளக்கப்பட்டுழி விளங்குதலேயன்றித் திணித்தூணையானுந் தானேவிளங்குமா றின்றென்பது பற்றி, வியஞ்சகத்தான் விளங்கி எதிரொலிவடிவாய்த் தோன்றும் அவ்வோசையை ஆகாயத்தின்குண மன்றென்பார் யாரு மில்லை. அதுபோலக், கண்ணின்கண்ணதாகிய ஒளியும் வியஞ்சக முள்வழி விளங்கி அல்லுழி விளங்காமைமாத்திரையே பிறிதில்லை யாகலான் அதனைக் கண்ணின் குண மன்றென்றல் அறிவிலார் கூற்றேயாம் எனவும், அக்கண்ணொளி தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப் பொருள் ஏகதேசமாயின் † ஏகதேசத்து விளங்கியும் அது வியாபகப்பொருளாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்கும் இயல்பிற்று எனவு முணர்க.

அற்றேல், அஃதங்ஙனமாகக் ‡"கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும்." என்றற்குப் பிரமாண மென்னை? ஒரு விடயத்தின்மேல் வீழ்ந்த பல கண்ணொளிகட்குத் தம்முள் இயைபில்லாதவாறு போல ஒருவயிற் பட்ட கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முள் இயைபில்லை என்றலே பொருத்தமுடைத்தாலெனின், அறியாது கூறினாய்; ஒருவிடயத்தின்மேல் வீழ்ந்த கண்ணொளிகள் தம்முள் ஒன்றனை ஒன்று காணுமாறில்லை; ஒன்றுக் கொன்று காட்டு மாறுமில்லை; ஆகலான் அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின் றென்ப தொக்கும்; அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டுதலு மாகிய இயைபு உண்மையின் இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளிமுதலாயின சுண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்கள்தத்தம் விடயங்களோடு இயைந்தன்றிச் சந்நிதிமாத்திரையால் அவற்றை அறிதல் செல்லாதென்பதே ஆகமங்கட் கெல்லாந் துணிபாகலானும், அத்தன்மையவாகிய கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லை என்றல் சிவாகமவழக்கோடும் உலகவழக்கோடும் முரணுவார் கூற்றேயாம் என உணர்க. இங்ஙனம் உவமைக்கு ஓதியன வெல்லாம் பொருட்கண்ணுமாமாறு உணர்ந்து உரைத்துக்கொள்க.

---

* குணில்-குறுந்தடி. † ஏகதேசம்-ஒருசார். ‡ சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. எ. கண்ணொளி.

அற்றேல், இவை அனைத்தும் ஒக்கும்; ஈண்டு எடுத்துக்காட்டிய கண்கள் ஒன்றனையொன்று காணுமா றின்மையின், அதுபோல ஆன்மாக்களும் பிற ஆன்மாக்களை அறியுமாறில்லையேலு மெனின், அறியாது கூறினுய்; கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காண்டலில்லை என்றது விளக்கினையும் விடயத்தினையுங் காணுமாறு போலத் தனித்த முதலாய் வேறுகாணுமாறில்லை என்ற துணையே யன்றிப் பிறிதின்மையின் கண் விளக்கொளியைக் காணுங்கால் அது வேதானுக நின்று தன்னையும் அவ்விளக்கொளிவண்ணமாய்க் காண்ட லுண் டென்பது கண்கூடாக அறியக் கிடத்தலின் ஏனைக் கண்களையும் அவ்வாறு காண்டல் அமையுமாகலான், அதுபோல ஆன்மாவும் பிறவுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமா றில்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும்வழித் தான் அது வாய்நின்று தன்னை அறியுமாறு போலப் பிறவுயிர்களையும் அச்சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமையுமாகலான் எனபது. அற்றுகலினன்றே *"தன்னுலே தனைய றிந்தாற்–றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே." எனவும், †"அந்நிலே கரண மாகா வகையதி லறிவ டங்கி—மன்னிட வியாபி யாய வான்பயன் மேருன்றும்." எனவும், புடைநூலாசிரியர் ஓதியதூஉம், ‡"என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்—¶நின்னிலை யினைத்தையுங் கண்டே னென்னே—நின்னைக் காணு மாந்தர்–தன்னையுங் காணுத் தன்மை யோரே." என மும்மணிக்கோவையி னுரைதியதூஉம், பிறண்டும் இவ்வாறே ஓதியதூஉ மென்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாம திகரணம்.

முதலதிகரணத்தின், மேலைச் சூத்திரத் தோதிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அவ்விதிப்படி உச்சரிக்கின்றுழி அதன்கண் விளங்கும் ஞாதிரு ஞான ஞேயப் பகுப் பிறந்துநின்று உச்சரித்தாலன்றி மலவாசனை அறுமையால் அஃது அறும் வண்ணம் முதல்வனிடத்து ஏகனுகி நிற்றல் வேண்டுமென மலவாசனை யறுதற்கு உபாயங் கூறியவழி, அற்றேல், ஆன்மா அவ்வாறு நிற்புழி அதன் குணமாகிய அறிவிச்சைசெயல்கள் கெட்டொழியுமோ? கெடாது நிற்குமோ? என்னுர்க்குக் கெட்டொழியுமெனிற் குணகுணிகட்கு வேற்றுமை யின்மையாற் குணங் கெடவே குணியும் கெடும் எனப்பட்டு முப்பொருளும் நித்தம் என்னுஞ் சித்தாந்தத்தோடு முரணி அவசித்தாந்தமாம்; கெடாது நிற்குமாயின், ஏகனுதல் செல்லாதால் என்னும் ஆசங்கையை நீக்கு முகத்தானே ஏனை மாயா கன்ம வாசனை அறுதற்கு உபாயங் கூறுதற்கு எழுந்தது இரண்டாம் அதிகரணம்.

இனி §இறைபணி வழுவாது நிற்க என்றது.

எனவருஞ்.

---

* சிவப்பிரகாசம், உண்மை. அ-ம் சூ. உ. தன்னறி. † மேற்படி ,, கூ-ம் சூ. கூ. இங்கிலே. ‡ பதினெராந்திருமுறை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. கஉ. மேலிய. ¶ "நின்னிலே யினைத்தினுங் கண்டே னென்னே—நின்னைக் காணு மாந்தர்—தம்மையுங் காணுத் தன்மை யோரே." என்றும் பாடம். § முதல்பணி என்றும் பாடம்.

நிற்றலாவது, சலியாது நிலைபெறுத லென்பார் வழுவாது நிற்க என்றார். ஈண்டு இறைபணி என்றது யாதெனின், அஃது ஆசிரியர் தாமே *முன்னர்த் தெரித்துரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

அற்றேல், அவ்விறைபணி வழுவாது நிற்பின் ஆன்மா சுதந்திர னல்லனு ய்ப் பரதந்திரன் எனப்பட்டு முத்தியும் பெத்தம் எனப்பட்டு வழுவாம், †"பர தந் திரியங் கரைகழி பந்தம்." எனச் சிவாகமங்களி னோதுதலான் என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதிக்க வெழுந்த ஏது;

அவனருளால் அல்லது ஒன்றையுஞ் செயாஞகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

எனவரும்.

கண்ணொளிக்குக் காட்சி விளக்கொளியை யின்றி அமையாமையிற் காண் பன வெல்லாம் அதன் செயலே எனக் கண்டு தானென வேறு முணைக்குமாறி ன்றி அவ்விளக்கொளியின் அடங்கி நிற்பின், ஏனை விடயமொன்றுங் 'கண்ணுக் குத் தாக்குமா றில்லை; அதுபோலத் தன்னுடைய இச்சாஞானக்கிரியைகளின் தொழிற்பாட்டுக்கு முதல்வனது இச்சாஞானக்கிரியைகளை யின்றி அமை யாத ஆன்மாவும் அவ்வியைபு பற்றி நிகழ்வன வெல்லாம் முதல்வனது இச்சா ஞானக்கிரியைகளது நிகழ்ச்சியே எனக் கண்டு அம்முதல்வன் வியாபகத்துக் குள்ளாக அடங்கி நிற்பிற் பிரபஞ்சம் சிறிதும் தாக்குமா றில்லை. அஃதின்றாக வே, அது காரணமாக மேலைக்கு வினை ஏறுமாறு மில்லை. அல்லுழி யெல்லாம் பிரபஞ்சம் தாக்கா தொழியாது. அஃதொழியாதவழி, அது காரணமாக வரும் விருப்பு வெறுப்பு ஏழு தொழியாது; அஃதேறுமாயிற் பிறவிக்கு வித்தாய் மீளப் பெத்தநிலையிற் செலுத்திவிடும். ஆகலான், அங்ஙன மாகாதவாறு மாயை கன்மங்களின் வாசனை அறுதற்கு உபாயம் இதுவே யாகலான் இறைபணி நிற்றல் ஒருதலையான் வேண்டு மென்பார், 'அவனருளா லல்ல தொன்றையுஞ்' செய்யாஞகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா வாகலான்' 'இனி இறைபணி வழுவாது நிற்க' என மேற்கொண்டது என்றார்.

எனவே, †"பரதந் திரியங் கரைகழி பந்தம்."எனச் சிவாகமங்களில் ஆண் டோண்டு ஓதியது இவ்விறைபணி நிற்றலை யன்று; மற்றுச் சிவானந்தத்தை அனுபவித்தற்கட் செல்லு மியல்பிற்றாகிய தன்னிச்சைவழி விடாது மலத்தி னுல் ஊக்தொழிலில் அகப்படுத்துச் சுழல்விக்குங் காரணமூர்த்திவழி நிற்றலை யேயா மெனக் கொள்க. சிவானந்தத்தை அநுபவித்தற்கு ஏதுவாய இறைபணி நிற்கை, தன்னிச்சைவழி நிற்றலேயா மாகலின் அஃது அதனை நோக்கச் சுதந் திரமேயாம் என்பது. மலவாசனை யறுதல் மேலை யதிகாரணத்தாற் போந்தமை யின் ஈண்டு அஞ்ஞான மென்றது மாயையின் காரியமாகிய மயக்க வாசனையை யேயாம் எனவும், சஞ்சிதந் தீக்கையானும் பிராரத்தம் அநுபவத்தானும் அறு தலின் ஈண்டுக் கன்ம மென்றது ஆகாமியவாசனையையேயாம் எனவுங் கொள்க. அஞ்ஞான கன்மம் உம்மைத்தொகை.

---

* முன்னர்த்தெரித்துரைத்தலாவது 'அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யாஞ தல்' என்பதை என்றுணர்க. † ஞானமிர்தம், தூல். கூ. ஆருயிர்.

அற்றேல், அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யாதவழி அஞ்ஞான கன்மம் பிரவேசியாதவாறு யாங்ஙனம்? *"பிற்செயா தநுப விப்ப தின்மை யிற்." பிராரத்தம் அநுபவிக்கும்வழி ஆகாமிய மேறுதல் ஒருதலையாமால் என்னும் ஆசங்கையை நீக்கி ஏதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

நாமல்ல விந்திரியம் நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரணுடைமை—யாமென்னி
னெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவீ
முற்செய்வி னுந்தருவான் முன்.

எனவரும்.

செவி வாய முதலிய இந்திரியங்கள் முதல்வனது உடைமையாகிய மாயேயம் எனப்படுவன வன்றி ஆன்மாவாகிய யாம் எனப்படுவன வல்ல; அவை தொழிற்படுதலும் முதல்வன்வயத்தா னன்றி நம்வயத்தா னல்ல; அவ்விந்திரியங்கள் சத்தாதி வாக்காதிகளை விடயித்தற்கு வழியாகிய தநுகரணபுவனபோகங்களும் அம்மாயேய மாவன வன்றி யாமாவன வல்ல; அவை சேட்டித்தலும் முதல்வன்வயத்தா னன்றி நம்வயத்தா னல்ல; அவற்றோடு கூடி நின்று வினைகளை ஈட்டி நுகர்ந்து வருகின்ற யாமும் ஞானக்கிரியைகளை முதல்வன் விளக்கியவழி விளங்கியும் அல்லுழி விளங்காதும் இவ்வாறு முதல்வவினயின்றி அமையுமா றின்மையான், அம்முதல்வனது உடைமையாவே மல்லது சுதந்திராவே மல்லேம், என்று இங்ஙனம் பசுபாசங்களின் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து செய்வன வெல்லாம் அவன் அருளின்வழி நின்று செய்யுஞ் செயலாய்க் கண்டுகொண் டிருப்பராயின், அவ்வினைபணியாகிய அடிமைத்திற முடையார் எவ்வுடம்பி னின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை, அவர்க்குப் பந்தமாத லில்லை. அவ்வாகாமிய வினையை அவிநாபாவமாய் உடன் கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியில் உடலாழா யொழிவதன்றி வினையோர்க்குப்போல அவர்க்காத லில்லையாகலா னென்க.

நம்வழியி னல்ல என்பதனை மேலுங் கூட்டுக. தருவான் முன்னும் எனக் கூறிக்கொள்க. ஆம் என்பது சொல்லெச்சம். சஞ்சிதவினை ஆசாரியன் தீக்கை செய்த மாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் ஈண்டு முற்செய்வினை என்றது பிராரத்தவினையை எனக் கொள்க. †தருதல் இடவழுவமைதி.

அற்றேல், இறைபணியார்க் குளதாகிய வினை அவரைச் சாருமா றின்றி உடலாழா யொழியுமாறும், வினையோர்க் குளதாகிய வினை உயிரூழாய் வந்து வருத்துமாறும் இங்ஙனஞ் செய்யும் இறைவன் நடுவுநிலைமையின்றிக் ‡கோட்டமுடையன் எனப்படுமா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

---

* சிவஞானசித்தி, உ-ம் சூ. கக. முற்செயல். † தருதல் இடவழுவமைதியாதலை "அவற்றுள், தருசொல் வருசொல்." என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாணுணர்க. ‡ கோட்டம்-கோடுதல்; அது ஈண்டு நடுவுநிலைமையின்மை உணர்த்தி நின்றது.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனுதவ்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தானுய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

எனவரும்.

தம்பால் அடைக்கலமெனச் சார்ந்தாரைக் காப்பது உத்தமராயினுர்க்குக் கடமையாகலான், முதல்வன் தன்னைச் சார்ந்தவரையே பாதுகாப்போனுகியும் அதுபற்றிக் கோட்டமுடைய னல்லனுய்த் தன்னைச் சார்ந்து தன்னடிப் பணியின் நிற்க வல்ல அடியார் தானேயாய் நிற்குமாறு நிறுவி அவர்க்கு வரும் ஆகாமியவினையைக் கெடுத்து, அது செய்ய *வல்லாத பிறர்க்கு வரும் ஆகாமிய வினையை அவர்க்குக் கொடுப்ப னுகலான் அவ்விருதிறத்தோர்க்கும் உணவாகி நுணுகி வந்து பொருந்தும் பிராரத்த வினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்க பயனுப் இருவேறுவகைப்படச் செய்வ னென்க.

சார்தாரை ஒழித்துச் சார்ந்தவரையே பாதுகாப்பது நடுவுநிலை யன்று என்பாரை நோக்கி அவ்வாறு கொள்ளினும் அஃது ஆண்டைக்குத் தலைமைக் குணமாவதன்றி இழுக்கன்மையான் அமையு மென்பார் 'சார்ந்தாரைக் காத்த றலைவர் கடன்' எனப் பழமொழி எடுத்துக் காட்டி, உண்மையான் நோக்க வல்லார்க்கு அது நடுவுநிலைமையே! கோட்ட மன்றென அறிவுறுத்துவார் 'சார்ந்தடியார் தாந்தானுய்ச் செய்து பிறர்தங்கள் வினை தான் கொடுத்தல்' என வேறு படுத்துக் காட்டினுர். சார்ந்தடியார் தாந் தானுய்ச் செய்து பிறர்தங்கள் வினை தான் கொடுத்தல் உண்டென்பதூஉம், அது நடுவுநிலைமையே! கோட்டமன் றென்பதூஉம் வினைச் சமயத்தார்க்கும் உடம்பாடாகலின் அஃது ஈண்டைக்கு உவமையாயிற்று. உம்மை சிறப்பின்கண் வந்தது. சார்ந்த என்னும் பெயரெச்சம் ஈறு தொரிந்தது. தான்—முதல்வன். ஆதல் கொடுத்தல் என்புழி ஆனுருபு விகாரத்தாற் றொக்கது. ஆய் என்னும் வினையெச்சம் கொடுத்தல் என்னுங் தொழிற்பெயரோடு முடிந்தது. ஆய்க்து-நுணுகி. †"ஒய்த லாய்த னிழத்தல் சாஅயாவயி னுன்கு முள்ளத னுணுக்கம்." என்றுர் தொல்காப்பியனுரும். ஆர் வினைத் தொகை. பிராரத்தவினை சுருக்கும வினையாகலின் அது கூடும் முறைமை அறிதல் அரிதென்பார் 'ஆய்ந்தார்முன் செய்வினையும்' என்றுர். உம்மை இறந்ததுதழீஇயிற்று. ஆங்கு அதுபோல வென்க.

இதனுனே மேலே வெண்பாவின் முற்செய் வினையுந் தருவான் என்றது பற்றி ஆசங்கையை நீக்கியவாறு.

அற்றேல், இறைபணியி னிற்கும் ஞானிகட்கும் பிராரத்தவினை தாக்க ஈண்டெனச் சிவாகமங்களின் ஆண்டாண்டு ஓதுதலின் அவற்றைநீடு முராணி அஃது அவர்க்குத் தாக்கா தென்றல் அமையாமையின், அது தாக்கும்வழி ஆகாமிய வினையும் ஏறுதொழிதல் யாங்ஙனம் என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

* வல்லாத-மாட்டாத. † தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல். கூச.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்முன் மெய்ப்பொருளே
யாயவத னலுணரு மச்சு.

எனவரும.

தன்பால் வைத்து எடுக்கப்பட்டொழிந்த காயத்தினின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாத்திரத்தில் அவ்வாசம் மங்கிப் போய் மெலிதாய்க் கந்திக்குமாறுபோல நான் அவனென் றெண்ணிச் சிவோகம்பாவனை செய்தறியும் ஞானிக்கு நாடுமுளம் உண்டாதலுமுண்மையின் அதுபற்றி அவன்மாட்டுப். பிராரத்தவினையும் அதற் கிடனாகிய உடம்பு முதலிய மாயேயமும் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமாயினும் அவ்வழி எறுவதாகிய ஆகாமியவினை மேலிக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்குப் பற்றுக்கோடாகிய மாயேயத்தினோடுங் கெட்டொழியும். அந்த ஞானி பின்னர்ப் பகுத்துணர்வு மிறந்து ஏகனெனி இறைபணி நின்று. சத்தாயுள்ள சிவமே யாகிய வாற்றால், ஓரோவழி அவ்வாதனபற்றிப் பிறழினும் பிறழாவொட்டாத அவ்வச்சினையே உணர்ந்து நிற்ப னாகலா னென்க.

எனவே, ஒளி இருளைத் துரக்குமாறு போல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் துரக்கும் என்பதாம். உளி ஐந்தாம்வேற்றுமை உருபு; * "மரபுளி வழா."என்புழிப்போல. முற்றுகரங் கெடுதல் இலேசாற் கொள்க. உம்மை சிறப்பின்கண் வந்தது. மற்று வினைமாற்று. அவன்—மேற்கூறிப் போந்த ஞானி. தான் என்பது அதுவாதத முரை நின்றது. பிறழ விடாமைபற்றி மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ் செய்தார். இஃது இனவெதுகைத் தொடை.

இதனுற் கூறிப் போந்தது சிவாகமங்களில் ஆண்டாண்டு ஞானிகட்குப் பிராரத்தவினை தாக்கும் என்றது இங்குளி வாங்குங் கலத்தைப் போல வாதனை மாத்திரையாய் மெலிதாய்வந்து தாக்குமென்னுந் துணிபே யாகலின், அவ்வாறு வரும் பிராரத்த வாதனை நுகர்ச்சியின் வறும் ஆகாமியவினை, அவ்வுணர்வின் முன்னர்க் கெட்டொழிவதன்றிப் பிராரத்த நுகர்ச்சியினேனும் ஆகாமியம் போலப் பிறவிக்கு வித்தாய் நிலைபெறுமாறில்லை. என ஆசங்கை நீக்கிய வாறுமென்க.

அற்றேல், வாதனைபற்றிப் பெயர்ந்துழியும் நிலையிற் றிரியவொட்டாத அவ்வச்சினையே உணர்ந்து நிற்குமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை உவமைமுகத்தா னீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு.

எனவரும்.

* திருமுருகாற்றுப்படை, திருச்சீரலைவாய். கஅ-ம் அடி.

நண்ணனல் வேவாமைக் கேதுவாகிய அங்கித்தம்பனே வல்லார் அவ்வன லிற் குளிப்பினும் தந்திறலி னீங்காதவாறு போலவும், பண்ணுரை மாச் செலுத் துதற்குரிய பாகுநூல் கற்றுவல்லார் அப்பாப்மாவின் வேகத்துட் படினும் தந் திறலின் நீங்காதவாறு போலவும், ஐம்புலன்கள் தமக்கு வியாப்பியமாய் அடங் கத் தாம் அவற்றை வியாபித்து மேற்பட்டு நிற்கும் முறையை ஆராய்ந்து தாம் அரனடியாகிய அச்சிவனே இறைபணியி னின்றுணர வல்லோர் அவ்வைம்புல னிற் சென்றும் அதனுனே தந்திறல் நீங்குத லிலரென்க.

நள்ளனல் நண்ணனல் என மரீஇயிற்று; * "நீணுலகெலாம்." என்புழிப் போல. நண்ணனல் † "கீழ்நீர்." போல முன்பின்னுகத் தொக்க ஆறும்வேற்று மைத்தொகை. தம்மால் நண்ணப்படும் அனல் என்றுரைப்பினும் அமையும். பண்—பண்ணப்படுங் கதிகள். செலுத்துதல்—ஊர்தல். இன் உவமவுருபு. உம் மை எண்ணும்மை. சென்றும் உம்மை சிறப்பு. ஐம்புலன் உபலக்கணம். திறல் வெற்றிப்பாடு. அதற்கு என்பது உருபு மயக்கம்.

அற்றேல், அசத்தோடு சார்ந்தவழியும் சத்தோடு சார்ந்தவழியும் அது வதுவேயாய்ச் சதசத்தா மியல்புடைய ஆன்மாக்கள் ஐம்புலனுகிய அசத்தைச் சார்ந்தும் அவர் திறல் நீங்காமை யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி அதனே வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ராங்கு.

எனவரும்.

சத்தோடு கூடியவழிச் சத்தாயும் அசத்தோடு கூடியவழி அசத்தாயும் இவ்வாறு சதசத்தா மியல்புடைய தன்னுண்மை உணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் திருவருளா னல்ல தொன்றையுங் காணுனுயின் அவ்வழிப் பாசமா கிய அசத்தின் இதஞ்செய்த லின்மையாற் சத்தாகிய அம்முதல்வனேத் தலைப் படுவோர் சிற்றமிக் கெரியாநின்ற ஒளியின் முன் அந்தகாரம் போல அச்சத்தி னெதிர் தனது சத்தியை ஏற்கமாட்டாத அசத்தாகிய பாசத்தின்மாட்டு எய் துவாரல்லர் என்க.

வேறுமுடிபாகலின் ஒருமைப் பன்மை மயக்கமன்மை யுணர்க. அருளின் என்னும் ஐந்தாமுருபு ஏதுப் பொருட்கண் வந்தது. இதமித்தல் என்பது பெ யரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல்—பற்றுச் செய்தல். இன்றி இன் மையா னென்க. இன்மைக்கு ஏதுக் கூறுவார் 'கதமிக் கெரிகதிரின் முன்னிருள் போ லேலா வசத்து' என்றார். அசத்தைச் சார்ந்து அசத்தாய் நிற்றல் இயற் கையன்றென்பது ‡"ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ள—மென்று மகலா

* திருநாவுக்கரசுநாயனர்தேவாரம், கோயிற்குறுந்தொகை. ச. மாணிபால். † திருக் குறள், கூடா-ம் அதி. கள்ளுண்ணுமை. க. களித்தானே. ‡ திருவருட்பயன், இருண்மல நிலை. க.

திருள்." எனப் புடைநூலாசிரியர் ஓதியவாற்றானு மறிக. ஆக்கேலா அசத்தெனக் கூட்டுக. ஒப்புமை பற்றிக் கதமிக் கெரிகதிர் என்றார். ஒப்புமை யாதல் * "எல்லே யில்லவ னெரிதுள்ளி ஞலென வெகுண்டான்." என்பதனானும் அறிக.

இவ்வைந்து வெண்பாவானும் முறையே இறை பணியி னிற்பார்க்குப் பிராரத்தவினை முதல்வன் சந்நிதியில் உடலுழாய் ஒழிவதாகலின் மேலிக்கு வினை யேறுமா றில்லை என்றும், அது, செய்வோர்செய்திப் பயன் விளையுமாற்றாற் பெறப்படும் என்றும், செய்வோர்செய்திப் பயனன்றியும் விளைவது வாதனைமாத்திரையே யாகலான் அதுபற்றி வரும்வினை ஞானத்தா னழிவெய்தும் என்றும், அந்த ஞானம் வாதனை பற்றிச் சலிக்குமா றில்லை என்றும், அது சலியாமைக் கேது இது என்றும் எடுத்துக்காட்டி அஞ்ஞான கன்மம் பிரவேசியாமையை வலியுறுத்தவாறு காண்க. ஏகனுகி நிற்றலான் மலவாதனை இன்றாகலும், இறைபணி நிற்றலான் மாயா கன்மங்களின் வாதனை இன்றாகலும் பெறப்பட்டமையின், 'மலமாயை தன்னொடு வல்வினையின்மேற்' என்பதனை வேறொரு திகரணமாக வைத்து ஓதல் வேண்டா வாயிற்று. அற்றாயினும் அவ்வை இலவாதற்கண் உளதாகிய ஐயப்பாடு முதலாயின இறுதிச் சூத்திரத்தின் 'மும்மலங் கழீஇ' என்னும் அதிகரணத்துட் பெறப்படும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

பத்தாஞ்சூத்திர முடிந்தது.

பதினொராஞ்சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னையா வன்பி னரன்கழல் செலுமே.

எனவரும்.

எ-து. சூ-ம். எ-னின். பரமேசுரனது சிபாதங்களை யணையுமாறு உணர்த்துத லுதலிற்று.

ஆன்மலாபம் மேலைச்சூத்திரத்தின் 'இறைபணி வழுவாது நிற்க' என்றவழிச் †"சிவன்முதலே யன்றி முதலில்லை யென்றுஞ்-சிவனுடைய தென்னறிவு தென்றுஞ்-சிவனவன—தென்செயல தாகின்ற தென்று மிவையிற்றைத்—தன்செயலாக் கொள்ளாது." அவ்வாறு நிற்கும் ஆன்மாவினுடைய அறிவிச்சைசெயல்கள் அவ்விடத் தொன்றனை விடயிக்குமா றில்வழிப் புத்தர் கூறும்

* பெரியபுராணம், அமர்நீதிநாயனர்புராணம். உசு. நல்ல. † திருக்களிற்றுப்படியார். சுசை.

''ஆலய விஞ்ஞானம்.'' போலச் சூனியமாய் முடியுமால் என்னும் ஆசங்கையை நீக்கி அவற்றிற்கு விடயம் இது என்பது உணர்த்து முகத்தானே ஆன்மலாப மிரண்டினுள் முடிவாய் எஞ்சி நின்ற சிவப்பேறு கூறுமா றுணர்த்தி அதற்கு ஏதுக் கூறும் முகத்தானே ஏகனேகி அவ்வாறு நிற்புழிப் பெறப்படுஞ் சம்பந்தம் இது என்பது காட்டி மேற் கூறிப்போந்த பாச நீக்கத்துட் பெறப்படாது எஞ்சி நின்ற பிராரத்த வாசனையி னொழிபுங் கைமுதிகநியாயத்தான் உணர்த்துதல் பயனேனத்துள் இரண்டாம் பாதமாகிய பதினொஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

ஆசங்கை பற்றிய இயைபானே அதிகரணவியையும், ஆன்மலாபம் எனப்படும் பயனிரண்டினுள் பாசநீக்க முணர்த்திய பின்னர்ச் சிவப்பே றுணர்த்துதல் முறைமை யாகலின் அம்முறைமை பற்றிய இயைபானே ஒத்தியையும், *''ஏகனேகி யிறைபணி நிற்க' என்றவழி அவ்வாறு நிற்பித்தற்குரிய சம்பந்தம் என்னை? எனவும், *''மலமாயை தன்னெமு வல்வினை யின்றே' என்புழி வினை என்றது ஏற்புழிக் கோடலான் ஆகாமியவினையாகவே ஏனைப் பிராரத்தவாசனை கழியுமா றியங்ஙனம்? எனவும் அவாய் நிற்றலின் அவ்வவாய் நிலைபற்றிய இயைபானே பாதவியையும் பெறபட்டன.

அற்றேல், ஏகனேகி இறைபணி நின்றார்க்கு இனிச் செய்யக்கடவதொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சியாமாறு போலப் பசுத்துவ நீக்கமுஞ் சிவத்துவ விளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வன வாமாகலின் வேமுதல வேண்டாமையானும், வடமொழிச் சிவஞானபோதத்துட் சுவாதநுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ் சூத்திரத்துட் பாச நீக்கத்தோடு ஒருங்குவைத் தோதுதலானும், அதனை ஈண்டு வேறுவைத் தோதுதல் அமையுமா றென்னை? எனின், அறியாது கூறினாய்; ஏகனேகி யிறைபணி நிற்பது துரியநிலை எனப்படும் அருணிலையேயாகலின் ஆண்டு மலம்நீங்கியதுணையானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவ தன்றி அதீத நிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்க மெனப்படும் பரமசுகம் தோன்றுமையின் அது விளங்குதற்கு அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யாமை மாத்திரையான் அமையாமையின், வேறும் ஆண்டுச் செய்யக்கடவது உண்டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தில் ஒளிவிளக்கம் போலப் பசுத்துவ நீக்கத்தில் அருள்விளக்க மாத்திரை உடனிகழ்வதன்றி ஆனந்தவிளக்கம் உடனிகழாமையானும், அருள்விளக்கத்திற்கும் ஆனந்தவிளக்கத்திற்கும் தம்முள் வேறுபாடு முன்னர்க் காட்டப்படி மாகலானும், வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்தில் பாசகூயம் பண்ணுமாறு உணர்த்தியவழிப் பாசநீக்க மாத்திரையே முத்தி என்னுஞ் சமயத்தாரை மறுத்தற் பொருட்டுப் பாச நீக்கம் பெற்றோன் சுவாநுபூதி யுடையனுவன் எனப் பதினொஞ் சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந் துணையே செய்துகொண்டு சுவாநுபூதி நிகழ்ச்சிக்கண் ஒதற்பாலன வெல்லாம் பதினொஞ் சூத்திரத்தே கூறிப் போந்தமையின், ஒன்பதாஞ் சூத்திரத்தி லெடுத்துக்கொண்ட ஆன்மசுத்தி பண்ணுமாறு பத்தாஞ் சூத்திரத்திற் சென்று இயைந்து முடிவு பெற்றுற் போலப் பத்தாஞ் சூத்திரத்தில் எடுத்துக்கொண்ட சுவாநு

* இந்நூல். கo-ம் சூ.

பூதிநிலை பதிஞெராஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெற்றுதலென்ப தின் மலியாமைப் பொருட்டு ஆசிரியர், சுவாநுபூதிமாஞவன் என்பதனீ யும் அரன் கழல் செலும் எனப் பதிஞெராஞ் சூத்திரத்திற்றானே ஒருங்கு வைத் தோதினு ராகலின் அது மாறன்மையானும், அவ்வாறன்றி மொழி பெயர்த்தல் யாப்பான் நூல்செய் துரைப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய்து உரையார் ஆகலானும் என்பது.

இஃதறியாதார் பத்தாஞ் சூத்திரம் பாசகூயம் பண்ணுமா றுணர்த்திற் றெனவும், பதிஞெராஞ் சூத்திரம் பரமேசுரனது ஸ்ரீ பாதங்களே அணையுமா று உணர்த்திற்றெனவும், ஆசிரியர் தாமே கிளக்தெடுத் துரைத்த கருத்துரையும் நோக்காது, பத்தாஞ்சூத்திரத்தானே அதீத நிலையுங் கூறி மொழிந்தா ரெனக் கொண்டு பதிஞெராஞ் சூத்திரம் பன்னிரண்டாஞ் சூத்திரம் போலச் சிவன் முத்திநிலையின் நிகழும் அணைந்தோர் தன்மையே கூறிற்று மெனத் தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. அது போலியென் றொழிக. வடமொழிப்பத்தாஞ் சூத்திரத்துச் சுவாநுபூதிமா ஞவன் என்பதனீப் பதிஞெராஞ் சூத்திரத்துப் பத்திசெய்க என்றதன் பின்னுகக் கொண்டுகூட்டி வைத் துரைப்பீக அதன் கருத்தென்பது தெற்றென உணர்ந்துகொள்க; அஃது ஆண்டுக் கூறிய வாறு உணர்ந்து பத்தி செய்தவழி யன்றிப் பெறப்படாமையின். அஃதாமா று முன்னார்க் காட்டுதும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு. காட்டக் காண்பதாகிய கண்ணு க்கு உருவத்தைக் காணுமா று பிரிப்பின்றி உடங்கியைந்து நின்று அதற்கு அதனீக் காட்டித் தான் காண்கின்ற ஆன்மாவைப் போல, அறிவிக்க அறிவ தாகிய அவ்வான்மா விடயத்தை அறியுமா று,முதல்வன், பிரிப்பின்றி உடங்கி யைந்து நின்று அதற்கு அதனீ அறிவித்துத் தான் அறிந்து வருதலான், இவ்வா று அத்துவிதமாய் நின்று உதவி செய்துவரும் பெருங்கருணையை மற வாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும் என்றவாறு.

காணும் என்னும் உவமை யடையைப் பொருளினும் கண்டு என்னும் பொருள் வினையை உவமையினுங் கூட்டிக், காண என்பதனீ யிடத்துங் கூட் டிக், கண்டு காட்டல் என்பதனீ * "வேர்த்து வெருளார் விழுமியோர்." என் புழிப் போலக் காட்டிக் காண்டல் என மாறி வைத்து, உரைத்துக் கொள்க. அயராமைக்குச் செயப்படுபொருள் அதனீ என்று எடுத்துக்கொண்டு உரைக்க. அபரா வன்பு அபராமையாஞகிய அன்பு என "ஆறு சென்ற வெயர்." போல நின்றது. இக்கருத்தே பற்றி †"இத்தை–யாயுமறி வுடையஞ யன்பு செய்ய." என்றார் வழிநூலாசிரியரும். உள்ளத்தை என்பது உருபு மயக்கம். அறிவிச்சைசெயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் அரன்கழல் சேறலும் முறையே காரண காரியங்களாய் அவ்வொரு பொருண் மேல் ஒருங்கு நிகழும் என்பார் 'அயரா வன்பின் அரன்கழல் செலுமே' என்றார்.

* நாலடியார், தினமின்மை. ச. நேர்த்து. † சிவஞானசித்தி, சுக-ம் சூ. க. காய மொழிந்தாற்.

இஃது என்சொல்லியவாறே வெனின், ஆன்மாவை யின்றி அமையாத கண் ஒருருவத்தைக் காணுங்கால், ஆன்மபோதங், கண்ணொளி எனத் தான் என வேற்றுமை யின்றி உடனுய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டிய உருவத்தைக் கண் கண்டது என்றும் கண்ணை அதிட்டித்து நின்ற ஆன்மாக் கண்டது என்றும் பிரித்து அறியப்படுமா றின்றி இருவகைக் காட்சியும் ஒன்றனை யொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே நிகழும் முறைமை போல, முதல்வனை யின்றி அமையாத ஆன்மா ஒரு விடயத்தை அறியுங்கால், அம்முதல்வனது சிற்சத்தி, ஆன்ம சிற்சத்தி எனத் தான் என வேறின்றி உடனுய் விரவி நிற்ப, முதல்வனும் ஆன்மாவில் அவ்வாறு விரவி நின்று அறிவித்த விடயத்தை ஆன்மா அறிந்தது என்றும் ஆன்மாவை அதிட்டித்து நின்ற தான் அறிந்தான் என்றும் பிரித் தறியப்படுமா றின்றி, இருவகை யறிவும் ஒன்றனை யொன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விடயித்துச் செல்லுமாறு செய்து வரும் இவ்வுபகாரம் பெத்தம் முத்தி இரண்டினும் ஒரு பெற்றித்தாய் உண்மையின், ஏனையவற்றை யெல்லாங் கைவிட்டு முதல்வனிடத்து எகனுகி அவனருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யானுய் நின்ற ஆன்மா, முதல்வன் அவ்வாறு அத்துவிதமாய் உடனின்று கருணையான் உபகரித்து வரும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருளின்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூர்தலின் அவ்விச்சையே தானுக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப் பெறும், என மேற் கூறிய ஆசங்கையை நீக்கி அறிவிச்சைசெயல்கள் மூன்றும் இம்முறைமையான் அம்முதல்வனை ஒருங்கே விடயித்து நிற்குமாறு விளக்கி, அதிதகிலேயின் இயல்பு கூறியவாறு மென்க. இக்கருத்தே பற்றி * "அறிவொளிபோற் பிரிவருமத் துவிதம்." என்ஞர் புடைநூலாசிரியரும். அங்கியும் ஒன்றிற் றங்கிநின் றல்லது தன்மெழில் நடத்தாது ஆகலின், அது போல முதல்வனும், செய்யுந் தொழில் அனைத்தும் ஆன்மாவினிடத்துத் தங்கிநின்றே செய்வன் என்பது உணர்ந்துகொள்க.

இதனுள், 'காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்' எனவே அவ்விரண்டிற்கும் உளதாகிய சம்பந்தம் அத்துவிதம் என்பது பெறப்படுதலின், அதுவே 'அவனே தானே யாகிய வன்நெறி ஏகனுகி' நிற்றற்கண் உளதாகிய சம்பந்தம் என்பதூஉம், காட்டிக் காணும் எனவே கைமுதிக நியாயத்தான் முதல்வனையே விடயிக்கும் ஞானிக ருடம்பின் நிகழும் பிராரத்தம் முழுவதும் அவர்களிடமாய் நின்று முதல்வனே என்றுகொள்வன் ஆகலின் அவருக்கு அவ்வாதனை தாக்குமாறு இல்லை என்பதூஉம் பெறப்பட்டமையின், அவாய் நிலையை நிரப்பியவாறு மறிக. அத்துவித மாதல் இவ்வியல்பிற் றென்பது பொதுவதிகாரத் திறுதியில் விளங்கக் காட்டினும்; கடைப்பிடித்துக்கொள்க.

இவ்வாறன்றி, 'காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டல்'என்பதற்குக் காட்டிவரும் உபகாரம் உணர்த்துதலே கருத்து என்று உரைப்பாரு முளர்; அது, †'விளம்பிய வுள்ளத்து' என்னுஞ் சூத்திரத்துத் திரோதானசத்திய திலக்கணம் கூறும் முகத்தாற் கூறிப் போந்தமையின் அதுவே ஈண்டுக் கூறிற்றெனிற் கூறியதுகூறலாய் முடியும் ஆக

* சிவப்பிரகாசம், மங்கலவாழ்த்து எ. புறச்சமய. † இந்நூல், கூ-ம் சூ.

லானும், கண்ணழிந் துரைப்புழி 'அவனும் அவற்றது விடயத்தை யுணரும்' எனக் காணும்.உபகார மாத்திரையே எடுத்துக்கொண்டு உரைத்த ஆசிரியர்க்கு அது கருத்தன்று என்பது தெற்றென விளங்குதலானும், காணும் உபகாரங் காட்டும் உபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழும் என்பது உணர்ந்துகோடற்பொருட்டு அதுவும் உடன் கூறப்பட்ட தன்றி அதனுன் ஈண்டைக்கு ஆவதோர் பயன் வேறின்மையானும், அவர் உரைப்பன வெல்லாம் போலியென் றொழிக. அற்றேல், வடமொழிப் பதினொராஞ் சூத்திரத்திற் "காட்டுவான்" என்பது மாத்திரையே யன்றிக் காண்பான் என்பதும் உடன் கூறிற் றில்லையால் எனின், அற்றன்று, அறியாது கூறினுய்; ஆண்டுக் "காட்டுவானும்" என்ற உம்மை காண்பானுமாம் என எதிரதுதழீஇ நிற்றலிற் கூறுமையாண்டைய தென்க. அவ்வும்மைக்கு அப்பொருள் காணமாட்டாதார் பாடம் வேறுகக் கொண்டு ஓதுப.

இதனுள், காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல் காண வுள்ளத்தைக் காட்டிக் காண்டல் என்பது ஓதிகரணம்; அதனே அயரா வன்பி னான் கழல் செலுமே என்பது ஓதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரம் என்று உணர்க.

முதலதிகரணம்.

அவற்றுள், ஈசரவவிகாரவாதி முதலியோரை மறுத்து ஆன்மா ஒன்றனே விடயிக்குங்கால் முதல்வன் செய்யும் உபகாரங் கூறும்முகத்தானே அத்துவித நிலே உணர்த்துதற்கு எழுந்தது முதலதிகரணம்.

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

எனவரும்.

அவன்–முதல்வன். அவற்றது–ஆன்மாக்களது. ஆறுவது அறிதற் கிழமைக்கண் வந்தது * "அன்னபிறவும்" என்றதனுற் கொள்க. உம்மை ஆன்மா உணர்தலேயன்றி முதல்வனும் அதனே உணருமென இறந்ததுதழீஇயிற்று. விடயம் பெத்தத்திற் பிரபஞ்சமும் முத்தியிற் சிவமுமாம். ஆகவே முதல்வன் தன்னே யறிதலும் ஆன்மாவின் பொருட்டு ஆன்மாவிற் றங்கிநின் றறியுமென் பதாயிற்று.

அற்றேல், கண் சடமாகலானும் காண்டற்பயன் ஆன்மாவுக்கேயாகலானும் கண் காண்புழி ஆன்மாவும் உடனின்று காண்டல் பெறுதும்; கண்போல் ஆன்மா சடமன்மையானும், அறிதற்பயன் ஆன்மாவுக்கேயன்றி முதல்வனுக்கு இன்மையானும், முதல்வனும் அவற்றது விடயத்தை உடனின்றறியுமென் றற்குப் பிரமாண மின்று லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோணச் சாதித்தற்கெழுந்த எது;

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல். கக. இயற்கை.

இவ்வான்மாக்கள் அவ்வினையின்றி யமைந் தொன்றையும் விடயியா வாகலான்.

எனவரும்.

கண்ணெளிக்கு, விளக்கொளி, தன்னெதிங் கலந்து தன்னெதி கூடவுரு வத்தினுங் கலந்தாலன்றி அவ்வுருவத்தைக் காணும் முறைமை யின்மையின், அதுபோல அறிவித்தா லன்றி அறியுமியல் பில்லாத ஆன்மாக்களும், முதல்வன துணர்வு தம்மொடு விரவி நின்று தம்மோடு கூடச் சென்று விடயத்தும் விரவி நின்றுல் அறிவு விளங்கி அவ்விடயத்தை அறியு மியல்பின வன்றித் தனித் தமையவும்மாட்டா; தனித் தொன்றை விடயிக்கவும்மாட்டா. ஆக லான், அறிவு விளங்குதன் மாத்திரைக்கே யன்றி விடயத்திற் சென்று பற் றுதற்கண்ணும் முதல்வன் உடனிற்றல் பெறப்படுதலான் 'ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும்' என மேற்கொண்டது என்றவாறு.

அமைந்து விடயியா என்பது ''உரத்துத்தரியாது.'' என்றுற்போல வே றுவினையசய் நின்றமையின் இன்றி என்பது ஈரிடத்துங் கூட்டி உரைக்கப்பட் டது. அவ்வினையின்றி அமையாமையின் காட்டு முபகாரம் விளங்கினுற் போல அவ்வி யின்றி ஒன்றையும் விடயித்த லின்மையாற் காணுமுபகார மினிது விளங்கு மென்பார் 'அவ்வினையின்றி யமைந்தொன்றையும் விடயியா' என்றார். உம்மை முற்றும்மை. விடயியா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. இவ்வேதுப் பொருளையே எடுத்துக்கொண்டு வழிநூலாசிரியர்;

*''எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றனுஞ்—செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப—னிவ்வுயிர்க டோற்றும் போ தவ்வினையின்றித் தோற்று விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ னின்றிவ ணுத லானு மானடியை யகன்றுநிற்ப தெங் கேயாமே.''

என விரித்தோதியவாறு பற்றி யுணர்ந்து கொள்க.

இதனுள் எவ்விடத்தும் என்றது பெத்தம் முத்தி இரண்டினும் என்ற வாறு. அரனடியை அகன்று நிற்பது என்றது அரனடியை விட்டுத் தனித்து நின்றறிவது எங்கே! ஓரிடத்து மில்லை என்றவாறு. இறையடியை யின்றி அறிந்தொன்றை இயற்றியிடா வுயிர்கள் எனவும், ஈசன்ற னெங்குமாய்ச் செறிந்து நிற்ப னெனவுங் கூறியது விடயத்தினுட்படும் நிகழ்ச்சிக்கு எனவும், இவ்வுயிர்கள் தோற்றும்போது அவ்வினையின்றித் தோற்று எனவும் அவ் வுயிர்போ னின்றிவன் எனவுங் கூறியது ஆன்மாவினுட் படும் நிகழ்ச்சிக்கு எனவுங் கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற் கூறுதல் புனருக்தி யாய் முடியு மென்றுழிக. விளக்கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படும் என்பது †''விளக்கொளி கலந்த வற்றை.'' எனவும், †''விளக்கின்சோதி கலந்திடும்.'' எனவும் புடைநூலாசிரியர் வகுத்தோதியவாற்றுனும் அறிக.

* சிவஞானசித்தி, சுசுசூ-ம் சூ. எ. † சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. எ. கண்ணெளி.

அற்றேல், அஃதங்ஙனமாகப் பரமுத்தியில் ஆன்மாவுக்கு விடயமாவ தொன் றின்மையின் எவ்விடத்தும் அவற்றது விடயத்தை முதல்வ னுணரு மென்றல் செல்லாதா லெனின், அறியாதது கூறினும்;*"சுத்தவது போகத்தைத் துய்த்தலனு." எனவும், †"ஒன்றிநின் றுணரு முண்மை." எனவும், பிரண் டும் இவ்வாறே யோதுதலின் ஆன்மா பரமுத்தியிற் சிவானந்தானுபூதியை விடயித்த லுண்மையான், அதுவும் முதல்வனே யின்றி அமையாமையின் முதல் வனும் அவ்வநுபூதியை அவ்வான்மாவிற் றங்கிநின் றுணர்த்த லுண்மையின். இக்கருத்தேபற்றி யன்றே சில ஆகமங்களில் முதல்வனும் தன் ஆனந்தத்தை அநுபவிப்ப னென்று ஓதியதூஉ மென்க. ஆண்டு அநுபவிப்பன் என்பதற்குத் தாற்பரியம் அறிவன் என்பதேயாம்.

அக்கருத்தறியாத சிவாத்துவிதசைவர் முதலியோர் முதல்வனுந் தன்னு வந்தத்தை அநுபவிப்பனெனக் கூறுப.அழுந்தி யறிதலே அநுபவித்தல் என் னுஞ் சொற்குப் பொருளாகலின் அவ்வியல்பு ஆன்மாவுக்கே யன்றி முதல்வனு க்கில்லை என மேற் காட்டிப் போந்தமையானும், ஆனந்தரூபமே முதல்வனுக லிற் றானே தன்னைப் புதிதாக அநுபவித்தல் வேண்டாமையானும், முதல்வன் செய்யுஞ் செயலெல்லாந் தன்பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டேயாம் என்பது மேற் கூறிப்போந்தமையானும் அவர்மதம் போலியென் றொழிக.

அற்றேல், முதல்வன் காட்டுதன் மாந்திரையா னமையுமாயினன்றே ‡'காந்தங் கண்ட பசாசத் தவையே' என்றவாறே விகாரமெய்தாமை பெறு தும், அவ்வளவினன்றி ஆன்மாக்களுட னின்று அவற்றோ டொப்பக் காண்ட லுஞ் செய்யுமாயின், ஆன்மாக்கள் போலக் ¶கட்டுற்று விகாரியாவான் சேறல் ஒருதலையாமால் என்னும் ஆசங்கையை நீக்கி வதுவை வலியுறுத்துதற்கு எடுத் துக் காட்டும் உதாரணம்;

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றுன்றுப் பார்த்துணர்வ தூள்ளமே யெவ்வுலகு
மொன்றுன்றுப் பார்க்கு முணர்ந்து.

எனவரும்.

ஆன்மா §"சுவையொளி யூறோசை நாற்றம்." என்னும் ஐவகை விட யங்களே உணரும் உணர்ச்சிக்கண்ணே தன்னியல்பு இது என வேறு காணப்படு மாறின்றி அவ்வவ்விடயங்களே போல அதுவதுவாய்ச் செறிந்துநின் றறியும் இயல்பிற் றாகலான், அவ்வைந்து மொருங்கே அறியமாட்டாது ஓரோவொன் றாக அறிந்து அநுபவிப்பது ஆன்மாவேயாம். அது போலச் சதசத்தாய்ப் பல தன்மைப்படும் இயல்பின்றி என்றும் ஒருபெற்றித்தாகிய பரம்பொருள் எல் லாவான்மாக்களுடைய விடயங்களையும் ஏகமாய் ஒருங்கே பொதுவகையான்

* உண்மைவிளக்கம், கூ0. முத்திதனின். † சிவப்பிரகாசம், க0-ம் சூ. அ. ஒன்றி ரண். ‡ இந்நூல், ங-ம் சூ. விளம்பிய. ¶ கட்டுற்று-பந்தமுற்று. § திருக்குறள், ஊ-ம் அதி. நீத்தார்பெருமை. எ.

அறிந்து அவ்வான்மாக்களுட னின்று சிறப்புவகையான் அறியும்; ஆகலான் உடனின்றறிதலே பற்றி ஆன்மாப் போலப் பரம்பொருள், விகாரியாவான் சேறலின்றென்பது.

ஆகலான் உடனின்றறிதலேபற்றி ஆன்மாப் போலப் பரம்பொருள் விகாரியாவான் சேற லின்றென்பது குறிப்பெச்சம். இது சொற்பொருட்பின்வருநிலை. உணராத உணர்வது என இயையும். அவற்றுணர்வது எனச்*"சாரியையுள்வழித்தன்னுருபு." நிலையாது வந்தது இலேசாற் கொள்க. உணர்வ தென்றதுதொழிற்பெயர்மாத்திரையாய் நின்றது; †"உறங்குவது போலும்." என்றாற்போல. ‡"வினைசெய்யிடத்தில்." வரும் ஏழாவது விரித்துரைக்க.

அற்றேல், ஈண்டுக் கூறிய முறைமைபற்றி ஆன்மாக்களுக்கு விடயமாவதொன்றனையே முதல்வன் சுவிகற்பமாய் உணர்வ னன்றி ஏனையவற்றை அவ்வாறுணர்வா னல்லனெனின், மேல் இறைபணி அதிகரணத்தில் ¶'முற்செய்வினை யுந்தருவான் முன்' என்றது சாலாதாய் முடியும்; அன்றிச் சீவன்முத்தருக்குப் பிராரத்தவினை தாக்காது உடலுழாய் ஒழியும் எனவும், ஒரோவழித் தாக்கினும் வாதனையாய் நொய்தின் வந்து தாக்குதன்மாத்திரையேயாம் எனவும் கூறுதலின், அது தருவான் முன்னதற்கு ஓரியைபில்லையால்; என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

ஏகமாய் நின்றே யினையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினுன்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணுனு னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனே வுற்று.

எனவரும்.

முதல்வன் திருவடிகளில் நானென ஒன்றில்லென்று தானே எனவேகமாகி நின்றுகொண்டே பிராரத்தவினைக் கீடாக வரும்விடயத்தை உணர்வாராயின், அதுதான் அச்சீவன்முத்தர்க்கு வினைப்பயனுதலின்றிச் சிவபோகமாய் விளைகின்ற பொலிவானே அவ்வாறு உணர்வாரா லுணரப்படும் விடயத்தை அவ்வுணர்வி னிடத்தாற் பொருந்தி அறிந்து தனக்காக்கிக் கொள்ளான் கொல்லோ! பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் அவ்வறிவின்கண் நீங்காது உடனின்று உணர்த்தியும் உணர்ந்தும் வரும் அம்முதல்வன் என்க.

ஏகமாய் உள்ளத்தின் கண்ணுனன் உள்குவா ருள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணுனே என்க. இசை எச்சத்தால் அவ்வாறுரைக்கப்பட்டது. நில்லாதுணர்தலைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இணையடிகள் என்புழிக் கண்ணுருபு தொக்கது; §"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்—

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு. கஞ. மெல்லெழுத்து; இதில் மெய்பெற என்றது இலேசு. † திருக்குறள், கூசூ-ம் அதி. நிலையாமை. கூ. ‡ தொல் காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல். உ0. ஏழாகுவதே. ¶ இந்நூல், க0-ம் சூ. உ-ம் அதி. க. நாமல்ல. § தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல். உஉ.

மெய்யுருபு தொகாஅ விறுதியான." என்ப ஆகலின். உணர என்னுஞ் செய வெனெச்சம் ''முழைபெய்யக் குளநிறையும்." என்புழிப்போலக் காரணப் பொ ருட்டாய் நின்றது. தெளிவுபற்றி விளிந்த என இறந்தகாலத்தாற் கூறினர். 'விளிந்த பொற்பினன்' என்றமையிற் போகஞ் சிவபோக மாதல் பெற்றும். *''செயற்கைப் பொருளே ஆக்கமொடு கூறல்." †''ஆக்கந் தானே காரண முத றே." என்ப வாகலின் ஆக்கமுங் காரணமு மடித்து வந்தன. ஆணவம்-நீங்கா மை. ஓகாரம் எதிர்மறை.

இஃது இவ்வதிகாணப் பொருள்பற்றி ‡'முற்செய்வினை யுந்தருவான் முன்' என மேற் கூறிப் போந்ததன்கண் ஆசங்கை நிகழாமைப் பொருட்டு அதனை வலியுறுத்துதற்கு எழுந்த தென்பது. இணையடிகளில் எகமாய் நின்று கண்டதோர் பொருளே அந்தக் கருத்தினுற் காண்பார்க்கு அது சிவபோக மாய் விளையுமென்பது¶''பெற்றசிற் றின்பமே பேரின்பமாம்."எனவும், §''உட ம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப—மடங்கத்தம் பேரின்பத் தாக்கில்." எனவும், o''காணுங் காரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்–பேணு மடியார்." எனவும் பிறண்டும் இவ்வாறே ஓதியவாற்று ணுணர்க.

இனி, இவ்வெண்பாவிற்கு ஒன்றெனப்படும் ஆன்மா எகமாய் நின்று இணை யடிகளை உணரவே போகமாய் விளிந்த பொற்பை யுடையான் அதுவேயு மன்றி ஆன்மாவுக்குக் கண்ணெனப்படும் அறிவு மாயினுன் ஆகலான் அம்முதல்வன் உள்குவா ருள்கிற்றை யுள்ளத்தாற் காணுளே என்றுரைப்பாரு முளர். அஃது அதிகரணத் தெடுத்துக்கொண்ட பொருளோ டியையாது வெற்றெனத் தொ டுத்தலாய் முடியும் என்பது உணர்ந்துகொள்க.

இவ்வதிகரணத்தாற் போந்த பொருள், **'அவையே தானே யாய்' என முதல்வன் தூல ஐந்தொழில் செய்யுமா றுணர்த்து முகத்தானும், ††'தாந்தமு ணர்வின் றமியருள்' என அதிருக்கும ஐந்தொழில் செய்யுமா றுணர்த்து முக த்தானும் பொதுவகையாற் பெறப்பட்ட அத்துவித நிலையை அவ்வதிருக்கும வைந்தொழிற்கட் படும் விசேடத்தின்மேலிட்டுச் சிறப்புவகையாற் பெறுவிக் குமுகத்தானே பெத்தம் முத்தி இரண்டினும் ஆன்மாக்களுக்கு வரும் பயனை முதல்வனே உடனுப் நின்று என்று கொண்டு அவரவர் செய்புஞ் செய்திகு குத்தக்க பயன் விளைத்து நிற்பன் என்பது விளக்கிய வாறுமென்க. இஃதாகிரி யர் தாமே வருகின்ற அதிகரணத்தில் விளக்குகின்றவாறு பற்றியும் உணர்ந்து கொள்க. எனவே, பெத்தர்க்கு வரும் பயனும் உடனுப் நின்று என்றுகொள் ளும் முதல்வன் உடல்பொருளாவி முழுவதும் அவனுடைமை எனக்கொ ண்டு தானஞ்செய் தொழித்துப் ‡‡''பரமே பார்த்திருப்ப." ரன்றிப்‡‡''பதா ர்த்தங்கள் பாரார்." ஆகிய சீவன்முத்தருடம்பு கொண்ட விணைப்பயன் ஒரு வாற்றானும் அவர்க்குத் தமதாதல் செல்லாமையின் எவ்வாற்றானும் முதல்வன தேயா மென்பது கூறுமே விளங்கும் என மேற்பெறப்படாது எஞ்சிநின்றபிரா

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம். உ0. † மேற்படி. உக. ‡ இந் நூல், க0-ம் சூ. உ-ம் அதி. க. நாமல்ல. ¶ திருவுந்தியார். கூ. § திருக்களிற்றுப்படி யார். எசு. o திருவாசகம், பண்டாயநான்மறை. சு. ** இந்நூல் உ-ம் சூ. †† இந் நூல், இ-ம் சூ. விளம்பிய. ‡‡ சிவஞானசித்தி, ககம் சூ. உ. பரஞானத்தாற்.

ரத்தவிணைத் தொடர்பு அவர்க்கின்றுமாறு கைமுதிகநியாயத்தால் விளக்கிய தூஉமாயிற்று. பெத்தர்க்கு வரும் விணைப்பயனும் முதல்வனேஉடனுய்கின்று என்றுகொள்வ ஞகலானன்றே *"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே–மாதொரு பாகனர்தாம் வருவர்." எனவும் †"அங்குநாஞ் செய்யுஞ் செய்திக் காணைவைப் பாலளிப்பன்." எனவும் ‡"அறிவா யறிகின்றுன் றூனே." எனவும் இவ்வா றோதியதூஉம் உலகத்து ளொன்றனே ஈவாரும் ஏற்பாரும் சிவார்ப்பணம் எனக் கருதாதவழிக் குற்றமென்று ஆகமங்கள் கூறிய தூஉமென்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்தின் எனைச் சமயத்தாரை எல்லாம் மறுத்துச் சித்தாந்த முத்தியை நிலைபெறுத்துஞ் சுத்தாத்துவித நிலையை உணர்த்தியவழி அதனுலதனைப் பெறுமாறு யாங்ஙனம்? என்னும் அவாய்நிலையை நிரப்பி ஆன்மலாப மிரண்டனுள் எஞ்சி நின்ற சிவப்பேறு கூடுமாறு உணர்த்துதற் கெழுந்தது இரண்டாமதிகரணம்.

இனிப் பத்தியினுன் மறவா தேத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

எனவரும்.

இதன்பொருள் சூத்திரத்தி லுரைத்தவாறு பற்றிக் கண்டு கொள்க.

அறிவிச்சைசெயல்கள் மூன்றும் ஒருங்கே உடனுய் நிகழும் இயல்பின் கண் எவ்வா றுரைப்பினும் அமையுமாயினும், முதற்கணிகழும் முறைமையே ஈண்டு எடுத்துக்கோடலின் அதற்கேற்பச் சூத்திரத்து ளுரைத்தவாறே ஈண்டும் மறவாது பத்தியினு லேத்த என்றுரைத்தலே கருத்தாகக் கொள்க. ஏத்துதல் ஈண்டு அருள் வழி நிற்றன்மேற்று. அன்பு பத்தி என்பன இச்சை மீதூர்தற்பொருள வாகலின், அது பரமுத்தியினும் உண்டென்பது உணராதார் பத்தியாவது சீவன் முத்திநிலைக்கே செய்யப்படும் ஒரு சாதகமாபோலும் என மயங்கிக்கொண்டு தமக்கு வேண்டியவாறே உரைப்பர். பரமுத்தி நிலைக்கண் இச்சை நிகழாதவழிச் சிவபோக மநுபவமாதல் செல்லாமையாலும், சீவன்முத்தி நிலைக்கே கூறுவ தொன்றுயிற் ¶'செம்மலர் நோன்றுள்' என்னுஞ் சூத்திரத் தொருங்குவைத் தோதாதவே அமையுமாகலிற் சூத்திரம் வேறு செய்யவேண்டாமையின் அஃது ஆசிரியர் கருத்தன்மையானும் அது பொருந்தாமை அறிக.

அற்றேல், ஒருபொருளை அறிந்த மாத்திரையே அதன்கண் இச்சை நிகழுமாறுபோல இச்சை நிகழ்ந்தமாத்திரையே அதனைப் பெறுதலுங் கூடுமென்பது உலகத் தின்மையால் ஈண்டுப் பத்திமாத்திரையாற் சீபாதத்தை

* சிவஞானசித்தி, உ-ம் சூ. உஇ. † மேற்படி. உசு. இங்குநாஞ். ‡ பதினெராந்திருமுறை, காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி. உ0. ¶ இத்தூல், கஉ-ம் சூ.

அணையப்பெறுமாறு யாங்ஙனம்? என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்குக் 'தண்டு காட்டலின்' என மேலை அதிகரணத்திற் கூறிப்போந்த தன் தாற்பரியம் விளக்குவான் எழுந்த எது;

அவன் அந்நியமின்றிச் செய்வோர் செய்திப் பயன்வீளத்து * நிற்றலான்.

எனவரும்.

அம்முதல்வன் உலகத்தார் போலன்றிப் பெத்தம் முத்தி இரண்டினும் அத்துவிதமாய் உடனின்றுகொண்டு யார் யார் யாது செய்கின்று என்று அறிந்து அவரவர்க்கு அவ்வச் செய்திக்குத் தக்க பயனை அவ்வப் பொழுதே விளைவிப்ப னாகலால் 'இனிப் பத்தியினன் மறவாதேத்த அவனது பாதத்தை அணையும்' என மேற்கொண்டது என்றவாறு.

அற்றேல், முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினுக் கிரிபின்றி ஒருபெற் றித்தாகிய அத்துவிதமாய் நின்று உபகரிப்பனுயின் யாதானு மொருவாற் றுற் பசு பாசம் போலப் பெத்த நிலையினும் முதல்வன் புலனுகல் வேண்டுமா லென்னும் ஆசங்கையை நீக்கி வதுவை வலியுறுத்து முகத்தான் 'அயாணமை' எனப்படும் அறிவு விளங்கும் முறைமை உணர்த்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

**அருக்கனோர் நீற்பினு மல்லிருளே காணுக்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணும்
பாசத்தை நீக்கும் பகலவர்த்துந் தாமபையோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.**

எனவரும்.

படலவிசேடத்தான் ஒளி மழுங்கிய கண்ணிடத்தும் அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும் வேற்றுமை யின்றி ஆதித்தன் சமமாய் நின்றுலும் அவ்வாதித்தன் ஒளிமழுங்கிக் காட்சி யில்லாத கண்ணுக்கு மாலையிருட்டா யத்தோன்றுவ னன்றி ஒளி விளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறுபோலவிளங் கித் தோன்றுன்; அதுபோல, முதல்வன் பெத்தர் மாட்டும் முத்தர் மாட்டும் அத்துவிதமாய் ஒப்ப நின்றுலும் பாசத்தானுகிய வகலாத அறிவுடைய பெத் தர்க்குப் பாசனுனமையாய்த் தோன்றுவன். அப்பாசப் பிணிப்புக்கு வதுவா கிய அபக்குவம் நீங்கித் தனது திருவருட்பார்வையாற் பத்தியெய்து தன்னை அறிதற்குரிய பக்குவ முடையராயினர்க்குப் பாசத்தானுகிய அவ்வகலாத அ றிவை மாற்றிப் பூரணவறிவு விரியச்செய்து அவரெதிரே விளங்கித் தோன் றுவன். தனது கிரணந் தின்றிப் பக்குவ மெய்திய தாமரைமலருக்கு முன்னு ளதாகிய கூம்புதலை மாற்றித் தண்போல் ஆயிர மிதழும் அலரச் செய்யும் ஆயி ரங் கதிர்ப் பரிதி போல என்க.

பொருள் வினையை உவமையினும் உவம வினையைப் பொருளினுங் கூட்டி உரைக்க. விகாரம் பிரிநிலை. தேற்றமெனினு மமையும். அல்லும்

* நிற்கு மாலோன் என்னும் பாடம்.

காணுரும் பாசமும் பகலும் ஆகுமபயர். தன்னுணர்ந்தார் எனக் காரணத்தைக் காரிய மாக உபசரித்தார். தோன்றுவன் என்பது சொல்லெச்சம்.

இதனானே முதல்வன் பெத்தம் முத்தி இரண்டினும் ஒப்ப நிற்பினும் ஒப்பவிளங்காமை உவமைமேல் வைத்துணர்த்தும் முகத்தானே ஆன்மாவுக்கு முத்திநிலையின் அறிவு நிகழுமாறும் அது முதல்வனது அறிவாகிய அருட்கண்ணே யின்றி அமையாமையும் கூறப்பட்டன.

இனி இவ்வாறு பக்குவப்படுத்திப் பாசத்தை நீக்கி அறிவை அலர்த்துவதாகிய அருட்கண் புதுவதாய் ஒருகாலத்தின் நிகழ்ந்தொழிவ தன்றென அதனது உபகார முணர்த்தும் முகத்தானே 'அன்பு' எனப்படும் இச்சை விளங்கும் முறைமை கூறுதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனை மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் ரூன்.

எனவரும்.

கண்ணின்கண் நிலைபெற்றுளதாகிய இருளைப் பிறைமதி உடனுப் நின்று முறைமுறையா னுந்தித் தள்ளியவாறு போல, ஆன்மாவைத் தனது திருவடிக்கண் சேர்த்துக்கோடற் குளதாகிய இச்சை மிருதியான் அவ்வான்மாவின்கண் அநாதிமுதல் அத்துவிதமாய் நிலைபெறும் முதல்வன்ரூனை அவ்வான்மாவின்கண் நிலைபெற்ற ஆணவமலத்தை உந்தித் தள்ளிக், காந்தக்கல் இரும்பைத் தன்கண் ஈர்த்துக்கொண்டு தன் வசமாய்ப் பற்றச் செய்தல் போலத் தனது திருவடிக்கட் சேர்த்துத் தன்வசமாய்ப் பற்றிக்கொண்டு நிற்கும்படி பண்ணுதல் அவனுக்கு ஒரு ஞான்றுஞ் சலித்தொழிதலில்லை. அவ்வாறு சலியாது செய்யுமாயினும் அதனால் விகாரியாவா னல்லன்; எல்லாத்தொழிலுந் தனது சந்நிதிக்கட் சத்தி சங்கற்ப மாத்திரையாய்ப் *பரமின்றி விளையாட்டுப் போலச் செய்யும் அம்முதல்வன் என்க.

மதி என்றது ஈண்டுப் பூருவபக்கத்துச் சந்திரனை. †"அந்த வருளுனக் கிங் காதார மாயல்லே—லிந்து வெனவெறித் திட்டு." என்பது மது. வகாரம் மலத்தைத் துரத்துதற்குக் காரணம் அவ்வன்பெனப்படும் இச்சையே யன்றிப் பிறிதில்லை என்ப துணர்த்தி நிற்றலிற் பிரிநிலை. ‡வான் பான் பாற்கு என்பன தொழிற்பெயர் விகுதியுமா மென்பது ¶"கரப்பாக் கறிந்து." என் பதனு னுணர்க. உவம வருபு விரித்துரைக்க. செய்வானது சலிப்பின்மை

* "சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின்—மூன்னவன் வினையாட் டென்று மொழிதலு மாம்." எனவும், "காத்தும் படைத்துங் காந்தும் வினையாடி." எனவும், எழுந்த திருவாக்குக்களும் இதனே வலியுறுத்தவாறு காண்க. ஈண்டு வினையாட்டு என்றது ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தனுக்கு வினையாட்டு என்பதுபோல அத்துணை எளிதிற் செய்யப்படுதலை நோக்கி. பரம் - பாரம். † துகளறுபோதம், நூல். கூ. ‡ வான் தொழிற்பெயர்விகுதியுமாதலை "பரந்தபெரும் பாற்கடலிற் பள்ளிகொள்வா னெழிந்து." என்பதனு னுணர்க. ¶ திருக்குறள், ககூ-ம் அதி. காமற்சிறப்புரைத்தல். எ. கண்ணுள்ளார்.

செய்கைமே லேற்றப்பட்டது. சலிப்பிலென்றது பற்றி அங்ஙனம் நிகழ்வதாகிய ஆசங்கையை நீக்குதற்கு விகாரியலன் என்பதும் உடனேதினர். தானென்னு மெழுவாய் இசையெச்சமாகலின் அவ்வாறுரைக்கப்பட்டது. வசமாதல்–பற்றிவிடாமை.

இதனானே, முத்தி நிலையின் ஆன்மாவினது அன்பு நிகழுமாறும் அது முதல்வனது அன்பை யின்றி அமையாமையும் கூறப்பட்டன.

இனி, அவ்வாறு வசமாதற்கட் படும் ஆசங்கையை நீக்கும் முகத்தானே 'சேறல்' எனப்படும் ஆன்மாவினது கிரியை நிகழும் முறைமை உணர்த்தி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்.

எனவரும்.

மேலை வெண்பாக்க ளிரண்டினும் கூறியவாறே பூரண வறிவு விளங்கி ஆன்மா முதல்வன் வசமாய் ஒன்றுபட்டுக் கூடுங்காற் பண்டை ஏகதேசவறிவு கெட்டுக் கூடுமோ? கெடாது கூடுமோ? எனக் கடாயினார்க்குக், கெட்டுக் கூடுமெனின், குணங் கெடவே குணியுங் கெடுதலாற் கூடமாட்டாது. கெடாது கூடுமெனின், ஏகதேசவறிவு கெடாதவழி வியாபகப்பொருள் விளங்குதலின் மையாற் கூடுமாறில்லை. மற்றெங்ஙனம் கூடுமாறெனின், ஏகதேச வறிவைச் செய்யும் ஆணவங் கன்மம் மாயை என்னும் மலங்கண்மாத்திரையே கெட்டொழிய ஆன்மா தண்ணீரைச் சேர்ந்த உப்புப் போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு முதல்வனுக்குச் சேடமாம் முதல்வன் திருவடி அவ்வான்மாவை விட்டுக் கவர்த்தலின்றி இயைந்துநிற்கு மாகலானென்க.

ஒன்றாது என்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. நசித் தகணங்தெ பது காரண காரியப் பொருட்டாய்ப் பிறவினை கோடலிற் செயவெ னெச்சத்திரிபாதலறிக. *"'கிற்றறிவு முற்சிதையிற் சேர்வாரின் முஞ்சிறிது—மற்றதனினிற்கினருண் மன்னுதாம்." எனப் புடைநூலாசிரியர் விளையது மது. தன்கண்ணதாகிய கடினகுணம் நீங்கி அப்பினைச் சேர்ந் தொன்றாகிய உப்பு, ஆன்மா மலம் நசித்து முதல்வனைச் சேர்ந்து ஒன்றுபடுதன்மாத்திரைக்கு உவமையாயிற்று. யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடமெனப்படு மாகலின், அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யானுய்க் கப்பின்றி யியைந்து நிற்கு மீசன் கழலேயே அறிந்து இச்சித் ததுபவித்தலாகிய முதல்வனது வழிபாட்டின் பொருட்டு உரிமை யெய்திய ஆன்மா முதல்வனுக்குச் சேடமாகிய வாறுணர்க. † 'அவையுடைமை யாளாகா மங்கு' என ஒதுதலின் ஏனைப் பசுபாசங்களும் முதல்வனுக்குச் சேடமேயா மாயினும் அவை பொதுவியல்பு பற்றிய சேட

* வினவெண்பா. சூ. † இந்நூல், உ-ம் சூ. ச-ம் அதி. க. எங்கு.

மாவதல்லது சிறப்பியல்பு பற்றிய சேடம் ஆகாமையின் இதனை வேறெடுத் தோதினார்.

இதனானே முத்திநிலையின் ஆன்மாவினது கிரியை நிகழுமாறும், அது முதல்வனது கிரியையை இன்றி அமையாமையும் கூறப்பட்டன.

நித்தமாகிய மலத்திற்கு நாசமாமாறும், அது நசித்தவழி ஏகதேசமாய் விளங்கிய அறிவே பூரணமாய் விளங்கி வியாபகத்தைத் தலைப்படுமாறும் உவமையின்மேல் வைத்து இனிது விளக்கி மேலதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

பொன்வாண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

எனவரும்.

ஆதித்தன் முன்பு முகிற்படலத்தான் மறைந்து தனது ஒளி *சங்கோசமாய்ச் சிறிதே விளங்கிப் பின்பு அம் முகிற்படலத்தை வாயுத் தூரப்ப அதனான் அது சத்தி மடங்கி விட்டுநீங்கியவழி அவ்வொளி தானே எங்கணும் †விகாசமுமாய் விளங்கும் முறைமை போல ஆன்மாவும் முன்பு மலத்தின் மறைப்புண்டு தன்னறிவு ஏகதேசமாய்ச் சிறிதே விளங்கிப் பிரபஞ்ச விடயத்தை அறிந்து அதில் அழுந்தும். பின்பு முதல்வன் திருவருள் அம்மலசத்தியைக் கெடுத் தடக்கியவழி அவ்வறிவே பூரணமாய் விளங்கிக் கப்பின்றி அம்முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு அந்த ஞேயத்தில் அழுந்துமென்க.

ஒடுங்கி எனவும் எங்குமாம் எனவும் உவமைக் கோதிய விடையைப் பொருளினுங் கூட்டி உரைத்துக் கொள்க. இது விளங்குதன்மாத்திரைக்கு ஏகதேச உவமை என்பார் உலகை யுண்ணும் வரத்துச் செல்லும் என வேற்றுமையும் உடன் கூறினார். எகாரம் தேற்றம். முன் வாள் என்பழி வாள் ஆகுபெயர். இரித்தென்பது செயவெனெச்சத்திரிபு. இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. மலம் நசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன்மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற் பெறுதும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

பதினொராஞ்சூத்திர முடிந்தது.

---

* சங்கோசம்-சுருங்கம். † விகாசம்-விரிவு.

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

செம்மலர் தோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலித்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

எனவரும்.

எ-து. சூ-ம். எ-னின். அநித்திதனுய்ப் நின்ற பதியைச் சிந்திதனுய்க் கண்டு வழிபடுமாறு உணர்த்துத லுதலிற்று.

மேற் கூறிப்போந்தவாறே *'அயரா வன்பி னரன் கழல்' அணைந்த முத்தர்க்குச் சிவன்முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சாசெயல்கள் ஒரோவழிப் புறத்துச் சேறலு முண்மையின் அவை செல்லுமிடம் இவை என்பது உணர்த்து முகத்தானே வாக்குமனுதீதமாய் அயரா வன்பின் அணைந்து வழிபட நின்ற முதல்வனே வாக்குமனக் கோசரமாம்படி தெளியக் கண்டு வழிபடும் முறைமையை உணர்த்துதல் பயனுத்தின் மூன்றும் பாதமாகிய இப் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்தென்க.

'அயரா வன்பி னரன் கழல்' சென்றூர்க்குச் சிவன்முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் மூன்றும் புறத்தீத எல்லாறு வியாபரிக்கும் என்னும் அவாய் நிலையை நிரப்புதலின் அவ்வவாய்நிலை பற்றிய இயைபாமே அதிகரணவியையும், முத்திநிலையைத் தலைப்பட்ட மெய்ஞ்ஞானிகட்கு ஈண்டுச் செய்யக்கடவதொன் றில்லை எனச் சமயிகள் கூறும் ஆசங்கையை விதிமுகத்தானுரைத்து மறுத்தலின் அவ்வாசங்கைபற்றிய இயைபாமே பாதவியையும், மேல் முத்திநிலையி னியல்பு கூறி ஈண்டுச் சிவன்முத்தி நிலைக்கட் படும் விசேடங் கூறுதல் முறைமையாகலின் அம்முறைமை பற்றிய இயைபாமே ஒத்தியையும் பெறப்பட்டன.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு.'அயரா வன்பி னரன் கழல்' அணைந்த சிவன்முத்தன், செங்கமலமலர் போல விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை அணைதற்கு உடம்படாது அபர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை ஞான நீராற் கழுவித் தன்னைப்போல் அயரா வன்பின் அரன்கழலடைந்த மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி, அவ்வாறு கழுவப்பட்டு மலமயக்கு நீங்க அன்பரொடு மரீஇ அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான் என்றவாறு.

சிவன்முத்தன் என்றது ஏற்புழிக்கோடலாற் பெறுதும்.

தோன்றாள் விணைத்தொகை. தோன்றல்–பொறுத்தல். †"எடுத்துச் சுமப் பானை." என்றூர் புடைநூலாசிரியரும். கழீஇ என்பது குறிப்புருவகம். மாலற

* இந்நூல். ககரம் சூ. காணுங். † திருவருட்பயன், உயிர்விளக்கம். (இ). கிடைக்கத்.

நேயமலிந்தவர் என்பது அம்மலங் கழீஇ யன்பொடு மீயிஇனர் எனப் பொருடந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது. நேயமலிதல் கூறவே வழிபாடும் பெறப்படும். தான் அசை. 'அம்மலங்கழீஇ' என்றதனாற் சீவன்முத்தர்க்குப் புறத்தே அறிவு வியாபரிக்கு மிடமும், 'அன்பொடு மீஇ' என்றதனால் இச்சை வியாபரிக்கு மிடமும், 'தொழும்' என்றதனாற் செயல்வியாபரிக்கு மிடமும் பெறப்பட்டமையான் அவாய்நிலை நிரப்பியவாறு கண்டுகொள்க. இம் மூன்றும் பிரிப்பின்றி உடனிகழ்ச்சியாய் ஓரிடத் தொருங்கு நிகழ்வன வாகலின் விடய வேற்றுமை யின்மையு முணர்க. தொழும் என்பது செலும் என்பது போலப் படர்க்கைவினைமுற்றுகலின் இஃது அணைந்தோரது தன்மை என்பது பெற்றும். அற்றுகளினன்றே! இதணைச் சாதகமோவாத்துள் வையாது ஈண்டு வைத்தார் என்பது. செல்வப் பெருக்க முடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்பு நோயின்றி வளரச் செய்யும் மருந்துமாமாறு போல, இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்காது சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யுஞ் சாதக மாதலும் உண்மையான் அது பற்றி ஆசிரியர் விரித்துரைத்தலுஞ் செய்தாரென்க.

இதனுள், செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ என்பது ஓரதிகரணம்; அன்பொடு மீஇ என்பது ஓரதிகணம்; மாறா நேய மலிந்தவர் வேடமு மாலயந் தானும் அரனெனைத் தொழுமே என்பது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென் றுணர்க.

மூதலதிகரணம்.

அவற்றுள், சிவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யக்கடவது இது என்பது உணர்த்து முகத்தானே அவரது அறிவு புறம்பே வியாபரித்தலும் உண்மையின் அது வியாபரிக்குங்கால் எங்ஙனம் வியாபரிக்கும்? என்னும் அவாய்நிலையை நிரப்புதற்கு எழுந்தது முதலதிகரணம்.

ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக என்றது.

எனவரும்.

கன்மம் அதன் மூலத்தை நோக்கிக் கான்மியம் எனவும் பெயர் பெறும். காமியம் எனப் பாட மோதி *"இனிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லீடிப்பன்." என வழிநூலாசிரியர் ஒதுதலின் ஈண்டு மலமாயைகளோடு வைத்துக் களைய நின்றது ஆகாமியவினை மாத்திரையே யாகலான் அதுவே ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட தாகலின் காமியம் என்பது தலைக்குறை என்றுரைப்பாரு முளர்.

அற்றேல், ஏகனாகி யிறைபணி நின்று உண்மை ஞானத்தைத் தலைப்பட்டார்க்கு மலமாயைதன்னொடு வல்வினையு மின்றுய்க் கழிந்தொழிதலின் அவற்றுன் மீளச் செய்யக்கடவதொன் றின்மையான் ஈண்டு அவற்றைக் களைதல்

* சிவஞானசித்தி, அ-ம் சூ. கo. மூன்றுதிறத்.

எற்றுக்கு? என்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதிக்குமாறு சூத்திரத்தில் உடம்பொடுபுணர்த்தோதியதனைத் தெரித்துணர்த்தி வலியுறுத்துதற் கெழுந்த வது;

அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்து மாகலான்.

எனவரும்.

அம் மூன்று மலங்களும் உண்மைஞானத்தைத் தலைப்பட்டார் மாட்டும் யாதானும் ஒரு நெறியா னுழைந்து அம் மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய அப்பண்டை விபரீத வுணர்வை மேற்படுத்துவனவா மாகலான் அஃது அவர்க் காகாமையின் 'ஈண்டு ஆணவ மாயா கான்மியம் என்னும் மலங்களைக் களைக' என மேற்கொண்டது என்றவாறு.

*உணர்த்துதல்—உணர்விற்கே துவாதல். *''அங்கியமா னவையுணர்த்தி யாங்கியமாய் நிறைந்த வறிவறியா மையிஞானும்." என்புழியு மது. ஈண்டு அஞ்ஞானம் என்றது விபரீத வுணர்வை.*

இனி, அவை யஞ்ஞானத்திற் கேதுவாய் வந்து நுழையுமாறும் அஃதவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி வதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

எனவரும்.

புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்துகின்ற இக்கன்ம மலமும், மண் முதல் மாயாதத்துவ மீறாய்க் காணப்படுகின்ற இம்மாயா மலமும், சுட்டி அறிவதாகிய விபரீத வுணர்வைப் பயக்கும் இவ்வாணவ மலமும் என்னும மும்மலங்களும் மெய்ஞ்ஞானியாகிய உனக்காகா வாகலான் இவற்றை விடுத்தொழிக என்க.

எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மற்றுண்மை ஞானத்தைத் தலைப்பட்டார்க்கு உடம்புள்ளளவும் பிராரத்தவினை அவ்வுடம்பை யொட்டி நிற்றலான் அஃது அவர்க்கு ஒரோவழி வாதனைவயத்தால் இங்குளிவாங்குங் கலம் போல வந்து நாக்குங்காற் †"பிற்செயா தநுபவிப்பது." இன்றுகளின் அது சார்பாக விருப்பு வெறுப்புக்க ளுளவாம்; அவை உளவாகவே ‡"பரமேபார்த்திருப்பார்"க்கு நிலம் முதன் மாயாதத்துவ மீறுகிய வகதேசப் பொருள் காட்சிப்படும். அவை காட்சிப்படவே, அவற்றைச் சுட்டி அறிவதாகிய விபரீத உணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறு இம்மூன்றும் அறிவற்றம் பார்த்து இம்முறையானே வந்து தலைப்ப

* சிவபிரகாசம், பொது. உ-ம் சூ. கஅ. † சிவஞானசித்தி, உ-ம் சூ. கக. முற்செயல் ‡ மேற்படி, கஉ-ம் சூ உ. பரஞானத்தாற்.

மும் என்பார் கன்ம மாயை யாணவம் என்று இம்முறையே வைத்து அவை காட்சிப்புலனுமாறு காட்டுவார் அவ்வக் காரிய நிகழ்ச்சிகளே எடுத்தோதிச் சுட்டிக் கூறினர். ஆணவ கன்மங்களைச் சுட்டிக் கூறுதலின் மாயையினும் அவ்வாறு சுட்டு வருவித்துரைத்துக் கொள்க. புண்ணியபாவம் ஆகுபெயர். மாயை முன்னியது தத்துவம். ஈரிடத்தும் ஆக்கச் சொல் வருவித்துரைக்க. காண் மாயை செயப்படுபொருளோடு முடிந்த வினைத்தொகை. காட்டுதல் உபசாரம். இவை சிவபோகப் பெருவாழ்வை இழப்பிப்பன வாகலான் 'மெய்ஞ்ஞானிக் காகா' என்றார். மேன்மேன் முறுகுவனவாகிய இவற்றைத் தோன்றும் பொழுதே துடையாக்கால் *"'கனைகுரல்–கைகொல்லுங் காழ்த்த விடத்து." என்னும் முறைமைத்தாய் முடியும் என்பது பற்றி 'விடு' என ஈண்டும் வலியுறுத்தப்பட்டது. விடுதல் அவை அம்முறையான் நிகழ்ந்தவழி இவ்வஞ்ஞானம் ஏகதேசக் காட்சியா ஞயதெனவும், இவ் வேகதேசக்காட்சி வீருப்பு வெறுப்புக்களது தோற்றத்தா ஞயதெனவும், அத்தோற்றமும் பிரார த்தவினை நுகர்ச்சிக்கட் சென்ற தற்போதத்தா ஞயதெனவும் அறிந்து, அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துள்ளடங்கிச் †"சிவானுபவஞ் சுவானுபூதிகமாம்" படி ஞானநிலையில் உறைத்து நிற்றல். ‡ "ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்—தூங்குவர்மற் றேதுண்டு சொல்." என்றது மது.

அஃதங்ஙனமாக, ஏதுவின்கண் மும்மலங்களும் அஞ்ஞானத்தை உணர்த்துமெனக் கூறி, ஈண்டு ஆணவமாத்திரையே அஞ்ஞானங் காட்டு மென்றல் மலவாமா லெனின், அற்றன்று; அஞ்ஞானங் காட்டுதல் மாயை கன்மங்கட்கு ஆணவமலச் சார்வாகிய செயற்கை, ஆணவமலத்திற் கஃது இயற்கை, என்னும் பொதுச்சிறப்பாமா றுணர்த்துதற்கு ஆண்டுப் பொதுவகையாற் கூறிப் போந்ததனை ஈண்டுச் சிறந்தெடுத் தோதினாகலான் என்பது.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்திற் கூறியவாறு மும்மலங்களையும் களைந்தார்க்கு அதனை நிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவது இது வென்ப துணர்த்தும் முகத்தானே அவரதிச்சை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கும்? என்னும் அவாய்நிலையை நிரப்புதற் கெழுந்தது இரண்டாம் அதிகரணம்.

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக என்றது.

எனவரும்.

சிவபத்தராவார் "பத்தியினுன் மறவா தேத்தி" முதலியனது சீபாதத்தை அணைந்தோர். இணங்குதல்–கட்புச்செய்தல். சிவபத்தர்களோ டிணங்குக எனவே, வினையார்களோ டிணங்கற்க என்பதுமும் பெறப்பட்டது.

* திருக்குறள், அஅ-ம் அதி. பகைத்திறந்தெரிதல். க. இளைதாக. † சிவஞானசித்தி, அ-ம் சூ. ஊச. இங்நிலைதா. ‡ திருவருட்பயன், அணைந்தோர்தன்மை. க.

அற்றேல், உறவும் பகையும் ஒழித்து மகவெனப் பல்லுயி ரணைத்தையும் ஒக்கப் பார்க்குஞ் செல்வக் கடவுட்டொண்டர்க்கு இவ்வாறு சிலர்மாட்டு விருப்பும் சிலர்மாட்டு வெறுப்பும் செய்துகொண்டு பகுத்து நிற்றல் சால்பின்மை யென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கு எழுந்த எது;

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவ ராகலான்.

எனவரும்.

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துமாறு:— *"தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறுதம் மாயைக டொடங்கினை—வாக்த மானு ரயவர் கூடி—நாத்திகம் பேசி நாத்தமும் பேறினர்—சுற்ற மென்னுந் தொல் பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்—ஸ்ரத மேமப மாக வேதியருஞ்—சாத மாகவே சாத்திரங் காட்டினர்—சமய வாதிக டத்த மதங் களை—யமைவ தாக வாற்றி மலிந்தனர்." என்றற் றொடக்கத்தா னறிக. மும்மலங்கள் அஞ்ஞானத்தை உணர்த்துதல் இலச்சுவாய்த்தழி வதுவாதன் மாத்திரையே யாம். இவ்வாறன்றி வாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை உபாயங்களானுந் தம்மோடு ஒப்ப விபரித ஞானத்திலே செலுத்தியே விடுவராகலான், சிவபத்தி இல்லாதார் அம்மலங்களினும் கொடியராகலின் அவரை அவற்றினும் அஞ்சி விட்டொழிதலே அறிவுடைமைக்குச் சால்பென்பதாம்.

மகவெனப் பல்லுயி ரணைத்தையும் ஒக்கப் பார்த்தலாவது—அவைபடுந் நன்பங் கண்டுழி அதற்குப் பரிதன்மாத்திரையேயாம். †"நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்." என்றதும் இக்கருத்தே நோக்கி யன்க.

அற்றேல், சிவபத்தி இல்லாதாரோ டிணங்காமைமாத்திரையே அமையும்; சிவபத்தர்களோ டிணங்குதல் எற்றுக்கு? என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

மறப்பித்துத் தம்மை ‡மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னுணருமெய்த்
தவரை மேவா வினை.

எனவரும்.

மும்மலங்களும் நிங்கி முதல்வன் அத்துவிதமாய் நின்று காட்டியும் கண்டும் உபகரித்துவரும் பெருங்கருணையை மறவாது கடைப்பிடிக்கும் ஞானக் கண்ணுடைய மெய்த்தவராயினர் அதனை மறக்குமாறு செய்து ஞானக்கண்ணை இழப்பித்துத் நீநெறிக்கட் கொண்டுசென்று மலங்களாணை பிறவிக் குழியில் வீழ்வித்துத் துயருறுத்தும் அன்பில்லார் கூற்றிலே தொன்றுதொட்டுப்

* திருவாசகம், போற்றித்திருவகவல். நான்முகன். † திருமந்திரம். திருமூலர் வரலாறு. கூ. ‡ மலங்களில் வீழ்த்தும் என்னும் பாடம்.

பயின்றுவந்த சேர்ச்சி அறும்படி, அம்மறவியை மாற்றி ஞானக்கண் விளக்கிப் பிறவிக் குழியினின்றும் எடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தர் கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்குவதாகிய சிவஞானக்கண்ணுல் அந்நிலை கடைப்பிடித்து உணரப்பெற்றவரை எல்லா அகர்த்தங்கட்கும் மூலமாய் வரும் பிரகாரத்தவினை வாதியா என்க.

'மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ் சிறப்பிலார்' எனமேற்சொல்லிய பொருளேயே அநுவதித்து விதித்தோதினுர் அதன் எதிர்மறைமுகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை உணர்ந்துகோடற் பயனெனக்கி. மலங்களில் வீழ்க்கும் என்பது குறிப்பெச்சம். மலம் ஆகுபெயர். எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அது சிறப்பெனப்பட்டது. சேர்வை–சேர்ச்சி. பத்தரினத்துப் பித்தாய் என மாறுக. பித்துப் போறலிற் பித்தென்றுர். அஃது அதனை யுடையார்மேனின்றது. ஏனைத் தவங்களெல்லாம் மெய்பதலின்றி மலநடையாய்ப் போதலிற் பாணுணர்வினு ணுணருந் தவமொன்றே மெய்த்தவ மெனப்பட்டது. வினை–பால்பகாவஃறிணைப்பெயர். சிவபத்தர்மாட் டன்புசெய்து அவரது மனஞ்சொற் செய்கைவழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவானுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும்; அஃது அங்ஙனம் நிகழவே, உடம்பு உள்ளளவும் நிற்பனவாய பிரகாரத்தவினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் அவரை வாதிக்கமாட்டா; அவை வாதியா தொழியவே, சிறப்பிலார்தந் திறத்துச் சேர்வை பற்றறக் கழியும் என்பார், அறப்பித்துப் பத்தரினத்தாய்ப் பாணுணர்வி ணுணருரு மெய்த்தவரை மேவா வினை' என்றுர். எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோ டிணங்கினு லன்றித் தொன்றுதொட்டுப் பயின்று வந்த சிறப்பிலார தினைக்கம் அறுதலாகலான் அஃதொருதலையான் வேண்டும் என வலியுறுத்தவா முயிற்று.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றுமதிகரணம்.

இரண்டாமதிகரணத்திற் கூறிய வாறு சிவஞானிகளோ டிணங்கினுற்கு அதன் பின்னர்ச் செய்யக்கடவது இது வென்ப துணர்த்தும் முகத்தான் அவரது கிரியை வியாபரிக்குங்கால் யாங்ஙனம் வியாபரிக்கும்? என்னும் அவாய் நிலையை நிரப்புதற் கெழுந்தது மூன்றுமதிகரணம்.

இனி பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக என்றது.

எனவரும்.

காண்டல்–ஊறுறவின்றித் தெளிதல் திருவேடத்தி னியல்பு *"தூய வெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்—நாயகன் சேவடி தை வரு சிந்தையு நைந்துருகிப்—பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதி

* பெரியபுராணம், திருநாவுக்கரசுநாயனர்புராணம். கசo.

தச்செஞ்சொன்—மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் விதியுள்ளே." *"கிந்தையிடையுருவன்புக் திருமேனி தனிலசையுங்—கந்தைமிகை யாங் கருத்துங் கையுமுவா ரப்பட்டையும்—வந்திழிகண் ணீர்மழையும் வடிவுபொலி திருநீறு—மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய." *"கண்டகவுணியக்கன்றுங் கருத்திற்பரவு மெய்க்காதற்—றெண்டர்திரு வேடகேரே தோன்றியதென் றுதொழுதே." என்பவற்றுனறிக. இத் திருவேடம் காமக்கிழத்தியர்வடிவிற் காணப்படும் ஆடை சாத்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல, மெய்யுணர் வுடையாரைக் காட்சி மாத்திரையானே வசீகரித்து இன்பஞ் செய்தல் பற்றித் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் என்று உபசரித்தார். அது †"சேலுங் கயலுங் திகிலக்குங் கண்ணிளைங்தொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணி மார்பிலங் குமென்று புண்ணியர் போற்றிசைப்ப." என்பதனுனும் அறிக.

அற்றேல், மெய்யுணர் வுடையார்க்குப் பகுப்பின்றி எங்கணும் பரமேசுரன் எனக் காண்டலே பொருத்த முடைமையானும், ‡நின்றதிருத்தாண்டகம் முதலியவற்றுள் அவ்வா றோதுதலானும், திருவுருத்திரத்துட் பகுப்பின்றி உயிர்ப்பொரு ளுயிரில் பொருள்களே யெல்லாந் தனித்தனி எடுத்தோதி ¶வழிபாடு கூறுதலானும், ஈண்டு இவ்விடங்களின் மாத்திரையே பரமேசுரன் எனக்கண்டு வழிபடுக எனப் பிரித்துக் கூறியது பொருந்தாதா லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற்கு எழுந்த வது;

அவன் மற்றிவ் விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாதவிடத் தப்பிரகாசமாய் நிற்றலான்.

எனவரும்.

அம் முதல்வன் எங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்து மாத்திரையே தயிரினெய் போல வெளங்கி நிலைபெற்று அல்லுழிப் பாலினெய் போல வெளிப்படாது நிற்றலான் 'இனிப் பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக' என மேற்கொண்டது என்றவாறு.

மற்று அப்பிரகாசமாய் நிற்றல் என இயையும்.

அற்றேல், அஃது யாங்ஙனம்? என்னு மாசங்கையை நீக்கிப் பிரகாசமாய் நிற்குமாறும் அல்லாதாரிடத்து அப்பிரகாசமாய் நிற்குமாறுந் தெரித் துணர்த்தி எதுவை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

---

* பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்திகாயனூர்புராணம். உஎ0. உஎக. †சேக்கிழார் திருப்பல்லாண்டு. அ. ‡நின்றதிருத்தாண்டகம் சிவபெருமான் எழுந்தருளி னின்றது இத்தன்மைத்து என்னும் திருத்தாண்டகம்; அஃது "இருநிலனுய்த் தீயாகி." என்பதை முதலாகவுடைய பொதுத்திருப்பதிகம். முதலிய என்றது திருவலிவலத் திருத்தாண்டகம், திருப்பாசூர்த் திருத்தாண்டகம், திருக்கச்சியேகம்பத் திருத்தாண்டகம் முதலியவற்றை. ¶ இதனைத் திருவுருத்திரம் உ-ம் அதுவாகம் முதலியவற்றுட் காண்க.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றும் பதி.

எனவரும்.

வாக்கு மனாதீதமாய் நின்ற பரம்பொருள் உலகத்தார் தன்னை அறியும் படி கருணை செய்து தனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்து அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குதலானும், அவர் தம்மைச் சோகம்பாவனையான் உணரச் செய்தலானும், அவரை ஒரு குறியினுள் நிறுத்தித் தனது வியாபகத்துக் குள்ளாக இருத்துதலானும், குறியிறந்து நின்று தன்னை உள்ளவா றுணரும் அன்பளராகிய அவர்மாட்டுத் தயிரின்கண்ணதாகிய நெய்போல விளங்கித் தோன்றும். பாசக்கட்டு உடையார்க்கு இவ்வியல் பில்லாமையான் அவர் மாட்டுப் பாலின்கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்கும் என்க.

இன்மை விளங்காமைப் பொருட்டு. பாசத்தார்க் கென்பது உருபு மயக்கம். கொடுத்துச் செய்து இருத்தலால் நிகழும் என இயையும். செய் தென்பது சொல்லெச்சம். இருத்தல் அல்லீற்றுப் பிறவினைத் தொழிற் பெயர். தன்னுணரும் நேசத்தரெனப் பேரடையாலு மோரேதுக் கூறப்பட்டது. தன்னை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

அற்றேல், இவ்வியல்புகளுடைய சங்கம வேடத்தினிடத்து எஞ்ஞான்றும் முதல்வன் பிரகாசமாய் நிற்ப னென்பது பெறப்படும். இவ்வியல்புகளில்லாத *தாவரத்தினிடத்து மந்திர சாந்நித்திய மில்வழிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படாதா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றுலன் றுனதுவாய்த் தோன்றுலே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

எனவரும்.

†விறகிற்றீ, கடைந்துழி வேறாய் விளங்கும்; அல்லுழி விளங்குவதன்று. அதுபோல, உயிர்கட்குப் புத்தி முத்தி அளித்தற் பொருட்டுக் காணப்பட்ட தாவரத்தின் அருவுருவின்கட் கலப்பினுல் அதுவே தானுய் அதுவன்றி வேறு பொருளுமா மியல்புடைய முதல்வன், அதுவே தானுய்க் காணர்க்குத் தம்மால் அறியப்பட்டதொரு மந்திர சாந்நித்திய மில்வழி ஆண்டு விளங்காது நின்று அம்மந்திரசாந்நித்தியத்தால் விளங்கித் தோன்றும் பொருளாம். அவ்

* தாவரம் என்றது சிவலிங்கத்தை. † இதனை "விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்—மறைய நின்றுளன் மாமணிச் சோதியா—னுறவு கோனட் டுணர்வு கயிற்றினுன்—முறுக வாங்கிக் கடையுமன் னிற்குமே." என்னுந் தேவாரத்தானு முணர்க.

வாறன்றி அதுவே தானுய்க் காணப்பெறும் உண்மைத் தவமுடையார்க்கு எப்போதும் அப்படியே விளங்கித்தோன்றுன் கொல்லோ! என்க.

காணுதார்க் கென்பது சொல்லெச்சம். கடைந்துழி அல்லுழி யென்பன ஆற்றலாற் பெற்றும். உவமைக் கோதிய விணையைப் பொருட்கண் எதிர் நிரனிறையாக வைத்துக் கண்டுகொள்க. ஈண்டு உண்மை விளங்குதன் மேற்று. மந்திரத்தா னுளதா மென இயையும். ஆல் அசை. ஆனன் என்பது பெயர். ஓகாரம் எதிர் மறை. தானதுவா யன்ருனன் என்னும் பெயரடையான் அவரவர் பாவனைக் கேற்ப விளங்குதற்கு எதுக் கூறப்பட்டது. தானதுவா யன்ருதல் சங்கம வேடத்தினுமொக்கு மேனும் தாவர வுருவின்கணிகழும் ஆசங்கையை இதனு னன்றி நீக்க லாகாமையின் ஈண்டுக் கூறினர். இஃது ஈரிடத்தது மொக்குமென்பது வருகின்ற அதிகரணத்திற் பெறப்படும்.

மூன்ருமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

மேலை அதிகரணம் மூன்ருனுஞ் சீவன்முத்தர்க் குரிய ஆசார முணர்த்தியவழி, அற்றேல், இவை சீவன்முத்தர்க்குத் தாமே உளவாவனவாய இலக்கண மாகலின் அநுவாத முகத்தா னேதற்பாலன வாகிய இவற்றை, கனிக, இணங்குக, வழிபடுக, என்று இங்ஙனம் விதிமுகத்தா னேதிய தெற்றுக்கு? என்னும் ஆசங்கையை நீக்குதற்கு அவற்ற தொழிபா யெழுந்தது நாலாமதிகரணம்.

இனி இவ்விடங்களின் வழிபடுக என்றது.

எனவரும்.

இவ்விடங்களாவன:—பத்தரது திருவேடமும் சிவாலயமும் என மேற்கூறிப் போந்தன. வழிபடுக என்னும் இசை யெச்சத்தால் அநுவாதமாய்க் கூற வமையு மென்பாரை மறுத்து விதித்தலே வலியுறுத்தவாறு. வழிபடுக என்பது உபலக்கணமாகலிற் கனிதல் இணங்குதல்கட்கும் இஃது ஒக்கும்.

அற்றேல், எய்தியதனை விதித்தல் பயனுடைத்தன்ரு லென்னும் ஆசங்கையை நீக்கி மேற்கோளைச் சாதித்தற் கெழுந்த வது;

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

எனவரும்.

நரம்பு நாடி இறைச்சி என்பு முதலிய தாதுக்களின்கண் வேற்றுமையின்றி அதுவது தானுய் வருகின்ற உயிர், *'நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ' என்று இவ்வாறு †'பைமறியாப்' பார்ப்பார்க்கு நரம்பு நாடி முதலியவை யாகாது அவற்றின் வேறுமாயினுற் போல, உயிர்க் குயிராகிய

* இந்நூல், கூ-ம் சூ. க-ம் அதி. க. † நாலடியார், தூய்தன்மை. உ. தோற்போர்வை.

அம் முதல்வனும் சடசித்துக்க ளெல்லாவற்றினும் அதுவது தானும் அல்ல னும் நிற்ப னாகலான், அதுவது தானுய் நிற்றலைக் காணுங் காட்சி பற்றி எய் திய வழிபாடு அல்லனுய் நிற்றலைக் காணுங்கா லெய்தாமையின் அவ்வழியும் எய்துவிக்க வேண்டுதலான் 'இனி இவ்விடங்களின் வழிபடுக' என விதித்தோ திய தென்றவாறு.

எனவே, எய்தாததனை எய்துவிப்பதூஉம், எய்திய திகந்துபடாமைக்காப் பதூஉம், எய்தியதனை ஒருமருங்கு மறுப்பதூஉம் ஆகிய விதி மூன்றனுள் இஃது எய்திய திகந்துபடாமைக் காத்த தென்றவாறாயிற்று. இது விளங்கு தற் பொருட்டன்றே ஆசிரியர் 'இவ்விடங்களின் வழிபடுக' என ஈண்டு இட மாகவைத் தோதியதூஉ மென்க. 'அவை யாகாவா றப்புருடனுமாம்' எனவே அவ்விடத் தெய்துவித்தல் ஒருதலையான் வேண்டு மென்பது தாற்பரிய மாயி ற்று. சூத்திரத்தில் 'தொழுமே' என்னும் ஏகாரமும் இப்பொருள் குறித்து நின்ற தேற்றம். வாறு உவமவுருபு. முதலானவற்றை என்பது உருபு மயக்கம்.

அற்றேல், முதல்வனுக்கு இவ்வியல்பு எல்லாப் பொருட்கண்ணு முண் மையின் யாங்கனும் வழிபாடு விதித்தலே பொருத்த முடைத்தென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

அதுவிது வென்ற தறிவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பொதுவதனி
லத்துவித மாத லகண்டமுந் தானவமே
யத்துவிதி யன்பிற் றொழு.

எனவரும்.

முதல்வன் சடசித்துக்கண் மாட்டு நிற்கும் நிலைமை அறியப் பெற்றார்க் குக் கண் அருக்கன் போல அது இதுவெனப் *பக்கிசைத் தோதப்படுவதாய பேத நிலைமையனு மல்லனுய், உடல் உயிர்போல அதுவே என்றோதப்படுவதாய அபேத நிலைமையனு மல்லனுய்க், குண குணி போல அதுவே இது என்று பக் கிசையாமல் ஓதப்படுவதாய பேதாபேத நிலைமையனு மல்லனுய், அம்மூன்றற் கும் பொதுமையான் அறிவொளிபோ லத்துவிதமாய் நிற்கு மாற்றுற் சடசித் துக்கண் முழுவதும் அத்தேவனது வடிவேயா மாயினும், அவற்றுள், அன்பு வினையுமிடத்தில் வழிபடுவாயாக; அவ்வத்துவித சித்தாந்தத்தைப் பெற்று டையோய்! என்க.

அதுவிது என்பது முன்னையது உம்மைத் தொகை. பின்னையது இருபெ யரொட்டுப் பண்புத்தொகை. அல்லானென்பதனை மேலுங் கூட்டி என்றது என் பதனை அது என்பதனோடுங் கூட்டி உரைக்க. அல்லான் என்பது வினையெச் சக்குறிப்புமுற்று. என்றதை என்பது †''ஐயீற்றுடைக் குற்றுகரம்.'' உம்மை இறந்ததழீஇயிற்று. பொதுவதென்புழி அது பகுதிப்பொருள்விகுதி. ஆதல் ஆயவாற்று னென்க. தானவ மென்பது தேவனதுடைமை என்னும் பொ

* பக்கிசைத்தல் - பிரிந்திசைத்தல். † இதனை ''ஐயீற் றுடைக்குற் றுகரமு முனவே.'' என்பதனு னுணர்க.

ருட்டாய வடமொழிப் பெயர்ப் பகுபதம். ஆயினும் என்பது சொல்லெச்சம். அத்துவிதி அண்மைவிளி. அன்பென்றது ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க. *''திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி.'' யினன்றி *''எங்கு-முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவ'' தாகி அடிப்பட்டு வரும் அன்பு வினையாமையின், ஆண்டுச் செய்யும் வழி பாடே அத்துவிதஞானத்தை நிலைபெறுத்துதற் பயத்த தென்பார் 'அத்துவித மாத லகண்டமுந் தைவமே' என்று அநுவதித்து 'அத்துவிதி யன்பிற் றொழு' என்றார். அத்துவிதி என்பது பயனுணர நின்ற குறிப்புப் பெயர். இத னானே விதிக்குப் பயன் கூறியதுமாயிற்று. இனி அதுவிது என்பன அருவு ருவாகிய திருமேனி எனக் கொண்டு அதற்கியைய உரைப்பாரு முளர். அவர் அன்பின் என்றதனை ஏதுப் பொருட்கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெய ராகவைத்து உரைப்ப.

அற்றேல், இவ் வத்துவித ஞானம் அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்றுகண் டொருவுதலான் உளதாம் பயனுகலின் அதன்பொரு ட்டு வழிபாடு வேறு விதித்தல் மிகையாமா லென்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

வினையா லசத்து வினைதலான் ஞானம்
வினைதீரி னன்றி வினையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவேயது நிகழு
மானத்தா லன்பிற் றொழு.

எனவரும்.

உடம்பின் கண்ணதாகிய பிராரத்த வாசனை யுயிர்க்குக் காக்குவதாயுள்ள வளவும் அதனானே வரும் விருப்பு வெறுப்புக்களும் அவை பற்றிக் காட்சிப்பி டும் மண் முதன் மாயைகளும் அவை பற்றி நிகழும் விபரீத வுணர்வும் ஆகிய அசத்துக்க ளொருவியவழியும் வந்துகூடி மேற்படுவன வாகலான், இவற் றிற் கெல்லாம் மூலமாகிய பிராரத்தவினைவாதனை பற்றறக் கழிந்தா லன்றி அத்துவித ஞானம் மேம்பட்டு நிகழாதாகலின், அது பற்றறக் கழிதற்பொ ருட்டு அம்மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடலே அவ்வினைத்தீர்வு நிகழ் ந்து அவ்வுணர்வு மேம்படும். ஆகலான் அன்பானே அவரை வழிபடுவாயாக என்க.

அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்தென்று கண்டவழி உளதாய் நிற்கும் ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ்வசத்தினது விளைவுக்கு வேராய வினைத்தீர்வின்கண்ணதாகலான், ஆண்டளதாய் நின்ற மெய்யுணர்வை அவ்வி னைவேரறுத்து நிலைபெறுத்துதற்பொருட்டு அங்ஙனம் அதனை நிலைபெறுத்தி னர்மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படும் என்றவாரு யிற்று.

அற்றேல், அவ்வாதனை நீங்கி மெய்யுணர்வு நிலைபெறுதலும் ஸ்ரீபஞ்சாக் கரத்தை விதிப்படி உச்சரிக்கவே உளதா மென்பது அஞ்செழுத் ததிகரணத்

* சிவஞானசித்தி, சூ-ம் சூ. ச.

தில் ஒதியவாற்றானும் *"பக்தமா னவைய றுத்துப் பௌதிக முழலு மெல் லேச்—சந்தியா தொழியா திங்குத் தன்மைபோல் வினையுஞ் சூரு—மந்தமா திகளில் லாத வஞ்செழுத் தருளி னாலே—வந்தவா றுரைசெய் வாரை வாதியா பேதி யாவே." எனப் புடைநூலாசிரியர் கூறியவாற்றானும் பெறப்படுதலின் அதற்கு அதுவே அமையுமால் எனின், அஃதொக்கும்; அவ்வுச்சரிப்பும் வழிபடுதலே யின்றி அமையா தென்பது விதிப்படி உச்சரிக்க என்ற துணையா னெழியா தென்பது, †'அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை'யின் *'அஞ்செ ழுத்தா லர்ச்சித்து' என ஆசிரியர் தாமே அகத்து வழிபாடு கூறியவாற்றாற் பெறப்படுதலின் வழிபாடும் அதற்கு ஒருதலையான் வேண்டப்படும் என விடுக்க.

அற்றேல், அஞ்செழுத் ததிகாரணத்தையும் இதனைச் சாரவைத்து ஈண்டு ஓதுதலே பொருத்த முடைத்தெனின், அஃதொக்கும்; சிவப்பிரகாசம் திரு வருட்பயன் முதலியவற்றினும் அஞ்செழுத்தருணிலையை இன்புறுநிலைக்குப் பின்னுக அணைந்தோர்தன்மையைச் சாரவைத்துக் கூறியவாற்றானும் அதுவே பொருத்த முடைத்தாயினும், அஞ்செழுத் தோதும் முறைமை சொற்பலகாது விதிப்படி என மாட்டெறிந்துணர்த்தற் பொருட்டு ஆண்டே வைத்து ஓதிய தன்றிப் பிறிதில்லை என்றெழுக. இது சொற்பொருட்பின்வருநிலை. வினையா தென்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது; "உண்ணுகழியும்." என்புழிப் போல. பின்வந்த ஞானம் ஆருபெயர். ஆனதனு லென்பது ஆனத்தால் என மரீஇயிற்று; † "பெற்றத்தாற் பெற்றபயன்." என்புழிப் போல.

அற்றேல், பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு வேள்வி முதலியன போ லப் பயன் வேண்டாமையா னுக பின்னர்ச் செய்து பெறுதுமென்றுக ஓரோ வழி ஒழியவும்படுங்கொல்லோ என்னும் ஆசங்கையை நீக்கிச் செய்யாவழிப் படுங் குற்றமும் செய்தல் கடமையா மாறும் உணர்த்தி அதனை வலியுறுத் துதற்கு எடுத்துக் காட்டும் உதாரணம்;

> தன்னை யறிவித்துத் தான்முனைச் செய்தானைப்
> பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
> தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
> மானே தொழுகை வலி.

எனவரும்.

தன்னுண்மை யறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற் றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையு மெளிய அவ்வுயிரை எத்த னையு மரிய தானும் வண்ணஞ் செய்தளித்த பெரியதோ ருதவியை அதன் பின்னர் மறக்குமாயின் அஃதிதற்கு முன் அறியாமையான் மறந்த குற்றம் போலத் தீர்திறனுடைய தொரு குற்றமன் றுகலானும், முதல்வன் அங்ஙனம் தான்றானேயாகச் செய்தானும் இதுகாறுஞ் தனக்குச் சுதந்தரமின்றி முதல்

* சிவப்பிரகாசம், உண்மை. கo-ம் சூ. கக. † இந்நூல், கூ-ம் சூ. கூ-ம் அதி. க. ‡ திருக்குறள், டுகூ-ம் அதி. சுற்றந்தழால். ச. சுற்றத்தாற்.

வனது உபகாரத்தை யின்றி அமையாதாய் அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறடிமையேயா மாதலானுங், தான்றனைச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியாவ தென்க.

தமது முதற்றனை குருவாகலின் 'தான்றனைச் செய்தானை' என்றும், முன்னிலமறந்த குற்றம் அறியாது நிகழ்ந்த தாகலிற் கழுவப்படும் இஃது அது போற் கழுவப்படுவதன்றென்பார் 'பின்னிலமறத்தல் பிழையலது' என்றுங் கூறினர். பின்னிலமறத்தல் என்பதனுல் முன்னிலமறத்தல் பெறப்பட்டது. * "எங்கன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்ங்கன்றி கொன்ற மகற்கு." என்னுங் கருத்து நோக்கிக் கூறியதுமாம். அலதாம் எனப்பாடமோதி இது பிழையுரை என்றையப்பாரு முளர். எனாம் முன்னிலையது அசைநிலை. பின்னிலன தேதற்றம். செய்தாலென்பது செய்தெனத் திரிந்தது. உம்மை சிறப்பின்கண் வந்தது. தான்றனைச் செய்தல் எதனை எதனைப் பற்றினும் அதுவதுவாமுயிர் தன்னை அறிந்தவழி எண்குணங்களா னிறைந்த தன் வண்ணமாகச் செய்தல். அங்ஙனஞ் செய்தவழியும் உயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கே உரித்தென்பார் 'தைவ மென்றுந் தைவமே' என்றார். தைவம் என்னுஞ் சொல்லியல்பு †மேலையுரைத்தாம். மரீஇ என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. ‡ மான் என்பது வடசொற்றிரிபு. கட்டு வருவிக்க. வலிதருவதனை வலியென்று உபசரித்தார்.

இவ்வுதாரணங்கள் மூன்றனும் வழிபாட்டிற்கு இடத்துங்கும் பொருண்மாத்திரையே யன்றி இடவிசேடமும் பெறல்வேண்டும் என அதனை வலியுறுத்து முகத்தான் முறையே சிவலிங்கத்தையும் சிவபத்தர் திருவேடத்தையும் சிவதீக்ஷையையும் அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

இங்ஙனம் சிவாகமத் துள்ள ஞானபாதப் பொருள் எல்லாவற்றையும் பொது உண்மை என்ற இருவகைப் படுத்துப், பிரமாணியல் இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என நான்கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச் சிவஞானபோத நூலைக் கோடற் குரிய அதிகாரி ளாவார் இவரென்பது உணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

> சிவமென்னு மந்தர சிந்தைநேர் நோக்கப்
> பவமின்றுங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
> மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
> லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.
>
> எனவரும்.

தான்றனைச் செய்த வாற்றாற் சிவனென்னும் பெயரினீங்கிச் சிவம்என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தை யுடைய மானவகனே! ஒன்று மிரண்டுமாய மலங்களையுடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும் முறையே அறிவின்கணின்று அருட்பார்வையா னேக்குதலானும் தேவகுரு

* திருக்குறள், நகை-ம் அதி. செய்ந்நன்றியறிதல். கo. † கூஎ-ம் பக்கத்திற்காண்க.
‡ மேஹாநு என்னும் வடசொல் மான் எனத் தற்பவமாயிற்று.

வாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கு எனப்படுங் தீக்கை யானும் பிறவிக்கேதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கு மாகலான், அவரின் வேறுகிய மும்மலமுடையார்க்கே உரித்து இவ்வுலகத்து அனுபவ முடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞானபோத நூல் என்க.

அந்தம் வேதாந்தம்; அந்ததரம் சித்தாந்தம்; ஆகலின், அதனைப் பெற் றோரது பெருமை கூறுவார் 'சிவமென்னும் அந்ததர' என்றார். என்னும் என்பு ழிப்படுசொற் றொக்கது. சிந்தை அறிவு. கண்ணுருபு விரித்துரைக்க. நோ்நோக்குதல் முன்னே மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையாலேனுக்குதல். நோக்க–நோக்குதலானென்க. கண் வாசகங்களைக் கூறவே இனம்பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப்படும். பவம் ஆகுபெயர். இந்நூல் அநுபவமுடைய தேசி கனு லன்றி விளங்கா தென்பார் ஒண் குருவால் என்றார். போதிக்கப்படும் என் பது அவாய்நிலையான் வந்தது. இன்றிந்நூல் என்பது இந்நூ லென்னும் பொருட்டு. இக்காலத்துரைக்கப்பட்ட நூலெனினு மமையும். அது, 'தானு ரைத்தான்**இன்று' என வருகின்ற வெண்பாவிற் கூறியவாற்றானு மறிக. மும்மை என்றது ஈண்டு எண்ணின்கணின்றது; ''தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்.'' என்புழிப்போல.

நான்காமதிகரண முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திர முடிந்தது.

பயனியன் முற்றிற்று.

சிறப்பியல்பு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

நூலாசிரியர் பெயர்.

எந்தை சனற்குமர னேத்தித் தொழுவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் முரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

சிவஞானபோதமாபாடியம்
முற்றுப்பெற்றது.

ஆ ரு ஞ் சூ த் தி ர ம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

எ-து. சூ-ம். எ-னின். சத்தும் அசத்தும் வரைசெய் துணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று.

இ-ள். மேல் ஐந்துசூத்திரத்தானுங் கூறிப்போந்த பொருள்களுள் யாது சத்து யாது அசத்து என்னும் ஐயம் நீக்குதற்குச் சத்தினியல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விரண்டும் இலக்கணத்தாற் றம்முண் மயங்காதவாறு வரைந்துவைத் துணர்த்தி உண்மையதிகாரத்திற்குத் தொற்றுவாய் செய்யும் முகத்தானே இலக்கணவோத்துட் கூறுதற்கு எஞ்சி நின்ற பதிப்பொருள தில க்கணங் கூறுதல் இவ்வாருஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திரவியையும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. தம்முணர்வின் றமியாகிய முதற் பொருள் அளவைகளா னறியப்படும் இயல்பிற்றெனின், அங்ஙன மறியப்படும் பிரபஞ்சம் போல் அழிபொருளாகிய அசத்தாம்: எவ்வாற்றானும் அறியப்ப டாத இயல்பிற்றெனின், அங்ஙன மறியப்படாத முயற்கோடு போலச் சூனி யப் பொருளாம்: ஆகலான் இவ்விருபகுதியு மன்றி ஒருவாற்று னறியப்படா மையும் ஒருவாற்று னறியப்படுதலு மாகிய இரண்டுவகையானுஞ் சிவசத்தா மெனக் கூறுவர் மெய்யுணர்வி னிலேபெற் றுயர்ந்தோர். எ-று.

உணருரு வெனி னசத்தென மாறுக. எனினென்பது முன்னருஞ் சென் றியைந்தது. முற்றும்மைகள் தொக்கன. அல்லதென்பது வினையெச்சக்குறிப்பு முற்று. அன்றி யாமென இயையும்.

ஒருவாற்று னறியப்படாமை பாசஞான பசுஞானங்களான் அறியப்படா மை. ஒருவாற்று னறியப்படுதல் சிவஞான மொன்றானே அறியப்படுதல். பாச ஞான பசுஞானங்களான் அறியப்படாமையிற் சிவமாதலும் பதிஞானத்தால் அறியப்படுதலிற் சத்தாதலும் பெறப்படு மென்பார்'இரண்டுவகையிற் சிவசத் தாமென விசைக்கும்' என்றார். சிவசத்து என்னும் இருபெயரொட்டுப் பண்பு த்தொகை வடநூன்முடிபு. சடமாகிய சத்தி னீக்குதற்குச் சிவசத்து என்றார். சிவசத்து என்பது சித்துச்சத்து என்னும் பொருட்டு.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்துரைக்கப்பட்டது. இரு திறனு மன்றி இரண்டுவகையானுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையனுய் நிற்றல் முதல்வனுக் கிலக்கணமென இலக்கணமும் இதனுட் போந்தவாறுண ர்க. முதல்வனுக்குப் பொதுவியல்பு மேற் புனருற்பவ முணர்த்து முகத்தாற்

கூறிப் போந்தமையின் இது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பிலக்கண மெனக் கொள்க. அற்றுகலினன்றே இதனை இலக்கணவோத்துள் முதற்கட் கூறாது உண்மையைச் சாரவைத்து இறுதிக்கட் கூறியதூஉ மென்க. இன்னும் முதல்வனுக் குளவாகிய * சிறப்பியல்புக் குணங்க ளெல்லாம் இவ்விரண்டனு ளடங்கும். அஃதறிந் தடக்கிக் கொள்க.

† ''தன்னுலே தன்னயறிந்தாற்–றன்னையுந் தானே காணும்'' எ–ம், ‡''உன்னரிய திருவருளே யொழியமல முளதென் றுணர்வரிதா மதனுண்மை தெரிவரிதா முனக்கே'' எ–ம், ¶''மாயை §மா மாயை மாயா வருமிரு விணையின் வாய்மை—யாயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்'' எ–ம், ஓகியவாற்றுல் வினைப் பசுபாசங்களுஞ் சிறப்பியல்பு பற்றி யுணர்தல் சிவஞான த்தா னன்றி அமையாதாயினும் o''தீப மெனத்தெ ரிந்தாங்–கோருவியசன் மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையு ணர்ந்தோர்—தருமிது பசுஞானம்''எ–ம், ** ''இவைகிழ் நாடலாலே—காதலினு ஞன்பிரம மென்னு ஞானங் கருதுபசு ஞானம்'' எ–ம், பொதுவியல்பு பற்றி யோதுதலானும், யானிதனை யறிந்தேதன் அறிகின்றிலேனென் றறியும் பாசவுணர்விற்கு அவற்றது பொதுவியல்பு விட யமாதல் கண்கூடாகப் பெறப்படுதலானும், அவை ஒருவாற்று ணுணருருவா தலு முடைமையிற் சிவசத்தாவான் செல்லாமை யறிக. சற்காரிய வாதங் கூறுஞ் சைவசித்தாந்தத்தில் அசத்தென்பது சத்துக்கு மறுதலை யன்மையான் அப்பசுபாசங்கள் அங்ஙன மறியப்படும் பொதுவியல்பு பற்றி அசத்து எனப் படுமாயினும் சிறப்பியல்புபற்றி †† அசத்தாதல் செல்லாமையிற் சிறப்பியல்பு நோக்கும்வழி அவை சத்தாதற் கிழுக்கின்மையு மறிக. இங்ஙனஞ் செவ்வனே யிறுக்க அறியாதார் அபாவத்தி னியல்பாவது பாவத்திற்கு மறுதலைப்பொ ருள்போலு மென நையாயிகர் முதலியோர் மதம்பற்றி மயங்கி எல்லாப் பொ ருளுஞ் சத்தென்னுஞ் சித்தாந்தத்தோடு முரணுமைப்பொருட்டு ஈண்டுச் சத்து அசத்து எனப்பட்டன சித்து அசித்து என்னும் பொருளவா மென வும், சுத்தம் அசுத்தம் என்னும் பொருளவா மெனவும் உரைத் திடர்ப்படுவர்.

‡‡ காரியப்பிரபஞ்சம் வினைப் பசுபாசங்கள்போ லன்றி இருவகை யியல்பா னுங் காட்சிப்புலனுப் இத்துணைப்பொழுது நிற்கு மென நம்மினாால் அறிய வாராது நிலைபெறுவது போலத் தோன்றி விரையக் கெட்டு மறைந்துபோதற் சிறப்புடைமை பற்றி அதுவே ஈண்டு 'உணருரு வசத்து' என்றெடுத்துக்கொ ள்ளப்பட்டது. அசத்தெனவே அசித்தென்பதுந் தானே போதரும்.

முதல்வனுக்குரிய மற்றைச்சிறப்பியல்புக்குணங்களாவன:—சர்வஞ்ஞத்துவம் முத லாயின. இவற்றின் விரிவை நீலகண்டபாடியத்தில் கூ–ம் அத்தியாயத்து உ–ம் பாதத்தில் உபயலிங்காதிகரணத்திற் காண்க. † சிவப்பிரகாசம், உண்மை. அ–ம் சூ. உ. தன்னறி. ‡ மேற்படி பொது உ–ம் சூ. கஅ. அன்னிய. ¶ மேற்படி உண்மை. எ–ம் சூ. உ. § மாமாயை மாயாகாரியம். o சிவஞானசித்தி, சூ–ம் சூ. உ. கருவியாமனமு. ** மேற் படி, கூ–ம் சூ. உ. வேதசாத்திர. †† அசத்து–சத்துக்குவேறு. அகரம் பிறிதென்னும் பொருட்டு. ‡‡ வினைப்பசு பாசங்கள் சிறப்பியல்பு பற்றிச் சத்தாதலும் பொதுவியல்பு பற்றி அசத்தாதலும் ஆகிய இருதன்மையும் உடையனவாதல்போலாது காரியப் பிர பஞ்சம் இருவகையியல்பானும் அசத்தேயாம் என்க. இருவகையியல்பு சிறப்பியல்பு பொதுவியல்பு என்பன. இருவகை யியல்பானும் அறியவாராது எனக் கூட்டுக.

இதனுள் உணருருவசத்தெனி னுணரா தின்மையி னென்றது ஓதிகரணம்; இருகிறனல்லது இரண்டுவகையிற் சிவசத்தாம் என்றது ஓதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

மூதலதிகரணம்.

ஈண்டு அறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்தென்றது.

எ-து. மேல்ச். எ-னின். மேலைச் சூத்திரத்தின் அளந்தறிந்தறியா வென்ற தனை உடம்படாது பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அளந்தறி பொருளேயாமென கையாயிகர் முதலியோர் கூறுங் கடாவையும், எல்லாப் பொருளுஞ் சத்தாகலின் அளந்தறிபொருளுஞ் சத்தேயா மெனச் சாங்கியர் கூறுங் கடாவையு மாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றை கண்ணழித் துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ - ள். சுட்டறிவினுல் அறியப்பட்ட சுட்டுப்பொருளெல்லாம் அசத்து. எ - று.

சுட்டு ஆகுபெயர். சிவஞானத்தாலறியப்படுதலே நீக்குதற்கு அறிவினு லென விசேடித்தார்.

ஈண்டு அறிவென்றது ஒன்றை முற்றி அதுவதுவாகச் சுட்டிக்காணும் அளவையறிவினை யென்பது *"அறிவினு லறிந்த யாவு மசத்தாக லறிதி" என்ற புடைநூலாகிரியர் மேள அங்ஙனந் தெரித்தோதியவாறுபற்றி யுணர்ந்து கொள்க

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ-து. ஏது. எ-னின். உள்ளதென்னு முணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பிக்கும் பிரபஞ்சந்தை இல்லையென்னு முணர்விற்கு விடயமாய் அதுபலத்தியைப் பயப்பிக்கும் இல்பொருளோ டொப்ப அசத்தென்றல் அமையுமாறு யாங்ஙனம்? எனவும், சத்தாகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படுதன் மாத்திரையான் அசத்தென்றல் சற்காரியவாதத்திற் கிழுக்காம் போலுமென வும், முறையே அவ்விருவர்மதம் பற்றிக் கூறுவாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். அச்சுட்டுப்பொருள்கடாம் இராசதகுண மிகுதிப்பாட்டான் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாய் உபலத்தியைப் பயப்பித்து நின்றதானே தாமதகுண மிகுதிப்பாட்டான் இல்லையென்னும் உணர்விற்கு விடயமாய் அதுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான் 'ஈண்டறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்து' என மேற்கோண்டது. எ - று.

* சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. ச.

ஈண்டுப் பிரகாசம் அப்பிரகாச மென்பன உபலத்தி அநுபலத்தி யென்னும் பொருளவாய் அவை நிகழ்தற் கிடனாகிய *பொருண்மே னின்றன. இது நையாயிகரை நோக்கி மேற்கொளாச் சாதித்தவாறு.

இனி, இதனையே இரட்டுற மொழிந்துகொண்டு அவைதாங் காரிய வவத்தையிற் றூலமாய் விளங்கி நின்றே காட்சிப்புலனுய்ச் சடிதியின் மறைந்து சூக்குமமாய்க் காரண வவத்தையின் விளங்காது நிற்கும் இவ்வேற்றுமை புடைமையான், அங்ஙனம் புலனுகாத காரணப் பொருள்களே நோக்கிக் காரியப் பிரபஞ்சம் அசத்தாதல் சாலுமாகலின் 'ஈண்டறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்து' என மேற்கொண்ட தென்றவாறு எனவும் உரைத்துக்கொள்க.

அசத்தறியாய் கேணீ யறிவறிந்த வெல்லா
மசத்தாகு மெய்கண்டா னுயின்—

எ-து. உ-ம். எ-னின். ஒருசாரன அங்ஙன மாயினும் †உபலத்திப்பட்டன வெல்லாம் அவ்வாறு அசத்தா மென்றற்குப் பிரமாண மென்னை? என்னும் நையாயிகரை நோக்கி 'ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். அசத்து அறியாய் நீ கேள். எ-து. அசத்தி னியல்பை யறியாத மடவோனே! யாம் இறுக்கு மிறையை நீ மனம் பற்றிக் கேட்பாயாக,—மெய்கண்டான் ஆயின் அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும். எ-து. சத்தி னியல்பை யறிந்தோன் ஆராய்ந்தானுயின் அறிவினு லறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம். எ - று.

அறியாய் என்பது விளியுருபேற்ற பெயர்.

அசத்தி னியல்பை யறிந்தாயாயின் இவ்வாறு பிணங்குவா யல்லை யென்பார் 'அசத்தறியாய்' என்றும், ‡"எந்தை–தாட்பால் வணங்கித் தலைநின்று கேட்க" என்பார் 'கேள் நீ' என்றும், உபலத்திக்கு விடயமானவை யெல்லாம் அநுபலத்திக்கு விடயமாதல் ஒருதலை யென்பார் 'அறிவறிந்த வெல்லா மசத்தாகும்' என்றும், சத்தி னியல்பு உணர்தார்க் கன்றி அசத்தி னியல்பு உணரவாரா தென்பார் 'மெய்கண்டான்' என்றும், ஆய்தற் கருமை நோக்கி 'ஆயின்' என்றுங் கூறினர்.

அசத்தலாய்
நீரி லெழுத்து நிகழ்கனவும் பேய்த்தேரு
மோரினவை யின்றுமா ருப்பு.

எ-து. உ-ம். எ-னின். இரட்டுற மொழிந்துகொண்டு சாங்கியரை நோக்கி யுரைத்த பொருளே வலியுறுத்துத னுதலிற்று.

---

* ஈண்டுப் பொருள் என்றது சுட்டியறிவதாகிய பிரபஞ்சத்தை. † உபலத்திப்பட்டன உள்ளதென்றறியு மறிவுக்கு விடயமாய பொருள்கள். ‡ திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் திருப்பாசுரம். ச. ஆட்பாலவர். எந்தை தாட்பால் தலைவணங்கி நின்று கேட்க என மாறுக. தாள் என்றது சத்தியை.

இ - ள். அசத்து அலாய். எ-து. அசற்காரியவாதி யல்லாத அறிவுடையோனே!—அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஒரின். எ-து. அங்ஙனந் தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்காமாற்றிற்கு உவமை யாராயின்,—நிகழ் நீரில் எழுத்தும் கனவும் பேய்த்தேரும். எ-து. நிகழாநின்ற நீர்மே லெழுத்தும் கனவிற் காட்சியும் பேய்த்தேரு மாம். எ - று.

எனவே, அப்போ தள்ளனவாய நீர்மே லெழுத்து முதலியனவற்றை அங்ஙனே சடிதியின் மறைந்துபோதற் சிறப்புப் பற்றி அசத் தென்றல் எல்லார்க்கு மொப்ப முடிந்தமையின், அவ்வியல்புடைய பிரபஞ்சத்தையும் அவை போல் அசத் தென்றல் அமையு மென்றவா ருயிற்று.

அசற்காரியவாதியை அசத்தென் றுபசரித்தார். நீரிலெழுத்து முதலிய பொய் யென்பாரை மறுத்தற்கு 'நிகழ்' என்று அடை கொடுத்தார்: அஃது யாண்டுஞ் சென்றியையும். குவ்வுருபு விகாரத்தாற் றொக்கது. இன் றென்னு மொருமை அப்பண்பின்மே னின்றது.

நீரிலெழுத்துத் தோன்றிய பொழுதே மறைந்துபோதற்கும், கனப் பொருள் முடிவு பெறுத லின்றி இடையே மறைந்துபோதற்கும், அருஞ் சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமை பற்றித் தோற்றி ஞாயிற்றின் கிரணம் முகிற்படலத்தின் மறைந்வழித் தானும் மறைந்துபோவ தாகிய பேய்த்தேர் ஒரு காரணங் காட்டி மறைந்துபோதற்கும் உவமையாயின.

இவ்வெண்பாவை † 'இலயித்த தன்னில்' என்பது போல இங்ஙனம் இரு தொடராக வைத்துரைத்து மேற்கோள் ஏதுக்களையும் இரட்டிற் மொழிந்து கொண்டு இரண்டதிகரணப் பொருள் கோடல் ஆசிரியர் கருத்து என்பது, வழிநூலாசிரியர் ‡ ''அசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்'' எ-ம், ¶ ''உலகீன யசத்து மென்பர்'' எ-ம், வேறு கூறியவாற்றானு முணர்க. இஃது அறியாது இதனை ஒரு தொடராகவைத் துரைப்பார்க்கு அசத்தறியாய் அசத்தலாய் என்றதனால் ஒரு பயன்படாமையும், ஆயின் ஓரின் என்று இருகாற் கூறுதலும் அசத்தாகும் இன்றும் என்று இருகாற் கூறுதலுங் கூறியதுகூறலென்னும் வழுவாதலும், அறிக.

இனி, ஒருவாற்றானு முணரப்படாத பொருள் சூனிய மென்பது எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தமையின் ஆண்டு அதிகரணத்திற் குரிய ஐயப்பாடு முதலியன நிகழாமையான் அதனை வேறெடுத்துரைத்து மேற்கொள்ள வேண்டா வாயினும், மந்தவுணர்வுடையார்க்கு அதன்கண் ஐயம் நிகழாமைப் பொருட்டு வழிநூலாசிரியர் § ''உணராத பொருள்சத் தென்னி லொருபய னில்லை போலும்'' என விடுத்தோழிந்தாரென் றுணர்க.

முதலதிகரண முடிந்தது.

---

* காரணத்தைக் காரியமாகக் கூறுதலான் உபசாரமாற்று. † இத்தூல், சும் சூ. உ-ம் அதி. க. ‡ சிவஞானசித்தி, சும் சூ. உ. ஆவதாய். ¶ மேற்படி. சும் சூ. ங. மண்டனில். § மேற்படி. சும் சூ. ச.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்விரண்டு தன்மையு மின்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணரற்பாற்று.

எ-து. மேல். எ-னின். மேல் உணர்பொரு ளியல்பும் உணராத பொரு ளியல்புங் கூறும் முகத்தான் அசத்தி னியல்பை வரைசெய் தூணர்த்தியவழி, இரண்டும் இவ்வாறுகலான் இவற்றின் வேறுய முதல்வன. தியல்பாவது மாயா வாதி கூறும் அநிருவசனம் போலு மென்னுங் கடாவை யாசங்கித்துச் சூத் திரத்தின் பிற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ-ள். வெ-டை.

* வாக்கெனப்படும் நாதம்முடிவான பாசஞானத்தை வாக்கென்றும் அவ ற்றின் வேறுய பசுஞானத்தை மனமென்றும் உபசாரவழக்காற் கூறினர்.

வாக்குமனாதீத கோசரமாய் நின்ற என்பது அவ்விரண்டின் விருத்திக ளைக்கடந்து அநாதமாயும் ஒற்றுமைப்பட்டுநின் றுணரும் அநுபவஞான மாத்தி ரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்ற என்றவாறு.

அவ்வாறு நின்ற பொருள் இது வென அளவைகளான் அறிய வாராமை பற்றி அதுவே என மகாவாக்கியத்திற் கூறியதனை அநுவதித்துச் சத்தா கிய சிவமாதலைச் செவியறிவுறுத்தார்.

வாக்குமனாதீதம் என்றது தமிழ்நூன் முடிபு: மாவடி மாடியென மரீஇயி னூற்போல மனவநீதம் மனாதீதமென மரீஇயிற்று. அநீதகோசரம் என்பது வடநூன் முடிபு.

வாக்குமனாதீதப் பொருளாகலின் உணருருவாந்தன்மையும், கோசரப் பொருளாகலின் உணராதாந்தன்மையும் இல்லையென்பது பெறப்படுதலின் 'இவ்விரண்டு தன்மையு மின்றி' என்றார். †உணரற்பாற்று என்றார் உணர்தல் அருமை நோக்கி.

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தின்மையானும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாச மின்மையானும்.

எ-து. எது. எ-னின். இவ்விரண்டுவகையு மில்லாத பொருள் அநிருவச னமாய் நிற்ப தென்னது வாக்குமனாதீத கோசரமாய் நிற்ப தென்றற்குப் பிர மாண மென்னை? என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். வாக்குமனங்களா லோதியுணரப்படுவதாய ‡ நிருவசனப் பொரு ட்கு முன்னர்க் கூறப்படுஞ் சாதனங்களி னின்று அறியற்பாலதாக வேண்டா

---

* இதனை, "வேதசாத் திரமிருதி புராணகீல ஞானம் விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலா—நாதமுடி வானவெல்லாம் பாச ஞானம்" என்னுஞ் சிவஞானசி த்தித் திருவிருத்தத்தானு முணர்க. † சொல்லளவையின் அறிய வாராது என்பார் சொ ல்லற்பாற் றென்னது உணரற்பாற் றென்றார். ‡ நிருவசனம்-விசேடமாகச் சொல்லல்.

மையானும், ஒருவாற்றானும் அறியப்படாத அநிருவசனப் பொருட்குச் சாதனத்தினின்றும் அறியப்படுமா றின்மையானும், 'இனி இவ்விரண்டு தன்மையு மின்றி வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென் றுணரற்பாற்று' என மேற்கொண்டது. எ - று.

பிரகாசம் அப்பிரகாசம் என்பன உபசாரவழக்கு.

எண்ணிய சத்தன் றசத்தன்று மென்றுலென்
கண்ணி யுளதென்றன் மெய்கண்டா—னெண்ணி
யறிய விரண்டா மசத்தாதல் சத்தா
மறிவறியா மெய்சிவன்று ளாம்.

எ–து. உ–ம். எ–னின். பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் அவிச்சை வயத்தான் ஞாதா வெனவும் ஞேய மெனவும் பகுக்கப்பட்டு முன்னர்க் கூறப்படுஞ் சாதகங்களினின் றறியலாம்பமும். அவிச்சை நீங்கியவழி அப்பகுப் பின்மையாற் சத்தென்றுதல் அசத்தென்றுதல் ஒருவாற்றானும் ஞேயமாமா றின்றிக் கேவலஞான மாத்திரையேயாய் நிற்பதொன் றுகலான் அது கோசரமா மென்றல் பொருந்தாது *என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். எண்ணிய சத்து அன்று அசத்து அன்று ஆம் என்றுல் உளது என்றல் என் கண்ணி. எ-து. பரமார்த்தமாகிய பரப்பிரமப்பொருள் விவகாரத்திற் கருதப்பட்ட சத்து மன்று அசத்து மன்று என்னின் அங்ஙனமொருபொருளுண்டென்றல் யாது பிரமாணங் கருதியோ? அதனைக் கூறுவாயாக. பிரமாணமுண்டெனின் அதற்கு அது பிரமேய மெனப்பட்டு ஞேயமாவான் செல்லுமென் றஞ்சிப் பிரமாண மில்லை யென்பையாயின்,—மெய் கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம். எ-து. சத்தினியல்பை யுணர்ந்தோன் ஆராய்ந்தறியிற் காட்சி முதலிய பிரமாணங்கட்கு விடயமாவதுமன்றி ஒருவாற்றானும் பிரமாண மல்லாத சூனியமு மாகிய இரண்டும் மேற் கூறியவாற்றான் † அசத்தேயாம்,—ஆதலி சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம். எ-து. ஆதலாற் சாங்கோதாகியம் முதலியவற்றுட் சத்து என்று ஓதப்படுஞ் சுட்டறிவினுல் அறியப்படாத மெய்ப்பொருள் சைவவுபநிடதங்களினுஞ் சைவாகமங்களினும் அன்னிய மின்றிநின் றுணரும் அநுபவமாத்திரையிற் கோசரிப்பதென் றோதப்படுஞ் சிவனருளாவ தன்றி நீ கூறுஞ் சூனிய மன்று. எ - று.

அறிய வெண்ணுஞ் செயலெ னெச்சம் "மழை பெய்யக் குள நிறையும்" என்புழிப் போலச் செயினென்னு மெச்சப்பொருட்டாய் நின்றது. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. அசத்து ஆம் என மாறுக. சத்து ஆம் மெய் என வியையும். ‡"அடியளந்தான் றாயது" என்றாற் போல 'அறிவறியா மெய்' என்றது வாளா பெயராய் நின்றது. 'சிவன் தாள்' எனச் சிவசத்தியின்மேல் வைத்து உயர்த்துக் கூறியது உபசாரவழக்கு. ¶"இறைவனர் கமல பாதம்" என்பதுமது.

* மாயாவாதிகள். † அசத்து என்பது பிரபஞ்சத்தை யுணர்த்தும்வழிச் சத்தின் வேறு எனவும், சூனியத்தை யுணர்த்தும்வழிச் சத்திற்கு மறுதலை எனவும் பொருள்கொள்க. ‡ திருக்குறள். சுக0. மடியிலா. ¶ சிவஞானசித்தி, சுபக்கம், பாயிரம். ச. மறையினுல்.

இதனுற் போந்த பொருள் சத்து மன்றி அசத்து மன்றி ஒரு பொருள் உண்டு எனின் அதற்குப் பிரமாணம் என்னே? பிரமாணாதீத மூகிய சூனியம் எனின் சூனியமும் அழிபொருளு மாகிய இரண்டும் அசத்தே யென்பது மேற் காட்டினமையாற் பிரமப்பொருள் அசத்தெனப்பட்டுச் சத்தென்னுஞ் *சுருதி களோடு மூரணு மாகலின் அவற்றுட் சத்து என்று ஓதப்படும் பரப்பிரமப் பொருளாவது உண்மைஞானத்திற் கோசரிப்பதென யாங் கூறுஞ் சிவமே யன்றி நீ கூறுஞ் சூனிய மன்றென மாயாவாதியை மறுத்துக் கோசரம் என்ற தனை வலியுறுத்தியவாரு மென்க.

'எண்ணி யறிய விரண்டா மசத்து' என்பதற்குப் பிறரெல்லாம் வருகின்ற வெண்பாவிற் கூறும் பொருள்படக் கூறியதுகூற லாதன் மேலும் ஓரியைபி ன்றி யுரைப்ப.

> உணர்ப வசத்தாத லொன்றுணரா தொன்றை
> யுணருநீ தானுணரா யாயி—னுணருமுணிற்
> சூனிரண்டா மெய்கண்டான் றன்னு லுணர்தலாற்
> சூனிரண்டாய்க் காணன் றமி.

எ–து. உ–ம். எ–னின். †பிரகாசித்த பொருளையும் வேரூராற்றன் அறி தலெனை வேட்கை சென்றுழி அவ்வாற்றுப் புதுவதாய்ப் பிரகாசிக்க வேண்டு தலிற் பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவ தில்லை யென்றல் யாண்டுஞ் செல்லாமையின் வாக்குமனாதீத மென்றல் பொருந்தாது ‡என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ–ள். உணர்ப அசத்து. எ–து நின்னு லறிவனவாய கருவிக ளெல்லாம் ¶மேற் கூறியவாற்றுன் அசத்தாம். அசத்தெனவே அசித்தாதலும் பெறப்ப டும்,—ஆதல் ஒன்று ஒன்றை உணராது. எ–து. ஆகலான் அவற்றுள் ஒரு கரு வியும் ஒன்றுகிய முதற்பொருளை அறியமாட்டாது,—உணரும் நீ தான் உண ராய். எ–து. அவற்று னறிந்து வருகின்ற நீதானும் அதனை யறியமாட்டாய்,— ஆயின். எ–து. நீயே யாய்ந்தறிவா யாயின்,—உணரும் உனின் இரண்டு ஆம். எ–து. அவ்வா றுணரப்படும் பொருள்கள் போல் உணர்கின்ற நின்னின் வே றும்,—மெய்கண்டான் தன்னுல் உணர்தலால் தான் இரண்டாய்க் காணன் தமி. எ–து. உயிர்க்கு அறிவு விளங்கு முண்மையை அறிந்தோன் தன்னறிவு அச்சிவனருளி னடங்கி அதுவாய் நின்று அதனுனே அதனை யறியு மாகலான் வேறப் பொருள்களை யறியுமாறு போல வேரூய்நின் றறிவா னல்லன் அத்த னிமுதற் பொருளை. எ–று.

இதனுற்போந்தது சத்தாகிய சிவம்பாசஞானத்தா னுதல் பசுஞானத்தா னுதல் அறியப்படாது; அறியப்படிற் குடம் முதலாயின போல உயிரின்

---

* ஒழ தசு வஸ முதலியன. † பிரகாசித்தபொருள் (பிரத்தியக்கத்தாற்) பிர காசித்த பொருள். அது வன்னி. வேரூராறு அதுமானம். வேட்கை சென்றுழி அத னுன் அதுயிப்பேன் என இச்சை வந்துழி என்பதாம். யாண்டுஞ் செல்லாது என்பது அதுமானத்திற் சிலவிடத்திற் செல்லாது பிரத்தியக்கமாகிய சிலவிடத்திற் செல்லும் என்பதாம். ‡ நையாயிகர். ¶ இதனை கஉச-ம் பக்கத்துக் குறிப்பிற்காண்க.

வேருய் அவிச்சையான் வருஞ் சுகதுக்கங்களிற்ப் பயப்ப தன்றி அவிச்சையி னீங்கிய நிரதிசய வின்பத்திணைப் பயவா தாகலான் அவ்வுண்மை யுணர்ந்தோன் ஏனைய போல அசத்தார்த லின்றித் தனியாய் நின்ற அம்முதற் பொருளே அதனு ணெற்றித்து நின்றே காண்ப னென னையாயிகர் முதலியோரை மறுத்து வாக்குமனுதீதமாய் நின்றே கோசரமா மென வலியுறுத்தியவாரு மென்க.

உணர்ப என்பது அகரவீற் றஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல்.

ஒன்றும் என்னும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

உனின் என்னும் இன்னுருபு நீக்கப்பொருட்கண் வந்தது. ஒற்றிறட் டாமை புறனடையாற் கொள்க. தான் அசை.

*பாவகமேற் ருனசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமா மன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்த ருனென்னிற் பாவகமாந் தன்னருளாற்
பாவிப் பதுபரமில் பாழ்.

எ-து. உ-ம். எ-னின். தாமே கோசரமாரு லன்றித் தன்ரு லறிதல் கூடா மையிற் றன்ரு லே தணையுணரு மென்பது †தன்னைப்பற்றுத லென்னும் வழுவா மாகலின் அவ்வா றன்றி வாக்குமனுதீதப் பொருள் யோகநூலிற் கூறுங் கியா னபாவணைகளிற் கோசரமா மென்றலே அமைவுடைத்தென யோகமதம்பற் றிக் ‡கூறுவாரை நோக்கித் தன்ரு லன்றிக் கோசரமாகாமையை வலியுறுத் துதனுதலிற்று.

இ-ள். பாவகமேல் தான் அசத்து ஆம். எ-து. நீ கூறும் பாவணை ஏனைப் பாவகங்கள் போல மன முதலியவற்றேறி கூடி நின்று பாவிக்கும் பாவகமெ னின் அறிவினு லறியப்பட்ட சுட்டாகலான் அப்பொருள் அசத்தாம்,—பாவ னுதீதம் எனின் பாவகம் ஆம். எ-து. கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதாகலின் அப்பாவணையைக் கடந்ததெனிற் கருவிக ளீங்கியவழி ஒன்று மறியுமா றின் றிக் கேவலமா மாகலான் அது பாவக மாத்திரையே யன்றிப் பயன்படுமா றில்லை,—அன்று என்னின் அது பாழ் ஆம். எ-து. இவ்விரு திறனு மன்றி அரு ருவசனமாகப் பாவிக்கப்படுவ தெனின் அது ருனியப் பொருளாம்,—பாவக த்தைப் பாவித்தல் என்னின் பாவகம் ஆம். எ-து. அவ்வா றன்றிப் பாவணைக் கெய்தாத பொருளை எய்தியதாக வைத்துப் பாவகஞ் செய்த லெனின் அது போலிப் பாவணை யாதலாற் பாவனுதீதம் போலப் பாவணை மாத்திரையே யன் றிப் பயன்படுமா றில்லை. அற்றேல் ஒருவாற்ருனும் பாவணைக் கெய்தாத பொருள் பாழா மெனின்,—தன் அருளால் பாவிப்பது பரம். எ-து. அப்பா வகங்களை யொழித்துத் தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம் பரம்பொ ருள்,—பாழ் இல். எ-து. ஆகலான் நீ கூறும் பாவணைக் கெய்தாமை பற்றிப் பாழாத லில்லை. எ-று.

* இவ்வெண்பாவின் பொருளைச் சிவஞானசித்தி, சூ-ம் சூ. எ-ம் செய்யுளும், சிவப் பிரகாசம், கo-ம் சூ. எ-ம் செய்யுளும், ஞானமிர்தம். சூக-ம் அகவலும், இனிது விளக்கு மாறு ஆண்டாண்டுக் கண்டு தெளிக. † ஆன்மாச்சிரயதோஷம். ‡ பாதஞ்சலர்.

தான் அசை. பாவகத்தைப் பாவித்த லென்பது *"கறைமிட றணியனு மணிந்தன்று" என்றது போலக் கொள்க.

மேலே வெண்பாவில் தன்னென்றது தனது சத்தியே யாகலால் தன்னைப் பற்றுத லென்னுங் குற்றமாதல் யாண்டையதென விடுப்பார் 'தன்னருளாற் பாவிப்பது' என்றார். தன்னருளே யறியுமாறும் அதனாற் பாவிக்குமாறும் ஒன் பதாஞ் சூத்திரத்துட் கூறப்படும்.

யோகநூலார் கூறும் பாவனையாவது இந்நான்களுள் ஒன்றுகற்பால தன்றி வேறின்மையின் நான்கினையுங் கூறி மறுத்தார்.

அறிய விரண்டல்ல ஞங்கறிவு தன்ஞ
லறியப் படானறிவி னுள்ளா—னறிவுக்குக்
காட்டாகி நின்றுனைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா தறிவறிந்து கண்டு.

எ-து. உ-ம். எ-னின். மேற் கூறிப் போந்த பாவனைகட் கெய்தாத பொ ருளைத் தன்னருளாற் பாவித்தல் வேண்டாம் உயிர் பசுத்துவ நீங்கிய காலத் துச் சிவனைப் போல முற்று முணர்தன் முதலிய எண்குணங்களு முடைய தென்று † ஆகமங்களுட் கூறுதலின் ஆண்டு ஆன்மஞானஞ் சிவஞானத்தோ டொப்ப தன்றிப் பசுஞான மெனப்படாமையான் அவ்வறிவான் அறியப்படுங் கோசரப் பொரு ளென்றலே அமைவுடைத் தென்னுஞ் சிவசமவாதிகளை நோக் கித் தன்னருளா லன்றிக் கோசர மாகாமையை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அறிய இரண்டு அல்லன். எ-து. ‡சிவாகமங்களின் அத்துவிதங் கூறுதலின் உயிர் தன்னறிவா னறிதற்குத் தன்னின் வேறல்ல ஞகலானும்,—அறிவின் உள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான். எ-து. சம மாத லின்றித் தூல சூக்கும முறையாற் றன்னறிவுக் குள்ளுமாய் நிற்றலின் அவ்விடத்துத் தன்னறிவினால் அறிய வாரா ஞகலானும்,—அறிவுக்குக் காட்டு ஆகி நின்றனை. எ-து. தன்னறிவுக்கு வியஞ்சகமாய்நின் றறிவிக்கும் உயிர்க்குயிராய முதல்வனை,—அறிவு கண்டு அறிந்து காட்டாது. எ-து. ஆன் மஞானமானது தான் கண்டறிந்து தன் குணியாகிய உயிர்க்குக் கோசரமா மாறு காட்டமாட்டாது,—மெய் அறியாக் கண் என்ன. எ-து. தன்னின் வேறின்றித் தனக்குண் ணிற்றலிற் றன்னாற் காணப்படாது தனக்குக் காட் டாகி நின்ற உயிரை யறியமாட்டாத கண்ணொளி போல். எ-று.

காட்டு முதனிலைத் தொழிற்பெயர். அறிவுக்குக் காட்டாகி நின்ற னென் னும் பெயரடையானும் ஓரேதுக் கூறியவாறு. கண்டறிதல் ¶"குழிந் தாழ்ந்த கண்" என்றாற் போல ஒருபொருட் பன்மொழியாய்ச் சிறப்பின்கண் வந்தது.

---

* புறநானூறு, கடவுள் வாழ்த்து. ரு-ம் அடி. † ஆகமத்துட்கூறுதலே கஉச-ம் பக் கத்துக் குறிப்பிற் காண்க. ‡ சிவாகமத்தில் அத்துவிதங்கூறுதலே கஉக-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. ¶ நாலடியார், தூய்தன்மை. க. கழிந்தாரிடு.

மெய் அறியாக் கண் என்ன என இயைத் தீரைக்க. கண் முதலியவற்றை நோக்கி உயிர் சத்துச்சித்தா மென்ற வதனை 'மெய்' என்றார். கண் ஆகுபெயர்.

கண் அறியா மெய் என்ன என்பதற்குக் கண்ணை யறியாத உடம்பு போல் என் றுரைப்பாரு முளர். உடம்பிற்கு அறியுந் தன்மை யின்மையானும், உட ம்பிற்குக் கண் காட்டாதலு மின்மையானும், அஃது ஈண்டு உவமையாதற் கேலாமையின் அது போலியுரையென் றொழிக.

அதுவென்னு மொன்றன் றதுவன்றி வேறே
யதுவென் றறியறிவு முண்டே—யதுவென்
றறிய விரண்டல்ல ஞங்கறிவு ணின்ற
லறியுமறி வேசிவமு மாம்.

எ-து. உ-ம். எ-னின். அத்தன்மையதாகிய முதல்வனைத் தலைப்பட்ட உயிர் அம்முதல்வனோடு ஒன்றுப்ப் போவதே யாகலின் ஆண்டங்ஙன மறிவ தூஉம் அறியப்படுவதூஉ மாதல் யாங்ஙனம்? என்னுஞ் சிவாத்துவிதசைவர் சுத்தசைவரை நோக்கி ஒன்றுயவழியும் அறிவதும் அறியப்படுவது முண் டென்ப துணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று. •

இ - ள். அது என்னும் ஒன்று அன்று. எ-து. சத்தாகிய சிவம் ஞேயப் பொருளாய் விசிட்டமாய் நிற்ப தென்பது உமக்கு மொக்கு மாகலான் அச் சிவம் இன்னதென் றறிய வாராது அநிருவசனமாய் நிற்பதொரு நிருவிசே டப் பொருளெனக் கொண்ட மாயாவாதத்தைப் போல அது வென்று அநிரு வசனமாய்க் கூறப்படுவதொரு சூனிய மன்று ஆகலான்,—அது அன்றி வேறு அது என்று அறி அறிவும் ஆங்கு உண்டே. எ-து. அந்த ஞேயமாத்தி ரையே யன்றி அதனின் வேறுக வாக்குமனுதீதமாய் நிற்பதொரு பொரு ளென் றறிகின்ற ஞாதாவும் ஆண்டுள்ளதேயாம். அற்றேல், ஒன்றுதல் பெறப் படாதா லெனின்,—அது என்று அறிய இரண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவு சிவமும் ஆம். எ-து. உலகத்துப் பொருள் போல் அது வென்று சுட்டியறியுமாறு முதல்வன் தன்னின் வேறல்லனுய் அப்பணைந்த உப்புப் போ லத் தன்னறிவின்கண் விரவி வேற்றுமை தோற்றாது நிற்றலான் அறிவிறந் தறிகின்ற அவ்வுயிர் சிவமேயாம். எ - று.

உம்மை சிவமாயுஞ் சிவமாகாமை விளக்கி நின்றது.

அது வென்னு மொன்றன் றுகலா னென வதுப்பொருள்படக் கொண்டு உரைக்க. அறிவும் என்ற உம்மை இறந்தது தழீஇயது. அல்லன் என்பது முற்றெச்சம். வேறு முடிபு கோடலிற் பால்வழு வாகாமை யுணர்க. உண்டே யென்னும் ஏகாரம் தேற்றம். ஈண யிரண்டும் அசைநிலை. நிற்றல் நிற்றலான் என்றவாறு.

இவ்வெண்பாக்க ளேந்தும் முறையே வாக்குமனுதீத மென்றல் பொருந் தும் கோசரமா மென்றல் பொருந்தா தென்னும் மாயாவாதிகளையும், கோச ரமா மென்றல் பொருந்தும் வாக்குமனுதீத மென்றல் பொருந்தா தென்னும் நையாயிகர் முதலியோரையும், பாவனைக்குக் கோசரமா மென்னும் பாதஞ்ச

லையும், ஆன்மஞானத்திற்கே கோசரமா மென்னுஞ் சமவாதசைவரையும், முத்தியிற் சிவமே யன்றி உயிரென வேறின்மையின் உயிர்க்குக் கோசரமா மாறு யாண்டையது? என்னுஞ் சிவாத்துவிதசைவர் முதலியோரையும் மறுத்து, வாக்குமனாதீத கோசரமாய் நிற்கு மியல்பு வலியுறுத்தி ஒருபொருண் மேல் வந்தவாறு காண்க.

இவ்வாறு நாலாஞ்சூத்திரம் முதலிய மூன்றினும் மேற் பிரமாணத்தாற் கூறிப்போந்த பசுபாசபதிகட்கு இலக்கணங் கூறும் முகத்தான் முறையே கேவலஞ் சகலஞ் சுத்தம் என்னும் மூன்றவத்தையுங் காட்டப்பட்டன. இம் மூன்றனுள், கேவலம் மருட் கேவலமும், சகல கேவலமும், பிரளய கேவலமும், விஞ்ஞான கேவலமும், அருட் கேவலமு மென ஐவகைப்படும். அவற்றுள், மருட் கேவலமாவது அநாதி கேவலம். சகல கேவலமா்வது சங்கரித்த பின்னர்ப் புனருற்பவத்திற் கேதுவாய்ப் படிங் கேவலம். ஆண்டுச் சூக்கும வைந்தொழி லுண்டென *மிருகேந்திரத்துட் கூறுதலின் அநாதி கேவலத் தோடு இதனிடை வேற்றுமையாமாறு கண்டுகொள்க. பிரளய கேவலமாவது †மாயையோடு இயைபின்றி ஆண்டுப் படிங் கேவலம். விஞ்ஞான கேவலமாவது மாயை கன்மங்களென்னும் இரண்டனோடும் இயைபின்றி ஆண்டுப் படிங் கேவலம். அருட்கேவலமாவது தத்துவசுத்திப் பின்னர்ப்படுங் கேவலம். அது‡ தக ளறுமேபாதத்திற் காண்க. இனிச், சகலமுஞ் சகலத்திற் கேவலம், சகலத்

---

* இதனை வூவெவ்யாவெஷ வொயயங வொயயொமயாங ரொயயாங ரஂநங வாயயங கூமிஃகூமிஃசோயாஸஂகீவஃயுகியொமயாஃ வுகூவஃங வஸயுஂவவஃ யஷ்யுயாவவஷஂஜாகிழ॥ என்னும் மிருகேந்திர சுலோகத் தானுணர்க.

இ - ள். பரமேசுரன் சர்வசங்கார காலத்தினும் அறிவிக்கத்தக்கவர்களே அறிவித்து மறைக்கத் தக்கவர்களே மறைத்து ஆன்மாக்களின் கன்மங்களைப் பக்குவப்படுத்தி மாயாசத்திகளே வெளிப்படத்தகுந்தவைகளாகச் செய்துதோன்றுதற்குரிய எல்லாப்பதார்த்தங்களையும் பார்த்துக்கொண் டிருக்கின்றார் எ - ம்.

இன்னும் இதனை வுஷெவ்யுநஂஹ்ணாதி வ்யுஜகுவதி ஹஜிவ்ய திரொஷ்யாதி ஹமவா ஸுகாஸுவெகூஷ்யா வஷா॥ என்னும் பௌட்கராகம சுலோகத்தானும் உணர்க.

இ - ள். பகவானுகிய பரமேசுரன் காலங் கருதாது பிரளயகாலத்தினும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களையும் செய்கின்றார். எ - ம்.

† மா—உற்பத்தி. யா—லயம். மாதி யாதீதி மாயா. பிரபஞ்சம் எதிலே தோன்றி எதிலே ஒடுங்குகிறதோ அது மாயை. இது திராவிட மாபாடியத்துட் கண்டது.

‡ அன்றிவந்த தத்துவங்க ளெல்லா மகன்றிடவே—யொன்றிநின்ற வாணவந்தா னொன்றுமே—யென்றுந்தா—னீங்கா விருள்விழிபோ னீற்குமே யான்மாவும்—பாங்காக வாங்கே பதிந்து. உக. பகலிழந்த வான்போற் பரவுமல நீயா—யிகலறவே நின்ரு யிழந்தா—யகலறிவு—வாடாத முத்தியினில் வாய்ந்தவருட் கேவலரீ—நாடாத கேவலமுன் ஞள். உஉ.

திற் சகலம், சகலத்திற் சுத்தமென மூவகைப்பட்டு ஒரோவொன்று ஐந்து வகைப்படும். அவற்றுட் சகலத்திற் கேவல மைந்தும் *"ஒன்றவனியா மூலத்து" என்றதனுட் காண்க. சகலத்திற் சகல மைந்தும் †"இலாடத்தே சாக்கிரத்தை" என்றதனுட் காண்க. சகலத்திற் சுத்த மைந்தும் ‡"யோகிற் றருவதோர் சமாதி" என வழிநூலாசிரியர் தொகுத்தோதியது ¶சித்தாந்தசாராவலி, யோகபாதத்தின் வகுத்துக் கூறுதலான் ஆண்டுக் காண்க. இனிச் சுத்தமுஞ் சீவன்முத்தி அதிகாரமுத்தி போகமுத்தி இலயமுத்தி பரமுத்தியென் றைவகைப்பட்டுச் சாக்கிரம் முதலிய பெயர் பெறும்; அவற்றை முன்னர் வகுத்தோதுப.

இரண்டாமதிகரண முடிந்தது.

ஆறுஞ்சூத்திர முடிந்தது.

இலக்கணவியன் முற்றிற்று.

பொதுவியல்பு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

* இந்நூல். சூ-ம் சூ. உ-ம் அதி. க. † மேற்படி. " " உ. ‡ சிவஞான சித்தி, சூ-ம் சூ. உ.ச. இருவகை. ¶ சகலத்திற் சுத்தமைந்தும் சித்தாந்த சாராவலியில் வாஹ்யாஜ்ஞாசூரணெஃ என்னும் சுலோக உரையில் வகுத்துக் கூறுமாறு:—பீசாக்கரத்தை உச்சரித்தல் சகலத்திற் சுத்தசாக்கிரம். விந்துகலையைப் பரிக்கிரகித்தல் சகலத்திற் சுத்தசொப்பனம். நாதகலையோடு கூடுதல் சகலத்திற் சுத்தசுழுத்தி. சத்திகலையை யடைதல் சகலத்திற் சுத்ததுரியம். பரசிவதேசசில் இலயப்பட்டுநிற்றல் சகலத்திற் சுத்ததுரியாதீதம் என்றுணர்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்பியல்பு.

சாதனவியல்.

ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருநிற னறிவுள திரண்டலா வான்மா.

எ-து. சூ-ம். எ-னின். மேலதற்கோர் புறனடை யுணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று.

இ-ள். * தூலாருந்ததி நியாயம் பற்றி மேலே யாறு சூத்திரங்களினுஞ் சிவாகமங்களிற் கூறப்படும் முப்பொருள்களது பொதுவியல்பு பிரமாண முகத்தானும் இலக்கண முகத்தானும் ஆராய்ச்சிசெய் துணர்த்திய ஆசிரியர், அம் முப்பொருள்களது சிறப்பியல் பெனப்படும் உண்மை சாதன முகத்தானும் பயன் முகத்தானும் ஆராய்ச்சிசெய் துணர்த்துவான் புகுந்து, முதற்கண் மூன்று சூத்திரங்களான் அவற்றை யறிந்து அதனை யுய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனங் கூறிய தொடங்கினர். அவற்றுள், இச்சூத்திரம் 'உணருரு வசத்து' எனவும் 'இருதிறனல்லது சிவசத்து' எனவும் மேலைச் சூத்திரத்தான் வரை செய்து உணர்த்தியவழி அங்ஙன மறியும்பொருள் அவ்விரண்டினுள் ஒன்றோ? வேறோ? வென்னும் ஐயப்பாட்டின்கண் அவ்விரண்டினுள் ஒன்றுகற்பால தென்பார் மதம் பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச், சூத்திரத்துக்குப் புறனுக வெடுத்து ஓரொழிபாகிய சதசத்தி னியல்பு வரைசெய் துணர்த்து முகத்தானே சாதித்துப் பயன் பெறுதற்குரிய அதிகாரியி னியல்பாவது இது வென்ப துணர்த்துத னுதலிற்று. எ-று.

அதிகாரமும் ஓத்தும் வேறுபவழியும் இயைபு உணர்ந்துகோடற் பொருட்டுக் கருத்துரை அவ்வாறு செய்தா ரென்பது.

* இதனை கடஎ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க.

இப்புறனடையை வடநூலார் வாக்கியசேடம் என்ப.

இதனுட் கூறப்படும் மூன்றதிகரணமும் மூன்று புறனடைபோலும் எனமலையாமைப் பொருட்டு ஓர் புறனடை என்றார். முன்னைய விரண்டும் இறுதியதிகரணத்தைச் சாதித்தற் கேதுவாய் ஒரு பொருண்மேல் வந்தனவே யாம் என்பது கருத்து.

ஒன்றனை அறிந்தவழி அதனை ஞய பயன் பெறுதற் குரிய முயற்சி செய்ய வுறுவார்க்கு அதனைச் சாதிக்கு மாற்றல் தமக்கு உண்டென்பதூஉம், சாதித்ததனால் வரும் பயன் இது என்பதூஉம், அதனைப் பயப்பித்தற் குரிய சாதனமாவது இது என்பதூஉம், அது வருவாயும் உணர்த்தா லன்றி அதன்கண் மன வெழுச்சி செல்லாமையின் ஈண்டு ஓதப்படுஞ் சாதனஞ் செய்து பயன் பெறுதற் குரிமையுடைய அதிகாரியி னியல்பு உணர்த்துவதாய இச்சூத்திரம் முதற்கண் வைக்கப்பட்டது.

இதன் பிண்டப் பொழிப்பு. மேலைச் சூத்திரத்துட் கூறிப் போந்த இரண்டனுள், வாக்குமனாதீதமாகிய சிவசத்தின் சந்நிதியின் உணருரு வாகிய அசத்தெல்லாம் பாழாகலிற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது: அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலிற் சத்தாகிய சிவத்தை அறிதல் செய்யாது: ஆகலாற் பாரிசேட வளவையான் இருதிற னறிவுளதொன்றுண் டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையு மாகிய இரண்டு மன்றிச் சதசத்தா யுள்ள வுயிராம். எ - று.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தித என்னும் வகாரம் பிரிநிலைக்கண் வந்தது. அசத்து இலதாகலின் என்று உரைக்க.

அசத்துச் சத்தை யறியாமைக்கும் சத்தெதிர் சூனிய மாகலெ னுவாத லமையு மாயினும், அசத்தெனப்பட்ட கருவிகள் முடிந்நிலையிற் சிவகரணமாய் ஆன்ம சந்நிதியை யொட்டி முதல்வன் சந்நிதியி னிற்கப்பெறு மென்பாரை நோக்கி வேறுமோ ரேதுக் கூறினர். இக்கருத்தினை பற்றிச் * "சத்தின்மு னிலாமை யானுந்–தனைக்கொடொன் றுணர்த லானும்" என இரண்டேதுவும் உடன் கூறினர் வழிநூலாசிரியரும்.

ஏற்புழிக் கோடலான் அறிதல் என்றது ஈண்டு அனுபவ அறிவின் மேற்று.

† "இனைத்தென வறிந்த" பொருட்கு விளைப்படி தொகுதிக்கண் வேண்டப்படும் முற்றுமம்மை விகாரத்தாற் றொக்கது.

இதனுள் யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற் சத்தித யறியாது என்றது ஓரதிகரணம்; அசத்தில தறியாது என்றது ஓரதிகரணம்; இருதிற னறிவுள திரண்டலா வான்மா என்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரம் என்று உணர்க.

---

* சிவஞானசித்தி, எ-ம் சூ. க. அனைத்துஞ். † தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளையியாக்கம். கூகூ.

மூதலதிகரணம்.

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

எ–து. மே–ள். எ–னின். *“‘தந்திடுஞ் சிவன வன்றன் சந்நிதி தன்னி னின்றே” எ-ம், †“‘கூடுமொளி வளர்குடிலே மாயை மேவி” எ-ம், ‡‘தாரகமா மத்தன்ரு ணிற்றல்’ எ-ம், ¶“‘விமலனுக்கோர் சத்தியாய்” எ-ம், §“‘உலகமே யுருவ மாக” எ-ம், o“‘அத்துவா மூர்த்தியாகி” எ-ம், **இருநிலனுய்த் தீயாகி நீருமாகி**நின்ற வாறே.” எ-ம், கூறப்படு மியல்புடைய பிரபஞ்சத்தைச் சத் தெதிர் சூனிய மென்றல் அவசித்தாந்தமாய் முடியும் போலும் எனவும், †† “‘மண்டிய வுணர்வு யிர்க்காய் மன்னிகின் றறியும்” எனவுங் கூறுஞ் சிவாத்து விதசைவர் மதம்பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றிற் போந்த ஏதுவைக் கண்ணழித் துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ - ள். சுட்டுணர் வின்றிநின் றறியுஞ் சிவசத்தின் முன்னர்ச் சுட்டி யறியப்படும் அசத்தாய பிரபஞ்சம் விளங்கித் தோன்றுது. எ - று.

ஈண்டுச் சூனியம்* என்றது விளங்காமைப்பொருட்டு என்பார் ‘பிரகாசி யாது’ என்றார். இக்கருத்தே பற்றி ‡‡“‘முனைத்திடா தசத்துச் சத்தின் முன்” என்றார் வழிநூலாசிரியரும். முனைத்திடாமையாவது இது குடம் இஃது ஆடையென நம்மனோரால் சுட்டியறியப்படுமாறு போல முதல்வனுற் சுட்டி அறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். ஆகவே, ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியமென்றது கொண்டு அவசித்தாந்தமாதல் யாண்டையது என மறுத்துச் சத்து அறியாது என்றதனை வலியுறுத்தியவாறு காண்க.

மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். முற்றுணர்வுடைய சிவத்துக்கு அசத்தை விடயிப் பதாய சுட்டுணர்வும் உண்டென்றுற் படும் இழுக்கு என்னை? ¶¶என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ - ள். தன்னியல் பாகிய இயற்கை யுணர்வின் முன்னர்ப் பொதுவியல் பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையான் ‘ஈண்டுச் சத்தி னிடத்து அசத்துப் பிரகாசியாது’ என மேற்கொண்டது. எ - று.

பிரகாசித்து நிற்ற லின்மையாவது இயற்கை யுணர்வோ டொப்ப ஒருங்கு நில்லாமை. எக்காலத்தும் நிலைபெறுவதாய தன்னியல்பே‘மெய்’எனவும் இடை யே தோன்றி மறைவதாய பொதுவியல்பே‘பொய்’ எனவுங் கூறப்படுவன வாக

---

* சிவஞானசித்தி, க-ம் சூ. ககூ. விந்துவின். † சிவப்பிரகாசம், பொது. க-ம் சூ. உ. நீடுபரா. ‡ இந்நூல். க-ம் சூ. உ-ம் அநி. உ. வித்துண்டா ¶ சிவஞானசித்தி, உ-ம் சூ. நுகூ. நித்தமாய். §மேற்படி. நு-ம் சூ. எ. o மேற்படி. க-ம் சூ. நுசு. ** திருநாவுக் கரசுநாயனர் நின்ற திருத்தாண்டகம், பொது. சூ-ம் திருமுறை. க. †† சிவப்பிரகாசம், உண்மை. நி-ம் சூ. ஈ. கண்டறி. ‡‡ சிவஞானசித்தி, எ-ம் சூ. க. அனைத்துஞ். ¶¶ சிவாத்துவிதசைவர்.

லான் அவை ஈண்டைக் கேற்புடைய அறிவின்மே னின்றன. இஃதறியாதார் உரைப்பன எல்லாம் மேற்கோளைச் சாதித்தற் குரிய ஏதுவாதல் செல்லாது கூறியதுகூறலாய் முடிபுமென் றொழிக.

அன்னியமி லாமை யரற்கொன் றுணர்வின்மு
மன்னியமி லானசத்தைக் காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணு வசத்தின்மை மற்று.

. எ—து. உ—ம். எ—னின். சுட்டுணர் வின்மையான் முதல்வன் அசத்தை அறியா னெனின் முற்றுணர் வுடைமைக் கிழுக்காம் *என்பாரை நோக்கி இழுக் கின்மை கூறி ஏதுவை வலியுறுத்தத னுதலிற்று.

இ - ள். அன்னியம் இலாமை அரற்கு †உணர்வு ஒன்று இன்று ஆம்.எ-து. தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு வேற்றுமை யின்றி உடனுய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக் கிட்ப்பதொன் றில்லை ஆக லான்,—அன்னியம் இலான் அசத்தைக் காண்குவனேல் அன்னியமாக் காணு ன். எ-து. அத்தன்மையனுகிய முதல்வன் அசத்தை யறியாதுவனுயின் அறிந் தாங் கறிவனன்றி நம்மினுர்போல வேறுகச் சுட்டியறிவா னல்லன்,—கதிர் முன் இருள் போல அவன் முன் மாணு அசத்து இன்மை. எ-து. ஞாயிற் றின் முன் இருட்டுப் போல அம் முதல்வ னெதிர் நன்மை யில்லாத பிரபஞ் சம் விளங்கி நில்லாது ஆகலான். எ - று.

எனவே, அசத்தை விடாயிப்பதாகிய ஏகதேச வுணர்வு முற்றுணர்வைத் தடுப்ப தாகலான் அஃது இல்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவ தன்றி இழுக்காகா தென வே மகற்றி ஏதுவை வலியுறுத்தவாறு காண்க.

மாணுமை வியாபக வுணர்விற்கு விடய மாகாமை. இன்மை ஈண்டு விளங் காமை குறித்து நின்றது. மற்று அசை. மற்றுக் காண்குவனேல் என மேலே கூட்டி விஞமாற்றின்கண் வந்த தெனினு மமையும். உணர்வுங் கதிரும் ஆகு பெயர். கதிர்முன் னிருள் ஈண்டு மூன்யாமை மாத்திரைக்கு ஒருபுடை யுவமை யாயிற் றென்பது வழிநூலாசிரியர் ‡ "மூன்றத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல்" என்றவாற்று னறிக.

முதலதிகரண முடிந்தது.

* சிவாத்துவிதசைவர். † உணர்வு உணரக் கிடப்பதாகிய பொருள். ‡ சிவஞான சித்தியார், எ-ம் சூ. க. அனைத்தும்.

இரண்டாமதிகரணம்.

இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

எ–து. மே–ள். எ–னின். சத்து அசத்தையறியாதாயினும் அசத்து எனப் பட்ட தனு கரண புவன போகங்களுள் ஒன்றிய கரணம் விளக்குப் போல் விகார மின்றி நிற்கும் ஆன்ம சந்நிதியிற் பெதத நிலைக்கண் அசத்தாய விடய ங்களை யறிந்தாற்போல முத்தி நிலையிற் சிவகரணமாய்நின்று சிவத்தை அறியு மென்றலும் கண்ணுடியி னிழல் போல ஆன்ம சந்நிதியின் அதன்க ணறிவு உண்டா மென்றலும் அமைவுடைத்துப் போலு மெனச் சிவசங்கிராந்தவாதி மதம் பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றிற் போந்த ஏதுவைக் கண்ணழித் துரைத்து மேற்கோட. னுதலிற்று இ–ள். வெ–டை.

சூத்திரத்தின் இலது என்றது அறிவிலது என்னும் பொருட்டு என்பார் 'உணர்வின்று' என உரைத்தார். ஈண்டு 'அசத்து' என்றது தத்துவப் பிரபஞ் சத்தை; ஆணப் பிரபஞ்சத்திற்கு அறிவின்மை சாதிக்க வேண்டாமையின்.

அதுதா னிருபிக்கில் இன்றுகலான்.

எ–து. ஏது. எ–னின். பதிஞான பசுஞானங்களோ டொப்பப் பாசஞான மொன்றெனவைத் தெண்ணப்படு முரிமையுடைய வகனை அறிவுடைத்தன் றென்றல்பொருந்தாது*என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ - ள். ஆவ்வறிவாவது தூலமாய் நோக்கும்வழி அவ்வசத்துக்கு உள் ளது போலத் தோன்றினும் யோக திருஷ்டியின்றி மாசறு காட்சியான் ஆராயும்வழி அதன்கண் இல்லா தாகலான் 'இனி அசத்தினுக்கு உணர்வின்று' என மேற் கொண்டது. எ - று.

எனவே, பாசம் வாயிலாக உயிரின்கண் நிகழும் ஞானமே பாசஞானம் என்று உபசரித்துக் கூறப்படும். அதனைப் பாசத்திற் குளதாகிய ஞான மெனக் காண்டல், நிருபியாதவழிப் படும் மடமையே பிறிதில்லை என்றவா முயிற்று.

> பேய்த்தேர் நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
> பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
> கண்டுணர்வா ரில்வழியிற் காணு மசத்தின்மை
> கண்டுணர்வா ரில்லதெனக் காண்.

எ–து. உ–ம். எ–னின். அதனை உவமை முகத்தான் வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு மற்று அணைந்த பேய்த் தேர் அசத்து ஆகும் பெற்றிமையின். எ-து. பாலைநிலத்தின்கட் காணப் படுவதாய பேய்த்தேரை நீரென்று கருதி அதனை யுண்ண வருகின்ற நீர் வேட்

* சிவசங்கிராந்தவாத சைவர்.

கையுடைய மடவோனுக்கு அதனி யடித்தவழித் தன்னு லணியப்பட்ட அப் பேய்த்தேர் நீராத லின்றிப் பொய்யாந் தன்மை போல,—வாய்த்து.எ-து.குர வன் அறிவுறுக்கும் உபதேச மொழி கிடைத்து—அதனைக் கண்டு உணர்வார் இல்வழியின் அசத்து இன்மை காணும். எ-து. அவ்வசத்தி னியல்பை ஆரா ய்ந் தறிவா ரின்றி அறியமாட்டாதார் உள்வழி அவர்க்கு அதன்க ணறிவுள்ள தாய் மதிக்கப்படுஞ் சத்தாந் தன்மையே காணப்படும்,—கண்டு உணர்வார் இல்லது எனக் காண். எ-து. அவ்வுபதேசமொழி கிடைத்து அதனியல்பை ஆராய்ந்தறிய வல்லார்க்கு அவ்வசத்து அறிவில்லதேயா மென்று அறிவா யாக. எ-று.

மற்று விணைமாற்று. மை பகுதிப்பொருள் விகுதி. இன் உவமவுருபு. வாய்த்தென்பது வாய்ப்ப என்பதன் றிரிவு. வாய்த்தல் நேர்படுதல். ஆண் டைக் கேற்புடைய விணைமுதல் அவாய்நிலையான் வந்தது. அசத்தின்மையா வது சத்தாந்தன்மை. நான்க னுருபு விகாரத்தாற் றொக்கது. அறிவு என்பது அதிகாரத்தான் வந்தது.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

இனி இருதிற னறிவுள தெரண்டலா வான்மா என்றது.

எ-து. மேல்—எ-னின். சிவசத்தின் றன்மையே யுயிர்க்குத் தன்மை யாவ தன்றி வேறில்லை யாகலிற் சத்தே அசத்தை அறியு மென்னுஞ் சிவாத் துவித சைவரையும் உயிர்க்குத் தன்மையென்பதொன் றின்மையின் அசத்தே சத்தை அறியு மென்னுஞ் சிவசங்கிராந்தவாத சைவரையும் மறுத்துச் சத்தும் அசத்துந் தம்மு ளறியுமா றில்லையென மேற் சாதித்தவழி இரண்டும் இவ் வாறுயின் இவற்றை யறியும் பொருள் வேறு வேண்டு மென்பாரை நோக்கிப் பரிசேட வளவையான் அவ்விரண்டின் வேறுமாய் உயிர்க்குத் தன்மை யுண்டெ ன்பது விளக்கிச் சதசத்தி னியல்பை வரைசெய்து உணர்த்துத லுதலிற்று. இ-ள். வெ-டை.

ஈண்டு இரண்டலா வான்மா இருதிற னறிவுள தென்றது சத்தெதிர் நில்லாத அசத்துஞ் சத்துந் தம்முள் ஒன்று மொன் றறியப்படாமையான் இரு திறனறிவுளது இரண்டலா வான்மாவேயாம். தம்முள் ஒன்று மொன்று அநுப விக்கப்படாத ஞாயிற்றையும் விடயத்தையும் அநுபவிக்குங் கண் போலு மென அனுமானங் கூறிக் காண்க. அவை உயிராலும் அறியப்படாதவழிப் பயப்பாடின்றிச் சூனியமாய் முடியு மாகலான் உயிர் அறிதற் றன்மைத்து என் பது தெற்றென உணர்க.

இவ்விரண்டினையு மறிவதாய் உபதேசியாய் நின்ற அவ் வறிவு இரண்டன்பாலு முளதாய் உள்ள வதுவே அவ்வான் மாவாம் என்றது.

எ–து. பொ–ரை. எ–னின். இருதிறனறிவு என்னுந் தொகைச் சொல் விரியுங்காற் படும் பொருள் வேறுபாடு விளக்கும் முகத்தான் உயிர்க்குத் தன்னியல்பு வேறுவேறு கூறுஞ் சமயங்க ளெல்லாம் மறுக்கப்படுமா றுணர்த்துத னுதலிற்று.

இ - ள். இவ்விரண்டினையும் அறிவதாய். எ-து. மேற் கூறிப்போந்த சத்தையும் அசத்தையும் அறியுந் தன்மைத்தாய்,—உபதேசியாய். எ-து. அறிவிக்க அறியுந் தன்மைத்தாய்,—அ இரண்டன்பாலும் நின்ற அறிவு உளதாய். எ-து. அவ்விரண்டின்கண்ணும் நிலைபெற்ற அநுபவ வறிவு உள்ளதாய்,—உள்ள அதுவே அவ் வான்மா ஆம் என்றது. எ-து. இவ்வாறுள்ள பொருள் யாது அதுவே சத்தும் அசத்து மல்லாத சதசத்தாகிய உயிர் என்றவாறும். 'இருதிறனறிவுள திரண்டலா வான்மா' என மேற்கொண்டது. எ - று.

ஆய் என்னும் வினையெச்சம் மூன்றும் உள்ள என்னும் பெயரெச்ச வினைக்குறிப்போடு முடிந்தன.

இருதிறனறிவு என்னும் தொகைச் சொல் ஈண்டு மூன்று பொருளின் மயங்கிற் றென்னுங் கருத்தான் இவ்வாறு மொழிந்தார். அவற்றுள், இருதினையு மறியு மறிவென்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகைப் பொருள் பற்றி 'இவ்விரண்டினையு மறிவதாய்' எனவும், இருதிறனுல் விளங்கிய வறிவென்னும் மூன்றும் வேற்றுமைத் தொகைப் பொருள் பற்றி 'உபதேசியாய்' எனவும், இருதிறனிலு முள்ள வறிவு என்னும் ஏழாம் வேற்றுமைத் தொகைப் பொருள் பற்றி 'நின்ற வறிவு இரண்டன்பாலு முளதாய்' எனவும், உரைக்கப்பட்டன.

'இவ்விரண்டினையு மறிவதா யுள்ள அது' என்பதனுல் இரண்டும் இவ்வாறுயின் இவற்றை யறியும் பொருள் வேறு என்னோ? என்னுங் கடாவுக்கு விடை கூறி அவ்விருவர் மதங்களையும் அவற்றோடு ஒருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

'உபதேசியா யுள்ள அது' என்றதனுல் உயிர் அறிவிக்க வேண்டாது தானே யறியு மியல்பிற் றென்னுஞ் சமவாதசைவர் ஈசுரவிகாரவாதசைவர் ஐக்கவாதசைவர் மதங்களையும் அவற்றோ டொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

'இரண்டன்பாலு முளதா யுள்ள அது' என்பதனுல் ஆன்மாவி னறிவு சத்தோடு கூடுமா றில்லை என்னும் பாடாணவாதசைவர் பேதவாதசைவர் மதங்களையும் சத்தோடு கூடியவழி ஒன்றுப்போ தலே யன்றி அதன்பாலுளதாமா றில்லை யென்னுஞ் சுத்தசைவர் மதத்தையும் அவற்றோ டொருதன்மையவான சமயங்களையும் மறுத்தவாறு.

'இவ்விரண்டினையு மறிவதாய்' எனவே அவ்வறியுந் தன்மை இவ்விரண்டின் றன்மைபோ லன்றி *''இரு ளொளிய லாக்கண் டன்மை'' போல வேறுயதோர்

* சிவப்பிரகாசம், உண்மை. கூ–ம் சூ. சூ. சத்திது.

தன்மை என்பதூஉம், 'உபதேசியாய்' எனவே அஃதாகாயத்தின் குணமாய ஓசையி னியல்பு போலத் தன்னை விளக்குவதாகிய வியஞ்சக மூல்வழி விளங் குவதோர் தன்மை என்பதூஉம், 'இரண்டன்பாலு மூளதாய்' எனவே அத் தன்மை படிகம் போலச் சார்ந்ததன்வண்ணமாய் அழுக்குந் தன்மை என்ப தூஉம், பெறப்பட்டன.

அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
வருவுருவ மன்றுகு முண்மை—யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்று நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றெருக்கு.

எ—து. உ—ம். எ—னின். அம்மூன்றனுள் முன்னியதனை வலியுறுத்தி இர ண்டலாமையை விளக்குதல நுதலிற்று.

இ-ள். ஆய் இழை ஆய் ஆன்மா அரு உருவம் அறிதல் அரு உரு வம் அன்று ஆகும். எ-து. நுணுகிய நூல்களை ஆராய்வதாகிய உயிரே சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறிவ தாகலான் அஃது அவ்விரண்டு மின்றி அவற்றின் வேறும். அற்றேல், அவ்விரண்டினையு மறிவு முயிர்க்குத் தன்னு ண்மை யறியப்படுமோ? படாதோ? எனக் கடாயினார்க்குப் படும் எனில் தன் னை யுளப்பட மூன்றனையு மறிவ தென்னை அவ்விரண்டினையு மறிவதா யென் றல் பொருந்தாது; படாதெனின் அறியப்படாத பொருள் சூனிய மெனப்ப ட்டு வழுவாமால் எனின்,—உண்மை அரு உருவாய்த் தோன்றி உடன் நில் லாது தோன்றுது நில்லாது மலர் மணம் போல் தொக்குத் தோன்றல். எ-து. அவ்வான்மாவி னுண்மைத் தன்மை அவ்விரண்டும் போல விளங்கித் தோன்றி அவற்றோடு ஒப்ப நிற்பது மன்றாய் விளங்காது சூனியமாய் நிற்பது மன்றாய் மலரின்கண் வாசம் அவ்விருவகையு மின்றி அதன்க ணடங்கித் தோன்றுமாறு போலச் சத்திலும் அசத்திலுஞ் சார்ந்ததன்வண்ணமாய் அடங்கித் தோன்று வதோ ரியல்பாம். ஆகலான், அஃது அவை போலத் தனித்து அறியப்படுவ தொன்றன்றி அவ்விரண்டினையு மறியும் முகத்தான் அறியப்படுவதாம். எ-று.

ஆகலான் அஃது அவை போலத் தனித் தறியப்படுவதொன் றன்றி அவ் விரண்டினையு மறியும் முகத்தான் அறியப்படுவதாம் என்பது குறிப்பெச்சம்.

சுட்டுணர்விற்கு விடயமாகாமை பற்றிச் சத்தை 'அரு' என்றும் அதற்கு விடயமாதல் பற்றி அசத்தை 'உரு' என்றுங் கூறினார். 'உணருரு அசத்து' என் புழி 'உரு' என்றதும் அது நோக்கி. செவ்வெண் டொகை விகாரத்தாற் றெருக்கது. தான் அசை.

அறிதலான் அன்றுகு மென இயையும்.

இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை யுணர்த்திற்று.

ஆய்தல்—நுணுகுதல். * ''ஒப்த லாய்த னிழுத்தல் சாஅ—யாவயி னுன்கு முள்ளத னுணுக்கம்'' என்றார் தொல்காப்பியனாரும். 'ஆயிழையாய்' எனப் பொ ருளி னுணுக்கம் தான்மே லேற்றப்பட்டது; இரண்டாவது விரித்துரைக்க.

* சொல்லதிகாரம், உரியியல். கூச.

உயிர்க்கு அறியுந்தன்மை யுண்டாகலா னன்றே வேதாகமம் முதலிய நூல்கள் உளவாயின என அதனை வலியுறுத்துவார் 'ஆயிழையா யான்மா என அதனை யுடம்பொடு புணர்த்து ஓதினர். இக்கருத்தே பற்றி, *"'பலகலை யுலகி னிலவுத லானும்" என்றார் புடைநூலாசிரியரும். இவ்வா றன்றி ஆயிழையாய் என மகடூஉமுன்னிலை யாக்குவார்க்கு இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்துதற் கெழுந்த தன்றுரைக் கூறியதுகூறல் என்னும் வழுவாய் முடியும் என் றுழிக. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. அருவுருவாய் என்புழி ஆக்கச் சொல் உவமைப் பொருள் குறித்து நின்றது; †"ஆள்வா நிலிமா டாவேனே" என்றாற்போல. தொக்குத் தோன்றல் மலர் மணம் போல் எனக் கூட்டுக.

மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்
பெயர்த்துணர் நீ சத்தாகாய் பேசி—லசத்துமலி
நீயறிந்து செய்வினைக ணீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

எ–து. உ–ம். எ–னின். அங்ஙனம் அறியும் உயிர் சிவசத்தோ டொப்பச் சித்தாகும் என்பாரை நோக்கி 'உபதேசியாய்' என்றதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ - ள். மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும். எ-து. நின்னறிவை விளக்குதற்கு உரிய வியஞ்சக மில்வழி ஒரு விடயத்தை இன்னதென் றறிய மாட்டாது மயக்கத்தை யுற்றும் பசி நோய்க்கு அன்னம் போல அம்மயக்க நோய்க்கு மருந்தாய வியஞ்சக முள்வழி அம் மயக்கம் நீங்கி அதனை யின்ன தென்று நிச்சயித்தும்,—பெயர்த்து உணர் நீ பேசில் சத்து ஆகாய். எ-து. இங்ஙனம் மாறிமாறி யுணர்ந்து வருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவசத்தோடு ஒப்ப அறியுஞ் சத்தியுடையாய் அல்லை. அற்றேல் அசத்த ஞானென் போலும் எனின்,—நீ அறிந்து செய் வினைகள் நீ அன்றி அசத்துத் தான் அறிந்து துய்யாமை அசத்தும் அலை. எ-து. வியஞ்சகம் உள்வழியும் நீ முன் அறிந்து செய்த வினைகளை இப்பொழுது நீயே யறிந்து அநுபவிக்க வல்லையன்றி நின்னின் வேறுய் அசத்தாகிய பாசம் அறிந்து அநுபவிக்கமாட்டா மையான் அதனை டொப்ப அசத்த ஞாயு மல்லை,—வேறு.எ-து.சத்த குணமுடைய ஆகாயம் போல வியஞ்சகம் உள்வழி அறிவு மாற்ற லுடைமையும் அஃது இல்வழி அவ்வாற்ற லின்மையு மாகிய இரண்டு முடைய நீ அவ்விரண்டற்கும் வெறுய்ச் சிதசித்தாந்தன்மை யுடையை. எ - று.

'மருந்திற் றெளிந்து'எனவே மயங்குதல் அஃது இல்வழி யென்பது பெற்றும். வியஞ்சக மில்வழித் தலைப்படுவதூஉம் அஃது உள்வழி நீங்கி நிற்பதூஉ மாகிய மயக்கம் உண்டி யில்வழித் தலைப்படுவதூஉம் அஃது உள்வழி நீங்கி நிற்பதூஉம் ஆகிய இயல்புடைய பசியோ டொத்தலின் அதனைப் பசிநோயாகவும், தீர்த்த லொப்புமை பற்றி வியஞ்சகத்தைப் பசி தீர்க்கும் மருந்தாகவும்

* சங்கற்பநிராகரணம். நிமித்தகாரணபரிணமவாதிசங்கற்ப நிராகரணம். சஅ-ம் அடி. † திருவாசகம், கோயின் மூத்ததிருப்பதிகம். எ. இரங்கு.

உருவகஞ் செய்தார். இஃது * ஏகதேசவுருவகம். மருந்தெனப் பொதுப்பட உருவகஞ் செய்தா ராயினும் மறித்து மறித்து வேண்டப்படுமாறு ஈண்டைக்கு ஏற்புடையது பசிநோய் தீர்க்கும் மருந்தே யாகலின் அவ்வாறு உரைக்கப் பட்டது.

அது பகுதிப்பொருள் விகுதி. உம்மை எண்ணின்கண் வந்தது. அசத்தும் என்னும் உம்மை இறந்தது தழீஇயிற்று. தான் என்பது முன்னையது எழுவாயுருபுபட நின்றது. பின்னையது அசைநிலே. துவ்வாமை துய்யாமை என மரீஇயிற்று. சத்தியுடைய பொருள் சத்தம், அஃதில்பொருள் அசத்தம் ஆகலின், அவ்வடமொழிகள் ஈண்டு அம்முக் கெட்டுக் குற்றியலுகரவீறுப் நின்றன; †"நாகணையான்" ‡"பெற்றிரன் றுயர்த்த பெருமான்" ¶"பேது செய்து" §"வாது செயத்திரு வுள்ளமே" என்புழிப் போல.

அசித்துமலே என்பது பாடமாயின், மேற் சத்தாகாய் என்றதனே இசை யெச்சமாகக் கொண்டு சத்தாந்தன்மையே யுடையா யல்லே; அதன்மேலுஞ் சித்தாமாறு யாங்ஙனம்? என்று உரைத்து இயைத்துக் கொள்க. இவ்வா றன்றி ஈண்டுச் 'சத்தாகாய்' 'அசத்துமலே' என்பவற்றை மேலே அருவுருவ மன்றுகும் என்றதன் பொருள் படக் கொண்டு உரைப்பாரும் உளர். அவர் ஆண்டே அமைந்து கிடந்த பொருளே மறித்துங் கூற வேண்டாமையும், 'பெயர்த்துணர் நீ' எனவும், 'அறிந்து துய்யாமை' எனவும், 'அறிவுடைமை அறிவின்மை பற்றிக் கூறும் பொருள் அவையாதல் செல்லாமையும் நோக்கிலர்.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத
லஞ்ஞான மூள்ள மணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்
றானே யுளமுளவாத் தான்.

எ-து. உ-ம். எ-னின். அம்மயக்கம் அவ்வுயிரோடு இயைபுடைய முதல் வனுக்கும் உண்டு போலும் எனவும் அதுதான் உயிர்க்கு எக்காலத்து வந்தது எனவும் நிகழுங் கடாவை விடுக்கும் முகத்தான் 'இரண்டன்பாலு முளீ தாமாறு' வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அஞ்ஞானம். எ-து, மேற் கூறிப்போந்த மயக்கமாவது,—மெய்ஞ் ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது. எ-து. ஒருபெற்றித்தாய அறிவு எனப்படுஞ் சிவத்தின் எதிர் கதிர்முன் இருள் போல நிலையுதல் இல்லதாக லின் ஆண்டு உளதாதல் இன்றி,—மெய்ஞ்ஞானம் தானே உள வன்றே. எ-து.

* ஏகதேசவுருவகமாவது ஒருபாகத்தை உருவகஞ்செய்து மற்றைப்பாகத்தை உருவகஞ் செய்யாது விடுதல். வியஞ்சகத்தை அன்னமாக உருவகஞ்செய்து மயக்கத்தைப் பசியாக உருவகஞ் செய்யாமையால் இஃது ஏகதேச வுருவகம். † திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் தேவாரம், கோயில். முதலாந்திருமுறை. கூ. கோணுகணையானும். ‡ மேற் படி, திருப்பாசுரம். பொது. கக. அற்றன்றி. ¶ சிவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம். கூஉ. நீதியா. § திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் தேவாரம், திருவாலவாய். காலடி மேல்வைப்பு. உ. வைதிகத்தின்.

அச்சிவம் என்று உள்ளது அன்றே,—தான் ஏய் உளம் உளவா. எ-து. தான் பொருந்துதற்கு உரிமையுடைய உயிர்கள் உள்ளனவாக,—உள்ளம் அணைதல். எ-து. அவ்வுயிர்களைப் பற்றி நிற்றல்,—தண் கடல் நீர் உப்புப் போல் காண் எ-து. தண்ணிய கடலின்கண் உளதாதல் இன்றி அக்கடலிடத்து உளதாகிய நீரைப் பற்றி நிற்கும் உப்புப் போல் என்று அறிவாயாக. எ - று.

வினையாது என்னும் வினையெச்சமறை அணைதல் என்னுந் தொழிற்பெயரோடு முடிந்தது. தானே என்பது கட்டுரைக்கண் வந்தது. 'தானே உளம் உளவாத் தான்' என்புழித் 'தான்' என்பது முன்னியது எழுவாய்; பின்னியது அசைநிலை. ஏய் உளம் என்னும் வினைத்தொகை *"அறிவறிந்த மக்கட் பேறு" போல நின்றது. ஏய்தற்கு உரிமையாவது †மேற் காட்டினும்.

'தண்கடனீ ருப்புப்போல்' என்றதனால் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறும் பெறப்பட்டது. இரண்டன்கண்ணும் உயிர்க்கு இயைபுடைமை கூறவே, இரண்டன்பாலும் உளதாதலே வலியுறுத்தவாறு காண்க.

'ஈண்டு இருதிறனியு மறியு மறிவுளது' எனவே இருதிறனுகிய சத்து அசத்து எனப்பட்டன எல்லாம் ‡பிரமேயம் அவற்றை அறியுஞ் சதசத்தாகிய உயிர் ¶பிரமாதா அவ்வுயிரின் அறிவாகிய சிற்சத்தி §பிரமாணம் அவ்வறிவு நிகழ்ச்சி ○பிரமிதி என்பதாயிற்று, 'இருதிறனுள் விளங்கு மறிவுளது' எனவே அவ்விரண்டனுள் அசத்தான் அறிவு விளங்கும்வழித் தனக்கு வேறாய் நின்று விளக்குவனவாய காட்சி அனுமானம் உரை எனப்படும் அசத்தாகிய பாசஞானம் மூன்றும் சத்தான் அறிவு விளங்கும்வழி அன்னியம் இன்றித் தனக்கு ஆதாரமாய் உடன் நின்று விளக்குஞ் சிவஞானமுந் தனக்கு வியஞ்சகங்கள் ஆகலான் அது பற்றி அவையும் பிரமாணம் என்று உபசரித்துக் கூறப்படும் என்பதாயிற்று, 'இருதிறனினு மறிவுளது' எனவே ஈரிடத்துங் கேடின்றி அசத்தான் விளங்கி அசத்தை அறிவுழி அசத்தின்பாலும் சத்தான் விளங்கிச் சத்தை அறிவுழிச் சத்தின்பாலும் அதுவதுவாய் அழுந்தும் என்பதாயிற்று.

இவ்வாறன்றி வியஞ்சகங்களையே பிரமாணம் என்னுந் தார்க்கிகர் முதலியோர் மதங்கள் **பொருந்தாமையும், அவ்வியஞ்சகங்களான் நிகழும் பிரமிதி வேறுபாடும், அவற்றது இயல்புகளும், ஈண்டு விரிப்பிற் பெருகும்; பெரியட்சரம் முதலிய சிவாகமங்களுட் கண்டுகொள்க.

மூன்றுமதிகரண முடிந்தது.

எழாஞ்சூத்திர முடிந்தது.

---

* திருக்குறள். சுக. பெறுமவற்றுள். † கூசும் பக்கத்திற்காண்க. ‡ பிரமேயம்-அளக்கப்படும்பொருள். ¶ பிரமாதா-அளப்பவன். § பிரமாணம்-அளவைக்கருவி. ○ பிரமிதி-அளத்தல். ** இதனை கசசும் பக்கத்துக்குறிப்பிற்காண்க.

எட்டாஞ் சூத்திரம்.

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

எ-து. சூ-ம். எ-னின். ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துத லுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்து உணர்த்துத லுதலிற்று.

இ-ள். அவ்வான்மாவின் அறிவாவது மேல் 'இருகிறன்' என்றதனுள் அசத்தான் விளங்கி அசத்தின்பால் உளதாய் அசத்தினை அறிந்து * நின்ற வாறுஞ் சத்தான் விளங்கிச் சத்தின்பால் உளதாய்ச் சத்தினை அறிந்து † நிற் குமாறுந் தரிசிக்கும் முறைமையினை உணர்த்தும் முகத்தாற் சாதித்தற்கு உரிய அதிகாரந் தனக்கு உண்டென மேலைச் சூத்திரத்தான் அறிந்த ஆன்மா வக்குச் சாதித்ததனைப் பெறப்படும் ‡ பயனும் அதற்குச் ¶சிறந்த சாதனமா வதும் §அது வருவாயும் இவை என்பது உணர்த்துதல் இவ்வெட்டாஞ் சூத் திரத்தின் கருத்து. எ-று.

இதனானே சூத்திர இயைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு. உயிர் தான் முன்னே செய்து கொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தால் தனக்கு அந்தரியாமியாய் இதுகாறும் உள் நின்று உணர்த்தி வந்த பரம்பொருளை இப்பொழுது குரு வடிவமுங் கொண்டு எழுந்தருளி வந்து சிவதீக்கை செய்து, மன்னவ குமாரனுகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருட் பட்டு வளர்ந்து நின் பெருந்தகைமையை அறி யாது மயங்கி இடர்ப்பட்டாய் நின் பெருந்தகைமையாவது இவ்வியல்பிற்று என்று அறிவுறுப்ப அறிந்தமாத்திரையே அவ்வேடரை விட்டு நீங்கி அன்னிய மின்றி அனன்னியமாந் தன்மையின் நிலைபெற்று அம்முதல்வன் திருவடிகளை அணையும். எ-று.

உயிர் என்பது மேலைச் சூத்திரத்தி னின்றும் வருவித்து உரைக்கப்பட் டது. தவத்தினிற் குருவுமாய் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த விட்டுச் செல்லும் என இயையும். புலன் ஆகுபெயர். வளர்ந்து அயர்ந்தனை என்பது "ஈந்து புகழ் பெற்றான்" என்புழிப் போலக் காரணகாரியப் பொருட்டாய் நின் றது. தம் முதல் என்றது வேறு முடிபாகலிற் பால் வழுவின்மை உணர்க.

குருவும் என்ற உம்மை உயிர்க்கு உயிராய் உள் நின்று உணர்த்திய தாமும் அன்றி என இறந்தது தழீஇயிற்று: சிறப்புமாம்.

---

* அசத்தான் விளங்குதன் முதலியன பெத்தநிலைக்கண்ண ஆகலின் நின்றவாறு என இறந்தகாலத்தாற் கூறினர். † சத்தான் விளங்குதன் முதலியன முத்திநிலைக்க ண்ண ஆகலின் நிற்குமாறு என எதிர்காலத்தாற் கூறினர். ‡ பயன் அரன்கழல் சேறல். ¶ சிறந்தசாதனம் ஞானம். § அதுவருவாய் தவம்.

அன்னியமின்மை அத்துவிதம். அஃதாவது சேறலைப் பயப்பித்ததாய் ஆண்டு உளதாகிய இயைபு.

அரனென்றது சுட்டுப்பெயர்பட நின்றது.

வெண்கொற்றக் குடையும் ரவமணி முடியுஞ் சிங்காதனமும் மன்னவர்க்கே உரிய சிறப்படையாளமாம்; அது போலப் பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாம் இயல்பாகிய ஒரு பெரு வெண்கொற்றக் குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான் அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர் முடியும், அங்ஙனே உயிர்க்கு உயிராய் நின்று எவற்றினீயுஞ் செலுத்தும் இயல்பாகிய ஒரு பெருஞ் சிங்காதனமும் பிறர் ஒருவர்க்கு இன்றித் தனக்கே உரிமையாகச் சிறந்தமை பற்றிப், பசுக்களுக்குப் பாசங்களே அரித்தலான் அரன் என்னுந் திருப்பெய ருடைய முதல்வனே, மன்னவனுகவும், அம்முதல்வனது பேரானந்தப் பெருஞ்செல்வம் முழுதுந் தனதேயாகக்கொண்டு அநுபவிக்குஞ் சுதந்திர முடைமையுஞ் சித்து எனப்படுஞ் சாதி ஒருமையும் பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனுகவும், அவ்வான்மாவை அறிவுப் பெருஞ்செல்வம் முழுஞ்தையும் ஆறலைத்துக்கொண்டு சிறுமை உறுத்ததலும் விதி விலக்கை இழப்பித்து இழி தொழிலில் நிற்பித்ததலும் ஆகிய இயல்பு பற்றி ஐம்பொறிகளே வேடராகவும் உருவகஞ் செய்தார். இஃது *ஏகதேச உருவகம்.

'ஐம்புல வெடரி னயர்ந்தனே வளர்ந்தென' எனவே ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ததலும் அநுவாத முகத்தாற் பெற்றும்.

இதனுள், தவத்தினி லுணர்த்த என்றது ஓதிகரணம்; தம்முதல் குருவுமாய் என்றது ஓதிகரணம்; ஐம்புலவேடரி னயர்ந்தனே வளர்ந்தென என்றது ஓதிகரணம்; விட் டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே என்றது ஓதிகரணம்; ஆக நான்கதிகரணத்தது இச்சூத்திரமென்று உணர்க.

மூதலதிகரணம்.

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழும் என்றது.

எ–து. மே–ள். எ–னின். †மேற் கூறிப் போந்த சாதகசாற் செய்யப்படுஞ் சாதனமும் அது வருவாயும் வேறுவேருகக் கூறுஞ் சமயத்தாரை நோக்கிச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

மேற் கூறிப்போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கு என்பார் 'இவ்வான் மாக்களுக்கு' என்றார்.

---

* ஐம்பொறிகளே வேடராக உருவகஞ் செய்து முதல்வனே மன்னவனுகவும் உயிரை மன்னவ குமாரனுகவும் உருவகஞ் செய்யாமையால் இஃது ஏகதேச உருவகம்.

† வழாஞ்சூத்திரத்தில்.

படிமுறையான் அன்றி இவ்வொரு பிறவியிற் செய்த தவத்தானே அமையாதென்பது உணர்த்துதற்கு 'முற்செய் தவம்' என விசேடித்தார்.

ஈண்டு ஞானம் என்றது குரவன் உணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகக் கொண்டு அறிவதாகிய சாதன அறிவின் மேற்று.

நிகழ்தல் ஐயந் திரி பின்றி விளங்குதல்.

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோகூத்தைக் கொடாவாகலான்.

எ-து. ஏது. எ-னின். தவங்களே சாதனமாதல் அமையும் ஞானம் எற்றுக்கு ஏன்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று. இ-ள். வெ-டை.

ஈண்டுத் தவம் எனப்பட்டன பிற அல்ல என்பார் சரியை கிரியா யோகங்களே எனக் கிளந்து உரைத்தார்.

கிரியா யோகங்கள் என்னும் உம்மைத் தொகை வடநூன் முடிபு. கிரியா யோகம் இரண்டற்குந் தீக்கை ஒன்று என்பது தோன்ற அவ்விரண்டனையுங் *தொகுத்து ஒகிச் சரியையைத் தமிழுக்கு உரிய ஈற்றன் வேறு வைத்தார்.

ஆளுடையபிள்ளையார் முதலாயினர்க்குத் தவம் இன்றியும் ஞானம் நிகழ்ந்தவாறு என்னை? என்னுங் கடாவை விடுத்தற்கு 'மேற் செய்துழி' என ஈண்டும் வலியுறுத்தார்.

மேலாகிய உண்மைச் சரியை கிரியா யோகங்களே எனினும் அமையும்.

காட்டிக் கொடுக்கும் எனற்பாலதனை எதிர்மறைமுகத்தாற் கூறினர், ஞானத்தை இன்றி அமையாமை உணர்த்துதற்கு. சரியை கிரியா யோகங்களைச் செய்துழி என்றது உபலக்கணம் ஆகலின் தீக்கை பெற்றுழி அதுவும் ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கொடாது எனக் கொள்க. அவையெல்லாம் ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கொடாமையை வலியுறுத்துவார் 'நன்னெறி யாகிய' என ஞானத்தை விசேடித்தார். நன்மை எனப்படுவன எல்லாவற்றினுஞ் சிறந்த நன்மையாவது வீடுபேறு என்பது. அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் 'நன்னெறி' எனப்பட்டது. வீட்டிற்கு நெறி என அவ்வச் சமயத்தாராற் கூறப்படுவன அனைத்துந் தன்கண்ணே வந்து கூட நின்ற பெரு நெறி ஆகலானும் அது நன்னெறி எனப்பட்டது: நன்னெறி சன்மார்க்கம் என்பன ஒருபொருட் கிளவி.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றூர்சூழ் சொல்லுமாங் கண்டு.

* தொகுத்தல் - சேர்த்தல்.

எ–து. உ–ம். எ–னின். மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்தார் அவற்றுன் ஞானத்தைக் காணும் முறைமை எவ்வாறு? என்பாரை நோக்கி அஃது ஆமாறு உணர்த்தி ஏதுவை வலியுறுத்துத லுந்தலிற்று.

இ–ள். தவம் செய்தார். எ–து. சரியை முதலியவற்றைச் செய்தார்கள்,–தவலோகம் என்றும் சார்ந்து. எ–து. அவ்வத் தவப்பயன்களைப் பயப்பிக்குஞ் சாலோகாதி பதங்களை ஒருதலையாக நண்ணி ஆண்டு உளவாகிய இன்பங்களை அநுபவித்து,—பற்றுப் பவம் செய்து அறுப்பார் ஆக. எ–து. முன் உடம்பு இறக்கும் நாள் அடுத்த வினை காட்டுங் கதிநிமித்தம் பற்றி எழுந்த அவாவினை மீள நிலத்தின்கட் பிறந்து அநுபவித்து நீக்கிக்கோடற் பொருட்டு,—தவம் செய்த நற் சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை. எ–து. மீளத் தவஞ் செய்தற்கு உரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றித் தவக்குறையான் அவ்விடயப் பற்று முறுகாவண்ணம் அறுத்துத் தத்துவ ஞானத்தைத் தலைப்படுவா ராதலை,—கற்றூர் சூழ் கண்டு சொல்லும். எ–து. வீட்டு நூல்களைக் கற்றூரது சூழ்ச்சி அந்நூற் கருத்து உணர்ந்து சொல்லும். எ – று.

தவந்தானுக பிறிதொன்றுதானுக இவ்வுலகத்து உடம்பொடுநின்று ஈட்டிய வினை எல்லாம் அவ்வுலகத்திற் செலுத்தித் தத்தம் போகங்களைப் பயந்தேவிடும் ஆகலான் அவற்றை ஒரு ஞான்றும் பிறழமாட்டார் என்பார் 'என்றுந் தவலோகஞ் சார்ந்து' என்றார்.

ஆக என்னுஞ் செயவெ னெச்சம் ''உண்ண வந்தான்'' என்புழிப் போலத் தற்பொருட்டாய் நின்றது.

பற்றறுதற்பொருட்டு வந்து உதித்து எனவே ஆண்டுப் பற்றுச் செல்லாதவழி அவ்வுலகத்து நின்றுங்கே ஞானத்தை நண்ணுவர் என்பதூஉம் பெறுதும்.

கற்றூரது சொல்லுதற் றொழில் சூழ்ச்சிமேல் ஏற்றப்பட்டது.

ஆம் அசை. நற் சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதல் என்ற அருத்தாபத்தியான் இழி குலத்தோர் தத்துவ ஞானத்துக்கு உரியர் அல்லர் என்பது பெறப்பட்டது.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு
மிசைத்து வருவினையி லின்ப–மிசைத்த
விருவினை யொப்பி லிறப்பி றவத்தான்
மருவுவஞ ஞானத்தை வந்து.

எ–து. உ–ம். எ–னின். சரியை முதலிய தவங்களை தத்துவ ஞானத்தைக் காட்டும் என யாப்புறுத்து ஓதியது என்னை? வேதத்துட் கூறிய வேள்வி முதலாயினவுந் தத்துவ ஞானத்தைக் காட்டும் என்றல் அமையும் எனப் பாட்டாசாரியன் மதம் பற்றிக் கூறுவாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத லுதலிற்று.

இ–ள். இசைத்து வரு வினையில் இன்பம். எ–து. ஒரு நல்வினை செய்வான் தொடங்கி அறதூலை ஆய்வாரது உணர்வின்கண் விடயமாய் வரும் பொழுதே

தம்மாற் பெறப்படுங் காமியப் பயன்களை உடன் கூறிக்கொண்டே வருகின்றனவாய வேள்வி முதலிய அறங்களின் பயனுகிய இன்பம்,—பசித்து உண்டு பின்னும் பசிப்பாணை ஒக்கும். எ-து. முன்னர்ப் பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியான் வரும் இன்பத்தை ஒக்கும் ஆகலான்,—இசைத்த இரு வினை இறப்பு இல் தவத்தான் ஒப்பில். எ-து. ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்த முறுத்துதற்கட் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தம்முட் சமப்படுத்து உணரப்படுவனவாகிய அறம் பாவம் இரண்டுந் தம்மைப் போல் அநுபவ மாத்திரையாற் கெடுத லின்றி மேன்மேன் முறுகி வளர்வனவாய சரியை முதலிய தவங்களானே நேராக வொத்தால்,—வந்து ஞானத்தை மருவ்வன். எ-து. அத்தவ முதிர்ச்சி யுடைமையான் முன்னர்க் கூறப்படும் ஞானகுருவைத் தேடி வந்து ஞானத்தைத் தலைப்படுவன். எ-று.

வேள்வி முதலாயின எல்லாம் அழிதன் மாலையவாய காமியங்களைப் பயப்பன வன்றித் தத்துவ ஞானத்தைப் பயவா என்றற்கு அவற்றை விதித்த நூல்களே சான்று என்பார் 'இசைத்து வரு வினை' என்றும், அவை ஞானத்தைப் பயவாமை மாத்திரையே யன்றித் தீவினை போல அது நிகழவொட்டாது தடை செய்து நிற்றலும் உடைமையின் அவற்றை கழிவே ஈண்டைக்குக் காரண மாவது என்பார் 'இசைத்த விரு வினை யொப்பில்' என்றுங் கூறினர்.

ஒப்பில் என்னும் வினையெச்சம் மருவுவன் என்னும் பிறவினைமுதல்வினை கொண்டது. தேற்ற ஏகாரம் விகாரத்தாற் றொக்கது. ஆம் அசை. *வருதல் இடவழுவமைதி.

பசிப்பான் என்றது ஆருபெயர். இசைத்து வரு வினை என நூலின் தொழில் வினைமேல் ஏற்றப்பட்டது. மிசைத்த விரு வினை ஒப்பில் எனப் பாடம் ஓதி இருவினைகளுண் மிக்க இருவினையாகிய பிரமக் கொலை பரிமேதக வேள்வி போல்வன தம்முள் ஒருங்கே பயன் தருவனவாய் ஒத்த காலத்து என்று உரைப்பாரும் உளர். அஃது ஈண்டைக்குப் பயன் படாமையுஞ் சித்தாந்தத்துக்கு ஏலாமையும் அறிக.

'இசைத்து வருவினையி லின்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பாணை யொக்கும்' எனவே, இறப்பி நவத்தான் மருவப்படும் ஞானம் பசித்து உண்டு பின்னும் பசித்தல் இல்லாத கடவுளர்க்கு அமிழ்த உண்டியான் ஆய பயனை ஒக்கும் என்பதாயிற் பெறப்பட்டது. படவே, அவ்வமிழ்த உண்டி நரை திரை மூப்பு இன்றி நிலைபெறுதலாகிய பெரும்பயனைத் தருதன் மாத்திரையே அன்றிப் பசி தீர்தலாகிய அவாந்தரப் பயனையுந் தருமாறு போல இறப்பிறவமுந் தத்துவ ஞானத்தைப் பயத்தன் மாத்திரையே. அன்றித் தத்தம் பதமுத்தி ஆகிய அவாந்தரப் பயனைப் பயத்தலும் அமைவுடைத்தாமாறு கண்டு கொள்க.

முதலதிகாரண முடிந்தது.

---

* வருதல் இடவழுவமைதியாதலை "அவற்றுள், தருசொல் வருசொல்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க.

இரண்டாமதிகரணம்.

இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதருருனே குருவுமாய் உணர்த்தும் என்றது.

எ–து. மே–ள். எ–னின். மேற் கூறியவாற்றான் நிகழும் ஞானத்தை உணர்த்துவார் சில ஞானங்களை உணர்த்துவார் போல நம்மனோரில் ஒருவராதல் அமையும் எனச் சாங்கியர் நையாயிகர் முதலியோர் மதம் பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். மேற் கூறியவாற்றாற் சரியை முதலிய மூன்றும் முற்றிய பின்னர் இம் முற்றுதலானே மல பரிபாகஞ் சத்தி நிபாதம் நிகழ்ந்து தத்துவ ஞானத்தின் அவாவுதலில உடைய உயிர்கட்கு இதுகாறுந் தமக்கு முதலாய் உள் நின்று உணர்த்தி வந்த பரம்பொருளே அப்பருவம் அறிந்து குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து அதனை அறிவுறுக்கும். எ-று.

எனவே, ஏனையோர்க்கு அது கூடாது என்றவாறுயிற்று. இக்கருத்தே பற்றி *"அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்-சகத்தவருங் காண்பரோ தான்" என்றார் புடைநூலாசிரியரும். ஏகாரந் தேற்றம்.

ஆவன் அன்னியமின்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். †"மாயா வுருவன் மாயா வுருவினை—யேயான்" ஏயு மெனின் எம்மனோரில் ஒருவனுய் முடியும் ஆகலின் தமது முதல் குரு மூர்த்தி ஆதாரமாகத் தரித்து நின்று உணர்த்தும் என்றலே அமைவுடைத்து எனப் பொதுவகையான் அதிட்டான பக்கங் கூறுவாரை நோக்கிச் சிறப்பு வகையான் ஆவேச பக்கமாமாறு உணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

இ-ள். அம்முதல்வன் பாலில் நெய் போல மறைந்து வேறுய் நிற்றல் இன்றிச் சுத்தான்ம சைதன்னியமே தனக்குச் சொரூபமாகக் கொண்டு தயிரில் நெய் போல ஆண்டு விளங்கி நிற்றலான் 'இவ்வான்மாக்களுக்குத் தமது முதருருனே குருவுமாய் உணர்த்தும்' என மேற்கொண்டது. எ-று.

பாலில் நெய் போல வேறுய் மறைந்து நின்று செலுத்தப்படுவனவற்றினும் பொதுவாய்ச் செல்வதாகிய அதிட்டானபக்கங் கொள்வார்க்கு ஏனைச் சமய குரவருங் குரவாவான் சேறலின் அஃது ஈண்டைக்கு அமைவுடைத்தன்று என்பதாம்.

சைதன்னியம் என்றார் மாசு தீர்ந்த தென்பது உணர்த்துதற்கு.

---

* திருவருட்பயன், அருளுருவியல். உ. † சங்கற்பநிராகரணம் சைவவாதி சங்கற்பநிராகரணம். உசு. உஎ. அடி.

**மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்.**

எ–து. உ–ம். எ–னின். ஓரோ ரிடங்களிற் குருவாய்வந்து உணர்த்துதல் இன்றியும் ஞானம் நிகழுமாறு என்னை? என்பாரை நோக்கி அதனை வரைசெய்து உணர்த்தி வலியுறுத்துத னுதலிற்று.

இ–ள். * விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும். எ–து. அம் முதல்வன் மூவகை ஆன்மாக்களுள் விஞ்ஞானகலராயினார்க்குத் தன் ஒருமையின் நின்ற வாறே தத்துவ ஞானத்தை விளைவிப்பன்,—அன்றிப் பிரளயா கலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும். எ–து, அவ்வாறன்றிப் பிரளயா கல ராயினார்க்கு ஈற்றிரண்டும் முக்கண்ணுங் கறைமிடறும் முதலிய உறுப் பிற்றாய் முத்தொழில் நடாத்தி நின்ற தன் இயற்கைவடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தை உபதேசித்து உணர்த்துவன்,—அஞ்ஞான அச்சகலர்க்கு அக் குரு ஆய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும். எ–து அவிச்சையை உடைய சகலராயினார்க்கு அவர் வடிவு போலும் வடிவு டைய குருவாகி அவ்வடிவின் பின்னாக மறைத்து நின்று தத்துவஞான த்தை உணர்த்துவன்,—முன். எ–து. அவ்வேறுபாட்டை அறிவாயாக. எ–று.

முன் என்றதனை முன்னைப் பொருள் என்று உரைத்து எழுவாயாகக் கோடலும் ஒன்று.

விளையும் என்பது "அரசன் எடுத்த ஆலயம்" என்புழிப்போல விவ்விகுதி தொக்கு நின்றது. † "உண்ணின் றறுத்தருளி" என்றார் புடைதூலாசிரியரும். இவ்வாறன்றி எளிதின் அடைப்படுதல் நோக்கி "அரிசி தானே அட்டது" என்

---

* விஞ்ஞானகலர் விஞ்ஞானத்தாற் கேவலற்றவர். பிரளயாகலர் பிரளயத்திற் கேவலற்றவர். சகலர் கேவலோடு கூடினவர். இவை காரணப்பெயர். விஞ்ஞானகலர் ஆணவபந்தம் ஒன்றுமே உடையர். பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இரண்டு பந்தமுமுடையர். சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று பந்தமும் முடையர். இனி, விஞ்ஞானகலர் அநாதியே மலபந்தமாத்திரமுடைய விஞ்ஞானகலரும், அணுபவித்தாஞதல் விஞ்ஞானத்தாஞதல் யோகத்தாஞதல் சங்கியாசத்தாஞதல் தீக்கையாஞதல் இடையே மாயாபந்தம் கன்மபந்தம் முழுவதும் நீங்கி அசுத்தமாயையின்மேல் உள்ள புவனங்களில் நுகர்க்கடவனவாகிய போகங்கட்கு ஏதுவாய் நின்ற மலபந்தம் ஒன்றே உடையராகிய விஞ்ஞானகலரும் என இருவகையர். பிரளயாகலர், அநாதியே மல கன்மங்கள் மாத்திர முடைய பிரளயாகலரும் இடையே பரிபக்குவவிசேடத்தால் மாயா பந்தமாத்திரம் நீங்கி ஏனை இரண்டுமுடைய பிரளயாகலரும் என இருவகையர். சகலர், தேவர் மக்கள் முதற் பலவகைப்படுவர். விஞ்ஞானகலருக்குரிய புவனங்கள், அசுத்த மாயைக்கும் சுத்தவித்தைக்கும் இடையே உளளன. பிரளயாகலருக்குரிய புவனங்கள், அசுத்தமாயை முதல் அராகம் ஈறான தத்துவங்களில் உள்ளன. சகலருக்குரிய புவனங்கள், மூலப்பகுதி முதற் பிருதிவி ஈறான தத்துவங்களில் உள்ளன. இன்னும் இம்மூவகை ஆன்மாக்கள் இயல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க. விஞ்ஞானகலர் என்பது விஞ்ஞானகலர் என மரீஇயிற்று. இது திராவிடமாபாடியத்துட் கண்டது. † போற்றிப் பஃறொடை. சுகம் அடி.

ரூற் போல எளிதின் விளேவிக்கப்படுதல் நோக்கி 'மெய்ஞ்ஞானந் தானே விளே யும்' என்ரூர் எனினும் அமையும்.

ஈண்டு 'அஞ்ஞானம்' என்றது அவிச்சையை என்பது சகலர்க்கே அடை யாய் ஒதியவாற்ரு னறிக.

அச்சகலர் என்றது 'தவஞ்செய்தார்' என மேல் எடுத்துக் கொள்ளப்ப ட்ட சகலர் என்றவாறு. 'அக்குரு' என்றது மேற்கோளிற் கூறிப் போந்த குரு என்றவாறு.

'தானே விளேயும்' 'முன் உணர்த்தும்' 'பின் உணர்த்தும்' எனவே, விஞ் ஞானகலர்க்குத் தன்மையினும் பிரளயாகலர்க்கு முன்னிலேயினும் சகலர்க்குப் படர்க்கையினும் நின்று உணர்த்தும் என வரைசெய்தவாறு காண்க. இவற் றுள் முன்னேய இரண்டும் *நிராதாரம் எனவும் பின்னேயது †சாதாரம் எனவுங் கூறப்படும்.

அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின்வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

எ—து. உ—ம். எ—னின். விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் ஓரியல்பான் உணர்த்தாது அவ்வாறு தன்மையினும் முன்னிலேயினும் பின்னிலேயினுமாய் உணர்த்துதல் எற்றுக்கு? என்பாரை நோக்கிக் காரணங் கூறி அதனே வலியு றுத்துத னுதலிற்று.

இ - ள். உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா. எ-து. உயிர்க ளெல்லாந் தமக்கு உரிய படிவழியின் வைத்து முதல்வன் அறிவிக்க அறியும் இயல்பின அன்றி ஒன்று போல் அறிவிக்க அறியும் இயல்பின அல்ல ஆக லான்,—குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு. எ-து. அவ்வறிவாற் குறை பாடு இல்லாத சகக்கடவுளது உபதேச மொழியைக் கொண்டு உணரும் இய ல்பினராகிய பிரளயாகலர் சகலர்க்கு,—குறைகள் முன் பின் செறியும் ஆம். எ-து. அவ்வறிவித்தால் அறிதலாகிய குறைகள் முன்னிலேயினும் பின்னிலே யினும் நிகழ்வனவாம்,—குறை உடைய சொல் கொள்ளார் கொள் பவத்தின் வீடு ஆம் என். எ-து. குறைவில் சகனுலாகிய குறையிலே யுடைய உபதேச மொழிகொண்டு உணரவேண்டாத விஞ்ஞானகலர்க்கு முதல்வனுற் கொள்ளப் பட்ட தன்னுண்மை மாத்திரையின் வீடு பயக்கும் உணர்வு உண்டு என்று அறிவாயாக. எ - று.

குறை இன்றியமையாப் பொருள்; அது ‡ ''வினேக்குறை—தீர்ந்தாரிற் தீர்ந்தன் றலகு,, என்பதனுட் பரிமேலழக ருரையானும் உணர்க.

பவம், சம்பவம், உண்மை என்பன ஒருபொருட்கிளவி.

---

* நிராதாரம் - ஆதாரமில்லாதது. சாதாரம் - ஆதாரத்தோடு கூடியது. ஆதார்ம்- இடம். ‡ திருக்குறள். சுகூ. வினேக்கண்.

வீடு பயக்கும் உணர்வை 'வீடு' என்றும், சூழ்ச்சி பயக்கும் உபதேச மொழியைச் 'சூழ்' என்றும் காரண காரியமாக உபசரித்தார். கொள்பவர் கொள்ளார் என்பனவும் அவை. கொள்ளார்க்கு என்னும் நான்க னுருபு விகாரத்தாற் றொக்கது; *"ஐந்தவித்தான் ஞற்றல்" என்புழிப் போல.

வீடு ஆம் எனவும் இயையும். வீடாம் எனப் பாடம் ஓதுவாரும் உளர்.

மேலை வெண்பாவின் 'முன்னுணர்த்தும்' 'பின்னுணர்த்தும்' 'தானே வினையும்' எனக் கூறியவற்றை ஈண்டு நெறியின் அறிவிக்க அன்றி அறியா ஆகலான் அது 'முன்செறியும்' 'பின்செறியும்' 'பவத்தினும்' எனக் காரணங் காட்டி வலியுறுத்தினர். இதற்குப் பிறரெல்லாந் தத்தமக்கு வேண்டியவாறே மேலைவெண்பாவோடு இயைபற உரைத்தார். அல்லதூஉம் 'அறிவிக்க வன்றி யறியாமை' உபதேசியாய் என ஆன்மாவின் தன்னியல்பு கூறும்வழிப் பெறப் பட்டதாகலின் அதனை ஈண்டும் புனருக்தியாகக் கூறவேண்டாமையின் மேலது வலியுறுத்துதற்கு ஏற்புடைய அறிவிக்க அறிதற்கட் படும் விசேடமாத்திரையே ஈண்டு எடுத் தோதினரென்று உணர்க. படிவழியின்வைத்து அறிவிக்க அன்றி அறியாமை † "பந்தமும் பிரிவும் தெரிபொருட் பணுவற் படிவழி சென்றுசென் றேறி" என்பதனாலும் அறிக.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைதா
னல்லா யுளவாமா னீர்நிழல்போ—லில்லா
வருவாகி நின்றனை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றனே லுற்று.

எ—து. உ—ம். எ—னின். அம்முத்திறத்துள் ஈண்டைக்கு எடுத்துக்கொண்ட 'அஞ்ஞான வச்சகலர்க் கக்குருவா'தல் உபசாரமே அன்றி யனைய போல் உண்மையாதல் செல்லாது என்பாரை நோக்கி உண்மையாதலை உவமைமுகத் தான் வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். நல்லாய். எ-து. அறிவால் நன்மையுடைய மாணாக்கனே!—எந்து இழைபால் முலைப்பாலும் கண்ணீரும் இல்லா உள ஆம். எ-து. எந்திய இழைகளை யுடையாட்குக் குழவிமாட்டு உளதாகிய அருவாகிய அன்பினைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பின் உருவாகிய முலைப்பாலுங் கண்ணீரும் அவண்மாட்டுக் குழவியைக் காணுமுன் இல்லாவாய்ப் பின்னுளவாம் அது போல,—நீர் நிழல் போல் இல்லா அரு ஆகி நின்றனை ஆர் அறிவார் தானே உரு ஆகி உற்றுத் தோன்றனேல். எ-து. நீரின்கண் நிழல் போல் உயிர்கண் மாட்டுப் புலப்படுதி லில்லாது அருவமாய் நின்ற முதல்வனை யார்தாம் அறிவார் அவனை குருவடிவாய் வந்து தோன்றி நின்று உணர்த்தாயின். எ-று.

ஒருவருமில்லை என்பதாம். இஃது எடுத்துக்காட்டுவமை.

இன்றியமையாமை உணர்த்துவார் 'தோன்றனே லாரறிவார்' என எதிர்மறைமுகத்தாற் கூறினர்.

* திருக்குறள். உடு. † கருவூர்த்தேவர் திருவிசைப்பா. திருவிடைமருதூர். கு.

பொருளுக்கு ஒதியதனை உவமையினுங் கூட்டி ஏற்குமாறு உரைக்க.

முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை விளக்கும் .என்பது *. "சுரந்த திரு முலைக்கே தூய்யசிவ ஞானஞ்—சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த—தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த—மனமுடையா ளன் பிருந்த வாறு" என்பதனனும், † "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார் வலர்—புன்கணீர் பூச றரும்" என்பதனனும் அறிக. அவ்விரண்டும் அன்பின் வடிவே பிறவல்ல என்பது அன்பு நிகழ்தற்கு உரிய காரணம் உள்வழி வெளி ப்பட்டு அஃது இல்வழி வெளிப்படாத ஒற்றுமை நோக்கிக் கண்டுகொள்க. இவ்வொற்றுமை உணர்த்துவார் 'இல்லாவாய் உளவாம்' என்றார்.

இல்லா என்பது முற்றெச்சக் குறிப்பு.

ஆல் அசை. நீர் அகத்து இயங்கும் உயிர்கட்கு இடங் கொடுத்தல் உண் மையான் நீரின்கண் வெளி உண்டு என்பதூஉம், உண்டாகவே, ஆண்டு நீருக்கு நிழல் உண்டு என்பதூஉம், பெறப்பட்டன. அந்நிழல், வேறு நில்லாது நீரோடு விரவி நிற்றலின் நீர் போற் புலப்படா தாயிற்று. அது போலச் சிவசைதன்னி யமும் யான் என்னும் உணர்விற்கு விடயமாய்ப் புலப்படும் ஆன்ம சைதன்னி யத்தோடு விரவிப் புலப்படாது நிற்பதொன்று என்பார் 'நீர்நிழல்போ லில்லா வருவாகி நின்றுணே' என்றார்.

இரண்டாம்திகரண முடிந்தது.

மூன்றாம் திகரணம்.

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை உணரா என்றது.

எ–து. மே–ள். எ–னின். விடய ஞானத்தை விளக்கும் ஐம்பொறிகளே தத்துவ ஞானத்தை விளக்குதற்கும் அமையும் தம்முதல் குருவு மாதல் வேண்டா எனச் சிவசங்கிராந்தவாத சைவர் மதம் பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற் கோட னுதலிற்று. இவ்வாறு உரையாக்கால், இனி என்பதனுன் உணர்த்தப் படும் மேலே அதிகரணத்தோடு உளதாகிய இயைபு பெறப்படாமை அறிக. இ–ள். வெ–டை.

உணாவு ஆகுமபயா.

அவைதாம் பளிங்கில் இட்ட வன்னம்போற் காட்டிற் றைக் காட்டி நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். அறிவை விளக்குங் கருவியான் மயக்கம் நிகழுமாறு யாங்ஙனம்? ‡என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

* திருக்களிற்றுப்படியார். இசை. † திருக்குறள். எக. ‡ சிவசங்கிராந்தவாதசைவர்.

இ-ள். படிகத்தின் வைத்த பலவேறுவகைப்பட்ட நிறங்கள் அப்படிக வொளியைக் கீழ்ப்படுத்துத் தத்தம் இயல்பினையே விளக்கி நிற்குமாறு போல அவ்வைம்பொறிகடாம் ஆன்ம சொரூபத்தைக் கீழ்ப்படுத்துத் தம்மாற் காட்டப்பட்ட தத்தம் விடய மாத்திரையே அவ்வான்மாவுக்குக் காட்டி நிற்பன வாகலான் 'இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா' என மேற்கொண்டது. எ-று.

விடயங்களுள்ளும் அவ்வவிடய மாத்திரையே அவ்வ விந்திரியங் காட்ட வல்லும் என்பார் 'காட்டிற்றை' என ஒன்றறி சொல்லாற் கூறினர்.

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநீனைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனே வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

எ—து. உம்.எ—னின். அங்ஙனங் காட்டிற்றையே காட்டி நிற்குமாயின், அவ்விந்திரியங்கள் உள்வழித் தம்முதல் குருவுமாய் உணர்த்தினும் உணர்தல் செல்லாது போலும் *என்பாரை நோக்கி உணர்தற்கு உபாயங் கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பல் நிறம் காட்டும் படிகம் போல் இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நீனைந்து. எ-து. தன்னுற் சாரப்பட்ட பன்னிறங்களின் இயல்பையே தன்மாட்டுக் காட்டி நிற்கும் பொதுவியல்புடைய படிகம் போலத்தன்னுற் சாரப்பட்ட இந்திரியங்களின் இயல்பையே சார்ந்த தன்வண்ணமாய்த் தன்மாட்டு விளக்கி நிற்குந் தனது பொது வியல்பை முன்னர்ச் சிந்தித்து அறிந்து கொண்டு பின்பு,—பல் நிறத்துப் பொய்ப் புலனை வேறு உணர்ந்து. எ-து. அந்நிறங்கள் படிகத்துக்கு வேறென்று அறியுமாறு போலப் பலவகை இயல்புடைய பொது வியல்பைச் செய்யும் பொறிகளைத் தன்னின் வேறு எனத் தெளிந்து,—பொய் பொய்யா மெய் கண்டான். எ-து. அவற்றுளை அப்பொதுவியல்பு பொய்யாய் ஒழியுமாறு தனது சிறப்பியல்பை உணர்ந்தானின்,—வேறு மெய்ப் பொருட்குத் தைவம் ஆம். எ-து. அவ்வசத்தாகிய பொறிகளுக்கு வேறுகிய சிவசத்தினது இயல்பு தன்மாட்டு விளங்கச் செய்யும் ஆகலின் அச்சிவசத்துக்கு அடிமையாம். எ-று.

ஈண்டுப் 'பொய்' 'மெய்' எனப்பட்டன அப்பொருளவாதல் †மேலே காட்டினும்.

தைவம் என்பது தேவனது உடைமை என்னும் பொருட்டாய வடமொழிப் பகுபதம்.

இதனானே கருவிகள் உள்வழிக் காட்டிற்றைக் காட்டி நிற்றலின் அறிதல் செல்லாது அவை நீங்கியவழிக் கேவலமாய் முடியும் ஆகலின் தன்னுண்மை

* சிவசங்கிராந்தவாதசைவர். † ஏழாஞ்சூத்திரத்து முதலதிகரண எதுவிற்கு உரைத்த உரையிற் காண்க.

அறியுமாறு யாங்ஙனம்? என்னுங் கடாவை ஆசங்கித்து அவை உள்வழியே தன்னுண்மை அறிதற்கு உபாயங் கூறி, இதுபற்றி அவை காட்டிற்றைக் காட்டி நிற்றற்கு இழுக்கில்லை என வலியுறுத்தவாறும் என்க.

'மெய்ப்பொருட்குத் தைவமாம்' என்றதனால் வருகின்ற அதிகரணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

மூன்றாமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையும் என்றது.

எ–து. மே–ள். எ–னின். பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா மெய் கண்டார்க்கு அதுவே அமையும் கருவிகள் நீங்கியவழிச் செய்யக் கடவதொரு முயற்சி கூடாமையின் ஆண்டு மெய்ப்பொருட்குத் தைவமாதல் பெறப்படாது எனப் பேதவாதசைவர் முதலியோர் கூறுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் நான்காங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

இந்திரியத்தின் வேறுயவழிக் கேவலத்தை அணைதலும் உண்மையின் அதனை நீக்குதற் பொருட்டு வேறுக என்று ஒழியாது 'வேறுவான் காண' என்றார். காண்டலே அதற்கு அமையும் என்றலின் ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது.

ஊசல் கயிறற்றூற் றூய்தரையேயாந் துணையான்.

எ–து. எது. எ–னின். அவ்வாறு காண்டலே சீபாதத்தை அணைதற்குச் சாலும் என்பது யாங்ஙனம்? *என்பாரை நோக்கி உவமையின் வைத்துக் காட்டி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ–ள். ஒருவன் ஏறியிருந்து ஆடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறு அற்றதாயின் அவனுக்கு உற்றுழி உதவுந் தாய் போல ஆண்டுத் தாரகமாவது நிலனே அன்றிப் பிறிதில்லை என்னும் ஒப்புமையான் 'இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும்' என மேற்கொண்டது. எ–று

வியாபகப் பொருட்குக் காட்சிவிசேடமே நீக்கம் ஆகலின் அறிதல் அதற்கு உவமையாயிற்று.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகட்லிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

* பேதவாதசைவர் முதலியோர்.

எ-து. உ-ம். எ-னின். கருவிகள் நீங்கின்வழி வேறு நில்லாது சிவத்தைத் தலைப்படுமாயின் அவ்வுயிர்க்கும், கருவிகள் நீங்கிக் கேவலத்தைத் தலைப்பட்ட உயிர்க்குப் போல மீட்சி உண்டுபோலும் * என்பாரை நோக்கி அஃது இன்றுமாறு கூறி மேலதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ன். சிறை செய்ய நின்ற செழும் புனலின் உள்ளம். எ-து. ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித் தடை செய்ய ஆண்டுத் தடையுண்டு தேங்கி நின்ற ஆற்றுநீர் போலக் கருவிகளாலுள பாச ஞானந் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதன்கண் வகேதசமாய் அடங்கித் தடையுண்டு நின்ற உயிர்,—சிறை விட்டு அலைகடலில் சென்று அடங்கும் ஆறு போல், எ-து. அவ்வணை முறித்து தடை தீர்ந்தவழி இடையீடு இன்றிக் கடலின்கண் முடுகிச் சென்று அந்நீரேயாய் அதனுள் அடங்கி மறித்து வாராத ஆற்று நீர் போல,—சிறை செய் புலன் உணர்வில் தீர்ந்து, எ-து. கருவிகளாலுள பாச ஞானத் தடையினின்று நீங்கியவழி,—உலவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது. எ-து. தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத், தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது. எ-று.

'சிறை செய்ய நின்ற செழும் புனலுள்ளம்' என்றது †தொகையுவமம். இன் உவம உருபு. தேக்கத்தின் மிருதி உணர்த்துவார் 'செழும்புனல்' என்றார்.

மலசத்திக்குக் கேடு உண்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர்க்குக் கருவிகளின் மீட்சி கூடும்; சிவசத்திக்கு அஃது இன்மையின் அதனைத் தலைப்பட்ட உயிர் அவ்வாறு மீளுதற்கு ஓரியைபு இல்லை என்பார் 'உலவு இல் அரன் பாதம்' என விசேடித்தார்.

அடங்கும் என்னும் உவம விகற பொருளினும், மீளாது என்னும் பொருள் விகற உவமையினுஞ் சென்று இயைந்தன.

> எவ்வுருவுந் தானென்னி னெய்துவா நில்லாதா
> ளிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
> கண்போ லவயவங்கள் காணுவக் கண்ணில்லார்
> கண்பேறே காணக் கழல்.

எ-து. உ-ம். எ-னின். மீளாது என்று விடுத்தல் வேண்டாம் எல்லாஞ் சிவமாகக் கண்டார்க்கு மீண்டால் என்? மீளாக்கால் என்? என்னுஞ் சிவாத்துவிதசைவரை நோக்கி அது விடையாதற்கு ஏலாமை கூறி மறித்தும் மீளாமையை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். எவ்வுருவும் தான் என்னின் தானே எய்துவான் இலன். எ-து. உயிருணர்வே யன்றிப் புலனுணர்வுஞ் சிவமேயாமாயின் விசேடம் இன்மையாற் புலன்வழி ஒழுகுஞ் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையின் ஒருவரும் அதனை எய்துவார் இல்லையாய் முடிந்து

* பேதவாதசைவர் முதலியோர். † தடைப்படுதலாகிய பொதுத்தன்மை தொக்கி மையால் தொகை யுவமம்.

* "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை யடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும்,—இவ்வருஷின் வேறேல் இறை அல்லன். எ-து. அது பற்றி முதல்வன் புலனுணர்வோடு இயைபின்றி அதனின் வேறுய் நிற்பன் என்னின் அப்புல னுணர்விற்கு அவனுல் ஆகற்பால தொன்று இன்மையின் அவன் ஆண்டைக் கிறைவனல்லன் எனப்பட்டு முதன்மைக்கு இழுக்காய் முடியும்; மற்றென்னீயோ அதனியல்பு என்னின்,—எவ் உருவும். எ-து. உயிருணர்வு போலப் புல னுணர்வுங் கலப்பினுற் சிவமேயாமாயினும் இரண்டுக் தம்முள் ஒப்பனவல்ல,—அவயவங்கள் கண் போல் காணு. எ-து. உயிர் ஐம்பொறிகளினும் ஒப்ப நிற்பினும் அவற்றுண் மெய் வாய் மூக்குச் செவி நான்கும், கண்ணிந்திரியம் ஒளியான் அவ்வான்ம போதத்தோடு விரவிச் சேய்மைக்கண்ணு தாகிய விடயத்தையும் வியாபித்து அறியுமாறு போல வியாபித்து அறியமாட்டாவாய்த் தம்மாட்டுவந்த விடயங்களே நின்றுங்கு நின்று இயைந் தறிதற் றன்மையமேவ யாம்,—அக்கழல் அக்கண் இல்லார் கண் பேறே காண். எ-து. அக்கண்ணினது வெற்றிப்பாட்டைக் கண்ணெளி இழந்தாரது கண்பேற்றின்கட் கண்டி அறிவாயாக. எ-று.

கண்ணும் அவயவங்களும் ஆகுபெயர். கண்பேறே என ஏழாவது தொகுத்து ஏகாரம் விரித்தார். கழல் அணிவார்க்கு உளதாகிய வெற்றிப்பாட்டைக் 'கழல்' என்று உபசரித்தார். கழல்—காலணிமணிவடம்.

ஈண்டு வெற்றியாவது ஏனை நான்கிந்திரியங்களையும் நோக்கி மேம்படுதல்.

'கண்பேறு லவயவங்கள் காணுவக் கண்ணில்லார் கண்பேறே காணக் கழல்' என்பது முதல்வன் இரண்டினும் ஒப்ப விரவி நிற்பினும் உயிருணர்வு போலப் புலனுணர்வு வியாபக விளக்கமாதல் இன்றி ஏகதேச விளக்கமாம். உயிருணர்விற்கு உளதாகிய அம்மேம்பாடு அவ்வியாபக உணர்வை இழந்த பசுத்துவ முடையார்மாட்டு அறியப்படாதாயினும் அவரது பசுத்துவம் நீங்கிய சிவப் பேற்றின்கண் அறியப்படும் என்பது தோன்ற நின்றமையின் இஃது † ஒட்டு என்னும் அலங்காரம்.

சிவமாயவழியும் புலனுணர்வு ஏகதேச விளக்கமாவதன்றி உயிருணர்வு போல வியாபக விளக்கமாதல் இல்லை எனவே, அதன்கண் மீளுதல் இழுக்கு என்பது பெறப்பட்டது. இதற்குப் பிறசெல்லாம் இயைபின்றி உரைத்தார்.

> ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனே
> யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
> னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
> னீங்கானே நீங்கு நினைந்து.

எ-து. உ-ம். எ-னின். சிறை விட்டவழி அலைகடலிற் சென்று அடங்குதலே அன்றி ‡"ஆற்று லலைகடற்கே பாய்ந்தநீர்**அவ்வாற்றுன் மறிதி" தலும் உண்மையின் அது போல அரன் பாதத்தை யூற்ற உயிருக்கு ஓரோவழி

* சிவஞானசித்தி, பரபக்கம். பாஞ்சராத்திரிமதமறுதலே. உஇ. † இதனை கஅஎ-ம் பக்கத்துக்குறிப்பிற் காண்க. ‡ திருக்களிற்றுப்படியார். கக.

மீட்சியும் உண்டு என்பது பெறப்படுதலான் அவ்வழி மீளாமை செல்லாது *என்பாரை நோக்கி அம்மீட்சிக்குக் காரணம் இஃது என்பதூஉம், அதனை நீக்குதற்கு உபாயமுங் கூறி வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். ஐம்பொறியின் அல்லீ எனும் அந்தகர. எ-து. ஐம்பொறிகள் போல ஏகதேச விளக்கம் உடையாயல்லே யென்று அறிவுறுக்கப்படுஞ் சித்தாந்த மகாவாக்கியத்தைப் பெற்றுடைய மாணவகனே!—அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணை சகலன் ஐம்பொறியின் நீங்கான். எ-து. 'சிறைவிட் டலை கடலிற் சென்றடங்கு மாறுபோல்' என மேலற் கூறியவாறே ஐம்பொறிகளானுய புலனுணர்விற் றீர்ந்து சிவன் திருவடியை உற்ற சகலன் அவ் வைம்பொறிகள்மான் மீள அதனை நீங்குவான் அல்லன்,—நீர்ப் பாசி போல் நீங்கும் மல கன்மம் வரின் நீங்காதனை நினைந்து நீங்கும். எ-து. †கல்லெறியும்வழி நீங்கிய நீர்ப்பாசி அது விடும்வழிப் பரக்குமாறு போல அவ்வணைதலின்கண் நீங்கிய மல கன்ம மாயைகள் வாதனைவயத்தால் நிகழும் அயர்ச்சிபற்றி வந்து கூடுமாயின் அது பற்றிப் பொறிவழி மீளாமல் அவ்வழியுந் தன்னை விட்டுநீங்காத முதல்வனை ‡முன்னர்க் கூறப்படும் உபாயங்களில் நின்றும் சிந்தித்து அவற்றை நீக்கிக்கொள்ளும். எ-று.

வரின் என்றதனால், வருதல் ஒருதலையன்று, வாசனை உள்வழியே என்பது பெற்றும்.

நீங்கி என்பது பாடம் ஆயின், நீங்கினவாகிய மல கன்மம் எனப் பெயராக வைத்து உரைக்க.

சித்தாந்தத்தை 'அந்தம்' என்றது தலைக்குறை. 'தாம்' அதன் கண்ணதாய்ச் சிறந்த ஒரு வார்த்தை.

அங்கு மேற்கூறியபடி.

ஐம்பொறியை விட்டு அணைதற்கு உரியான் இவன் என்பது உணர்த்துவார் 'சகலன்' என்றார்.

நீங்கும் என்னும் மகரஞ் சந்தி நோக்கிக் கெட்டது. நீங்கு எனவே பாடங் கொண்டு அணை என வேறு பிரித்து முன்னிலையசலாக்கி அதற்கு வற்ப நீங்காய் எனப் பாடங் கிரித்து உரைப்பாரும் உளர்.

மேற் கூறிய மீளாமையை வலியுறுத்துவார் 'ஐம்பொறியி னல்லியெனு மந்தகர சிவனை ஐம்பொறியை விட்டங் கணைசகல னைம்பொறியி னீங்கான்' என்றும், ஓரோவழி உளதா மாயின், அதற்குக் காரணம் இஃது என்பார் 'நீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரின்' என்றும், அதை நீக்குதற்கு உபாயங் கூறுவார் 'நீங்காதனை நினைந்து நீங்கும்' என்றுங் கூறினார். மலகன்மம் எனவே, இனம் பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது.

---

* சிவாத்துவிதசைவர். † இதனை, "பாசிபடு குட்டத்திற் கல்லினெவிட் டெறியப் படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கும்" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும் உணர்க. ‡ முன்னர்க் கூறப்படும் உபாயம் ஸ்ரீ பஞ்சாக்கரத்தையிதிப்பழ உச்சரித்தல் முதலியன.

*"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்கல நன்மக்கட் பேறு" என் றாற்போல 'நீங்காமை நீங்கு நிமித்து' என்றதனால் வருகின்ற சூத்திரத்துக்குத் தோற்றுவாய் செய்ததூஉம் ஆயிற்று.

இம்மூன்று உதாரணங்களும் முறையே திருவடிஞானத்தைப் பெற்ற உயிர் புலனுணர்வின் மீடல் இல்லை எனவும், மீடல் இழுக்காம் எனவும், ஓரோ வழிப் பயிற்சி வயத்தான் மீள வருமாயின் மீளாதவாறு செய்து கொள்ளற் பாற்று எனவுங் கூறித் 'தாய்தரையேயாம்' என்னும் ஏகாரப்பொருளை வலியுறுத்தி ஒருபொருண்மேல் வந்தவாறு காண்க.

நான்காமதிகரண முடிந்தது.

எட்டாஞ்சூத்திர முடிந்தது

ஒன்பதாஞ் சூத்திரம்.

ஊனக்கண் பாச முணராப் பதியினை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துணைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

எ•து• சூ-ம். எ-னின்• ஆன்மசுத்தி பண்ணுமாறு உணர்த்துத னுத்லிற்று.

எ–து. க–ரை. எ–னின். சூத்திரக்கருத்து உணர்த்துத னுதலிற்று.

இ-ள். தம்முதல் குருவுமாய் உணர்த்தக் கேட்டு அதனைச் சிந்தனை செய்து உணருமாறு உணர்த்தும் முகத்தான் ஐம்புல வேடரின் வளர்த்த வாலாமை நீக்கி உயிர் தன்னைத் தூய்மைப்படுத்துமாறு உணர்த்துதல் இவ்வொன்பதாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

சூத்திர இயைபும் இதனுளே இனிது விளங்கும்.

சிவப்பிரகாசத்துத் †"தான் பணியை நீத்தல்" என்று ஓதப்படும் ஆன்ம சுத்தியாவது 'இறைபணி நிற்க' என வருகின்ற சூத்திரத்திற் பெறற்பாலது ஆகலானும், அழுக்கு நீக்கமே அறிவைக்குச் சுத்தியாமாறு போலப் பாசக்ஷயமே உயிர்க்குச் சுத்தியாவ தன்றி வேறன்மையானும், பாசக்ஷயம் பண்ணுமுன்னர்ச் சுத்தியாதல் கூட்டமையானும், வருகின்ற சூத்திரத்தின் கருத்தாய் நின்ற ஆன்மசுத்தி பண்ணுமாற்றைப் 'பதியை நாடி' எனவுந் 'தண்ணிழலாம் பதி' எனவுஞ் சிவதரிசனம் பண்ணுமாறே உணர்த்துதற்கு எழுந்த இச்சூத்திரத்தின் கருத்தாகவைத்து உரைத்தது என்னையோ! என மலையற்க; சிவதரிசனத்தின் நிகழ்வது ஆன்மசுத்தி என்னும் உடனிகழ்ச்சி உணர்த்துதற்கும் தம்முள் வேறுபாடு சிறுபான்மை உடையனவாய இவ்விரு சூத்திரமும் ஒரு

* திருக்குறள். கூ0. † சிவப்பிரகாசம். அ-ம் சூ. க. தேசுற.

பொருண்மேலன என்பது உணர்த்துதற்கும். இவ்வாறு உரைத்தாராகலின். அஃது அங்ஙனமாக, *"ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல் சீபாதத்தை யணையும்" என்றலின், அக்காட்சியே அதற்கு அமையும் சுத்தி எற்றுக்கு எனின், அஃது ஒக்கும்: நிருவிகற்பமாய்க் காண்டலும், இரட்டறக் காண்டலும், தெளியக் காண்டலும் எனக் காட்சி மூவகைப்படும். இம்மூன்றும் அதிபரிபக்குவ முடையார்க்குக் கேட்ட மாத்திரையே ஒருங்கு நிகழுமாயினும் வனையோர்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னுஞ் சோபான முறையி னன்றி நிகழாமையின், அவரை நோக்கிச் சிவரூபத்தின் நிகழும் ஆன்மதரிசனத்தின் பின்னுகச் சிவதரிசனத்தின் நிகழும் ஆன்மதரிசனத்தியும் ஒரு தலையான் வேண்டப்படும் என்று உணர்ந்துகொள்க. †"நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் நின்றிவர் நிலையதுவே யாகி— யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்" என வழிநூலாசிரியரும் இக்கருத்தே பற்றி ஓதினர்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிபு. குறையுணர்வாகிய பசுவறிவானும் பாசவறிவானும் உணரப்படாத முதல்வனை அவனது திருவடி ஞானத்தால் தன் அறிவின்கண்ணே ஆராய்ந்து அறிக. அத்திருவடி ஞானத்தான் நிலம் முதல் நாதம் ஈறுகிய பாசக் கூட்டம் நின்றுழி நில்லாது பாய்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரின் இயல்பிற்றாய்க் கழிவதென்று அறிந்து நீங்கவே, அப்பதிஞானம் பிறவித் துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும்: அவ்வாறு பாசத்தை ஒருவி ஞானத்தைப் பெற்று நேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும். எ-று.

ஊனம் என்பது அப்பொருட்டாதல் ‡"ஊனமேற் கிரையை விக்கை" என்பதனுன் அறிக.

"நன்று மன்னிது காடாய் கூறி" என்றும்போல 'காடு' என்பது இகரவீற்று முன்னிலை யேவல்.

உராத் துணை ஏழாம் வேற்றுமைத் தொகை. உரா என்பது முதனிலைத் தொழிற் பெயர்; "பறவாக் குளவி" "பாயா வேங்கை" என்றும் போல ஒருவரான் ஊரப்படாத வேகத்தையுடைய தேர் எனச் செயப்படுபொருட்கண் வந்த பெயரெச்ச மறையாகக் கொண்டு உரைத்து, "திருக்தார்நன் றென்றேன் றியேன்" என்றும் போல உரா என்பது குறுக்கல் விகாரம் என் பாரும் உளர். பின்வந்த பதி ஆகுபெயர்.

இதனுள், ஊனக்கண் பாச முணராப் பதியை ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி என்றது ஓதிகரணம்; உராத்துணைத் தேர்த்தெனப் பாச மொருவத் தண்ணிழலாம் பதி என்றது ஓதிகரணம்; விதியெண்ணுமஞ்செழுத்தே என்றது ஓதிகரணம்: ஆக மூன்றதிகரணத்தது இச் சூத்திரம் என்று உணர்க.

---

* இந்நூல். அ-ம் சூ. உ-ம் அதிகரணத்துமேற்கோள். † சிவஞானசித்தி. அ-ம் சூ. கூ. பாசிபடு. ‡ மேற்படி. க-ம் சூ. கூடு ஞானமேயான.

மு த ல தி க ர ண ம்.

ஈண்டு அம்முதலே ஞானக்கண்ணுலே காண்கீ என்றது.

எ–து. மே–ள். எ–னின். மேலேச் சூத்திரத்து ஓதியவாற்றுன் முதல்வன் பாச அறிவால் நாடப்படுவ னல்ல ஞயினும் பசுவறிவால் நாடப்படுவன் என் றற்கு இழுக்கு என்னே? எனச் சிவசமவாதசைவர் மதம் பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற் கோட னுதலிற்று. இ-ள். வெ-டை.

ஏகாரம் தேற்றம்.

அவன் வாக்கு மனுதீத கோசரமாய் நிற்றலான்.

எ–து. ஏது. எ–னின். ஏனை ஞானங்களான் அறியப்படாது சிவஞானத் தான் அறியப்படும் என்றற்குப் பிரமாணம் என்னே? *என்பாரை நோக்கி மேற் கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். வாக்குமனுதீத கோசரமாய் நின்ற அதுவே என்புழி †உரைத் தாம்.

ஆண்டுப் பொதுவகையாற் பெறப்பட்டதனே ஈண்டு ஏதுவாக வைத்து வாக்கு மனுதீதமாயுங் கோசரமாதல் பிறிதொன்றுற் பெறப்படாது என்னும் அருத்தாபத்தியான் ஞானக்கண்ணுலே காணப்படும் என்பது தாமே போத ரும் என மேற்கோளைச் சாதித்தார்.

நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடியரன்
றன்னுலே தன்னையுங் கண்டு தமைக்காணு
ரென்னு மெனவறிவா ரின்று.

எ–து. உம். எ–னின். கோசரமாதல் பிறிதொன்றுற் பெறப்படாது என்றது என்னே? பசுத்துவம் நீங்கியவழிச் சுட்டிறந் தறிவதாகிய உயிருணர்வு திருவடிஞானத்தோடு ஒப்பதாகலின் அதன்கட் கோசரமாதல் அமைவுடை த்துப்போலும் ‡என்பாரை நோக்கி அவ்வுணர்வு விளங்குமாறு உணர்த்தும் முகத்தான் அவரை மறுத்து ஏதுப் பொருளே வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். நாடியோ என்போ நரம்பு சீக் கோழையோ தேடி எனை அறி யேன் தேர்ந்த வகை நாடி. எ-து. நாடி முதலியவற்றுள் யான் யார் என்னைத் தேடியும் அறிகின்றிலேன் என்று இவ்வாறு தேர்கின்ற தேர்ச்சியறிவின்கண் ணே இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறு உண்டென ஆராய்ந்து நோ க்கி,—அரன் தன்னுலே தன்னையும் கண்டு தமைக் காணுர். எ-து. அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாய முதல்வனது திருவடிஞானத்தால் முதல் வனையும் உணர்ந்து முதல்வனின் வியாபிப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும்

* சிவசமவாதசைவர். † உரைத்தமையை இந்நூல். சூ-ம் சூ. உ-ம் அதிகரணத்து மேற்கோளுரையிற் காண்க. ‡ சிவசமவாதசைவர்.

பொருளாகிய தம்மையும் உணர்தலைச் செயயாதார்,—என் என அறிவார் இன்று. எ-து, மற்றெவ்வியல்பின ரென்று தம்மை அறிய வல்லுநர் இம்முத்தி காலத்து. எ - று.

நாடி என்றது இடை பிங்கலை முதலியவற்றை; நரம்பு எனவே அடங்கு மேனும் தலைமை பற்றி வேறு கூறினர். சீ-புண்ணீர். கோழை-ஐ.

ஓகாரந் தெரிநிலை. என்று என்பது சொல்லெச்சம். வகை ஆகுபெயர்.

ஒற்றுமை பற்றி அரனது ஞானத்தை அரன் என்று உபசரித்தார்.

உம்மை எதிரது தழீஇயிற்று. எவன் என்னும் வினாவினைக்குறிப்புப் பெயர் ஈண்டு ஆகுபெயராய் என் என மரீஇயிற்று. ஆம் அசை.

நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ என்ற உபலக்கணத்தால் ஏனைத் தத்துவ *தாத்துவிகங்களினும் அவ்வாறு தெரிதல் கொள்ளப்படும்.

இது தம்மை அறியுமாறு உணர்த்தும் முகத்தானே தலைவனை அறிந்த பின் அறியப்படுவதாகிய தம்மறிவு கொண்டு தலைவனை அறியுமாறு யாண்டையது என மறுத்து வலியுறுத்தவாறு காண்க.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
வுள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணைய
கள்வன்ரு னுள்ளத்திற் காண்.

எ—து. உ—ம். எ—னின். எதிர் முகத்து ஒரு பொருளைக் கண்ட கண்ணை மறித்து நோக்கியவழி வெளிற்புறத்துப் பொருளையுங் காண வல்லும்; அது போல, அங்ஙனந் தேர்ந்து அறிதலைச் செய்த உயிரே தெளிக்,நறிதலையுள், செய்ய வல்லுமென அமையும் †என்பாரை நோக்கி அதனது மாட்டாமையை விளக்கி 'அரன்றன்னை லே காண்டலே' வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். காட்டிய கண்ணை தனைக் காணு. எ-து. உயிராற் காட்டப்பட்டு ஒரு விடயத்தைக்காண்கின்ற கண்ணைனது தன்னியல்பைக் காணமாட்டாது,—கண்ணுக்குக் காட்டு ஆய உள்ளத்தைக் கண் காணு. எ-து. தனக்கு அவ்விட யத்தைக் காண்பித்து முதலாய் நிற்கும் உயிரையும் அது காணமாட்டாது,—காட்டிய உள்ளம் தனைக் காணுது. எ-து. அதுபோல முதல்வனும் மறைந்து நின்று உணர்த்தப்பட்டு ஒன்றனைத் தேர்ந்துணர்கின்ற உயிர் அவ்வாறே தன் னியல்பையும் அறியமாட்டாது; தன்னை உணர்த்தி நிற்கும் முதல்வனையும் அறி யமாட்டாது,—உள்ளத்தின்கண் ஆய கள்வன் தான். எ-து. அத்தேர்ச்சியறி வின்கண்ணும் உடனுப் நிற்குங் கள்வன் அம்முதல்வன் ஆகலானே,—உள்ள த்தில் காண். எ-து. அவனை அவ்வறிவின்கண் வைத்து நாடித் தெளிவா யாக. எ - று.

* தாத்துவிகம்-தத்துவத்தின் காரியமாகிய புறக்கருவி. † சிவசமவாதசைவர்.

*இது சொற்பொருட் பின்வரு நிலை. ஏகாரம் அசைநிலை. †"முறைகாக்கு முட்டாச் செயின்" என்றுற் போலக் காணுது என்னுந் துவ்வீறு விகாரத்தாற் றொக்கது.

பின் வந்த உள்ளம் ஈண்டுத் தேர்ச்சியறிவின் மேற்று. உள்ளத்தின் கண்ணும் என்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

தோன்றுது நிற்றல் பற்றிக் கள்வன் என்றார். கள்வன் என்றது கண்ணுக்கு உயிர் மறைந்து நின்றே காட்டுவதாகலான் அது தன்னையும் உயிரையும் அறியமாட்டா தாயிற்று; அது போல முதல்வன் இதுகாறும் மறைந்து நின்றே உணர்த்துதலின் உயிர் தன்னையும் முதல்வனையும் அறியமாட்டா தாயிற்று என்பது பட நின்ற குறிப்பு மொழி. உள்ளத்திற் காண வல்லார்க்கு அக்கள்ளந் தீர்தலின் தம்மையும் முதல்வனையுங் காண்டல் கூடும் என்பதாம். ‡ "கள்ளரொ டில்ல முடையார் கலந்திடின்—வெள்ள வெளியாமென் றுந்தீ பற" என்றதும் இக்கருத்து நோக்கி.

கண்ணுக்குக் காட்டாய வுள்ளத்தைக் கண் காணு என உவமைக்கு ஒதியவாறு பொருளினும் வ்ருவித்து உரைந்துக்கொள்க. இஃது எடுத்துக்காட்டுவமை.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற்பாற்று.

எ—து. மே—ள். எ—னின். அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க என்று உணர்த்தியவழி அந்த ஞானக்கண்ணைப் பெறுமாறு யாங்ஙனம்? என நிகழும் அவாய்நிலையை நீக்குதற்பொருட்டு மேலதற்கோர் புறனடையாய் எழுந்த இச்சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. இ - ள். வெ-டை.

'பாச மொருவத் தண்ணிழலாம் பதி' என்புழிப் 'பாசம்' என்றது காரியப் பிரபஞ்சத்தை என்பார் 'அசத்தாயுள்ள' என்றும், சொற் பல்காமைப் பொருட்டு ஏதுப் பொருளை உருவகமுகத்தான் உடம்பொடு புணர்த்துக் காட்டுவார் பிரபஞ்சத்தை என்னுது 'வன்னபேதங்களை' என்றும், ¶ வியாபகப் பொருளுக்கு ஒருவுதலாவது உணர்ச்சி விசேடமேயாம் என்பார் அசத்தென்றெழிய என்னுது 'காண' என்றும், தண்ணிழலாய் நிற்றல் புதிதன்று என்பார் 'உளதாய் நிற்பது' என்றும், பதி என்றது ஆருபெயராற் பதி

* இஃது அலங்காரத்துள் ஒன்று; அஃது ஒருசெய்யுளிலே முன்வந்த சொல்லும் பொருளும் பல இடங்களிலே பின்னும் வருதல். † திருக்குறள். இசை. இறைகாக்கும். ‡ திருவுந்தியார். உகூ. ¶ வியாபகப்பொருள் என்றது ஆன்மாவை.

ஞானத்தின்மேல் நின்றது என்பார் 'ஞானசொரூபம்' என்றும், இஃது அது பவத்தி னன்றிச் சொல்லளவையின் அறிய வாராது என்பார் 'உணரற்பாற்று' என்றும் உரைத்தார். இஃது ஏகதேசவுருவகம்.

இதனுட் பெறப்படும் எதுப் பொருளே ஏனையவற்றுட் போல மேற் கோளின் வேறுவைத்துக் காணுமாறு:—

இ-ன்னி அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் என்றது வேற்றியல்பாகிய வன்னபேதங்களே வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது படிகசொரூபமாந்தன்மையான் என வரும்.

இ-ள். படிக சொரூபத்தைக் காட்டாது மறைத்து நின்ற வேற்று நிறங்களே இவை நிலையுத லிலவாகிய வேற்று நிறங்களெனக் கண்டு நிற்பின் அவ்வழி நிலையுத லுடைத்தாய் விளங்கி நிற்பது பளிங்கினது சொரூபமாம் என்னும் ஒப்புமையான் நிலையுதலுடைய தற்சொரூபத்தைக் காட்டாது மறைத்து நிற்கும் நிலையுத லிலவா யுள்ள பிரபஞ்சத்தை இவை நிலையுதலுடையன வல்ல என்று விவேகித்து அறியின் அங்ஙனம் நிராலம்பமயமாய் விளங்கித் தோன்றுவது ஞானசொரூபம் என மேற்கொண்டது. எ-று.

வன்னபேதமாவது சித்திரம் எனக்கொண்டு சுவர் மேல் வைத்து உரைத்தலும் ஒன்று.

அசத்தாயுள்ள பிரபஞ்சத்தை அசத்து என்று காண்டலாவது ஆசிரியன் அறிவுறுத்த உபதேசப்பொருளின் உறைத்து நின்று "அட்ட குணமெட்டுச் சித்தி கோகனதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்—வெறுத்துநெறி யறுவரையு மேலொடுகி முடங்கக்" காரணரூபத்தினில்லாமையால் *"வெறும் பொயென நினைந்திரு"த்தல்.

நிர்க்குணனுய்ப் நின்மலனுய் நித்தியா னந்தனுய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானு வறிவா யளவிறந்து தோன்றுனே
வானே முதல்கனையின் வந்து.

எ—து. உ—ம். எ—னின். அசத்தை அசத்து என்று கண்டு ஒருவியவழித் தோன்றுவது சூனியமே அன்றிப் பிறிதில்லை போலும் †என்பாரை நோக்கி ஞான சொரூபத்தினியல்பு கூறி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். நிர்க்குணன் ஆய். எ-து. அசத்தப் பிரபஞ்சம்போல முக்குணரூபமாய் அளவிட்டறியப் படுவானும் அல்லனுய்,—நின்மலன் ஆய். எ-து. முக்குணங்களைக் கடந்த மிச்சிரப் பிரபஞ்சம் போல மல கன்ம காரிய ரூபமாய் அறியப்படுவானும் அல்லனுய்,—நித்தியானந்தன் ஆய். எ-து. மலகன்மங்களையுங் கட

* சிவஞானசித்தி. க-ம் சூ. சு. குறித்தடி. † மாயாவாதிகள்.

க்த சுத்தப் பிரபஞ்சம் போல அநித்தியானந்த ரூபனு யறியப்படுவானும் அல்லனுய்,—தற்பரம் ஆய். எ-து. இம்மூன்றனேடுங் கூடிப் பொதுஷியல்பு பற்றி அவ்வாறு உணரப்படும் உயிர் போல் அன்றி அதற்கு மேலாய்,—நின்ற தனி முதல்வன். எ-து. இவ்வாறு நிற்றலான் ஒன்றன் இயல்பு பற்றி அறியப்படாத தனிமுதலாகிய இறைவன்,—வான் முதல் கனியின். எ-து. ஆகாசம் முதலிய அசத்தை அசத்து என்று கண்டு ஒருவியவழி,—அளவு இறந்து அற்புதம் போல் வந்து. எ-து. பயின்றறிந்து வருந் தனது சுட்டறிவின் அளவினைக் கடத்தலான் இன்னதென்று அறிய வாராத சூனியப் பொருள் போலத தோன்றி,—ஆனு அறிவு ஆய்த் தோன்றுனே. எ-து. பின்னர்ச் சுட்டிறந்து அறியுந் தன் அறிவின்கண் நீங்காது நிலைபெறுவதாய்ச் * ''சோதிக்குட் சோதியாய்'' விளங்கித் தோன்றுன் கொல்லோ. எ-று.

தற்பரம் தனக்குப் பரம் என விரியும். தன் என்றது உயிரை.

அற்புதம் ஈண்டுச் சூனியத்தின் மேற்று. முதற்கட் சூனியமாய்த் தோன்றினுஞ் 'சூனியமன்றென்பார் 'அற்புதம்போல் வந்து' என்றார். ஆனுமை நீங்காமை.

ஓகாரம் எதிர்மறை. ஏகாரம் அசைநிலை.

வானே முதல் எனவே தோற்றமுறை பற்றி வான் முதலாகிய பூதங்களும் ஒடுக்கமுறை பற்றி வான் முதலாகிய ஏனைத் தத்துவங்களும் அடங்கும்.

'நிர்த்குணனுய் நின்மலனுய் நித்தியானந்தனுய்த் தற்பரமாய்' என்புழி ஆக்கச்சொல் உண்மை குறித்து நின்றது வடமொழி மதம். அறிவாய் என்புழி ஆக்கம் வேறுபாடு குறித்து நின்றது.

ஒற்றுமை பற்றி முதல்வனது ஞானத்தை முதல்வன் என்று உபசரித்தார்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்த நீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனுற் பொய்விட்டுப் போம்.

எ-து. உ-ம். எ-னின். வானே முதல் கனிந்தவழி அங்ஙனந் தோன்றுவதும் வேறொன்றெனக் கோடும் ஞானசொரூபம் என்றற்குப் பிரமாணம் என்னை? என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்து என்ன. எ-து. ஏகதேசவுணர்வாற் சுட்டி உணரப்படுவதாய பிரபஞ்சத்தை மேற் கூறியவாறே ஒரோவொன்றுகச் சுட்டி அசத்தென்று கண்டு கழித்துக்கொண்டு சென்றவழி,—இனிச் சட்ட உளது சத்தே காண். எ-து. முடிவின்கட் செம்மையே நோசரா மாவது யாது அஃது அவ்வசத்தின் வேறுகிய சத்தேயாம் அதனை அறிவா

* சிவஞானசித்தி. அ-ம் சூ. உஅ. எங்குந்தா.

யாக. அற்றேல், அசத்தின் வேறாய் அங்ஙனந் தோன்றுஞ் சத்தாவது உயிரே யாம் என அமையும் எனின்,—சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை. எ-து. இதுகா றும் அசத்தோடு கூடிச் சுட்டி அறிந்து வந்த நீ அசத்தின் வேறாய் அங்ஙனந் தோன்றுஞ் சத்தாவாய் அல்லை. அற்றேல், இச்சுட்டுணர்வு எனக்கு நீங்குவது இன்று போலும் எனின்,—தைவம் (ஆய்) உண்மையைப் புணர்ந்து. எ-து. அசத்தின் வயப்பட்டு நின்று சுட்டியறிந்து வந்த நீ அதனை ஒழிந்து அங்ஙனந் தோன்றிய சத்தின் வயத்தினையாய் அதனைப் புணர்ந்தால்,—அதனால் பொய் விட்டுப்போம். எ-து. அப்புணர்ச்சியானே சுட்டுணர்வாகிய அப்பொதுவியல்பு நின்னை விட்டு நீங்கும். எ-று.

என்ன என்றது உபசார வழக்கு. சட்ட என்பது செப்பம் உணர்த்தி நிற்பதோர் அக்ஷரவீற் றிடைச்சொல். அது சட்டம் என இழிவழக்கின் மகர வீறாய் கரீஇயிற்று. அசத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. உண்மை சத்து என்பன ஒருபொருட் கிளவி. தைவமாய் என ஆக்கச் சொல் வருவித்து உரைக்க. புணர்ந்தால் என்பது புணர்ந்து எனத் திரிந்தது. உண்மைக்குத் தைவமாதல் புணரின் என உருபுமயக்கமாகக் கொண்டு உரைப் பினும் அமையும்.

பற்றறக் கழிந்தொழியும் என்பார் விடும் என்னாது 'விட்டுப்போம்' என்றார்.

> கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
> யண்டனே யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
> வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி ஞெண்கருட
> சானத்திற் றீர்விடம்போற் றான்.

எ—து. உ—ம். எ—னின். அசத்தை அசத்து என்று கண்டு ஒழியுமாறும் ஒழிந்தவழி உண்மையைத் தைவம் புணருமாறும் புணர்ந்தவழி அதனாற் பொய் விட்டுப் போமாறும் யாங்ஙனம்? என்பாரை நோக்கி அவற்றைத் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். கண்டதை அன்று அன்று எனக் கண்டு அசத்து ஆய் விட்டு. எ-து. சுட்டி உணரப்பட்ட பிரபஞ்சத்தை இது சத்தன்று இது சத்தன்று என ஒரோவொன்றாக வைத்து நோக்கி அசத்து என்று ஒழித்து,—ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து. எ-து. அவ்வாறு கண்டு ஒழிந்த தன் அறிவின்கண்ணே சுட்டுணர்வின்றி நின்ற கடவுளை ஆராய்ந்து,—உணர. எ-து. சோகம் எனப் பாயிப்பனுயின்,—உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு. எ-து. அப்பாவகத்தான் அத்துவிதமாய் விளங்கித் தோன்றும் முதல்வனுல் அகாதியாய்க் கூடி நின்ற பொதுவியல்பைத் தான் விட்டுநீங்குமாறு,—ஒண் கருட சானத்தின் தீர் விடம் போல். எ-து. ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கித் தோன்றுங் கருடனுல் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளு மாறு போலாம். எ-று.

தான் என்பது முன்னையது எழுவாய். பின்னையது அசை. சானம் பாக தச்சிதைவு.

கருடதியானமாவது யாதெனிற் கூறுதும்:—ஆதிபௌதிகம், ஆதிதை விகம், ஆத்தியான்மிகம் எனக் கருடன் மூவகைப்படும். பொருடோறும் இவ் வாறு கண்டுகொள்க. அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கருடன், ஆதிபௌ திக கருடன், அதற்கு அதிதெய்வமாகிய மந்திரம் ஆதி தைவிக கருடன், அம் மந்திரம் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக கருடன் எனப்படும். அம்மூன்றனுள் ஈண்டுக் கருடன் என்றது கருடனுக்கு அதிதெய்வமாய மாந்திரிகன் உள்ளத்தின் அதுபோல் வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அத னைப்பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சிவிசேடத்தால் அம்மந் திர ரூபமே தானாக அநன்னியபாவனை செய்து தன்னறிவு அதன் வயத்ததாம் படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கண் கொண்டு பார்ப்பவே அஃது அவ்விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின் அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. புள்ளு விலங்கு மரம் முதலியவற்றுக்கெல்லாம் அதிதெ ய்வமந்திரம் உள என்பதூஉம், மந்திரங்களைக் கணிப்போன் படிகம் போல மந்திரசொரூபியாவன் என்பதூஉம், *சர்வஜ்ஞாநேத்தரம் முதலியவற்றுட் காண்க.

இதனை கருடபாவனை அசத்தியம் என்பார் மதம் போலியாயவாறும் உணர்க. அல்லதூஉம், பாவனை போலியாயவழி அது பயன்றருமாறு யாண் டையது என்றெழிக.

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்றது.

எ—து. மே—ள். எ—னின். ஆன்மாவைச் சுத்திபண்ணுதற்குப் பாசம் ஒரு வியவழித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானசொரூபம் ஒன்றே அமையுமாக லின் இவ்விடத்தில் இனிச் செய்யக்கடவதொன்றில்லை என்பாரை நோக்கிச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட லுற்றது.

இ - ள். பாசமொருவி ஆண்டித் தண்ணிழலாய்ப் பிரகாசித்த ஞானத்தண் ணிறற் பதியைச் சிந்தை நாடிய பின்னர் அவ்விடத்துத் திருவஞ்செழுத்தையும் விதிப்படி கணிக்க என மேற்கொண்டது. எ - று.

இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அற்றுகலின் றே †"பின்னு—மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க" என் றார் வழிநூலாசிரியருமென்க.

---

* சர்வஜ்ஞாநேத்தரத்துட் கூறுமாற்றை சுகுடு-சுகூசு-ம் பக்கத்துக்குறிப்பிற்கா ண்க. † சிவஞானசித்தி. சூ-ம் சூ. க. பாசஞானத்தாலும்.

ஈண்டு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை என்றது மூர்த்திபஞ்சாக்கரத்தை. திருவஞ் செழுத்தாற் சாதிக்கப்படும் பொருளும் அதுவே ஆகலான் வேறு வகுத்துக் கூற வேண்டாமையின், 'விதிப்படி என மாட்டெறிந் தொழிந்தார்.

இவ்வாறு ஆசிரியர் மாட்டெறிந்ததூஉம் உணராதார் சாதித்துநிற்கும் முறை வேறே ஒதும் முறை வேறே எனச் சித்தாந்தவழக்கொடு முரணிக் கூறுவர். நிற்கும் முறைமையும் ஒதும் முறைமையும் தம்முள் இயைபில்வழி அஃது அதற்குச் சாதனமாமாறு யாண்டையது என்றெழிக.

மானதம்*மந்தம் †உரை எனக் கணிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதம் எனப்படும் அறிவாற்கணித்தலே ஈண்டு உச்சரித்தல் என்பார் சூத்திரத்துள் உச்சரிக்க என்னாது ‡'எண்ணுக' என்றார். வடமொழிச்சூத்திரத்துத் 'தியானிக்க' என்றதும் அது. இன்னும் இதன்கட் படும் இயல்பெல்லாம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிப்பாட்டு, நெஞ்சு விடுதூது முதலியவற்றுட் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப் போல நோக்கிற்றை நோக்கி நிற்கும் ஆகலின் அது நீக்குதற்கு எனக்கொள்க.

எ-து. ஏது. எ-னின். அந்தரங்க வழிபாடாகலின் அகிந்திரனுப் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமாற்றைச் சாரவைத்து ஒத்தற்பாலதாகிய இதனைச் ¶சித்தசாதனமாய் ஈண்டு விதித்தல் எற்றுக்கு? என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். வேம்பு தின்ற புழு அதனை ஒருவிக் கருப்பைத் தலைப்பட்டு அதன் சுவை தெரிந்துழியும் பயிற்சிவயத்தான் நோக்கிற்றை நோக்கி நிற்குமாறு போல அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்ட உயிர்களுக்கு அதனுன் ஞானசொரூபம் வினங்கி ஞேபங் காட்சிப்பட்ட விடத்தும் அவை பயிற்சிவயத்தாற் பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்கும் ஆகலின் அவ்வாதனை நீக்குதற்பொருட்டு ஈண்டைக்கு வேண்டப்படுதலான் 'இனி ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி இவ்விடத்து உச்சரிக்க' என மேற்கொண்டது எனக் கொள்க. எ-று.

இவ்விடத்து என்றதனுல் அணைந்தோர் தன்மையைச் சாரவைத்து மேற்கோடற்குரிய ஸ்ரீபஞ்சாக்கரத்தை என வருவித்துரைத்துக்கொள்க. எனக்கொள்க என்று உடம்படுப்பித்ததும் அதுபற்றி. இக்கருத்து நோக்கியன்றே

---

* இதற்கு உபாஞ்சு என்றும் பெயர். † இதற்கு வாசகம் என்றும் பாஷியம் என்றும் பெயர். ‡ உரை நூறுமடங்கு பலமும், மந்தம் பதினுயிரம் மடங்கு பலமும், மானதம் கோடிமடங்கு பலமும் தருதலால் அப்பலத்தினது மிகுதிப்பாடு நோக்கி மானதமாகச் செபிக்க என்றார். அது "மானதமாகச்செபிக்கிற் கோடி குணமதிகம்" என்பதனுல் அறிக. ¶ முதலதிகாரணத்தில் ஞானக்கண்ணைக் காண்க என்றதும் ஆன்மசுத்தி, இவ்வதிகாரணத்தில் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரிக்க என்றதும் ஆன்மசுத்தி ஆகலான் முற்கூறப்பட்ட விஷயமே பின்னும் கூறப்படுதலிற் சித்தசாதனமாமென்பது அவர்கருத்து. அங்ஙனமாகாமை பின்னர்க் கூறுமாற்றை ணுணர்க.

புடைநூலாசிரியர் அஞ்செழுத்தருணிலையை ஆன்மலாபத்தின் பின்னை அணைந்தோர் தன்மையைச் சாரவைத்து ஓதியதூஉம் என்க.

* ''வானேஞக்கி வாழும்'' * ''கோனேஞக்கி வாழும்'' என்றாற்போல ஈண்டு 'நோக்கு' என்றது மனவெழுச்சிவிசேடத்தை.

பிரகாசித்தவழி என்பது பிரகாசித்து எனத் திரிந்தது.

ஈண்டு ஞானம் என்றது அசத்தை அசத்து என்று கண்டவழி விளங்குவது எனப்பட்ட ஞானசொரூபத்தை; அஞ்ஞானம் என்றது அதற்கு மறுதலையாகிய சுட்டுணர்வை என உணர்க. அது நீக்குதற்கெனக் கொள்க எனவே, சித்தசாதனமன்று என்பதும் பெறப்பட்டது.

அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு.

எ—து. உ—ம். எ—னின். இஃது அவ்வாசனையை நீக்குதற்குச் சாதனமாமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கி அஃதாமாறு கூறி ஏதுவை வலியுறுத்துதல நுதலிற்று.

இ - ள். உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு, எ-து. உயிர் சிவனுக்கு உடைமையாதலை அஞ்செழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்து நோக்கி,—இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து, எ-து. தன்னுடம்பகத்தே இதயம் உந்தி புருவநடு என்னும் மூன்றனையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானமாகக் கருதிக்கொண்டு புறம்போ ஞான பூசை செய்யும் முறைப்படி இதயபங்கயத்தில் அவ்வஞ்செழுத்தால் அமைந்த திருமேனியில் அம்முதல்வனைக் கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்டபுட்பங் கொண்டு அம்மனுவால் அர்ச்சனை செய்து,—அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம் செய்து, எ-து. அத்திருமந்திரத்தானே குண்டலித்தானமான உந்தியில் ஞானவனலை எழுப்பி அதன்கண் விந்துததானத் தமிழ்த்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடை நாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமித்து,—கோதண்டம் சானிக்கில். எ-து. விந்துத் தானமாகிய புருவ நடுவிற் சிகர யகர வகரங்கள் மூன்றும் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமாம் முறைமை நோக்கி அதனைச் சிவோகம்பாவனை செய்வனையின்,—அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம். எ-து. அப்பாவனைக்கண் அம்முதல்வன் விளங்கித் தோன்றுவன் அப்பாவகன் அவனுக்குச் சேட சேடிய பாவகத்தால் அடிமையாவன். எ - று.

ஓமித்தலும் தியானித்தலும் பூசைக்கு அங்கம் என அறிக. ஞானசொரூபம் விளங்கியவழியும் பயிற்சிவயத்தான் ஏத்தேசப்பட்டுப் புறத்திற்

* திருக்குறள். குசஉ.

செல்ல நோக்குவதாய தன் அறிவை அங்ஙனம் ஆகாதவாறு மடக்கி அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி நிட்டை கூடும்படி அஞ்செழுத்தோதும் முறையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்க அஃது அங்நோக்கத்தைப் பற்றறக் கெடுத்து ஞானசொரூபத்தை இனிது விளக்கிப் பூரணநிலையிற் கொண்டு செலுத்துமாகலின் இஃது ஈண்டைக்குச் சிறந்த சாதனமாயிற்று என்பது.

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணு—முந்தவே
காட்டாக்கிற் ரோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாஞ மோதஞ் செழுத்து.

எ—து. உ—ம். எ—னின். அங்ஙனம் ஒரு குறியின்கண் வைத்தன்றி முதல் வனைக் காண்டல் செல்லாதவாறும் அவ்வாறு கண்டவழி முதல்வன் தன் மாட்டு விளங்கித் தோன்றுமாறுந் தோன்றியவழித் தான் அம்முதல்வனுக்கு அடிமையாமாறும் உவமையில் வைத்து உணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

இ-ள். இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு. எ-து. அந்தரத்தியங்கும் நவக்கோள்களுள் ஏனைய போலீக் காணப்படாத இராகு கேதுக்களை *உபராகத்திற் சந்திராத்தர் மாட்டுக் கண்டாற் போல,—சிந்தையில் காணில். எ-து. மூப்பொருள்களுள்யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என்னும் உணர்விற்கு விடயமாகிய பசுபாசங்களோடு ஒப்பீ வேறு உணரப்படாத முதல்வனைத் தன் இதயபங்கயத்தின் அஞ்செழுத்தின் முறையின் வைத்துக் காணுமாயின்,—உந்தவே காட்டாக்கின் சிவன் தோன்றிக் கண்ணும். எ-து. கோலை நட்டுக் கயிற்றினுற் சுற்றிக் கடையவே †காட்டத்தினின்று அங்கி தோன்றுமாறு போல அம்முதல்வன் ஆண்டுத் தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கி நிற்பன்,—தான் கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம். எ-து. அப்பொழுது தானும் எரி சேர்ந்த இரும்பு போலத் தனது சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாம்,—அஞ்செழுத்து ஓது. எ-து. ஆகலான் அத்திருவஞ்செழுத்தை விதிப்படி ஓதுவாயாக. எ-று.

கேது சாயாக்கிரகமாகலின், வேறு கூறாயினர்.

கண் அறிவு. தோன்றி ஆம் என இயையும். உந்துதல் ஈண்டுக் கடைதன்மேற்று. காட்டாக்கி வடமொழிச்சிதைவு. இகரம் விகாரத்தாற் றொக்கது. இன் உவமவுருபு.

ஈண்டும் 'ஓதஞ்செழுத்து' என்றது வலியுறுத்தவாறு.

---

* இதனை உ0கம் பக்கத்துக்குறிப்பிற்காண்க. † இக்கருத்தேபற்றி "விறகிற்றீயினன்***முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே" என்று அருளிச்செய்தார் ஆளுடைய பின்னையாரும்.

மண்முத னுளமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமூ—நண்ணிற்
கலியுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணு
நிலையதிலா மச்சிவன்ரு ணேர்.

எ—து. உ—ம். எ—னின். தத்துவம் முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனே இதயபங்கயத்திற் கண்டு அர்ச்சிக்குமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கி அவ்விதயபங்கயத்தின் இயல்பு உணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். நண்ணில். எ-து. அவ்விதயபங்கயத்தின் இயல்பை அறியப்புகின்,—மண் முதல் நாளம். எ-து. நிலம் முதலிய இருபத்துநான்கு தத்துவமும் உந்தியி னின்றுந் தோன்றி எண்விர லளவைத்தாயுள்ள நாளவடிவாம்,—வித்தை மலர். எ-து. வித்தியாதத்துவங்கள் ஏழுஞ் சுத்தவித்தையும் என்னும் எட்டுத் தத்துவமும் எட்டிதழ் வடிவாம்,—எண்ணிய ஈசர் சதாசிவமும் கலா ரூபம். எ-து. அத்தத்துவங்களுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசரஞ் சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கு எனப்படுங் கேசர வடிவாம்,—சத்தி கலை உருவாம். எ-து. சத்தி தத்துவம் அக்கேசரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டு வடிவாம்,—நாதம் அதன் கண்ணும். எ-து. சிவ தத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு வீச வடிவாம்,—அதில் அச்சிவன் தாள் நிலையாம். எ-து. ஆகலான் அவ்வியல்பிற்றாகிய இதயபங்கயத்தின் மூப்பத்தாறு தத்துவமும் ஆசனமாகவுடைய அச்சிவனது சத்தி நிலை பெறும்,—நேர். எ-து. அதனை அறிந்து திருவஞ்செழுத்தால் அர்ச்சிப்பாயாக. எ - று.

இதனுனே *"அண்டபிண்ட மவைசம மாதலால்." புறத்துக் காணப்படும் முப்பத்தாறு தத்துவமும் அகத்தினிற் சூக்குமமாய் உண்டென்பது காட்டி முதல்வனுக்கு இந்நிலையே அந்நிலை எனத் தெளிவித்தவாறு.

வித்தை என்பது இரட்டுற மொழிதலான் அவ்வாறு உரைக்கப்பட்டது. சிவஞான சித்தியில் †"மூட்டுமோ கினிசுத்த வித்தைமல ரெட்டாய்" என் புழி மோகினி என்றதூஉம் ஆகுபெயரான் அதன் காரியமாய கலாதிகளின் மேல் நின்றது.

இவ்வாறன்றி நிலம் முதலிய முப்பத்தொரு தத்துவம் எனப்படும் எட்டுக்கொத்தும் எண்விரல்நாளவடிவும், அசுத்தமாயா தத்துவம் நாளத்துக்கும் மலருக்கும் நடுக்கண்ட மாகிய கிரந்தி வடிவும் அதற்குமேற் சுத்தவித்தையின் வாமை முதலிய எட்டும் எட்டிதழ் வடிவுமாம் என்றுரைப்பாரும், முப்பத்தொன்றுக்குமேல் அசுத்தமாயை கிரந்தியின் அதச்சதனம் சுத்தமாயை ஊர்த்துவச் சதனம் அதற்குமேல் ஈசரதத்துவத்தில் அனந்தன் முதலிய எட்டும் எட்டிதழ் வடிவம் சதாசிவதத்துவம் ஒன்றுங் கேசர வடிவம் எனக் கொண்டு

* கோயிற்புராணம், பதஞ்சலிச்சருக்கம் எ0. வலங்கைமான். † சிவஞானசித்தி, சுபக்கம். கூ-ம் சூ. கூ. நாட்டுமிதய.

அதற்கியையக் கொண்டுகூட்டி உரைப்பாரும், கலாரூபம் என்றது பஞ்சகலை களே எனவும், அஃது யாண்டுங் கூட்டியுரைக்கப்படும் எனவுங் கொண்டு மண் முதலான மலர் என்பதற்கு மண்ணகிய நிவிர்த்திகலாரூபம் நாளமும், மண்ணை முதலாக உடைய ஏனை இருபத்து மூன்று தத்துவ மாகிய பிரதிட்டாகலா ரூபம் மலருமாம் எனவும், வித்தை யெண்ணிய வீசர் சதாசிவமுங் கலையுரு வமாம் என்பதற்கு வித்தியாதத்துவமாகிய வித்தியாகலாரூபங் கலை எனப் படுங் கேசரமுஞ் சுத்தவித்தையோடு கூட்டி எண்ணப்பட்ட ஈசுரதத்து வஞ் சதாசிவதத்துவ மாகிய சாந்திகலாரூபங் கலைக்குள் உரு எனப்படும் பொருட்டுமாம் எனவும், நாதமாஞ் சத்தி யதன் கண்ணும் என்பதற்குச் சிவ தத்துவஞ் சத்திதத்துவ மாகிய சாந்தியதீதகலாரூபம் பொருட்டின்கண்ணு கிய வீசமாம்..எனவும் உரைப்பாரும் உளர். இவை யெல்லாம் அவ்வவ்வாக மபேதம் பற்றிக் கொள்ளப்படும்.

கலை அறுபத்துநான்கு ஆகலான் அறுபத்துநான்காகிய கேசரங்களுக் குத் தொகைபற்றிக் கூறப்படும் ஆருபெயராயிற்று.

ஈசர் ஆருபெயர்; கலையுரு கலைக்குள் உருவென உள்ளுருபு விரித்துரை க்க. அதில் என்புழி அன் சாரியை விகாரத்தாற் றொக்கது.

இது நாளம் முதலாக மேல்நோக்கித் தோன்றும் உலகத்துக் கமலம் போ லாது கண் முதலாகக் கீழ் நோக்கித் தோன்றியதோர் திப்பிய கமலம் எனக் கொள்க.

'சிவன்ருள் அதினிலையாம்' எனவே சிவன் சத்திக்கு மேலாய் நிற்பன் என்பதூஉம் பெறப்படும்.

மூன்றாமதிகரண முடிந்தது.



ஒன்பதாஞ்சூத்திர முடிந்தது.

சாதனவியன் முற்றிற்று.

சிவமயம்.

பயனியல்.

பத்தாஞ்சூத்திரம்.

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே.

எ-து. சூ-ம். எ-னின். பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துத லுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்து உணர்த்துத லுதலிற்று.

இ-ள். மேல் ஏழாஞ்சூத்திரம் முதலிய மூன்றனும் முறையே சாதிக்கும் பொருள தியல்புஞ் சாதித்துப் பெறப்படும் பொருள தியல்புஞ் சாதிக்கு மாறும் உணர்த்தி, இனி அச்சாதனத்தானைய பயனியல்பு வகுத்துக்கூறுவான் எடுத்துக்கொண்டார். அப்பயனுவது பாசவீடுஞ் சிவப்பேறும் என இருவகைப்படும். அவ்விரண்டனுட் சுட்டுணர்வி ஞகிய ஏகதேச நோக்கத்தைத் திருவஞ்செழுத்தினது உச்சரிப்பாற் பற்றறத் துடைத்தவழிப் பெறப்படுவ தாகிய மேலைச் சூத்திரத்தின் எடுத்துக்கொண்ட ஆன்மசுத்திப் பயனுகிய பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறு மேற் சிந்தனை செய்த பொருளைத் தெளியுமாறு உணர்த்து முகத்தான் உணர்த்துதல் இப்பத்தாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனுனே சூத்திர இயைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. ஞானக்கண்ணுற் காணப்பட்ட அம்முதல்வன் தான் உடனுய்நின் றறியவும் வேறு காணப்படுமா றின்றி யானே அறிந்தேன் என்னும்படி உயிர் தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிரின் வழி நின்ற அப்பெத்தநிலை போல், ஈண்டு உயிர் அம்முதல்வனெடு உடனுய் நின்று அறியினுந் தானென வேறு காணப்படுமாறின்றி அவனெடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், மலமாயை என்னும் இரண்டனெடு வலிய கன்ம மலமும் இல்லையாய் ஒழியும். எ-று.

அவனே தானே என்னும் ஏகாரம் இரண்டனுள் முன்னையது பிரிநிலைக் கண்ணும் பின்னையது தேற்றத்தின் கண்ணும் வந்தன.

நெறி உவம உருபு.

மலமாயையொடு கூடிய வீணை என்ரு ர்கலின் *'இன்றே' என்ரூர்.

உவமைக்கு ஒதியது பொருளினும், பொருளுக்கு ஒதியது உவமையி னுஞ் சென்று இயைந்தன.

ஈண்டு ஒற்றுமைப்படுதலாவது, குடமுடைந்தவழிக் குடாகாயமும் ஆகா யமும்போல ஒருபொருளாய் ஒற்றுமைப்படுதலோ, அன்றிக் குற்றியை மகன் என்பதுபோலத் திரிவுகாட்சியான் ஒற்றுமைப்படுதலோ, அன்றி முண்ணை குடம் என்பதுபோல ஒன்றுதிரிந்தொன்ருய் ஒற்றுமைப்படுதலோ, அன்றி வெள்ளீயுக் காமரையும்போலக் குணகுணித்தன்மையான் ஒற்றுமைப்படுத லோ, அன்றித் தீயும் இரும்பும்போல ஒன்றினொன்று விரவுதலான் ஒற்றுமை ப்படுதலோ, அன்றிப் பாலும் நீரும்போலப் பிரிக்கப்படாத சையோகத்தான் ஒற்றுமைப்படுதலோ, அன்றிக் கருடனும் மாந்திரிகனும்போலப் பாவனைமாத் திரையான் ஒற்றுமைப்படுதலோ, அன்றிக் காய்ந்த இரும்பின் நீர்போல ஒன் றினொன்று இலயமாய் ஒற்றுமைப்படுதலோ, அன்றிப் பேயும் பேய்பிடியுண் டவனும்போல ஆவேசத்தான் ஒற்றுமைப்படுதலோ, அன்றி இந்தனத்தின் எரிபோல விளங்காமையான் ஒற்றுமைப்படுதலோ, அன்றி ஞாயிற்றினொளி யின் விளக்கொளிபோலச் சத்தி கெட்டுநிற்றலான் ஒற்றுமைப்படுதலோ, அன்றித் தலைவனுந் தலைவியும்போல இன்பநுகர்ச்சி மாத்திரையான் ஒற்று மைப்படுதலோ, அன்றி நட்டாரிருவர்போல நட்புமிகுதியான் ஒற்றுமைப்படு தலோ, அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமைமாத்திரையான் ஒற்றுமைப்ப துதலோ என்று அவ்வச் சமயவாதிகண் மதம்பற்றி நிகழும் இன்னோரன்ன யேப்பாடுகளை எல்லாம் நீக்குதற்பொருட்டு, 'அவனே தானே யாகிய வன்மெறி' என உவமையெடுத்துக் காட்டி ஓதினர். ஈண்டுக் கூறிய ஒற்றுமைக்கட் படும் இயைபாவ தென்னை? எனின் அது வருகின்ற சூத்திரத்திற் பெறப்படும்.

இதனுள், அவனே தானே யாகிய வன்மெறி யேகனுகி என்றது ஓதிகர ணம்; இறைபணி நிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றே என்றது ஓ தினகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரம் என்றுணர்க.

முதலதிகரணம்.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற † முறை மையான் அவனிடத்து ஏகனுகி நிற்க என்றது.

எ–து. மே–ள். எ–னின். ஞானம் பிரகாசித்து முதற்பொருளைக் காண் டன்மாத்திரையே வீடுபேற்றிற்கு அமையும் எனச் சிவசமவாதசைவர் முத லியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற் றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ–ள். வெ–டை.

அவ்வாறு நிற்கவே யான் எனது என்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை அணையு மாகலான்.

* "சிறப்பொடு பூசனை செல்லாது" என்புழிப்போல. † முறைமையான்-முறைமை போல. இஃது இப்பொருட்டாதல் 'ஆகிய அன்மெறி' என்பதனுனறிக.

எ–து. ஏது. எ–னின். அஃது எற்றுக்கு என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ - ள். அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நின்றாலே யானும் எனதும் எனப் பகுத்து நிற்கும் மயக்கவுணர்விற்கு ஏதுவாய மலம் நீங்கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமாகலான் அச்செருக்கறுதிக்குக் காரணமாதல்பற்றி, 'ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்றமுறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க' என மேற்கொண்டது. எ - று.

அவ்வாறு நில்லாதவழி மலம் அறாது அஃது அறுதல்வழிச் சிவபாதத்தை அணுதல் பெறப்படாது என்பார் நிற்கவே எனத் தேற்றகாரத்தாற்கூறினார்.

யான் எனப்படுவது * ஞாதிரு. எனது எனப்படுவன ஞான ஞேயங்கள்.

ஆறாவது பண்பின் சிறுமையும் உணர்ச்சிச் சிறுமையும் பற்றி வந்தது.

ஒருமை தனித்தனி சென்று இயையும். செருக்கு ஆகுபெயர்.

அற்று அணையும் என்றது "மழைபெய்து குளநிறையும்" என்றாற்போலக் காரணகாரியப் பொருள்பற்றி வந்த செயவெனெச்சத் திரிபு.

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
றானெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை.

எ–து. உ–ம். எ–னின். அங்ஙனம் பருத்துநின் றுணரு முணர்வை மயக்க உணர்வென்றது என்னை? என்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். நான் அவன் என்று எண்ணினார்க்கும் நாடும் உளம் உண்டாதல் தான் என ஒன்று இன்றியே தான் அது ஆய். எ-து. யானென்றும் அவனென்றும் ஞாதிரு ஞேயங்களைப் பகுத்துணர்ந்து நிற்பார்க்கும் யானே என நிற்பார்க்குப் போல அவ்வா றெண்ணுகின்ற உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாகலான், அவ்வழித் தான் என்று ஒருமுதல் காணப்படுமாறு இன்றித் தான் அவ்வுணர்வேயாய்,—நான் என ஒன்று இல் என்று தானே எனும் அவரைத் தன் அடி இல் என்று வைத்து தான் ஆம் இறை. எ-து. இனி யானென் றொருமுதல் காணப்படுமா றில்லையென் றுணர்ந்து முழுவதுந் தானே எனக் காணுந் தெளிவுடையாரைத் தனது திருவடி யியாபகத்துள் அடங்கிநிற்கச் செய்து அவ்வாறேயாவன் முதல்வன். எ - று.

ஆம் ஆம் என இயையும். ஆயாம் என்புழிச் செய்தெனெச்சம் "கள்ளார்க்கு நஞ்சொத்து கட்டார்க் கமிழ்தொக்கு மிவன்" என்றாற்போலத் தன்னினையாதலுணர நின்றது. எண்ணினர்க்கும் என இறந்ததுதழீஇய எச்சவும்மை சுட்டுநோக்கி மகரங் கெட்டு நின்றது.

* இவற்றை உகூ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க.

நாடி மூள முண்டாயவழித் தான் இல்லாதலும் அஃதில்லவழித் தான் உளனாதலும் யாங்ஙனம்? பெறுதும் எனிற் காட்டுதும்:—

*தூல ஒளியாகிய கண்ணொளியுஞ் சூக்குமஒளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலை உற்றுநோக்க வல்லார்க்குப் பிரித்தறிய வாசாமையிற் கண்ணொளியாக் காணுங்காற் காணுந்தன்மையே மூன்றுத்துத் தோன்றுமாகலின் அவ்வழி விளக்கொளி இருந்தும் இல்லைத்தாமென, அன்றி விளக்கொளியாக் காணுங்காற் காட்டுந்தன்மையே மூன்றுத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளி இருந்தும் இல்லைத்தானே; இனிக் கண்ணொளியும் விளக்கொளியும் எனப் பகுத்துக் காணப்புகினும் காணுந்தன்மையே மூற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளி திரிவுபுலனுக் காட்சிப்பவே தல்லது தெளிவுபுலனுக் காட்சிப்படுமாறில்லை. அதுபோலத் தூல அறிவாகிய உயிருஞ் சூக்கும அறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் பிரித்தறிய வாசாமையின் ஆண்டும் இவ்வாறே கண்டுகொள்க.

இக்கருத்துப்பற்றியன்றே †"கண்ணொளி விளக்கின் சோதி, கலந்திடுங் கருத்தொன் றன்றே" எ-ம், ‡"காண்பானுங் காட்டுவதுங் காண்பதுவு நீத்துண்மை—காண்பார்க ணன்முத்தி காணுர்கள் - காண்பானுங்—காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடற்றைச் சம்பந்தன்—வாட்டுகெறி வாரா தவர்" எ-ம் கூறினர் புடைநூலாசிரியருமீ.

அற்றேல், இவ்விரண்டனுள் யாது திரிவுகாட்சி? யாது தெளிவுகாட்சி? எனின்,—கண்ணொளியோடு கூடியவழியும் இது விளக்கொளி இது ஞாயிற்றொளி இது திங்களொளி என அவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும் விளக்கொளி முதலியவற்றின் காட்சி தெளிவுகாட்சி எனவும், அவ்வொளிகளோடு கூடியவழி அவ்வாறு ஒருபெற்றித்தாய்க் காணப்படாத கண்ணொளியை வேறு காண்டல் திரிவுகாட்சி எனவும் கண்கூடாக விளங்கக் கிடத்தலின் இவ்வாறே பொருளினும் வைத்துணர்ந்துகொள்க.

இவ்வாறன்றி, விளக்கொளி முன்னர்க் கண்ணொளி சத்திமடங்கிப் போதலின் அது விளக்கொளியைப் போலக் காட்சிப்புலனுகாதாயிற்று என்னுமோ எனின்; எல்லும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப்புலனுதல் பிறிதொன்றுற் பெறப்படாமையின்.

அற்றேல், மின்மினித் தூணையாயினுந் தானே விளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக்குணம் உண்டென்பதற்குப் பிரமாணம் என்னை எனின்,—அறியாது கடாயினுய்: ஆகாயத்தின்கண்ணதாகிய சத்தகுணம் வியஞ்சகத்தானன்றித் தினைத்துணையானுந் தானென விளங்குமாறின்மையின் அதுபற்றி எதிரொலி வடிவாய அவ்வோசையை ஆகாயத்தின் குணமன்று வியஞ்சகப் பொருளின் குணமென்பார் யாருமில்லை. அதுபோலக் கண்ணின்கண்ணதாகிய ஒளியும் வியஞ்சகமுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்திரையே

* தூலவொளி - வியஞ்சகத்தை அபேக்ஷித்து நின்று விளங்கு மொளி. சூக்கும வொளி - வியஞ்சகத்தை அபேக்ஷியாது நின்று விளங்கு மொளி. † சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. எ. கண்ணொளி விளக்க ளித்து. ‡ வினவெண்பா. கக.

பிறிதில்லை யாகலான் அதனைக் கண்ணின் குணமன்று என்றல் அறிவிலாதார் கூற்றேயாம் எனவும், அக்கண்ணெளியாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேசமாயின் ஏகதேசமாய் விளங்கியும் அது வியாபகமாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்பதோ ரியல்பிற்றெனவும் உணர்க.

அஃதங்ஙனமாக, *"கண்ணெளி விளக்கின் சோதி கலந்திடும்" என்றற்குப் பிரமாணம் என்னை? ஒரு விடயத்தின் வீழ்ந்த பல கண்ணெளிகட்குத் தம்முள் இயைபில்லாதவாறு போல ஒருவயிற்பட்ட கண்ணெளி விளக்கொளிகட்குத் தம்முள் இயைபில்லை என்றலே பொருத்தமுடைத்துப் போலும் எனின்,—அஃது அறியாதார் கூற்றேயாமென் றிழுக்கு. என்னை? ஒரு விடயத்தின் வீழ்ந்த கண்ணெளிகள் தம்முள் ஒன்றனை ஒன்று காணுமாறும் இல்லை காட்டுமாறும் இல்லை ஆகலான் அவை தம்முட் கலத்தற்கு ஓரியைபின்றென்பது ஒக்கும். அவ்வாறன்றிக் கண் விளக்கினைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டலும் ஆகிய இயைபு உண்மையானும், இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணெளிமுதலாயின ஈண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங்கள்தத்தம் விடயத்தோடு இயைந்தறிச் சந்நிதிமாத்திரையான் அவற்றை அறிதல் செல்லா என்பது ஆகமங்களுக்கெல்லாந் துணிபாகலானும் அத்தன்மையவாய கண்ணெளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லை என்றல் காண்டல்விரோத மாகலின், இவ்வாறு உவமைக்கோதியன வெல்லாம் பொருட்கணிணு மாமாறு உணர்ந்து உய்த்துரைத்துக் கொள்க.

அற்றேல், ஈண்டு எடுத்துக்காட்டிய கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறின்மைபோல உயிர்களுந் தம்முள் ஒன்றனையொன்று அறியுமாறு இல்லைபோலும் எனின், அறியாது கூறினாய்; கண்கள் தமமுள் ஒன்றுனென்று காணப்படுமாறு இல்லையென்றது விளக்கும் விடயமுங் காணபடுமாறு போல வேறியைந்து தனிப்பொருளாய்க் காணப்படுமாறில்லை என்றதுணையே அன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக் கண் காணுங்கால் அதுவது வாய் நின்று காணும் பெற்றித்தாய்த் தன்னையும் அவ்விளக்கொளிவண்ணமாய்க் காண்டல் உண்டென்பது கண்கூடாக அறியக் கிடத்தலின், ஈனைக் கண்களையும் அவ்வாறு காண்டல் அமையுமாகலான் அதுபோலத் தம்முட் டனித்தியை பில்லாத உயிர்களுஞ் சிவத்தோடு இயைந்து நின்று தம்மையும் பிறவுயிர்களையும் இவ்வாறு உணர்தல் அமைவுடைமையான் என்பது.

† 'நாடியரன்—றன்னிலை தன்னையுங் கண்டு தமைக்காணு—ரென்னு மெனவதிவார்' எ-ம், ‡ "தன்னிலை தானையறிந்தாற்—றன்னையுந் தானே காணுந் தானது வாகி நின்றே" எ-ம், ¶ "அதிலறி வடங்கி—மன்னிட வியாபியாய வான்பயன் றேறுன்றும்" எ-ம், § "என்னையுங் கண்டேன் பிறரையுங்

* சிவப்பிரகாசம், உண்மை. கூ-ம் சூ. எ. கண்ணெளி. † இந்நூல். கூ-ம் சூ. க-ம் அதி. க நாடியோ. ‡ சிவப்பிரகாசம், உண்மை. அ-ம் சூகூ. தன்னறி. ¶ " " கூ-ம் சூ ஈ. இங்ஙனே § பட்டணத்துப்பிள்ளையார், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. கஈ. மேலிய

கண்டே—னின்னிலே யனேத்தையுங் கண்டே னென்னே—நின்னேக் காணு மாந்தர்—தம்மையுங் காணுத் தன்மை யோரே" எ-ம் பிரணவும் இவ்வா றேதும் அநுபவமுடைய தேசிகர் திருவாக்குக்களானும் இவ்வுண்மை உணர்ந்து கொள்க.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனி இறைபணி வழுவாது நிற்க என்றது.

எ—து. மே—ள். எ—னின். உடம்பு நிற்குங்காறும் அது கொண்ட வினேப் பயனும் அதனே அனுபவித்தற்குத் துணேக்காரணமாய் உடனிற்கும் முயற்சியும் ஒருவாற்றானும் நீக்கலாகாமையின் அவை அவ்வழி ஏகனுகி நிற்றற்குத் தடையாதலிக் கடக்குமா றில்லேபோலுமெனச் சுத்தசைவரீரூயினர் மதம் பற்றி நிகழுங் கடாவை ஆசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ-ள். வெடை.

நிற்றலாவது சலியாது நிலேபெறுதல் என்பார் 'வழுவாது நிற்க' என்ரூர்.

ஈண்டு இறைபணி என்றது யாதெனின்,—அஃது ஆசிரியர்தாமே *முன்னர்த் தெரித்துரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

அவனருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யாகைவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா ஆகலான்.

எ-து. எது. எ-னின். ஏகனுகிநிற்றலே அமையும் இறைபணி நிற்றல் எற்றுக்கு என்பாரை நோக்கி மேற்கோளேச் சாதித்த னுதலிற்று.

இ-ள். தன்செய்திக்கு முதல்வன்செய்தியை இன்றி அமையாத ஆன்மா செய்வன வெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுமாயின் மாயேய முங் கன்மமும் ஏகனுகி நிற்றற்குத் தடையாய் வந்து தாக்கா ஆகலான், அவை தாக்காமைப் பொருட்டுச் செய்யப்படும் உபாயமாதல்பற்றி 'இனி இறைபணி வழுவாது நிற்க" என மேற்கொண்டது. எ-று.

அஞ்ஞான கன்மம் உம்மைத்தொகை.

மலமின்றுதல் †மேற் பெறப்பட்டமையின் ஈண்டு அஞ்ஞானம் என்றது மாயையின் காரியமாகிய மயக்கத்தை என்பது பெற்றும். உடம்பு நிலேக்குமளவும் அவை மாய்வனவன்மையின் அறும் என்னுது 'பிரவேசியா' என்ரூர்.

நாமல்ல விந்திரிய நம்வழியி ன்னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னி
லெத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினே
முற்செய்வினே யுந்தருவான் முன்.

* இதனே உக0-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. † முதலதிகரணத் தேது.

எ-து. உ-ம். எ-னின். உட்பொடு நிற்பார் நுகர்தற்கு வேண்டப்படும் பிராரத்தவினையும் அதுபற்றி ஏறும் ஆகாமியவினையும் ஒருகலையா னுண்மை யின் இறைபணிநீற்றல் பற்றி அவை பிரவேசியா என்றல் அமைவுடைத்தன் றோவாலும் என்பாரைநோக்கி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். இந்திரியம் நாம் அல்ல. எ-து. வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய இந்திரியங்கள் மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல,—நம் வழி யின் அல்ல. எ-து. அவை தொழிற்படுதலும் முதல்வன்வயத்தா னன்றிநம்வய த்தானல்ல,—வழி நாம் அல்ல. எ-து. வினைநுகழ்ச்சிக்கு வாயிலாகிய விடயாதி களும் அவ்விந்திரியங்கள்போல மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல,—நம் வழியின் அல்ல. எ-து. அவை சேட்டித்தலும் முதல்வன் வயத்தா னன்றி நம் வயத்தா னல்ல,—நாமும் அரன் உடைமை.எ-து.அவற்றோடு இயைந்து நின்று வினைகளை ஈட்டுதற்கும் நுகர்தற்கும் வினைமுதலாகிய யாமும் ஞானச்செய்தி களை முதல்வன் விளக்கியவழி விளங்கி அல்லுழி விளங்குமா றின்மையான் அம்முதல்வன் வயத்தாரே மல்லது சுதந்திரரே மல்லேம்,—ஆம் என்னில். எ-து.என்று இங்ஙனம் பசுபாசங்களது இயல்பை உள்ளவாறு உணர்ந்து செய் வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்புஞ் செயலாகக் கண்டுகொண் டிருப்பாராயின்,—இறை பணியார்க்கு எத் தனுவின் நின்றும் வினை இல்லை. எ-து. இவ்வடிமைத்திற முடையார் எவ்வுடம்பி னின்று எவ்வினைகளைச் செய் யினும் அவர்க்கு அவை பந்தமாகாமலில்லை,—முன் செய் வினையும் தருவான் முன். எ-து. அவ்வாகாமியவினையை அளிஞுபாவமாய் உடன்கொண்டு வருவ தாகிய பிராரத்த வினையுந் தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியின் உட லாழாய்க் கழியுங். எ - று.

நம் வழியி னல்ல என்பது வழி என்பதனோடுங் கூட்டி உரைத்துக்கொ ள்ளப்படும்.

மகனன்று குற்றி என்றாற்போல் அன்மைச்சொல் தழுவப்படும் பொரு ண்மை னின்றது. * ''அன்மைக் கிளவி வேறிடத் தான'' என்பதனாற்றாகலின்.

நின்றும் உம்மை சிறப்பு; வினை உம்மைகள் இறந்தது தழீஇயின.

சஞ்சிதவினை தீக்கைசெய்தமாத்திரையே, எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் ஈண்டு முற்செய்வினை என்றது வற்புழிக்கோடலாற் பிரா ரத்தவினைமேற் றுயிற்று.

† தருதல் இடவழுவமைதி. கழியுமென்பது சொல்லெச்சம். உடலாழாய் என்பது அவாய்நிலையான் வந்தது.

சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனுதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனுய்ச்—சார்ந்தடியார்
தாந்தாஞ்செய் துபிறர் தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு.

* தொல்காப்பியம் சொல்லதிகாரம், இளவியாக்கம். உரு. தன்மை சுட்டலு.
† இதனை உகக-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க.

எ-து. உ-ம். எ-னின். இறைபணியார்க்கு உளவாகிய முற்செய்வினை வினையோர்க்குப்போ லன்றித் தருவான்முன்னு யொழியுமாயின் அங்ஙனம் இருவேறு வகைப்படச் செய்யுமுதல்வன் நடுவுநிலைமை யின்றிக் கோட்ட முடைய னெனப்பட்டு வழுவாம்போலு மென்பாரை நோக்கி வழுவன்மை கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

'இ-ள். சார்ந்தாரைக் காத்தல் *தலைவர் கடன் ஆதல் சார்ந்தாரைக் காத்தும். எ-து. தம்மாட்டு அடைக்கலமெனச் சார்ந்தாரை அவர்க்கு வரும் வதத்தை நீக்கிக் கலகலுழ்ப் நின்று காப்பது தலைமைக் குணமுடைய ராயினுர்க்குக் கடமை யாகலான் முதல்வன் ஏனையோரை யொழித்துத் தன்னைச் சார்ந்தாரை அங்ஙனம் பாதுகாப்பானுகியும்,—சலம் இலன் ஆய்.எ-து. அதுபற்றிக் கோட்டமுடைய னல்லனுய்,—சார்ந்து அடியார் தான் ஆச் செய்து பிறர்தங்கள் வினை கொடுத்தல். எ-து. தன்னைச் சார்ந்து தன் அடித்தொழில் செய்வார் தன் போல் ஆகாமியவினைத் தொடக்கிலராகச் செய்து பிறர்க்கு வரும் ஆகாமிய வினையை அவர்க்குக் கொடுப்பா னுகலான்,—ஆய்ந்து ஆர் முன் செய்வினையும் ஆங்கு. எ-து. அவ்விருதிறத்தோர் மாட்டும் நுணுகி வந்து கூடுவதாய பிராரத்த வினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்க பயனுய் இருவேறு வகைப்படச் செய்வன். எ-று.

இறைபணியார்க் கில்லை வினை முற்செய் வினையுந் தருவான் முன் என்றது பற்றி ஏனையோர்க்கு நியதிசெய் தூட்டி இறைபணியார்க்கு வினையின்றுகச் செய்தல் இறைவனுக்கு நடுவுநிலைமையன் றென்பாரை நோக்கி அதனை உடன்பட்டே அமைதி கூறுவாராய்ச் 'சார்ந்தாரைக் காத்த றலைவர் கடன்' எனப் பழமொழி யெடுத்துக் காட்டி இஃதவ்வாறு நடுவன்மையு மன்றென வலியுறுத்துவார் 'சார்ந்தடியார் தாஞ்செய்து பிறர்தங்கள் வினை கொடுத்தல்' என வேறுவகை யெடுத்துக்காட்டினுர். சார்ந்தடியார் தாந்தாஞ்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தல் உண்டென்பதுமாம், அது கோட்டமின்று நடுவு நிலைமையாம் என்பதுமாம், வினைச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தமையின் அஃது ஈண்டைக்கு உவமையாயிற்று.

உம்மை சிறப்பின்கண் வந்தது. சலம்-வஞ்சனை; அஃது ஈண்டுக் கோட்டத்தின்மேல் நின்றது. சார்ந்து என்னும் வினையெச்சம் அடியார் என்னும் வினைக்குறிப்புமுற்றப்பெயர் கொண்டது. சார்ந்த என்னும் பெயரெச்சத் தகரம் திரிந்துமுடிந்ததெனினு மமையும். தாமும் பின் வந்த தானும் அசை. ஆதல் கொடுத்தல் என்புழி ஆனுருபு விரித்துரைக்க.

தாஞ்செய்து என்புழி ஆக்கம் உவமவுருபின்பொருள் குறித்து நின்றது. பிராரத்தவினை அதிசூக்குமமாய் வருவதாகலின் அதனியல்பு அறிதல் அரிது என்பார் 'ஆய்ந்தார்முன் செய்வினையும்' என்றார். ஆய்தல் அப்பொருட்டாதல் †மேற்காட்டினும். ஆர் வினைத்தொகை. உம்மை இறந்தது தழீஇயிற்று.

* தன்னைச் சார்ந்தாரைக் காத்தல் தலைவர்க்குக் கடனதலை "தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றே தலையாயவர்தம் கடனு வதுதான்" என்னும் தேவாரத்தானும் உணர்க. † இதனை. உகஉ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க.

இங்குளி வாங்குங் கல்ம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுட் னில்லாது மற்றவன்ருன் மெய்ப்பொருளே
யாயவத னலுணரு மச்சு.

எ–து. உ–ம். எ–னின். இறைபணி நிற்பார்க்குப் பிராரத்தவினை தாக்குதல் உண்டென்பதற்குத் * ''கிஞைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் றிண்வலியே'' என்றற்றொடக்கத்தான் அவர் கூறுந் திருவாக்குக்களே சான்ருகலின், அஃது அவர்க்குச் செய்வோர்செய்திப் பயனுய் ஒழியும் என்றல் அமையாமையின் அஃது உண்டாகவே அதுபற்றி நிகழும் ஆகாமியமும் பிறவிக்கு வித்தாய் நிலேபெறுதல் உண்டுபோலும் என்பாரை நோக்கி ஆண்டுப் பிராரத்தவினை தாக்குதற்கு ஏதுக் கூறி அதுபற்றிச் செய்வோர் செய்திப் பயனுய் ஒழிதற்கு இழுக்கில்லே என வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். இங்குளி வாங்கும் கலம் போல, எ-து. தன்பால் வைத்து எடுக்கப்பட் டொழிந்த பெருங்காயத்தி னின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாசனத்தின்கண் அவ்வாசம் மங்கிப்போய் மெலிதாய்க் கந்திக்குமாறு போல,—ஞானி பால் முன் செய் வினை மாயை மூண்டிடினும். எ-து. இறைபணி நிற்குந் தத்துவஞானிக்குப் பயிற்சிவயத்தான் ஓரோவழி நாடுமுளம் உண்டாதலும் உண்மையின் அதுபற்றிப் பிராரத்தவினையும் அதற்கு வாயிலாகிய உடம்பு முதலிய மாயேயமும் மங்கிப்போய் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து மூளுமாயினும்,—பின் செய் வினை மாயையுடன் நில்லாது. எ-து. அம் மூட்சி பற்றி ஒருதலேயான் நிகழ்வதாகிய ஆகாமியவினை மேலேக்கு வித்தாய் நிலேபெற்று முறுகுத லின்றித் தனக்கு வாயிலாகிய மாயேயத்தோடு கெட்டொழியும்,—அவன் தான் மெய்ப் பொருளே ஆய அதனுல் மற்று அச்சு உணரும். எ-து. இறை பணி நிற்கும் அவன் சத்தாயுள்ள சிவமேயாயவாற்றுல் ஓரோவழி அவ்வாசனை பற்றிப் பிறழுவினும் பிறழவொட்டாத அவ்வச்சினையே நோக்கி நிற்பனுகலான்- எ - று.

ஒளி இருளைத் துரக்குமாறு போல அவ்வுணர்வு அவவாகாமியத்தைத் துரக்கும் என்பதாம். † ''தொல்லேயில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டே—லல்லொளி புரையு ஞானத் தழலுற வழிந்து போமே'' எனப் புடைநூலாசிரியர் ஓதியதூஉம் அது.

உளி ஐந்தாம்வேற்றுமை உருபுபட நின்றது. ‡''மந்திரவிதியின் மாபுளி வழாஅ—வந்தணர் வேள்வி'' என்றுற்போல. முற்றுகரக்கேடு இலேசாற் கொள்க.

வாங்குதற்குச் செயப்படுபொருள் அவாய்நிலேயான் வந்தது.

மூண்டிடினும் எனவே, மூளுதல் ஒருதலேயன்று என்பது பெற்றும்.

* திருவாசகம், நீத்தல்விண்ணப்பம். ங-கூ. தனித்துணை. † சிவப்பிரகாசம், உண்மை. க0-ம் சூ. க0. எல்லேயில்பிறவி. ‡ திருமுருகாற்றுப்படை, திருச்சிரலேவாய். கஅ-ம் அடி.

மாயை ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. தான் என்பது அநுவதித்தற்கண் வந்த இடைச்சொல்.

பிறழவிடாமைபற்றி மெய்ப்பொருளே அச்சாக உருவகஞ்செய்தார்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினு—மெண்ணி
யரனடி யோர்பவ ரைம்புலனிற் சென்று
மவர்திற னீங்கா ரதற்கு.

எ-து. உ-ம். எ-னின். முன்செய்வினை மாயை மூண்ட வழியும் அந்நிலை யிற் பிறழவெகூட்டாத அவ்வச்வினையே உணர்ந்து நிற்றல் யாங்ஙனம்? என்பா ரைநோக்கி உவமை முகத்தான் அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ-ள். நள் அனல் வேவாத நற்றவர் தம்மினும் பண் அமர மாச் செலுத்தும் பாகரினும். எ-து. அங்கித்தம்பனத்தால் நண்ணனல் வேவாமைக்கு ஏது வாகிய நற்றவமுடையார் அவ்வனலுட் கிடப்பினுந் தந்திறலில் நீங்காதவாறு போலவும் பண்ணுதல் அமரப் பரிமா ஊர்தற்குரிய பாகனுல் கற்றுவல் லார் அப்பரிமாவின் வேகத்துட்படினுந் தந்திறலில் நீங்காதவாறு போலவும்,— எண்ணி அரன் அடி ஓர்பவர்: எ-து. ஐம்புலன்களில் அகப்படாமைக்கு உபா யம் யாதென்று எண்ணி முதல்வன் திருவடியாகிய அச்சை உணர்வல்லார்,— ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறல் நீங்கார். எ-து. முன்செய்வினை மாயை மூட்கிபற்றி ஏவகைப்பட்ட விடயங்களிற் சென்றாயினும் அத னால் அவர் தந்திறலிற் றீர்ந்து பந்தத் தொடக்குறுவார் அல்லர். எ-று.

பொருள்வினை உவமையினுஞ் சென்று இயைந்தது.

நண்ணனல்*"கீழ்நீர்" போல முன்பின்னுகத் தொக்க ஆறும்வேற்றுமைத் தொகை. நள்ளனல் நண்ணனல் என மரீஇயிற்று; †"நீணுலகெலாம்" என் றுற்போல. தம்மால் நண்ணப்படும் அனல் என்றுரைப்பினும் அமையும்.

பண்ணுதல் கதிப்பித்தல். இன் இரண்டும் உவமவுருபுகள். உம்மை எண் ணும்மை. சென்றும் என்னும் உம்மை சிறப்பு. அதற்கு என்பது உருபு மயக்கம்.

சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கொகிதரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணையார் சத்தணைவா ரார்ங்கு.

எ-து. உ-ம். எ-னின். சார்ந்ததன்வண்ணமாய்ச் சதசத்தெனப்படும் இயல்புடையார் அரனடி யோரினும் ஐம்புலனிற் சென்றுழி அவற்றிற் றொடக்

* திருக்குறள். கூஉக. களித்தானே. † திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், கோயிற் குறுந்தொகை. ச. மாணிபால்.

குண்ணது திறலுடையராதல் யாங்ஙனம்? என்பாரை நோக்கிச் சார்ச்சிக்கட் படும் விசேடங் கூறி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். சதசத்து ஆம் மெய் கண்டான் சத்து அருளின் காணின். எ-து. தன்னைற் சாரப்படுவனவாகிய சத்தினும் அசத்தினும் அதுவதுவா தல் பற்றிச் சதசத்து என்னுந் தன்னுண்மையை உணர்ந்தோன் சத்தா கிய முதல்வன் திருவருளா லல்லது ஒன்றையுங் காணனுப் அவ்வருளின்வழி நின்று காணுமாயின்,—பாசத்தில் இதமித்தல் இன்றி. எ-து. அவ்வழிப் பாசமாகிய அசத்தின் இதஞ்செய்த லின்மையால்,—சத்து அணைவார் கதம் மிக்கு எரி கதிரின் முன் இருள் போல் ஆங்கு எலா அசத்தின் அருகு அணை யார். எ-து. சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பார் சீற்றமிக் கெரியா நின்ற சுடரின் முன்னர் அந்தகாரம் போலச் சத்தெதிர் தனது சத்தி எற்கு மாட்டாத அசத்தாய ஐம்புலனின்மாட்டு எய்தி நிற்பரல்லர். எ-று.

வேறு முடிபாகலின் ஒருமைப்பன்மைமயக்க மின்மை உணர்க.

அருளின் என்னும் இன்னுருபு ஏதுப்பொருட்கண் வந்தது.

இதமித்தல் பெயரடியிற் பிறந்த வினைப்பெயர். இதஞ்செய்தல்–பற்றுச் செய்தல்.

இன்றி 'என்னுஞ் செய்தெனெச்சக் குறிப்புக் காரணப் பொருட்டாய் நின்றது.

இன்மைக்கு ஏதுக் கூறுவார் 'கதமிக் கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்து' என்றார். கதமிக் கெரிகதிர் என்றது ஒப்புமைபற்றிய உபசாரவ ழக்கு. * ''எல்லே யில்லவ னெரிதுள்ளி ஞலென வெகுண்டான்'' என்பதனு னும் ஒப்புமையாதல் உணர்க.

இதனாற் போந்தது, சத்தும் அசத்துந் தம்முட் சமமல்ல வாகலான் அர னடியோர்பவர் ஐம்புலனிற் சென்றாலும் அதுபற்றி அவர் திறல் நீங்கார் என மேலது வலியுறுத்தவாறும் என்க.

'ஏகனாகி நிற்றலான்' மலம் இன்றாதலும் 'இறைபணி நிற்றலான்' மாயை வினைகள் இலவாதலும் பெறப்பட்டமையின் மலமாயை தன்னொடு வல்வினை யின்றே என்பதனை வேறோர் அதிகரணமாகவைத்து ஓதாராயினர்.

இரண்டாமதிகரண முடிந்தது.

பத்தாஞ்சூத்திர முடிந்தது.

---

* பெரியபுராணம், அமர்நீதிநாயனார் புராணம். உசு. நல்ல.

பதினொராஞ்சூத்திரம்.

காணுங் கண்ணுக்குக் காட்டி முளம்போற்
காணவுள் ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே.

எ-து. சூ-ம். எ-னின். பரமேசுரனது சீபாதங்களே அணையுமா றுணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்து உணர்த்துத னுதலிற்று.

இ-ள்: அங்ஙனம் ஏகனாகி இறைபணி நிற்பார்க்கு அறிவிச்சைசெயல்கள் விடயித்தற்கு உரியதோ ரியைபு ஆண்டுப் பெறப்படாமையின் விடயமாவதொன் றில்லையேபோலும் என்னும் வாதிகளை நோக்கி விடயித்தல் இல்வழி ஆண்டுப் புத்தர் கூறும் ஆலயவிஞ்ஞானம் போலச் சூனியமாம் எனப்பட்டுக் *குணஞ் சூனியமாகவே குணியுஞ் சூனியமாய்முடிபு மாகலான் அஃது ஏலாமையின் ஆண்டு அவை இயைபுபற்றி விடயிக்குமாறு உணர்த்தும்முகத்தானே பயன் இரண்டனுள் முடிவாய் எஞ்சிநின்ற சிவப்பேறு கூடுதலாய நிட்டையினியல்பு உணர்த்துதல் இப்பதினொராஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

இதனானே, சூத்திர இயைபும் இனிது விளங்கும்.

அற்றேல், ஏகனாகி இறைபணி நின்றார்க்கு இனிச் செய்யக்கடவதொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளி விளக்கமும் ஒருங்கிகழ்ச்சியாயவாறு போலப் பசுத்துவ நீக்கமுஞ் சிவத்துவ விளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வன வாகலின் வேறோதல் வேண்டாமையானும், முதனூலுட் சுவாதாபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ்சூத்திரத்துட் பாசநீக்கத்தோடு ஒருங்குவைத்தே தியோதலானும் அதனை ஈண்டு வேறுவைத்தோதல் அமையாதுபோலும் எனின்;—அறியாது கடாயினாய்: ஏகனாகி இறைபணி நிற்பது துரியநிலைக் கண்ணதாகிய அருணிலேய ஆகலின் ஆண்டு மலம் நீங்கிய துணையானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவ தன்றி அதிதுரியநிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்கம் எனப்படும் பரமசுகம் விளங்காமையின் அது விளங்குதல் அவனருளாலல்ல தொன்றையுஞ் செய்யாமை மாத்திரையால் அமையாமையின் அதற்கு வேறும் ஆண்டுச் செய்யக்கடவது உண்டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தின் ஒளிவிளக்கம் போலப் பசுத்துவநீக்கத்தின் அருள்விளக்கமாத்திரையே அன்றி ஆனந்த விளக்கமும் உடன் நிகழாமையானும், அவ்விரண்டற்கும் வேறுபாடு முன்னர்க் காட்டப்படுமாகலானும், முதனூலிற் பாசசூக்ஷியம் பண்ணுமாறு உணர்த்தியவழிப் பாசநீக்கமாத்திரையே முத்தி எனக்கொண்ட வாதிகளை மறுத்தற்பொருட்டுப் பாசநீக்கம் பெற்றோன் சுவாதாபூதியுடையவனுவன் எனப பதினொராஞ்சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந் துணையே பத்தாஞ்சூத்திரத்திற் செய்துவைத்துச் சுவாதாபூதி நிகழ்ச்சிக்கண் ஓதற்பாலன எல்லாம் பதினொராஞ் சூத்திரத்துட் கூறுதலின் ஒன்பதாஞ்சூக்

* குணம் - அறிவு இச்சை செயல்கள். குணி - ஆன்மா.

திரத்தின் எடுத்துக்கொண்ட ஆண்மசுத்தி பண்ணுமாறு பத்தாஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப்பெற்றூற் போலப், பத்தாஞ்சூத்திரத்தின் எடுத்துக் கொண்ட சுவாதாபூதிகிலே பதினொராஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெறுதலான் அதன்கண் மலியாமைப்பொருட்டு ஆசிரியர் சுவாதாபூதிமானு வன் என்பதனையும் 'அரன்கழல்செலும்' எனப் பதினொராஞ் சூத்திரத்தானே ஒருங்குவைத் தோதினராகலின் அதுமாறன்மையானும், அவ்வாறின்றி *மொ ழிபெயர்த்தல் யாப்பால் நூல்செய்துரைப்பான் புகுந்த ஆசிரியர், வேறுபடச் செய்துரையா ராகலானும் என்பது. இதனானே, முதனூலிற் சுவாதாபூதிமான் என வாளா கூறியதனைப் பதினொராஞ்சூத்திரத்துப் 'பத்திசெய்க' என்றதன் பின்னுகக் கொண்டுகூட்டிவைத்து உரைததலே அதன் கருத்தென்பதூஉம் பெறப்பட்டது. அற்றுகலினன்றே, பத்தாஞ்சூத்திரம் பாசசூட்சயம் பண்ணு மாறு உணர்த்திற்று எனவும், பதினொராஞ்சூத்திரம் பரமசிவனது சீபாதங் களே அணையுமாறு உணர்த்திற்று எனவுங் கருத்துரை செய்ததூஉம் என்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே உரைப்ப.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. காட்டக் காணுந் தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோடு ஒருங்கியைந்து நின்று காட்டி அவ் வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப் போல அறிவிக்க அறியும் இயல்பை யுடைய அவ்வான்மா விடயத்தை அறியும்படி முதல்வன் அதனோ டொருங் கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான் அவ்வத்துவித நிலையை மற வாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தானுபூதியைத் தலைப்படும். எ - று.

காணும் எனனும் உவமையடை பொருளினும், கண்டு என்னும் பொரு ளினை உவமையினும் சென்றியைநதன. காணை என்பதனை ஈரிடத்துங் கூட்டுக.

†''வேர்த்து வெகுளார் விழுமியோர்'' என்பதுபோலக் கண்டு காட்டல் என்பது மாறி வைத்து உரைக்கப்பட்டது. இக்கருத்து நோக்கி யன்றே, இதனை விரித்துக் கூறுவான் புகுந்த வழிநூலாசிரியர் ‡''காட்டிக்கண் டிடுமா போலக்**காட்டிக் கண்டிடுவன்'' என்றதூஉம் என்க.

அயராமைக்குச் செயப்படுபொருள் அதனை என்று எடுத்துக்கொள்க. அயராவன்பு என்றது அயராமையாகிய அன்பு என ''ஆறு சென்ற வியர்'' போல நின்றது. அது ‡''இத்தை-யாயுமறி வுடையஞ யன்பு செய்ய'' என வழிநூலாசிரியர் கூறியதனானும் உணர்க.

உள்ளத்தை என்பது ஊருபு மயக்கம்.

அறிவிச்சைசெயல்களின் நிகழ்ச்சியாகிய அயராமையும் அன்பும் செல வும் முறையே காரணகாரியங்களாய் அவ்வொருபொருண்மேல் ஒருங்கு நிக ழும் என்பார் 'அயரா வன்பி னரன்கழல் செலுமே' என்றார்.

* இது நால்வகை யாப்பினுள் ஒன்று. அது ''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்–பெனத்தகு நூல்யாப பீரிரண்டென்ப.'' என்னுஞ்சூத்திரத்தா னுணர்க.
† நாலடியார், சினமின்மை. ச. நேர்த்து. ‡ சிவஞானசித்தி, சுகம் சூ. க. சாயமொழி.

இஃதென்சொல்லியவாறே எனின்:—உயிரையின்றி அமையாத கண் உருவத்தைக் காணுங்கால் உயிரினது உணர்வு, கண்ணெனை எனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டிய அதனைக் கண் கண்டதென்றுங் கண்ணை அதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறிய வாராது இரண்டன் காட்சியும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழுமாறு போல, முதல்வனையின்றி அமையாத உயிர் ஒருவிடயத்தை அறியுங்கால் முதல்வனது சிற்சத்தி, ஆன்மசிற்சத்தி யெனத் தானென வேறின்றி உடனாய் விரவி நிற்ப முதல்வனும் அவ்வாறு விரவி நின்று ஆன்மாவிற்கு அறிவித்ததொன்றனை அவ்வான்மா அறிந்தது என்றும், அதனை அதிட்டித்து நின்ற தான் அறிந்தான் என்றும் பகுத்தறிய வாராது. இருவகையறிவும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாய் ஒருங்கே நிகழுமாறு செய்து வரும் இவ்வுபகாரம் பெத்தம் முத்தி இரண்டினும் ஒருபெற்றித்தாய் உண்மையின் ஏகனாகி இறைபணி நிற்கும் உயிர் முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்கும் உரிமையை நோக்குமாயின் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அநுபவிக்கப்படுமென அறிவிச்சைசெயல்கள் மூன்றுங் கண்டு விடயிக்குமாறு உணர்த்தி அதீதநிலையியல்பு கூறியவாறும் என்க.

அத்துவிதமாவது பேதப்பொருள் இரண்டுந் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்தவிசேடம். இக்கருத்தேபற்றி *"அறிவொளிபோற் பிறிவருமத் துவிதம்" என்றார் புடைநூலாசிரியரும். †"அங்கியு மொன்றிற் றங்கிநின் றல்லது,—தன்றொழி னடத்தா" தாகலின், அதுபோல முதல்வனும் உயிரை அதிட்டித்து நின்று எத்தொழிலுஞ் செய்வனென் றுணர்க. உயிர் ஒன்றனை அறிதல் முதல்வன் உடனின்றறிதலை யின்றி அறிவித்தன் மாத்திரையான் அமையா தென்பது ‡"தொண்டனே னினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" என்று இவ்வாறு முத்திநிலைபற்றி ஓதிய திருவாக்குக்களானும் அறிக. இவ்வியல்பு நோக்கியன்றே ¶"அறிவானுந் தானே யறிவிப்பான் றானே" வென்றோதிய அம்மை ¶ "அறிவா யறிகின்றான் றானே" எனவும் ஓதியதூஉ மென்க. முன்னின்றி தல் அறிவித்தற்பொருட்டென்னவும் பின் அறிவாயறிதல் விடயத்தில் அழுந்துவித்தற்பொருட்டெனவுங் கொள்க. இதனை ஈண்டு வைத்தார் அத்துவித நிலை இனிது விளங்குதற்கு.

இவ்வாறன்றிக் காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டல் என்பதற்குக் காட்டுமுபகார முணர்த்தன் மாத்திரையே கருத்தென் றுரைப்பாரு முளர். இதனைக் கண்ணழித்துரைப்புழி அவனும் அவற்றது விடயத்தை உணரும் எனக் காணு முபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டு உரைத்த ஆசிரியர்கருத்தன் றுகலானும், காணு முபகாரங்

* சிவப்பிரகாசம், பாயிரம். எ. புறச்சமயத்தவர். † சங்கற்பநிராகரணம், சிவசமவாதி சங்கற்பநிராகரணம். சடு-சசும் அடி. ‡ திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா, கோயில். கக. க0. கூ. எ. ¶ காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி. உ0.

காட்டு முபகாரத்தின் பின்னர்த்தாய் நிகழும் என்பது உணர்ந்துகோடற் பொருட்டு அதுவும் உடன் கூறப்பட்டதன்றி வேறின்மையானும், அவ்வாறன்று என்பார்க்கு ஐந்தாஞ் சூத்திரத்துட் பெறப்பட்டதனை ஈண்டுக் கூறுதல் புநருத்தியாய் முடியு மாகலானும், அவ ருரைப்பன வெல்லாம் போலியுரையென் றொழிக.

அற்றேல், முதனூலிற் பதினொராஞ் சூத்திரத்துட் "காட்டுவன்" என்பது மாத்திரையே யன்றிக் காண்பன் என்பது கூறிற்றில்லையால் எனின்;— அறியாது விளையினுய்: ஆண்டுக் காட்டுவானும் என்ற உம்மை காண்பானுமாம் என எதிரதுதழீஇ நிற்றலின், கூறுமை யாண்டையதேனு மொழிக.' அவ்வும்மைக்குப் பொருள் காணமாட்டாதார் பாடம் வேறுக ஓதுப.

இதனுள், காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற் க்ண வள்ளதைதைக் காட்டிக் காண்டல் என்றது ஓதிகரணம்; அதனை அயரா' வன்பினரன்கழல் செலும் என்றது ஓதிகரணம்; ஆக இரண்டதி கரணத்தது இச் சூதிரமென்று உணர்க.

மூதலதிகரணம்.

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

எ–து. மே–ள். எ–னின். முதல்வன் உயிர்க்குக் காட்டு முபகாரமாத்திரையே உள்ளது என்னும் வாதிகளை நோக்கி அத்துவிதநிலை உணர்த்துதற்கு எடுத்துக்கொண்ட சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ–ள். முதல்வனும் உயிர்களா னுணரப்படும் விடயத்தை உடனின்று உணருவன். எ–று.

உம்மை உயிர்கள் உணர்தலே யன்றி என இறந்தது தழீஇயிற்று.

இஃதறியாதார் ஈண்டு 'உணரும்' என்றது அறிவித்தற்கு ஏதுவாய் அறியும் என்று உரைப்பாருமுளர். அவ்வாறுரைப்பிற் சித்தசாதனமாம் ஆகலானும், ஈண்டைக்கு இயைபின்மையானும் அது போலியென் றொழிக.

*'அவையே தானேயாய்' எனவும் †'தாந்த முணர்வின் றமியருள்' எனவும் மேற் பொதுவகையாற் கூறிப்போந்த அத்துவிதத்தை ஈண்டுக் காணுமுபகாரத்தின்வைத்து உணர்த்தி இனிது விளக்கியவாறு.

இவ்வான்மாக்கள் அவனி யின்றி யமைந்து ஒன்றையும் விடயியா வாகலான்.

எ–து. ஏது. எ–னின். கண் சடமாகலானும் காண்டற் பயன் உயிர்க்கே யாகலானும் கண் காண்புழி உயிரும் உடனின்று காண்டல் பெறப்படும் கண் போல் உயிர் சடமன்மையானும் உணர்தற்பயன் உயிர்க்கே ஆகலானும்

* இந்நூல். உ-ம் சூத்திரம். † மேற்படி. கு-ம் சூ. விளம்பிய.

அதனை எடுத்துக்காட்டி அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றல் அமையா தென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். விளக்கொளி கண்ணொளியோடு கலந்து கண்ணொளியோடு கூட உருவத்தினுங் கலந்தா லன்றி அஃதவ்வுருவத்தைக் காண்ட லின்மையவாறு பொல அறிவிக்க அறியும் இயல்பினவாய, உயிர்களும் முதல்வனதுணர்வு தம்மோடு விரவி நின்று தம்மோடு கூடச் சென்று விடயத்தினும் விரவி நின்றல் அறிவு விளங்கி அதனையறியும் இயல்பினவன்றித் தனித்து அமையவும், மாட்டா தனித்து ஒன்றனை விடயிக்கவும் மாட்டா வாகலான் அறிவு விளங்குதன் மாத்திரைக்கே அன்றி விடயத்தைப் பற்றுதற்கண்ணும் முதல்வன் உடனின்றறிதல் ஒருதலையான் வேண்டப்படுதலான் 'ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும்' என மேற்கொண்டது. எ-று.

அவனையின்றி அமையாமையிற் காட்டு முபகாரம் விளங்கினாற்போல அவனையின்றி ஒன்றையும் விடயியாமையிற் காணு முபகாரமும் இனிது விளங்கும் என்பார் 'அவனை யின்றி யமைந் தொன்றையும் விடயியா வாகலான்' என்றார்.

அமைந்து விடயியா என்றதனைக் *"கந்தித்துச் சுழலும்" என்றாற்போலக் கொள்க.

உம்மை முற்றும்மை.

விடயியா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. † "எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றனைஞ்—செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப—னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்ற விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ னின்றிடுவ ஞத லாஞ மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே" என வழிநூலாசிரியர் இதனை விரித்தோதியவாறும் உணர்க. "எவ்விடத்தும்" என்றது பெத்தம் முத்தி இரண்டினும் என்பதாம். இதனுள், "இறையடியை யின்றியமைந் தொன்றை யறிந்தியற்றி யிடாவுயிர்கள்" எனவும், "ஈசன்றனெங்குமாய்ச் செறிந்து நிற்பன்" எனவுங் கூறியது விடயத்தின்கட் படும் நிகழ்ச்சிக்கு எனவும் "இவ்வுயிர்கடோற்றும்போ தவனையின்றித் தோற்ற" எனவும், "அவ்வுயிர்போ னின்றிடுவன்" எனவுங் கூறியது உயிரின்கட் படும் நிகழ்ச்சிக்கு எனவுங் கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற் கூறுதல் புநருக்தியாய் முடியுமென்று ஒழிக. இனி, விளக்கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படும் என்பதூஉம், "விளக்கொளி கலந்தவற்றை" எ-ம், ‡"விளக்கின் சோதி கலந்திடும்" எ-ம் புடைநூலாசிரியர் வகுத்தோதியவாற்று னுணர்க. அஃதங்ஙனமாக, பாமுத்தியில் உயிர்க்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்தும் என்றது அமையுமாறு என்னை? எனின்;—அறியாது கூறினுய்: "¶"சுத்

* சிவஞானசித்தி, க0-ம் சூ. சு. அங்கித். † மேற்படி, ககஉ-ம் சூ. எ. ‡ சிவப்பிர காசம், உண்மை. ஈ-ம் சூ. எ. கண்ணொளி. ¶ உண்மைவிளக்கம். இ0. முத்திதனில்.

தவது போகத்தைத் துய்த்தலஞ்” எ-ம், *“‘ஒன்றிரின் றுணரு முண்மை.” எ-ம் பிரணவம் இவ்வாறே ஓதுப வாகலின், பரமுத்தியில் உயிர் சிவானந்தானுபூதியை விடயித்தல் உண்டெனவும், அது முதல்வனினையின்றி ஆகாமையின் அவனும் ஆண்டு அவ்வநுபூதியை உடனின்றறிவன் எனவும் உணர்க.

ஐந்தையு மொக்க வுணரா தவற்றுணர்வ
தைந்தும்போ னின்றுணரு மாகலா—னைந்தினையு
மொன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே யெவ்வுலகு
மொன்றென்றுப் பார்க்கு முணர்ந்து.

எ-து, உ-ம். எ-னின். அவனும் அவற்றது விடயத்தை உடனின் றுணரு மாயின் அவற்றோடு அவனிடை யறிதற்கட்படும் வேற்றுமை இல்லாபோலும் என்பாரை நோக்கி வேற்றுமையுங் காட்டி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். உள்ளம். எ-து. ஆன்மாவாவது,—அவற்று ஐந்தும்போல் நின்று உணர்வது உணரும் ஆகலான். எ-து. சுவையொளியூறோசைநாற்ற மென்னும் ஐந்தினும் ஈம்பொறி போல் அதுவதுவாய்ச் செறிந்து நின்று உணர்தற்பால தனை உணருந்தன்மைத்தாகலான்,—ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்று ஒன்று ஆப் பார்த்து உணர்வது. எ-து. அவ்வைம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது அவ்வைந்தினையும் ஒரோவொன்றாய் அறிந்தநுபவிப்பதாம்,—ஒன்று எவ்வுலகும் ஒன்று உணர்ந்து பார்க்கும். எ-து. அதுபோலச் சார்ந்ததன்வண்ணமாய்ப் பலதிறப்படுதலின்றி என்றும் ஒருபெற்றித்தாகிய சிவம் எல்லாவுயிர்களுடைய எல்லாவிடயங்களையும் பொதுவகையான் ஒருங்கே உணர்ந்து அவ்வுயிர்களுடன் நின்று சிறப்புவகையானு மறியும். எ-று.

இது சொற்பொருட்பின்வரு நிலை.

சிவத்தைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

ஒன்று என்பது குறிப்பேதுவாய்நின்ற பெயர்.

ஏகமாய் நின்றே யினையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினு—னேகமா
யுள்ளத்தின் கண்ணு னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணுனு வுற்று.

எ-து. உ-ம். எ-னின். ஆன்மா ஐம்புலனை விடயிப்புழிப்போல முதல்வனை விடயிப்புழியும் முதல்வன் அவ்வாறு உடனின்று தன்னைத் தான் விடயிப்ப னெனின் ஆன்மாச்சிரூப மென்னுங் குற்றமா மாகலின் அது பெறப்படாமையான் அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றல் யாண்டுஞ் செல்லாது என்பாரை நோக்கி ஆண்டும் அவ்வாறுணர்தல் உண்டென்பது உணர்த்தி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். ஒன்று ஏகம் ஆய் நின்று இனை அடிகள் உணரவே தான் போகம் ஆய் விளைந்த பொற்பினன். எ-து. முதல்வனைச் சார்ந்தவழி அவ்வண்ணமே

* சிவப்பிரகாசம், உண்மை. கo-ம் சூ. அ. ஒன்றிரண்டாகி.

யாய் ஒருபெற்றிப்பட்ட ஆன்மா அவனேதி ஒற்றுமைப்பட்டு நின்று அவன தடியிணைகளே உணரவே தான் அவ்வான்மாவுக்குப் பரபோகமாய் மேன்மேல் விளைகின்ற பொலிவினையுடைய ஞகலானும்,—உள்ளத்தின்கண் ஏகம் ஆய் ஆனன். எ-து. அங்ஙன முணருங்கால் அவ்வான்ம ஞானத்தினிடத்து ஏகமாய் விட்டுநீங்காதவன் ஆகலானும்,—உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணலே. எ-து. கருதுவார் கருதிய பொருளாகிய தன்னை அவரறிவோடு கூடிநின்று அறியான்கொல்லோ. எ - று.

'பரபோகமாய்த் தான் விளைந்த பொற்பினன்' 'ஏகமா யுள்ளத்தின் கண்ணனன்' என்னும் பெயரடைகள் ஏதுப்பொருளவாய் நின்றன; யாண்டுஞ்சேற லுணர்த்துதற்கு.

உள்குவா ருள்கிற்றை என்றார். *"வேண்டுவார் வேண்டியதே யிவான்" என்றாற்போல.

ஆனுருபு உடனிகழ்ச்சிப்பொருட்கண் வந்தது. ஓகாரம் எதிர்மறை.

ஆன்மாக்கள் முதல்வனை விடயிக்குங்கால் அவற்றது விடயமாகிய அவன் தன்னையும் உடனின்று உணரப்படுவன், உள்குவாருள்கிய பொருளாகலின்; மேலிவெண்பாவிற் கூறிப்போந்த ஐம்புலன்போல. என்று அனுமானவள வை காட்டுவார் 'உள்குவா ருள்கிற்றை யுள்ளத்தா னுற்றுக் காணலே' என்றும், உள்குவா ருள்கிற்றுதல் ஈரிடத்தும் ஒக்கும் என்பார் 'ஏகமாய் நின் றே யிணையடிக ளொன்றுணரப் போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்' என விடயித்தற்கட் படும் இயல்பும் 'ஏகமா யுள்ளத்தின் கண்ணனன்' என அறிவு விளங்குதற்கட்படும் இயல்பும் எடுத்தோதினர்.

பரபோகமாய் என்னுது 'போகமாய்' என்றதும் ஒப்புமை இணங்குதற் பொருட்டு. சேற்றுநில மிகித்துச் சென்றுனுக்கு வன்னிலம் போலப் பர போகவிளைவு, செயற்கைப்பொருளாய் நிற்றலின் ஆக்கமுங் காரணமும் அடுத்து வந்தது. இணையடிக ளுணருந்தோறும் போகம் மேன்மேல் விளை தல் † "புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்— மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே." என அப்பொருண் மேல்வைத் தோதிய திருவாக்காலும் அறிக.

தெளிவுபற்றி விளைந்த என இறந்தகாலத்தாற் கூறினர்.

கண் கண்ணுடி யினின்றுந் தன்னை விடயித்தாற் போல முதல்வன் ஆன் மாவுட னின்று தன்னை விடயித்தல் பொருத்த முடைமையின், ஆண்மாச்சிர யம் என்னும் குற்றம் இன்னோன்னவற்றிற் கெய்தாதென் றுணர்க. கண்ணு டிக்குள்ளாகத் தோன்றுவது போலும் எதிர்விம்பமாவது விம்பமே யன்றி வேறன் றென்பது சிவாகமநூற் றுணிபு என்க.

---

*திருநாவுக்கரசுநாயனார், திருமறைக்காட்டுத் திருத்தாண்டகம். க. தூண்டுசுடர்.

† திருச்சிற்றம்பலக்கோவையார். கூ. உணர்ந்தார்க்.

இதனுள் அவனும் அவற்றது விடயத்தை உணருமென உணர்வேபற்றி ஒதினுரேனும் *''எத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி'' என்பவாகலின், அவற்றிற்கும் இஃதொக்கும்: ஒக்கவே, பெத்தம் முத்தி இரண்டினும் ஆன்மா விடயிக்கப்படும் விடயங்களே முதல்வன் உடனின்று விடயிப்பன் என்பதூஉம், பெத்தத்தின் அவனிவனுப் நின்று விடயித்தலின் விடயங்கள் அவனுக்கன்றி இவனுக்காயின 'முத்தியின் இவனவனுப் நின்று விடயித்தலின் அவனெழிந்த விடயங்கள் எல்லாம் இவனுக்கின்றி அவனுகாயின என்பதூஉம், இனிது விளங்கும். இம்முறைமை நோக்கி யன்றே, உலகத்துள் ஒன்றனே ஈவாரும் ஏற்பாருஞ் சிவார்ப்பணம் எனக் கருதாதவழிக் குற்றமென்று ஆகமங்கள் ஓதியதூஉம், †''யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வமாகி யாங்கே—மாதொரு பாக னுந்தாம் வருவர்'' என்றதூஉம், அவ்வண்மை யறிந்தவழி ‡'எத்தனுனி னின்று மிறைபணியார்க் கில்லைவினை—முற்செய்வினை யுந்தருவான் முன்.' எ-ம், ¶ ''பெற்றசிற் றின்பமே பேரின்பமாய்'' எ-ம், §உடம்புடைய யோகிகடா முற்றசிற் றின்ப—மடங்கத்தம் பேரின்பத் தார்க்கி'' எ-ம், ♁''காணுங் காணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்—பேணு மடியார்'' எ-ம், ''எல்லாஞ் சிவமா யிருந்தீத'' எ-ம் இவ்வா றோதியதூஉம் என்க.

முதலதிகரணை முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனிப் பத்தியினுன் மறவாது ஏத்த அவனது பிபாதத்தை அணையு மென்றது.

எ-து. மேல். எனின். ஏகமாகி நின்றூர்க்கு அவ்வியைபு பற்றி அறிவிச்சைசெயல்கண் மூன்றும் ஆண்டு விடயிக்குமாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கி நிட்டையின் இயல்பு உணர்ந்துதற்கு எடுத்துக்கொண்ட இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

இ-ள். சூத்திரத் துரைத்தவாறு பற்றி உரைத்துக்கொள்க.

**''இத்தை—யாயுமறி வடையுனியன்பு செய்ப'' என வழிநூலாசிரியரும் ஒதுதலின் ஈண்டும் மறவாது பத்தியினு லேத்த எனச் சூத்திரப்பொருட் கேற்ப மாறிவைத்து உரைத்துக்கொள்க. ††ஏத்த என்றது உபசாரவழக்கு.

அன்பு பத்தி காதல் எனறூற் போல்வன இச்சை மீதூர்தற் பொருள ஆகலான், அது பரமுத்தியினும் உண்டென்பது உணராதார் பத்தியாவது சிவன்முத்திநிலேக்கே செய்யப்படுவதொரு சாதனம்போலும் என மயங்கித் தத்தமக்கு வேண்டியவாறே உரைப்ப. பரமுத்தியின்கண் இச்சை நிகழாத

* சிவஞானசித்தி. க-ம் சூ. உஉ. சத்நிதன்வடி. † மேற்படி. உ-ம் சூ. உடு. ‡ இந்தூல். கo-ம் சூ. உ-ம் அதி. க. நாமல்ல. ¶ திருவுந்தியார். ஙகூ. § திருக்களிற்றுப் படியார். எசு. ♁ திருவாசகம், பண்டாயநான்மறை. சு. ** சிவஞானசித்தி. கக-ம் சூ. க. காய. †† ஏத்தல் - அருள்வழிநிற்றல்.

வழிச் சிவபோகம் அநுபவமாதல் செல்லாகுமாயினும், சிவன்முத்திநிலைக்கே கூறுவதொன்றுமிற் ''செம்மலர் நோன்றாள்'' என்னுஞ் சூத்திரத்து ஒருங் குவைத் தோத்த அமையுஞ் சூத்திரம் வேறு செய்யவேண்டாமையானும், அவ் வுரை போலியென்று ஒழிக.

அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் வினைத்து நிற்றலான்.

எ-து. எ-து. எ-னின். பத்தியினுன் மறவா தேத்தினும் அவனது சீபா தத்தை அணைதல்' பரமுத்தியினன்றி முடியாது என்பாரை நோக்கி மேற் கோளைச் சாதித்த னுதலிற்று.

இ-ள். அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றை அறி ந்து அவிவச்செய்திக்குத் தக்க பயனை மிகச் செய்யலாயின் அவ்வப்பொழுதே வினைவித்தும் அல்லுழிக் காலாந்தரத்தில் வினைவித்தும் உடனுய் நிற்ப ஞகலான் 'இனிப் பத்தியினுன் மறவாதேத்தலே அம்முதல்வனது சீபாதத்தை அணையும்' என மேற்கொண்டது. எ-று.

அருக்கனோ நிற்பினு மல்லிருளே காணுர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீச—னருட்கண்ணுற்
பாசத்தை நீக்கும் பகலவர்த்துந் தாமரைபோ
னேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்.

எ-து. உ-ம். எ-னின். அரன் கழல் சேறல் உடம்பி னீங்கியபின் னன்றி உடம்புடையவழியுங் கூடுமாயின் அது ஞாயிற்றி னெளிமைபோல, மருங்குள்ளார்க்குப் புலனுதல் வேண்டும் என்பாரை நோக்கி அது கூடாமையுங் கூடுமா றும் உவமைமுகத்தா னுணர்த்தி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். அருக்கன் நேர் நிற்பினும் காணுர்க்கு அல் இருளே. எ-து. ஞா யிறு எல்லார்க்கும் ஒப்ப நிற்பினும் அது காட்சியுடையார் கண்ணுக்கன்றி அஃதில்லாதார் கண்ணுக்கு இரவின்கண்ணதாகிய இருளேயாம் அதுபோல,—ஈசன் பாசத்தார்க்கு இருட் கண்ணே. எ-து. முதல்வன் எங்கணும் ஒப்ப நிற்பினும் மலம் நீங்கிய முத்தர்க்கன்றி அஃதுடையார்க்கு அவன் அம்மலத் தின் கண்ணை யாவன். சிவன்முத்தரும் வினையோர்போல் உடலுடைமையிற் பாசத்தாராகலின் வேற்றுமையின்மை எணின்,—பகல் அலர்த்துந் தாமரை போல். எ-து. ஏனைத் தாமரைகளோ டொப்ப ஒருங்கு நிற்பினும் பக்குவ முண்டைய தாமரையைக் கூம்புதலை நீக்கி அலர்த்தும் ஞாயிறு போல,—நேசத் தில் தன் உணர்ந்தார் நேர் அருட் கண்ணல் பாசத்தை நீக்கும். எ-து. வினை யோர்போல் உடம்போடு நிற்பினும் பருவமுடையாராய்ப் பத்தியினுற் றன் னைமறவாது உணர்வார்க்கு முதல்வன் தனது திருவருட்பார்வையாற் பாசத் தை நீக்கி அறிவை அலர்த்தும் ஆகலான் உடம்புள்வழியும் அவர் பாசத்தா ரல்லர். எ-று.

ஆகலான் உடம்பு உள்வழியும் அவர் பாசந்தாரல்லர் என்பது குறிப் பெச்சம். வகாரம் தேற்றம்.

திணிந்த இருள் என்பார் 'அல்லிருள்' என்றார். மலத்திற்குக் கண்ணுவது அறியாமை. காணுரும் பகலும் ஆருபெயர். அருக்கன் எடுத்துக்காட்டுவமை.

தன்னே என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் ருெக்கது. எழாம்வேற்றுமைப் பொருட்கண் வரும் நேர் என்பது உரீபுமயக்கமாய் நான்காவது உணர்த்திற்று.

நீக்குதலும் அலர்த்துதலும் ஏனையிடத்துஞ் சென்றியைதலின், ஈரிடத்துஞ் செயப்படுபொருள் ஏற்பன வருவிக்கப்பட்டன.

மன்னு மிருளே மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் ருன்.

எ—து. உ—ம். எ—னின். நேசத்திற் றன்னுணருஞ் சீவன்முத்தர்க்குப் பாசத்தை நீக்கி அறிவை அலர்த்துதல் பரமுத்தியினன்றி இல்லே என முரணிக் கூறும் வாதிகளே நோக்கிப் பாசத்தை நீக்கி அறிவை அலர்த்தும் முறைமை இவ்வாறென்று உணர்த்தி அதனே வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளே மதி துரந்தவாறு மலம் துரந்து, எ-து. உயிரைத் தாக்குக்கிகோடற்கண் உளதாகிய இச்சைமிகுதியான் அவ்வுயிரோடும் அநாதியே நிலேபெறும் முதல்வன் கண்ணின்கண் நிலேபெறும் இருளேப் பிறைமதி நாடோறுஞ் சிறிது சிறிதாக நீக்கி ஒட்டுமாறு போல் அவ்வுயிரின்கண்ணதாகிய மலசத்தியை அவ்வப் பருவக்தோறுஞ் சிறிது சிறிதாகச் சோபானமுறையின் நீக்கிப் பற்றறத் துரந்து,—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல். எ-து. காந்தக்கல் இரும்பைத் தன்கண் ஈர்த்துத் தன்வசமாகச்செய்தல்போல மலம் அங்ஙனந் துரக்கப்படுந்தோறும் அம்முறையே அச்சத்தி பதிவித்து உயிரைத் தன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாகச் செய்து வருஞ் செய்கையின் அவனுக்கு ஒருஞான்றுஞ் சலிப்பில்லே,—விகாரி அலன் தான். எ-து. அங்ஙனஞ் சலியாது செய்து வருதல் பற்றி விகாரியாவனு மல்லன் காந்தம்போலத் தனது சந்நிதிமாத்திரையிற் செய்யும் அம்முதல்வன். எ - று.

மதி என்றது ஏற்புழிக்கோடலான் ஈண்டு வளர்பக்கத்திற் றிங்களின் மேற்றுயிற்று. * "அந்த வருளுனக்கிங் காதார மாயல்லி,—னிந்து வெனவெறித் திட்டு" என்றதும் அது.

மலந் துரத்தல் உயிரின்செயலா னுவதன் றென்பதுபட நின்றமையின் ஏகாரம் பிரிநிலேக்கண் வந்தது.

†வான் பான் பாக்குக்கள் தொழிற்பெயர்விகுதியுமாம் என்பது ‡"கரப்பாக் குறிந்து" என்பதனு னுணர்க.

துகளறுபோதம். கூகூ. † வான் தொழிற்பெயர்விகுதியுமாதலே உசுஉம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. ‡ திருக்குறள். ககஉ. கண்ணுள்ளார்.

உவமவுருபு விரித்துரைக்க. சலித்தல் வேசமுதல். செய்தற்கண் என எழனுருபு விரித்துரைக்க.

மதி துரந்தவாறு மலந் துரந்து என்ற இதனுனே மலம் நீங்குவது பின் என்பார் மதம் மறுக்கப்பட்டவாறு காண்க.

சோபான முறையின் நீக்குதலா னன்றே, *சத்தி நிபாதஞ் *சிவபுண்ணி யம் முதலாயின நால்வேறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோவொன்று நந்நான்காய்ப் பதினுறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோவொன்று பலவேறுவகைப்பட்டு விரிந்ததூஉம் என்க.

நசித்தொன்றி னுள்ள நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லே—நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்.

எ-து. உ-ம். எ-னின். உயிருக்குக் குணம் போல அநாதியாயுள்ள சகச மலம் அவ்வுயிரின் வேறுய்த் துரக்கற்பாலதன் றுகலின் மலந் துரந்து என்றது அமையாது என்னும் பாடாணவாதசைவரை நோக்கி. அருத்தாபத்தி யளவை யான் அதனே வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லே. எ-து. அரன்கழல் செல்லுங்கால் அதனே ஆன்மா கெட்டு ஒன்றுமோ? கெடாது ஒன்றுமோ? எனக் கடாயினர்க்குக் கெட்டு ஒன்றுமெ னின், ஆன்மா கெட்டுப்போகலான் ஒன்றமாட்டாது; கெடாது ஒன்றுமெ னின், கெடாதவழி இருபொருளாய் நிற்றலின் ஒன்றுமா றில்லே; ஆகலான் அருத்தாபத்தி யளவையானே,—அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து உளம் ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம். எ-து. உப்புத் தனது கண்டிப்பு நீங்கி நீரின் ஒன்றுமாறு போலத் தனது சகசமலங் கெட்டொழிய ஆன்மா அரன்கழலே ஒன்றி அவ்வரன்கழற்குச் சேடமாம்,—கப்பு இன்று ஆம். எ-து. அங்ஙனஞ் சேடமாகிய ஆன்மாவுக்கு மீளக் †கவர்ச்சி இல்லே. எ-று.

ஒன்றுது என்னுந் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது.

பின் வந்த நசித்து என்பது செயவனெச்சத் திரிவு.

யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திர மின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடமென்பது அறிக. ‡'அவையுடைமை யாளாகா மங்கு' என ஒதுதலின், வீணப் பசுபாசங்கள் முதல்வனுக்குப் பொ துவகையாற் சேடமாம். ஆயினும், இதுபேரலச் சிறப்புவகையாற் சேடமாக லின்மையின் இதனே வேறெடுத்து ஓதினர்.

முத்திநிலே கூறி முடிந்தமையின் இறுதிக்கட் 'கப்பின்றும்' என ¶அவிரு விருத்தியுங் கூறினர்.

---

* இவற்றின்விரிவை முறையே கஎச, கஎஉ, கஎ0-ம் பக்கங்களிற் காண்க. சிவ புண்ணியம் - சரியை முதலியன. † கவர்ச்சி - பிரிவு. ‡ இந்தூல் உ-ம் சூ. ச-ம் அதி. க. எங்கு. ¶ அவிநாவிருத்தி - விட்டுநீங்காதிருத்தல்.

பொன்வாண்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோன்—முன்வாண்
மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும் வரத்து:

எ–து. உ–ம். எ–னின். நான்காஞ்சூத்திரம் முதல் இதுவரையிற் கூறிப் போந்த கேவல சகல சுத்தம் என்னும் முத்திறத் தவத்தைகளினும் ஆன்மா தன்னியல்பிற்குக் கேடின்றியே நிற்கு மென்பது உவமையின் வைத்துக்காட்டி மேலதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். பொன் வாள் முன் கொண்மூவில் புக்கு. எ-து. ஞாயிறு காலைப் போதின் முகிற்படலத்துண் மறைந்து,—ஒடுங்கி. எ-து. அம்முகிற்படலம் ஒருபுடை நீங்கியவழித் தன்னொளி ஏகதேசமாய் ஒடுங்கித் தோன்றி,—போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மை போல். எ-து. அம்முகிற்படலம் பெருங்காற்றுன் அடியுண்டு முழுவதும் விட்டொழிந்தவழி எங்கணும் தன் னொளியேயாய்த் தோன்றும் பெற்றிபோல,—உள்ளம் முன் வாள் மலத்தின் மறைந்து. எ-து. ஆன்மா அநாதியே தன்னறிவு மலத்துண் மறைப்புண்டு கேவலப்பட்டு,—மற்று 'ஒடுங்கி' உலகை உண்ணும். எ-து. பின்பு கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிவு விளங்கி ஐம்புலன்கள் விடயிக்கும்,—மற்று மலத்து இரித்து 'எங்குமாய்வாள்' வரத்துச் செல்லும். எ-து. பின்பு அம்மலத்தை முதல்வனருளாற் பற்றறக்கனைத்து வியாபகமாய் அறிவு விளங்கி அவனது சீபாத த்தை அணைந்து சுத்தப்படும். எ - று.

தன்மை என்னுர் கொண்மூவிற் புக்குழியுங் கேடின்மையின்.

ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது. பின் வந்த வாள் ஆகுபெயர்.

வினைமாற்றின்கண் வந்த மற்று என்னும் இடைச்சொல் மலத்திரித்து என்பதனேடும் இயைந்தது. சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையாது வந்தது *இலேசாற் கொள்க.

†உவமைவினைகள் பொருளினுஞ் செல் றியைந்தன.

அறிவு மறைந்தும் ஒடுங்கியும் மறைப்பு நீங்கியே எங்குமாய் நிகழ்தன் மாத்திரைக்கே பொன்வாள் உவமை என்பார், 'உலகை யுண்ணும்' 'வரத்துச் செல்லும்' என வேற்றுமையும் உடன் கூறினர்.

மலம் நசித்தலாவது தனது மறைத்தற்சத்தி மடங்கிக் கிழ்ப்படுதன்மாத் திரையே பிறிதன்று என்பதூஉம் உவமையாற் பெறுதும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

பதினெராஞ் சூத்திரமுடிந்தது.

---

* * இதனை. உஉ-ம் பக்கத்துக் குறிப்பிற் காண்க. † ஒடுங்குதலும், வாள் எங்குமாதலும் உவம வினைகள்.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

செம்மலர் நோன்றுள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயத் தானு மரனெனத் தொழுமே.

எ-து. சூ-ம். எ-னின். அசிந்திதனுய் நின்ற பதியைச் சிந்திதனுகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துத னுதலிற்று.

எ-து. க-ரை. எ-னின். சூத்திரக்கருத்து உணர்த்துத னுதலிற்று.

இ-ள். அயரா வன்பி னரன் கழல் சென்ற முத்தர்க்குச் சீவன்முத்தி நிலைக்கண் அவ்வறிவிச்சைசெயல்கள் ஒரோவழிப் புறத்துச் செல்லுங்கால் அவை செல்லுமிடம் இவை என்பது உணர்த்தும் முகத்தான் வாக்குமனுதீத மாய்ப் பத்தியினுன் மறவாதேத்த நின்ற முதல்வனே வாக்குமனக்கோசர மாம்படி தெளியக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்து. எ-று.

சூத்திர இயைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு. அயரா வன்பி னரன் கழலணைந்த சீவன்முத்தனுவான் செங்கமலமலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது நோன்றுளை அணைய வொட்டாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினை யுடைய மும்மல அழுக்கை ஞானநீராற் கழுவி அங்ஙனம் அயராவன்பு செ ய்யும் மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூடி மலமயக்கம் நீங்குதலான் அன்புமிக்கு டைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வ னெனவே கண்டு வழிபட்டு வாழும். எ-று.

எழுவாய் மேலைச் சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. சீவன்முத் தன் என்பது எற்புழிக்கோடலாற் பெறுதும்.

*நோன்றுள் வினைத்தொகை. நோன்றல் பொறுத்தல். *"எடுத்துச் சுமப் பாணி" என்றுர் புடைநூலாசிரியரும்.*

கழீஇ என்றது குறிப்புருவகம்.

'மாலற நேய மலிந்தவர்' என்றது அம்மலங் கழீஇ யன்பரொடு மீஇ யினர் என்னும் பொருடந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது.

நேய மலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும். தான் அசை.

'அம்மலங்கழீஇ' என்றதனுல் அறிவு வியாபரிக்குமிடமும், 'அன்ப ரொடு மீஇ' என்றதனுல், இச்சை வியாபரிக்குமிடமும், 'தொழும்' என்றத னுற் செயல் வியாபரிக்குமிடமும், பெறப்பட்டன. படவே, சீவன்முத்தர்க்கு

* திருவருட்பயன், உயிர்விளக்கம். கு. கிடைக்க.

அறிவிச்சைசெயல்கள் ஏனை விடயங்களிற் செல்லா என்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி ஓரிடத் தொருங்கு நிகழ்வன வாகலின், விடயவேற்றுமை யின்மையும் உணர்க.

தொழுக என்னுது 'தொழும்' என்றமையின், இஃது அணைந்தோரது தன்மை என்பது பெற்றும். அற்றுகலினன்றே இதனைச் சாதனவோத்தின் வையாது ஈண்டு வைத்தார் என்பது. இனித், தொழும் என்றதனை இரட்டிற மொழிந்துகொண்டு விகுதிப்பொருள்பட நின்ற முன்னிலையேவ லாக்கியு முரைத்துக்கொள்க. என்னை? செல்வப்பெருக்க முடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்துமாதல்போல, இவ்வழி பாடு மலவாசனை சிறிதுந் தாக்குதலின்றிச் சிவானந்தம் மேன்மேல் வளரச் செய்யுஞ் சாதனமாதலு முடைமையின். கண்ணழித்துரைபற்றி விதியாக் வைத்து உரைத்தலும் அதுபற்றி.

இதனுள், செம்மலர் நோன்றாள் சேர லொட்டா வம்மலங் கழீஇ.என்றது ஓதிகரணம்;' அன்பரொடு மீஇ என்றது ஓதிகரணம்; மாலற நேய மலிந்தவர் வேடமு மாலயந் தானு மானெனத் தொழும் என்றது ஓதிகரணம்; ஆகமூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்று உணர்க.

மூதலதிகரணம்.

ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக வென்றது.

எ—து. மே—ள். எ—னின். சீவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யக்கடவது இது எனச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ - ள். வெ-டை.

கன்மமலமே தன் மூலத்தை நோக்கிக் கான்மியமெனவும் படும். காமிய மெனப் பாடமோதி, ஆகாமியங் காமியமெனத் தலைக்குறையென் றுரைப் பாரு முளர்.

அவைதாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்து மாகலான்.

எ—து. எ—து. எ—னின். 'மலமாயை தன்னொடு வல்வினை யின்றேற' எனப் பாசநீக்கம் மேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்து நிட்டை கூடியபின் அவை களையக்கிடத்தல் யாங்ஙனம்? என்பாரை நோக்கிச் சூத்திரத்தின் உடம்பொடு புணர்த்தோதிய பொருளைத் தெரித்துணர்த்தி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ - ள். அம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்ந்து நிட்டைகூடினோர் மாட்டும் யாதானுமோ ராற்று னுழைந்து தம் மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய பண்டை விபரீதவுணர்வை மேற்படுத்துவனவாம் ஆகலான்,

அஃது அவர்க்கு ஆகாமையின் 'ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைக' என மேற்கொண்டது. எ - று.

உணர்த்துதல் உணர்வித்தேதுவாதல்.

ஈண்டு அஞ்ஞானம் என்றது விபரீதவுணர்வை.

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமு
மண்முதன் மாயைகாண் மாயையுங்—கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்று
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

எ–து. உரம். எ–னின். அவை அஞ்ஞானத்திற்கு ஏதுவாய் வந்து நுழையுமாறும் அஃது அவர்க் காகாமையுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். புண்ணிய பாவம் பொருந்தும் இக் கான்மியமும். எ-து. *புண்ணிய பாவப் பயனும் புண்ணிய பாவ காரணமாயும் பொருந்துகின்ற இக் கன்ம மலமும்,—மண் முதல் மாயை காண் (இம்) மாயையும். எ-து. நிலம் முதல் மோகினி ஈறுகக் காணப்படுகின்ற இம்மாயாமலமும்,—கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும். எ-து. சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வைப் பயக்கும் இவ்வாணவ மலமும்,—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு. எ-து. இம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்வுடைய உனக்காகாமையான் அவற்றை விடுத்தொழிவாயாக. எ - று.

எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மெய்யுணர்ந்து நிட்டைகூடினார்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலான் அஃது அவர்க்கு ஓரோவழி வாசனைவயத்தான் இங்குளி வாங்குங் கலம் போல வந்து தாக்கும்; அவ்வழிப், † "பிற்செயா தநுப விப்ப தின்று" ஆகலின் அதுசார்வாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம்; அவை உளவாகவே, ‡"பரமே பார்த்திருப்பார்" க்கு நிலம் முதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும்; படவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம்: இவ்வாறு இம்மூன்றும் அறிவற்றம் பார்த்து இம்முறையானே வந்து தலைப்படுமெனக் காட்டிக் கூறுவார் கன்மம் மாயை ஆணவம் என்று இம்முறையின் வைத்து அவ்வக் காரிய நிகழ்ச்சிகளை எடுத்தோதிச் சுட்டிக் கூறினார். இகரச்சுட்டு இடையிலும் வந்தியையும்.

புண்ணிய பாவம் என்றது உபசாரம்.

மூன் வந்த மாயை முப்பத்தொராம் எண்ணுமுறைமைக்கண் நின்ற தத்துவத்தை உணர்த்தி விடாதவாருபெயராய்த் தன்னை ஈறுகவுடைய ஏனைத் தத்துவங்களையுந் தழீஇயிற்று.

---

* புண்ணிய பாவம் எல்பன இன்பத்துன்பங்களையும் நல்வினை தீவினைகளையும் உணர்த்தின. † சிவஞானசித்தி உ-ம் சூ. கக. முற்செயல். ‡ மேற்படி. ககம் சூ. உ. பரஞானத்தாற்.

காண்மாயை செயப்படுபொருளோடு முடிந்த விணைத்தொகை.

இவை சிவபோகப் பெருவாழ்வை இழப்பித்தலின் மெய்ஞ்ஞானிக் காகா வாயின.

மேன்மேன் முறுகுவனவாய இவற்றைத் தோன்றும்பொழுதே துடை யாக்கால் * ''கனைகுரல் கைகொல்லுங் காழ்த்த விடத்து'' என்னும் முறை மைத்தாய் முடியு மென்பது பற்றி 'விடு' என ஈண்டும் வலியுறுத்தப்பட்டது.

விடுதலாவது, அவை அம்முறையான் நிகழ்ந்தவழி இவ்வஞ்ஞானம் ஏக தேசக் காட்சியான் ஆயதெனவும், அக்காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற் றத்தான் ஆனயதெனவும், அத்தோற்றமும் பிராரத்தவினை நுகர்ச்சிகட் சென்ற தற்போதத்தால் ஆயதெனவும், அறிந்து அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துள் அடங்கிச் சிவாநு பவம் சுவாநுபூதிகமாம்படி ஞானநிலையில் உறைத்து நிற்றல்.

மாயை கன்மங்கள், அஞ்ஞானங் காட்டுதல் ஆணவமலச்சார்வா னய செயற்கை என்பது உணர்த்துதற்கு, மூன்றற்கும் பொதுவாக ஏதுவுட் கூறிப்போந்த அதனை ஈண்டு ஆணவமாத்திரைக்கே சிறந்தெடுத் தோதினர்.

முதலதிகரண முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

இனிச் சிவபதத்தர்களோ டிணங்குக வென்றது.

எ–து. மே–ள். எ–னின். அம்மலங் கழீஇயினர்க்கு அதனை நீலிபெறு த்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவது இஃது எனச் சூத்திரத்தின் இர ண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ-ள். வெ-டை.

ஈண்டுச் 'சிவபததர்' என்றது பத்தியினுன் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தை அணைந்த சிவன்முத்தர் மேற்று.

இணங்குதல் நட்புச்செய்தல். 'சிவபத்தர்களோ டிணங்குக' எனவே, எதிர்மறை முகத்தான் ஏனையரோ டிணங்கற்க என்பதாயும் பெறப்பட்டது.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவ ராகலான்.

எ–து. ஏது. எ–னின் உறவும் பகையும் ஒழித்த மெய்ஞ்ஞானிகள் சிலர் மாட்டு நட்புஞ் சிலர்மாட்டு நட்பின்மையு முடையராதல் சால்பன்று என் பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று. இ-ள். வெ-டை.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துமாறு † ''தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி

* திருக்குறள். அஎக. இனைதாக. † திருவாசகம், போற்றித்திருவகவல். நான் முகன்.

மாயா சத்திகள்—வேறு வேறுதம் மாயிக டொடங்கின—வாத்த மானு ரயலவர் கூடி—ஙாத்திகம் பேசி, ஙாத்தமும் பேறினர்—சுற்ற மென்னுங் தொல்பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்—விரத மேபர மாகவே தியருஞ்—சரத மாகவே சாத்திரங் காட்டினர்—சமய வாதிக டத்த மதங்களே—யமைவ தாக வரற்றி மலிந்தனர்" என்றற் ரொடக்கத்துத் திருவாக்குக்களான் அறிக.

மும்மலங்கள் அஞ்ஞானத்தை உணர்த்துதல் இலக்குவாய்த்துழி ஏது வாதன் மாத்திரையே; சிவபத்த ரல்லாதார் அவ்வாறின்றி இலக்கு வாயாத வழிபும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை உபாயங்களானுங் தம்மோ டொப்ப விபரீத வுணர்வைச் செலுத்தியேவிடுவர் ஆகலான் அம்மலங்களி னுங் கொடிய்ராகிய இவரை அவற்றினும் அஞ்சி விட்டொழிதலே அறிவு டைமைக்குச் சால்பு என்பதாம்.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—யறப்பித்துப்
பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னலுணரு
மெய்த்தவரை மேவா வினை.

எ—து. உ—ம். எ—னின். அஞ்ஞானத்தை யுணர்த்துமவரோடு இணங்கா மைமாத்திரையே அமையும் சிவபத்தர்களோடு இணங்குதல் எற்றுக்கு? என் பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ - ள். தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பு இலார் தம் திறத்துச் சேர்வை அற. எ-து. முதல்வன் காட்டியுங் கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந் தமது ஞானக்கண்ணை இழப்பித்துத் தீய நெறிக்கட் கொண்டுசென்று மலங்களாலுய பிறவிக்கு ழியில் வீழ்வித்துத் துயருறுத்துவா ராகிய அன்பில்லார் கூற்றிலே தொன்று தொட்டுப் பயின்று வந்த சேர்க்கை அறும்படி,—பத்தர் இனத்துப் பித்து ஆய்ப் பரன் உண்ர்வினல் உணரும் மெய்த் தவரை. எ-து. அம்மறவியை மாற்றி ஞானக்கண்ணை உதவிப் பிறவிக்குழியினின்றும் எடுத்து நன்னெறிக் கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தரது கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்குஞ் சிவஞானக் கண்ணல் அந்நிலே கடைப்பிடித்து உணரப்பெற்ற மெய்த்தவராயினரை,— வினை மேவா. எ-து. எல்லா வநத்தங் கட்கும் மூலமாய் வந்து சிறப்பில்லார்தந் திறத்துச் சேர்வையைப் பயப்பிக் கும் பிராரத்தவினைகள் வாதியா. எ - று.

'மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பிலார்' என மேற் சொல்லிய பொருளேயே அநுவதித்து விரித்தோதினர்; அதன் எதிர்மறை முகத்தாற் சிவபத்தரது பெருந்தகைமை உணர்ந்துகோடற் பயன் நோக்கி.

மலம் ஆகுபெயர்.

வீழ்க்கும் என்றது உருவகங்குறித்து நிற்றலின், அவ்வாறு உரைக்கப் பட்டது.

எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின் அதனைச் 'சிறப்பு' என்றார். பித்துப் போறலின், அன்பு பித்தெனப்பட்டது.

வீணத் தவங்கள் எல்லாம் மெய்யாதலின்றி மலநாடையாய்ப் போதலின், பரனுணர்வினால் உணருந் தவமொன்றே மெய்த்தவம் எனப்பட்டது.

வீண பால்கா அஃறிணைப்பெயர். சிவபத்தர்மாட்டு அன்புடையராய் மனஞ்சொற் செய்கைகளான் அவர் வழி நிற்பார்க்கு உலகியலுணர்வு மாறிச் சிவானுபூதி உணர்வே மேம்பட்டு நிகழும்: அது நிகழவே பௌதிக உடம்பைப் பற்றி வரும் பிராரத்தவினைகள் அவர்க்கு நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா: மாட்டா தொழியவே, அவை பற்றுக்கோடாக நிகழுஞ் சிறப்பில்லார்தந் திறத்துச் சேர்வை பற்றறக்கெடும் என்பார் 'சேர்வை—யறப் பித்துப்—பத்த ரினத்தாய்ப் பரனுணர்வி னலுணரு—மெய்த்தவரை மேவா' வினை' என்றார். எனவே, வீட்டினர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்க்களோடு இணங்கினு லன்றி வினை பற்றுக்கோடாகத் தொன்றுதொட்டுப் பயின்று வந்த சிறப்பில்லாரது இணக்கம் அறுமையின் அவ்வினைக்கம் ஒருதலையான் வேண்டுமென வலியுறுத்தவா றாயிற்று.

இரண்டாமதிகரண முடிந்தது.

மூன்றாந் திகரணம்.

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக வென்றது.

எ—து. மே—ள். ஏ—னின். அன்பரொடு மரீஇயினார்க்கு அம்மருவுதலே நிலைபெறுத்துவதாய் அதன் பின்னர்ச் செய்யக்கடவ திதுவெனச் சூத்திரத்தின் மூன்றாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று. இ - ள். வெ-டை.

காண்டல் ஐயுறவின்றித் தெளிதல்.

*காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறுபோல மெய்யுணர்வுடையாரைக் காட்சிமாத்திரையின் வசீகரித்து இன்பஞ்செய்தல்பற்றித் திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் என்று உபசரித்தார். அது * "சேலுங் கயலுங் கிளைக்குங்கண் ணிரிளங் கொங்கையிற் செங்குங்குமம்—போலும் பொடியணி மார்பிலங் குமென்று புண்ணியர் போற்றிசைப்ப" என்னுந் திருவாக்கானும் அறிக. திருவேடத்தி னியல்பு † "தூயவெண் ணீறு துதைந்த பொன் மேனியுந் தாழ்வடமு—நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்—பாய்வது போலன்பி னீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன்—மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே" ‡ "சிந்தையிடை யுறுவன்புந் திருமேனி தனிலசையும்—கந்தமிகை யாங்கருத்துங் கையுழுவா*

* திருப்பல்லாண்டு. அ. † பெரியபுராணம், திருநாவுக்கரசுநாயனார் புராணம். கசஎ. ‡ மேற்படி, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம். உஎ0. உஎக.

ரப்படையும்—வந்திழிகண் ணீர்மழையும் • வடிவுபொலி திருமேனி—மந்தமி லாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய" "கண்டகவு ணியக்கன்றுங் கருத் திற்பரவு மெய்க்காதற்—மிருண்டார்திரு வேடநேரே தோன்றியதென் றுதொ ழுதே" என்றற் றொடக்கத்துத் திருவாக்குக்களானும் அறிக.

அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல் லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்.

எ—து. ஏது. எ—னின். மெய்யுணர்வுடையார்க்குப் பகுப்பின்றி எங்க ணும் பரமேசுரனெனக் காண்டலே பொருத்தம் உடைமையானும் நின்றதிருத் தாண்டகம் முதலியவற்றுள் அவ்வாறு ஓதுதலானும் திருவுருத்திரத்துட் பகு ப்பின்றி உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றையுந் தனித்தனி எடுத் தோதி வழிபாடு கூறுதலானும் ஈண்டிவற்றை மாத்திரையே விதந்துகொண் டோதியது என்னை? என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த லுதலிற்று.

இ - ள். அம்முதல்வன் யாங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டி டத்துமாத்திரையே தயிரின் நெய்போல விளங்கி நிலைபெற்று அல்லுழி யெல் லாம் பாலின் நெய்போல வெளிப்படாது நிற்றலான் 'இனிப் பத்தரது திருவே டத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக' என மேற் கொண்டது. ஏ - று.

மற்று உரையசை.

எப்பொருட்கண்ணும் இறைவன் கலந்துளன் என்பது தெளிந்துகோட றற்பொருட்டுத் திருவுருத்திரத்தின் அவ்வாறு ஓதப்பட்டது எனக்கொள்க.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றும் பதி.

எ—து. உ—ம். எ—னின். திருவேடத்தின் இறைவன் பிரகாசமாய் நிற்கு மாறு யாங்ஙனம்? என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத லுதலிற்று.

இ - ள். பதி. எ-து. அசிந்திதனுய் நின்ற பரம்பொருளே,—தன் உணர வேண்டி.எ-து.உலகத்துள்ளார் தன்னை அறிதற்பொருட்டு,—தனது உருவைத் தான் கொடுத்து. எ-து. திருநீறு கண்டிகை மூதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுத்தலானும்,—தன் உணர. எ-து. அவ்வன்பர் தன்னைச் சிவோகம்பாவனையால் அறியச் செய்தலானும்,—தன் னுள் இருத்தலால். எ-து. அங்ஙனம் ஒருகுறியின்கண் நின்றுணரும் அவரைத் தனது வியாபகத்துள்ளாக இருத்துதலானும்,—தன் உணரும் நேசத்தர் தம் பால் ததி நெய்போல் நிகழும்.எ-து. சூறியும் இறந்துநின்று தன்னை உள்ளவாறு உணரும் அவர்மாட்டுத் தயிரின்கண்ணதாகிய நெய்போல விளங்கித் தோன்

றும்,—பாசத்தார்க்கு இன்று ஆகி. எ-து. அவ்வியல்பில்லாத பாசக்கட்டுடை யார்மாட்டுப் பாலின்கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்கும். எ-று.

செய்து என்பது சொல்லெச்சம். இருத்தல் அல்லீற்றுப் பிறவினைத்தொழிற்பெயர். கொடுத்துச் செய்து இருத்தலான் நிகழுமென இயையும்.

தன்னுணரு நேசத்தர் எனப் பெயரடையானும் ஓரேதுக் கூறப்பட்டது. தன்னை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது.

உணர்தலை மூவிடத்தோதுதலின் இஃது அங்ஙனம் வேறுவேறு உரைக்கப்பட்டது.

பாசத்தார்க்கு என்பது உருபுமயக்கம். இன்மை ஈண்டு விளங்காமைகுறித்து நின்றது.

> **கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே**
> **றுண்டலீபோ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்**
> **தானதுவா யன்றுனன் றுனதுவாய்த் தோன்றுனே**
> **தானதுவாய்க் காணுந் தவர்க்கு.**

எ-து. உ-ம். எ-னின். சங்கமவடிவிற்குக் கூறிப்போந்த இயல்பில்லாத தாவரவடிவின் மந்திரசாந்நித்தியம் உள்வழி யன்றிப் பிரகாசமாய் நிற்றல் பெறப்படா தென்பாரை நோக்கிச் சிவாலயத்தி னிடத்தும் இறைவன் பிரகாசமாய் நிற்றலை வலியுறுத்துத னுதலிற்று.

இ-ள். காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல். எ-து. விறகிற்றீ கடைகோலாற் கடைந்துழி வேறுய் விளங்கும் அல்லுழி விளங்குவதன்றுறே போல,—கண்ட உருத் தான் அது ஆய் அன்று ஆனன். எ-து. உயிர் கட்குப் புத்தி முத்தி அளித்தற்பொருட்டுக் காணப்பட்ட தாவரவடிவின்கட் கலப்பினுல் அதுவே, தானுப் அதுவன்றி வேறு பொருளுமாம் இயல்புடைய முதல்வன்,—கண்ட்து ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளது ஆம். எ-து. அதுவே தானுகக் காணுதார்க்குத் தம்மால் அறியப்பட்டதொரு மந்திரசாந்நித்தியம் இல்வழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று அஃதுள்வழி விளங்கித்தோன்றும் பொருளாம்,—அது தான் ஆய்க் காணும் தவர்க்கு அது தான் ஆய்த் தோன்றுனே. எ-து. அவ்வாறன்றி அவ்வடிவே அவனுகக் காணப்படும் உண்மைத் தவமுடையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றுன்கொல்லோ. எ-று.

காணுதார்க்கு என்பது சொல்லெச்சம்.

மந்திரத்தால் என்னும் பொருளடைக்கேற்ப உவமையினும் வருவித்து உரைக்கப்பட்டது. உண்டாதல் ஈண்டு விளங்குதன்மேற்று. ஆல்—அசை. ஆனன் என்பது பெயர். ஓகாரம் எதிர்மறை. பொருண்மைபற்றி உளதெனவும் அன்றெனவும் கூறினர்.

'தானதுவா யன்ருனன்' என்னும் பெயரடையான் அவரவர் பாவனைக் கேற்ப விளங்குதற்கு ஏதுக் கூறியது. தானதுவா யன்ருதல் சங்கம வடிவிற்கு மொக்குமேனும், தாவர வடிவினக்கண் நிகழுங் கடாவை நீதனுனன்றி நீக்க லாகாமையின் ஈண்டுக் கூறினர். •இஃது ஈரிடத்தும் ஒக்குமென்பது முன்னர்ப் பெறப்படும்.

மூன்ருமதிகரண முடிந்தது.

நான்காமதிகரணம்.

இனி இவ்விடங்களின் வழுபடுக வென்றது.

எ-து. மே-ள். எ-னின். மேற்கூறிப் போந்த மூன்றுஞ் சிவன்முத்தர்க்குத் தாமே உளவாம் இலக்கணமாகலின் அநுவாதமாகவைத் துணர்த்தற் பால்னவாகிய இவற்றைக் 'கலிக' 'இணங்குக' 'வழிபடுக' என விதியாக வைத்தோதியது எற்றுக்கு? என்பாரை நோக்கி அதனை அவற்றது ஒழிபாகக் கொண்டு சாதித்தற்கு மேற்கோட னுதலிற்று. இ - ள். வெ-டை.

இவ்விடங்கள் என்றது மேற்கூறிய இரண்டனையும்.

வழிபடுக வென்னும் எடுத்தலோசையான் அநுவதித்து உணர்த்துவதே அமையும் என்பாரை நோக்கி விதித்தலே வலியுறுத்தவாறு. இனம்பற்றிக் கலை தல் இணங்குதல்கட்கும் இஃதொக்கும்.

நரம்பு நாடி முதலானவற்றைத் தானதுவாய் வரும் புருடன் அவையாகாவாறு அப்புருடனு மாகலான்.

எ-து. ஏது. எ-னின். எய்தியதனை விதித்தல் பயனுடைத்தன்றுபோலும் என்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

இ - ள். நரம்பு முதலிய தாதுக்களின்கண் வேற்றுமை இன்றி அதுவது தானுய் வருகின்ற உயிர் நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ என்று இங்ஙனம் *''பைமறியாப்'' பார்ப்பார்க்கு அந்நரம்பு நாடி முதலியவை ஆகாது அவற்றின் வேறுமாயினுற்போல உயிர்க்குயிராகிய அம்முதல்வனும் உயிர்ப் பொருள் உயிரில்பொரு ளெல்லாவற்றினுங் கலப்பான் அதுவது தானுகியும் பொருண்மையான் அல்லனுகியும் நிற்பனுகலான் அதுவது தானுய்க் காணுங் காட்சி பற்றி எய்திய வழிபாடு அல்லனுய் நீற்றலிக் காணுங்கால் எய்தாதாகலின் அவ்வழியும் எய்துவிக்க வேண்டுதலான் 'இனி இவ்விடங்களின் வழிபடுக' என விதித்தோதியது. எ - று.

'அவையாகாவாறு அப்புருடனும்' எனவே அவ்விடத்து எய்துவித்தல் ஒருதலையான் வேண்டும் என்பது தாற்பரியமாயிற்று.

* நாலடியார், தூய்தன்மை. உ. தோற்போர்வை.

மேற்கோளின் இவ்விடங்கீனை என்னுது இவ்விடங்களினென வேற்று மைப்படுத் தோதியதூஉம் இஃதுணர்ந்து கோடற்பொருட்டு. இதனானே, *எய்தாத தெய்துவிப்பதூஉம், எய்தியதிகந்துபடாமற் காப்பதூஉம், எய்திய தனை ஒருமருங்கு மறுப்பதூஉம் என்னும் விதிமூன்றனுள், இஃது எய்தி யதிகந்துபடாமற் காத்ததென்பது போந்தவாறு உணர்க.

வாறு உவமவுருபுபடநின்றது. முதலானவற்றை என்பது உருபுமயக்கம்.

அதுவிது வென்ற தறிவல்லான் கண்டார்க்
கதுவிது வென்றதையு மல்லான்—பேர்துவதனி
லத்துவித மாத லகண்டமுந் தைவமே
யத்துவிதி யன்பிற் றெழு.

எ–து. உ–ம். எ–னின். முதல்வனுக்கு அவ்வியல்பு எல்லாப் பொருட்க ணணும் உண்மையின் அவற்றுள் இவ்விடங்களின் மாத்திரையே வழிபாடு விதித்தது 'என்னை?' என்பாரை நோக்கி அதனை வலியுறுத்துத னுதலிற்று.

இ–ள். கண்டார்க்கு. எ–து. முதல்வன் உயிர்ப்பொருள் உயிரில் பொரு ளெல்லாவற்றினும் நிற்கும் நிலைமை அறியப்பெற்றோர்க்கு,—அது இது என் றது அல்லான். எ–து. கண அருக்கன்போல் அதுவும் இதுவும் எனப் பக்கிசைத் தோதப்பட்ட் பேத நிலைமையனும் அல்லனுய்,—அது என்றது அல்லான். எ–து. உடல் உயிர்போல் அதுவே யென்று ஓதப்பட்ட அபேத நிலைமையனும் அல்லனுய்,—அது இது என்றதையும் அல்லான்.எ–து. குண குணிபோல் அது வாகிய இது என்று பக்கிசையாமல் ஓதப்பட்ட பேதாபேத நிலைமையனும் அல் லனுய்,—பொதுவதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே. எ–து. அறிவொளிபோல் அம்மூன்றற்கும் பொதுமையான் அத்துவித நிலைமைய னுதலான் எல்லாப் பொருளும் அவன் வடிவேயா மாயினும்,—அத்துவிதி அன் பின் தொழு. எ–து. அவற்றுள்ளும் அன்பு வினையுயிடத்தின் வழிபடுவாயாக அவ்வத்துவிதசித்தாந்தத்தைப் பெற்றுடையோய். எ – று.

அது இது என்றது முன்னையது உம்மைத்தொகை; பின்னையது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

அல்லான் என்பதனை மேலுங் கூட்டி, என்றது என்பதனை அது என்ற தனோடுங் கூட்டி உரைக்க. அல்லான் என்பது முற்றெச்சக்குறிப்பு.

என்றதை ஈறீற்றுடைக் குற்றுகரம். உம்மை இறந்தது தழீஇயிற்று. பொதுவது என்னும் அது பகுதிப்பொருள்விகுதி. தைவம் என்னுஞ் சொல் லியல்பு † மேலே உரைத்தாம். ஏகாரம் தேற்றம். ஆயினும் என்பது சொல் லெச்சம். அன்பு ஆகுபெயர். ஏழாவது விரித்துரைக்க.

---

* எய்தாத தெய்துவிப்பது - அபூர்வவிதி. எய்தியதிகந்துபடாமற் காப்பது நியம விதி. எய்தியதனை ஒருமருங்கு மறுப்பது - பரிசங்கியாவிதி. இது திராவிடமாபாடியத் திற் கண்டது. † கசுஎ–ம் பக்கத்துக்குறிப்பிற் காண்க.

*"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி" யினன்றி *"எங்கு-முருக் காண வொண்ணுத பான்முலைப்பாஞ் விம்மி யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவ" தாகி அடிப்பட்டுவரும் அன்பு விளையாமையின் ஆண்டுச் செய்யும் வழிபாடே அத்துவித ஞானத்தை நிலைபெறுத்தற் பயத்ததென்பார் 'அத்துவி தமாத லகண்டமுக் தைவமே' என அநுவதித்து 'அத்துவிதியன்பிற் ரெழு' என்றார். அத்துவிதி என்னும் அண்மைவிளி பயனுணர நின்ற சூனிப்புப்பெயர். இதனானே விதிக்குப் பயன்கூறியதூஉ மாயிற்று.

இனி, அது இது என்பன அருவுருவாகிய திருமேனி எனக்கொண்டு அதற்கியைய உரைப்பாருமுளர்: அவர், அன்பின் என்றதனை எழுப்பொருட் கண் வரும் ஐந்தனுருபேற்ற இயற்பெயராகவைத்து உரைப்ப.

விளையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரி னன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே யதுநிகழு
மானத்தா லன்பிற் ரெழு.

எ-து. உ-ம். எ-னின். அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று கண்டு ஒருவனே ஞானசொரூபம் உளதாய் அத்துவிதத்தை உணர்த்தும் ஆக லான் அதன்பொருட்டு வழிபாடு வேறு விதிந்தல் எற்றுக்கு? என்பாரை நோ க்கி அதனை வலியுறுத்துத 'னுதலிற்று.

இ-ள். வினையால் அசத்து விளைதலான் வினை தீரின், அன்றி ஞானம் விளையா. எ-து. உடம்பின்கண்ணதாகிய பிராரத்தவாசனை உயிர்க்குக் காக்குவ தாயுள்ள துணையும் அதனுன் வரும் விருப்பு வெறுப்புக்களும் அவைபற்றிக் காட்சிப்படும் மண் முதன் மாயைகளும் அவைபற்றி நிகழும் விபரீத உணர்வும் ஆகிய அசத்துக்கள் ஒருவியவழியும் வந்துகூடி மேம்படுவனவாகலான், அவ்வ னவிற்கெல்லாம் மூலமாகிய பிராரத்தவாசனை பற்றறக் கழிந்தாலன்றி அவ்வச த்தைக் கீழ்ப்படுத்து மெய்ப்புணர்வு மேம்படுதல் கூடாதாதலின்,—வினை தீர ஞானத்தை நாடித் தொழுவே அது நிகழும். எ-து. அவ்வாசனை பற்றறக் கழி தற்பொருட்டு அம்மெய்ப்புணர்வுடையாரை நாடி வழிபடவே அவ்வினை நீங்கி மெய்புணர்வு மேம்பட்டு நிகழும்,—ஆனதால் அன்பின் தொழு. எ-து. ஆக லான் அன்பினுல் அவரை வழிபடுவாயாக. எ-று.

அசத்தை ஒருவியவழி உளதாகிய ஞானசொரூபம் நிலைபெறுதல் அவ் வசத்தினது விளைவிற்கு வேராகிய வினைத்திரிவின்கண்ணதாகலான், அவ்வினை வேர் அறுத்து மெய்புணர்வை நிலைபெறுத்துதற்பொருட்டு அதனை அங்ஙனம் நிலைபெறுத்தினுல்மாட்டுச் செய்யும் வழிபாடு ஒருதலையான் வேண்டப்படும் என்பதாம். அற்றேல், அதன்பொருட்டு ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்ச ரிக்க என்ற அதுவே அதற்கு அமையும் எனின், அஃது ஒக்கும்; அவ்வுச்சாரி ப்பும் இவ்வழிபாட்டை இன்றி அமையாது என்க. அற்றாகலினன்றே, ஆண்டு

* சிவஞானசித்தி. கூ-ம் சூ. ச.

*'அஞ்செழுத்தால்' எனவும், †'மீண்முதலுளம்' எனவும், அகத்து வழிபாட்டை உடன் கூறியதூஉம் என்பது.

வினையாது என்னும் துவ்விகுதி விகாரத்தாற் றொக்கது. பின் வந்த ஞானம் ஆகுபெயர். ஆனதனால் என்பது ஆனத்தால் என மரீயிற்று.

தன்னை யறிவித்துத் தான்றானைச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

எ—து. உ—ம். எ—னின். அங்ஙனம் பயன்பற்றி விதிக்கப்படும் வழிபாடு, வேள்வி முதலியனபோலப் பயன்வேண்டாமையானுதல் பின்னர்ச் செய்து பெறுதும் என்றுதல் ஓரோவழி ஒழியவும்படுங்கொல்லோ என்பாரை நோக்கி, அது செய்யாவழிப் படுங் குற்றமும் செய்தல் கடமையாமாறும் உணர்த்தி விதித்தலி வலியுறுத்துத் னுதலிற்று.

இ - ள். தன்னை அறிவித்துத் தான் தான் ஆச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை அலது. எ-து. தன்னுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரித்துணர்த்தி எத்தனையும் எளிய அவ்வுயிரை எத்தனையு அரிய தானும்வண்ணஞ் செய்தளித்த பெரியதோ ருதவியை அதன்பின்னர் மறக்குமாயின் அஃது இதற்குமுன் அறியாமையான் மறீந்த குற்றம்போலத் தீர்திறனுடையதோர் குற்றமன்று ஆகலானும்,—முன்னவன் தானே தானுச் செய்தும் தைவம் என்றும் தைவமே மான் தொழுகையே வலி. எ-து. முதல்வன் அங்ஙனந தான்றானேயாகச் செய்தானும் இதுகாறுந் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது ஈ பகாரத்தை இன்றியமையாதாய் அடிமையாகிய உயிர் எக்காலத்தும் அவ்வாறு அடிமையேயாம் ஆகலானும் தான்றானுச் செய்தளித்த அப்பெரியோனை வழிபடுதலே அவ்வுயிர்க்கு வலியாவது. எ - று.

தமது முதறானை குருவாகலின் 'தான்றானுச் செய்தானை' என்றும், முன்னைமறநத குற்றம் அறியாது நிகழ்ந்ததாகலின் கழுவப்படும் இஃது அதுபோற் கழுவப்படுவதன்று என்பார் 'பின்னை மறத்தல் பிழையலது' என்றுங் கூறினார். பின்னை மறத்தல் என்றதனால் முன்னை மறத்தல் பெறப்பட்டது. ‡"எநநன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை—செய்நநன்றி கொன்ற மகற்கு" என்னுங் கருத்து நோக்கிக் கூறியதூஉமாம்.

அலதும் எனப் பாடமோதி இது பிழையாதலன்றியும் என்றுரைப்பாரு முளர்.

எகாரம் முன்னையது அசைநிலை; பின்னையன தேற்றம். செய்தாலென்பது செய்தெனத் திரிந்தது. உம்மை சிறப்பின்கண் வந்தது.

* இந்நூல். கூம் சூ. கூ. அதி. க. † மேற்படி. கூ. ‡ திருக்குறள். ககo.

தான்முனைச் செய்தல் எதனை எதனைப்பற்றினும் அது அதுவாம் உயிர் தன்னை அறிந்தவழி எண்குணங்களால் நிறைந்து தன்வண்ணமாகச் செய்தல். அங்ஙனஞ் செய்தவழியும் *"உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு மூரித்தே" என்பார் 'தைவமென்றுந் தைவமே' என்றார். †தைவம் என்னுஞ் சொல்லியல்பு மேலே உரைத்தாம்.

• மானை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. ‡மான் என்பது வடசொற்றிரிபு. சுட்டு வருவிக்க. வலிதருவதனை வலி என்று உபசரித்தார்.

இவ்வுதாரணங்கண் மூன்றனும், வழிபாட்டிற்கும் இடத்துங்கிழ்பொருண் மாத்திரையே அன்றி இடவிசேடமும் பெறல்வேண்டும் என அதனை வலியுறுத்துமுகத்தானே, முறையே சிவலிங்கத்தையுஞ் சிவபத்தர் வேடத்தையுஞ் சிவதீக்கைகளையும் அறிந்து வழிபடுமாறு கூறப்பட்டது.

சிவமென்னு மந்ததர சித்தைநேர் நோக்கப்
பவமின்றுங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

எ—து. செ—ள். எ—னின். இங்ஙனஞ் சிவாகமத்துள் ஞானபாதப் பொருளெல்லாவற்றையும் பொது உண்மை என்று இருவகைப்படுத்துப் பிரமாண இயல் இலக்கண இயல் சாதன இயல் பயன் இயல் என நான்கியலாக வைத்துப் போதிப்பதாகிய இச்சிவஞானபோத நூலைக் கோடற்கு உரிய அதிகாரிகளாவார் இவர் என்பது உணர்த்துத னுதலிற்று.

இ - ள். சிவம் என்னும் அந்ததர. எ-து. தான்முனைச் செய்தவாற்றாற் சிவனென்னும் இயல்பினீங்கிச் சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தை உடைய மாணவகனே! ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு. எ-து. ஒன்றும் இரண்டும் ஆய மலங்களை உடைய விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்,—சிந்தை நேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம். எ-து. முறையே அறிவின்கண் நின்று அருட்பார்வையால் நோக்குதலானும் தேவகுருவாய் முன்னின்று செய்யுந் திருநோக்கம் பரிசம் வாக்கு எனப்படுந் தீக்கையானும் பிறவிக்கு ஏதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும் ஆகலான்,—மும்மை மலர்க்கு இங்கு ஒண் குருவால் இன்று இந் நூல்.எ-து. அவரின் வேறாகிய மும்மலம் உடையவர்க்கே உரித்து இவ்வுலகத்து அனுபவமுடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞானபோத நூல். எ - று.

அந்தம் வேதாந்தம், அந்ததரம் சித்தாந்தம் ஆகலின், அதனைப் பெற்றுரைத்தது பெருமை கூறுவார் 'சிவமென்னுமந்ததர' என்றார்.

என்னும் என்புழிப் படிசொற் றொக்கு நின்றது. சித்தை—அறிவு. கண் ணுருபு விரித்துரைக்க.

---

* சிவஞானசித்தி. சுக-ம் சூ. க0. செம்பிரத. †சுகஎ-ம் பக்கம். ‡மகான் என்பது மான் எனத் தற்பவமாயிற்று.

நேர் கோக்குதல் முன்னே மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையாற் கோக்குதல். கோக்க கோக்குதலான் என்க.

கண் வாசகங்களைக் கூறவே இனம் பற்றிப் பரிசமும் உடன் கொள்ளப் படும்.

பவம் ஆகுபெயர்.

இந்நூல் அநுபவம் உடைய தேசிகனால் அன்றி விளங்காது என்பார் 'ஞான குருவால்' என்றார்.

போதிக்கப்படும் என்பது அவாய்நிலையான் வந்தது.

இன்றிந்நூல் என்பது இந்நூல் என்னும் பொருட்டு. இக்காலத்து உரைக்கப்படும் நூல் எனினும் அமையும். அது 'தாணுரைத்தா னின்று' என வருகின்ற வெண்பாவாற் கூறியவாற்றானும் அறிக.

மும்மை என்றது ஈண்டு எண்ணின்மேல் நின்றது, ''தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்'' என்புழிப்போல.

நூன்காமதிகாண முடிந்தது.

பன்னிரண்டாஞ்சூத்திர முடிந்தது.

பயனியன் முற்றிற்று.

சிறப்பியல்பு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பாயிரம்.

எந்தை சனற்குமர னேத்தித் தொழுவியல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞான நூல்—சிந்தைசெய்து
தாணுரைத்தான் மெய்கண்டான் முரணியோர் தாமுணர
வேதுதிருட் டாந்தத்தா லின்று.

இ - ள். எந்தை சனற்குமரன். எ-து. எந்தையாகிய சனற்குமார முனிவர்,—எத்திக் தொழு. எ-து. அடியேற்கு ஞானபாதப்பொருளை உபதேசித்தருளுக என்று அன்பு செய்து துதித்து வணங்கிப் பிரார்த்திக்க,—இயல்பு ஆய்ந்தி. எ-து. அப்பொருளினியல்புகளைச் சகண்டமேதவர்பாற் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த நந்திபெருமான்,—உரைத்தருளும் ஞான நூல். எ-து. அங்ஙனிலே அவர்க்கு உபதேசித்தருளிய சிவஞானபோதமென்னும் வடநூலை,—

மெய்கண்டான் சிந்தித்து. எ-து. மெய்கண்டதேவநாயனர் சிந்தித்து மொழி பெயர்த்து,—எது திருட்டாந்தத்தால். எ-து. கருத்துரை மேற்கோள் எது உதாரணங்களோடு சேர்த்து,—தாரணியோர் தாம் உணர். எ-து. தாரணியின் கணுள்ளோர் உணர்ந்து உய்யும் பொருட்டு,—இன்று உரைத்தான். எ-து. இங்ஙனிற் கூறியருளினர். எ - று.

எந்தந்தை என்பது எந்தை என மரீஇயிற்று. தொழ என்பது உரைத்த ருளும் என்னும் பிறகருத்தாவின் வினைகொண்டது. ஆய்ந்தறிவினைத்தொகை. ஆய்தல் ஈண்டுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலே உணர்த்திற்று. தான் தாம் என்பன கட்டுரைச்சுவைக்கண் வந்த அசைகள். ஆல் ஓடுருபின் பொருட்டு.

மகவெனப் பல்லுயிர்களையும் பேணும் மகனுய் நாமெல்லாம் நல்வழிபெற் றுய்யும்பொருட்டு ஞானபாதப் பொருளே நிலைபெறுத்தி வைத்தலாற் றந் தையை நிகர்ப்பார் என்பது போதர 'எந்தை' என்றும், குருபத்தியினும் பக் குவமுதிர்ச்சியினுஞ் சிறந்தவர் என்பது போதர, 'ஏத்தித்தொழ' என்றும் கூறினர்.

தாரணி என்றது ஈண்டுத் தமிழ்வழங்கும் நிலத்தை, என்னை? அந்நிலத் தாரேதமிழ்நூல் உணர்த்தற்குரியராகலின். ஏத்தி என்றும், தொழ என்றும், வாக்கின் தொழிலும் காயத்தின் தொழிலும் கூறலே இனம்பற்றி மனத்தின் றொழிலாகிய அன்பு செய்தலும் பெறப்பட்டது.

சிந்தைசெய்தல் என்பது பாஞ்சீகாதிமுனிவர்பால், தாம் கேட்ட பொ ருளை மொழிபெயர்த்துக் கூறுதற்கண் வழுவாது மனத்திலே நினைத்தமைத் தலே உணர்த்திற்று. அல்லதூஉம் நாதனுருள் பெரும் சுத்தியதேவர் சனற் குமாரமுனிவர்க்கும், சனற்குமாரமுனிவர் சத்தியஞானதரிசினிகளுக்கும், சத்தியஞானதரிசினிகள் பாஞ்சீகாதிமுனிவர்க்கும், பாஞ்சீகாதிமுனிவர் தம க்கும் உபதேசித்த முறையைக் கடைப்பிடித்துத் தாமும் அவ்வாறே பின்னை யோர்க்கும் பிரமோசனமாமாறுரைக்கத் திருவுளங் கொண்டு என்றலுமாம். அல்லதூஉம் ''யான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்'' என்று கருணைமீக் கூர்ந்து என்றலுமாம். அல்லதூஉம் அநித்தியம்பற்றி விரைந்து செயற்பால தெனச் சிந்தித்து என்றலுமாம்.

'தாரணியோர் தாமுணர' எனவே, தேவர்முனிவர் முதலியோர் உணரு மாறு இந்நூல் முன்னர்த் தேவபாடையிலே உரைக்கப்பட்டிருந்தது என்ப தூஉம், இப்போது தமிழ்ப்பாடையிலே உரைக்கப்பட்டது என்பதூஉம், 'எது திருட்டாந்தத்தால்' எனவே, பூருலகோர் இனிதுணருமாறு எதுக்களையும் உதாரணங்களையுங் விசேடமாகத் தாமே செய்து சேர்த்துக் கூறினர் என்ப தூஉம் பெறப்படும். எது திருட்டாந்தங்கள் என்றது வார்த்திகம் எனப்படும் உரைச்செய்யுளினும் வெண்பாவாகிய பாச்செய்யுளினும் அமைந்தவைகளை. எது திருட்டாந்தத்தால் எனவே இனம்பற்றிக் கருத்துரையும் மேற்கோளும் கொள்ளப்பட்டன.

இனி, எந்தைபால் இயல்பு ஆய்ந்தி எனக் கொண்டுகூட்டி எமது பரம பிதாவாகிய சீகண்டதேவர்மாட்டுச் சிவாகமப்பொருள்கள் ஒன்றேடொன்று முரணுவனவாக மலிந்து அப்பொருட்டன்மையை விளுவிய நந்திபெருமான் எனினும் அமையும். இப்பொருட்கு ஏழாவது வருவிக்க. ஆய்தல் - ஈண்டு விளுவுதல்.

எனவே அம்மலிவுதீர்தற்பொருட்டுச் சீகண்டதேவரால் நந்திபெரும்மானுக்குச் சிவஞானபோதம் உபதேசிக்கப்பட்டதென்பது தானே போதரும்.

'எந்தை சனற்குமர னேத்தித் தொழுவியல்பாய் நந்தி யுரைத்தருளு ஞானநூல்' என்பதனுற் சிவஞானபோதநூல் உபதேசிக்கப்பட்டு வந்த வரலாறும் அதன் பெருமையும் கூறப்பட்டவாறறிக.

'மெய்கண்டான்' எனவே ஆக்கியோன் பெயரும், 'நந்தியுரைத்தருளும்' எனவே வழியும், 'தாரணியோர்' எனவே தமிழ்வழங்கும் நிலமே இந்நூல் வழங்கும் நிலம் என எல்லையும், 'ஞானநூல்' எனவே நூற்பெயரும் நுதலிய பொருளும் பயனும், 'ஏதுதிருட்டாந்தத்தால்' எனவே இலக்கிய இலக்கணங்கற்றுத் தருக்கநூல் பயின்று வல்ல பக்குவரே இந்நூல் கேட்டற்குரியராவரெனக் கேட்போரும் யாப்பும் போந்தவாறுணர்க.

பாயிரமுடிந்தது.

இது புத்துரை.

சிவஞானபோதச்சிற்றுரை

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

சிவஞானசுவாமிகள்

சிற்றுரையில்

வெளிப்படையென விடுத்தவற்றிற்கு

ஸ்ரீ ஸ்ரீ

சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்

இயற்றிய வுரை.

முதற்சூத்திரம்.

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுடப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இம்மூன்று அதிகரணங்களின்வைத்து இம்முதல் அதிகரணத்துள்,—ஒருவன் ஒருத்தி ஒன்று என்று உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம். எ-து. ஒருவனென்றும் ஒருத்தியென்றும் ஒன்றென்றும் இவ்வாறு அவயவப்பகுப்புடைத்தாயும் பலவேறுவகைத்தாய்ச் சடமாயும் முயற்கோடுமுதலியன போலத் திரிவையங்களானன்றி மெய்யாகச் சுட்டியறியப்பட்டபிரபஞ்சம் இம்மூன்று ஏதுவானும்,—உற்பத்தி திதி நாசம் உடைத்து என்றது. எ-து. தோன்றி நின்று அழிதலையுடைத்து. எ-று.

[இனி உலகமுள்ளது என்றது.]

இ-ள். உலகம். எ-து. மேற் சாதிக்கப்பட்ட முத்தொழிலுக்குரிய பிரபஞ்சம்,—உள்ளது என்றது. எ-து. உள்பொருளாம். எ-று.

[இனி உலகஞ் செய்வோனையுடைத்து என்றது.]

இ-ள். உலகம். எ-து. மேல் உள்பொருளெனச் சாதிக்கப்பட்ட பிரபஞ்சம்,—செய்வோனை உடைத்து என்றது. எ-து. தொழிற்படுத்தும் நிமித்தகாரணனாகிய முதற்கடவுளையுடைத்து. எ-று.

இரண்டாஞ்சூத்திரம்.

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கும் என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இவ்வதிகரணம் நான்கனுள்வைத்து இம்முதலதிகரணத்துள்,—முதல்வன். எ-து. கடவுள்,—இவ்வான்மாக்கள் பலவும் ஆய். எ-து. கலப்பினுல் இவ்வுயிர்களேயாய்,—தானே ஆய். எ-து. பொருட்டன்மை

யால் அவற்றின் வேறுமாய்,—இவ்வான்மாக்கள் பலவும் தானேயாய். எ-து. உடனுய் நிற்றலின் இவ்வுயிர்கள் பலவுந் தானேயாய்,—நிற்கும் என்றது. எ-து. நிற்பன். எ - று.

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனுணை யின் வரும் என்றது.

இ - ள். இவ்வான்மாக்களுக்கு. எ-து. முதல்வன் இவ்வாறு மூவகையு மாய் நிற்றற்குரிமையுடைய உயிர்களுக்கு,—இருவினை. எ-து. முற்பிறவிகளின் ஈட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணியபாவங்கள்,— முதல் வன் ஆணையின். எ-து. இறைவனுடைய சிற்சத்தியால்,—வரும் என்றது. எ-து. வரும். எ - று.

இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்றது.

இ - ள். இவ்வான்மாக்கள். எ-து. இருவினைப்பயன்களை நுகர்தற்குரிய உயிர் கள்,—மாறிப் பிறந்து வரும என்றது. எ-து. இறந்து மீளப் பிறந்து இவ்வாறே வரும். எ - று.

மூன்றுஞ்சூத்திரம்.

ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது.

இ - ள். ஈண்டு. எ-து. இவ்வேழுதிகாணந்துள்ளவைத்து இம்முதலதிகா ணத்துள்,—இலது என்றலின். எ-து. இல்தான்மாவல்ல இல்தான்மாவன்று என்றுசொல்லும் போருளுண்மையான்,—ஆன்மா உளது என்றது. எ-து. இதனின்வேறுய் உயிரெனப்படுவதொன்றுண்டு. எ - று.

இனி எனதுடலென்றலின் ஆன்மா உளதென்றது.

இ - ள். எனது உடல் என்றலின். எ-து. நான் பருத்தேன் சிறுத்தேன் கரி யேன் மனிதன் பார்ப்பான் என வுடலின் குணவிசேடங்களை உபசரித்தலால் உயிருக்கேற்றி வழங்கினும் யான் உடல் யான் கை யான் கால் என உடம பைப் அவ்வாறு வழங்குவாரின்றி எனதுடல் வேற்றுமைப்படவே யாவரும வழங்கக் காண்டலின், அதனால்,—ஆன்மா உளது என்றது. எ-து. இவ்வுடம் பின் வெறுய் உயிரெனப்படுவதொன்றுண்டு. எ-று.

இனி ஐம்புலனறிதலின் ஆன்மா உளதென்றது.

இ - ள். ஐம்புலன் அறிதலின். எ-து. ஐம்புலன்களையும் அறிதலான்,— ஆன்மா உளது என்றது. எ-து. இவ்விந்திரியங்களின்வேறுய் உயிரெனப்படுவ தொன்றுண்டு. எ - று.

ஐம்புலனுகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங் கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின், இவ்வைந்திலுனும் ஐம்பயனுமறிவ துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ - ள். ஐம்புலனுகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களே. எ-து. ஐந்துவிடயங் களாகிய ஓசை ஊறு ஒளி சுவை நாற்றங்களே,—இந்திரியங்கள். எ-து. சுரோத் திரம் முதலிய இந்திரியங்களுள்,—ஒன்று.எ-து. ஒருவிடயத்தை,—அறிந்தது. எ-து. அறிந்த இந்திரியம்,—ஒன்று. எ-து. மற்றொருவிடயத்தை,—அறியா மையின். எ-து. அறியாதாதலான்,—இவ்வைந்தினுலும். எ-து. இவ்வைந்து இந்திரியங்களாலும்,—ஐம்பயனும். எ-து. ஐம்புலன்களேயும்,—அறிவது உள தாகலின். எ-து. அறியும்பொருள் உண்டாதலான்,—அதுவே. எ-து. அவ்வா றறியும் பொருளே,—அவ்வான்மாவாம் என்றது. எ-து. மேல் உரையளவை பற்றிச் சாதித்த ஆன்மா என்றவாறும். ஐம்புலனறிதலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ - று.

நனவின்கட் கனவு கண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்ப்துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இ - ள். கனவு. எ-து. சொப்பனத்தினே,—கண்டாம் என்றும். எ-து.காண ப்பெற்றேம் என்றும்,—கண்டிலம் என்றும். எ-து.• காணப்பெற்றிலேம் என் றும்,—நனவின்கண். எ-து. சாக்கிரத்தின்கண்,—நிற்பது உளதாகலின். எ-து. மயங்கியறியும் பொருள் உண்டாதலான்,—அதுவே. எ-து. அவ்வாறு மயங்கி அறியும் பொருளே,—அவ்வான்மாவாம் என்றது. எ-து. மேல் உரையளவை பற்றிச் சாதித்த ஆன்மா என்றவாறும். ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. எ - று.

இனிக் கண்படில் உண்டிவினே யின்மையின் ஆன்மா உளது என்றது.

இ - ள். கண்படில். எ-து. துயிலிடத்து,—உண்டி. எ-து. விடயங்களிட மாக வரும் இன்பத்துன்பநுகர்ச்சியும்,—வினே. எ-து. உடம்பு சேட்டித்த லும்,—இன்மையின். எ-து. இல்லாமையால்,—ஆன்மா உளது என்றது. எ-து. இப்பிராணவாயுவின் வேறுய் ஆன்மா உண்டு. எ - று.

நான்காஞ் சூத்திரம்.

ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களா யுளள மனேபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது.

இ - ள். ஈண்டு. எ-து. இம்மூன்றதிகரணத்துள்வைத்து இம்முதலதிகரண த்து,—இவ்வான்மா ஆவது. எ-து. மேற்கூறிப்போந்த உயிராவது,—அந்தக் காணங்களாய் உள்ள மனே புத்தி அகங்கார சித்தங்களில். எ-து. புறவந்தக்க ரணங்களாகிய மனம் புத்தி அகங்காரம் சித்தங்களாகிய இவற்றின்,—ஒன்று அன்று என்றது. எ-து. வேறும். எ - று.

அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவ்வற்றை
நாத மூளவடிவா நாடிற் பிரணவமாம்
போதந் கடற்றிரையே போன்று.

இ-ள். அகாரம் அகங்காரம்.எ-து. அகரம் அகங்காரத்தினையும்,—உகாரம் புத்தி. எ-து. உகரம் புத்தியினையும்,— மகாரம் மனம். எ-து. மகரம் மனத்தினையும்,—விந்து சித்தம். எ-து. விந்து சித்தத்தினையும்,—நாதம் உளவடிவு. எ-து. நாதம் உயிரினையும் செலுத்துதல்பற்றி,—கடல் திரையே போன்று. எ-து. சமுத்திரத்தின்கட் புதிதுபுதிதாய்த் திரை தோன்றியும் ஒடுங்கியும்வருமாறு போல,—போதம். எ-து. மாசகலத்தின்கட் கணந்தோறும் உணர்வு,—ஆம். எ-து. உதித்தும் ஒடுங்கியும் வரும்,—பகாது இவற்றை நாடில்.எ-து.பகுக்காது இவ்வகாரங்களை ஆராயின்,—பிரணவம் ஆம்.எ-து. பிரணவமாகும். எ-று.

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வ
மகரவுக ரம்மகரத் தாம்.

இ-ள். எண் நிலவு. எ-து. மானதக்காட்சியின்கண் நிலவிய,—ஓங்காரத்து. எ-து. பிரணவத்தின்கண்ணே,—நண்ணிய.எ-து.பொருந்திய,—நாதத்து. எ-து. நாதத்திற்கும்,—விந்துவொடு. எ-து. விந்துவிற்கும்,—அதிதெய்வம். எ-து. அதிதேவதையை,—கண்ணில். எ-து. கருதுமிடத்து,—சதாசிவம். எ-து. சதாசிவமும்,—ஈசர் ஆம். எ-து. மகேசனுமாம்,—மகர உகர அகரத்து. எ-து. மகர உகர அகரங்கட்கு,—அதிதெய்வம் கண்ணில். எ-து. அதிதேவதையைக் கருதுமிடத்து,—பரமன் மாலோடு பகர் அயனும். எ-து. முறையே சுத்தவித்தையின் ஓவகுவோராகிய உருத்திரனும் மாலும் சொல்லப்படும் அயனுமாம். எ-று.

இனி இவ்வான்மாச் சகசமலத்தினு லுணர்வின்றென்றது

இ-ள். இவ்வான்மா. எ-து. அந்தக்கரணங்களின் ஒன்றன்றுகச் சாதிக்கப்பட்ட ஆன்மா,—சகசமலத்தினால். எ-து. முதல்வனைப்போல அந்தக்கரணம் முதலியவற்றின் வேறுபட சேதனப்பொருளாயினுஞ் செம்பிற் களிம்புபோல வேறு காரணமின்றி மூலமலம் தன்னோடு உடனாய் நிற்றலின்,—உணர்வு இன்று என்றது. எ-து. தன்னியல்பான் உணருமாறின்றிக் கருவிகளைக் கூடி நின்று உணர்வதாயிற்று. எ-று.

இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியந் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்குமென்றது.

இ-ள். இவ்வான்மா. எ-து. அந்தக்கரணங்களோடு கூடிய ஆன்மா,—சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாய் உள்ள. எ-து. சகசமலத்துணராது அமைச்சரசேய்ப்ப நிற்றலாற் படைகொடு பவனிபோதும் வேந்தன் கடைதொறும் விட்டுவிட்டுக் காவலுமிட்டு அந்தப்புரத்திற் செல்லுமாறுபோலச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள,—பஞ்சாவத்திதன் ஆய் நிற்கும் என்றது. எ-து. அஞ்சவத்தையை உடையவனாய் நிற்பன். எ-று.

ஐந்தாஞ்சூத்திரம்.

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணரு மென்றது.

இ - ள். ஈண்டு. எ-து. இவ்விரண்டதிகரணங்களுள்வைத்து இம்முதலதி காணத்து,—ஐயுணர்வுகள். எ-து. உணர்விற்கு வதுவாகிய ஐம்பொறிகள்,— ஆன்மாவால் உணரும் என்றது. எ-து. உயிரால் விடயங்களே அறியும். எ - று.

இனி இதுவுந் தமதுமுதலாலே உணரு மென்றது.

இ - ள். இதுவும். எ-து. இவ்வான்மாக்களும்,—தமது முதலாலே. எ-து. இக்றவனாலே,—உணரும் என்றது. எ-து. அறிவிக்க அறியும். எ - று.

இவ்வான்மாத் தன்னாலே யுணரும் இந்திரியங்களைப்போலத் தானுந் தன்னை உணராது நிற்றலான்.

இ-ள். இவ்வான்மா. எ-து. இவ்வுயிர்கள்,—தன்னாலே உணரும். எ-து.தம் மாலே விடயிக்கும்,—இந்திரியங்களைப் போல.எ-து.பொறிகளைப்போல,—தா னும். எ-து. சடமுஞ் சேதனமுமாய வேறுபாடுபற்றித் தம்முள் ஒவ்வாவாயி னும் இவ்வுயிர்களும்,—தன்னை. எ-து. தம்மையும்,—தன் ஐ. எ-து. தம்மு டைய முதல்வனையும்,—உணராது நிற்றலான். எ-து. அறியாது நிற்கும் ஆக லான், இதுவும் தமதுமுதலாலே உணருமென மேற்கொண்டது. எ - று.

ஆறாஞ்சூத்திரம்.

இனி இவ்விரண்டுதன்மையுமின்றி வாக்குமனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்றுணரற்பாற்று.

இ - ள். இவ்விரண்டு தன்மையும் இன்றி. எ-து. உணருருவாந்தன்மையும் உணராதாந்தன்மையும் இன்றி,—வாக்கு. எ-து. பாசஞானத்திற்கும்,—மனம். எ-து. பசுஞானத்திற்கும்,—அதீதம். எ-து. அவ்விரண்டன் விருத்திகளைக்கடந்து அதீதமாய் நின்று,—கொசரமாய். எ-து. ஒற்றுமைப்பட்டுநின்று உணரும் அதுபவஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாய்,—நின்ற. எ-து. நிற்கின்ற,—அதுவே. எ-து. அவ்வாறு நிற்கின்ற பொருள் இதுவென அளவைகளானறிய வாராமைபற்றி அதுவேயென மகாவாக்கியத்தாற் கூறப்படும் பதிப்பொருளே,—சத்தாய் உள்ள சிவம் என்று. எ-து. சத்தாகிய சிவமாமென்று,—உணரற்பாற்று. எ-து. உணரும் பான்மை உடைத்து. எ - று.

ஏழாஞ்சூத்திரம்.

இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது.

இ - ள். அசத்தினுக்கு. எ-து. தத்துவப்பிரபஞ்சத்திற்கு,—உணர்வு. எ-து. அறிவானது,—இன்று என்றது. எ-து. இல்லை. எ - று.

இனி இருதிறனறிவுள தாண்டலா வான்மா வென்றது.

இ-ள். இரு திறன்.எ-து. சத்து அசத்து என்னும் இரண்டின் இயல்பை,—அறிவுளது.எ-து. அறியும் பொருள்,—இரண்டு அலா. எ-து. சத்தும் அசத்தும் அல்லாத,—ஆன்மா. எ-து. சதசத்தாகிய உயிராம். எ - று.

எட்டாஞ்சூத்திரம்.

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழும் என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இந்நான்கதிகரணங்களுள்வைத்து இம்முதலதிகரணத்து,—இவ்வான்மாக்களுக்கு. எ-து. மேற்கூறிப்போந்த இயல்புடைய ஆன்மாக்களுக்கு,—முற்செய் தவத்தான். எ-து. படிமுறையானன்றி இவ்வொருபிறவியிற் செய்த தவத்தான் அமையாது முற்பிறவிகளிலே செய்துவந்த தவமாகிய சரியை கிரியா யோகவிசேடத்தால்,—ஞானம். ஈ-து. குரவன் உணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகக் கொண்டு அறிவதாகிய சாதன அறிவானது,—நிகழும் என்றது. எ-து. ஐயந்திரிபின்றி விளங்கும். எ-று.

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்.

இ-ள். மேல். எ-து. முற்பிறவிகளில்.—சரியை கிரியா யோகங்களைச் செய்துழி. எ-து. சரியை கிரியா யோகங்களாகிய தவங்களைச்செய்து முற்றுப்பெற்ற விடத்து அத்தவங்கடாம்,—நன்னெறி ஆகிய. எ-து. வீடுபேறு எய்தற்குச் சன்மார்க்கமாகிய,—ஞானத்தை. எ-து. மேற்கூறிய ஞானத்தை,—காட்டி அல்லது. எ-து. பயப்பித்தன்றி,—மோக்ஷத்தை. எ-து. முத்தியை,—கொடா ஆகலான். எ-து. கொடுப்பன அல்ல ஆகலான், ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழும் என மேற்கொண்டது. எ-று.

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா என்றது.

இ-ள். இவ்வான்மாக்கள். எ-து. உணர்த்த உணரும் இயல்பினையுடைய உயிர்கள்,—ஐயுணர்வுகளால். எ-து. ஐம்பொறிகளால்,—மயங்கி. எ-து. மயக்கமுற்று,—தம்மை. ஈ-து. தமதுசொரூபத்தை,—உணரா என்றது. எ-து. அறியா. எ-று.

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

இ-ள். இவ்வான்மா. எ-து. ஐயுணர்வுகளான் மயங்கித் தன்னை உணரா தெனப்பட்ட ஆன்மா,—தன்னை. ஈ-து. சித்தாய் வியாபகமாகிய தன்னியல்பை,—இந்திரியத்தின். எ-து. சடமாய் ஏகதேசமாகிய இந்திரியத்தின்,—வேருவான் காணவே. எ-து. வேருக உணரும் வியாபக உணர்விற்கு இந்திரியத்தான் ஆகக்கடவதொன்றின்மையின் சற்குரவனுல் அவ்வாறு உணரவே,—தமது முதல் சீபாதத்தை. எ-து. பிறிதுகாரணம் வேண்டாது தனக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடியினை,—அணையும் என்றது. எ-து. தலைப்படும். எ-று.

ஒன்பதாஞ் சூத்திரம்.

ஈண்டு அம்முதலே ஞானக்கண்ணுலே காண்க என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இம்மூன்றதிகரணங்களுள்வைத்து இம்முதலதி காரணத்து,—அம்முதலே. எ-து. பாசஞான பசுஞானங்களான் உணரப்படாத முதல்வனே,—ஞானக்கண்ணுலே. எ-து. சிவஞானத்தினுலே,—காண்க. எ-து. அறிக. எ-று.

அவன் வாக்கு மனுதீத கோசரமாய் நிற்றலான்.

இ-ள். வாக்கு. எ-து. நாதமுடிவான பாசஞானமும்,—மனம். எ-து. பசு ஞானமுமாகிய,—அதீதம். எ-து. அவ்விரண்டன் விருத்திகளைக் கடந்து அதீத மாய் நின்று,—கோசரமாய் நிற்றலான். எ-து. ஒற்றுமைப்பட்டு உணரும்பதி ஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாகலான், ஈண்டு அம்முதலே ஞான க்கண்ணுலே காண்க என்றது என மேற்கொண்டது. எ-று.

இனி அசத்தாயுள்ள வன்னபேதங்களே அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபமென் றுணரற்பாற்று.

இ-ள். அசத்தாய் உள்ள. எ-து. நிலையுதலுடைய தற்சொரூபத்தைக் காட் டாது மறைத்து நிற்கும் நிலையுதலிலவாயுள்ள,—வன்னபேதங்களே. எ-து. பிர பஞ்சங்களே,—அசத்து என்று. எ-து. இவை நிலையுதலுடைய வல்ல என்று,— காண. எ-து. விவேகித்தறியின்,—உளதாய் நிற்பது. எ-து. அங்ஙனம் நிரால ம்பமாய் விளங்கித் தோன்றுவது,—ஞானசொரூபம் என்றி உணரற்பாற்று. எ-து. பதிஞானத்தின் இயல்பென்று அறியற்பாலதாம். எ-று.

பத்தாஞ் சூத்திரம்.

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறை மையான் அவனிடத்து ஏகனுகி நிற்க என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இவ்விரண்டதிகரணங்களுள்வைத்து இம்முதலதிக ரணத்து,—பரமேசுரன். எ-து. ஞானக்கண்ணுற் காணப்பட்ட அம்முதல்வ ன்,—இவ்வான்மாவாய். எ-து. பெத்தநிலையில் உடனுய்நின்று அறியவும் வேறு காணப்படுமாறின்றி யானே அறிந்தேன் என்னும்படி உயிர்தானேயாய்,—நின் றமுறைமையான். எ-து. ஒற்றுமைப்பட்டு உயிரின்வழிநின்ற முறைமைபோல,— அவனிடத்து ஏகனுகி. எ-து. ஈண்டு உயிர் அம்முதல்வனேடு உடனுய் நின்று அறியினுந் தானென வேறு காணப்படுமாறின்றி அவனேடு ஒற்றுமைப் பட்டு,—நிற்க என்றது. எ-து. நிற்க. எ-று.

இனி இறைபணி வழுவாது நிற்க என்றது.

இ-ள். இறை பணி. எ-து. அம்முதல்வன் அருள்வழி,—வழுவாது நிற்க என்றது. எ-து. சலியாமல் நிலைநிற்க. எ-று.

பதிஞைர்ாஞ்சூத்திரம்.

இனிப் புத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

இ-ள். மறவாது. எ-து. அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும்,—பத்தியினுன். எ-து. அன்பானே,—ஏத்த. எ-து. முதல்வனருள்வழி நின்றுல்,—அவனது சீபாதத்தை.எ-து. அவன்திருவடியாகிய சிவானந்தானுபூதியை,—அணையும். எ-து. தலைப்படும். எ-று.

பன்னிரண்டாஞ்சூத்திரம்.

ஈண்டு ஆணவ மாயை கான்மியமென்னும் மலங்களைக் களைக என்றது.

இ-ள். ஈண்டு. எ-து. இம்மூன்றதிகாரத்துள்வைத்து இம்முதலதிகாரத்து,—ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களை. எ-து. ஆணவம் மாயை கான்மியம் என்று கூறப்படும் மும்மலங்களை,— களைக என்றது. எ-து. நீக்குக. எ-று.

இனிச் சிவபத்தர்களோடிணங்குக என்றது.

இ-ள். சிவபத்தர்களோடு. எ-து. அத்துவித நிலையைக் கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே முதல்வன் அருள்வழிநின்ற சிவன்முத்தர்களோடு,—இணங்குக என்றது. எ-து. நட்புச்செய்க. எ-று.

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்.

இ-ள். அல்லாதார். எ-து. பத்தியினுன் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தை அணையாத பாசத்தார்,—அஞ்ஞானத்தை. எ-து. சுட்டியுணர்வதாகிய விபரீதவுணர்வை,—உணர்த்துவர் ஆகலான். எ-து. அறிவிப்பாராகலான், இனிச் சிவபத்தர்களோடு இணங்குக என மேற்கொண்டது. எ-று.

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக என்றது.

இ-ள். பத்தரது திருவேடத்தையும். எ-து. அயராவன்பினரன்கழல் ஏத்தும் மெய்யன்பரது திருவேடங்களையும்,—சிவாலத்தையும். எ-து. சிவாலயங்களையும்,—பரமேசுரன் எனக் கண்டு. எ-து. முதல்வனெனவே ஐயுறவின்றித் தெளிந்து,—வழிபடுக என்றது. எ-து. வழிபாடுசெய்க. எ-று.

இனி இவ்விடங்களின் வழிபடுக என்றது.

இ-ள். இவ்விடங்களின். எ-து. மேற்கூறிய திருவேடங்கள் சிவாலயங்களிடத்தே,—வழிபடுக என்றது. எ-து. வழிபாடுசெய்க. எ-று.

சுப்பிரமணியதேசிகருரை

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யுண்முதற்குறிப்பகராதி.

முதற்குறிப்பு.	பக்கம்.
அ	
அகாரவுகார	ஈடு
அசத்தறி	ககஎ, உசசு
அஞ்செழுத்தா	உ00, உகஉ
அதுவிது	உடஅ, டஉஅ
அதுவென்	கஉசு, உடுடி
அந்தக்கரண	கூ0
அரக்கொடி	டுகூ
அரவுதன்	எ0
அருக்கனோர்	உஉடு, டகடு
அருவுருவந்	கடுகூ, உசுடி
அருளுண்டா	ககO
அலனவளது	உடி, ச0
அவனேதானே	உ0ச, உகசு
அவையேதானே	டுச
அவ்வினையைச்	சுடி
அவ்வுடலி	அஉ
அறிந்து	அசு
அறியவிரண்	கஉசு, உடுஉ
அறிவிக்க	கஎகூ, உஎச
அன்றன்	எஎ
அன்னியமிலா	கடுடு, உடுக
இ	
இங்குளி	உகடி, டி0ச
இந்துவிற்	உ0க, உகடி
இலயித்த	டஉச, சடு
இலாடத்தே	க0உ
இல்லாமூலை	கஅக, உஎடு
உ	
உணருரு	ககஉ, உசடி
உணர்பவ	கஉச, உடு0
உளதில	எடு
உள்ளதே	சுஉ
உள	
ஊனக்கண்	கஅக, உஅஉ
எ	
எங்குமுள	எஉ
எண்ணிய	கூஉ, உசக
எண்ணில	கசு
எந்தைசன	ஊசஉ, டஉஉ
எவ்வுருவு	கஅசு, உஎக
எனதென்ற	எக
ஏ .	
ஏகீமாய்	உஉஉ, டகஉ
ஐ	
ஐந்தையு	உடீக, டகஉ
ஐம்புல	கசுஉ, உசுஎ
ஐம்பொறியை	க0சு
ஐம்பொறியி	கஅஅ, உஅ0
ஒ	
ஒன்றணையா	க0க
ஒன்றலா	டுக
ஒன்றறிந்த	அ0
ஒன்றென்ற	டுஎ
க	
கட்டுமுறுப்	டுசு
கண்டதை	ககஎ, உஅக
கண்டதொ	உடி, டஉசு
கண்டநன	சுஎ
கண்டறியு	அச
கலியாதி	அஅ
கல்லாணிழ	க, டஅ
கா	
காட்டிய	ககடி, உஅடு
காணுங்கண்	உகடு, டி0எ
சீ	
சதசத்தா	உகச, டி0டு
சா	
சார்ந்தாரை	உகஉ, டி0உ

முதற்குறிப்பு.	பக்கம்.
சி	
சிந்தித்தாய்	ரூச
சிவமென்னு	உசக, ரடக
சிறைசெய்ய	கஅடு, உஎஅ
சு	
சுட்டியுணர்	ககூஎ, உஅஅ
செ	
செம்மலர்	உஉரு, ரடகக
த	
தம்மையுணர்	ரட, ரடரு
தவஞ்செய்	ககுஎ, உசுக
தன்னுணரா	உரடசு, ரடஉடு
தன்னேயறி	உச0, ரடர0
ந	
நித்தெ	உஉஎ, ரடகஎ
நண்ணனல்	உகரட, ரட0டு
நா	
நாடியோ	ககூஉ, உஅச
நாமல்ல	உகக, ரட0க
நானவனெ	உ0எ, உகஅ
நி	
நிர்க்குண	ககூடு, உஅஎ
நெ	
நெல்லிற்குமி	ரூரட
நோ	
நோக்காது	சரூ
ப	
பகித்தண்டு	ககுஅ, உஎ0
பண்ணேயு	டுஅ
பன்னிறங்	கஅரட, உஎஎ

முதற்குறிப்பு.	பக்கம்.
பா	
பாவதுமே	கஉடு, உடுக
பு	
புண்ணிய	உரடக, ரடஉக
பூ	
பூதாதி	ரட்க, சரட
பே	
பேய்த்தேர்	கடுசு, உசு0
பொ	
பொன்வாண்	உஉஅ, ரடகஅ
ம	
மண்முத	உ0உ, உகச
மயக்கமது	ககு0, உகச
மலர்தலை	ரடடு
மறப்பித்து	உரடட, ரடஉட
மனமாதி	ரூரட
மன்னுசிவ	க0அ
மன்னுமிருளே	உஉசு, ரடகசு
மா	
மாயாதனு	ரூஎ
மெ	
மெய்ஞ்ஞானந்தன்	ககுக, உசுடி
மெய்ஞ்ஞானந்தா	கஎஅ, உஎரட
யா	
யாவையுஞ்	கடுக, உடுசு
வி	
வித்துண்டா	சஎ
விளம்பிய	க0ச
வினேயா	உரடக, ரடஉரூ
வெ	
வெய்யோ	கக0

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அரும்பதவகராதி.

பதம்.	பக்கம்.

அ

அகம் - உயிர்.	அஎ
அங்கு - உணர்த்தும் முறைமைத்தானமாகிய இலாடம்.	அஎ
அச்சு - மெய்ப்பொருளாகியசிவம், அது, அச்சுப்போல ஆன்மாவை மலவாசனை பற்றிப் பிறழவிடாமையின் அங்ஙனம் உருவகஞ் செய்யப்பட்டது.	உகஙூ
அடைவு - முறைமை.	கூஉ
அணு - சூக்குமவுடம்பு.	கூக
அண்டன் - முதல்வன்.	உ0க, உகஉ
அதுவே - அப்போதப்போதே. ஈண்டு அடுக்கிக் கூறப்பட்டது.	க0ஙூ
அத்தன் - இறைவன்.	சஎ; சஅ
அநுபவம் - அறிந்தபொருளில்அழுந்துதல்.	கசஅ
அந்ததரம் - நீவிரதரத்திற் நீவிரதரமான சத்திநிபாதம். கஅஅ. சித்தாந்தம். உசஉ	
அந்தம் - நான்காஞ் சத்திநிபாதம். கஅஅ. வேதாந்தம்.	உசஉ
அந்தியம் - வேற்றுமை. கருஞ், கஎஎ, உஙிக	உஎஉ
அயராமை - மறவாமை.	உகஎ, ஙூ0அ
அரசு - அரசன்.	க0சு
அருளுதல் - கருணைமீக்கூர்தல்.	உ
அருள் - ஈண்டுத் திரோதானசத்தி.	க0ருஞ.
இரக்கம்.	ககக
அல்லன் - வேறு.	கூச
அவயவம் - தனித்தனிபிரிக்கப்படுந் தகுதியுடையன.	உக
அவை - தொகுதி.	உஎ, சக, சஎ, ஙுஉ
அறிவு - ஆன்மஞானம்.உருஉ...ஞாதா.உஙிக	
அற்புதம் - குணியம்.	உஅஅ, ககசூ
அன்பு - இச்சைமிகுதி.	உஉசு
அன்றல் - மாறுபடுதல்.	அக
அன்று - அநாதி. ருப0, ருஙி, கூஙூ; சுசு, கூஅ,	ககக

பதம்.	பக்கம்.

ஆ

ஆக்குதல் - படைத்தல்.	ருப0
ஆச்சிரவம் - பொறிவழிச்சேறல், கன்மத் தொடர்ச்சி.	கஉ
ஆணவம் - வியாபகவுயிர் அணுத்தன்மைப் படச்செய்வது.	கூகூ
ஆதி - முதற்கடவுள்.	சப0
ஆநந்தம் - இன்பம்.	ககக
ஆயாது - அறிவதில்லே.	கஎ; கூஅ
ஆயிட்டு - ஆகலான்.	ருகூ
ஆய்தல் - ஆராய்ந்தறிதல். ஆகமிச்சயித்தல். கூறி. நுணுகுதல். கருக, உகஉ, உசூஙூ, ஙூ0ஙூ	
ஆள் - அடிமை.	உ0க, உகஙூ
ஆணமை - நீங்காமை. கஙூறி; ககூக, உஅஅ	
ஆன் - அவ்விடம்.	கசூக
ஆன்மா - வியாபகம், சித்தசித்து.	கூக

இ

இடுதல் - சேர்த்தல்.	கஅஙூ
இட்ட - வைத்த.	உஎசு; உஎஎ
இணங்குதல் - நட்புச்செய்தல்.	உகூஉ, ஙூஉ
இதமித்தல் - இதஞ்செய்தல். இதம்-பற்று.	உகச
இயந்திரம் - சூக்திராப்பாவை.	அஎ; அஅ
இயைதல் - சூழ்இக்கொள்ளுதல்.	கூக
இரண்டு - வேறு. கஉசு,கஉசு,உருப,உருஉ,	உருஙூ
இரித்தல், - கெடுத்தல்.	உஉஅ
இருக்கு - வேதம்.	ருஎ
இலது - சூனியம். அது உள்ளதுமன்று, இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று, வேறுமன்று எனப்படும் பாழ்.	எஎ
இலயித்தது - ஒடுங்கிய உலகம்.	சருஞ
இலிங்கம் - ஆற்றலாற்பொருளே உணர்த்துவது.	கஎ
இழை-நூல். ஈண்டுச்சாத்திரம்.கருக, உசூஙூ	

பதம். பக்கம்.

இன்மை - சூனியம். ககஉ; ககஙூ. விளங் காமைப்பொருட்டு. உஙூ
இன்று - சூனியம். கo அ. அசத்து. உசஎ

ஈ

ஈருதல் - சங்காரப்படுதல். நுஉ

உ

உடங்கு - ஒருங்கு. ஙூக, நுகூ
உடைமை - உடையராந்தன்மை. சு, உஎ
உணர்தல் - பாவித்தல். உஅகூ
உணர்த்தல் - அறிவுறுத்தல். ககஙூ
உணர்வது - அநுபவிப்பது. ஙூகஉ
உண்டி - ஈண்டு விடயங்களினிடமாகவரும் இன்பத்துன்பநுகர்ச்சி. அச
உண்ணுதல்-விடயத்தில்அழுந்துதல். உஉஅ
உண்மை - ஈண்டு விளங்குதல். உஙூஎ
உத்தமன் - முதல்வன். உஅக
உந்துதல் - கூடுதல். உoஉ, உகஙூ
உபதேசி - அறிவிக்க அறியுந்தன்மைத்து. உசுஉ
உயிர்த்தல் - தொழிற்படுதல். அங
உரா - பரந்துதிரிதல். முதனிலை. கஅஇ; ககஙூ
உலகு - உயர்ந்தோர். ககஉ; ககஙூ
உளதாதல் - உற்பத்தி. சுஎ
உளதாய் - உண்மையாய். ஙூக
உளம் - உயிர். சுஅ, கoசு, கoஅ, ககஙூ, களக, ஙூகஎ. ஆன்மபோதம். உoஎ, உகூஅ. ஆன்மா. ஙூoஅ
உளது - கோசரமாவது. உஅஅ
உள்ளுவார் - கருதுவார். ஙூகஙூ
உள்ளம் - உயிர். நுஎ, அநு, கூசு, கூஎ, கoஉ, கஅநு, ககூங, உஉஎ, உஉஅ, உஅநு, ஙூகஅ. சூக்குமவுடம்பு. எo
உற்று - தீண்டி. ககo
உன்னில் - ஆராய்ந்தபின்னர். அo

ஊ

ஊட்டல் - துகர்வித்தல். சூங
ஊனம் - பொதுவியல்பு. உஅக

எ

எண்ணம் - ஈண்டு மானதக்காட்சி. கூசு
எண்ணல் - ஈண்டு அநுபவம். கoக. கருதல். உகூச
எண்ணும் - கணிக்கப்படும். கஅகூ; ககூக, உஅஉ; உஅங

ஏ

ஏய்தல் - பொருந்துதல் கoஉ

பதம். பக்கம்.

ஒ

ஒடுங்கி - ஒடுங்குதற்கு நிலைக்களமான கடவுள். உங
ஒட்டி - ஒட்டிநிற்போன். ஒட்டுதல்-பொருந்துதல். நுஎ
ஒற்றித்தல் . ஒற்றுமைப்படுதல். கoசு

ஓ

ஓசை - இசை. நுஅ; நுகூ
ஓரின் - ஆராயின். நகக

க

கடல் - நீர்க்கு இடங்கொடுத்துநிற்கும் ஆகாயம். ககூக
கட்டு - தொடக்கு. சுகூ
கண் - அறிவு. ககூச, உoஉ. வீசம். உகூச
கண்ணல் - கருதல். ஙூநு
கண்ணு - காட்டாகநிற்ப. கoஅ
கதம் - சீற்றம். உகச, ஙூoசு
கதிர் - ஒளி. உகச
கப்பு - கவர்த்தல். உஉஎ
கழல் - காலணிமணிவடம். கஅஎ, உஅo

கா

காட்டு - காட்டாய கருவிகள். அநு. வியஞ்சகம். உநுஉ
காரணர் - உணர்த்தலைச் செய்யார். உஅச
காண்டல் - ஐயுறவின்றித்தெளிதல். உஉகூ, ஙூஉச
காண்மியம் - கன்மமலம். ஙூஉo, ஙூஉக

கு

குண்டலி - குண்டலித்தானமாகிய நாபி. உoo, உகூஉ
குறை - இன்றியமையாப்பொருள். உஎச

கே

கேட்டல் - பொருளாகக் கேடல். நு

கோ

கோழை - ஐ. ககூங, உஅச

ச

சகம் - நிலவுலகம். கஅo
சகன் - சகத்தினுளனாகிய குரவன். களக
சட்ட - செப்பம். ககஎ, உஅக
சத்து - உள்ளது. கஉக. சத்சாகிய சிவம். கநுக; கநுஉ. நிலையுதலுடையது. ககச
சமவாயம் - அவயவ முதலியவற்றிற்கு அவயவிமுதலியவற்றோடுநீக்கமின்றி உளதாகிய இயைபு. கச. நீக்கமில்லாமை. எக
சமுவரம்-பொறிவழிச்செல்லாது தடுத்து முத்திக்குக்காரணமாவது. கஉ
சம்பவம் - உண்மை. கஅo

பதம்.	பக்கம்.
சலம் - மஞ்சனை. ஈண்டுக்கோட்டம். உக்உ,	ஈ0ஈ
சா	
சாதி - பலபொருட்குப் பொதுவாகிய தன்மை.	கஈ
சி	
சிந்தை - இருதயம். உ0க, உகஈ. அறிவு.	உசஉ
சிறப்பு - அன்பு.	உஈக, ஈஉச
சிறை - தடை.	கஅடி, உஎக
சீ	
சீ - புண்ணீர்.	ககஈ, உஅச
சு	
சுருதி - வேமெறன்றனை அவாவாது தான்க்ருதிய பொருளேத்தானே தெரிவிப்பது.	கஎ
சூ	
சூழ் - சூழ்ச்சி. கசஎ.உபதேசமொழி. உஎச	
சூனியம் - பாழ்.	கடிக; கடிஉ
செ	
செய் - விளைநிலம்	சூஉ
செய்தி - தொழில்.	சூஉ
செய்பவர் - உழவர்.	சூஉ
செவ்விது - வருத்தமின்றி.	அஉ
சே	
சேடம் - யாதொன்று யாதொன்றன் பொருட்டாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடம் எனப்படும்.	உ.உ, ஈ.கஎ
சேடன் - அடிமை.	உ0க, உகஉ
சேட்டித்தல் - செயற்படுதல்.	க0அ
சேர்வை - சேர்க்கை.	உஈச
சை	
சைதன்னியம் - ஆன்மா.	கஎஎ
சோ	
சோகம் - கூம்புதல்.	சூச
ஞா	
ஞாயிறு - பரிதியங்கடவுள்.	ஈடிஞ
த	
தமி - தனிமுதற்பொருள்.	கஉச
தர்ப்பணம் - கண்ணாடி.	எஅ
தலை - இடம்.	ஈடிஞ
தலைவர் - உத்தமர்.	உகஉ
தனி - வேறு.	எஅ
தா	
தாக்காது - விகாரமின்றி.	சகக

பதீம்.	பக்கம்.
தி	
திதி - உள்பொருள்.	சக
திறம் - கூறு.	உஈஈ
திறல் - வெற்றிப்பாடு.	உகச
து	
துணிதல் - அறிதற்பொருட்டு.	கடிஞ
துமிதல் - கெடுதல்.	ஈடிஞ
துரத்தல் - உந்தித்தள்ளுதல்.	உஉசு
துவ்வாமை - அநுபவிக்கமாட்டாமை.	கசஈ0 உசுச
துனை - அதிவேகம். கஅக; ககக,	உஅஉ; உஅங
தெ	
தெரிதல் - நிச்சயித்தல்.	உசுச
தை	
தைவம் - தேவனதுடைமை. ககஎ,	உஎஎ,
உஅக. அடிமை.	உச0; உசக
தொ	
தொகுதல் - அடங்குதல்.	கடிங, உசுஈ
தொழும்பு - அடிமை.	டிஉ
தொன்மையே - அன்றே.	சுச
ந	
நசித்தல் - கெடுதல்.	உஉள
நண்ணல் - புகுதல்.	உகச
நண்ணுதல் - தலைப்படுதல்.	கசஎ
நந்தம் - நிறைதல்.	கசக
நல்லார் - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த முதியோர்.	உ, ஈஅ
நன்னெறி - ஞானம்.	உசக
நா	
நாடி - ஆராய்ந்தறிக.	கஅக; ககக, உஅக; உஅங
நாபி - உந்தி.	க0க
நாதம் - சிவதத்துவம்.	உ0உ, உகச
நி	
நிகழ்தல் - ஐயந்திரிபின்றிவிளங்குதல்.	கசுச, உசக
நிரூபித்தல் - ஆராய்தல்.	கடிசு, உசு0
நீ	
நீக்கம் - பிரிவு.	சடி
நொ	
நொடித்தல் - அழிதீதல்.	டி0
நோ	
நோக்குதல் - காத்தல்.	டி0
நோன்றல் - பொறுத்தல்.	உஉக, ஈகக

பதம். பக்கம்

ப

பசாசம் - இரும்பு. சுஈ, கo்ச; கo்டு

பண் - பண்ணப்படும் கதிகள். உகச

பண்டி - அநாதி. ககஎ; ககஅ, உஅக

பண்ணுதல் - கதிப்பித்தல். ஈடo்டு

பண்பு - உவமைகள். எo

பதி - முதல்வன். கஅக;ககந

பரம் - பரம்பொருள். உடுக

பாவல் - எல்லார்க்கும் புலனுமாறு மிக்கு நிகழ்தல். எo

பவம் - உண்மை. கஅo, உஎச. பிறவி. ஈடசு

பா

பாசத்தார் - பாசக்கட்டுடையார். உடுசு

பாவகம் - மனம்முதலியவற்றோடுகூடி நின்று பாவிப்பது உடுக

பி

பிரகாசம் - சித்து. கூஈ வினங்குதல். ககக, உஈடு, ஈஉடு

பு

புணர்தல் - தலைப்படல். ககஎ

புரிதல் - எப்பொழுதும் மேற்கோடல். டுடு

புறன் - புறச்சமயம்பற்றி இகழ்ந்துரைக்கும்மொழி, புறங்கூற்றுமொழி. டு, ங க

பூனதல் - அடங்கிநிற்றல். உ, ஈடஅ

பெ

பெயர்த்து - மாறி. ககo, உசுச

பெற்றிமை - ஈண்டுச் சாதி. ஈடக, சஈட

பே

பேதை - மடவோன். சஈ., கடுஎ, உசo; உசுந

பேராமல் - பிறழாமல். சுஈட

பொ

பொய் - பொதுவியல்பு. கடுச,கஅ டு; கஅச ககஎ.செயற்கைச்சுட்டுணர்வு. உடுஅ, உஅக

பொற்பு - பொலிவு. உஉஉ, ஈகஉ; ஈடகஈட

போ

போக்கு - இறத்தல். டுசா

ம

மயர்வு - மயக்கவாசனை. ஈடசு

பதம். பக்கம்.

மனம் - பசுஞானம். கஉக

மன்ற - தேற்றப்பொருட்டாகிய இடைச்சொல். கo்க

மா

மாணுமை - வியாபகவுணர்விற்கு விடயமாகாவை. உடுக

மாறுதல் - இறத்தல். சுசு

மான் - பெரியோன். உசo; உசக

மீ

மீன் - நாண்மீன். ஈகடு.

மு

முன் - அறிவாயாக. உஎஈ

மெ

மெய் - ஈண்டு உயிர். கஉசு, உடுஉ சிறப்பியல்பு. கடுச,கஅ டு; கஅச, உஎஎ. இயற்கைஉணர்வு. உடுஅ

வ

வகை - கூறுபாடு. ககஉ

வரம் - ஞேயம். உ உ அ

வரவு - பிறத்தல். டுச

வல்லி - மாயை. சுச

வன்னம் - நிறம். கஅஈ, ககச

வா

வாக்கியம் - சுருதியும் ஒலிங்கமுமின்றிச் சொற்றொடர்புபற்றிப பொருளுணர்வு ருவது. கஎ

வாக்கு - வாக்காகிய நாதமுமுடிவான பாசஞானம். கஉக

வாய்த்தல் - கிடைத்தல். கடுசு; கடுஎ

வி

விசேடம் - ஒருபொருட்கே உரியதன்மை. கஈ

விண் - துறக்கம். சுஅ

வித்தகம் - விசித்திரம். சக

விளக்கு - காட்டு. கூஎ; கஅ

விஷோயாது - உளதாதலின்றி. உசுடு

வினைமை - வினையுடைமை. சக

வீ

வீயாத - கேடில்லாத. கஅ

வே

வேறு - மாறு. எo. அந்தியம். அo

அருந்தொடரகராதி.

பதம். பக்கம்.

அ

அகண்டம் - முழுவதும். உஙஅ
அசத்தாதல் - இலதாதல். உசுடு
அசத்து - அசத்தாகிய பாசம். கடுஉ, உசுச
அசத்தாகியபிரபஞ்சம். கசுஏ. நிலையுத
விலதாயது.ஙகசை. வேறு. ககஙை. பொய்
உசுக
அஞ்ஞானம் - அவிச்சை. கஎஅ, உஎசை.
விபரீதவுணர்வு. உஙங, ஙஉஏ. மயக்கம்.
உசுடு. சுட்டுணர்வு. உசுஉ
அத்துவிதம் - வேற்றுமையின்மை. டுங
அது விது வாதற்குளதாகியசம்பந்தவி
சேடம் உணர்த்துதல். கசடு
அத்துவிதி - அத்துவித சித்தாந்தத்தைப்
பெற்றுடையோய். இதுவிளி. உங்அ
அத்துறைகள் - அவ்வவ்விடயங்கள். கஏங
அநாதிமுத்தத்தன்மை - அநாதியே மலத்
தின் நீங்குதல். அஃது இறைவன் எண்
ணுங்களுள் ஒன்று. ஙஙு
அநிர்வசனம் - சொல்லொணாத தென்னும்
பொருட்டு. ஙசு
அநேகம் - வேறு. எஉ
அந்நியநாத்தி - வேறன்மை. டுசு
அந்நியமின்மை - அத்துவிதம். உசுஅ,உஉடு
அந்நியயோகவியவச்சேதம் - பிறிதினியை
புநீக்குதல். எக
அப்பிரகாசம் - அசித்து. கூங, விளக்கமின்
மை. ஙகஙு, கடுசை. வெளிப்படாமை.
உசுடு. பிரகாசமின்மை. உடுஅ
அயோகவியவச்சேதம் - இயைபின்மைநீக்
குதல். எக
அருட்கண் - ஞானக்கண். ஙகக
அருத்தநூல் - பொருளோ ஈட்டும் உபாயம்
உணர்விக்கும் நூல். ஙஉ
அருந்துயர் - பொறுத்தற்கரியதுயரம். ஙடு
அரூபசொரூபம் - அருவுடம்பு. கஙஏ
அல்லிருள் - மாலையிருட்டி. உஉடு.திணிந்த
இருள். ஙஉசு
அறிந்தாங்கறிதல் - மறந்துமறந்து அறிதலி
ன்றி அறிந்தபடியே அறிதல். அசு

ஆ

ஆதிதைவிகம் - ஒருவாயிலானன்றித் தெய்
வந்தானே காரணமாகவருவது. கசு

பதம். பக்கம்.

ஆதிபௌதிகம்-சடம்வாயிலாகவருவது. கசு
ஆத்தியான்மிகம் - சடத்தோடு கூடியசேத
னம் வாயிலாகவருவது. சுசு
ஆயுள்வேதம் - எல்லாமதுட்டித்தற்குச் சா
தனமான யாக்கையை நோயின்றி நிலை
பெறச் செய்வது. ஙக

இ

இதஞ்செய்தல் - பற்றுச்செய்தல். ஙஏசு
இருதிறன் - இரண்டுகூறுபாடு. ககங
இல்லாவரு - புலப்படாத அருவம். உஎடு

உ

உணரக்காணல் - விளங்கி அறிதல். சக
உளதாகச்சுட்டப்படுதல் - நிரிவையங்களா
னன்றி மெய்யாகச்சுட்டப்படுதல். சஉ

உள

உளனக்கண் - பசுவறிவு. ககக, உஅங

எ

எண்ணியறிதல் - ஆராய்ந்தறிதல். கஉஉ

ஏ

ஏகனுகி - ஒற்றுமைப்பட்டு. உகசு

க

கண்டுணர்தல் - ஆராய்ந்துஅறிதல். கடுசு;
கடுஎ, உசுக

கு

குறியீடு - காரணத்தான் வரும் பெயர். கஎ

ச

சத்தாகாய் - சத்தியுடையாயல்லை. உசுசை
சன்மார்க்கம் - நன்னெறி. உகக

சி

சிவன்தாள் - சிவனருள். கஉங, உசகூ,
உகசை

ஞா

ஞானக்கண் - திருவடிஞானம்.உஅஉ;உஅங

த

தற்பரம் - ஆன்மாவுக்கு அதீதமாகிய சிவம்.
எஅ, உஅஅ

து

துரியநிலை - அருணிலை. உகசு

ந

நற்சார்பு-நல்வினம். கசுஎ.உயர்குலம். உஎ0

பதம்.	பக்கம்.
நி	
நிர்க்குணன் முக்குணங்களுள் ஒன்றுக அறியப்படாதவன். ககூடு; ககசு, உ அ	
நின்மலன் - மலகன்ம மில்லாதவன். ககூடு; ககசு, உ அ	
நீ	
நீக்கமின்றிநிற்றல் - சமவேதமாய்நிற்றல்.	எக
பா	
பாசஞானம் - பாசம்வாயிலாக ஆன்மாவின் கண் நிகழும்ஞானம்.	உசுஎ
பாடிகாவல் - கிழகணவான் ஒருவனைக் கொண்டு வேந்தன் செய்விப்பதொரு தண்டத்தொழில் விதேடம்.	சுஉ
பாவனாதீதம் : பாவனையைக்கடந்து.	உடுக

பதம்.	பக்கம்.
பி	
பிரகாசிக்கவேண்டுவது - அறியப்படவேண்டியது.	கஉஉ
பு	
புலனுணர்வு - கருவிகளாலுயபாசஞானம்.	உஎக
மெ	
மெய்கண்டான் - சந்தினியல்பை அறிந்தோன்.	கஉஉ, உசசு, உசக
மெய்ஞ்ஞானம் - மெய்ஞ்ஞானமாகிய சிவசத்து.ககசு.வீடுபயக்கும்.உணர்வு.கஎஅ. சிவம்.	உசுடு
மெய்ப்பொருள் - சத்தாயுள்ளசிவம்.	ஙுஎச
வ	
வசமாதல் - பற்றிவிடாமை.	உஉஎ
வன்னபேதம் - சித்திரபேதம்.	ககச

இவை இந்நூலிற்கண்டவை.

அரும்பதவகராதி.

பதம்.	பக்கம்.
அ	
அகம் - மனம். ஙூசு. உள்.	அஉ
அகங்காரம் - ஒரு தத்துவம்.	கூ0
அங்கி - அங்கமுடையது. அங்கம் - அவயவம். கடு. அக்கினி.	உ0க
அங்குரம் - மூளே.	ஞள
அச்சு - உடம்பு.	சுஎ
அஞ்சனம் - இருளாயிருப்பது.	கூக
அடங்குதல் - உள்ளமைதல்.	ஙூஅ
அடாது - கூடாது.	சடு
அடிப்பாடு - அமைவு.	கஎசூ
அடுக்க - சமீபமாக	கூ0
அடப்படுதல் - சமைக்கப்படுதல்.	கஎஅ
அணை - வரம்பு.	கஅீடு
அதிகம் - மிகுதி.	கஉசு
அதிகரணம் - நிலைக்களம்.	சஉ
அதிகாரம் - தலைமைப்பாடு.	கஉக
அதிகாரி - கேட்டற்கேற்றபக்குவமுடையோன். சம்பந்தமுடையோன், கேட்போன்.	ஙூஎ
அதீதம் - துரியாதீதாவத்தை.	அஎ
அத்துவா - வழி, அவையந்நிராத்துவாமுதலியன.	சுடு

பதம்.	பக்கம்.
அநர்த்தம் - கேடு.	உஙூச
அநாதி - தொடக்கமில்லாதது.	சுசு
அநுகூலம் - இணக்கம்.	கஎச
அநுக்கிரகம் - அருள்.	சுஉ
அநுபவம் - அதுபூதி. ஙுக. புசிப்பு.	கசக
அநுபூதி - பிறபொருளின் துணையின்றி இயற்கையால் எல்லாவற்றையும் அளந்தறியுமறிவு.	ஙூசு
அந்தகாரம் - இருள்.	உகச
அந்தரம் - ஆகாயம்.	உ0க
அபகரித்தல் - கவர்தல்.	கஙூக
அபாவம் - இன்மை.	ககடு
அபேதம் - பேதமின்மை.	ஙுடு
அப்பிரமேயம் - அளவையானளக்கப்படாதது.	கஙூஉ
அமைச்சு - அமைச்சன்.	க0ச
அமைச்சர் - மந்திரிகள்.	கூ0
அமைதல் - இருத்தல்.	உகஅ
அமையும் - போதும்.	ஙுஉ
அமையாமை - பூரணமாகாமை.	உஉசு
அரக்கு - மெழுகு.	ஙுக
அரு - சூக்குமம்.	உ0

பதம். பக்கம்.

அவசிததாந்தம் - தோல்வித்தானங்களுள் ஒன்று. அது தன் சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளைச் சொல்லிச் சித்தாந்தந் தாபித்தல். ககள
அவதரம் - அவகாசம். உ0
அவதரித்தல் - பிறத்தல். ஙஉ
அவத்திதன் - அவத்தையுற்றவன். க00
அவயவி - அவயவமுடையது. ககஙி
அவீச்சை - அஞ்ஞான்ம், ஆணவம். ஙிஉ
அவித்தை - அஞ்ஞானஞ்செய்வது. ஙஙு
அழுந்துதல் - அமிழ்ந்துதல். ஙஙு. நன்முய்ப்பதிதல். கஙிஅ
அளவை - பிரமாணம், அளத்தற்கருவி. ஙடை, ஙகள
அற்று - அவ்வியல்பிற்று. சஙட
அன்மை - உடைமைக்குமறுதலே. ஙிசு
அன்னர் - அத்தன்மையினர். சக

ஆ

ஆக்கியோன் - செய்தோன். ஙடை
ஆசங்கை - வினு. ஙடு
ஆசங்கித்தல் - ஆட்சேபித்தல். சஙட
ஆசரித்தல் - அனுட்டித்தல். சு
ஆசாரம் - ஒழுக்கம். க
ஆணை - கட்டளை. சக
ஆதி - தொடக்கமுடையது. சுச
ஆமா - காட்டுப்பசு. உஙள
ஆரவாரம் - வெற்பொலி. கஉ.ங
ஆராய்ச்சி - விசாரித்தல். ஙடு
ஆயுள் - வயசு. சுசு
ஆவிருதி - ஆன்மாவினறிவிச்சை செயல் களே யறைபடுவது. ஙஙு
ஆவேசித்தல் - வெளிப்படுதல். உக
ஆளுதல் - ஆட்சிசெய்தல். க0சு
ஆற்றல் - சொற்குப்பொருளோடொதாகிய சம்பந்தம். அச
ஆனந்தரீயம் - இவையாய்த்தபின் இதுகேட்கற்பாற்றென்னும் யாப்பு. ஙடை
ஆன்றோர் - பெரியோர். கசு

இ

இகலல் - பகைத்தல். ஙஅ
இகல் - மூரண். க
இடர்ப்படுத்தல் - ஆற்றலைக்குறைத்தல். கஉஙு
இடுதல் - வைத்தல், கொடுத்தல். ஙடு
இதழ் - தளம். உ0உ
இந்திரியம் - பொறி. அக
இப்பி - சிப்பி. உ0ஙி
இயங்கல் - தொழிற்படுதல். அச
இயல்பு - இயற்கை. சச

பதம். பக்கம்.

இயற்கை - இயல்பாயுள்ளது. ஙிஉ. இயல்பு, தன்மை. கஙிசு
இருதயம் - நெஞ்சு. க0க
இலக்கு - அவகாசம். உஙிஙி
இலாடம் - நெற்றி. க0க
இழுக்கு - குற்றம். கஙிக
இறுதி - சங்காரம். சக
இறுவாய் - இறுதி. உ
இறை - விடை. உசசு
இறைவன் - தலைவன். சகு
இன்மை - உண்மைக்கு மறுதலை. ஙிசு

ஈ

ஈண்டு - இவ்வையப்பாட்டின்கண். உஅ

உ

உச்சரித்தல் - உச்சாரணஞ்செய்தல். ஙஙி
உடையான் - பொருளேத்தண்டாகக்கொண்டிருப்பவன். உடையரீனை வடநூலார் சுவாமி வென்பர். கூ, ஙஙு
உண்மை - உளதாந்தன்மை. சஉ. சிறப்பு. உஙி
உதவி - உபகாரம். க0ச
உதாரணம் - எடுத்துக்காட்டு. சகு
உத்தியுத்தன் - விந்துவின் காரியங்களில் முயன்றவன். உஙி
உத்தேசம் - பெயர்மாதநிரையான் எடுத்தோதுதல். ஙிஙி
உபகரித்தல் - உதவுதல். உஙஅ
உபதேசம் - போதித்தல். அசு
உபாயம் - கிட்டியவழி. கஉஅ
உயிர்த்தல் - சுவாசித்தல். அங
உரிமை - சம்பந்தம். கஙஙி
உவமேயம் - உவமானத்தால் வருணிக்கப்படுவது, புகழ்பொருள். ஙசு
உவர்ப்பு - வெறுப்பு. உக
உழப்பு - முயற்சி. கஙிக
உறவு - நட்பு. உஙிங
உற்பத்தி - தோற்றம். சஙி
உன்மத்தர் - சித்தமயங்கமுடையோர். உக

ஊ

ஊறு - பரிசம். கஙி

எ

எதிரது - வருவது. உகக
எய்தல் - அடைதல். ஙஙி
எழுப்புதல் - பிரகாசிப்பித்தல். உக

ஏ

ஏகாரம் - முதலேயே என்புழி மற்றையமுதல்வரிலே இயையாது பிரித்ததும், சங்காரகாரணஞ்சுய முதலிலே இயை

பதம்.	பக்கம்.
யாமையைப் பிரித்தலும் அறிக. இயை பின்மைநீக்குதல்-இயைவித்தல். பிறிதி னியையு - மற்றொன்றிற் போய்ப்பொ ருந்துதல். சங்கற்ப நிராகரணத்திலே "தாமே யெனுமித் தனியேகாரம்" என் பதுமது.	சஂ0
ஏது - காரணம்.	ஈசு
ஏலாமை - இயையாமை.	சஈ
ஐ	
ஐயப்பாடு - துணிவுபிறவாமை, சந்தேகம்.	சஉ
ஒ	
ஒடுங்கல் - மறைதல்.	சரு
ஒருங்கு - ஒருசேர.	சங
ஒருதலை - நிச்சயம்.	ஈடு
ஒருவுதல் - நீங்குதல்.	ககச
ஒற்றுமை - இயைபு.	அக
ஓ	
ஓத்து - ஓதப்பட்டவிதி.	ஙஂஈ
ஓமித்தல் - ஓமஞ்செய்தல்.	உகஉ
க	
கஞ்சுகம் - சட்டை.	கூ0
கடா - விஞ.	சக
கடைப்பிடித்தல் - உறுதியாகக் கொள்ளு தல்.	கஅஎ, உஈ.ஈ.
கணித்தல் - மானதமாகச்செபித்தல்.	ககக
கண்கூடு - பிரத்தியக்கம்.	அஎ
கண்டுவைத்தும் - கண்டும்.	சங
கண்ணன் - கண்ணபிரான்.	கூ0
கண்படை - உறக்கம்	அஙி
கதி - பிறப்பு.	சுஅ
கந்தித்தல் - நாறுதல்.	உகஙி
கம்பம் - தூண்.	கஎச
கரணம் - மனம்முதலியகருவி.	ஈசு, ஙி0
கரு - கருப்பம்.	சுஅ
கருத்தா - செய்பவன்.	சச
கருத்து - தாற்பரியம், கருதப்பட்டது.	ஈ.சு
கலக்குதல் - கலங்கச்செய்தல், குழப்புதல்.	உகூ
கலப்பு - கலந்திருத்தல்.	ஙிச
கலை - ஒருதத்துவம்.	உகூ
கழப்பு - மடி.	கஙிக
கழிப்பித்தல் - நீங்கல். இதுதன்வினை.	ஈ.சு
களிம்பு - செம்புமுதலியவற்றில் இருக்கும் காளிதம்.	கூஎ
கவ்வுகண் - ஆதாரம், பற்றுக்கோடு.	ஈ0ஈ
கனல் - அக்கினி.	உ0க
கனவு - சொப்பனம்.	சுஅ
கா	
காட்சி - பார்வை.	ஈடு
காட்டம் - விறகு.	கூஅ
காட்டிற்றை - காட்டினதை.	கதச
காட்டு - காண்பிப்பது.	கூஅ
காமிகம் - சைவாகமம் இருபத்தெட்டுள் ஒன்று.	க
காமுகர் - காமமுடையவர்.	உஈடு
கி	
கிரந்தி - முடிச்சு.	உ0உ
கிரியை - கிரியாசத்தி.	உக
கீ	
கீதை - பகவற்கீதை.	கூ0
கு	
குணம் - பண்பு.	கஈ
குணி - குணமுடையது.	கசடு
குரம்பை - கூடு.	ஈ.டு
குறி - இலிங்கம்.	உ0க
கூ	
கூட்டரவு - கூட்டம்.	எ
கூவல் - கிணறு.	அ
கே	
கேசரம் - தாமரைப் பொருட்டின்புறத்தே தொங்குமவை.	உ0உ
கேட்டல் - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது குருமுகமாக ஆகமப்பொ ருள்களைச் செவிமடுத்தல்.	ஈஎ
கேவலம் - ஆன்மா அறிவு செயல் குறி குணம் ஒன்றுமின்றித் தனியே ஆணவ மலத்தான் மறைந்து நிற்கு நிலை.	ஙிச
கை	
கைக்கொள்ளுதல் - அங்கீகரித்தல்.	ஈ
கொ	
கொத்து - கூட்டம்.	உ0உ
கோ	
கோடல் - கொள்ளுதல்.	எக
கோடும் - கொள்ளுதும். கொள் என்னும் பகுதி முதனீண்டு தும்என்னும் தன்மை ப்பன்மை விகுதியோடு சேர்ந்துகோடும் எனமுடிந்தது.	ஙி0
கோட்டம் - ஒருபாற்சாய்தல். அது அநீதி.	ஈ0ஈ
கோல் - ஈண்டுத் தீக்கடைகோல்.	உ0க
ச	
சகலம் - ஆன்மாச்சரீரம் முதலியவற்றைப் பெற்று நிற்கும் நிலை.	உஙிச
சங்கற்பித்தல் - எண்ணுதல்.	சக

பதம். பக்கம்.

சங்கமம் - இயங்கியற்பொருள். கஉ
சங்கிரமித்தல் - கலத்தல். கடு
சங்கேதம் - சொற்கும் பொருட்கும் உள தாகிய நியமவாற்றல். அ
சங்கை - சந்தேகம். கஉச
சடிதி - சீக்கிரம். ககக
சதுரப்பாடு - சாமர்த்தியம். சஅ
சத்தன் - விந்துவின்காரியங்களை ஒடுக்கியிருப்பவன். உடு
சந்நிதி - முன்னிலை. கக
சமயம் - மார்க்கம். கஉ
சமவாயம் - ஒற்றுமை. கஉ
சமூதாயம் - கூட்டம். அஅ

சா

சாக்கிரம் - சாக்கிராவத்தை. க, அக
சாங்கியர் - கபிலமுனிவராற் செய்யப்பட்ட சாங்கியநூலை அநுசரிப்போர். சச
சாதகம் - கருவி. கஉஉ
சாதனம் - தொழிலைப்பயப்பிக்கும் முக்கிய காரணம், முடிப்பது. உஎ
சாதி - ஒருநிகரனவாகிய பலபொருளுக்குள்ளபொதுவாந்தன்மை. கஉ. குலம். ஈசு
சாதித்தல் - சாதனத்தால் நிறுத்துதல். சு, எஅ
சார்தல் - அடைதல். உகஉ
சூர்பு - ஆதாரம். சஅ
சாலுதல் - அமைதல். டுக
சான்று - சாட்சி. கசக

சி

சித்தம் - அந்தக்காரணங்களுள் ஒன்று. கo
சித்து - அறிவுடைப் பொருள். கூஉ
சிந்தித்தல் - உண்மைஞானம் நான்களுள் ஒன்று. அது குருமுகமாகக்கேட்டபொருளை மனனஞ்செய்து தோஷம் நீங்குமாறு ஆராய்தல். உ.எ
சிறுமைப்படுதல் - கீழ்மைப்படுதல். கஉஅ

சு

சுதந்திரம் - தன்வயமுடைமை. சக
சுத்தம் - இருவினைஒப்பு மலபரிபாகம்பெற்றசிவனடியடைந்துநிற்கும்நிலை. உடுச
சுழுத்தி - அந்தக்காரணங்களுள்ளே சித்தமாத்திரத்தோடு கூடிய நித்திராவத்தை. அட

சூ

சூக்குமம் - நுண்மை. உoஎ

செ

செயற்கை-இடையிலேதோன்றியது. டுஉ
செய்வோர் - வினைநிகழ்த்துவோர். சச
செல்லாது - சித்தியாது. சச

சே

சேடம் - குறை. சுஅ
சேய்மை - தூரம். கஅசு
சேற்றல் - செல்லுதல். சுடு

சை

சைதன்னியம் - அறிவு. எச

சோ

சோதகம் - எவ்வது. கடு
சோதிட்டோமம் - ஓர்யாகம். கடு

த

தண்டம் - ஒறுத்தல் கஉo
தத்துவம் - உள்ளது. உச
தருக்கம் - புத்தியினுல்சாதிக்கப்படும் ஆராய்ச்சி. சு
தரும - தருமமுடையது. தருமம் பண்பு. எஉ
தலைப்படுதல் - கூடுதல். கoஉ
தலைமைப்பாடு - மேம்பாடு, முதன்மை. சு
தன்மை - சொரூபம். கடுள

தா

தாங்குதல் - உறுத்தல். உகo
தாரகம் - தாங்குவது. கஅடு
தாரை - கெடுஞ்சிப்பொருளின்கணுள்ள இடையறாவொழுக்கு. கச
தார்க்கிகர் - தர்க்கநூற் கொள்கை யுடையோர், தர்க்கசம்பந்த முடையோர். சு
தாவரம் - நிலையியற்பொருள். கஉ.டு
தாற்பரியம் - சொல்லவிரும்பியகருத்து. டுள

தி

தியானம் - நினைவு. கஉடு
திரவியம் - பொருள். கஉ
திரிவு - வேறுபாடு. அச
திருவருள்-ஈண்டுத் திரோதானசத்தி. கoடு
திவ்வியம் - தெய்வத்தன்மை. உoஉ
நிறம் - வகை. சுஎ

தீ

தீக்கை - ஒருநற்கிரியை. அது பாசத்தைக் கெடுத்து மோக்ஷத்தைக் கொடுப்பது. தீ - கொடுத்தல். க்ஷா - கெடுத்தல். சுஎ

து

துணை - அளவு. சக
துரத்தல் - ஓட்டுதல் உகஉ
தூரியம் - இருவகைக்கருவிகளின் பிரவிருத்தியின்றி யிருக்கும் அறிவுநிலை. அஉ
தூலை - தராசு. கசுஅ
தூழனி - ஆரவாரம். களச

பதம். பக்கம்.

துறக்கம் - சுவர்க்கம். ஏO
துன்னல் - செறிதல். ஙடு

தூ

தூலம் - பெரியது. டுஉ

தெ

தெரித்தல் - அறிவித்தல். கசக
தெருளுதல் - தெளிதல். ககஅ
தெளிதல் - உண்மை ஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டபின் ஆராய்ந்து இதுவேகொள்ளற்பாலதென்று நிச்சயித்தல். ஙஎ

தை

தைவரல் - தடவுதல். ச

தொ

தொடுதல் - தோண்டுதல். கச

தோ

தோற்றப்பட்டது - உண்டாக்கப்பட்டது. சங
தோற்றம் - தோன்றுதல். சக

ந

நசித்தல் - நாசமடைதல். ஙச
நட்டோர் - நண்பர். உOநி
நயம் - பயன், நியாயம். ஙஅ, கசஉ
நவிதல் - வருந்தல். கஉக
நல்கூர்தல் - வறுமையடைதல். அ
நள் - நடு. உகச
நனவு - சாக்கிரம், விழிப்பு. சுஅ

நா

நாத்திகர் - கடவுளும் சுவர்க்கநரகங்களும், மறுபிறப்பும், இல்லையென்பவர். சு
நாபி - கொப்பூழ். உOஉ
நாளம் - தண்டு உOஉ

நி

நிகழ்ச்சி - உண்டாதல். உங்உ
நீகழ்தல் - உண்டாதல். ஙடு. நடத்தல். சஙட
நிடதம் - ஒருமலை. ககஙடு
நிட்டை - உண்மைஞானம் நான்கனுள் ஒன்று. அது கேட்டுச் சிந்தித்துத்துணிந்த பொருளுடன் பிரிவின்றி உறுதியாய் கலிற்றல். ஙள
நித்தம் - நித்தியம். எ
நிமித்தம் - காரணம். ஙசுசு
நியமம் - நிச்சயம். ஙஉச
நியாயம் - முறை. கசஙட
நிரயம் - நரகம் ஏO
நிலை - ஆச்சிரமம். ஙங.. நிற்றல். சக

நீ

நீதி - நடத்துவது. உO

பதம். பக்கம்.

நு

நுகர்தல் - அநுபவித்தல். கூஉ
நுட்பம் - நுண்மை. கO ஙக
நுணுகல் - சிறுத்தல். எஅ
நுதலல் - கருதல். ஙடு
நுழைதல் - பிரவேசித்தல். உஙக

நே

நேர் - ஒப்பு. சுகுஅ

ப

பங்கம் - துணிபொருளிருக்குமிடம். ககசு
பக்குவம் - பருவம், முதிர்ச்சி. கஅO
பசுத்தன்மை - பசுவின் தன்மை. பசு - பாசக் கட்டுடையது. பச் - கட்டு. கூங, கஉடு
பஞ்ச - ஐந்து. ஜO
படர்தல் - பரத்தல். கூங
படலம் - காசபடலம். கூங
படிகம் - பளிங்கு. டுஉ
பணி - தொண்டு. கஏO
பதி - ஊர், இடம். கங
பந்தம் - கட்டு. கசக
பயப்பித்தல் - பெறுவித்தல். ஙடு
பயன் - பேறு. ஙள
பயிலல் - கற்றல். கசள
பயிற்சி - பழங்கம், வாசனை, அழுத்தம். ஙடு, கஅஅ, உஅஉ
பரிகரித்தல் - கோதல். ஙஉஉ
பரிசம் - தீண்டுதல். ஙஉக
பரிசனம் - பரிவாரம். கூங
பரிணமம் - இயற்கையினின்றுந் திரிதல் உக
பரிதல் - இரங்கல். உங்ங
பரிபவம் - அவமானம். கசகூ
பரிபாகம் - உத்தமமானபக்குவம். சசு
பரியாயம் - ஒத்தபொருளுடையது. டுசா
பல்குதல் - பெருகுதல், விரிதல். சசா

பா

பாகதம் - பிராகிருதச்சொல். உஅகூ
பாகம் - பக்குவம். கஅஉ
பாகுபாடு - பிரிவு. கூங
பாடம் - படிக்கப்பட்டசுலோகம். உங
பாடியம் - உரை. கசு
பாவகம் - எண்ணம். உஅக. பாவனை என் பதும் அது. கஉடு
பாவம் - உண்மை. ககள
பாழ் - சூனியம். கூ

பி

பிணங்கல் - மாறுபடுதல். டு

பதம். பக்கம்.

பிணிப்புண்ணுதல் - கட்டுண்ணுதல் ஒரு சொன்னீர்மைத்து. ஈ஧0
பித்தி - சுவர். ஈஈச
பிரபஞ்சம் - உலகம். விஸ்தாரமுடையது என்னும் பொருளது. உயிரும் பாசமும் மேபிரபஞ்சம் எனப்படும். ச2உ
பிரமிதி - அளவையாலுணர்ந்த மெய்புணர்வு. ஈ஧அ
பிரயோகம் - வழங்கும் முறை. ஈள
பிரயோசனம் - பயன். ஈ2ள
பிரவிருத்தன் - விந்துவின்காரியங்களைத் தொடங்கினவன். உடு
பிராமாணியம் - பிரமாணமுளதாந்தன்மை. சு
பிறழ்தல் - மாறுபடுதல். ச஧அ

பீ

பீசம் - வித்து. உ0உ

பு

புத்தி - ஒருதத்துவம். அஃதாவது இது இன்னதென நிச்சயித்தறிவது ஈ0. போகம். ஈ2உசு
புலப்படுத்தல் - அறிவித்தல். ஈ஧ள
புவனம் - உடம்புகளு ஆதாரமாகியவுலகம். ஈ2சு
புறம் - புறம்பு. அ2
புறம்பு - வெளி. உ஫0
புறன் - புறம்பு கடு2உ
பூங்குழாய்கோடல் - சூடுதல். ஒருசொன்னீர்மைத்து ஈ2சு

பூ

பூரித்தல் - நிறைத்தல். ஈ஧

பெ

பெறுதல் - அடைதல். ச ஈ2
பெற்றி - தன்மை. ஈ ஈ2உ

பே

பேதம் - வேறுபாடு டுடு

பொ

பொருட்டு - காய் உ0உ
பொய்கை - குளம். அ
பொருள் - உ வமேயம். சுஅ
பொறி - இந்திரியம். டுள

போ

போகம் - அநுபவம். சுசு
போதல் - வருதல். ஈ டு
போதரும் - புலப்படும். ஈ2ள
போதித்தல் - அறிவித்தல். ஈ
போது - புட்பம். சு0
போந்தது - வந்தது. கஈ0

பதம். பக்கம்.

போழ்தல் - பிளத்தல். உ஧

பௌ

பௌதிகம் - பிருதிவிமுதலிய பூதசம்பந்தமுடையது. ஈஉச

ம

மகவு - பிள்ளை. ஈசஈ
மடக்கி - திருப்பி. உ0ஈ
மடங்குதல் - முனைத்தெழாமை. ஈஈடு
மடவோன் - அறியாமையுடையோன். சஈ
மணத்தல் - சேர்தல். அ
மதம் - கொள்கை, உடன்பட்டது. சு
மதுகை - வலி. அ, ஈ0உ
மந்திரம் - நினைப்பவனைக் காப்பது. மன்-நினைத்தல். திர-காத்தல். ஈஈ2டு
மயக்கம் - தெளிவுபிறவாமை அ2
மலம் - அழுக்கு. ஈஈ
மலையற்க - மயங்கற்க. ஈச2சு
மறுதலை - எதிர். டுசு
மறைபுண்ணுதல் - மறைக்கப்படுதல். ஈஈடு
மனம்-ஒருதத்துவம். அஃது, ஒன்றை இஃது இன்னதாகப் பாற்றென்று சங்கற்ப விகற்பஞ் செய்தறிவது. ஈ0

மா

மாசு - அழுக்கு. கடஉ, காசபடலம். ஈ஧சு
மாட்டாமை - இயலாமை. ஈஈ
மாந்திரிகன் - மந்திரவாதி. உஈள
மாயேயம் - மாயாகாரியமாகிய தநுமுதலாயின. தநு - உடம்பு. உஈள
மாறு - முரண். உஈள

மி

மிகுதிப்பாடு - அதிகம். ஏஈ
மிகை - வேண்டுமளவின் மிகுதிப்பாடு. டுஉ, ஈ஧அ
மிக்கு - அதிகம். ஈ2ச0
மிச்சிரம் - கலந்தது. சுசு
மிருதி - முனிவரால் நினைத்துச்செய்யப்பட்ட தருமசாத்திரம். ஈசு
மிருத்யு - மரணத்தைச்செய்வது. ஈஈ

மீ

மீட்டல் - மீளுதல். ஏ0
மீமாஞ்சகா - மீமாஞ்சை என்னும் நூற்கொள்கை அநுசரிப்போர். ச2உ

மு

முகத்தல் - அள்ளுதல். உஈ
முத்தர் - மலம்நீங்கினவர். உ2டு
முரணுதல் - மாறுபடுதல். ஈ஧சு

பதம்.	பக்கம்.
முழங்குதல் - ஆரவாரித்தல், எடுத்துக்கூறல்.	கசஉ
முறுகுதல் - நன்குமுதிர்தல்.	உகஉ
மூனைத்தல் - முற்படுதல்.	உகo
மூ	
மூர்ச்சை - மயக்கத்தைச்செய்வது, அறிவைமயக்குவது.	கக
மெ	
மெத்தென - மிருதுவாக.	கoஉ
மோ	
மோகினி - அசுத்தமாயாதத்துவம்.	எ
யா	
யாத்தல் - கட்டுதல்.	கரு
யாப்பு - இந்நூல் கேட்டபின் இந்நூல் கேட்கற்பாற் றென்னுமியையு.	ஙஎ
யாப்புறுத்தல் - வலியாக்கல்.	சரு
வ	
வசீகரித்தல் - வசப்படுத்தல்.	உகரு
வரம்பு - எல்லை.	எஅ
வருக்கம் - ஓரினமானகூட்டம்.	ங-
வருணம் - சாதி.	ங ஙஉ
வல்லுதல் - வலிமையுடைத்தாதல்.	கஎசு
வல்லுநர் - இயலுநர்.	உஅரு
வழக்கு - பிரசித்தி.	ருசு
வழங்குதல் - நடை பெறுதல்.	ங ரு
வழி - நூல்வந்தவழி.	ஙஎ
வளி - காற்று.	எ
வறிது - சும்மா.	கஉக
வா	
வாக்கியம் - அவாய்நிலை, தகுதி, அண்மை என்னும் மூன்றுமுடைய சொற்களின் சமூகம்.	சு
வாக்கு - நால்வகைவாக்குக்கள். அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன.	கஙரு
வாணிகம் - வியாபாரம்.	அ
வாதிகள் - தங்கொள்கையை நிறுத்நிப்பேசுவோர்.	எo
வாதித்தல் - வருத்துதல்.	உஙசி
வாய்த்தல் - கிடைத்தல்.	உஙஙு
வார்த்திகம் - காண்டிகையுரை.	சக
வார்த்தை - சொல்.	கஙஙு
வி	
விகாரம் - வேறுபாடு.	சக
விசித்திரம் ஆச்சரியம்.	சக
விசேடம் - சிறப்பு.	கஙு, கoஙு
விசேடித்தது - அடைகொடுத்துக் கூறியது.	ஙக
விடயம் - பற்றப்படுவது, பொருள்.	எசி
விடயித்தல் - பற்றுதல்.	கoசு
விடை - உத்தரம்.	சக
வித்து - விதை.	உஙக
விந்து - சுத்தமாயை.	எரு
விபவம் - செல்வம்.	கசக
விபரீதம் - திரிவு.	உஙஙு
விம்முதல் - சுரத்தல்.	உஙக
வியவகாரம் - வழக்கம்.	கஉஉ
வியாக்கியானம் - உரை.	கoஅ
வியாபகம் - நிறைவது.	ஙஅ,ருக
வியாபரித்தல் - தொழிற்படுதல்.	ஙஙக
வியாப்பியம்-வியாபிக்கப்படுவது.	ருங,கசஎ
வியூகம் - வகுப்பு.	உo
விரவுதல் - கலத்தல்.	உஎசு
விருத்தி - தொழிற்பாடு.	கஉக. விரிவு கக்ருரு
விளித்தல் - அழைத்தல்.	ஙஉo
விளைவிக்கப்படுதல் - உண்டாக்கப்படுதல்.	கஎஅ
வெ	
வெகுளல் - கோபித்தல்.	ரு
வெளிக் - முதுகு.	கக ஙு
வெளி - ஒளி.	ருரு
வே	
வேகம் - கதி.	உகச
வேட்கை - அவா.	கஉ ஙு
வேட்டுவன் - வேட்டைவாளி இதனை ஒரு வகை வண்டென்பர்.	சக
வேள்வி - யாகம்.	கசு

அருந்தொடரகராதி.

பதம். பக்கம்.

அ

அஃதாமாறு-அப்படியாகும்முறைமை. சஅ
அஃறிணை - உயர்வல்லாதசாதி. ங.உ
அண்டாகாரம்- கண்டிக்கப்படாதவடிவம். கஎஉ
அகத்தொண்டர் - உட்பணிசெய்வோர். கஎ ங.
அகவிருள் - அஞ்ஞானம். ங.சு
அங்கித்தம்பினை - அக்கினியின் சூட்டைத் தடுத்தல். உகஅ
அசிந்தன் - சிந்திக்கப்படாதவன். ங.உ டு
அசிபதம் - ஆனாய் என்னும் பொருளுடையபதம். உகூஉ
அணுபரிமாணம் - அணுவளவு. பாஞ்சராத்திரிகள் ஆன்மா உடம்பிலே அணுவளவாய் நிற்குமென்பர். ங.கூ
அணைந்தோர்தன்மை - சீவன்முத்தரியல்பு. உகஎ
அதிகாரதத்துவம் - சுத்தவித்தை, சுசுரம் என்பன. கஎக
அதிகாராவத்தை - பிரபஞ்சத்தைப்படைக்குநிலை உடு
அதிசூக்குமம் - மிக்கநுண்மை. ங.ஙங
அதிட்டிக்கப்படுதல் - நிலைக்களமாகக்கொண்டு செலுத்தப்படுதல். கூங
அதிதீவிரம் - மிக்கதீவிரம். கசுசு
அதிதெய்வம் - மேலானதெய்வம். கூசு
அதிபரிபக்குவம் - மிகுந்தபரிபக்குவம். ககo
அதீதாவத்தை - துரியாதீதநிலை. அடு
அதுவதுவாய்நின்றறிதல் - சார்ந்ததன்வண்ணமாய்நின்றறிதல். கசo
அதோமாயை - கீழேயுள்ளமாயை. சுடு
அத்தாணிமண்டபம் - அரசிருக்கைமண்டபம். கo சு
அத்தியாசவாதம் - இப்பியைவெள்ளிஎன்பது போல ஒன்றைமற்றொன்றாகக் கூறும் விபரீதவாதம். உo
அத்துவசுத்தி - ஆறத்துவாக்களினுங் கட்டப்பட்டிருக்கும் போகங்கள் எல்லாவற்றையும் எகாலத்திலே புசிப்பித்துத் தொலைத்து முத்திகொடுத்தல். கசஎ
அத்துவிதநிலை - ஏகமாயநிலை. ங.உ ங.
அநங்கியபாவனை - அத்துவிதபாவனை.உகo
அநங்கியம் - வேறுகாமை. உசுஎ

பதம். பக்கம்.

அநாதிசித்தன் - அநாதியேயுள்ளவன். கக
அநாதிநித்தம் - அநாதியாயிருக்கும் நித்தியம் சுடு
அநாதிபந்தம் - அநாதியாயுள்ள பாசக்கட்டு சூசு
அநாதிமுத்தத்தன்மை - அநாதியேமலத்தினீங்கியதன்மை. சூசு
அநித்தியானந்தம் - அழிவுள்ள ஆனந்தம். அது சிற்றின்பம். உஅஅ
அநிர்வசனம் - சொல்லொணாதது. அ-இன்மை. நிர்வசனம்-விசேடமாகச்சொல்லுதல். சஅ
அநுமானவளவை - அநுமானப்பிரமாணம். ங.டு
அநுமித்தறிதல் - கருதியறிதல். கக
அநேகாந்தவாதி - அநேகமுடிபைச் சொல்லுபவன். கஉ
அநேகேச்சுரவாதி - பலகடவுளர் உண்டென்போன். டுo
அந்தக்கரணம் - உட்கருவி. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. கo
அந்தப்புரம் - அரசன்றேவியருறையிடம். கoo
அந்தரியாகம் - உட்பூசை. கஎo
அந்தரியாமி - உள்ளேநின்று நடத்துவோன். கசஎ
அந்நியசாதி - வேற்றுச்சாதி. சூஎ
அபரசாதி - குறைவுடையவைகளிலேதோன்றுவது. கங
அபரமுத்தி - பரமுத்தியல்லாதது. அது, பதமுத்தி. கஎக
அபிமுகமாத்திரை - சங்நிதிமாத்திரை.கoசு
அபுத்திபூருவம் - அறியப்படாதது. கசுசு
அயிக்கியவாதம் - நீரும்நீருஞ் சேர்ந்தாற்போல ஆன்மாவுஞ் சிவமும் முத்தியில் ஐக்கமாகும் என்னும் வாதம். உஉ
அரசாட்சி - அரசாளுதல். கஉசு
அருஞ்சுரம் - செல்லுதற்கரியபாலை. கசசு
அருண்மயம் - கருணைவடிவம். கஎஅ
அருவப்பிரபஞ்சம - சேதனப்பிரபஞ்சம். டுகி
அவயவப்பகுப்பு - உறுப்பு உறுப்பாய்ப்பிரிக்கப்படுதல். சஉ

பதம். பக்கம்.

அவாந்தரகாரணம் - இடைப்பட்டகாரணம் ருக

அவாய்நிலை - ஒருசொல் தனக்கு எச்சொலின்றி வாக்கியப்பொரு ளுணர்க்கிகூடாதோ அச்சொல்லே அவாவிநிற்றல். சக

அவிச்சைக்காலம் - அஞ்ஞானத்தையுடையகாலம். அசு

அவிப்பாகம் - தேவருணவின்பங்கு. கசுக

அவிகாபாவம் - நிக்கமின்றி யிருப்பது. அ-இன்மை. விகா-நீக்கம். பாவம்-இருத்தல் பிரிவிலதாயுடனிகழ்வ தென்றபடி. சடு

அவையடக்கம் - சபையையடக்குதல். ஈ

அவ்வளவிலவன்மகிழ்தல் - பெற்றதுகொண்டு பெரிதுமகிழ்தல். அசு

அழிதன்மாலேய - அழியுந் தன்மையையுடையன. உஎக

அளவிலாற்றல் - அளவிடப்படாதவலிமை ருஉ

அளவைநூல் - தருக்கசாத்திரம். சக

அறிவற்றம் - அறிவின்சோர்வு. உகக

அறிவுத்திரிவு - உணர்வுவேறுபடுதல். சுக

அறிவுறுத்தல் - நன்குணர்த்தல். அசு

அனந்ததேவர் - அட்டவித்தியேசுரருள்ளே தலேவர்; அசுத்தமாயாகாரியங்களேச் செய்பவர். அழிவில்லவருதேவர் என்பது பதப்பொருள். உக

ஆ

ஆகமவளவை - ஆகமப்பிரமாணம். எஎ

ஆகாமியவினை - பிராரத்தம்புசிக்கும்போது வந்துசூடும்வினை. கஎடு

ஆக்கச்சொல் - செயற்கையுணர்த்துஞ்சொல், ஆதலேயுணர்த்துஞ்சொல். சக

ஆசார்ன்மூர்த்தி - குருமூர்த்தி. கஎஎ

ஆஉவறிசொல் - ஆண்பாலேயுணர்த்துஞ்சொல். கஅ0

ஆணவமலபரிபாகம் - ஆணவமலம் தானுகாணமுதலிய மாயாமலத்தோடு சேர்ந்தாற்ருன் பக்குவப்படும். சிருட்டிசெய்வது அதன்பொருட்டே. சஅ

ஆலயவிஞ்ஞானம் - இலயபரியந்தம் நிற்கும் ஓர்விசேடவுணர்ச்சி. உகசு

ஆவேசவாகி - காபாலசமயி; சிவன் ஆவேசித்தலால் சிவன் குணங்கள்முத்தான்மாவிடத்திற்ருேன்று மென்றுசொல்லுபவன். ஆவேசித்தல்-வெளிப்படுதல். உக

ஆறுகோடிமாயாசத்திகள் - ஆறுபேதமான மாயாசத்திகள். அவை காமம், குரோதம் உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. உகூ

ஆன்மசுத்தி - ஆன்மாத்தன்னியல்பு கெட்டுஞானமயமாய்நிற்றல். சு

ஆன்மதரிசனம் - பசுகரணம் ஒன்றுந்தோன்றுது சுட்டறிவும் நீங்கித் தன்னே உள்ளவாறுகாண்டல். அ

ஆன்மபோதம் - உயிருணர்வு. இசை

ஆன்மப்பிரகாசம் - ஆன்மாவின் விளக்கம். கூ0

ஆன்மலாபம் - ஆன்மாவாலடையப்படுவது சு

இ

இடத்திரிவு - தானம்வேறுபடுதல். சுக

இடையீடு - இடைவிடல். உழக

இடையூறு - விக்கினம். க, ஈஅ

இந்திரசாலம் - இல்லதையுள்ளது போலக்காட்டும் ஒருவித்தை. கஉடு

இயற்றுமுதியோன் - செய்யும்முதியோன் கடு

இயைபின்மைநீக்குதல் - சம்பந்தமின்மையை நீக்குதல். சo

இரட்டுறக்காண்டல் - ஐயக்காட்சி. கசo

இரட்டுறமொழிதல் - ஒருவாக்கியத்தை இரண்டுபொருள்படச்சொல்லுவது. ஈக

இராணியகருப்பமதம் - பிரமாவையே பரம். என்று கூறும் மதம். சஎ

இருவகையஞ்சவத்தை - மேல் கீழ் என்னும் இருவகையான அஞ்சவத்தை. கo டு

இருவகையியல்பு - இருவகை இலக்கணம். ஈ.எ

இலயதத்துவம் - சிவதத்துவம் சத்திதத்துவம் என்பன. கஎக

இலயாவத்தை - பிரபஞ்சத்தை ஓடுக்குநிலே. உடு

இல்பொருள் - ஒருகாலத்து மில்லாதபொருள். சசை

இன்றியமையாமை - இல்லாமல் முடியாமை. ஈசு

உ

உச்சரித்தன்மாத்திரை - உச்சரித்த ளவு. உoசு

உடம்பொடுபுணர்த்தல் - ஒருத்தி. அஃது ஒருபொருளேச் சொல்லத்தொடங்கிய தொடரிலே பின்னுமொரு பொருளதோன்றச் சொல்லுதல். சஉ

உடலுழ் - உட்பிணுகர்ச்சி. உகக

உடல்வினை - பிராரத்தம். கசஎ

உடற்றிரிவு - சரீரம்வேறுபடுதல். சுசு

பதம். பக்கம்.

உடனிகழ்சி - கூடநிகழ்தல் ககo
உடைத்தாதல்செல்லாது- உடைத்தாகாது. செல்லல் ஒருதுணைவினை. செல்லாதுநிகழாது எனினுமாம் சச
உடைப்பொருள் - தனக்கென ஒரு தலைமையின்றிய பிறனுடையதா யிருக்கும் பொருள் ங, ஙக
உட்பேதம் - அகவேறுபாடு. கஙங
உன்மையாற்சுட்டப்படுதல் - உள்பொருளாகச் சுட்டப்படுதல். ஙக
உபதேசமொழி - உபதேசவாக்கியம். அசு
உயர்திணை - உயர்வாகியசாதி ஙஉ
உயிரழுப் - உயிர் நுகர்ச்சி. உக
உய்த்துணர்தல் - ஒருபொருளே ஆராய்ந்தறிதல், போதந்துணர்தல். போதந்துகொண்டுபோப். உசு
உருவப்பிரபஞ்சம் - அசேதனப்பிரபஞ்சம். ஙக
உரைச்செய்யுள்-உரையாகியசெய்யுள். ஙக
உரையளவை - ஆகமப்பிரமாணம். எக
உலகானந்தம் - சிற்றின்பம். கசஅ
உள்பொருள் - உள்ளபொருள். ஜக
உறைத்துநிற்றல் - அழுந்திநிற்றல். ககஙி
உற்பத்திவாதி - மாவிரதசமயி; சிவனுடையகணங்கள் முத்தான்மாவிடத்தில் தோன்றுமென்றுசொல்லுபவன். உக
உற்றுழி - ஆபத்துவந்தவிடத்து. கஅடி

ஊ

ஊர்த்துவமாயை - மேல் நோக்கிய மாயை. சுடி

எ

எஞ்சாப்பொருண்மை - மிஞ்சாமையாகிய பொருள். ஈண்டு மைவிருதி தன்மைப் பொருளுணர்த்தாது நின்றது. எச
எதிர்மறைமுகம் - எதிர்மறுத்தலாகிய வாயில். முகம்-வாயில். ஙஉ
எரிசேர்ந்தவித்து - வறுத்தவித்து உக

ஏ

ஏகதேசப்பொருள் - ஒருபகுதியாகிய பொருள். ச
ஏகதேசவுணர்வு - சிற்றறிவு உஅஅ
ஏகான்மவாதம் - சீவான்மா என்றும் பரமான்மா என்றும் இரண்டில்லை, ஆன்மா ஒன்றே யென்னும் வாதம். ஙக
ஏவமுதியோன் - தொழிற்படுத்தும் முதியோன். கடி
ஏற்புழிக்கோடல் - ஒருத்தி. அது இயையுமிட மறிந்து பொருள்கொள்ளல் எஎ

பதம். பக்கம்.

ஐ

ஐந்துகர்த்தம் - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் ஐந்தன் சமூகம். கந்தம் - சமூகமென்னும் பொருட்டு. அஅ
ஐவகைச்சுத்தி - பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பன. கஎo

ஒ

ஒருசாரான - ஒருபகுதியன. ககஎ
ஒருபுடையுவமை - கருத்தாவாதலாகிய பொதுத்தன்மைபற்றி யுவமையாதலன்றிச் செய்யும் வகைபற்றி உவமையாகாமையின் ஒருபுடை உவமையாயிற்று. செய்யும்வகையாவன முதல்வன் சங்கற்பத்தாற்செய்தலும்,குயவன் தண்டுசக்கரமுமுதலிய கருவிகளாற்செய்தலுமாம்.கிo
ஒரோவொன்று - ஒவ்வொன்று கூஎ
ஒவ்வொருகாலவிசேடம் - ஒவ்வொரு பருவம். கூக

க

கட்புலன் - கண்ணறிவு. ஙo
கணபங்கம் - கணந்தோறுந் தோன்றியழிதல். கக
கணபங்கவாதி - பிரபஞ்சம் கணந்தோறுந் தோன்றியழியுமென்று சொல்லுபவன். கஉ
கண்கூடி - பிரத்தியக்கம். ஙக
கண்ணழித்துரைத்தல் - பதச்சேதஞ்செய்து உரைகூறுதல்.கண்-கணு. அழித்தல்-சேதஞ்செய்தல். கணு - சொற்களின்சந்தி உசு, சஉ
கருடதியானம் - கருடனுருவத்தன்னே நினைத்தல். ககூஅ
கருணைமறம் - நிக்கிரகமாகியகருணை.கஎஜ
கருமகாண்டம் - கிரியைகளைக்கூறும்பாகம் சு
கருமபேதவியல் - கிரியைகளின் வேறுபாட்டைக்கூறுமியல். கசு
கருமமலம்பரிபாகமாதல் - கன்மம்தூலமாய் ஆணவமெனப் பெயர்பெற்றுச் சங்காரகாலத்தில் மாயையிலே புத்திதத்துவம் பற்றுக்கோடாகக் கிடந்து பின்பிராரத்தமாகப் பக்குவப்படும். சங்காரத்தாலே தான் பக்குவம்வரும் சசு
கலாதிகள் - கலை, காலம், வித்தை, இராகம், நியதி, புருடன் என்பன. ,கo
கல்லால் - ஆலமரவிசேடம். க, ஙஅ
கழிபேருவகை - மிகப்பெரியமகிழ்ச்சி. ஙஅ

பதம். பக்கம்.

கழிப்பித்தகாரணம் - நீங்கியது. கழிப்பித்தல் தன்வினை; காட்டியவள்ளம் என்றூற்போல. ஙூ

கறங்கோலை - காற்றாடி. ஙூ

கறைமிடறு - காளகண்டம். கஎ

கா

காட்சிப்பொருள் - காணப்படும்பொருள். ஙூ

காட்சியளவை - பிரத்தியக்கப் பிரமாணம். சஙூ

காட்சிவாதி - உலோகாயதன்; பிரத்தியக்கமேபிரமாணமென்றுசொல்லுபவன். ஙூ

காமக்கிழத்தியர் - இன்பத்திற்கு உரிமையுடையோர். உஙூ

காமநூல் - இன்பநூல். ஙஙச

காமியப்பயன் - விரும்பியபேறு. ஙஙு

காரணக்குறி - காரணப்பெயர். ஙூ

காரணமாதற்பொதுமை - பிறவற்றுல்வேறுபடினும் காரணமாதன்மாத்திரையாகியபொதுமை. எசு

காரணவவத்தை - காரியத்திற்கு முற்பட்டநிலை. ஙஙடு

காரணவாக்கியம் - விண்டு முதலியோரை நிமித்தகாரணர் என்று சொல்லும் வசனம். டுத

காரியரூபப்பிரபஞ்சம் - காரியப்பிரபஞ்சம் ஙஙடு

காரியாவத்தை - உண்டாக்கப்பட்ட நிலை. ஙஙச

காலவிசேடம் - விசேடகாலம். சஙூ

கி

கிரியாசத்தி-தொழில்வடிவாகியசத்தி. ஙூ அ

கிரீடாப்பிரமவாதம் - கிரீடையை யுடைய பிரமம் நான் என்று சொல்லுவது. ஙஙூ

கிளர்தெடுத்துரைத்தல் - விதந்துகூறுதல். ஙூஉ

கீ

கீழ்நாடல் - வியாப்பியமாகக்கருதல். ஙஙச

கு

குறிப்பேது - வெளிப்படலின்றிக் குறிப்பாக வதுப்பொருள்படநிற்பது. சஙடு

குடாகாயம் - குடத்துள்வெளி. எ0

குணதத்துவம் - முக்குணங்களும் வெளிப்பட்டிருக்குந்தத்துவம். உடு

குணிப்பொருள் - குணியாகிய பொருள். குணி - குணமுடையது. ச

குணிருத்திரன் - குணதத்துவத்தில்வைரும் உருத்திரன். உடு

குண்டலித்தானம் - மூலாதாரம். உ00

பதம். பக்கம்.

கே

கேவலஞானம் - ஞானமாத்திரை. ஙூ

கை

கைமுதிரைநியாயம் - பூனைக்கு இத்துணை அஞ்சுவாளையின், புலிக்கு அஞ்சுதல் எத்துணை என்பது சொல்லவேண்டியதில்லை என்பது போன்ற ஒரு நெறி. "துன்னியார் குற்றமுந் தூற்று மரபினுரென்னைகொ லேதிலார் மாட்டி" என்னுந் திருக்குறளும் இதற்கு உதாரணமாகும். இது "கிழுத" (ரவ்வளவு) என்பதினின்று தத்திதம் பெற்றுக் கைமுதிரைம் என்றுரையிற்று. குறளிலுள்ள "என்னைகொல்" என்பது "கிழுத" என்பதற்குச் சமமாகும். உஙசு

கோ

கோசரமாதல் - விடயமாதல். உஅச

ச

சகமார்க்கம் - தோழவரிமைக்குரிய நெறி. கஎஉ

சகலநிலை - தலைமுதலியவற்றோடு கூடியநிலை. உஎஙூ

சகளநிட்களம் - அருவுருவம். கஎ0

சங்கமவடிவு - சிவபத்தர்வடிவம். ஙூஉசு

சங்கமவேடம் - அடியார்திருவேடம். உஙூ

சங்கிராந்தவாதி - பாசுபதசமயி. ஙூஉ

சச்சிதானந்தம்-உண்மையறிவானந்தம். ஙஙூ.

சத்ததாது - உடற்கணுள்ள ஏழுதாதுக்கள் அவை இரசம், இரத்தம் சுக்கிலம், மூளை, எலும்பு, தோல் என்பன. ஙூ

சத்தப்பிரமவாதம் - சத்தமே பிரமமென்று சொல்லுவது. ஙஙூ

சத்திசங்கற்பம் - சத்தியால் இஃது இங்ஙனமாகுக என்று எண்ணுதல். ஙஙஙூ

சத்திமடங்கல் - வலிகுன்றல். க0உ

சத்தியப்பொருள் - உள்பொருள். ஙஙச

சத்திவடிவு - வெளிப்படாதவுரு. ஙஙடு

சமயதீக்கை - சமயப்பிரவேசத்தைப் பயக்குந்தீக்கை. உசு

சமயவாதிகள் - தத்தஞ்சமயங்களே மெய்ச்சமயம் என்று சொல்லுவோர். உகூஎ

சமவியாபகம் - ஒத்தவியாபகம். டுஉ

சமுதாயவாதி-புறச்சமுதாயமும் அகச்சமுதாயமுமே சகம் என்று சொல்லுபவன். புறச்சமுதாயம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்பன. அகச்சமுதாயம் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன. சமுதாயம்-கூட்டம். ஙூ

பதம். பக்கம்.

சம்பந்தப்படுத்தல் - தொடர் புண்டாக்கல். கசஎ

சம்பந்தவிசேடம் - ஒருவகைச் சம்பந்தம். கசஙி

சரியையுமுதலியமூன்றுபாதப்பொருள் - சரியாபாதப்பொருள், கிரியாபாதப்பொருள், யோகபாதப்பொருள் என்பன. பாதம்-நான்கிலொன்று கூஎ

சரீரசரீரிபாவம் - சரீரமும்சரீரமுடையனுமாந்தன்மை. கஅஎ

சருவவியாபீ - எங்கும் நிறைந்தவன். எஉ

சர்வேசர்ம - எல்லாக்குணங்களோடு முடையது. அதாவது சார்ந்ததன் றன்மையாய் நிற்றல். கஙூ

சலியாதுநிலைபெறுதல்-அசையாதுநிற்றல். உகO

சவிகற்பம் - விகற்பத்தோடுகூடியது பெயர் சாதிமுதலியவற்றோடுகூடியது என்றபடி. கூசு

சா

சாதாரம் - ஆதாரத்தோடுகூடியீது கஅக

சாதியொருமை - ஒருசொல் ஒருமையிறு தோன்றியாவது தோன்றுமலாவது நின்று பன்மைப பொருளே உணர்த்துவது கO

சாந்தரூபம்-பொறுமையாயிருக்குந்தன்மை கஙஙு

சார்ந்ததன்வண்ணம் - சேர்ந்தபொருளின் றன்மை. (ஙு)உ

சாலம்பயோகம் - ஆதாரத்தோடு கூடிய யோகம் கஎO

சி

சிங்கநோக்கு - முன்னும்பின்னும் பார்க்கின்ற சிங்கத்தின்பார்வை (ஙு)ஙி

சித்தாந்தநெறி - சித்தாந்தசைவநெறி ச

சித்தாந்தம் - முடிந்தமுடிவு (ஙு)கூ

சிந்தித்தல் - உண்மைஞானம் நான்காவுள் ஒன்று. அது குருமுகமாககேட்டபொருளே மனனஞ்செய்து தேகஷ்நிங்குமாறு ஆராய்தல் கூ எ

சிவசங்கிராந்தசமவாதி-சிவன் தன்குணங்களே முத்தான்மாக்களினிடத்துபற்றச் செய்வன் என்று சொல்லுபவன். உக

சிவதத்து - சித்தாகிய உள்பொருள் கஙகூ

சிவசமவாதி - முத்தியிலே சிவமும் ஆன்மாவும் சமம் என்றவாதிபபோன் (ஙு)ங

சிவதரிசனம் - பரமசுகமாகிய பேரின்பத்திற் சேர்ந்து சிவத்தினேயே காண்டல். ச-

பதம். பக்கம்.

சிவபோகம் - பேரின்பமாய் வாழ்ந்திருத்தல், கூஉஉ

சிவப்பேறு - சிவமாந்தன்மையைப் பெறுதல். ச

சிவமயம் - சிவமாந்தன்மை. ச

சிவரூபம் - முத்தொழில்களேயுஞ் செய்து பக்குவம் வருவித்துக் குருவாய் நின்று அருள்பவனுகிய சிவனுடைய தன்மையைத் தன்னறிவிலே காண்டல். ச

சித்தபுருடர் - சித்தியுடையராகிய புருடர். உக

சிததாரசைவர் - சித்தாந்தமாகிய சைவத்தை அனுசரிப்போர். கூ

சித்தாந்தமகாவாக்கியம் - சிவத்துவமசி. கஙுஅ

சித்தாந்தமுடிபு - ஆகமத்தின் முடிந்தபொருள். கூO

சித்தின்பம் - ஞானுனந்தம். கசகூ

சிவஞானம் - பரஞானம். கஙகூ

சிவாநந்தபோகம்-சிவானந்தாணுபவம். கஙஙூ

சிவாநந்தியம் - சிவத்தோடி வேற்றுமையின்மை. கசஙூ

சிவாநுபவம் - சிவானந்தத்தை அநுபவித்தல். கூசு

சிவார்ப்பணம் - சிவனிடத் தொப்பித்தல். உஉச

சிவோகம்பாவனே - சிவனேநான் என்றுபாவித்தல் சுக

சிறாபாடையாளம் - விசேடசின்னம். கசுகூ

சிறப்பியல்பு - சிறப்பிலக்கணம். கூசு

சிறப்புத்திருநாமம் - சிறப்புப்பெயர். கூசு

சிறப்புபாயிரம் - இருவகைபபாயிரத்துள் ஒன்று. அது ஒன்றற்கே யுரியதாய் ஆக்கியோன்பெயர் முதலிய எட்டனேயுங் கூறுவது காலம் களன் காரணம் என்னும் மூன்றையுஞ் சேர்த்துப் பதினெனறனேயும் கூறுவது என்பாரும் உளர். கூடு

சிறபபுவகையானறிவுகிழ்தல் - சவிகற்ப மாயறிவுண்டாதல். கூO

சிறபபுவகையானுண்டென்றல். உலகத்துக்கு ஒருகருத்தாவுண்டென்றுபொதுப்படக் கூறுது அரனே என்று விளந்து கூறுதல் சO

சிறுபான்மை - ஏகதேசம். எக

சிறுமையுறுத்தல்-தாழ்மைப்படுத்தல்.கஙூ

சிற்சத்தி - ஞானசத்தி. சூ, (ஙு)ச

சீ

சீகண்டருத்திரன் - பிரளயாகலருள்ளேபக்

பதம். பக்கம்.

குவமுடையோனுப்ப் பாசநீங்கிச் சிவனுக்குரிய நாமாதிகளைப் பெற்றுச்சைவாகமங்களே யறிவுறுக்கும்குரவன் சீகண்ட. கண்டம் - கழுத்து. உடு

சீவன்முத்தன் - சீவிக்கும்பொழுதே பாசத்தினின்றும் விடப்பட்டவன். கஉச

சீவான்மா - தேகத்தையபிமானிக்கும்உயிர் கஉ

சீற்றமிக்கெரிதல்-சுவாலித்தெரிதல். கூஅசு

சு

சுகப்பிரபை - சுகத்தின்விளக்கம். உகசு

சுகரூபம் - மகிழ்ச்சியையிருக்குந் தன்மை. ககடு

சுட்டியறிதல் - ஏகதேசமாயறிதல். கசஅ

சுட்டியறியப்படுவது - இது பொன் இது மண்என்றுற் போல ஆன்மபோதத்தால் ஒவ்வொன்றுகக் குறித்தறியப்படுவது. உடுச

சுட்டிநந்துநின்றறியப்படுதல் - அத்துவித மாய் நின்றறியப்படுதல். கசஅ

சுதந்திரவடிவம் - சுவாதீனசரீரம். உடு

சுத்தசத்தை - வீசேடிக்கப்படாத சத்தை. சத்தை-உண்மைத்தன்மையாகிய சாதி. கசசு

சுத்ததத்துவபுவனம் - சுத்ததத்துவங்களில் இருக்கும்புவனங்கள. சுத்ததத்துவங்கள் சிவதத்துவம், சத்திதத்துவம், சதாசிவதத்துவம், ஈசுரதத்துவம், சுத்தவித்தியாதத்துவம் என்பன. எ

சுத்தமாயை - சுத்தப்பிரபஞ்சத்திற்குக் காரணமானமாயை. சுடு

சுத்தமாய்நிற்றல் - விசேடிங்கப்படாது நிற்றல். கசசு

சுத்தாத்துவா - சுத்தமாயையிற்றோன்றிய மந்திரமுதலிய ஆறத்துவாக்கள். கஉஅ

சுத்தாவத்தை - பாசநீங்கியநிலை கஅகூ

சுபக்கம் - தன்பக்கம். கஉள

சுயம்புமூர்த்தி - தானேதோன்றிய மூர்த்தத்தை யுடையோன். மூர்த்தம்திருமேனி உ

சுருக்குச்சுருவம் - நெய்த்துடுப்புகள்.உகே

சூ

சூக்குமதேகம் - காரண தன்மாத்திரைகள் ஐந்தும் சித்தமொழிந்த அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினலும்ஆக்கப்பட்ட ஊடம்பு. சுஅ

சூக்குமபஞ்சாக்கரம் - பிரணவம். எஅ

சூக்குமபூதம் - தன்மாத்திரை. சுஅ

பதம். பக்கம்.

சூத்திரப்பாவை - கயிற்றிற்கட்டி ஆட்டப் படும்பாவை. அஅ

சூரியகாந்தம் - சூரியஒளியிற் றீக்காலுங் கல்லு. கூஅ

சூனியவாதி - எல்லாஞ் சூனிய மென்று சொல்லுபவன். கஉ

சூழ்ச்சித்துணைவர் - ஆலோசனைக் சூத்து ணையாயுள்ளவர். கூ0

செ

செம்பொருள் - வெளிப்படைப் பொருள். ஙக கஉஅ

செவியறிவுறுத்தல் - உபதேசித்தல். சு0

செறிந்தறிதல் - அழுந்தியறிதல். கஎக

சே

சேதனப்பிரபஞ்சம் - சித்துப்பிரபஞ்சம். அஃது உயிர்வருக்கம். டுஉ

சை

சையுத்தசமவாயம் - சையோக சம்பந்தமுடையதில் ஒற்றுமை யுடையது. உ-ம். சையோகசம்பந்தமுடையது குடம், அதில் ஒற்றுமை யுடையது குடவருவும். கஉஅ

சையுத்தசமவேதசமவாயம் - சையோகசம்பந்த முடையதோடு கூடியதன்கண் ஒற்றுமை யுடையது. உ-ம். சையோக சம்பந்தமுடையது குடம். அதினோடு கூடியது குடவருவும். அதன்கண் ஒற்றுமையுடையது அதன்றன்மை. கஉஅ

சொ

சொப்பனத்தானம் - கண்டம். ஙஉ

சொரூபலக்கணம் - சிறப்பிலக்கணம். அஃதாவது இயற்கையாயுள்ள விலக்கணம். சுவரூபம் சொரூபமென்றுயிற்று. இது உண்மை, எனவும் பேர்பெறும். கஉசு

சொல்லினண்மை - சொற்கள் அடுத்து நிற்றல். கஎ

சோ

சோபானமுறை - படிமுறை. கூக

ஞா

ஞானகாண்டம் - ஞானத்தைக்கூறும்பாகம். சு

ஞானக்கண் - அருட்கண். கஉசு

ஞானசத்தி - அறிவுவடிவாகியசத்தி. கஉஅ

ஞானதிரோதகம் - அறிவை மறைப்பது. கூஎ

ஞானுபாவம் - ஞானத்தினின்மை. கூஎ

த

தடத்தலக்கணம் - இலக்கணவகையுள் ஒன்

பதம். பக்கம்.

று. அது பிறிதொருபொருளின் சார்பு பற்றி இலக்கியப்பொருளில் இருப்பது. தடத்தமாகிய இலக்கணமென விரியும். தடத்தம் - அயலிடத்திருப்பது. இலக்கணம் - இயல்பு. இது பொதுவியல்பெனவும் பெயர்பெறும். ங்டு

தத்துவஞானம் - மெய்யுணர்வு. உஎ0

தருமிவாசகம் - பண்பியாகிய சொல். எங்ஊ

தற்பதம் – அது என்னும்பொருளே உணர்த்தும்பதம். உகூஉ

தற்பொருட்பொருள் - தனக்காக என்னும்பொருள். உசு

தற்போதம் - ஆன்மபோதம். உஙஉ

தற்றருமம் – அதன்குணம். கஙூச

தன்மையின்வைத்தோதல் - பொருளாற்கூறுது அதன்றன்மையிலேற்றிக் கூறுதல். அது மூவினை என்னுது மூவினைமை என்றது. உஎ

தன்வயம் – பிறதுணைவேண்டாது தானுக எல்லாஞ்செய்யுந் தலைமை. சகூ

தன்வேதனைக்காட்சி - இன்பத்துன்பங்களே அராகம் முதலிய ஐந்து தத்துவங்களாலும் உயிரிஞ்ஞெடுணர்வு நேரிதல். கூச

தன்னியல்பு - சிறப்பிலக்கணம். சு, அசு

தா

தாதமார்க்கம் - அடிமையுரிமைக்குரியநெறி. கஎங்ட

தாதான்மியசத்தி - எக்காலத்தும்விட்டு நீங்காத சத்தி. சுடு

தாவாவுரு - வெலிங்கத்திருமேனி. உஙஎ

தான்பணியைநீத்தல் - தனக்கொரு செயலுண்டென்பதை நீக்குதல். அஃதுஎல்லாஞ் சிவன்செய்ல எனக் கொள்ளுதல். ககூ0

தி

திதியின்பக்கத்து - திதியினிடத்து. சங்ட

திரியக்காண்டல் - விபரீதக்காட்சி. ககூ0

திரிவுபுலன் - திரிவுகாட்சி. உ0எ

திரோதானசத்தி - மறைக்குஞ்சத்தி. சு.

தினேத்துணே - தினேயளவு. இது மிகச்சிறுமைக்குக்காட்டப்படும்பிரமாணம்.உ0அ

து

துணிந்ததாகவைத்து - துணிந்து. சசா

துணைக்காரணம் - முதற்கார ணத்துக்குத் துணையாய் அதுகாரியப்படமளவும் உடனிகழ்வது. ஙூக

துவம்பதம் - நீயென்னும் பொருளேஉணர்த்தும் பதம். உகூஉ

துவாதசாந்தம் - பிரமரந்திரத்தி லிருந்து

பதம். பக்கம்.

பன்னிரண்டங்குலத்தின் முடிவிடம். கசஎ

துவிதபாவனை - இரண்டாகப்பாவித்தல். கஙூங

தூறவறம உலகப்பற்றைத்துறந்தவருக்கு உரிய அறம. உக

தூ

தூலபூதம் - பிருதிவிமுதலிய ஐம்பெரும் பூதம். சுஅ

தூலவுடம்பு - பஞ்சபூதபரிணமமாகிய உடம்பு. சுஅ

தெ

தெளியக்காண்டல் - நிச்சயக்காட்சி. ககூ0

தெளிவுபுலன் - நிச்சயக்காட்சி. உ0எ

தொ

தொகுத்துணர்த்தல் - சுருக்கிவிளக்குதல். கஙூச

தொகைகிலேச்சொல் - உரூப் முதலியன தொக்குநிற்குஞ்சொல். ககுடு

தொகைப்பொருள் - பிண்டப்பொருள். டுங

தொழிற்படுஞ்சொல் எவும் வாக்கியம். கடு

தொன்றுதொட்டுவருதல் - முன்றொடங்கி வருதல். சுஉ

தோ

தோற்றப்பட்ட - உண்டாக்கப்பட்ட. சக

ந

நண்பகல் - மத்தியானம். ககூ

நா

நாண்மீன் - அச்சுவினிமுதலிய இருபத்தேழுநட்சத்திரம். கக0

நால்வகைவாக்கு - நான்குவிதமான வாக்கு. அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. சுடு

நாற்பாதத்துள்வைத்து - சரியையுமுதலியநான்குபாதத்துள். கூடு

நி

நிட்களம் - கலேயற்றது, அருவம். கள0

நீத்தப்பொருள் - என்றுமுள்ள பொருள். கூக

நித்தியானந்தம் - அழியாத இன்பம். கசகூ

நிமித்தகாரணம் - வினைமுதற்காரணம். சு

நிரதிசயகுணம் - விகமேலாகியகுணம்.டுஉ

நிரயத்துன்பம் - நரகவேதனை. அ

நிரணிறையிடம் - முறைமையாக நிறுத்தப்பட்ட இடம். கள

நிராதாரம் - ஆதாரமில்லாதது. கஅக

பதம். பக்கம்.

நிருவாணதீக்கை - மூத்தியைப்பயக்குந் தீக்கை. நிருவாணம் - முத்தி. கஜசு
நிருவிகற்பம் - விகற்பமில்லாதது. பெயர் சாதிமுதலியன அறியப்படாததென்ற படி. கூஙு
நிருவிகாரி - விகாரமில்லாதவன். ககo
நிலேக்களம் - நிற்றற்குரிய இடம். கூடுி

நூ

நூன்முகம் - நூலின் ஆரம்பம், நூலின்முன்னிடம். கூடுி
தீர்ந்தொடுங்கல் - சுத்திசெட்டுமடிதல். உஎ
நிமித்தகாரணம் - கருத்தா கசச
நிராலம்பம் - ஆகாரமில்லாதது. எo
துயிலிடம் - உறங்குங்காலம். அச

ப

பருதிப்பொருள்விகுதி - பருதிக்குரியபொருளன்றி வேறுபொருளில்லாதவிகுதி. ஙிக
பக்கிசைத்தல் - பிரிந்துகைத்தல். கூஉஅ
பக்குவவிசேடம் - நிறைந்தபக்குவம். கஎஉ
பங்கயம் - சேற்றிற்பிறந்தது. சஅ
பசுபதி - ஆன்மாக்களுக்குத்தலைவன். ககக
பசுஞானம் - நான்பிரமம் என்னுமஞானம். கஙகூ
பசுநீகாரம் - பசுவைமறைப்பது. ககக
பசுவர்க்கம் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர்வருக்கம். வருக்கம் - வகுப்பு. உஙி
படலவிசேடம் - ஒருவகைப்படலம். அது காண்படலம். உஉஙு
பட்டாசாரியன்மடம் - சைமினிமுனிவருடைய சீடனுகிய பட்டாசாரியன்மீமாஞ்சையைஅநுசரித்துச்செய்தஒருமதம். உஎo
பதமுத்தி - சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன. ககஅ
பதார்த்தம் - பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாடுடையது. கசக
பயனிலே - பொருண்முடிவு. உள
பரகாயம் - வேற்றுடம்பு. எo
பரசாதி - அதிகமானவைகளிலே தோன்றுவது. கஙூ
பரதந்திரம் - பிறன்வசமுற்று அவனேத்தலேமையாகக்கொண்டி நிற்றல். ஙிக
பரபக்கம் - பிறர்பக்கம். கஙூஎ
பரமசுகம் - மேலான இன்பம். ககக
பரமாணு - மிகுதல்மையானவணு. கஙூ
பரம்பரை - ஒன்றன்பின் ஒன்றுவருதல். கூச

பதம். பக்கம்.

பரமான்மா - பரம்பொருள். ஙிஙி, 'கஙூஙி
பரம்பொருள் - மேலானபொருள். உக
பரவுடம்பு - காரணசரீரம். அக
பரிக்கிரகசத்தி - தொழிற்றருங் காரணமாய் நிற்குங். கிரியாசத்தி. அது வேண்டுழி உபகாரமாவது. ' கூஙி
பரியியங்கடவுள் - சூரியன். பரியாகியகடவுள் எனவிரியும். கூஙி
பரியாயப்பெயர் - ஒத்தபொருளுடையபெயர். கஙo
பல சாங்கியம் - பலவண்ணணுடையது. உo
பழமொழி - முதுமொழி. உகஉ
பறவாக்குளவி - மலேப்பச்சை. ஏ,ஙிஉ
பற்றுக்கோடி - ஞெழுகொம்பு. கஙூ
பன்னிருபடலம் - தொல்காப்பியர்முதலிய பன்னிருவராற் பன்னிரு படலமாகச் செய்யபபட்ட ஒரு புறப்பொருளிலக்கணநூல். ஙி

பா

பாகடை - பாக்கும் வெற்றிலேயும். எ
பாகுநூல் - பாகனுக்குரியநூல். உகச
பாசஞானம் - பாசவறிவு. அது வேதசாத்திர முதலியனபற்றி நிகழும் எகதேசக் காட்சி. கஙகூ
பாசகூயம் - பாசத்தைக்குறைத்தல். ககo
பாச்செய்புள் - பாவாகியசெய்புள். கூகூ
பாஞ்சராத்திரி - விட்டுணுவே முதற்றொழிற்குங் கருத்தாவெனக்கூறும் பாஞ்சராத்திரநூலே அநுசரிப்போன். அந்நூல் ஐந்து இரவில் செய்யப்பட்டமையால் பாஞ்சராத்திர மெனப் பெயராயிற்று. பஞ்சராத்திரிசம்பந்தமுடையது பாஞ்சராத்திரம். இது தத்திதாந்தபதம் "அஞ்சலினவர்புகழ்" எனக் கந்தபுராணத்துட்கூறியது மோர்க. ச, ஙக
பாயாவேங்கை - பொன், வேங்கைமரம். உஅகூ

பி

பிடகநூல் - பௌத்தமதசாத்திரம் அ
பிண்டப்பொழிப்பு - பதச்சேத மின்றிப் பொருளோத்திரட்டிக் கூறுவது. உசு
பிரகாசரூபம் - மறைவின்றி யிருக்குந்தன்மை. ககஙி
பிரகிருதிபுவனந்தம் - பிரகிருதி தத்துவத்திலுள்ளபுவனம்வரை. உஙி
பிரமகாண்டம் - ஞானகாண்டம். கூஉ
பிரமங்கொலே - பிராமணனைக்கொல்லுதல். ஙஎச

பதம். பக்கம்.

பிரவர்காகர்த்தி - நீர்ப்பிரவாகம் போன்ற அநாதி. கூஞ்

பிரவிருத்திரூபம் - தொழில்வடிவம். ககஞ்

பிராணுயாயம் - பிராணவாயுவைத்தடுத்தல். கஎ0

பிராஞ்ஞானம் - விபரீதவுணர்வு. ஈஅ

பிரார்த்தவினை - நுபவழுது ழு நுபவிக் கபடிம முன்னேவினை. ஈ0உ

பிரேரகவவதனை - எவுநிலை சஎ0உ

பிள்ளேதநிருரூபம் - பிள்ளைப பருவதநிலை ட்ட நிரூபபர் ஈசு

பிறிதினினையபு நீக்குதல் - மற்றொன்றன்ச ம்பந்தத்தைநீக்கல். சு0

பு

புத்திதத்துவம் - மூப்பத்தாறுதத்துவங்களு ளொன்று அது உயிர்களின் புண்ணியபா வங்களுக்குப பற்றுகோடாயும், பொரு ளே நிசசயிபபதாயும், சுகதுகக மோகரூ பமாய்ப பரிணமித்து விடயமாயும் இரு பபது சுஞ

புத்திபூருவம் - அறியபபட்டது கசுஞ

புத்திரமாரக்கம் - புத்திர வுரிமைக் குரிய நெறி கஎஈ

புத்திவிருத்தி - மனத்தின்றொழில் ககச

புருடதத்துவம் - ஆன்மா கஅஉ

புலபபட ஈகாண்டல் - வெளிபபட்டுத்தோ ன்றக்காண்டல். சஈ

புறவிருள் - வெளியிற்காணபபடும் பூதவி ருள் ஈ0

புனருற்பவம் - மீளபபிறத்தல் ஞஈ

புனைநுரை - விநியைபழுங்குவித்தற்பொ ருட்டு விதிபபடினை உள்ளதனலும் இல் லதனலும் வருணிதலும் கூடியது. இத னைவடநூலார அர்த்தவாதம் என்பர் கஞ

பூ

பூதக்கூட்டரவு - பூதங்களின்கலப்பு அ

பூதசாரவுடப்பு - பஞ்சபூதங்களின்சாரங்க ளாலாகபபட்ட தேகம். அது தேவசரீ ரம். சுஅ

பூதமயம் - பூதவடிவம் சுஅ

பூரணநிலை - எங்கும்நிறைந்தநிலை. உ0க

பூருவபக்கம் - விடயமும் பிறவுமாகச் சித் தாந்த விரோதமாய்ப பிறராற் கூறப்ப ட்டவாக்கியம் ஞ்உ

பெ

பெத்தகாலம் - மலபபிணிபபுண்டு நிற்குங் காலம். சுஈட

பதம். பக்கம்.

பெறுவிக்கப்பட்ட தோற்றுவிக்கப்பட்ட. கூ0

பே

பேரருள் - பெருங்கருணை. ஞஉ

பை

பைமறியாப்பார்த்தல் - மறிக்கப்பட்டபை போலப்பார்த்தல். மறித்தல்-உள் வெளி யாகதநிருபபுதல். உகஎ

பொ

பொதிந்துகொள்ளுதல் - அடக்கிக்கொள் ளுதல். கூஅ

பொதுநீக்கல் - ஒருவாக்கேயுரிமையாக்கல். கசுஞ

பொதுவகையானநிவுநிகழ்தல் - நிருவிகற் பமாயநிவுண்டாதல். கூ0

பொதுவியல்பு - பொதுவிலக்கணம். கஈ

பொருட்டன்மை - பொருளியல்பு. ஞ

பொருளியல்புகூறும்வாக்கியங்கள் - பொ ருள்களின் இலக்கணங்கூறும் தொடர் மொழிகள். கஞ

பொருளியல்புரைத்தல் • வருபொருளுரை த்தல். இது மூவகைவாழ்த்துள் ஒன்று. ஈ அ

பொருள்படா - உண்மையாகா. ஈக

போ

போகதத்துவம் - சதாசிவதத்துவம். கஎக

போகரூபம் - அநுபவவடிவம். கசஅ

போகாவத்தை - பிரபஞ்சத்தைப் • காக்கு நிலை, பிரபஞ்சத்தைபபடைக்க முயன்ற நிலை. உஞ

போக்கியரூபம் - அநுபவிக்கப்படும் பொ ருள்வடிவம். கசஅ

போந்தபயன் . பெறப்பட்டபயன். ஈஞ

ம

மகாகாயம் - பெருவெளி உ ஞ

மகாருத்திரன் - பரமசிவன். உ0

மகேசுரமூர்த்தி - மகேசுரமூர்த்தத்தை யு டையோன். மகேசுரமூர்த்தம் சந்திரசே கரர், உமாமகேசர், இடபாரூடர் முதலி ய இருபத்தைந்து கேவல வடிவம். உ0

மங்கலவாழ்த்து - நன்மைபயக்கும் வாழ்த் து. க, ஈஅ

மங்கிபபோதல் - குறைந்துபோதல். உகஈ

மந்ததரம் - அதிகமந்தம் கஎசு

மந்தவுணர்வு - கூர்மையில்லாதபுத்தி. அக

மந்திரசார்ந்தியம் - மந்திரத்தினண்மை. உஈசு

பதம். பக்கம்.

மந்திரமகேசர் - விஞ்ஞானகலருள்ளே மல பரிபாகத்திற் கேற்பச் சதாசிவமூர்த்தி யாலே மந்திரருக்குத்தலைவராகநியமிக்க ப்பட்டுச் சுத்தாத்துவாவிலிருப்போர். கஎக

மயக்கவாசனை - திரிபறிவு. ஙூ

மலவாசனை - மலபரபயிற்சி. கஙூ

மனவெழுச்சி - உள்ளக்கிளர்ச்சி. ஙஙி

மனோவிகற்பம் - மனவேறுபாடு. கஙூ

மா

மாட்டெறிதல் - ஒருத்தி அதுஒன்றற்குச் சொல்லப்பட்ட நிலக்கணத்தை அதனைப் பெற்றதற்குரிய மற்றொன்றற்கும் மாட்டி விடுதல். உ

மாயாகாரியம் - அசித்துப்பிரபஞ்சம். சசு

மாறுகோளுரை - முன்பின்முரணும் வசனம். ஙக

மானதக்காட்சி - மனத்தாலுணருங்காட்சி ஊச

மி

மிக்குவழங்குதல் - பரந்து நிகழ்தல் எ0, கஙசு

மித்தையுணர்வு - பொய்யறிவு. கச

மு

முகந்துகொள்ளுதல் - அள்ளிக்கொள்ளுதல். கச

முடிவினை - பிராரத்தவினை கஎடு

முதற்காரணம் - காரியத்தோடொற்றுமை படப்பட நிற்குங்காரணம். ஈச

முதுவேனில் - முதிர்ந்த வெய்யிற்காலம். அஃ ஆனி ஆடி மாதங்கள் கஙங

முத்திறத்தைந்தவத்தை - கேவலாதி முத்திறமுடைய ஐந்தவத்தை கo

முபபொருள் - பதி, பசு, பாசம். கசஎ

மும்மையனு - மூன்றுசேர்ந்த மூவணு ங.0

முற்பக்கம் - பூருவபக்கம். கஙசு

முற்றுணர்வு - எல்லாவற்றையுந்தடையின்றியறியுமறிவு. நிஉ

முனிகணம் - முனிவர்கூட்டம் அவர் சனற்குமாரமுனிவர் முதலாயினோர். ஙூ

மூ

மூடரூபம் - மூடமாயிருக்குந்தன்மை கஙநி

மூலகாரணம் - மூதற்காரணம். கஙங

மூலப்பருநி-பிரிகிருதி. மூருபத்துநான்காந்தத்துவமாபுள்ளது மூன்று அசுத்தமாயையினின்றுந் தோன்றி அசுத்தபிரபஞ்சத்திற்குக்காரணமாயிருபபது. உ0

பதம். பக்கம்.

மூவகைப்பிரபஞ்சம் - சுத்தப் பிரபஞ்சம் மிச்சிரப்பிரபஞ்சம் அசுத்தப்பிரபஞ்சம் என்பன. மிச்சிரம்-சுத்தம் அசுத்தம் இரண்டின்கலப்பு. கஙூ

மூவகைப்புறச்சமயம் - புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம் என்பன. எ

மூன்றவத்தை - கேவலம், சகலம், சுத்தம். சஙு

மெ

மெய்கண்டதேவன் - மெய்ப்பொருணுணர்ந்த தேவன். நிசு

மே

மேற்கோடல் - எது திருட்டாந்த முதலியவற்றுல் சாதிக்கப்படுந்தன்மையுண்மையின் மற்றையபோலி நிச்சயங்களிலென்று அங்கீகாரமாய்மேற்பட்டெழுதல், மீதூரல். சஉ

மொ

மொழிபெயர்த்தல் - ஒருபாடையிலுள்ள பொருளை மற்றொருபாடையிலே திருப்பிச்செய்தல் ஙசு

மோ

மோகரூபம் - மோகமாயிருக்குந் தன்மை. கஙசு

யா

யாப்புறுத்தல் - வலியாக்கல். ச

யோ

யோகமதம் - பாதஞ்சலநூற்கொள்கை. உ0

வ

வடமொழிமதம் - வடநூற்கொள்கை ஙக

வரம்பின்றியோடல் - எல்லையின்றிச்செல்லுதல் கo

வருவாய் - வருவழி. கசஉ

வரைந்துவைத்தல்-முடிவுபண்ணுதல் ககஉ

வரையறை - எல்லைபபடுத்தல் உக

வலியுறுத்துதல்-பிலமுடையதாகுதல் கூச

வழிமொழிதல் - அநுவதித்தல். கoக

வா

வாக்கியசேடம் - வாக்கியக்குறை. அஃதாவது ஒருவாக்கியத்தை ஐயமறத்துணிதற்கு அநுகூலமாகிய குறைவாக்கியம். கநிஉ

வாதனுமலம் - பயிற்சிபற்றிவந்தமலம் உoச

வாயிற்காட்சி - இந்திரியக்காட்சி. கூச

வாய்பாடு - வாயிற்படுவதாகிய வாக்கியம். சசஎ

பதம்.	பக்கம்.
வி	
விசிட்டசத்தை - விசேடிக்கப்பட்ட உண்மைத்தன்மையாகிய சாதி.	கசசு
விச்சுவரூபம் - பாரமேசுரவடிவம்.	சுஎ
விஞ்ஞானதீக்கை - ஞானதீக்கை.	கங்ஏ
விஞ்ஞானவாதி - ஞானமே உள்பொருள் என்று சொல்லுபவன்.	கஉ
விதந்தோதுதல் - எடுத்துச் சொல்லுதல்.	உடு
விதிக்குஞ்சொல் - விதியைப் புலப்படுத்துஞ்சொல்; இதனைச்செய்க இதனைஒழி என நியமிக்குஞ்சொல்.	கஎ
விதிவாக்கியம் - இதனைச் செய்க என்று நியமிக்கும் வாக்கியம்.	கடு
விநாயகக்கடவுள் - சிவபிரானுடைய மூத்த பிள்ளையார். தன்னினும்தலைமையானவர் பிறரிலராகப் பெற்ற கடவுள் என்பது பொருள். கடவுள் என்பதில் கட பகுதி உள் தொழிற்பெயர் விருதி. கடத்தல் என்பது பொருள். எனவே தத்துவாதீதர் என்பது கருத்து.	ங்ஓ
விருத்திப்படுதல் - படங்குடிலானற்போல விரிதல்.	எடு
விலக்கியல் - விலக்குவனவற்றைக் கூறும் இயல்.	கஅ
விவகரிக்குஞ்சொல் - பொருளை அறிவிக்குஞ் சொல்லு.	கஎ
விவேகித்தறிதல் - மெய்யாகவுணர்தல், பகுத்தறிதல்.	கஅக
விழுச்சுடர் - மிக்கவொளி.	கசடு
விள்ளற்பாலது - விடற்பாலது.	கஅக
வினைக்கீடாக - வினைக்குச்சமமாக.	கங
வினைமுதல் - வினைநிகழ்ச்சிக்குத் தலைமைப்பட்டுநிற்பது. இதனைவடநூலார் கருத்தா என்பர்.	டுO
வினைவயம் - வினையேதலைமையாக அதன்பால் அமைதல்.	சசு
வீ	
வீடுபேறு - முத்திபேறுதல், முத்தியாகிய பயன்.	
வெ	
வெள்ளறிவு - உள்ளீடில்லாத அறிவு, பொய்யுணர்வு.	டு
வெற்றெனத்தொடுத்தல் - ஒருத்தி; அது பொருள்வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைத் தொடுத்தல்.	கஎசு
வெற்றிப்பாடு - வெற்றியடைதல்.	கஅசு
வே	
வேதமரபுபற்றியபெயர் - வேதத்திலேவழங்கும் முறைமைபற்றியபெயர்.	கஎ
வை	
வைதிகவினை - வைதசம்பந்தமானகிரியை.	கசுக
விதிமுகம் - நியமிக்கும்வாயில்.	உஉக

அருந்தொடரகராதி

முற்றிற்று.

அத்துவாவின்கட்படுமியல்பு ஈண்டும் ஓர்காரணம்பற்றித் தவிர்க்கப்பட்டது.

சிவமயம்.

இலக்கணக்குறிப்பு.

ஆகுபெயர்.	பக்கம்.
அஞ்செழுத்து—பொறியை உணர்த்தும் போது காரணவாகுபெயர்.	அக
அப்பிரகாசம்—தானியாகுபெயர்.	ககஎ
அல்—குணியாகுபெயர்.	உஉடு
அவயவம்—குணியாகுபெயர்.	உஅ0
அன்பு—காரியவாகுபெயர். உஙக, ஙஉச்	
ஆதி—இருமடியாகுபெயர்.	சஎ
ஈசர்—தானியாகுபெயர்.	உ0ங, உசுடு
ஈறு—இருமடியாகுபெயர்.	டுஉ
உணர்வு—தொழிலாகுபெயர். உடுக, உஎசு	
உறுப்பு—சினையாகுபெயர்.	டுஎ
உளன்—குணியாகுபெயர்.	எஙட
ஊன்—காரணவாகுபெயர்.	அடு
எவன்—குணவாகுபெயர்.	ககஙட, உஅடு
ஓங்கம்—இருமடியாகுபெயர்.	அஉ
ஒன்று—குணியாகுபெயர்.	எஙட
கண்—குணியாகுபெயர்.	உடுங, உஅ0
கதிர்—குணவாகுபெயர்.	உடுக
கலை—இருமடியாகுபெயர். உ0ங, உசுடு	
காஞ்சர்—பொருளாகுபெயர். உஉசு, ஙகசு	
சங்காரம்—தொழிலாகுபெயர்.	சஙடு, டுக
சிவானுபவம்—உவமவாகுபெயர்.	கஉக
சுட்டு—தொழிலாகுபெயர்.	உசடு
சூழ்—காரியவாகுபெயர்.	கஅ0
செருக்கு—காரியவாகுபெயர். உ0சு, உக்ஷ	
சொல்—கருவியாகுபெயர்.	கஅ0

ஆகுபெயர்.	பக்கம்.
திதி—தொழிலாகுபெயர்.	சஎ
பகல்—தொழிலாகுபெயர்.	உஉசு, ஙகசு
பசிப்பான்—குணியாகுபெயர்.	உஏக
பதி—குணியாகுபெயர்.	உஆசு
பவம்—காரியவாகுபெயர்.	உசஉ
பாசம்—காரணவாகுபெயர்.	உஉசு
பாவம்— புண்ணியம்— } இவை பயனைக்குறிக்கும் போது காரணவாகுபெயர் காரணத்தைக்குறிக்கும்போது காரியவாகுபெயர்.	உங்உ
பிரகாசம்—தானியர்குபெயர்.	ககஎ
பின்வந்தஞானம்—குணவாகுபெயர். உசo ஙங0	
பின்வந்தபதி—குணியாகுபெயர்.	ககக
புலன்—குணவாகுபெயர்.	கசுங, உசுஎ
பொன்—உவ்மவாகுபெயர்.	எச
மலம்—காரணவாகுபெயர். உஙச, ஙஉங	
மாயை—காரணவாகுபெயர்.	அஅ, அக, ஙo0டு
முதல்—இடவாகுபெயர்.	ககசு
மோகினி—காரணவாகுபெயர்.	உo2உ உசுச
வகை—தொழிலாகுபெயர்.	உசுடு
வாள்—உவமவாகுபெயர்.	உஉஅ, ஙகஅ
வினை—காரணவாகுபெயர்.	சுஅ

விளங்காவுதாரணம்.

	உதாரணம்.	பக்கம்.
க.	"ஊறுகேளாது"	டு
உ.	"ஒருகாலத்திருந்த மூந்துதுகருந்துபயன்"	கஎடு
ங.	"பறவாக் குளவி"	உஅங
ச.	"பாயா வேங்கை"	,,
டு.	"திருத்தார் நன்றென்றேன் றியேன்"	,,
சு.	"நள்ளார்க்கு நஞ்சொத்து நட்டார்க் கமிழ்தொக்கு மிவன்"	உகஅ
எ.	"எல்லாஞ்சிவமா யிருந்தசே"	ஙஉச
அ.	"தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்"	ஙஙஉ

மதத்திரட்டு.

க. உலோகாயதம்.

இது காட்சிவாதம் எனவும் பெயர்பெறும்.

இதன்பிரிவு.

க. தேகான்மவாதம்.

உ. சூக்குமதேகான்மவாதம்.

ங. இந்திரியான்மவாதம்.

ச. பிராணான்மவாதம்.

ஞ. அந்தக்கரணான்மவாதம்.

உ. பௌத்தம்.

இது கணபங்கவாதம் எனவும் பெயர்பெறும்.

இதன்பிரிவு.

க. மாத்தியமிகம். இது சூனியவாதம் என்னவும் பெயர்பெறும்.

உ. யோகாசாரம். இது விஞ்ஞானவாதம் எனவும் பெயர்பெறும்.

ங. சௌத்திராந்திகம்.
ச. வைபாடிகம்.
} இவை சமுதாயவாதம் எனவும், பரமாணுகாரணவாதம்எனவும்பெயர்பெறும்.

ஙு. ஆருகதம்.

இது அநேகாந்தவாதம் எனவும், பரமாணுகாரணவாதம்என வும் பெயர்பெறும்.

ச. தருக்கம்.

இது பரமாணுகாரணவாதம் எனவும் பெயர்பெறும்.

இதன்பிரிவு.

க. வைசேடிகம்.

உ. நையாயிகம்.

ஞ. மீமாஞ்சை.

சு. பட்டாசாரியமதம்.

எ. பிரபாகரமதம்

இதுகுருமதம் எனவும் பெயர் பெறும்.

அ. ஏகான்மவாதம்.

இதன்பிரிவு.

க. மாயாவாதம். இது விஞ்ஞானான்மவாதம் எனவும் பெயர் பெறும்.

உ. பாற்கரியவாதம்.

ங. கிரீடாப்பிரமவாதம்.

ச. சத்தப்பிரமவாதம்.

கூ சாங்கியம்.

கo. யோகமதம்.

கத. பாஞ்சராத்திரம்.

கஉ. பாசுபதம்

இது சங்கிராந்தவாதம் எனவும்பெயர்பெறும்.

கஙு. மாவிரதம்.

இது உற்பத்திவாதம்எனவும் பெயர்பெறும்.

கச. காபாலம்.

இது ஆவேசவாதம் எனவும் பெயர்பெறும்.

கஞ. வாமம்.

கசு. சுத்தசாத்தம்.

கள. வைரவம்,

கஅ. ஐக்கவாதசைவம்.

இதன்பிரிவு.

க. காளாமுகம்,
உ. சாம்பவம்.
} முதலியன.

ககூ. பாடாணவாதசைவம்.

உo. பேதவாகசைவம்.

உக. சிவசமவாதசைவம்.

உஉ. சிவசங்கிராந்தவாத சைவம்.

உங. ஈசுவரவவிகாரவாதசைவம்.

உச. சிவாத்துவிதசைவம்.

இது நிமித்தகாரணபரிணாமவாதசைவம் எனவும் பெயர் பெறும்.

உஞ. சுத்தசைவம்.

உசு. பரிணாமவாதம்.

உள. அநேகேச்சுரவாதம்.

உஅ. சித்தான்மவாதம்.

உக. அவிகாரவாதம்.

ஙo. பாதஞ்சலம்.

ஙக. உருவசமவாதம்.

இவை இந்நூலிற்கண்டவை.

பிழைதிருத்தம்.

முகவுரை.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	ஈ உ	என்ற	என்றருளிச்செய்த
எ	சு	பொட்டும்	பொருட்டும்

சிறப்புப்பாயிரம்.

உ	ங உ	சைவநலந	சைவநலங
ங	உ எ	லிங்கரிததாய்	லிங்கரிதாய
ஙூ	உ	வாயபப	வாயபபக

தக்ஷிணமூர்த்திதியானம்.

க	உஅ	திருகரததில	திருககரததில

நூல்வரலாறு.

க	கஅ	அவவாகமுறையே	ஆவவாகமமுறையே

நூலாசிரியர்வரலாறு.

ச	உசு	உரியருபவததிலே	உரியபருவததிலே

சூர்ணித்தொகை.

ச	ச	நிலகத	நிலககத

குருவணக்கம்.

சு	ஏ உ	பொறுடடு	பொருட்டு

சிவஞானபோதமாபாடியததிரட்டு.

ச	உஎ	சிவாகஙகள	சிவாகமஙகள
ஞ	கஉ	எயேனை	ஏனை
எ	உக	மம	ஆகமம்
உஎ	ங ங	ஆசஙசிபபா	ஆசஙகிபபா
ங க	உ	ஆகமளவை	ஆகமவளவை
,,	ச	பிரமாணனறு	பிரமாணமனறு
ங உ	கங	எலாமை	எலாமை

அவையடக்கம்.

கங	கஉ	பொருள	பொருளகள
கசு	ங அ	கூதறலும்,	கூறுதலும்,
உ ஏ	எ	வியாகமாய	வியாபகமாய
உஉ	கசு	கூமபககத	ஞமபககத

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ங.க	ங.சா	ஒன்றுரென்றுரய்ப்	ஒன்றுரென்றுரப்
ங.அ	சு	உயதற்	உய்தற்
சஅ	சு	சதுரப்பாடு.	சதுரப்பாடு.
சசு	கசு	கண்டவனி லிற்	கண்டவனி னிற்
,,	உசா	காலத்தில்	காலத்தின்
,,	ங.O	உளத்தில்	உளத்தின்
,,	ங.க	கண்டவனில்	கண்டவனின்
ஙO	கடு	இல் மூன்றும்	இன்மூன்றும்
ஙசு	ங.சா	யுடைத்தால்	யுடைத்தாதல்
சுக	ங.உ	ஓ—து.	எது.
சுங.ங	உசு	லத்து.	லத்து. எ-று.
சுசா	ங.O	நிதரிசனலங்காரம் என்றுரை ப்பர்.	திருஷ்டாந்தாலங்காரம் என்பர். ' ஏனையவற்றை நீக்குக.
சுக	ங.சு	ரேறுன்றுமென்	ரேறுன்றதலென்
எசா	கக	தொகைப்பொருள்,	தொகைப்பொருள்:
எசா	ங.உ	நச்சினர்க்கினியாரும்	நச்சினர்க்கினியரும்
எடு	உ	ஆரணி	ஆரிணி,
,,	உசு	,,	,,
,,	,,	இரோதயித்திரி	உரோதயித்திரி
எஅ	உஉ	வழுப்பட	வழுப்படன்
எக	உக	வாதன்மை	வாராமை
அக	சா	தீண்டினேனென	தீண்டினேன்" என
அக	சா	மறித்துணர்வு,,	மறித்துணர்வு
அடு	க	டு-ம் அதி.	கூ-ம் அதி
கO சா	கூ	ராது	துணராது
கO எ	கஉ	ஈசுர	ஈசுர
கஉO	உஉ	அசத்தறியாதானே	அசத்தறியாய்
கஉக	அ	இவ்வியைபு	இயைபு
,,	ங.சு	இவ்விரண்டுதன்மையும்	'இவ்விரண்டுன்மையும்'
கஉ.ங	க	க-ம் அதி.	உ-ம் அதி
கஉசா	ங.ங	ஒன்றனேயொன்றுபற்றுதல்	ஆன்மாச்சிரயம்
கஉசு	கசு	படான் நின்றுன்	படான் உள்ளான் நின்றுன்
கஉஎ	ங.க	லாகிரியர்.	லாகிரியர்;
கசக	கஅ	எனவும்,	எனவும்
,,	உசு	விடுப்பின்;	விடுப்பின்,
,,	ங.அ	ஏதுப்போலிகளுள்	தோல்வித்தானங்களுள்
கசங.ங	கள	அதனேடெண்ணிய	அதனேடனெண்ணிய
,,	உஅ	சிவாந்நியம்	சிவாநந்நியம்
,,	ங.எ	அகரம்	நகரம்
கசச	ங.O	பொருந்தாது	பொருந்தாது.
கசஎ	உச	நிற்பெனன்	நிற்பனென்
கசக	கங.ங	வேறுய	வேறும்
கடO	சா	அதுவதுவாய்மூந்தி	அதுவதுவாயழுந்தி
கடிஎ	டு	கிடைப்ப	கிடைத்து
,,	அ	,,	,,
கசுடு	உக	திசல்லுதலும்	செலுத்தும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ககூஅ	ஈடக	தென்றவாரூயிற்று.	வென்றவாரூயிற்று.
,,	ஈடசு	பரமுத்திகள்	பதமுத்திகள்
கஎ0	ஈடசு	விரோசன்	விரோசனன்
கஎக	உ-ஏ	அபரமுத்திப்பயனென	அபரமுத்தியேபயனென
,,	ஈ-எ	புத்திதத்துவம்	சுத்ததத்துவம்
கஅக	அ	அதிதிவிரத்தா	தீவிரதரத்தா
கஅஉ	எ	புண்கணீர்	புன்கணீர்
,,	ஈடசா	இவ்வியைபு	இயைபு
கஅசு	ககூ	ஒவ்வொருதன்மையுள	அமைவுள
கஅஅ	உசூ	சிவஹர	சிவன்
ககஎ	உ-.	உடனிகழ்ச்சி	உடனிகழ்ச்சி என்பது
ககஙஇ	உசூ	தற்பரன் னைக்குப்பரன்	தற்பரம் தனகுபபரம்
,,	ஈடஉ	தற்பரனுய்	தற்பரமாய்
உ0க	எ	சேடிய	சேடி
உ0ஈ	கக	சாந்திக்ஷே	கலாரூபமாவது சாந்திகலே
உ0எ	க்சு	தன்வினேமுதலாதன்	தன்வினேயாதன்
உக0	உ-ஞ	'ஆவனருளாலல்லதொனறையும்'	அவனருளாலல்ல தொன்றையும்
உகக	கூ	னெத்தனுவி	லெத்தனுவி
உகஉ	உ0	வேறபடுத்துக்காட்டினர	வேறுபமை எடுத்துக்காட்டினர்
உகச	கஞ்	அசத்தோடு	சத்தோடு
,,	,,	சத்தோடு	அசத்தோடு
உகஅ	உச	அங்கியுமொன்றிற்றங்கிநின்ற ல்லதுதன்றெழினடதாது	"அங்கியுமொன்றிற்றங்கி நின்ற ரல்லதுதன்றெழினடத்தாது"
உகக	உச	அறிதற்கிழு	அறிதற்கிழ
உஉஉ	ஈடஉ	"என்ஙு	என்னும்
உஉந	எ	வந்தன	வந்தது
உஈக	கக	மாயா	மாயை
,,	கச	என்புழியுமது	என்புழி உணர்த்தி என்பதுமது.
உஈச	அ	விதிதேதாதினர்	விரித்தோதினர்
உஈசு	ஈ-ந-	தாவரத்தின் அருவுரு	தாவரதிருவுரு
உஈ-அ	கக	புருடனுமாம	புருடனும்
உசஎ0	ககூ	உண்ணு	உளட்டா
உஞக	க0	ஒற்றிறட்	ஒற்றிரட்
உஞஉ	சு	சத்தியே	சதியையே
,,	ககூ	அமைவுடச்	அமைவுடைத
உசுஞ	ஈ-	மறித்துமறிதது	மறித்தும் மறித்தும்
உஎ0	ஈஞ்	பாட்டாசாரியன்	பட்டாசாரியன்
உசூ0	அ	தெய்வமாய	தெய்வமாய்
உசுக	ஈ-ஈ	பாவதியம்	பாவ்தியம்
உசூஉ	ஈடச	சேடிய	சேடி
உசுஈ	ஈடஎ	பிள்ளேயாரும்.	அரசும்.
ஈ0ஈ	ஈடஅ	தன்னேச்சாரதாரைக்	சார்ந்தாரைக்
ஈ0ஞ	உ0	இரண்டுந்	இரண்டு
ஈஉஉ	க0	ஆனய	ஆய
ஈஈந-	கஎ	உணர்த்தற்கு	உணர்தற்கு
உச	ஞ	காரணவாகுபெயர்	கரூவியாகுபெயா